தானியேலின் புத்தகம்

கிளாரன்ஸ் லார்க்கின்



Clarence Larkin

THE BOOK OF DANIEL

தானியேலின் புத்தகம்

Rev. Clarence Larkin

Translated by

J. Edwin Nathaniel Raj

Church of South India
Kanyakumari Diocese
Ramavarmapuram Pastorate Church
Sargunaveethi, Nagercoil -1

Rev. A. Maher Shal Asbas, M.A., B.D., M.Th.
Presbyter

20-12-2014

அணிந்துரை

இயேசுகிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இந்நூலினை வாசிக்கும் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களைக் கூறுவதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

கடவுள் தம் வெளிப்பாடாய் மனுக்குலத்திற்குக் கொடுத்துள்ள திருமறை அனைத்துக் காலத்திற்கும் பொருத்தமான உண்மைத் தகவுகளையும், வாழ்வின் வழிமுறைகளையும், இறையாளுகையின் தன்மைகளையும் சிறப்பாக எடுத்துரைக்கிறது. திருமறையின் நூற்கள் அனைத்தும் ஒரு காலத்திற்குட்பட்டதன்று; பல நூற்றாண்டு இஸ்ரவேலரது வாழ்வு மற்றும் இறை நம்பிக்கையினை படம்பிடித்துக் காட்டுகின்றது. கடவுள், அவர்தம் மக்களுக்கு தூய ஆவியாரின் உந்துதலைத் தந்து, அனைவரும் எளிதாகப் புரிந்துகொள்ளும் நிலையில் சமூக-சமய பொருளாதார, அரசியல் நிலைப்பாட்டினை மையமாகக் கொண்டு திருமறையின் நூற்களுக்கு விளக்கவுரைகள் வெளிவரத் துணைபுரிகிறார். இந்நிலையில் அவரது அடியவரான அருள்திரு. **கிளாரன்ஸ் லார்க்கின்** என்பவரை திருமறையின் பல நூற்களுக்கு விளக்கவுரையினை ஆங்கிலத்தில் வெளியிட இறைவன் கருவியாக பயன்படுத்தியுள்ளார். அருள்திரு. கிளாரன்ஸ் லார்கின் அவர்கள் திருமறையினை ஆழமாகக் கற்றவர், வாழ்வாக்கியவர், மற்றவர்கள் புரிந்துகொள்ளும் நிலையில் விளக்கம் கொடுக்கிறவர். இவரது **தானியேல் விளக்கவுரை** அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் உள்ளது சிறப்பானது.

திருமறையில் தானியேல் நூல் மறைபொருள் இலக்கிய வகையினைச் சார்ந்தது. தானியேலின் செய்தியினை புரிந்துகொள்வது இலகுவானதன்று. இந்நூலுக்கு பல்வேறு விளக்கவுரைகள் அறிஞர்களால் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு விளக்கவுரைக்கும் இறையியல் சார்ந்த தனிச்சிறப்பு உண்டு. இதுதான் சரியான விளக்கம் என்பதை மறைபொருள் இலக்கிய நூற்களுக்கு கொடுக்க முடியாது, ஆனால் வரலாற்றுத் தெளிவுடன் கொடுக்கப்படும் விளக்கமே ஓரளவுக்கு சரியானதாக

அமையும். இந்நிலையில் **Rev. கிளாரன்ஸ் லார்க்கின்** அவர்களின் விளக்கவுரை தானியேல் நூலினைப் புரிந்துகொள்வதற்கும், அதின் செய்தியினை எல்லா காலத்தவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் அமைவது சிறப்பானது. இந்நூலில் அனைத்து வசனங்களுக்கும் தெளிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இந்நூல் இறைவனின் ஆளுகை, மறுமை வாழ்வு, இறைவனின் நியாயத்தீர்ப்பு போன்றவைகள் குறித்த தகவுகளை வெளிப்படுத்துவது தனிச்சிறப்பானது.

இந்நூலினை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழியாக்கம் செய்துள்ள **Er. எட்வின் நத்தானியேல் ராஜ்** அவர்கள் இறையியல் வல்லுநர் அல்ல, திருமறையினை ஆழமாகக் கற்றவர், நல்லதொரு பற்றுறுதியாளர், கடவுளை அதிகமாக நேசிக்கிறவர், **Rev. கிளாரன்ஸ் லார்க்கின்** அவர்களின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டவர், அவரது அனைத்து நூற்களையும் கற்றவர், ஏற்கனவே அவரது நான்கு நூற்களை தமிழில் அதின் பொருள் மாறாமல் மொழி பெயர்த்தவர். இந்த நூலிலும் அத்தகைய சிறப்பானதொரு மொழியாக்கத்தைச் செய்துள்ளார். அதோடு திருமறையை அனைவரும் எளிதாகப் புரிந்துகொள்ளும் நிலையில் போதிக்கக் கூடியவர். இராமவர்மபுரம் திருச்சபையோடும் அதின் திருப்பணி களோடும் தன்னை இணைத்து, குறிப்பாக திருச்சபையின் ஆண்கள்சங்க பொறுப்பாளராகத் திறம்பட செயல்படுகிறவர். தற்போது வெளிப்படுத்துதல் நூலிலிருந்து திருமறைப் பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார். அவரது துணைவியார் திருமதி. **மங்களேஸ்வரி எட்வின்** அவர்களும் நல்லதொரு பற்றுறுதியாளர், இறைவேண்டல் செய்கிறவர், அனைவருக்கும் எளிதாக நற்செய்தி சொல்லக்கூடியவர். தனது கணவரின் இலக்கியப் பணிகளுக்கு உறுதுணையாக இருந்து செயல்படக் கூடியவர். இருவரையும் அன்போடு பாராட்டுகிறேன்.

இந்நூல் அனைத்து மக்களையும் இறைநம்பிக்கைக்குள்ளாகக் கொண்டுவரட்டும், இறையாளுகைகளின் மக்களாய் அனைவரையும் மாற்றட்டும், வாழ்வில் நல்ல கிறிஸ்தவ தகவுகள் வெளிவரத் துணை புரியட்டும் என வாழ்த்தி, இறைவேண்டலோடு அறிமுகம் செய்வதில் மகிழ்வு கொள்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை எழுத என்னைப் பணித்தும், எனது திருச்சபைத் திருப்பணியில் கடந்த மூன்றரை ஆண்டுகளாக இணைந்து செயல்படும் Er. எட்வின் நத்தானியேல் ராஜ்க்கும் மற்றும் அவரது துணைவியாருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, தொடர்ந்து உற்சாகமாய் இத்திருப்பணியினைத் தொடருங்கள் என வாழ்த்துகிறேன்.

Rev. A. மகேர் ஷால் அஸ்பாஸ்

Rev. P. Elangovan
Founder

Bishop. P. Kulandaivelu
Director

Pr. Vijay Aaron Elangovan
General Secretary

வாழ்த்துரை

எங்களுக்கு மிகவும் பிரியமான சகோதரர் Er. எட்வின் நத்தானியேல் ராஜ் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட "தானியேலின் புத்தகம்" என்ற இந்த அரிய நூலைக் குறித்து முன்னுரை எழுதுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்புச் சகோதரர் Er. எட்வின் நத்தானியேல் ராஜ் அவர்களை நான் 35 வருடங்களுக்கு மேலாக அறிவேன். தனது அரசாங்கப் பணியின் மத்தியிலும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதில் அவரும் அவருடைய துணைவியாரும் மிகவும் ஆர்வமாய் இருக்கிறார்கள்.

கர்த்தர் சகோதரர் எட்வின் அவர்களுக்கு கொடுத்த மற்றொரு மாபெரும் கிருபை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதாகும். அவர் ஏற்கனவே 4 புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த் திருக்கிறார்கள். அனேகம்பேர் பிரயோஜனமடைந்து இருக்கிறார்கள்.

"தானியேலின் புத்தகம்" என்ற இந்த நூலை மிகவும் நன்றாக மொழி பெயர்த்துள்ளார்கள். அவருடைய சொல்வளம், அறிய நடை ஆகியவை அவருடைய தாலந்தின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது. இதைப்போன்ற ஒரு புத்தகம் இக்காலத்திற்கு இன்றியமையாத ஒன்றாய் இருக்கிறது. இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் நிச்சயமாக தங்கள் உள்ளத்தில், வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் காண்பார்கள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

கர்த்தரின் பணியில்

P. குழந்தைவேலு

பேராயர், கோ யீ மிசன்ஸ், நாகர்கோவில்

முன்னுரை

பண்டிதர் கிளாரன்ஸ் லார்க்கின் அவர்களது அரிய ஆங்கில படைப்புகளான

1. வெளிப்படுத்தல் புத்தகம்
2. கால சகாத்த சத்தியம்
3. சரிவகை வசனப் பகுப்பு
4. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை
5. தானியேலின் புத்தகம்
6. ஆவி உலகம்

ஆகியவற்றைப் பண்டிதரின் அங்கீகாரத்தோடு தமிழில் மொழி பெயர்ப்பு செய்ய ஆரம்பித்து, முதல் நான்கு புத்தகங்களை இதுகாறும் முடித்து வெளியிட்டுள்ளேன். இவற்றில் **கால சகாத்த சத்தியம்** - 3 பிரிவுத் தொகுதிகளாகவும் அதில் பிரமிடின் வெளிப்பாடு எனும் ஒரு அதிகாரம் தனி நூலாகவும், **சரிவகை வசனப் பகுப்பு** - 2 பிரிவுத் தொகுதிகளாகவும் பிரித்து அச்சிட்டு விநியோகித்துள்ளேன்.

சிறிது நோய்வாய்ப்பட்ட நிலையில் பண்டிதரின் மீதமுள்ள இரண்டு படைப்புகளையும் தொடர்ந்து மொழியாக்கம் செய்ய முடியாத நிலையில், அநேக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இத் தானியேலின் புத்தகத்தை மொழிபெயர்த்து, அச்சிட்டு வெளியிடுகின்றேன்.

வேத ஆராய்ச்சிக்கு மிக்க உதவியாக பண்டிதரின் நூற்கள் அத்தனையும் விளங்குவது வாசகர்கள் ஒப்புக்கொள்ளக்கூடியதே. ஆகவே, இந்நூலும் வாசகர்களுக்கு மிக்க பயனுள்ளதாய் அமையப்போகின்றது என்கிற முழு நிச்சயத்துடன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாம மகிமைக்காக இந்நூலை சமர்ப்பிக்கிறேன்.

எட்வின் நத்தானியேல் ராஜ்

பொருளடக்கம்

தலைப்புகள்	பக்கம்
அறிமுகக் குறிப்புரை :	
தீர்க்கதரிசன வார்த்தை	1
தானியேலின் புத்தகம்	9
புத்தகத்தினுடைய விரிவுரை :	
முதல் பிரிவு - வரலாறு (அதிகாரங்கள் 1-6)	
அதிகாரம் 1: புறஜாதி ஆதிக்கத்தின் ஆரம்பம் ...	*21*
அதிகாரம் 2: நேபுகாத்நேச்சாரது சொப்பனம் ...	*33*
அதிகாரம் 3: பொன்மயமான சிலை	*64*
அதிகாரம் 4: விருட்ச சொப்பனம்	*78*
அதிகாரம் 5: பாபிலோனின் வீழ்ச்சி	*87*
அதிகாரம் 6: சிங்கத்தின் குகை	*120*
இரண்டாம் பிரிவு - தீர்க்கதரிசனம் (அதிகாரங்கள் 7-12)	
அதிகாரம் 7: நான்கு காட்டியல் மிருகங்கள் ...	*134*
அதிகாரம் 8: ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடா ...	*178*
அதிகாரம் 9: எழுபது வாரங்கள்	*193*
அதிகாரங்கள் 10, 11, 12: சத்திய வேத வசனங்கள் ...	
பாகம் ஒன்று :	
இயல்நிலை கடந்த உயிருருக்களுடைய ...	
பூமியோடுள்ள தொடர்பு	*251*
(அதிகாரம் 10:1-11:1)	
பாகம் இரண்டு :	
வடதிசை மற்றும் தென்திசை ராஜாக்களின்	
முன்னெழுதப்பட்ட வரலாறு	*263*
(அதிகாரம் 11:2-35)	
பாகம் மூன்று :	
இறுதி நிலையின் காலம்	*287*
(அதிகாரம் 11:36-12:13)	
வரைபடங்கள்:	
1. தானியேலின் புத்தகம்	
2. அந்திக் கிறிஸ்துவும், புறஜாதியாரின் காலமும் ...	
3. தானியேலின் எழுபதாவது வாரம்	

தீர்க்கதரிசன வார்த்தை
The Prophetic Word

மற்றெல்லா சமய புத்தகங்களைப் போன்றதல்ல வேதாகமம்! எப்படியெனில், வேதாகமம் தனது நம்பகத்தன்மை Authenticity, அதிகாரம் Authority மற்றும் உள்ளுயிர்ப்பை Inspiration தீர்க்கதரிசனத்தின்மீது ஆதாரமாகக் கொண்டுள்ளது. மற்ற எல்லா மார்க்க சமயப் புத்தகங்களும் எதிர்காலத்தைப் பொறுத்தவரை வருவதுரைப்புகள் உள்ளடக்குவதில்லை; அதின் ஆக்கியோர்கள் எதிர்வரும் நிகழ்வுகளை முன்னுரைக்க முற்பட்டிருந் தார்களெனில், அவைகளது நிறைவேறாமை அவர்களது எழுத்துக்களை நாணயக்கேடு செய்திருந்திருக்கும்.

தீர்க்கதரிசனமானது:

'முன்னதாக எழுதப்பட்ட சரித்திரம்' History Written in Advance மற்றும் தேவனுடைய முன்னறிவை நிரூபிக்கிறதுமாக உள்ளது. இதை தீர்க்கன் தானியேல் புறசமய ராஜா நேபுகாத்நேச்சாருக்கு திறந்தார்; ராஜாவின் சொப்பனத்துடைய அவரது பொருளளிப்பில் திறந்தார்.

"இனிமேல் சம்பவிக்கப் போகிறதை மகாதேவன் ராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார். சொப்பனமானது நிச்சயம்; அதின் அர்த்தம் சத்தியம் என்றார்" தானி 2:45.

தீர்க்கதரிசனம் இருமடியானது. 'விரிவுரைப்பு' Descriptive மற்றும் 'வருவதுரைப்பு' Predictive. தீர்க்கதரிசிகள் வெளிப்படுத்துபவர்களாயும் Forthtellers மற்றும் வருவதுரைப்பவர் களாயும் Foretellers இருந்தனர். அவர்களுக்கு உள்நோக்குப் பார்வையும் Insight மற்றும் முன்னோக்குப் பார்வையும் Foresight இருந்தன. அவர்களது தீர்க்கதரிசன உரைப்புகள் வாத காரணத்தின் Reason ஊக அனுமானமாயிருக்கவில்லை

Deductions. மாறாக அவர்களுக்கு பரிசுத்த ஆவியினால் பங்களிக்கப்பட்டவை Imparted.

"தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" பேதுரு. *1:21.*

வேத எழுத்துக்களில் மூன்றில் இரண்டு தீர்க்கதரிசனத்துக்குரியது Prophetic என எண்ணிப் பார்க்கையில், தீர்க்கதரிசனத்து வேத எழுத்துக்களது ஆய்வினுடைய முக்கியத்துவம் காணப்படுகிறது. அதாவது ஒன்றிலோ மாதிரியில் type, சின்னத்தில் Symbol அல்லது நேரடி கூற்றுரைப்பில் Direct Statement தீர்க்கதரிசனத்துக்குரியது. அவைகளில் பாதிக்குமேல் இன்னமும் நிறைவேற்றமடையாதுள்ளன. ஏற்கனவே நிறைவேற்றப் பட்டுள்ளவை எழுத்தின்படி நிறைவேற்றப் பட்டுள்ளதால் அதாவது கிறிஸ்துவுடைய முதல் வருகையைக் குறித்த வாக்குத்தத்தங்கள்போல, அதேவிதமாக இதுவரை நிறைவேற்றம் அடையாதவைகள் எழுத்தின்படியே இனி நிறைவேற்றப்படப் போகின்றன. அப்படியானால் எதிர் காலத்தைப் பொறுத்தவரை தேவனுடைய மனதை Mind of God நாம் அறிய விரும்புவோமாகில் நாம் தீர்க்கதரிசன வேத எழுத்துக்களைப் படிக்கவேண்டும்; அல்லது 'மனதார அறியாமலிருக்கிறவர்கள்' Willingly Ignorant என அப்போஸ்தலன் பேதுரு குறிப்பிட்டுப் பேசுகிற வகுப்பாளரில் தரித்திருக்க வேண்டியது. அதாவது இந்நடத்தைக்குரிய ஓர் சாக்குப் போக்காக 'அறியாமையை' உரிமை கொண்டாட வேண்டியது, 2பேது. *3:3-8.*

நாம் ஓர் இருண்ட உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; அதிக 'உறுதியான தீர்க்கதரிசன வசனம்' Sure Word of Prophecy நமக்குத் தேவைப்படுகிறது. இருளுள்ள புயலால் கொந்தளிக்கின்ற 'காலத்தினுடைய கடலின்' மீது Sea of Time பிரகாசிக்கின்ற விளக்கைப்போன்ற வசனத்தை நாம் பற்றிக்கொள்வோமாக, 2பேது. *1:19.* தேவன் 'யுகங்களுக்கு ஓர் திட்டமும் நோக்கமும்' கொண்டுள்ளார், என மனிதர் காண்கையில் அவர்கள் திட மனதடைவர்; இந்த நாட்களில்

பூமியின்மீது நடந்தேறுகிற காரியங்களால் மனமடிவாகிட மாட்டார்கள்.

ஆனால் நாம் மறக்கக்கூடாததாவது: "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமுள்ள பொருளை உடையதாயிராது (தனிமுறைப்பட்ட பொருளளிப்பு Private Interpretation உடையதல்ல) *2 பேது. 1:20;* அதாவது, எந்த ஒரு தீர்க்கதரிசனத்தையும் தன்னுள் தானே சுயநிலையில் பொருளளிப்பு செய்யப்படலாகாது; மாறாக எந்தவொரு கொடுக்கப்பட்டுள்ள பொருளின்மீது வருவதுரைப்புகளின் தொகுதி முழுமையுடன் ஒத்திசைவு கொள்ள பொருள் அளிக்கப்பட வேண்டியது. எந்தவொரு பற்றீடுபாடு Cult -டைய புனைவை ஒத்துப்போகும்படி அது பொருளளிக்கப் படலாகாது. 'தத்துக்கிளி முறை'யின் படியான பொருள் விளக்கம் அல்லது வேதவிளக்கம் Exegesis தவிர்க்கப்பட வேண்டியது; வெளிப் படையான வேதாகம ஒப்புதலுறுதி Sanction-யை உரிமை கோராத கேடுள்ள கொள்கை மற்றும் நடைமுறை பழக்கத்துடைய வகை வடிவம் Form ஏதொன்றுமில்லை. அதுபோல அது சந்தர்ப்ப சூழ்நிலையை விட்டு எடுக்கப்பட்ட தனிப்படுத்தப்பட்ட வேத பகுதிகளிலிருந்து Isolated Passages ஆதரவு கோராததாயுமில்லை. ஆனால் எந்தொரு தவறான கோட்பாடும் தேவனுடைய வார்த்தையில் எக்காலத்தும் ஆதரவு கண்டுகொள்ள முடியாது. அதாவது வேத எழுத்துக்களுடைய ஒன்றித்த முழு சாட்சியும் அதற்கு (தவறான கோட்பாடு) எதிராக பளுவோடு அழுத்தும்போது!

தீர்க்கதரிசனங்கள் தொடர் உருவக வடிவில் கூறப் படவோ Allegorized அல்லது ஆவிக்குரியதாக்கப்படவோ Spiritualized கூடாது. எழுத்தின்படியே ஒவ்வொரு விவரக்கூறிலும் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதால் தேவன் அதனை விவரமாக எடுத்துக் கூறுகிறார் Expounds.

எடுத்துக்காட்டாக, தேவன் ஆபிரகாமுக்கு கீழ்வருமாறு கூறுகையில்: "உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து அத் தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய்.

இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயம் தீர்ப்பேன் (வாதைகளால்) பின்பு மிகுந்த பொருட்களுடனே (யாத்.12:35-36-ஐப் பார்க்க) புறப்பட்டு வருவார்கள்", ஆதி. 15:13-14.

ஆபிரகாமின் சந்ததி வெகுவாய் மனதளவில் நிம்மதியிழப்பு மற்றும் இருதய அலசடிப்புகளை விளைவிக்கவுள்ள ஏதாமொரு ஆவிக்குரிய அனுபவத்துக்குள் பிரவேசிக்க வேண்டுமென்றும், பின்பு அனுபவத்திலும், ஆவிக்குரிய நிலையிலும் வளஞ்செறிந்து அவர்கள் அதைவிட்டு வெளிவரப் போவதையும் தேவன் அர்த்தங்கொண்டாரா? அல்லது வார்த்தைகள் எழுத்தின்படி பொருள் குறிப்பாகச் சுட்டுகிறதை அப்படியே துல்லிபமாக அர்த்தப்படுத்தினாரா? யாத்திராகமத்தின் முதல் பன்னிரண்டு அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்ட எகிப்தில் அவர்களுடைய அனுபவத்தின் சரித்திரம் பதிலுரைக்க விடுவோமாக. எகிப்திய பணி ஏவுநர்களுடைய சவுக்கடிகளில் உருவகவடிவில் கூறப்பட்ட Allegorical எதுவுமில்லை; அல்லது செங்கல்களது இரட்டை உருக்கமிக்க மெய் வரலாறில் Double Tale ஆவிக்குரியதாக்கவும் எதுவும் இல்லை; தீர்க்கதரிசன பொருளாக்கத்தினுடைய தெய்வீக பிரமாணம் யாதெனில் தீர்க்கதரிசனம் எழுத்தின்படியும் மற்றும் சரி துல்லிபமான விவரக் குறிப்புரைகளின் படியும், நிறைவேற்றப்படப்போகின்றது.

ஓர் மெய்யான வருவதுரைப்பு Genuine Predictionனுடைய தேவைகள் எண்ணிக்கையில் ஐந்தாகும்.

1. அதின் நிறைவேறுதலுக்கு முன்னதாக அது அறியப் பட்டிருக்க வேண்டும்.

2. அது எல்லா மானிட முன்னறி திறத்துக்கும் அப்பாற் பட்டதாக இருக்கவேண்டும்.

3. அது விவரங்களை Details அளிக்கவேண்டும்.

4. அதன் வெளியிடுதலுக்கும் Publication நிறைவேறுதலுக்கும் இடையே ஓர் போதுமான இடைவெளி காலம் வேண்டும்; எதினாலெனில் தீர்க்கதரிசியோ அல்லது எந்தவொரு

அக்கறை கொண்டுள்ள கூட்டத்தாரோ அதை நிறைவேற்றுவதிலிருந்து தடைசெய்யப்படும்படி இவ்வாறு போதுமான அளவு காலம் கடந்து செல்லவேண்டும்.

5. ஒவ்வாரு நுணுக்க விவரத்திலும் தீர்க்கதரிசனத்துடைய ஓர் தெளிவான மற்றும் விவரமான நிறைவேறுகை இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, கிறிஸ்துவின் முதல் வருகையை சம்பந்தப்படுத்தி 16 விவரமான தீர்க்கதரிசனங்கள் இருந்தன. அவையனைத்தும் கீழ்வருமாறு அவருடைய வாழ்வின் கடைசி வாரத்தின்போது எழுத்தின்படி நிறைவேற்றப்பட்டன:

1. 30 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டார், சகரி. 11:12.
2. ஓர் நண்பனால் காட்டிக் கொடுக்கப்பட்டார், சங். 41:9.
3. அவருடைய சீடர்களால் புறக்கணிக்கப்பட்டார், சகரி.13:7.
4. கள்ள சாட்சிகளால் குற்றஞ்சாட்டப்பட்டார், சங். 35:11.
5. குற்றஞ்சுமத்துபவர்கள் முன்பாக அவர் மௌனமாயிருந்தார், ஏசா. 53:7.
6. அவர் துப்பப்பட்டார்; வாரினால் அடிக்கப்பட்டார், ஏசா. 53:5.
7. கைகளும், கால்களும் துளைக்கப்பட்டன, சங். 22:16.
8. அவருடைய உடைகள் சீட்டுப்போடலால் பங்கிடப்பட்டன, சங். 22:18.
9. அவருடைய பகைஞர்களால் பரியாசம் பண்ணப்பட்டார், சங். 22: 7-8.
10. கசப்புக் கலந்த காடி கொடுக்கப்பட்டது, சங். 69:21.
11. அவருடைய கொலைஞர்களுக்காக வேண்டுதல் செய்தார், சங். 53:12.
12. ஓர் எலும்பும் முறிக்கப்படவில்லை, சங். 34:20.
13. கள்ளர்களோடு சிலுவையில் அறையப்பட்டார், ஏசா. 53:12.

14. அவருடைய கைவிடப்பட்ட கதறுதல், சங். 22:1.

15. அவருடைய விலா குத்தப்பட்டது, சக.12:10.

16. ஓர் ஐசுவரியவானைப்போல அடக்கம் பண்ணப்பட்டார், ஏசா. 53:9.

இப்போதும் கூட்டு நிலையான நம்பக்கூடிய தன்மைகளின் Compound Probabilities பிரமாணப்படி ஒரே தனிநபரிடம் இவ்வெல்லா தீர்க்கத்தரிசனங்களும் நேரப்படுவது head up அல்லது நிறைவேற்றப்படுவது 65,636-ல் ஒரு தருணம் One Chance மாத்திரமே இருந்தது; இந்த தீர்க்கதரிசனங்கள் 600 வருட ஓர் காலகட்டத்தின்போது வெவ்வேறு தீர்க்கதரிசிகளால் அதுவும் அவைளில் பாதி கிறிஸ்து பிறந்ததற்கு சுமார் 1000 வருடங்கள் முன்னதாக உரைக்கப்பட்டவை என்பதை நாம் நன்கு சிந்திக்கும்போது, மற்றுமாக கிறிஸ்துவுடைய காட்டிக் கொடுக்கப்படுகை, விசாரணை மற்றும் சிலுவை மரணத்தை விவரிக்க எத்தகைய ஆச்சரியப்படத்தக்க துல்லிபத்தோடு எப்படி அவை இறுகப் பொருந்துகின்றன என்பதை நாம் உற்று கவனிக்கும்போது, இந்நிகழ்ச்சிகளை முன்னுரைத்த மனிதர் தேவனுடைய ஆவியால் உள் வசிக்கப்பட்டிருந்திருக்க வேண்டுமென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதே!

தீர்க்கதரிசன மாணக்கன் வசனத்தை சரியாக பகுக்கப் படிக்க வேண்டும். எல்லா வேதாகம சத்தியங்களும் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர் திருத்தலுக்கும், நீதியை படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கையில் (2தீமோ. 3:16-17) மற்றும் நமது கற்றுக் கொள்கை Learning-க்காக எழுதப்பட்டிருக்கையில், எல்லாமே நம்மை குறிவைக்கவில்லை அல்லது நமக்கு முகவரியிட்டு எழுதப்படவில்லை; அதில் ஓர் பகுதி யூதருக்கு முகவரி இட்டவை; இன்னொரு பகுதி புறஜாதியாருக்கு முகவரி இட்டவை; இன்னும் வேறொரு பகுதி சபைக்கு முகவரி இட்டவை; இம் மூன்றும் மனுக்குலம் பிரிக்கப்பட்டுள்ள மூன்று வகுப்புகளை உருவாக்குகின்றன, 1கொரி. 10:32. யூதர்களும், புறஜாதிகளும் ஒன்றிலிருந்து மற்றது தனி வேறுபட்டது. அதே வேளையில் சபை இரு வகுப்பாரையும் உள்ளடக்கியது. ஆனால் ஒரே புதிய சரீரமாக New Body! எபேசி. 1:22-23; கொலோ.

1:18; கலா. 3:27-28; கொலோ. 3:10-11. சபை தீர்க்கதரிசனத்துடைய ஓர் ஆதாரப் பொருளல்ல Not a Subject! மாறாக வெளிப்படுத்தலுடையது But of Revelation!

தீர்க்கதரிசனத்தின் பாரம் Burden யூதர்கள் Jews, பாலஸ்தீனா, எருசலேம் மற்றும் மேசியா மாத்திரமே! ஆகவே, வேதசத்தியங்களை படிப்பதில் யூதர்களுக்கோ அல்லது புறஜாதிகளுக்கோ உரித்தானதை சபைக்கு கொடாமலிருப்பது மற்றும் எதிரெதிர் மாறாக Vice Versa கொடாமலிருப்பது மிக முக்கியமானது. சபை பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. பழைய ஏற்பாடு யூதர்களை மற்றும் புற ஜாதிகளை மாத்திரமே கையாளுகிறது. பழைய ஏற்பாட்டு அதிகாரங்களது தலையங்கங்கள் Headings தப்புவழி காட்டுகின்றன. அவை மூல பாடத்துக்குரியவையல்ல, மாறாக பிரசுரிப்பாளர்களால் Publishers போடப்பட்டவை! எடுத்துக்காட்டாக ஏசாயா அதிகாரங்கள் 43 மற்றும் 44லுடைய தலையங்கங்களை எடுத்துக்கொள் வோமாக. "கர்த்தர் சபையை தமது வாக்குத்தத்தங்களால் தேற்றரவு பண்ணுகிறார்" என வாசிக்கிறது. இவ்வதிகாரங்களின் முதல் வசனமே இத்தலையங்கத்தை தவறெனக் காட்டுகிறது. இவ்வதிகாரம் இஸ்ரவேலுக்கு முகவரியிடப்பட்டதேயன்றி சபைக்கல்ல என்பதை முதல் வசனம் எடுத்து தனிச் சிறப்புடன் கூறுகிறது. சபையைக் குறித்து அறியவேண்டுமானால் நாம் நம்மை புதிய ஏற்பாட்டுக்கு கட்டுப்படுத்த வேண்டும். அங்குள்ள அப்போஸ்தலர் நடபடிகள் மற்றும் நிருபங்களுக்கு! தேவனுடைய தேர்ந்தெடுப்புக்குள்ளான இஸ்ரவேல் மக்களது முழு சரித்திரமும் வேத சத்தியங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆபிரகாமில் அவர்களது அழைப்பிலிருந்து இப்போதய காலம் வரை சரித்திரமாகிறது; அவர்களுடைய மீள கூட்டிச்சேர்ப்பு, மனந்திரும்புதல் மற்றும் தங்கள் சொந்த பூமிக்கு மீட்டாக்கம் செய்தல் மற்றும் அவர்களது எதிர்கால பூமிக்குரிய மகிமை தீர்க்கதரிசனத்தின் பொருளாகிறது.

புறஜாதி தேசங்களுடைய தீர்க்கதரிசன சரித்திரம் தானியேல் புத்தகத்தில் உருவரை செய்யப்பட்டுள்ளது; இத் 'தற்கால பொல்லாத யுகம்' மற்றும் அதின் 'முடிவுடைய முறை' யும்கூட தீர்க்கதரிசனத்தின் பொருளாகிறது. ஆகவே பூமியின் மீது நடைபெறப்போகின்ற எதிர்காலத்து நிகழ்வுகள்பற்றி அறிய

வேண்டுமானால் நாம் தீர்க்கதரிசனத்து மாணாக்கர்களாக இருக்கவேண்டும் என்பதை நமது கடமையாய் அமையச் செய்கிறது.

எதிர்காலத்தைக் குறித்து அறிந்து கொள்ளும்படி ஆண்களும் பெண்களும் குறி சொல்பவர்கள், கட்புலனாகா தொலைவுணர்வாளர் Clairvoyants மற்றும் ஆவியுலக இடையீட்டாளரை நாடி ஊடாடுகின்றனர், அதேபோது அவர்களுக்கு 'நிச்சயமான தீர்க்கதரிசன வசனம்' உள்ளபோது! தீர்க்கதரிசன படிப்புடைய புறக்கணிப்பின் காரணமாக வேத வார்த்தைகள் இகழ்ச்சிப் பழிக்குள் வீழ்ந்துவிட்டதுடன் ஐயுறவு வாதம் Scepticism மற்றும் பற்றுறுதியின்மை Infidelity பரம்பி விரிவடைந்துள்ளன; உலகம் சிறப்புடையதாய் உயர்ந்து வளர்ந்துகொண்டிருக்கிறது பற்றி தேவ சத்தியத்துக்கு ஏற்காக நல்லார்வ நலம் எதிர்பார்ப்பு Optimism எப்பக்கத்திலும் கேள்விப்பட ஏதுவாகிறது. யுகங்களில் தேவனுடைய திட்டம் மற்றும் நோக்கம் குறித்த அறியாமையில் 'தீர்க்கதரிசன வார்த்தையுடைய புறக்கணிப்பு' மனிதனை விட்டுவிடுகிறது. சகலவித பொய்யான கண்டுபிடிப்புகளுக்கும், இந்நாளின் வஞ்சிக்கின்ற வழிபாட்டு முறைகளுக்கும் மனிதனை எளிதான இரையாக்குகிறது. இந்நாளின் பகுத்தறிவாதத்துக்கு Rationalism ஒரே பரிகாரம் தீர்க்கதரிசன ஆராய்ச்சியே! நாம் படிக்கப்போகின்ற புத்தகம் புறஜாதி தேசங்களுடைய ஓர் தீர்க்கதரிசன முன்னோட்டமாயுள்ளது. அவர்களது கடைசி பெரிய ஆட்சியாளன் அந்திக்கிறிஸ்துவே!

தானியேலின் புத்தகம்
The Book of Daniel

தானியேலின் புத்தகத்தைப்போல வேதாகமத்தின் வேறெந்த புத்தகமும் தாக்கப்பட்டிருக்கவில்லை. 1600 வருடங்களாக Porphyry எனும் மூன்றாம் நூற்றாண்டின் ஓர் சிரியன் தொடங்கி, இப்புத்தகம் 'தர்க்கவாதிகளது குகையினுள்' Critics Den இருந்துள்ளது. மிகக்கடுமையாக ஐயுறவு வாதிகளது எழுத்தாளர்களால் எதிர்க்கப்பட்டுள்ளது. சுமார் கி.மு.533-ல் தானியேலால் எழுதப்பட்டதற்குப் பதிலாக சுமார் கி.மு.168-ல் மக்கபேயர்கள் 'Maccabees' காலத்தில் எழுதப்பட்ட ஓர் போலி ஆவணம் Forgery இதுவென Porphyry உரிமை வாதாடினார். புத்தகத்தில் தெளிவாய் முன்னுரைக்கப்பட்ட அந்தியோகு எபிப்பானஸ் தோன்றியதற்கு பிற்பாடு அப்பெருஞ் சோதனைக்குள்ளான காலத்தே யூதர்களை ஆறுதல்படுத்தவும், ஊக்குவிக்கவும் எழுதப்பட்டது என்றும் அவர் வாதாடினார். சில அண்மை காலத்துக்குரிய தர்க்கவாதிகள் வாதிடுவதாவது: தானியேல் எனும் ஓர் நபர் எப்போதாவது வாழ்ந்திருந்தால் அவருக்கு இந்தப் புத்தகத்தோடு எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும் ஓர் தூய, அடக்கப் பணியார்வமுடைய மற்றும் தாலந்துடைய ஆனால் அந்தியோகு எபிப்பானஸின் (கிமு. 165) காலத்திற்குப் பின் வாழ்ந்த யூதன் இதை எழுதினான் என்று! இது ஓர் சுத்த கற்பனைக் கதை Fiction என்றும்! வாதாடினான். ஆனால் எப்படி இத்தகைய ஓர் கற்பனைக்கதையை எழுதி அதை நிஜ வரலாறு போன்று ஏய்த்துக் காட்ட முயற்சிப்பவன் ஓர் பரிசுத்த, மத அடக்கமிக்க யூதனாயிருக்கக்கூடும்? எதிர்காலத்தை முன்னுரைக்கிற காரணத்தால் இந்த புத்தகத்தை ஏற்றுக்கொள்ள விரும்பாதோர் எந்த இறுதி முனைக்கு துரத்தப்படுகின்றனர் என்பதை இது காட்டுகிறது.

அந்தியோகு எபிப்பானசுடைய நாட்களுக்கு (கி.மு.175-165) வெகு காலத்திற்கு முன்னதாக தானியேல் புத்தகம்

உளதாயிருந்தது என்பதில் எந்த கேள்விக்கும் இடமில்லை. கிரேக்க Septuagint எனும் வேத எழுத்துக்களது கிரேக்கு மொழி பெயர்ப்பில், அதாவது கி.மு. 285-ல் அல்லது தூய அடக்க மத ஆர்வமிக்க யூதன் எழுதியதாக உரிமைப் பாராட்டப்பட்ட காலத்திற்கு 100 வருடங்களுக்கும் மேலாக முற்பட்ட காலத்தே எழுதி முடிக்கப்பட்ட கிரேக்க வடிவத்தில் எப்படி இது இடம் பெற்றது? யூத வரலாற்றாசிரியர் Josephus ஆபிரகாம் தொடங்கி கி.பி. 70-ல் எருசலேம் அழிக்கப்பட்டது வரையிலான யூத மக்களது ஓர் வரலாற்றை நமக்குக் கொடுக்கிறார். அந்தியோகு எபிப்பானசோடு உள்ள போராட்டத்தின் சம்பவங்களை தெரிவித்து எழுதும்போது அவர் கூறுகிறதாவது: 'இக்காரியங்கள் 408 வருடங்களுக்கு முன்னர் கொடுக்கப்பட்ட தானியேலுடைய தீர்க்கதரிசனப்படி நடந்தேறின' என்று! Josephus-ன்படி தானியேல் புத்தகம் சுமார் கி.மு. 573-ல் எழுதப்பட்டது என இது அர்த்தப்படுத்துகிறது. தானியேலுடைய தீரக்கதரிசனங்களில் (தானி. 8:5-8) முன்னுரைக்கப்பட்ட மகா அலெக்சாண்டர் தனது வெற்றிகளின் வழிப்பாதையில் கி.மு. 332-ல் எருசலேமுக்கு வந்தபோது ஜாடுவா Jaddua, பிரதான ஆசாரியன் தானியேல் புத்தகத்தில் அவனைத்தானே குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதை அவனுக்கு எடுத்துக்காட்டினார். அது அவனை மிகக் கவர்ந்து பிரீதிப்படுத்தவே அவன் அந்த நகரை தப்பவிட்டுச் சென்றான் என Josephus நமக்குக் கூறுகிறார். இதன்படி தானியேல் புத்தகம் கி.மு. 332-க்கு முன்னர் எழுதப்பட்டிருக்க வேண்டும். மேலுமாக எசேக்கியேல் தானியேலுடைய ஓர் உடன் வாழ்ந்தவராயிருந்தார் Contemporary. அவருடைய பெயரைக் கொண்ட புத்தகத்தை எசேக்கியேல் பாபிலோனில் வைத்து எழுதினார். அவர் தனது உடன் சிறைவாசிகளால் Exiles உயர் மதிப்புடன் வைக்கப் பட்டதோடு அவர்களால் அறிவுரை கோரப்பட்டார். தானியேல் பாபிலோனில் உயர்ந்த அலுவலக அதிகார பதவியில் இருந்ததால், எசேக்கியேல் அதை அறிந்திருக்க வேண்டும். ஆனால் அவர் (எசேக்கியேல்) தனது புத்தகத்தில் தானியேலைக் குறிப்பீடு செய்திருக்க அவசியம் தேவைப்பட்டிருக்கவில்லை; ஆனால் அவர் செய்துள்ளார். மூன்றுமுறை அவருடைய பெயர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

'நோவாவும் தானியேலும் யோபுவும் அதின் நடுவில் இருந்தாலும் அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள்

ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்' *(எசேக். 14:14,20; எசேக். 28:3.)*

இவ்விதமாக, தானியேல் எனும் அத்தகைய மனிதன் வாழ்ந்திருந்தான் என்னும் உண்மைக்கு எசேக்கியேல் சாட்சி கொண்டிருக்கிறார். மேலும், அவரது (தானியேல்) நீதியில் Righteousness நோவாவுடன் வகைப்படுத்துமளவுக்கும் மற்றும் அவரது ஞானத்தில் Wisdom யோபுவுடன் வகைப் படுத்துமளவுக்கும் மிகவும் குறிப்பிடத்தக்கவராயிருந்தார்.

ஆனால் தானியேல் புத்தகத்தின் நம்பத்தக்க நிலை Authenticity-க்கு நமது கர்த்தரே உச்சநிலை அதிகாரச் சான்றாயுள்ளார் Authority. அவர் தமது ஒலிவமலை பேருரையில் கூறியதாவது:

"பாழாக்குகிற அருவருப்பைக்குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே, அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்", மத். *24:15.*

ஆகவே, தானியேல் புத்தகத்தின் நம்பக நிலையை மறுக்கிறவனெவனோ அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வுடைய முழுமையான நேர்மையையும், ஞானத்தையும் இழித் துரைக்கிறான்; ஏனெனில் அவர் மேற்கண்ட குறிப்புரையில் தானியேல் எனும் அத்தகைய ஓர் தீர்க்கதரிசி இருந்ததாக உறுதியளிக்கிறார்; மற்றும் தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தே 'பாழாக்கும் அருவருப்பு' எனும் அத்தகைய ஓர் காரியம் நிற்கப் போவதாக அவர் முன்னுரைத்தார்.

மோனத்தின் வாதாடல்
The Argument of Silence

தானியேல் போன்று செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட எந்தவொரு நபரும் எக்காலத்திலும் பாபிலோனில் வாழ்ந்ததில்லை என வாதாடப்படுகிறது; ஏனெனில் பாபிலோனியாவிலுள்ள ஞாபகச்சின்னங்கள்மீதோ வரலாற்றுச் சுவடிகளின் மத்தியிலோ தானியேல் எனும் பெயர் வெளிப்படுகிறதில்லை. இவ்வுரிமைகோரல் முதிராநிலையானது: ஏனெனில், ஒப்பிடப்படுகையில் மிகச்சில அத்தகைய

பதிவேடுகள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன அல்லது மறை அடையாளம் அறியப்பட்டுள்ளன; தானியேல் என்னும் பெயரில்லாமை ஓர் அத்தாட்சி ஆகாது: ஏனெனில் அவரது யூதப் பெயர் தானியேலானது புறஜாதிப் பெயர் பெல்தெஷாத்சாருக்கு மாற்றப்பட்டது; இம்மாற்றுப் பெயர் பெல்தெஷாத்சார்கூட வெளிப்படவில்லை என்பதும் அத்தாட்சி ஆகாது. ஏனெனில் நீண்ட பெயர்கள் அதிகமும் சுருக்கப்பட்டு வித்தியாசமாக உச்சரிக்கப்படுவது அன்றைய வழக்கமாயிருந்தது. எனவே மோனத்தின் மெய்மை ஓர் வாதமாகாது. உதாரணத்துக்காக, லூக். 2:41-50-ல் இயேசு பன்னிரண்டு வயதானபோது பஸ்கா பண்டிகையின் வேளை எருசலேமுக்குச் சென்றார். அக்காலவேளை தொடங்கி தமது வெளிப்படை தூதுப்பணியில் பிரவேசிக்கும் வரைக்கும் வேறெந்த பண்டிகைக்கும் அவர் போகவில்லையா? நாம் அறிகிறதில்லை. வேத எழுத்துக்கள் மோனமாயுள்ளன. யோவான் சுவிசேஷத்தி லிருந்து அவருடைய ஞானஸ்நானத்திற்குப் பிற்பாடு அவர் பண்டிகைகளுக்கு ஒழுங்காகச் சென்றார் என நாம் அறிகிறோம். அவர் அதற்கு முன்னமும் அதைச் செய்தார் என யூகித்துக்கொள்வது Suppose நியாயமாய் தோன்றுகிறதில்லையா? பண்டிகைகளை ஒழுங்காக அநுசரிப்பது ஒவ்வொரு ஆண் மேலும் விழுந்த சட்டத்தின் கடமையாகிறது. இயேசு இழையும் பிழையாது பிரமாணத்தை கடைப்பிடித்ததால் அவர் தமது பன்னிரண்டாவது வருடத்திலிருந்து ஒழுங்காக பண்டிகை களுக்குச் சென்றார் என்பது முடிவான அனுமானம். தம்மைத்தாமே ஓர் மாதிரியாக்குகின்ற பஸ்கா பண்டிகைக்காவது ஒழுங்காகச் சென்றிருக்க வேண்டும். எனவே, பாபிலோனிய பதிவேடுகளில் தானியேலின் பெயர் குறித்த மோனம் அவர் வாழ்ந்திருக்கவில்லை என்பதற்கு நிரூபணம் ஆகாது.

நேபுகாத்நேச்சார் போன்ற புறஜாதி பேரரசர்கள் Monarchs நினைவுச் சின்னங்கள்மீது தங்களை மகிமைப்படுத்துகின்ற காரியங்களை மாத்திரமே பதிவு செய்தார்கள். அவர்களது சாம்ராஜ்யத்தின் பெருமக்கள்கூட குறிப்பிடப்படவில்லை. ஆளுநர்கள் Governors, நியாயாதிபதிகள், தளபதிகள், ஆசாரியர்கள், ஞானிகள் இவர்களைப்பற்றி என்ன? மகா பாபிலோனின் அரண்மனைகள், கோவில்கள், மகோன்னத

மதிற்சுவர்கள், கோபுரங்கள், பாலங்கள், சுரங்கங்கள் இவைகளது கட்டுமானங்களை மேற்பார்வையிட்ட, திட்டம் வரைந்த பொறியாளர்கள், கட்டடக் கலைஞர்கள், வடிவமைப்பாளர்கள் அவர்களைப்பற்றி என்ன? அவர்களது பெயர்கள் பதிவேடுகளில் தோன்றுவதில்லை; பின் ஏன் தானியேலுடையது? தானியேல் புத்தகம் நேபுகாத்நேச்சாருக்கும் பெல்ஷாத்சாருக்கும் இடையேயுள்ள ராஜாக்களின் ஓர் பட்டியலை கொடுக்கிறதில்லை எனும் காரணத்தினால் இது புறக்கணிக்கப் படுகிறது. ஆனால் இது ஏன் கொடுக்கப்பட வேண்டும்?

தானியேல் தனது உயர் அலுவலகப் பணியிலிருந்து நேபுகாத் நேச்சாரின் மரணத்தின்போது விலக்கப்பட்டார் Deposed என பதிவேட்டிலிருந்து பார்க்கத் தோன்றுகிறது. பெல்ஷாத்சாரின் ஊழ்முடிவை உச்சரிக்கத் தானியேல் அழைத்து அனுப்பப் படுகிறவரை அவர் வெளிப்படையாகத் தோன்றுகிறதில்லை. பின் ஏன் அவரது புத்தகத்தின் நோக்கத்துடன் சம்பந்தப்படாத நிகழ்வுகள் முதலியவற்றை அவர் பதிவுசெய்ய வேண்டும்?

தானியேல் புத்தகத்திலுள்ள பதினைந்து பெர்சிய மற்றும் மூன்று கிரேக்க வார்த்தைகளின் தோன்றுகை இப்புத்தகம் கி.மு. 533 போன்ற வெகுகால முன்னர் எழுதப்பட்டிருக்கக் கூடாது என சிலரை வாதாடத் தூண்டியது. ஆனால் இவ் வார்த்தைகளது தோன்றுகை முந்தியுள்ள Early தேதிக்கு ஒரு வாதமாகிறது. இப்புத்தகம் அந்தியோகு எபிப்பானசின் காலத்தில் எழுதப்பட்டிருந்ததானால், புத்தக ஆசிரியர் ஒருசில கிரேக்க வார்த்தைகளை புகுத்தியிருப்பது மட்டுமின்றி அதினுள் அநேக கிரேக்க வாசகங்களையும், சிந்தனைகளையும் உள்படுத்தி இருப்பார். கிரேக்க வார்த்தைகள் இசைக்கருவிகளின் பெயர்கள். இக்கருவிகள் அதிகமும் நேபுகாத்நேச்சாரால் கிரேக்கு தேசத்திலிருந்து Greece இறக்குமதி செய்யப்பட்டவைகள் அல்லது யுத்தத்தில் சிறையாக பிடிபட்ட கிரேக்கு இசைக் கலைஞர்களால் இசைக்கப்பட்டவை. வெளிநாட்டு வார்த்தைகளின் பயன்பாடு மற்ற நாடுகளின் தூதுச் செய்தியாளர் Emissaries களால் பெருமளவாக விஜயம் செய்யப்பட்ட ஓர் நாட்டின் பேரவையில் தானியேலுடைய இருந்தமையை உறுதிப் படுத்துகிறது.

புத்தகத்தின் நம்பகத்தன்மைக்கான உறுதிச்சான்றுகள்
Proofs of the Authenticity of the Book

அதிகாரம் 1:3-ல் அண்ணகர்களின் பிரதானிய தலைவன் அஸ்பெனாசு குறிப்பிடப்பட்டுள்ளான். மூலமுதல்படி இவ்வார்த்தை Rabsaris என்பது! ஆனால் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்வரை இவ்வார்த்தை பாபிலோனிய நினைவுச் சின்னங்களின்மீது காணப்படவில்லை; அதின் காணப்படாமை நேபுகாத்நேச்சாரின் பேரவையில் அத்தகைய அதிகாரி இருந்ததில்லை என்பதற்கு ஓர் உறுதிச்சான்றாக தர்க்க வாதிகளால் பயன்படுத்தப்பட்டது. ஆகவே தானியேல் புத்தகம் நம்பகத்தன்மை வாய்ந்ததல்ல என்று! ஆனால் British அருங்காட்சியகத்தே பேணிப் பாதுகாக்கப்பட்டிருந்த ஓர் கூம்புவடிவ செங்கல்மீது இப்பெயர் கண்டுபிடிக்கப்பட்டது. அது தானியேல் சரியே என நிரூபிக்கிறது.

அதிகாரம் 1:2-ல் நேபுகாத்நேச்சார் தேவனுடைய வீட்டின் (எருசலேம் தேவாலயத்து) பாத்திரங்களை சினேயார் Shinar தேசத்திலுள்ள அவனது தேவனுடைய கோவிலுக்குள் கொண்டு போனான் என சொல்லப்படுகிறது. நேபுகாத் நேச்சாரால் விட்டுவைக்கப்பட்ட ஓர் எழுத்துப் பொறிப்பி லிருந்து அவனது தேவனுடைய வீட்டில் அவனுடைய கொள்ளையில் உச்சிதமானவற்றைக் கொண்டுவைப்பது அவனது வாடிக்கையாயிற்று என நாம் காண்கிறோம். 400 வருடங் களுக்குப் பிற்பாடு எழுதுகிற ஓர் எழுத்தாளனால் அதுவும் நேபுகாத்நேச்சாரின் வழக்க முறையை எந்தவிதத்திலும் அறியாதவன், அவனுடைய நடத்தையை அவனுக்கு சார்த்துரைக்கக் Ascribe கூடுமோ?

மீண்டுமாக, தானியேலின் தலைமைத்துவத்தின் கீழாக்கப்பட்ட மந்திரவாதிகள், ஜோசியர்கள், படுசூனியக்காரர் என பிரித்து வகைப்படுத்தப்பட்டோரைக் கொண்ட மெய்யுணர்வாளர்கள் Seers என அழைக்கப்பட்ட ஓர் வகுப்பு மனிதர் பாபிலோனிய பேரவையில் இருந்திருந்ததான, உண்மை இப்புத்தகத்தின் வரலாற்று சிறப்புத்தன்மைக்கு ஓர் நிரூபணமாகிறது. ஏனெனில் பிந்தைய காலத்து ஓர் கற்பனை எழுத்தாளர் ஓர் அழியுண்ட சமுதாயத்தின் நிலையை தனது

மனோபாவனையின் வரை படத்தில் மேற்கூறிய சரியான வகைப்படுத்தல்களை Classification யூகித்துக் கொடுப்பது என்பது கூடுமானதல்ல.

புறஜாதி தேசங்கள்
Gentile Nations

தானியேல் புத்தகம் புறஜாதிகளுடைய காலங்களைப் பற்றி எடுத்தாளுகையில் எல்லா புறஜாதி நாடுகளுடைய ஓர் உருவரையினை Outline அது கொடுக்கிறதில்லை. மாறாக தீர்க்கதரிசன பூமியுடைய சார்பாட்சி எல்லைப் பரப்புமீது தொடர்ச்சியாக அசைவு உண்டாக்கியவைகளுடைய உருவரையை மட்டுமே கொடுத்துள்ளது அல்லது பழைய ரோம சாம் ராஜ்யத்தால் பரவி மூடப்பட்ட பூமியின் குறிப்பிட்ட பகுதியுடைய நாடுகளின் வரையறையே கொடுக்கப்பட்டுள்ளது.

வேதாகம தீர்க்கதரிசனம் பொதுவாக தேசங்களைப்பற்றி அப்படியான அவைகளுள் ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தத்தில் எதையும் சொல்வதில்லை; மாறாக இஸ்ரவேல் மற்றும் பரிசுத்த பூமிக்கு அவைகளது தொடர்பு சம்பந்தத்தில் மட்டுமே அது சொல்லுகிறதாயுள்ளது.

"உன்னதமானவர் ஜாதிகளுக்குச் சுதந்தரங்களைப் பங்கிட்டு, ஆதாமின் புத்திரரை வெவ்வேறாய்ப் (பாபேலில்) பிரித்த காலத்தில் இஸ்ரவேல் புத்திரருடைய தொகைக்குத் தக்கதாய், சர்வ ஜனங்களின் எல்லைகளைத் திட்டம் பண்ணினார்" உபாகமம் *32:8.*

சகல தீர்க்கதரிசனத்துக்கும் திறவுகோல் யூதனே யாகிறான், The Jew. யூததேசம் Jewish Nation தேவனை புறக்கணிக்காது அவரது ஓய்வு நாட்களை அலட்சியப்படுத்தாது இருந்திருந்தால், "புறஜாதிகளின் காலங்கள்" Times of the Gentiles என்று ஒன்றிருந்திருக்காது. தேவன் பூமிக்குரிய ஆட்சியை இஸ்ரவேலுடைய ராஜாக்களை விட்டு புறஜாதி ராஜா நேபுகாத்நேச்சாருக்கு உரிமை மாற்றீடு செய்தபோது புறஜாதிகளது காலங்கள் ஆரம்பமாயிற்று. மீண்டுமாக இஸ்ரவேல் 'தேசங்களின் தலைமை' ஆகின்றவரையில் அவர்கள் (புறஜாதியார்) தொடருவார்கள். தானியேல் புறஜாதியார் காலங்களுடைய நன்கு வரையறைப்பட்ட Distinctly

தீர்க்கதரிசியாக இருக்கிறார். அவருடைய காட்சி புறஜாதி உலக ஆளுகையின் முழு ஓட்டப் பாதையையும் அராவிச்செல்லுகிறது Sweeps. அதாவது கிறிஸ்துவின் திரு நல்லாயிர அல்லது மேசியாவின் Messianic ஆட்சி நிறுவுகைவரை! ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் மற்றும் சிற்று தீர்க்கதரிசிகள் தீர்க்ககரிசிகளாக இருந்ததுபோல அதே உய்த்தறிவின்படி Same Sense தானியேல் ஓர் தீர்க்கதரிசியாயில்லை; அவர்களுடைய தூதுப்பணியானது மக்களிடம் சென்று கர்த்தருடைய வார்த்தையை பிரகடனப்படுத்துவதாகும். அதேவேளையில், தானியேலது தூதுப்பணி காட்சிகள் மூலம் அவருக்கு வெளிப்படுத்தப் பட்டதை பதிவு செய்வதாயிருந்தது. அவருக்கு 'தீர்க்கதரிசன அலுவலகப் பணி' இல்லாதிருந்தபோதிலும் அவருக்கு தீர்க்கதரிசன அருட்கொடை வரம் Gift இருந்தது. தானியேல் புத்தகம் பழைய ஏற்பாட்டின் திருவெளிப்பாடு Apocalypse ஆகின்றது. வெளிப்படுத்தல் புத்தகம் புதிய ஏற்பாட்டின் திருவெளிப்பாடாவது எப்படியோ அப்படியே! ஒன்றை மற்றதில்லாமல் விளங்கிக்கொள்ள முடியாது. தானியேல் மூன்றுமுறை 'மிகவும் பிரியமானவன்' Man Greatly Beloved என அழைக்கப்பட்டதுபோல, யோவான் அப்போஸ்தலன் 'பிரியமான சீஷன்' Beloved Disciple என அழைக்கப்படுகிறார். இவ்விரு மனிதருக்கும் கி.மு. 606 தொடங்கி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரையான முழுக் கால ஓட்டப் பாதையை காட்சியில் காண்பதற்குரிய தனிச்சலுகை அளிக்கப்பட்டது.

புத்தகத்தின் பிரிவுகள்
The Divisions of the Book

இந்தப் புத்தகம் ஒவ்வொன்றும் ஆறு அதிகாரங்கள் கொண்ட இரு வீறார்ந்த பிரிவுகளாக இயல்பாக தன்னுள் பிரிவு கொள்கிறது. முதல் பிரிவு பிரதானமாக சரித்திரபூர்வமானது; மற்றது தீர்க்கதரிசனத்துக்குரியது. இப்புத்தகம் இரு மொழிகளில் எழுதப்பட்டுள்ளது; முதல் அதிகாரமும், இரண்டாவதின் முதல் மூன்று வசனங்களும் எபிரேய மொழியல் Hebrew எழுதப்பட்டவை; அதேப்போல் அதிகாரங்கள் 8 முதல் 12 வரை; ஆனால் இரண்டாம் அதிகாரத்தின் நான்காவது வசனம் தொடங்கி ஏழாவதின் முடிவுவரை அராமிக் Aramic மொழியான சிரியாவின் தொன்மையான மொழியிலானது. அது தொன்மை

வாய்ந்த பாபிலோனிய மொழியான கல்தேய Chaldaic மொழிக்கு அடிப்படைக் கூறில் ஒரேபடித்தானதே Identical. அது அக்காலத்திய வாணிபம் மற்றும் உலக நாடுகளது சமூகக் கூட்டுறவுக்காயிருந்த மொழியுமானது. இரு மொழிகளது பயன்பாடு வெளிப்படையானது Apparent. புறஜாதி சாம்ராஜ்யங்களுடன் தொடர்புபடுத்துபவை Concerns எதுவோ அது அவர்களது அராமிய Aramic மொழியில் எழுதப்பட்டது; யூதர்களுடன் சார்புடையது எதுவோ அது எபிரேயுவில் Hebrew எழுதப்பட்டது. இது இப்புத்தகம் பாபிலோனில் வைத்து எழுதப்பட்டது மட்டுமின்றி, ஓர் யூதனால் எழுதப்பட்டது என்பதற்கு ஓர் சான்று மூலமாயுள்ளது. மேலுமான சான்றாக இதிலுள்ள எபிரேய எழுத்துநடை எசேக்கியேலது எபிரேய எழுத்து நடைக்கு சரி ஒத்ததாயிருக்கிறது; எசேக்கியேலும் தானியேல் போன்று அதே காலத்தே ஓர் சிறைக் கைதியாக பாபிலோனில் இருந்தார்.

தானியேல் Daniel

எந்த மற்ற தீர்க்கதரிசியைக் காட்டிலும் அதிகமாக தானியேலைக் குறித்து நாம் அறிகிறோம். அவர் யூதா கோத்திரத்தவர்; உயர்குடி சார்ந்து இருந்தவர்; ராஜகுடி சாராதிருந்தும்! யோயாக்கீமின் Jehoiakim மூன்றாவது வருடத்தே, கி.மு. 606-ல் நேபுகாத்நேச்சாரால் யூதாவுடைய முதல் படையெடுப்பின்போது அவர் எருசலேமிலிருந்து கைதியாக எடுத்துச் செல்லப்பட்டார். இவ்விதம் அவர் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அதிகமும் அவர் இருபது வயது உடையவராக இருந்திருக்கலாம். ஓர் குறுகிய காலத்துக்குள்ளாய் அவர் சாம்ராஜ்யத்தில் ஓர் மிக உயர்ந்த பதவிக்கு எழுந்தார்; அதை நேபுகாத்நேச்சாரின் ஆளுகையின் காலம் முழுமையிலும் வகித்தார். அவனது மரணத்தோடு, தானியேல் பணி ஓய்வுக்குள் சென்றார். மீண்டுமாக பெல்ஷாத்சாரின் ஊழ் தீர்ப்பை முறைப்படி உச்சரிக்க அழைத்தனுப்பப்படுவது வரையில் அவரைக்குறித்து கேள்விப்பட்டிருக்கவில்லை; எழுபது வருட சிறையிருப்பு காலம் முழுமையின் ஊடாக அவர் வாழ்ந்தார்; மேதியனான தரியுவின்கீழ் ராஜ்யத்தின் 120 தேசாதிபதிகளுக்கு மேலாக தலைமைப் பிரதானியாக Chief President உயர்த்தப்பட்டார். அவ்வமயம், குறைந்தது அவர் தொண்ணூறு

வயதுடையவராயிருந்தார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு வெளியே இவர் ஒருவர் மாத்திரமே வேதாகமத்திலேயே கறைதிரையற்ற Spotless தன்மையுடையவராகிறார். அவரது தன்மையில் எந்தவொரு பழுதும் காணப்படவில்லை; தேவனுக்கு 'மிகவும் பிரியமான' ஓர் மனிதனாயிருந்தார். ராஜாக்களோடும், அரசியல் தலைவர்களோடும் இணைவுத் தொடர்பிலிருந்தார்; பொதுமக்களுக்குப் பயன்படும் ஓர் வாழ்க்கை Public Life நடத்தினார். அவர் அலுவலக அதிகாரம் வகித்தார்; ஆயினும் அவரது தன்மை ஒருபோதும் குற்றத்துக்கு இடமாகவில்லை. அவர் தேவதூதர்களோடு பேசினார்; கர்த்தர்தாமே அவருக்குக் காட்சியளித்தார். தேவனுடைய காட்சிகள் பெற்றார். அவர் விசுவாசத்தின் ஓர் உயரிய மனிதராயிருந்தார்; புதிய ஏற்பாட்டின் உன்னதமான 'விசுவாச அதிகாரத்தில்' Faith Chapter அவருடைய பெயர் குறிப்பிடப் படாவிட்டாலும், சிங்கங்களின் வாயை அடைத்த ஒருவராக அவர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளார், எபி. *11:33.* அவர் அவருடைய நாளின் **தீர்க்கதரிசன அரசியல் மேதையா யிருந்தார் Prophetic Statesman.**

உலகத்தினுடைய வீம்புரைக்கின்ற சகல நாகரீகங்களுடைய விளைவு முடிவு Outcome அறிவதற்குரிய 'காலங்களின் அடையாளங்கள்' Signs of the Times ஆராய்ந்து படிக்க அவருக்கு அருளப்பட்டது. மேலும் அவர் காணும்படியாக அருளப்பட்டவை: பூமியின் தேசங்கள் அரசியல் அதிகாரத்தில் படிப்படியாக கீழிறங்கவுள்ளன என்று! மற்றும் களிமண்ணுக்கொத்த Clay குடியாட்சி Democracy, பொதுவுடைமைத் தத்துவம் Socialism மற்றும் ஒழுங்கின்மை Anarchy தேசங்களை மிக அதிகமாய்ப் பலவீனப்படுத்தவே அவைகளுக்குள் ஒட்டிணைவு அற்றுப்போகும் வரைக்கும் இவ்வதிகார கீழிறங்குதல் இருக்கும் என்று! இத்தாறுமாறான ஓர் உலகுக்கு ஒரே இடர்காப்பு மீட்பு Salvation கிறிஸ்துவின் மறு வருகையிலும், அவரது திரு நல்லாயிர ராஜ்ய நிறுவுகையிலும் மாத்திரமே இருக்கவுள்ளது என்பதே!

புத்தகத்தின் விரிவுரை

முதல் பிரிவு

வரலாறு
Historical

அதிகாரங்கள் 1-6

அதிகாரம் ஒன்று

புறஜாதி ஆதிக்கத்தின் ஆரம்பம்
The Beginning of Gentile Dominion

எருசலேமுடைய கீழ் அடங்கல்
The Conquest of Jerusalem

'தானியேல் *1:1 - 2*'

'யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து, அதை முற்றுகை போட்டான். அப்பொழுது ஆண்டவர் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமையும், தேவனுடைய ஆலயத்தின் பாத்திரங்களில் சிலவற்றையும் அவன் கையில் ஒப்புக்கொடுத்தார். அவன் அந்த பாத்திரங்களைச் சினேயார் தேசத்திலுள்ள தன் தேவனுடைய கோவிலுக்குக் கொண்டுபோய், அவைகளைத் தன் தேவனுடைய பண்டசாலைக்குள் வைத்தான்'.

எரேமியா*(25:8 - 11)* இந்த சிறைப்பிடிப்பை Captivity யோயாக்கீமின் நான்காவது வருடத்தில் வைக்கிறார். தானியேலோ மூன்றாவதில்! இந்தப் பிழைத்தோற்றம் Seeming Discrepancy யோயாக்கீமின் மூன்றாம் ஆண்டின் இறுதி அருகாமையில் நேபுகாத்நேச்சார் அவனது படையெழுச்சியைத் தொடங்கினான் Set out எனும் மெய்மையால் விளக்கப்படுகிறது. அக்கட்டத்திலிருந்து தானியேல் கணக்கீடு செய்கிறார். ஆனால் பின்தொடருகின்ற வருடத்தின் சுமார் ஒன்பதாவது மாதம் வரையில் எருசலேமின் கீழடங்குகையை அவன் அடைந்தானில்லை; அதிலிருந்து எரேமியா கணக்கீடு செய்கிறார்.

'பாஷைகளின் குழப்பம்' Confusion of Tongues மற்றும் பாபேலில் வைத்து நோவாவின் பின் வாரிசாளர்களது சிதறுகைக்குப் பின்னர், பூமியினுடைய தேசங்கள் தேவனால் ஓர் காணவியலா அடக்கியாளுகைக்குள் leash வைக்கப் பட்டதோடு ஒருவனும் மீதமுள்ள அனைவரையும் வென்று கீழடக்க அனுமதிக்கப்படவில்லை; ஆபிரகாமின் பின்சந்ததியான

எபிரேய தேசத்தை உலகத்தின் தலைமைத்துவ தேசமாக ஆக்குவது தேவனுடைய நோக்கமாயிருந்தது. ஆனால் அவர்களுடைய கீழ்ப்படியாமை மற்றும் விக்கிரகாராதனை இதைத்தடுத்துப் போட்டது.

கி.மு. 721-ல் பத்து கோத்திரங்கள் சிறைப்பிடிக்கப்பட்டு King Sargon ராஜாவால் அசீரியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்; 115 வருடங்களுக்கு பிற்பாடு கி.மு. 606-ல் பாபிலோனில் எழுபது வருடங்களது சிறைப்பட்ட நிலை Captivity மீதமுள்ள 'யூதா'வென அழைக்கப்பட்ட இரு கோத்திரங்களுக்கு தீர்க்கன் எரேமியாவால் (எரே. 25:11) முன்னுரைக்கப்பட்டபடி தொடங்கியது.

இது காலம் வரை தேவன் எந்தவொரு தேசத்தையும் ஓர் உலக வெற்றி வீறார்ந்ததாக்க World Conquerer அனுமதிக்காதிருக்கையிலும் அக்கனத்திற்குப் பேராவல் கொண்ட சில பெரிய வல்லமைகள் உச்ச தலைமைத்துவத்துக்கு Supremacy போராடிக் கொண்டிருந்தன. இவ்வாறான தேசங்களினிடத்தே 'பாபிலோன்' இருந்தது. அது ஏற்கனவே அசீரியாவை விழுங்கிவிட்டிருந்தது. கி.மு. 605-ல் எகிப்தின் ராஜா Pharaoh - Necho பாபிலோனுக்கு எதிரிட்டுப் படையெடுத்தான்; ஐப்பிராத்து நதியின் மேற்கு கரைமேலிடத்தில் வைத்து நடந்த Carchemish போரில் எகிப்து ராஜா நேபுகாத்நேச்சாரால் திணற அடிப்பட்டு முறியடிக்கப்பட்டான்; தீர்க்கன் எரேமியாவால் முன்னுரைக்கப் பட்டபடியே! எரே. 49:1-26. நேபுகாத் நேச்சாரால் ஏற்பட்ட Pharaoh - Necho 'பார்வோநெக்கோ' வின் தோல்வி - முறியடிப்பு பாபிலோனை 'உலகத்துதலைவி' ஆக்கீற்று.

நேபுகாத்நேச்சார் Pharaoh - Necho வை எகிப்துக்கு பின்தொடர்ந்தான். எகிப்தை முற்றிலுமாக கீழ்ப்படுத்தி வெற்றிகொண்டபின்பு, அவன் எருசலேமுக்கு எதிராக படையெடுத்தான். யோயாக்கீமின் ஆட்சியின் மூன்றாவது வருடத்தில்(கி.மு. 605) அவன் அதைப் பிடித்தான். எல்லா எதிர்ப்புகளும் சீக்கிரமே மேற்கொள்ளப்பட்டன. நகரம் பிடிப்பட்டது. யோயாக்கீம் ராஜா இரண்டு வெண்கலச் சங்கிலிகளால் கட்டப்பட்டு பாபிலோனுக்கு சிறை கைதியாக

எடுத்துச் செல்லப்பட ஆயத்தப்படுகையில் *(2 நாளா. 36:5-8)* நேபுகாத்நேச்சார், அவனது தகப்பனாரது மரணத்தைக் கேள்விப்பட்டு யோயாக்கீம் ராஜாவை விடுதலை பண்ணி, அரியணையில் மீள அமரச்செய்தான். உடனடியாக வீடுநோக்கி பாபிலோனுக்கு தனது தகப்பனாரின் அரியணையை உரிமைக்கொள்ள நேபுகாத்நேச்சார் விரைந்தான். ஆனால் அவ்விதம் திரும்புகையில் வெறுங்கையோடு அவன் திரும்பிச்செல்லவில்லை. அவன் தேவாலயத்தைச் சூறையாடி அங்கிருந்த பொற்பாத்திரங்கள் சிலவற்றை எடுத்துச்சென்றான். மேலும் எபிரேய வாலிபர்களுக்குள்ளே ராஜகுல மற்றும் உயர்குண இரத்தத்து துரைமக்களினின்று மிக்க அழகுள்ள மற்றும் புத்திக்கூர்மையுள்ள கல்வி நிபுணத்துவர்களைத் தேர்வு செய்து அவர்களை பாபிலோனுக்குக் கொண்டுவர அவனுடைய அண்ணக Eunuch தலைவர்களில் பிரதானியான அஸ்பெனாசுக்கு Ashpenaz கட்டளையிட்டுச் சென்றான். அவர்களுக்கு கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக்கொடுக்கவும் பணித்தான்,

மூன்று வருடங்கள் கழித்து, நேபுகாத்நேச்சாருக்கு எதிராக யோயாக்கீம் கலகமெழுப்பினான். அப்பொழுது கர்த்தர் அயலிலிருந்த Neighbouring கல்தேயர்கள், சீரியர்கள், மோவாபியர்கள் மற்றும் அம்மோனியர்களின் தண்டுகளை யூதாவை அழிக்கும்படிக்கு வரவிட்டார். 2 ராஜா.24: 1-4. இது ஐந்துவருடங்களுக்குத் தொடர்ந்தது, அத்தோடு யோயாக்கீம் ஓர் இழிவுக்குரிய மரணத்தையடைந்தான் (எரே.22:17 - 19). அவனுடைய குமாரன் யோயாக்கீன் Jehoiachin அவனுடைய இடத்தில் அரசாண்டான். ஆனால் அவன் மூன்று மாதங்கள் மாத்திரமே அரசாண்டான்; அதுபோதும் அவன் கர்த்தருடைய பார்வையில் பொல்லாப்பானதைச் செய்தான். அப்போது நேபுகாத்நேச்சார் இரண்டாம் முறையாக கி.மு. 598-ல் வந்து எருசலேம் நகரை முற்றுகையிட்டு அதைப் பிடித்தான். யோயாக்கீனையும் மற்றும் அவனது பிரபுக்கள் மற்றும் வீரமிக்க பராக்கிரமசாலிகள் அனைவரையும், 10000 கைதிகளையும் மற்றும் 1000 கைத்தொழில் நிபுணர்களையும், கொல்லர்களையும் கூடவே எடுத்துக்கொண்டுபோய் விட்டான். அதின் விளைவாக மக்களில் மிக வறியோராயுள்ளோரே பின்விடப்பட்டனர். 2

ராஜா 24:8-16. இது பொதுப்படையாக 'சிறைப்பிடிப்பு' The Captivity என்றழைக்கப்படுகிறது. ஏனெனில் எடுத்துச் செல்லப்பட்டோருடைய எண்ணிக்கை மற்றும் சிறப்பியல்பு Character காரணமாக! ஆனால் 'எழுபது வருட சிறைப்பிடிப்பு' கி.மு. 606-ல் ஆரம்பமானது. எப்படியெனில் அது பாபிலோனின் வீழ்ச்சியோடு மற்றும் கோரேசின் ஆட்சியின் ஆரம்பத்தோடு காலவகையில் ஒடி முடிந்தது. அதாவது கோரேசு கி.மு. 536-ல் யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பிவர ஆணை பிறப்பித்ததோடு!

தன்னுடைய கைதிகளோடு விட்டுப்பிரியுமுன், நேபுகாத்நேச்சார் ராஜாவாகிய யோயாக்கீனுடைய சின்னத்தகப்பனாரை ராஜாவாக்கி அவனது பெயரை 'சிதேக்கியா' Zedekiah என மாற்றினான். ஆனால் அவன் கர்த்தருடைய பார்வையில் பொல்லாப்பானதை செய்தான். மேலும் பாபிலோன் ராஜாவுக்கு எதிராக கலகமெழுப்பினான். அவனுடைய ஆளுகையின் ஒன்பதாவது வருடத்தில் நேபுகாத்நேச்சார் மீண்டுமாக எருசலேமை முற்றுகையிட்டான். இரண்டு வருடங்கள் கழித்து அதைப் பிடித்தான், (கி.மு. 587). தேவாலயத்தை மற்றும் நகரை அழித்தான். அக்காலம் தொட்டு யூததேசம் Jewish Nation இல்லாது போய்விட்டது Ceased to exist. 2 ராஜா. 24:17-20; 25:1-21. இது 'பாழ்ப்படுத்தல்கள்' The Desolations என அழைக்கப்படுகிறது. ஏனெனில் அது நகரத்தையும், தேசத்தையும் எழுபது வருடங்களுக்கு பாழாக்கும் நிலைக்கு Desolate Condition தள்ளிவிட்ட காரணத்தால்! எரேமியா முன்னுரைத்தபடி! எரே. 25:11. நேபுகாத்நேச்சார் கி.மு. 606-ல் ராஜாவானவுடன் 'புறஜாதிகளின் காலங்கள்' Times of the Gentiles ஆரம்பித்தது. அவனது ராஜ்யமே உலகம் இதுகாறும் எப்போதுமே கண்டிருக்கின்ற முதல் உலகளாவிய சாம்ராஜ்யமாயிற்று World Wide Empire.

எபிரேய சிறைக்கைதிகள்
Hebrew Captives

தானியேல் 1: 3-4;6-7

தீர்க்கன் எசாயா எசேக்கியா Hezekiah வுக்கு கூறியதாவது:

'சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தையைக்கேளும். இதோ நாட்கள் வரும்; அப்பொழுது உன்வீட்டில் உள்ளதிலும், உன் பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய் வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுப்போகப்படும். நீ பெறப்போகிற உன்சந்ததியாகிய உன் குமாரரிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரண்மனையிலே, அரண்மனை வேலைக்காரராயிருப்பார்கள் Eunuchs என்று கர்த்தர் சொல்லுகிறார்'. ஏசா. *39: 5-7.*

இந்த வேத எழுத்துக்களிலிருந்து அந்நான்கு எபிரேய சிறைக்கைதிகளான தானியேல், அனனியா, மிஷாவேல் மற்றும் அசரியா என்போர் ராஜகுல இரத்தத்தினாலாயிருந்தமையால் Royal Blood, நல்ல ராஜாவான எசேக்கியாவினுடைய பின்சந்ததியாயிருந்தனர் எனவும் அவர்கள் அண்ணகர் களாக்கப்பட்டோர் Eunuchs எனவும் நாம் பார்க்கிறோம். இது அவர்கள் 'அண்ணகர்களின் பிரதான பிரபுவாகிய அஸ்பெனாசுக்கு' ஒப்படைக்கப்பட்ட மெய்மையிலிருந்து உறுதிசெய்யப்படுகிறது. அவன் அவர்களுடைய பெயரை மாற்றி அவர்கள்மேல் மூன்று வருடங்களுக்கு கண்காணிப்பு வைத்திருந்தான். தானியேல் (தேவன் எனது நியாயாதிபதி) பெயரை 'பெல்தெஷாத்சார் (பேலின் பிரியன் Whom Bel Favours) என்றும், அனனியாவை (கர்த்தருடைய அன்புக்குரியவன்) 'சாத்ராக்' (சூரியகடவுளால் பிரகாசிக்கப்பட்டவன்) என்றும், மீஷாவேலை (தேவனைப் போன்றவன்) 'மேஷாக்' (வீனஸைப்போன்றவன்) என்றும், அசரியாவை (கர்த்தர் என் துணை Help) 'ஆபெத்நேகோ' (நேகோ Nego வின் அடியான் Servant) என்றும் மாற்றப்பட்டன. அவர்களது பெயர்களை மாற்றுவதின் நோக்கமானது அவர்களை அவர்களுடைய தேசத்தினின்றும், மதத்தினின்றும் பழக்கத்தொடர்பை மறக்கச்செய்வதாயிற்று. அதேசமயம் அவர்களது எதிர்காலம் செலவு செய்யப்படவிருந்த புறசமயதேசத்துடைய மதத்தையும், பழக்கவழக்கங்களையும் தத்தெடுத்துக் கொள்ளவுமாயிற்று Adopt.

ஆனால் ஓர் மனிதனுடைய பெயரை மாற்றல் அவனது தன்மையை மாற்றுகிறதில்லை; அதுபோல இவ்வாலிபர் தங்கள் சொந்த தேசத்துசமயம் மற்றும் நம்பிக்கையில் மிக அதிகமாக

வேரூன்றிவிட்டிருந்ததால் ஓர் புறசமய Heathen தேசத்து பழக்கமுறைகளை தத்தெடுக்காதிருந்தனர். எகிப்தின் யோசேப்பின் அனுபவத்துக்கும் பாபிலோனின் தானியேலுடையதுக்கும் ஓர் முனைப்பான ஒருங்கிணைவு உளது. இருவரும் எபிரேயர்கள், இருவரும் ஓர் புறசமய அன்னிய நாட்டில் சிறைக்கைதிகளாயிருந்தனர். இருவரும் சொப்பனக்காரர்கள்; சொப்பனங்களை வெளிப்படுத்துபவர்கள் Revealers. ஒவ்வொருவருடைய நெறிக்காக்கும் Moral தன்மை கடுமையாக பரீட்சிக்கப்பட்டது, யோசேப்புடையது போத்திப்பாரின் வீட்டில் வைத்து! *(அதி. 39:1-23;* தானியேலுடையது ராஜாவின் அரண்மனையில் வைத்து! அவ்வமயம் அவர்களுடைய வயதின் காரணமாக பரீட்சைகள் மிக தனிமுறைக் கடுமையாயிருந்தன. அவர்கள் இருவருமே இருபது வயதுடையவராக இருந்தனர். ஆனால் இருவரும் உறுதியாய் நின்றனர். இருவரும் அவர்கள் வசித்த வீடுகளுக்கு ஓர் ஆசீர்வாதமாயிருந்தனர். இருவருமே பெரிய கனத்துக்குரிய பதவிகளுக்கு உயர்த்தப்பட்டனர். அதின் இரகசியம் அவர்களுடைய தேவனிடம் கொண்டிருந்த அவர்களது பற்றுறுதி Loyalty.

தானியேல் மற்றும் அவனுடைய கூட்டாளிகளுக்கான பரீட்சை அவர்களது மார்க்க(மத) வழிமுறையிலிருந்தது Along the Line. அவர்கள் ராஜபோஜன மேஜையிலிருந்துள்ள ராஜ அருஞ்சுவையுண்டிகள் Dainties மற்றும் திராட்சை ரசத்தால் போஷிக்கப்பட உத்தரவிடப்பட்டனர்.

'ராஜா, தான் உண்ணும் போஜனத்திலேயும், தான் குடிக்கும் திராட்சை ரசத்திலேயும், தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்று வருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்கள் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படிச் செய்யவும் கட்டளையிட்டான்'. *(தானி.1:5)*

இப்போதும் இத்தகைய உணவு கொள்ளல் அதுவும் அத்தகைய ஓர் அளிப்பிடமிருந்துள்ளது Source, ஓர் மாம்சீக வாலிபருக்கு மிகுந்த கவர்ச்சிகரமாயும், பரம திருப்தி செய்வதாயும் இருந்திருக்கும். இவ்வாறான போஷிப்புகனத்துக்கு தெரிந்தெடுக்கப்பட்டமைக்காக தங்களையே அவர்கள்

வாழ்த்தியிருந்திருப்பர். தங்கள் வாழ்க்கைகளை பாபிலோனுடைய வசதிகள், மட்டற்ற உயர் இன்பசொகுசுகள், மற்றும் உல்லாசங்களின் மத்தியில் கழிக்கவிருந்ததை எண்ணி! ஒருவருக்கொருவர் அனேக சாக்குப் போக்குகளை Excuses செய்திருந்திருப்பர்; எப்படியெனில் அவர்கள் தாங்கள் அடிமைகள் ஆகவே கீழ்ப்படிந்தாக வேண்டும், அத்தேசத்து முறைமைகளை கடைப்பிடித்தாக வேண்டும் என்றெல்லாம்! அதேபோது கீழ்ப்படியாமை ராஜாவின் பிரீதியை இழக்க வைப்பதோடு அவர்கள் முன்னேற்றத்தையும் பாதிக்கும், ஒரு கால் அவர்கள் தங்கள் ஜீவனையும் இழக்கவேண்டியாய்விடும் என்பது போன்று! அந்த ஆபத்தை அம்மூவரும் நிஜமாக சந்தித்தனர். எப்படியெனில் அவர்கள் மூவரும் எரிகிற அக்கினிச்சூளைக்குள் தள்ளப்பட்டனர். ஆகாரத்தை மறுப்பது தங்களை தனிமைப்பட்டோராய் தோன்ற செய்வதாகுமென Appear Singular அவர்கள் அறிந்தனர். மேலும், அவர்கள் இகழ்ச்சிக்கும், வசைச் சொல்லுக்கும் உள்ளாக்கப்படுவதையும் அறிந்தனர். ஆனால் அவர்களுக்கோ சமரச இணக்கம் இருக்கமுடியாதென உணர்ந்தனர். ஏனெனில் ராஜாவின் மேஜையிலிருந்துள்ள 'மாமிசம்' Meat அவர்கள் தேவனுடைய பிரமாணச் சட்டத்தால் ஒருகால் தடை பண்ணப்பட்ட மாதிரி உணவாயிருக்கவுள்ளது. பன்றியின் மாம்சத்தைப்போல (லேவி. *11:1-47*) அல்லது இரத்தம் வெளியே முற்றிலும் வடித்தெடுக்கப் பட்டிராத மாம்சமாயிருக்கலாம், (லேவி. *17:10-14*) அல்லது ஒரு கால் ஓர் விக்கிரகத்துக்கு முதலில் படைக்கப்பட்ட தாயுமிருக்கலாம். அதிலிருந்து உண்பது பாபிலோனின் மத சடங்குகளை ஒப்புக்கொள்வது போன்று கண்ணோக்கப் படவுள்ளது; (*1கொரி. 8:1-13*) அதின்மூலம் அவர்களை சடங்காச்சார முறைகளின்படி தீட்டுப்படச் செய்வதாகிடும். ஆகவே தொடருவதற்குள்ள ஒரே ஒரு மார்க்கம் இருந்தது; அதில் தானியேல் தன்னுடைய மூன்று கூட்டாளிகளாலும் தாங்கப்பட்டார். அதின்படி நாம் வாசிக்கிறதாவது:

'தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சை ரசத்தினாலும், தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம்

பண்ணிக்கொண்டு தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி அண்ணகர்களின் பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்'. *(தானி.1:8)*

தானியேல் தன்சொந்த கிரியையால் மாத்திரமே தீட்டுப்படுத்தப்பட முடியுமென்று அறிந்தான். ஆகவே அவன் தன் இருதயத்தில் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது Defile Himself என்று தீர்மானித்தான், அது அவனுடைய வாழ்க்கையின் நெருக்கடி போராட்டமாயிருந்தது Crisis. அது பத்திரமாய் கடந்து போகப்பட்டது. அல்லாவிடில் நாம் அவரைக்குறித்து அதிகபட்சமும் மீண்டுமாக ஒருபோதும் கேள்விப் பட்டிருக்கமாட்டோம். தப்பிக்கிறதற்குரிய ஓர் வழியை முன்கூட்டியே ஆயத்தப்படுத்தியதால், தேவன் அவருடைய நேர்மைப் பற்றுறுதியை கனம்பண்ணினார் என நாம் வாசிக்கிறோம்.

'தேவன் தானியேலுக்கு அண்ணகர்களின் தலைமை பிரதானியிடத்தில் தயவும், இரக்கமும் கிடைக்கும்படிச் செய்தார். அண்ணகர்களது பிரதானி தானியேலை நோக்கி உங்களுக்கு போஜனத்தையும், பானத்தையும் குறித்திருக்கிற ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு நான் பயப்படுகிறேன்; அவர் உங்களோடொத்த வாலிபரின் முகங்களைப் பார்க்கிலும் உங்கள் முகங்கள் வாடிப்போனவைகளாகக் காணவேண்டியதென்ன? அதினால் என்னைச் சிரச்சேதம் பண்ணுவாரே என்றான்'. (தானி. *1:9-10).*

இதற்கு தானியேல் ஓர் இணக்கவணக்கமான Courteous மறுமொழியை அளித்தார். அவர் ஓர் புனிதப் பகட்டு வாய்ந்த Sanctimonious தோரணையை பாவிக்கவில்லை. தனது மார்க்க கண்ணோட்டங்களை ஓர் ஆரவார கூக்குரலுடன் வெளிப்படுத்திக் காட்டவுமில்லை. கல்தேய மதத்தையோ, விக்கிரகங்களது வணக்கத்தையோ தாக்கவுமில்லை. மாறாக ஓர் இணக்க வணக்கமான, திறந்தமனதுடன் தனது விண்ணப்பத்தை முன்வைத்தார்.

'அப்பொழுது பிரதானிகளின் அண்ணகர்களது தலைவனாலே தானியேல், அனனியா. மீஷாவேல், அசரியா

என்பவர்களின் மேல் விசாரிப்புக்காரனாக வைக்கப்பட்ட மேல்ஷார் என்பவனை தானியேல் நோக்கி: பத்துநாள் வரைக்கும் உமது அடியாரை சோதித்துப்பாரும். எங்களுக்குப்புசிக்கப் பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜ போஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும்; பின்பு நீர்காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான்'. தானி. *1: 11-13.*

இது ஓர் நியாயமான Fair பரீட்சையாயிருந்தது. அண்ணகர்களது தலைமைப் பிரதானியை இக்கட்டுக்குள்ளாக்கி அவன் தனது தலையை இழக்கத் தானியேல் விரும்பவில்லை; ஆகவே இந்த முறையாக கண்காணியான Steward மேல்ஷாருடன் திருப்திகரமாக காரியத்தை அவர் ஒழுங்குப்பண்ணினார். பருப்பும் தண்ணீரும் அவர்களை நல்ல நிலையில் காத்துக்கொள்வதை நிரூபிக்க பத்துநாட்கள் போதுமானதாயிற்று.

'அவன் இந்தக்காரியத்திலே அவர்களுக்குச் செவிகொடுத்து, பத்துநாளளவும் அவர்களை சோதித்துப் பார்த்தான். பத்து நாள் சென்றபின்பு, ராஜபோஜனத்தை புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது. ஆகையால் மேல்ஷார் அவர்கள் புசிக்கக்கட்டளையான போஜனத்தையும், அவர்கள் குடிக்கக் கட்டளையான திராட்சை ரசத்தையும் நீக்கி வைத்து அவர்களுக்கு பருப்பு முதலானவைகளைக் கொடுத்தான்'. தானி *1:14-16.*

பரீட்சையின் முடிவுவிளைவு Out Come என்னவாயிருந்தது?

'இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும், ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார். தானியேலை சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்' தானி. *1:17.*

யோசேப்பு மற்றும் மோசேயைப் போல தானியேலும் அவரது கூட்டாளிகளும், ஓர் ராஜ அரண்மனையில் தங்கள்

பயிற்சியைப் பெற்றனர். கல்தேயரின் எழுத்தையும், பாஷையையும் சகல கலைகளையும் கற்றறிய அவர்கள் மற்றவர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்படி அவர்கள் ஞானிகளாயும், ஆலோசகர்களாயும் பணிபுரிய அரசவையிலிருந்தனர். அதில் எந்தவித தவறுமிருக்கவில்லை; அறிவைமுயன்று அடைந்து கொள்தல் மற்றும் விஞ்ஞான சாஸ்திரங்களை ஆய்ந்துபடித்தலை தடுக்கின்ற ஏதும் கிறிஸ்தவ மதத்திலில்லை. ஆயினும் இது தேவன்மீது மற்றும் அவருடைய வார்த்தையின் மீதுள்ள விசுவாசத்தின் ஓர் இழப்புக்கு வழிகோலுகிறதான சோதனைகள் சுற்றிவளைந்துள்ள ஓர் வழிப்பாதையாயுள்ளது. ஆனால் தானியேலின் காரியத்தில் அத்தகைய தீய விளைவுகள் ஒன்றுமில்லாததாயிருந்தது. தானியேலும் அவரது கூட்டாளிகளும் ஓர் மூன்று வருட அறிவூட்டு படிப்புத் தேர்ச்சி பெற்றுக்கொண்டமையின் மெய்மை உயர்குடிவாரிசிலுள்ள வாலிபருக்கான கல்வி மற்றும் பயிற்சிக்காக ஓர் 'அரண்மனைப்பள்ளி' Palace School அல்லது 'தேசீக பல்கலைக்கழகம்' National University அங்கிருந்ததாக மறைமுகமாக சுட்டுகிறது. அப்பேர்ப்பட்டோர் ராஜாவின் உணவு மேசையிலிருந்து போஷிக்கப்பட்டனர். அதின் காரணமாக பள்ளியானது அரண்மனையிலிருந்து தொலைவில் இருந்திருக்கமுடியாது. படிப்புக்குரிய தனிச் சிறப்பான பாடம் Subject of Study 'கல்தேயர்கள்' Chaldeans என அழைக்கப்படுகின்ற ஓர் தனிவகைமக்களுடைய மொழி மற்றும் கலாச்சார இலக்கியம் சார்ந்தவையே! இப்போதும் நினிவே மற்றும் பாபிலோனின் களிமண் புத்தக சாலைகளிலிருந்து Libraries கல்தேயர்கள் ஓர் படிப்பறிவுள்ள மக்கள் என்று நாம் அறிகிறோம். அவர்கள் இலக்கணம், கணக்கியல், வானசாஸ்திரம் மற்றும் விஞ்ஞானங்களில் தேர்ச்சி முன்னேற்றங்களை எட்டியவர்களென மறக்கலாகாது. பாபிலோன் பாபேல் குறியிடத்தில் Site இடவமைப்படைந்ததை Located நாம் மறக்கலாகாது. பாபேலின் மக்கள் பழம்பேரூழி முன்னோருடைய Antediluvians சகலவித திறமை மற்றும் ஞானம் மரபுரிமையாக பெற்றிருந்தனர். அவர்கள்(முன்னூழி) இசைக்கருவிகளை கண்டுபிடித்தோராவர். இரும்பில் கைதேர்ந்த பணியாட்களும் அவர்களே!(*ஆதி. 4:20-22*)

'அவர்களை ராஜாவினிடத்தில் கொண்டுவருகிறதற்கு குறித்த நாட்கள்(மூன்று வருடங்கள்) நிறைவேறினபோது, பிரதானிகளின் (அண்ணகர்களது) தலைவன் அவர்களை நேபுகாத்நேச்சாருக்கு முன்பாகக் கொண்டுவந்து விட்டான், ராஜா அவர்களோடே பேசினான். அவர்கள் எல்லாருக்குள்ளும் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர் களைப்போல வேறொருவரும் காணப்படவில்லை. ஆகையால் இவர்கள் ராஜ சமூகத்தில் நின்றார்கள். ஞானத்துக்கும், புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும், ஜோசியரிலும் அவர்களை பத்துமடங்கு சமர்த்தராகக் கண்டான்'. *தானி.1:18-20.*

இவையாவற்றிலும் நமக்கு ஓர் அழகான பாடம் உள்ளது. தானியேலுக்கும் அவனது கூட்டாளிகளுக்கும் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்ப வருவதற்கான நம்பிக்கை ஏதுமில்லை. குறைந்தது எழுபது வருடங்களுக்கு இல்லை! ஆகவே, அவர்களுக்கு அந்நாட்டு முறைமைகளுடன் ஒன்றித்து வாழ ஒவ்வொரு காரண ஏதுவுமிருந்தது. அவ்விதம், அவர்கள் ஒன்றித்துவிட்டது போல நடக்கவில்லை. ஏனெனில், அதன்முடிவு 'வெற்றிப்பொலிவு'/செழிப்பாயிருக்கவுள்ளதென Prosperity அவர்கள் முன் கண்டனர் Fore Saw. அதற்கெதிர்மறையானதை Reverse அவர்கள் எதிர்பார்க்க அவர்களுக்கு ஒவ்வொரு காரண ஏதுவுமிருந்தது Reason. ஆயினும், முடிவுவிளைவோ தானியேல் 'ஆளுநர்களின் தலைவனாகவும்' Chief of the Governors, பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார்.(தானி. *2:48*). பின்பு, பெல்ஷாத்சாருடைய அறிவுரைஞர் Counseller ஆனார். பின்னர் தரியுவின் கீழ் முதன்மை மந்திரியானார்.

நாமும் தானியேலைப் போல 'பிரித்தெடுக்கப்பட்ட வாழ்வை' Separated Life வாழ்வோமாக

கிறிஸ்தவர்களாக நம்மைச் சூழ்ந்துள்ள உலகீகம் (லௌகீகம்) Worldliness மற்றும் உல்லாசத்தாலான Pleasure பாபிலோனிய வாழ்வில் நாம், நம்மை சிறையடிமைகளாக Captives காண்கிறோம். நம்மில் அநேகர், உருமாற்

றெழுச்சியடைதற்கு Transformed பதிலாக இவ்வுலகத்தோடு இணக்க இசைவோடு ஒத்திருந்துள்ளோம் Conformed. இந்த 'தற்கால பொல்லாத யுகத்தினது' ஆவியுடன் ஒத்துப் போயுள்ளோம் Fallen in. ஓர் சமரச இணக்கத்தின் Compromise வாழ்வினை வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். இதனாலான விளைவோ வல்லமையற்ற Powerlessness மற்றும் ஆவிக்குரிய பலனளிப்பில்லாத Spiritual Barrenness வாழ்வாகிறது. அதன் முடிவோ தேவன் தம்முடைய பரிசுத்த வார்த்தையிலிருந்து நமக்கு வெளிப்படுத்த காத்துக் கொண்டிருக்கிற காரியங்களைக்குறித்த 'காட்சிகளோ', 'சொப்பனங்களோ' இல்லாதுள்ளோம். நாம் பாபிலோனிய உலகமயமாயுள்ள Babylonian Worldliness இந்நாட்களில் ஓர் தானியேலாயிருக்கத் துணிவு கொண்டிருப்போமாக Dare to be.

நேபுகாத்நேச்சாரின் சொப்பனம்

கலக்கமுற்ற ராஜா
A Troubled King

தானி 2:1

நேபுகாத்நேச்சார் தனது தகப்பனான நெபோபொலாசார் கி.மு.605 -ல் மரணமடைந்த பிற்பாடுவரை ராஜாவாகாததால், அவரது அரசாட்சியின் இரண்டாவது ஆண்டு கி.மு.603 ஆகும். தானியேலும் அவரதுக் கூட்டாளிகளும் கி.மு.606 -ல் அடிமைகளாக எடுத்துச் செல்லப்பட்டு. மூன்று ஆண்டுகள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தமையால். அவர்கள் அரண்மனைப் பள்ளி அல்லது தேசிய பல்கலைக்கழகத்தினின்று பட்டம் பெற்ற பிற்பாடு சிலகாலம் வரை நேபுகாத்நேச்சாரது சொப்பனம் ஏற்பட்டிருக்கவில்லை. இதுவே அவர்கள் கொல்லப்பட உள்ளவர்களது பட்டியலில் (வச.13,18) இணைக்கப்பட காரணியாய் அமைந்தது. ஆயினும். ஏதோ காரணத்தால் அவர்களுக்கு ராஜாவுடைய வேண்டுகை ஆணை அறிவிக்கப்பட்டதாக அவர்கள் தோற்றமளிக்காது இருந்தனர்.(வச.14-15).

ஆனால், சொப்பனத்தை மற்றும் அதின் பொருளளிப்பை நாம் கவனத்தில் கொள்ளுமுன்பாக. ஏன் நேபுகாத்நேச்சார் இச்சொப்பனம் தெரிவிக்கின்ற வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்டார் என்பதுபற்றி விசாரிப்பது நலமாயிருக்கும். இவ்வெளிப்பாடு தானியேலுக்கோ அல்லது வேறேதேனும் தீர்க்கதரிசிக்கோ ஏற்பட்டிருக்கலாமே! நாம் அதிகப்படியாக ராஜாக்களுடைய தெய்வீக உரிமை குறித்து வாசித்தறிகிறோம். அரசாட்சிக்கான 'தெய்வீக உரிமை' Divine Right *பெற்றிருந்ததான ஓர் ராஜா எக்காலத்திலாவது தோன்றியிருந்தால் அது நேபுகாத்நேச்சாரேயாவார். அவராக அதை தனக்காக்கவில்லை. மாறாக. தேவனால் நேரடியாக*

அவருக்கருளப்பட்டது, (எரே. 27:4-8).

இவ்வேத வாக்கியங்களிலிருந்து நேபுகாத்நேச்சார் தனது பணிக்காக தெய்வீக முறைமையால் Divinely தேர்ந்தெடுக்கப்பட்டார் எனப்பார்க்கிறோம், அவர் அதை அறிந்தாரோ அல்லவோ என்பது நமக்குச் சொல்லப்படவில்லை. எவ்வாறாயினும், அவர் தனது மகத்துவத்தால் பெரிதும் செருக்கடைந்ததாக நாம் பார்க்கிறோம். எப்படியெனில், அவர் ஓர்நாள் தனது மாளிகையில் உலாவுகின்ற போது. அவர் பெருமிதமடைந்து வசனித்ததாவது 'இது என் மகிமையின் பராக்கிரமத்தினால் என் மகிமைப்பிரதாபத்துக்கென்று ராஜ்யத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா' என்று நாம் வாசிக்கிறோம் (4;29 - 30) ஆகவே இச்'சொப்பனம்' அவருக்குக் கிட்ட வேண்டுவது தகுதியானதாயும் பொருத்தமானதாயும் காணப்பட்டது; அது அதின் பொருளளிப்புடன் கூடி அவருக்கு வெளிப்படுத்தியது யாதெனில் அவருடைய மகத்துவம் தேவனிடத்தினாலன்றி சொந்தத் திறமையின் விளைவானதல்ல; மற்றுமாக அவரது சாம்ராஜ்யத்தியனுடைய மேன்மைகள் / மகிமைகள் யாவும் சீக்கிரத்தில் கடந்து மறைந்துபோகும் என்பதாக!

இவ்விதமாக, அவரது ஆளுகையின் ஆரம்பத்தே ஓர்நாள் அவர் தனது அரண்மனையில் ஓர் முதல்தரமான / உயர்வளமிக்க மஞ்சத்தின் மீது படுத்திருந்தவராய் தனது ராஜ்யத்தின் மகிமையை சிந்தித்துக் கொண்டு அதின் எதிர்காலம் எவ்வாறு திகழப்போகிறது என ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் அவர் ஓர் ஆழ்ந்த துயிலில் அமிழ்ந்தார். அவரது அலைக்கழிக்கும் சிந்தனைகளுடைய எண்ணப்பதிவுகள் அவரை விட்டு நீங்காதிருந்தன மற்றும் அவருடைய துயில் கொண்டுள்ள உணர்வு நிலையில் அவைகள் அகக்காட்சியாக உருவாக்கிக் காண்பிக்கத்தொடங்கின. அவர் தனது சொப்பனத்தில் ஓர் மாபெரும் உருவச்சிலையை கண்டது வரைக்கும் இவ்வாறாயிற்று. அதினுடைய பிரகாசம் மகோன்னதமாயும், வடிவமைப்பு அதிபயங்கரமாயும் இருந்தது. உருவச்சிலையுடைய பிரமாண்ட பருமனளவின் காரணமாக சந்தேகமின்றி அவ்வித பயங்கரமாயிருந்தது மற்றும் அதினுடைய பிரகாசம் ஓர்

இயற்கைக்கப்பாற்பட்ட ஒளியின் காரணமாக உருவாயிற்று. அவ்வொளி வானங்களினின்று விழுந்ததாயும், உருவச்சிலை உருவாக்கம் பெற்றிருந்த பளபளப்பான உலோகத்தகடுகள் மேல் அதுபட்டு பிரதிபலித்ததாய் பிரகாசித்திருந்தது. ராஜா அவ்வுருவச்சிலையை ஆச்சரியத்தோடும், பிரமிப்போடும் உற்று நோக்கியவாறு விறைத்து நிற்கின்றபோது, ஓர் கல் அருகாமையிலுள்ள ஓர் மலையிலிருந்து தானே பெயர்ந்து வருவதைக் கண்ணுற்றார்; மேலும், அக்கல் உருவச் சிலையை அதின் கால்களின் மீது மோதுவதைக் கண்டார். அத்துடன் அவ்வுருவச்சிலை தகர்ந்து விழுந்து தூளாகியது. அத்துடன் அது காற்றினால் பறக்கடிக்கப்பட்டுப் போயிருற்று. ராஜாவின் பிரமிப்புக்கேற்றதாய் மோதிய அக்கல் வரவர வளர்ந்து பெரிதாகியது, அதாவது அவ்வுருவச்சிலை நின்றிருந்த முழு நிலப்பரப்பையும் மூடுமளவுக்கு வரையும் வளர்ந்து பெரிதாயிற்று,

நாம் சொப்பனங்கள் மற்றும் காட்சிகள் Visions இடையேயான வேறுபாட்டை பிரித்தறிதல் வேண்டும்; சொப்பனங்கள் விழிப்படை உணர்வு நிலையின் Waking Consciousness இழப்புக்கும், ஆழ்ந்த தூக்கத்துக்கும் இடைப்பட்ட ஊடுசெல்கைப் படிநிலை Stage-யில் ஏற்படுகின்றன. இவ்விரண்டுக்கும் இடையே 'தூங்குகின்ற உணர்வுநிலை'-யுடைய ஓர் படிநிலை ஏற்படுகின்றது. அவ்வமயம் நாம் சொப்பனம் காணலாம். ஆனால், அதை ஒருபோதும் அறியாமலிருக்க நேரிடுகிறது. நாம் எழுகின்ற / விழிப்படைகின்ற போது ஏற்படுபவையே நாம் பெறுகின்ற மற்றும் ஞாபகங்கொள்கின்ற சொப்பனங்களாகும். மேலும் ஓர் தெளிவான பண்புடையதாய் இராதிருக்குமானால் அவை மங்கிப்போய்விடும் அவைகளை நாம் ஞாபகப் படுத்திப்பார்க்க முயலுகையில்! நம்முடைய விழிப்புள்ள சந்தர்ப்பங்களில் காட்சிகள் தோன்றுகின்றன. அதுவும்நமது மனது ஏதாமோர் சிந்தனையில் ஈர்க்கப்பட்டிருக்கையில் / மூழ்கியிருக்கையில்! அவ்வமயம் நாம் நம்மைச் சூழ்ந்து நடைபெறுபவை என்னவென்று விழிப்புணர்வில்லாத நிலையிலாகும்போது! காட்சிகள் Visions என்பது ஓர் கண்ணுக்குரிய இயல் நிகழ்ச்சி Ocular Phenomenon மற்றும் கண்ணிமைகள் மூடியிருக்கையில் தோன்றப்படுகின்றன. கண்ணிமையின் உட்பகுதியில் காட்சி

தோற்றமளிக்கிறது மற்றும் போதுமான அளவு ஒளிபிறங்குகின்றதாய் கண்ணிற்கு காணப்படுகிறதாயுள்ளது. மேலும் கண்ணிமை அசைக்கப்படாதிருக்கையில் காட்சி தொடர்ந்து எல்லையற்றபடியே நிலைத்துக் காணப்படும், அவ்வாறாகையில் அதை விரிவாக ஆராய்ந்து பார்க்க இயலும். இதைப்பொறுத்தவரை இவ்வெழுத்தாளர் தனது சொந்த அனுபவத்திலிருந்து இதைக்குறித்துப் பேசுகிறார். அநேக நாட்களுக்கு ஓர் கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட போது, காட்சிகள் அவர் விழிக்கும் சந்தர்ப்பங்களில் தனது கண்ணை மூடியபோதெல்லாம் தோன்றலாயின.

சொப்பனக்காரர்கள் இயற்கையாகவே அவர்கள் பழக்கப்பட்ட காரியங்களைக் குறித்து சொப்பனம் காண்பார்கள். ஐம்பது வருடங்கள் முன்னுள்ள ஓர் சொப்பனக்காரர் மோட்டார் வாகனங்களைக் குறித்தோ அல்லது ஆகாய விமானங்கள் குறித்தோ சொப்பனம் காண்பதில்லை! இப்போதுள்ள இன்றைய சொப்பனக்காரர் ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னுள்ள வாகன வகைகளைப்பற்றிய சொப்பனத்தைக் காண்பதும் கூடியதாகாது.

நேபுகாத் நேச்சாரின் காலத்தில் பிரம்மாண்ட சிலைகள் சாதரணமாயிருந்தன. இன்று இப்பேர்ப்பட்டவைகளை எகிப்தின் அழிவுகளில் நாம் காண்கிறோம். இப்போதும் நேபுகாத் நேச்சார் எகிப்திலிருந்து அவ்வமயம் திரும்பியிருந்தார். அதுவும் எகிப்தைத் தோற்கடித்து பிடித்துக் கொண்ட நிலையில்! நினைவு விழாக்கொண்டாட எகிப்திய ராஜாக்களால் நிலை நிறுத்தப்பட்ட எகிப்துடைய சிலைகளைப் பார்த்திருந்ததைவிட வேறென்ன கூடுதல் இயற்கையானதை,நேபுகாத் நேச்சார் அயராது தூங்குவதற்கு முன்பாக நினைத்திருக்க வேண்டும்? அப்பேர்ப்பட்ட முறையில் தனது சொந்த ஞாபகத்தைப் பாதுகாக்க வேண்டி! ஆனால்,ஓர் வித்தியாசம் யாதெனில், நேபுகாத்நேச்சார் கண்ட சிலை Image உலோகத்தாலானது, அதே சமயம் எகிப்தினுடைய சிலைகளோ கல்லினாலானவை! சிலையுடைய உலோகத்தன்மை மற்றும் ஒன்றைவிடக் கூடுதலான வகைகளான உலோகத்தினாலாக்கப்பட்ட தோற்றம் ராஜாவுக்கு தனிச்சிறப்பு வாய்ந்ததாயிற்று. மேலும், எல்லாக் கீழை

நாட்டுக்குரியோர் Orientats சொப்பனங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதோடு பார்வோன் போன்ற புறஜாதிய ராஜாக்களுக்குப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் செய்ய நியமித்ததை வெளிப்படுத்தவுள்ள தேவனுடைய முறையாகவும் இருந்தமையால், இயற்கையாகவே நேபுகாத் நேச்சார் தனது சொப்பனம் அர்த்தப்படுத்துவது யாது என அறிய விரும்பினார்.ஆனால், அது மிகப் பயங்கரமாகவும், திகிலூட்டுவதாயும் இருந்தமையால், ராஜா திகிலடைந்தவராய் தூக்கத்தைவிட்டு எழுந்திருந்தார்; மிகக் குழப்படியோடு கலங்கியவரான நிலையில்,அவர் தனது சொப்பனத்தை ஞாபகப்படுத்திப் பார்க்குமுன் சொப்பனம் அவரது நினைவிலிருந்து மங்கி மறைந்துவிட்டிருந்தது.

வசனங்கள் 2-3

'மந்திரவாதிகள்' மந்திரத்தைக் கையாடுபவராய் இருந்தனர்; அதாவது, அவர்கள் சகலவித மூடநம்பிக்கைக்குரிய சடங்குகள் மற்றும் அதிர்ஷ்ட வாக்களிக்கும் சடங்காச்சாரங்கள் போன்றவற்றைக் கையாடினர். 'சோதிடர்கள்' எதிர்கால நிகழ்வுகளை, நட்சத்திரங்களை ஆராய்வதின் மூலம் முன்னறிவிப்பவராகப் பாசாங்கு செய்யும் மனிதராயினர். கிழக்கத்திய தொல்பழமை தேசங்களில் இம்முறை பழக்கத்திலிருந்தது. படுசூனியக்காரரர்கள் மரித்தோருடன் தொடர்பு கொள்கின்றதுபோல் பாசாங்கு செய்பவர்களாயினர். விதி அல்லது ஊழ் பயன்படுத்தி எந்தக் காரியத்திலும் இயற்கைக்கு மேலான அறிவும், ஆற்றலும் கொண்டவர்கள் போல் உரிமைபாராட்டுவர்; எந்த முறையினாலும் தேடிப்பெற்றவர்கள் என்றாலும் தீய ஆவிகளின் உதவியாலேயே மிகுதியும் அவ்விதம் அடைந்தவர்களே! இதற்கு தற்காலத்து ஆவி உலகத்தொடர்புக் கோட்பாடு ஓர் சான்றாயுள்ளது. 'கல்தேயர்கள்' என இங்கு குறிப்பிடப்படுவோர் ஓர் தத்துவமேதைகளான பிரிவார் அவர்கள் விஞ்ஞானங்களை தங்கள் தனி விசேஷ ஆய்வாக கொண்டவர்களாவர். இவ்வகுப்பைச் சார்ந்தவர்களே தானியேலும் அவரது கூட்டாளிகளுமாவர்.

வசனங்கள் 4-9

முற்காலத்திய குறிசொல்வோர் மற்றும் சொப்பனங்களை பொருள்விளக்கமளிப்போர் ஏதாமோர் கூர்மதி வாய்ந்த வருவதுரைத்தலுக்கு ஓர் அடிப்படை அமைப்பதற்குப் போதுமான செய்தி விவரங்களை இழுத்து எடுத்துக்கொள்ளும் கலைகளில் கை தேர்ந்தவர்கள் மற்றும் தங்களது பதிலுரையை உருவாக்குவதில் ஐயப்பாடான தெளிவற்ற முறையை கடைப்பிடிப்பதன் மூலம், நிகழ்வு எந்தவோர் முறையில் சென்றாலும் அவர்களது பதிலுரை சரியானது போன்றே தோற்றமளிப்பதாயிருக்கும். கல்தேயர்கள் ஆகவே, புனைந்துருவாக்கிக் காட்டினதாவது: ராஜா சொப்பனத்தை அவர்களுக்குச் சொல்வதானால் அவர்கள் ஏதாமோர் பொருத்தமாகக் காணப்படும் பொருள்விளக்கமளிக்க ஒப்புக்கொள்வதாக! இவ்விதமாகத் தங்கள் கீர்த்தியைக் காத்துக்கொள்ள! ஆனால், இது அவர்களது உரிமையாடலுக்குப் பொருந்தியதாயில்லை! எப்படியெனில், அவர்களோ தங்களுக்கு மாய மந்திரம் சார்ந்த ஆற்றல் உள்ளதென்றும், மீமானிடச் செய்திகள் அவர்களுக்குக் கிட்டுமெனவும் உரிமை கொண்டாடினர். இவ்வாறான நிலையில் ராஜாவுடைய கோரிக்கை, அதாவது சொப்பனத்யையே எடுத்துரைக்கக் கேட்பது என்பது நியாயமற்றதாயிருக்கவில்லை. ராஜா தனது சொப்பனத்தை அப்படியே எடுத்துரைப்பது அவர்களால் கூடாதுள்ளது எனக் கண்ட போது அவர்கள் உரிமைப் பாராட்டல்களிலுள்ள நம்பிக்கையை இழந்து போனார். அவர்கள் யாவரும் ஏமாற்றுகிறவர்கள் என நியாயமாகக் குற்றஞ்சாட்டினார் மற்றும் 'காலம் கடத்துபவர்கள்' 'காலம் மாறுகிற வரை' என்றும் குற்றஞ்சாட்டினார். அதாவது இக்காரியம் அவரது ஞாபகத்தை விட்டுக் கடந்து போகின்ற வரை! அதாவது, அவர் அதைக்குறித்துக் கவலையற்றுப் போய்விடும் மட்டாக!

கல்தேயரது உரிமைகோரல், அதாவது, தேவர்களோடு அவர்களால் தொடர்பு கொள்ளமுடியும் என்பது பொய்யாகியது என்று அவர்களது சொந்த அறிக்கையிலிருந்து தெளிவாகிறது.

வசனங்கள் 10-11.

'தேவர்களைத் தவிர, சொப்பனத்தை, அப்படியே எடுத்துக்கூறுவது ஒருவனாலும் கூடாது என்று, கல்தேயர்கள் அறிக்கையிட்டபோது அவர்களால் கூடாது' என்பதை ஒப்புக்கொண்டார்கள்; அதாவது அவர்களுக்குத் தேவர்களோடு எந்தவித அதிகாரம் / வல்லமை இல்லை என்பதை! இவ்விதமாக அவர்கள் ஏமாற்றுகிறவர்கள் என்கிற ராஜாவின் பழியை நியாயப்படுத்தினார்கள்.

வசனங்கள் 12-13.

அவர்கள் மீது வசனிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பின் கடுமை நியாயமானதோ என்று நாம் கேள்வி எழுப்பலாம். மந்திரவாதிகள், சோதிடர்கள், பில்லி சூனியக்காரர்கள் மற்றும் கல்தேயர்கள் எண்ணிக்கை மிக்கவர்கள், செல்வந்தர்கள் மற்றும் செல்வாக்குமிக்க குழுமத்தினர். அவர்கள் பாபிலோனுடைய நாகரீகமிக்க, படிப்புமிக்க வகுப்பினாரால் அங்கம்வகிக்கப் பட்டோராவர். அவர்களுக்கு அழிவை ஏற்படுத்துவது என்பது சாம்ராஜ்யத்தை பலவீனப்படுத்துவதானது. தீர்ப்பை நடைமுறைப்படுத்துதல் எத்தகைய விளைவை உண்டாக்கும் என்பதை நம்மால் கற்பனை செய்ய மாத்திரம் இயலும்; ஆனால் மகிழ்ச்சிக்குரியதாய் அது தவிர்க்கப்பட்டது. எகிப்தின் மந்திரவாதிகள் மற்றும் ஞானிகள் பார்வோனுடைய சொப்பனங்களை அர்த்தப்படுத்த முடியாது போனபோது, தேவன் யோசேப்பு என்ற ஓர் எபிரேய அடிமையை, அப்பணிக்கென ஆயப்படுத்தியிருந்தார், அப்படியே பாபிலோனின் ஞானிகள் ராஜாவுடைய சொப்பனத்தை அர்த்தப்படுத்த முடியாது போனபோது, தேவன், தானியேல் என்ற எபிரேய அடிமையை காட்சிக்கு கொண்டுவந்தார். ஏன் தானியேல் முதலாவது கலந்தாலோசிக்கப்படவில்லை என்பது நமக்கு சொல்லப்படவில்லை. ஆரியோக் எனும் ராஜாவின் தளபதி தானியேலை கைதுசெய்ய வந்ததுவரை, அவர் இக்காரியத்தைக் குறித்து எதையும் அறிந்தவராக தெரியவில்லை. ஆனால் தேவனுடைய கரம் சந்தேகமின்றி இவை எல்லாவற்றிலும் இருந்தது. பாபிலோனுடைய ஞானிகளால் பிரதி நிதித்துவப்படுத்தப்பட்ட புறசமயத்திய முறைமைகளில் உள்ள தவறான/பொய்யான உரிமைப் பாராட்டல்களை வெளியாக்கும்படி அவர் முதலில் முற்பட்டார்; மற்றும்

அவர்களது திறமையின்மையை அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்யவும் முனைந்தார். முதலாவது அழைக்கப்பட்டிருந்தால் இஞ்ஞானிகள் இப்பரிசோதனைக்கு தப்பியிருப்பார்கள். ஆரியோக்குடைய கட்டளைப்பணியை தானியேல் அறிந்து கொண்டபோது, அவர் கண்டன மறுப்புரை அளித்தார் Protested.

வசனங்கள் 14-16

தானியேலது நம்பிக்கை / விசுவாசத்தை கவனிக்கவும். அவர் ராஜாவை அவரது சொப்பனத்தை விவரிக்க கூறவில்லை. காலவேளைக்காக மட்டுமே அவர் கேட்டார். மேலும், பணிவான உறுதியுடன், ராஜாவிடம் அவரது சொப்பனத்தை திரும்ப எடுத்துக் கூறுவதோடு, அதன் அர்த்தத்தையும் கொடுப்பதாக வாக்குப்பண்ணினார், அவரது வேண்டுகோள் அளிக்கப்பட்டது.

முழு இரவு ஜெபக்கூட்டம்

வசனங்கள் 17-18

அது ஓர் ஊழித்திருப்பம் ஏற்படுத்தும் 'ஜெபக்கூடுகை'. சந்தேகமின்றி தானியேல் தான்மட்டில் சென்றிருந்து ஜெபித்திருந்தால் கூட அது கேட்கப்பட்டிருக்கும். ஆனால் அவரோ ஐக்கிய / கூட்டாய்மை ஜெபத்தில் நம்பிக்கை கொண்டார், மேலும் அவரது மூன்று கூட்டாளிகளும் அவரைப்போலவே இக்காரியத்தில் அக்கரை கொண்டிருந்தனர்; ஏனெனில், அவர்களது வாழ்க்கைகளும் அதேதராசில் அவரைப்போல நிறுத்தப்பட்டிருந்தன. தானியேல் ராஜாவுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடாது போனால், எல்லாரும் / நான்குபேரும் அழிந்து போவார்கள். ஆனால், அவர்களது ஜீவன்களை விட முக்கியமான இன்னொன்று ஊசலாட்டத்தாகியிருக்கும். தானியேல் தேவனை தோற்கச் செய்திருந்தால், உலகமானது அச்சொப்பனத்தில் புதைந்து கிடந்த அம்மாபெரும் 'வெளிப்பாடை' Revelation *அத்துடன் அதன் பொருளாக்கத்தை இழக்கவேண்டியதாயிருக்கும்; அதுவும் 'புறஜாதியாரது காலங்களது'* Times of the Gentiles *தீர்க்கதரிசன மற்றும் வரலாற்று உருவரையைப் பெற்றுக்கொள்ளாதே போயிருக்கும்.*

எப்போது அந்த 'ஜெபக்கூடுகை' தொடங்கியது என்பது நமக்குச் சொல்லப்படவில்லை ஆனால், அது இரவின் நடுநிசி வரைத் தொடர்ந்திருக்கிறது மற்றும் ஓர் சாதகமான விடைக்கான உறுதிப்பாடு அவர்களுக்குக் கிட்டும்வரைக்கும் அது நிறுத்தப்படவில்லை. பின்பு அவர்கள் இளைப்பாறிவிட்டனர். தானியேல் அயர்ந்து தூங்கினாரா மற்றும் நேபுகாத் நேச்சாரது சொப்பனம் அவருக்கு மீண்டும் பொருளுரையோடு காணப்பட்டதா அல்லது அவர் தமது படுக்கையில் கிடக்கையில் அவர் காட்சியில் அப்பேருருவை/ சிலையைக் கண்டாரா மற்றும் காபிரியேல் தூதன், பிந்தைய காட்சிகள்போல, காட்சி யளித்தாரா, அச்சொப்பன அர்த்தத்தை வெளிப்படுத்தினாரா என்பது நமக்குச் சொல்லப்படவில்லை.வசனம் 19-ன் படி 'பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது' என நாம் வாசிக்கிறோம்.

சொப்பனம் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டதால், தானியேல் வீண்பெருமிதம் கொள்ளவில்லை, துரிதப்பட்டு, ராஜாவிடம் ஓடவுமில்லை, அது ராஜா கண்டபடியான காட்சிக்கு ஒத்துப்போகிறதா என விசாரிக்க! மாறாக அவரது ஆத்துமா வேதத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள மிக அருமையான, ஆச்சரியமான துதியின் 'வெடித்து வெளிப்படுகையில்' Outbursts கட்டவிழ்க்கப்பட்டது. விடையளிக்கப்பட்ட ஜெபத்துக்கு நன்றிகள் செலுத்துவதில் தானியேல் நம்பிக்கை கொண்டிருந்தார். அது ஓர் ஏழு மடியான துதிகளின் நாலசைச்சீராய் Paean வெளிப்பட்டது.

பின்பு, தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்தரித்தான். தானியேல் பதிலளித்துச் சொன்னது: தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக; ஏனெனில்,

1. ஞானமும், வல்லமையும் அவருக்கே உரியது.

2. அவர் காலங்களையும், சமயங்களையும் மாற்றுகிறவர்.

3. ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்.

4. அவர் ஞானிகளுக்கு ஞானத்தைக் கொடுக்கிறவர்.

5. அறிவாளிகளுக்கு அறிவைக் கொடுக்கிறவர்.

6. அவரே ஆழமும், மறைபொருளுமானதை வெளிப் படுத்துகிறவர்.

7. இருளில் இருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்.

'என் பிதாக்களின் தேவனே, நீர் எனக்கு ஞானமும்,வல்லமையும் கொடுத்து, நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக்கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்தபடியினால், உம்மைத் துதித்துப் புகழுகிறேன்' என்றான்.

வசனங்கள் 19-23.

தானியேலுக்கு மாத்திரமே இவ்வெளிப்பாடு அருளிச் செய்யப்பட்ட போதிலும், அவன் சகல மேன்மையையும் தனக்கானதென்று எடுத்துக்கொள்ளவில்லை, மாறாக, அவனுடைய நன்றி ஏறெடுத்தலில் தன்னோடு தனது கூட்டாளிளையும் இணைத்துக் கொண்டான்.

பொழுது விடிந்தமாத்திரத்தில், தானியேல், சந்தேகமின்றி, தீவிரமாக, ஆனால், கூடுமான அளவு விரைவாக ஆரியோகைக் காணப் புறப்பட்டுச் சென்றான்.

வசனம் 24.

ஆரியோகிடம், தானியேலின் முதல் வேண்டுகை யாதெனில்: 'பாபிலோனின் ஞானிகளை அழிக்காதேயும்' என்பதே! இவ்வாறாக அவர்கள் காப்பாற்றப்பட்டனர். ஏனெனில், அவர்கள் மத்தியில் ஓர் 'தேவ மனிதன்' இருந்ததினால்! எப்படி அந்த தானியக்கப்பலிலிருந்த சிறைக்கைதிகளும், கப்பல் பயணிகளும் அன்று பவுலின் நிமித்தம் காப்பாற்றப்பட்டனரோ அப்படியே! அப். 27:23-24.

வேதசத்தியங்களின் போதனை யாதெனில்: 'நீதிமானின் நிமித்தம் துன்மார்க்கர் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்' என்பதே!

யோசேப்பினிமித்தம் போத்திபாரின் வீடு ஆசீர்வதிக்கப்பட்டது. ஆதி. *39:5* 'சோதோமில் பத்து நீதிமான்கள் இருந்திருந்தால் தேவன் அதை அழிக்காமல் தப்பவிட்டிருப்பார்'. நியாயத் தீர்ப்பிலிருந்து இவ்வுலகம் இதுகாறும் தப்பவிடப்பட்டுள்ளது என்றால் இதில் காணப்படும் நீதிமான்கள் நிமித்தமேயாகும். சபை எடுத்துக் கொள்ளப்பட்டவுடனே Caught Out இவ்வுலகம் நியாயத்தீர்ப்புக்கு முதிர்ச்சி அடைந்துவிடும். பாபிலோனுடைய ஞானிகள் தானியேலினிமித்தம் தப்பவிடப்பட்டதுபோல, அப்படியே கிறிஸ்துவிநிமித்தம் நாம் இரட்சிக்கப் படுகிறோம்.

வசனம் *25.*

அதிகாரிகள் தங்களது ஆளுகைக்கு/மேலாண்மைக்கு Sovereign உகந்தவர்களாகச் செயல்படுவதையே விரும்பு கின்றார்கள். அதுவே, அவர்களது பண்பாய்க் கொண்டுள்ளனர். அப்படியே, இங்கு ஆரியோகு தானியேலை கண்டுபிடித்ததாக 'நான் ஒரு புருஷனை கண்டுபிடித்தேன்' என உரிமை பாராட்டுகிறான். தானியேல் இதற்கு முன்பே தன்மட்டில் தனியாக ராஜா முன்பாக தோன்றி அவரிடம் காலநேரம் அளிக்கப்பட்டால் அவருக்கு அர்த்தத்தை (பொருளாக்கத்தை) அறியப்பண்ணப்போவதாக வாக்குறுதி கொடுத்திருந்ததை அறிந்திருந்தாலும், மறந்துவிட்டவனாக இவ்வாறு கூறினான்.

வசனங்கள் *26-30*

தானியேலுக்கு ராஜாவுடைய கேள்வி: 'நான் கண்டிருக்கிற சொப்பனத்தை உன்னால் எனக்கு தெரிவிக்கமுடியுமா? அதனுடைய அர்த்தத்தையும் கூட?' ஏனெனில், ராஜா தானியேலை 'ஞானிகளின்' Wise men மத்தியில் ஒருவனாக வகைப்படுத்தினான். அவன் அவர்களைவிட சொப்பனத்தை அறிவிப்பதிலும், அதை அர்த்தப்படுத்துவதிலும் திறமை மிக்கவனா என்பதில் சிறிது சந்தேகத்துடனிருந்தான் என்பது நிச்சயம்; இவ்வாறான நிலைப்பாடு தானியேலுக்கு ஏன் ஞானிகளால் விவரிக்க கூடவில்லை என்பதை தெளிவுபடுத்த தருணத்தை அளித்தது; இது அவர்களது எல்லைக்கு Province அப்பாற்பட்டது. இது தேவனால்-'இரகசியங்களை வெளிப்படுத்துகிறவரால்' மாத்திரமே கூடிய காரியமாயிற்று.

ஏனெனில் 'பிந்தையநாட்களில்' Latter Days நடக்கப்போகின்ற காரியங்களைக் குறித்தவையாகின்றன. தானியேலுக்கு ராஜா பாராட்டு ஏதும் அளிக்க இடமளிக்காது அவன் தொடர்ந்து விளம்பியதாவது: இந்த இரகசியம், தன் சொந்த ஞானத்தின் காரணமாக அவனுக்கு வெளிப்படுத்தப்படவில்லை; மாறாக ராஜா தமது சாம்ராஜ்யத்தினுடைய எதிர்காலம் என்னவாயிருக்கப்போகிறது என்பதை அறிந்து கொள்ளவும் அத்தோடு மிகத்தொலைவிலுள்ள எதிர்காலத்தே என்னென்ன நடக்கப் போகின்றது என்பதையும் அறிந்து கொள்ளவும் வெளிப்படுத்தப்பட்டது என்றான்.

சொப்பனம்

வசனங்கள் 31-35

ராஜாவுக்கு தனது 'சொப்பனம்' மீள எடுத்துரைக் கப்பட்டபோது அவனது உணர்வுகள் எப்படியாயிருந்திருக்கும் என்பதை நம்மால் கற்பனை செய்யக்கூடும். அந்த 'பேருருவசிலை' ராஜா நித்திரை செய்கையில் பார்த்திருந்த அதே அச்சடையாளத்தில் எல்லாத் துல்லிய விபரங்களைக் கொண்டு நின்று கொண்டிருந்தது. தானியேலைப்பற்றி ராஜா என்ன எண்ணியிருக்க வேண்டும். அவன் தானியேலுடைய ஆவிக்குரிய கண்ணோட்டம் மற்றும் ஞானத்தைக்குறித்து, மிக்க வியப்புற்றிருக்க வேண்டும். அதுவே அவனுக்கு சொப்பனத்தினுடைய அர்த்தத்தில், அது அவனுக்கு வெளிப்படுத்தப்பட்ட போது, நம்பிக்கையின் நிச்சயத்தைக் கொடுத்திருக்கும்.

பொருள் விளக்கம் / உட்பொருள் வெளிப்பாடு
Interpretation

I *தலை - பாபிலோனிய சாம்ராஜ்யம்.*
வசனங்கள்: 36 - 38.

II *மார்பும், புயங்களும் - மேதிய - பெர்சியா சாம்ராஜ்யம்.*
வசனம்: 39.

III வயிறு - தொடைகள் - கிரேக்க சாம்ராஜ்யம்.
வசனம்: 39.

IV கால்கள் - ரோம சாம்ராஜ்யம்.
வசனம்: 40.

பாதங்கள் மற்றும் கால் விரல்கள்.
வசனங்கள்: 41 - 43.

V கல் - கிறிஸ்துவினுடைய ஆயிர வருட ராஜ்யம்.
வசனம்: 44.

சொப்பனத்தின் நோக்கம்

வசனங்கள்36-45.

நேபுகாத் நேச்சார் தனது சொப்பனம் தானியேலால் மீள எடுத்துரைக்கப்பட்ட போது ஆச்சரியமடைந்திருந்தால், அதன் பொருளாக்கத்தைக் கேட்டபோதோ திகைப்பில் மூழ்கடிக்கப்பட்டுப் போயிருக்க வேண்டும். அத்தோடு எவ்வாறு அவரது சொந்த சாம்ராஜ்யம் வீழ்ச்சியுறப் போகிறது மற்றும் கீழ்த்தரமான ஒன்றால் பின் தொடரப்படவுள்ளது, இவ்வாறு சகல உலக சாம்ராஜ்யங்களும் அழிக்கப்படவேண்டியுள்ளது என அறிந்து கொண்டபோது! சொப்பனத்தின் பொருளாக்கம் நிச்சயமாக மானிட நுண்ணறிவுக்கு எட்டப்படாத ஒன்றாயுள்ளது. கல்தேயரது ஞானிகளோ, புகழ் பாடுபவர்களோ நேபுகாத்நேச்சாரது சாம்ராஜ்ய வீழ்ச்சியையோ, புறஜாதி ஆதிக்கத்தின் முடிவான அழிவையோ அறிவிப்பதற்கு ஒருபோதும் துணிவு கொண்டிருக்கமாட்டார்கள்.

நேபுகாத்நேச்சாருடைய சொப்பனத்தின் பசும்பொன் தலையாலான பேருருவச்சிலையில் புறஜாதியாரின் காலங்களுடைய Times of the Gentiles ஓர் கட்புலனான காட்சிக்குரிய உருவப்படம் நமக்கு கிடைத்துள்ளது. 'புறஜாதியாரின் காலங்கள்' எனும் சொற்றொடர் தானியேல் புத்தகத்தில் காணப்படுகிறதில்லை, ஆனால் கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட ஓர் புதிய ஏற்பாட்டு சொற்றொடராகும். இது அவரது ஒலிவமலை உபந்நியாசத்தில் Olivet Discourse கி.பி.

70-ல் எருசலேமின் அழிவை சம்பந்தப்பட்டு பயன் படுத்தப்பட்டது. அவர் அவ்விடம் கூறியதாவது: புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும் லூக். 21:24 'புறஜாதியாரின் காலங்கள்' எனும் சொற்றொடரில் ஓர் குறிப்பிட்ட காலவரிசைப்படியான வரையறைக்குள் அமைந்த ஓர் காலவட்டம் Period of Time இயேசு குறிப்பீடு செய்தார். இக்கால வட்டம் யூதராஜ்யம் ஓர் ராஜா இல்லா திருக்கப்போகும் காலத்தோடு சரி ஒத்துப்போய்விடுகிறது. இக்காலம் ஓசியாவால் முன்னுரைக்கப்பட்டுள்ளது.

ஓசியா 3: 4-5

'புறஜாதிகளின் காலங்கள்' கி.பி.70 -ல் 'எருசலேமின் அழிவோடு' ஆரம்பிக்கவில்லை; மாறாக தானியேல் பாபிலோனுக்கு அடிமையாகக் கொண்டுபோகப்பட்ட கி.மு. 606 -ல் ஆரம்பித்தது. இக்காலம் கிறிஸ்து திரும்பவந்து தமது ஆயிரவருட அல்லது 'கல்ராஜ்யம்' நிறுவுகிறது வரை தொடரப்போகிறது. அதாவது நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தில் மலையிலிருந்து கைகளினால் பெயர்க்கப்படாது உருண்டுவந்த கல்லால் அது உருவகப்படுத்தப்படுகிறது. நாம் 'புறஜாதியாரின் காலங்கள்' எனும் சொற்றொடரை அப்போஸ்தலன் பவுலினால் ரோமர்.11:25ல் பயன்படுத்தப்பட்ட 'புறஜாதியாரின் நிறைவு' எனும் சொற்றொடருடன் குழப்படி செய்துவிடக்கூடாது. 'புறஜாதியாரின் நிறைவுக்கு' புறஜாதிகளின் காலத்தோடு எந்தவித தொடர்புக் குறிப்பும் கிடையாது. மாறாக இக்கால சகாப்தத்தில் பரிசுத்த ஆவியால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கங்களாக பிரித்தழைக்கப்படுகின்ற புறஜாதியாரையே குறிப்பீடு செய்கின்றது. அப்புறஜாதியாரது எண்ணிக்கை பூர்த்தியாகையில் அல்லது நிறைவடைகையில் கிறிஸ்து தமது சபையை எடுத்துக்கொள்வார். அத்துடன் 'புறஜாதியாரின் நிறைவு' பூர்த்தியாகும். இந்த 'தெய்வீக திட்ட ஒழுங்கு' அப்போஸ்தலர் 15: 13-17-ல் உருவரையப்பட்டுள்ளது.

மனிதனுடைய நாள் Man's Day

இந்த தற்போதைய காலசகாப்தம் 'மனிதநாள்' (1 கொரி 4:3) என வேத சத்தியத்தில் மிகத்தெளிவாக சொல்லப்

பட்டிருக்கையில், இப்பதம் 'புறஜாதியாரின் காலங்கள்' எனும் முழு கால வட்டத்தையும் பொருந்தி பரவுவதாகிறது. இது 'மனிதனது தெய்வமாக்குகை' Deification Of Man யின் நாளாயுள்ளது. தூரா சமவெளியில், தன்னையே மாதிரி உருவாக்கிய 'பொன்னாலான சிலையை' நேபுகாத்நேச்சார் நிறுவிய அதே நாளிலிருந்து மற்றும் தனது ஆட்சியின் கீழுள்ள அத்தனை மக்களையும் அதையே வணங்கும்படி (தானி.3:1-7) கட்டளையிட்ட அதே நாளிலிருந்து கள்ளத்தீர்க்கதரிசி 'மிருகத்தினுடைய சிலையை' (அந்திக்கிறிஸ்து) உருவாக்கி அதனை மக்கள் அனைவரும் தொழும்படி கட்டளை யிடப்போகிறானோ (வெளி.13:13-17) அதுவரை புறஜாதியாரின் காலங்களுடைய பண்புருக்களை / தன்மைகளை பொருத்தமாக விவரிக்கின்ற அடையாளச்சின்னம் ஓர் மனித உருவச்சிலை Image of a Man ஆகும். புறஜாதியாரின் காலங்களின் சிறப்பியல்புகளை விவரிக்க நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தினுடைய 'பொன்னினாலான தலையோடுள்ள பேருருவச்சிலை' எவ்வளவு பொருத்தமாயுள்ளது! புறஜாதியார் காலங்களின் கீழ்நோக்கிய தரக்குறைவு (படிப்படி அழிவு நிலை) பயன்படுத்தப்பட்ட உலோகங்களின் மதிப்பின் படிப்படி கீழ் இறங்குகையில் காணப்படுகிறது. பொன்னிலிருந்து, வெள்ளி, வெண்கலம், இரும்பு, இரும்பும், களிமண்ணுமாகிய மதிப்பு தர வீழ்ச்சியில் காணலாம். உலகமானது நல்ல/ உயர் நிலைக்கு வளருகிறதானால் மேற்குறிப்பிட்ட உலோகங்களின் வரிசை தலைகீழாகியிருக்கும். உலோக எடையும் Specific Gravity கூட கீழ்நோக்கி இறங்குகிறது. எடை Specific Gravity பொன் 19.5; வெள்ளி. 10.47 ; வெண்கலம்: 8, எக்கு இரும்பு 5; களிமண் 1.93. சிலை 'தலைகனம்' கொண்டது. இதிலிருந்து புறஜாதியார் மேலாக்கம் / மேலாட்சி ஓர் மாபெரும் 'உலோகத்தாலான மனிதன்' என்றே உருவகப்படுத்தப்படுகிறது / பிரதி நிதித்துவப்படுத்தப்படுகிறது. அதுவும் பண்புருவில் Character தலையிலிருந்து கால்பாதத்துக்கு கீழிறங்கிவிடுகிற/கீழ்நிலைக்கு படிப்படியாக தரக்குறைவாகி விடுகின்றது என காணலாம்.

வரலாற்று நிறைவேறுகை

பேருருவச்சிலை Image நான்கு மாபெரும் உலக சாம்ராஜ்யங்களை, அவைகளது ஒருமைப்பாடு மற்றும் சரித்திர

தொடர்வரிசையில் உருவகக்குறிப்பீடு செய்கிறது / அடையாளப்படுத்துகிறது. நேபுகாத்நேச்சாரின் பாபிலோன் அரியணை ஏறுகையிலிருந்து கிறிஸ்துவின் இரண்டாவது வருகைவரை பூமியின் மீது நான்கு மாபெரும் உலக சாம்ராஜ்யங்கள் மாத்திரமே தோன்ற உள்ளன. அவைகள் சிலையுடைய நான்கு உலோகங்களால் உருவகக்குறிப்பீடு செய்யப்படுகின்றன. ஓர் 'ஐந்தாவது' உலக சாம்ராஜ்யத்தை நிறுவ நெப்போலியன் போன்ற மனிதர் அவாவுடன் நம்பினர், சதித்திட்டம் தீட்டினர், மேலும் போர் செய்தனர். ஆனால் தோற்றுப்போயினர். இந்நான்கு சாம்ராஜ்யங்கள் எண்ணிக்கையில் மட்டுமின்றி, அவைகள் பேர்முதலாய், அவைகளின் தொடர் ஆட்சி வரிசை ஒழுங்கு கிரமத்தில் கூட தெரிவிக்கப் பட்டுள்ளன / தரப்பட்டுள்ளன.

1. பாபிலோனிய சாம்ராஜ்யம்

தானியேலால், அவரது சிலையின் பொருள் விளக்கத்தில் முதல் சாம்ராஜ்யத்தை 'பாபிலோன்' என நேபுகாத்நேச்சாருக்கு 'பொன்னாலான தலை நீரே' எனும் வார்த்தைகளில் சுட்டுக்குறிப்பீடு செய்யப்பட்டது. பொருள் விளக்கத்தை படிக்கும் போது, 'ராஜா' மற்றும் 'ராஜ்யம்' எனும் வார்த்தைகளை தானியேல் இடைபரிமாற்றமாக Inter- Changeably பயன்படுத்துவது கவனிக்கத்தக்கது. எழுத்தாளர் 'ராஜ்யம்' (முடியரசு) Kingdom என்னும் பதத்திற்கு பதில் சாம்ராஜ்யம் (பேரரசு - Empire) எனும் பதத்தை பயன்படுத்துகிறார். ஏனெனில் ஒவ்வொரு பேரரசிலும், அது நீடித்திருந்த காலத்தே ராஜாக்களின் வாரிசு தொடர்ச்சி Succession இருந்தது. ஆனால் திருநிலைக்கு புறமான வரலாற்றில் Profane History அவ்வரசர்கள் பேரரசர்கள் என அழைக்கப்பட்டனர். இன்று பேரரசர் Emperor பட்டம் மிக அரிதாயுள்ளது. ஏனெனில் உலகத்தின் பேரரசுகள் யாவும் சிறிய ராஜ்யங்களாக உடைந்துவிட்டுள்ளன. இது 'பேருருவச்சிலை' யுடைய போதனையின் ஓர் நிறைவேறுகையாயுள்ளது. அதினுடைய பாதங்கள் பத்துக்கால் விரல்களாக பிரிக்கப்பட்டுள்ளன; அவை ராஜ்யங்கள் Kingdoms என அழைக்கப்படுகின்றன. நாற்பத்து நான்கு வருடங்கள் அரசாண்டபின்பு நேபுகாத்நேச்சார் கி.மு. 561 -ல்

மரணமடைந்தார். அவரது பின்வாரிசாக அவரது மகன் தீய - மெரடாக் Evil - Merodach பதவியேற்றான். இருவருட இழிநிலையிலான ஆட்சிக்குப் பின்பு அவனது மைத்துனன் Brother-in-Law நெரிகிளிஸ்ஸார் Neriglissar -ரால் கொலை செய்யப்பட்டான். இவன் அரியணை ஏறி சுமார் நான்கு வருட ஆரசாட்சிக்குப்பின் கி.மு. 556-ல் யுத்தத்தில் கொல்லப்பட்டான். அவனது குமாரன் லபோரோஸோ ஆர்ச்சாட் Laboroso arched எனும் இயல்பான அறிவு முடமுடைய Imbecile சிறுவன் ஒன்பது மாதங்கள் ஆட்சி செய்து பின் அடித்துக்கொல்லப்பட்டான். பின்பு நபோனிடஸ் Nabonidus எனும் நேபுகாத்நேச்சாரது இன்னொரு மருமகன் அரியணையை பறித்துக்கொண்டான். அவன் நெரிகிளிஸ்ஸாரின் கைம்பெண்ணை - விதவையை விவாகம் செய்திருந்தான். அவன் பதினேழு வருடங்கள் அரசாண்டான். அவனது அரசாட்சி காலம் முழுவதும் பாபிலோன் பாரசீகர்களின் படைகளால் தாக்கப்பட்டது. 'நபோனிடஸ்' ஓர் படையெழுச்சிச் சார்ந்த சுற்றுப்பயணத்திலிருந்தபோது பாபிலோன் நகரம் பிடிப்பட்டது, அவன் (நபோனிடஸ்) தனது குமாரன் பெல்ஷாத்சாரை Belshazzar 'இரண்டாவது ஆட்சியாளனாக' Second Ruler நியமித்து, நகரத்து பொறுப்பாளனாக்கினான். அதின் காரணமாகவே பெல்ஷாத்சாருக்கு தானியேலை மூன்றாவது ஆட்சியாளனாக ஆக்கவேண்டியிருந்தது, தானே இரண்டாவது ஆட்சி யாளனானபடியால்! இவ்விதமாக நேபுகாத்நேச்சார் மிக பொருத்த தகுதியாக 'பொன்னினாலான தலை' Head of Gold என அழைக்கப்பட்டான், ஏனெனில் அவனது பின் வாரிசாளர்கள் அனைவருமே கீழ்த்தரநிலையிலானோரே! பெல்ஷாத்சாரின் மரணத்தோடு பாபிலோனிய பேரரசு இல்லாமலாயிற்று.

உ. மேதிய - பெர்சியா சாம்ராஜ்யம் (வல்லரசு)

இரண்டாம் வல்லரசு 'மேதிய - பெர்சியா வல்லரசு' தானியேலால் 'பாபிலோனின் வீழ்ச்சி'யுடைய அவரது விவர அறிக்கையில் Account இவ்வாறான வார்த்தைகளில் சுட்டிக்காட்டப்படுகிறது. 'அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான்;

மேதியனாகிய தரியு ராஜ்யத்தைக் கட்டிக்கொண்டான்'. தானி. 5: 30-31.

இது 'ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக் கடாவினுடைய காட்சியில்' (தானி 8:20) மீண்டும் சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்விடம் ஆட்டுக்கடாவின் இரு கொம்புகள் பேருருவச் சிலையுடைய இரு புயங்களை சரி ஒப்புமையாக்குகின்றதாய் மேதியா மற்றும் பெர்சியா ராஜாக்களென அழைக்கப்படுகின்றன. இவ்விதமாய் பாபிலோனிய வல்லரசு ஒற்றை தலையுடையதா யிருக்கையில், மேதிய - பெர்சியா வல்லரசு ஓர் இரட்டை வல்லரசாயிருந்தது. இவ்விரட்டை வல்லரசு பேருருவச்சிலையின் இரு புயங்களாலும், மற்றும் ஆட்டுக்கடாவின் இரு கொம்புகளாலும் உருவக வெளிப்பாடு செய்யப்படுகிறது, மேதியாவை உருவக வெளிப்பாடு செய்கிற சிலையின் இடதுபுயம் பலங்குன்றியதாயும், வலது புயமாகிய பெர்சியா பலமிக்கதாயுமான ராஜ்யங்களாயின. மேதிய - பெர்சியா வல்லரசு பேருருவச்சிலையில் வெள்ளியால் உருவாக்கம் செய்யப்படுவதான உண்மையாதெனில் வெள்ளி பொன்னைவிட கீழ்த்தரமாகிறதுபோல, மேதியா - பெர்சியா வல்லரசு பாபிலோனைவிட கீழ்த்தரமானது என்பதே! இது நாம், அறிகிறபடி, உண்மையானது. ஆனால் விஸ்தீரணத்திலல்ல; ஏனெனில் கோரேசு கூடுதலான பிராந்தியத்தை ஜெயித்து கீழ்ப்படுத்தினான்; மாறாக செல்வப்பெருக்கில், ஆடம்பரத்தில் மற்றும் கீர்த்தியில்!

கோரேசு பாபிலோனை ஜெயித்து மேற்கொண்டதற்கு 175 வருடங்கள் முன்னரே வேத எழுத்துகளில் பெயர் எழுதப்பட்டுள்ள கீர்த்தியை பெற்றிருக்கிறான். என்று நாம் வாசிக்கிறோம்.

வசனங்கள் ஏசாயா 44:28 மற்றும் 45: 1-4.

இவ்வேத எழுத்துகளிலிருந்து கோரேசு இரண்டு காரியங்களை நிறைவேற்றுவதற்கு, அவன் பிறப்பதற்கு, ஓர் நூற்றாண்டுகளுக்கு முன்னரே முன்குறிக்கப்பட்டவன் என நாம் பார்க்கிறோம். முதலாவது, பாபிலோனை முற்றுகையிட்டு பிடித்துக்கொள்வது, இரண்டாவது ஓர் அரசாணையை

பிறப்பிப்பது - பாபிலோனிய சிறைப்பிடிப்புக்கு இறுதியாக, கி.மு. 536 -ல் யூதர்களது திருப்பி அனுப்பப்படுகை மற்றும் தேவாலயத்துடைய மீளகட்டப்படுகைக்காக!

பாபிலோனுடைய கி.மு. 538 -ன் வெற்றி எடுத்தலில், கோரேசு, மேதியாவானது மேதிய - பெர்சியா இரட்டை ராஜ்யங்களில் பழமை வாய்ந்த காரணத்தால், மற்றும் அவருக்கு வேறுசில ராணுவ படைமுயற்சிகளை முடிக்க வேண்டியிருந்ததால், மரியாதை நிமித்தமாக, பாபிலோனுடைய ஆளுநர்பதவியை அவரது அம்மாமன் Uncle மேதியா ராஜாவான தரியுவுக்கு ஒதுக்கிக்கொடுத்தான். அம்மாமன் தரியு இரண்டு ஆண்டுகள் அரசாண்டான். அதே வருடத்தில் கி.மு. 536 -ல் கோரேசுடைய தகப்பனாரான, பெர்சிய ராஜா Cambyses காம்பிசஸ் மரித்துப்போனான்; இந்நிலையில் கோரேசு இரட்டை ராஜ்யத்திற்கும் முழுமையான ஒரே பேரரசனானான் Sole Monarch. ஏழு வருட ஆட்சிக்கு பின்னர், கோரேசு தனது மகன் காம்பிசஸ்க்கு Cambyses சாம்ராஜ்யத்தை விட்டுவிட்டான். அவன் ஏழு வருடங்கள், ஐந்து மாதங்கள் கி.மு. 522 வரை அரசாண்டான். அவனது பின்வாரிசு தொடர்ச்சியில் ஒவ்வொருவரும் எட்டு மாதங்கள் முதல் நாற்பத்தாறு வருடங்கள் வரை வித்தியாசமாக கி.மு. 335 வரை எட்டுப்பேரரசர்கள் அரசாண்டார்கள். இப்பெர்சியா ராஜாக்களின் நீண்டவரிசையில் கடைசியாக தரியு கொடாமனஸ் Darius Codomanus அரசாண்டான். அவன் ஒரு கண்ணியமான ராஜாவாயிருந்தான்; மேலும் சந்தேகமின்றி ஓர் நீண்ட மற்றும் உன்னதமான பதவிக்குரியவனாக அவன் காணப்பட்டான்; ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவன் சிங்காசனம் ஏறிய காலமோ பேருருவச்சிலையில் 'வெள்ளியானது' Silver வெண்கலத்துக்கு மாறுதலடையவுள்ள காலநேரமாயிற்று. இம்மாறுதலை எதுவும் தடுக்க முடியாத நிலையில் கி.மு.330ல் கிரேக்கத்தானான Grecian அலெக்சாண்டர் பெர்சிய சாம்ராஜ்யத்தை ஜெயித்து மேற்கொண்டான்.

3. கிரேக்க சாம்ராஜ்யம் The Grecian Empire

கிரேக்கத்திய சாம்ராஜ்யமான மூன்றாவதானது தானி. 8:21 -ல் தூதன் காபிரியாலால் 'வெள்ளாட்டுக்கடா' He Goat

என்று அடையாளம் கண்டறியப்பட்டுள்ளது. அது மேதியா - பெர்சியா சாம்ராஜ்யத்தை உருவகவெளிப்பாடு செய்கின்ற 'ஆட்டுக்கடா' Ram - ஐ அழித்து அதமாக்கிவிட்டது.

வசனங்கள் தானி. *8: 20-21*

மீண்டுமாக கீழ்த்தரபோக்கை நாம் பார்க்கிறோம். ஏனெனில் 'வெண்கலம்' வெள்ளியைவிட கீழ்த்தரமான உலோகமாகும். உலகளாவிய சாம்ராஜ்யமாக அலெக்சாண்டரை தலைமையாகக் கொண்ட கிரேக்கத்திய சாம்ராஜ்யம் ஓர் குறுகிய கால அளவை பெற்றிருந்தது. எட்டு குறுகிய வருடங்களுக்குப் பின்பு அவன் வரம்புமீறிய செயல் ஈடுபாட்டினாலும், 'மார்ஷ் ஜுரம்' Marsh Fever எனும் விஷக்காய்ச்சலால் கி.மு. *323* -ல் தனது முப்பத்திமூன்றாவது வயதில் மரித்துப்போனான். அவனது சாம்ராஜ்யம் அவனது தளபதிகள் நான்குபேர் மத்தியில் பிரித்து ஒப்படைக்கப்பட்டது.

தீர்க்கதரிசனம் இந்நான்கு உலகசாம்ராஜ்யங்கள் ஒன்றை ஒன்று ஓர் இடைமுறிப்பு இல்லாதபடி தொடரவுள்ளன எனக்கூறவில்லை என்பதை இங்கே நாம் மறந்துவிடக்கூடாது. மகா அலெக்சாண்டரது மரணத்திலிருந்து கி.மு. *323* ரோமசாம்ராஜ்யம் கிரேக்கத்தியதை பின்தொடர்ந்து ஆட்சியில் அமருகிற கி.மு. *30* வரை, கிரேக்க சாம்ராஜ்யம் ஓர் தனிப்பட்ட சாம்ராஜ்யமாயில்லை; மாறாக ஓர் நான்குமடி சாம்ராஜ்யமாய் Four Fold Empire திரேஸ், மக்கதோனியா, சிரியா மற்றும் எகிப்து ஆகிய ராஜ்யங்களை உள்ளடக்கமாய் கொண்டிருந்தது. இவைகள் ஒன்றன்பின் ஒன்றாய் வீழ்ச்சியுற்றன, கி.மு. *30*-ல் எகிப்தை ரோமர்கள் ஜெயித்து ஆட்சிப்பிடிக்கும் வரை! இவ்வெற்றி ரோமர்களை உலகத்தையே ஆட்சிசெய்யும் ஜெயவீரர்களாக்கீற்று. நான்கு பகுதிகளாக கிரேக்க சாம்ராஜ்யம் பிரிக்கப்பட்ட இந்த பிரிவு பேருருவச்சிலையில் காண்பிக்கப்படவில்லை. சிலையின் வெண்கலத்தில் சிலையின் வெள்ளிக்கும், இரும்புக்குமிடையே இடைமுறிப்பு ஏதுமில்லை! ஆனால் இம்மெய்மை அதிகாரம் *8:21-25* -ல் வெள்ளாட்டுக்கடா He Goat வரலாற்றில் வெளிப் படுத்தப்படுகிறது.

இன்னொரு விளக்கம் இவ்விடத்தில் தேவைப்படுகிறது.

வெண்கலத்தாலான ‘அவனது வயிறும், தொடைகளும் Belly and Thighs என்பது ஓர் தவறான மொழி பெயர்ப்பாகும். தொடைகள் Thighs என்று மொழிப்பெயர்க்கப்பட்ட பதம் ஒருமையாகும். எனவே தொடைப்பகுதி’ Thigh Part (Buttocks) என்றே மொழிபெயர்க்கப்பட வேண்டும். ஓர் சிறிய விளக்கம் இதை தெளிவாக்கும். நாம் ஏற்கனவே பார்த்தபடி, கிரேக்க சாம்ராஜ்யம் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. அவை ஒன்றன்பின் ஒன்றாக காணப்படாதுபோயின. கடைசியாக எகிப்து கி.மு. *30* -ல் முறியடிக்கப்பட்டு நான்காவது அல்லது ரோமசாம்ராஜ்யம் நிறுவப்படுகின்றவரை! இப்போதும் ரோமசாம்ராஜ்யம் கி.பி. *364* வரை கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய பிரிவுகளாக அதாவது பேருருவச்சிலையின் உருவாக்கமாயுள்ள இரண்டு கால்களாக உருவாக்கப்பட்டுள்ள, பிரிக்கப்பட்டிராததால், ரோமசாம்ராஜ்யம் உருவாக்கத்துக்கு முன்னுள்ள அத்தனையும் பேருருவச் சிலையினுடைய உடலுக்கு Body சொந்தமானதே! கால்களுக்கு உரியவைகளல்ல!

“அவனது வயிறு (Abdomen) வெண்கலமும், அவனது தொடைப்பகுதி (Buttocks) மற்றும் கால்கள் (Legs) இரும்பும், பாதங்கள் பாதி இரும்பும், பாதி களிமண்ணுமாயிருந்தது” என வாசிக்கிறதே சரி!

வசனங்கள் *32-33.*

4. ரோம சாம்ராஜ்யம் The Roman Empire

நான்காவது சாம்ராஜ்யமான, ரோம சாம்ராஜ்யமானது தானியேல் புத்தகத்தில் பெயர் சொல்லப்படவில்லை; ஆனால் அது குறிப்பிடப்பட்டுள்ளது. ‘எழுபது வாரங்களது’ தானியேலின் காட்சியில் அதிகாரம் *9*, வசனம் *26* -ல் நாம் வாசிக்கிறதாவது: ‘பிரபுவாகிய மேசியாவின்’ (கிறிஸ்துவின்) சங்கரிக்கப்படுகைக்கு (சிலுவையிலறையப்படுதல்) பின்னர், எருசலேம் மற்றும் தேவாலயம் அழிக்கப்பட்டுவிடவுள்ளது - ஓர் ஜனங்களால்! அவர்களிடமிருந்து பிற்காலத்தே ஓர் ‘பிரபு’ வரவேண்டும்; அவனே அந்திக்கிறிஸ்து ஆவான் என நாம் பார்க்கிறோம். இப்போதும் நாம் அறிகிறோம் எருசலேம் மற்றும் தேவாலயம் ரோமர்களால் கி.பி. *70*-ல் அழிக்கப்பட்டன என! மேலும்

அந்திக்கிறிஸ்துவே ரோம சாம்ராஜ்யத்தின் கடைசி சக்கரவர்த்தியாய் இருக்கவுள்ளான் மற்றும் அந்திக்கிறிஸ்துவாக 'நான்காவது காட்டியல் மிருகத்தின்' சின்னக்கொம்பாகவும் இருக்கப்போகிறான். அது பேருருவச்சிலையின் 'இரும்பு'டன் சரி ஒப்புமையாகிறது. இவ்விதமானால் 'நான்காவது சாம்ராஜ்யம்' ரோம சாம்ராஜ்யமே என அறிகிறோம். இவ்வாறு, நான்கு சாம்ராஜ்யங்கள் - பேருருவச்சிலையின் உலோகங்களால் சின்னங்களாய் அடையாளப்பட்ட - அவைகளின் சரித்திர வாரிசு வரிசை ஒழுங்கில் தானியேலுக்கு குறித்துக் காட்டப்பட்டது. அவைகளில் மூன்று தோன்றுவதற்கு முன்னரே! இது தானியேல் புத்தகத்தின் தெய்வீக உள்ளுயிர்ப்புக்கு நிரூபணமளிக்க வில்லையெனில், வேறெதனால் கூடும்?

நான்காவது சாம்ராஜ்யத்தைக்குறித்து நாம் கவனிக்கவேண்டிய மூன்று காரியங்கள் உள்ளன. முதலில், கால்களால் உருவகமாக்கப்பட்ட இது பேருருவச்சிலையில் குறைந்தது பாதியை எடுத்துக்கொள்கிறது. ஆகவே மற்ற சாம்ராஜ்யங்களைவிட ரோம சாம்ராஜ்யம் விகித வீதத்தில் கூடுதல் காலம் நீடிக்கப்போகின்றது. இது உண்மையென சரித்திரத்திலிருந்து அறியலாம். இரண்டாவது, பேருருவச்சிலை 'இரு கால்களாக' பிரிக்கப்பட்டுள்ளது. இது ரோம சாம்ராஜ்யம் இரு பகுதிகளாக பிரிக்கப்படவுள்ளது என்பதை தெரிவிக்கிறது. இது உண்மையேயென நாம் அறிகிறோம். ஏனெனில், கி.பி. 364-ல் ரோம சாம்ராஜ்யம் கான்ஸ்டான்டி நோபிளை தலைநகராகக்கொண்ட 'கிழக்கு பிரிவு' Eastern Division என்றும் ரோமை தலைநகராகக்கொண்ட 'மேற்கு பிரிவு' Western Division என்றும் பிரிக்கப்பட்டது. மூன்றாவதாக, பேருருவச்சிலையின் இரு கால்பாதங்களும் ஒவ்வொன்றும் ஐந்து விரல்களாக பிரிக்கப்பட்டுள்ளன, இப்பத்து விரல்களும் இதுகாறும் தங்களை வெளிப்படுத்தவில்லை ஆகவே பேருருவச்சிலையின் சரித்திர நிறைவேற்றம் இன்னும் முழுமையடையவில்லை. இதுவரை சொல்லப்பட்டதிலிருந்து முதல் சாம்ராஜ்யம் ஓர் ஒருமம் Unit இரண்டாவதுள்ளது இரட்டையானது; மூன்றாவதுள்ளது நான்மடங்கானது Quadruple மற்றும் நான்காவதானது, அதின் கடைசி நிலையில் பத்து விரல்களாலாக்கப்படும் என நாம் பார்க்கிறோம். ரோம சாம்ராஜ்யம், ஓர் பார்வைக்குரிய

சாம்ராஜ்யமாக, இன்று தோன்றுகிறதில்லை, நம் முன்னில்லை என்றாலும் அதின் சட்டங்கள் முதலியன தேசங்கள் மத்தியில் ஓர் கட்டுப்படுத்துகின்ற வல்லமை / சக்தியாக உள்ளன. மேலும், காட்சிக்குரிய உருவநிலையில் இச்சாம்ராஜ்யம் மீள உயிரடையப்போகின்றது. மற்றும் மீள உயிரடைந்த மற்றும் கடைசியான வெளிப்பாட்டுநிலையில், இதில் 'பத்து கூட்டணி ராஜ்யங்கள்' Ten Federated Kingdoms உள்ளடக்கப்பட்டிருக்கும் - பேருருவச்சிலையின் பத்துக் கால்விரல்களாக உருவாக்கம் செய்யப்பட்டதான அதின் தலைமையாக ஓர் கடைசி ரோமசக்கரவர்த்தி இருக்கவுள்ளான். அவனே புறஜாதி - ஆட்சியாளன் அந்திக்கிறிஸ்து ஆவான்!

கால்பாதங்கள் மற்றும் கால்விரல்கள்
The Feet and Toes

பேருருவச்சிலையில் கால்கள் இரும்பிலானவை யாகையில், கால்பாதங்கள் மற்றும் கால்விரல்கள் இரும்பு மற்றும் குயவனின் களிமண்ணாலானவை. ஓர் கலப்பு இருந்தாலும் Mingling ஒருங்கு கலப்பு அல்லது ஒன்றுசேர் விரவு Commingling இல்லை. அதாவது, இரும்புடன் களிமண்ணுக்கு ஐக்கியம் ஒருமைப்பாடு இல்லை. இந்த நிலை கால்பாதங்கள் மீது மலையினின்று பெயர்ந்துவந்த கல் மோதுகின்றவரை நீடிக்கப்போகிறது.

இவ்வாறான வெவ்வேறு ராஜ்யங்களது அரசாங்கத்தின் தன்மை / இயல்பு வெளிப்படுத்தும் மெய்மை இப் பேருருவச்சிலை அதிகமதிகமாய் நிலையற்றதாகிவிடும் Unstable என்பதே! பாபிலோனிய சாம்ராஜ்யம் ஓர் முழுமையான ஏகாதிபத்தியம் Absolute Autocracy. நேபுகாத்நேச்சாரைக் குறித்து இவ்வாறு சொல்லப்பட்டது: 'அவர் தமக்கு சித்தமானவனை கொன்று போடுவார்; தமக்கு சித்தமானவனை உயிரோடேவைப்பார்; தமக்கு சித்தமானவனை உயர்த்துவார்; தமக்கு சித்தமானவனை தாழ்த்துவார்' தானி. 5:19. மேதிய - பெர்சிய சாம்ராஜ்யம் ஓர் ஏகாதிபத்தியமாயில்லை! அப்பேரரசன் குறிப்பிட்ட சட்டங்களுக்கு கட்டுப் பட்டிருந்தான். மேதிய - பெர்சிய சட்டங்களுக்கு! ஓர் அரசாணை பிரசுரிக்கப்பட்டபின் அதனை திரும்ப பின்னெடுக்க இயலாது. எடுத்துக்காட்டாக, தரியுவுடைய

வழக்கு நமக்குள்ளது. அவன் மிக்கவாஞ்சையோடு தானியேலை சிங்கக்குகையினின்று விடுவிக்க வகை தேடினான்; மற்றும் ஆகாஸ்வேருவினுடையதும் உள்ளது; அவனுக்கு யூதர்களை கொல்லும்படியான அவனது ஆணையை தள்ளுபடி செய்யகூடவில்லை. மாறாக அவர்களது உயிர்களுக்காக நிற்கவும், அவர்களை கொல்லமுற்படுவோரை வெட்டிவீழ்த்தவுமான அனுமதியளிக்கவுள்ள எதிரிடையான ஆணை ஒன்றை Counter Decree பிறப்பிக்கமட்டுமே முடிந்தது. எஸ்தர் 8:1-17. கிரேக்க சாம்ராஜ்யம் ஓர் ராணுவ 'உயர்குடியாட்சி' Military Aristocracy யால் பின்தாங்கப்பட்ட ஓர் 'முடிஆட்சி' Monarchyயாக இருந்தது. அது அதன் தலைவர்களது பேராசை நோக்கத்திற்கேற்ப பலவீனமாயிருந்தது. ரோம பேரரசர்கள் மக்களால் பெயரளவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் அம்மக்கள் தங்களுக்கான சட்டமியற்றவோ, அவர்களோடு தலையீடு செய்யவோ அனுமதிக்கப்படவில்லை. ஆகவே அவர்களது கொடுங்கோன்மை சாய்வு இரும்பினால் சரியாக சின்னமாய் உருவாக்கப்படுகிறது. அது எஃகு அல்லது உருக்கு Steel என்கிற நிலையில் / உருவாக்கத்தில் எந்தவொரு உலோகத்தையும் ஊடுருவ வெட்டக்கூடியது. ரோம் அதன் இரும்பு ஆளுகைக்கு Iron - Rule பேர்போனது.

அரசாங்கத்தின் உள்ளமைப்பு நாம் கால்பாதங்கள் மற்றும் கால்விரல்களை பரிசோதிக்கையில் மேலும் பலவீனமாக வளர்வதை அவற்றின் இரும்பு மற்றும் களிமண் சேர்க்கை உருவாக்கத்தில் காணலாம். இங்கு பேரரசுத்தன்மை Imperialism குடியரசுடன் கலந்து விட்டதாக பார்க்கலாம். இரும்பு பேரரசுத்தன்மையையும், களிமண் குடியரசுத்தன்மையையும் உருமாதிரியாக்குகின்றன. சுருங்கக்கூறின், அரசாங்கத்தினுடைய தன்மை / சிறப்பியல்பு ஓர் முழுமையான ஏகாதிபத்தியத்திலிருந்து ஓர் குடியாட்சியாலான முடியாட்சி Democratic Monarchy -க்கு கடந்து செல்கிறது. தொடர்ந்து தலையினுடைய ஆட்சி கால்பாதத்தால் நடந்து கடைசியாக ஓர் மக்களாலான அரசாங்கத்து அமைப்புக்கு நேராக சென்று சேருகிறது. இவ்வமைப்பில் அரசியல்வாதிகளால் மற்றும் தங்கள் சுயநல ஆதாயங்களை மட்டுமே சிந்தித்துக்கொண்டிருக்கும் கட்சிவாத சொற்பொழிவாளர்களால் Demagogues சாய்வளிக்கப்பட்ட

மக்கள்திரள் அரசாங்கத்தை கட்டுப்பாடு செய்கின்றனர். இவ்வாறான அரசாங்க அமைப்பு பலவீனத்தின் கீழ்மட்டத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு செல்வதோடு, பொதுவுடைமை கோட்பாடு Socialism, ருசிய நாட்டுக்குடியரசு Sovietism, ருசிய பொதுவுடைமைக் கொள்கை Bolshevism மற்றும் ஆட்சியில்லா நிலைமை Anarchyக்கு வழி திறக்கிறது. இத்தகைய அரசாங்க படிநிலைகள் மிகத்தெளிவாக வெளியாகிக் கொண்டிருத்தல் சுட்டுக்குறிப்பீடு செய்வது யாதெனில், வரலாற்றுப் பாங்கில், பேருருவச்சிலையின் கால் பாதங்களால் குறிப்பீடு செய்யப்படுகின்ற காலத்தே நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையே! இன்னும் நீண்ட காலமாவதற்குள் 'கால்விரல்கள்' தோன்றப்போகின்றன - பத்து கூட்டணி தேசங்கள் Ten Federated Nations எனும் அமைப்பின் உருவாக்கத்தில்! அதின்மீது ஓர் ரோம பேரரசன் A Roman Emperor அரசாளப்போகிறான் என்பதையே!

5. கல்ராஜ்யம் The Stone Kingdom

தானியேல் 2: 34-35

இதனுடைய பொருள்விளக்கம் வசனம் 44-ல் கொடுக்கப்பட்டுள்ளது:

சொப்பனத்துடைய உச்சநிலை Climax பேருருவச் சிலையினுடைய தகர்க்கப்படுகை ஓர் கல்லால் மோதப்பட்டு! இக்கல் கையால் பெயர்க்கப்படாமல், மலையிலிருந்து பெயர்ந்து உருண்டுவந்தது, அக்கல்லினுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட மூல முதலிடத்தை Origin காண்பிக்கிறது. இக்கல் கொஞ்சங் கொஞ்சமாக பூமியையெல்லாம் நிரப்பவில்லை. அவ்வாறாக பேருருவச்சிலையை கொஞ்சங் கொஞ்சமாக நெருக்கி கீழே தள்ளவில்லை. மாறாக அக்கல் சிலையை மோதி ஒரே அடியாய் தாக்கி அதை நொறுக்கிப்போடுகிறது. மற்றும் அதினுடைய மீந்தவைகளெல்லாம் பதரைப்போலாகி ஊதப்பட்டுப்போயின. கல்லுடைய செயல் நியாயத்தீர்ப்பாகிறது; கிருபையல்ல! சுவிசேடத்தின் பிரகடனத்தால் பரவுகின்ற 'ஆவிக்குரிய ராஜ்யம்' ஆகாது! மாறாக வெளிப்படையான மற்றும் கட்புலனாகின்ற பூமிக்குரிய ராஜ்யத்தை உடனடி நிறுவுகையே அதுவாகும்.

இக்கல், ஆகவே, கிறிஸ்தவத்தை அர்த்தப் படுத்தமுடியாது. ஏனெனில் கிறிஸ்தவம் ஓர் நடைமுறை/ வழிமுறை Process ஆகும். அதேவேளை கல்லினுடைய செயலோ திடீரானது மற்றும் கடுந்துயர் உண்டுபண்ணத்தக்கது Calamitous. மேலும், அழிக்கப்படுகையின் 'காலம்' பேருருவச்சிலையின் கால்விரல்களின் Toes உருவகத்திற்கு பிற்பாடு வரையிலும் இருக்கப்போகிறதில்லை. சிலையின் 'கால்கள்' Legs கி.பி. *364* வரையில் தோன்றவில்லை. அவ்வமயம் ரோம பேரரசு அதினுடைய கிழக்கு மற்றும் மேற்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுப்போயின. மற்றும் 'பத்து கால்விரல்கள்' Ten Toes இன்னமும் உருவெடுக்கவில்லை Notyet Developed. பேருருவச்சிலையுடைய பாதங்கள் மீது 'கல்' விழுகின்ற காலம் Time மிகத்துல்லிபமாக அதன் பொருள்விளக்கத்தில் இவ்வாறாக கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ராஜாக்களின் காலத்தில் என்று! ராஜாக்கள் யாரார்? நான்கு உலகளாவிய வல்லரசுகளின் ராஜாக்கள் அல்ல! அதாவது சிலையினுடைய நான்கு உலோகங்களால் உருவகவெளிப்பாடு செய்யப்பட்ட! அது நம்மை முதல் வருகைக்கு First Advent நேராய் மட்டும் கொண்டுவருகிறது. அந்தகட்டம் கிறிஸ்தவத்தை ஓர் மோதுகின்ற கல்லாக்குகிறது Smiting Stone, ஆனால் 'இந்த ராஜாக்களால்' நாம் புரிந்துக்கொள்ள வேண்டியது பத்து கூட்டணி ராஜ்யங்களுடைய ராஜாக்களாவார்கள்; அதாவது பேருருவச்சிலையின் கால்விரல்கள் உருவக வெளிப்பாடு செய்யப்படுகின்ற! ஆகவே கல் மோதுகையின் காலவேளை Time கிறிஸ்து முதல் முறையாக வந்தபோது ஏற்பட்டிருக்கவில்லை, மாறாக அவர் இரண்டாம் முறையாக Second Time வருகிறபோதேயாகும்.

'கல்' கிறிஸ்தவம் ஆகாது. மாறாக 'கிறிஸ்து' Christ ஆகிறார். அவர் வேதஎழுத்துக்களின் எல்லாவிடத்திலும் 'கல்' The Stone என்பதாக எடுத்துரைக்கப்படுகிறார். யூதர்களுக்கு அவர் இடறுதற்கான கல்லாகவும் விழுதலுக்கான/தாக்குதலுக்கான கல் மலையுமாயிருந்தார். வீடுகட்டுகிறவர்களால் ஆகாதென்று தள்ளிப்போடப்பட்ட கல்லாயிருந்த அவரே மூலைக்கு தலைக்கல்லாகப் போகிறார். நேபுகாத்நேச்சாரது சொப்பனத்தினுடைய விழுகின்ற கல்லே கிறிஸ்துவினுடைய

மனதில் இருந்திருக்கவேண்டும். அவர் தீர்க்கத்தரிசனமாக இவ்வார்த்தைகளை உரைத்தபோது: 'இந்தக்கல்லின்(கிறிஸ்து) மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான் (மனந்திரும்புதலுக்குள் உருகிடுவான்), இது எவன்மேல் விழுமோ, அவனை தூள் தூளாக நசுக்கிப்போடும் Grind him to Powder மத். 21:44 'கல்' சிலையை மோதியடிக்கிறது; சிலையானது கல்லை மோதவில்லை. கிறிஸ்து முதன்முறையாக வந்தபோது ரோம சாம்ராஜ்யத்தை மோதி அதை அழித்து விட்டாரா? இல்லை. ரோம வல்லரசு அவரை மோதி அடித்தது. அவரது மரணத்துக்கு ஏதுவாக்கியது. ஆகவே கிறிஸ்துவின் முதல் வருகை கல்லின் வீழ்ச்சி Falling of the Stone ஆகிடவில்லை. ஏனெனில் அது இன்னமும் எதிர்காலத்துக்குரியது மற்றும் அவரது இரண்டாம் வருகைவரை நடைபெறப் போவதில்லை.

சிலர் ஆட்சேபம் தெரிவிப்பது எதிலெனில் 'அப்பொழுது அந்த இரும்பும், களிமண்ணும், வெண்கலமும், வெள்ளியும், பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு' என சொல்லப்படுவதால் அது கூடாதே, ஏனெனில் ஏற்கனவே பொன், வெள்ளி, வெண்கலம் மற்றும் இரும்பால் உருவகவெளிப்பாடு செய்யப்பட்ட சாம்ராஜ்யங்கள் கடந்து மறைந்து விட்டனவே என்று! வெளித்தோற்ற பார்வைக்குட்பட்ட சாம்ராஜ்யங்களாக எடுத்துப்பார்க்கையில் அது உண்மையே. ஆனால் இச்சாம்ராஜ்யங்கள் அவைகளது பின்னோடி தொடர் ராஜ்யங்களுக்குள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன, மற்றும் அவையாவும் மீள உயிர்க்கப்பட்ட ரோம சாம்ராஜ்யத்தின் கடைசி கட்ட வேளையின்போது காணப்படவுள்ளன, இதற்கு ஆதாரமாக/நிரூபணமாக சமுத்திரத்திலிருந்து ஏறிவருகின்ற (சமுத்திரம் தேசங்களது அடையாளச்சின்னமாயுள்ளது) 'மிருகத்'தினுடைய விவரணம் நமக்குள்ளது. இதை வெளி. 13: 1-2 -ல் இவ்விதமாக வாசிக்கலாம்:

வசனங்கள் வெளி. 13: 1 - 2

தானியேலுடைய நான்கு காட்டியல் மிருகங்களின் காட்சியின் ஆய்வில் அதி. 7 -ல் 'காட்டியல் மிருகங்கள்' பேருருவச்சிலையின் உலோகங்களோடு ஒத்திசைவு கொள்வதை நாம் பார்க்கிறோம். அதாவது: 'பொன்' சிங்கத்தோடு

ஒத்திசைவுகொள்கிறது, 'வெள்ளி' கரடியோடு, 'வெண்கலம்' சிவிங்கியோடு, மற்றும் 'இரும்பு' நான்காவது புதிரான மிருகத்தோடு! யோவான் கண்ட சமுத்திரத்திலிருந்து ஏறிவந்த மிருகத்தினுடைய யோவானின் மேற்காணும் விவரணத்தில் (வெளி. 13: 1 - 2), அதாவது மீளஉயிர்மீட்சிபெற்ற ரோம சாம்ராஜ்யத்தின் கடைசி காலகட்டத்து ஓர் விவர விளக்கத்தொகுப்பில், அம்மிருகம் ஓர் கலப்புருவான Composite மிருகம் என்று பார்க்கிறோம். அது உள்ளடக்கமாக ஓர் சரீரம், ஓர் சிவிங்கிக்கொத்தாய், கால்பாதங்கள் ஓர் கரடிக்குரியதாய், மற்றும் அதன் வாய் சிங்கத்துக்குரியதாய், நான்காவது புதிரான காட்டியல் Whole of the Beast மிருகமோ அம்மிருகத்தின் முழுமையாலும் உருமாதிரியாய் அமைகிறது எனப்பார்க்கலாம். இதிலிருந்து இம்மீளஉயிர்மீட்சிபெற்றெழும் ரோம சாம்ராஜ்யம் ஓர் கூட்டமைவு Composite சாம்ராஜ்யமாகும் என பார்க்கிறோம். இக்கூட்டமைவானது கூட்டினைப்பன - சிங்கம்(பாபிலோன்), கரடி (மேதிய - பெர்சியா), சிவிங்கி (கிரேக்கு) மற்றும் மிருகம் முழுவதும் Beast it-self (ரோம்). சரீரமாக, ஓர் மிருகத்தின் பெரும்பகுதியை கொண்டதாய் யோவானின் மிருகத்தில் ஓர் சிவிங்கியுடையதாய் இருக்கிறது, ஆகவே முடிவுரை யாதெனில், ரோம சாம்ராஜ்யத்தின் கடைசி காலகட்டம் அதிகபட்சம் கிரேக்கத்தியதாயிருக்கப் போகிறது.

கட்புலனாகா கைகளால் பெயர்த்தெடுக்கப்பட்ட 'கல்' பெயர்ந்து உருண்டுவந்த மலை 'இஸ்ரவேலை' உருமாதிரியாக்குகிறது. எப்படியெனில் இஸ்ரவேலிலிருந்தே கிறிஸ்து வந்தார். யாக்கோபுடைய வார்த்தைகளால், தனது குமாரரை ஆசீர்வதிக்கையில் இது உறுதியாக்கப்படுகிறது. அவர் அங்கே பேசுகையில் (ஆதி. 49:24 -ல்) 'அவன் மேய்ப்பனும், இஸ்ரவேலின் கல்லும் ஆனான்'. அக்கல் கிறிஸ்துவை தவிர வேறொருவரையும் குறிப்பிடாது. அக்கல் ஓர் பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பீற்று என்னப்படுவது கிறிஸ்துவினுடைய கல் அல்லது ஆயிரவருட ராஜ்யமாகும்.பேருருவச் சிலையால் அடையாளக் குறிப்பீடு செய்யப்பட்ட நான்கு சாம்ராஜ்யங்கள் அல்லது பேரரசுகள் எழுத்தின்படியான ராஜ்யங்களாயிருந்தன. அவைகள் இடத்தை எடுக்கவுள்ள 'கல்ராஜ்யமும்' எழுத்தின்படியான ஓர் சாம்ராஜ்யமாகவே இருக்க வேண்டும்;

ஏனெனில் அது முழுஉலகத்தையும் ஜெயித்து கட்டுப் படுத்தவுள்ளது. இந்த ராஜ்யத்துக்காகவே -- ஓர் ஆவிக்குரிய ராஜ்யமல்ல -- கிறிஸ்து தமது சீடர்களுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்தார், இவ்வாறாக - 'உம்முடைய ராஜ்யம் வருவதாக They Kingdom Come என்று! ஓர் ஆவிக்குரிய ராஜ்யத்தை அர்த்தப்படுத்துமானால் மற்றும் அத்தகைய ராஜ்யம் இப்போதே நிலைவரப்பட்டிருப்பதால், நாம் 'உம்முடைய ராஜ்யம் வருவதாக' என்று ஜெபிக்க ஒருபோதும் வேண்டுவதில்லையே!

ராஜா மீது ஏற்பட்ட விளைபயன்
The Effect upon the King

(வசனங்கள் தானி . 2:46 - 49)

நேபுகாத்நேச்சார் போன்ற ஓர் கர்வம் / பெருமை மிக்க பேரரசன்முன்பு நிற்பதற்கு தானியேல் தைரியம் எடுத்துக்கொண்டு, அவனது சாம்ராஜ்யம் அவனது மரணத்திற்குபின்பு நீடித்து நிற்கப்போவதில்லை என அவனுக்கு பிரகடனம் செய்தான். ஆனால் தனது தேவனுக்கு நேர்மை / உண்மைமிக்கவனாயிருந்ததால் உண்மையை Truth மறைத்து வைக்கவில்லை. ஆனால் இயற்கையான எதிர்பார்ப்புக்கு நேர் எதிர்மாறாக ராஜா மீதுள்ள இக்காரியத்தின் விளைபயன் Effect அமைந்தது. பொருள் விளக்கத்தினுடைய ஓர் வார்த்தை யைக்கூட நம்பாதவன்போல் வெளிப்படத்தெரிவிப்பதற்கு பதிலாக ராஜா முகம் குப்புற விழுந்து தானியேலை வணங்கினான். இவ்வாறு தானியேலுடைய மானிடஇயல்புக்கு மேலான ஞானத்துக்கு சாட்சிபகர்ந்தான். இத்தகைய ஓர் மாற்றத்தை ராஜாவில் தேவன் ஒருவரே உண்டாக்கி இருக்கமுடியும். மேலும் தானியேலுக்கு காணிக்கை செலுத்தவும், தூபங்காட்டவும் கட்டளையிட்டான். அதற்கு தானியேல் தடுத்து எதிர்த்ததை 'ராஜா தானியேலுக்கு பதிலளித்தார்' எனும் வார்த்தைகளிலிருந்து தெளிவாகின்றது. ராஜா பின்பு தானியேலின் தேவனுடைய மகத்துவ உயர்தன்மைக்கு சாட்சிக்கொடுத்தான். இதில் வருகின்ற மொழிகோர்வை வியப்பிற்குரியது; எவ்வாறெனில் திரித்துவத்துக்கு அது சாட்சிபகருகிறது. உங்கள் தேவனே தேவர்களுக்கு தேவன்(பிதா),

ராஜாக்களுக்கு ஆண்டவர்(குமாரன்) மற்றும் மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவர்(பரிசுத்த ஆவியானவர்). மந்திரவாதிகள். ஜோசியர்கள், பில்லி சூனியக்காரர்கள் மற்றும் கல்தேயர்கள்மீது இச்சொப்பன மீளஉரைப்பு மற்றும் அதினுடைய பொருள்விளக்கம் உருவாக்கிய விளைப்பயனைக்குறித்து நமக்கு சொல்லப் படவில்லை. ஆனால் அவர்கள் தானியேலுடைய தனித்துவ வகுப்பைத் தாங்கள் சேர்ந்தவர்களல்ல மற்றும் அவர்கள் உதட்டளவு உரிமை பாராட்டியதை அவர் உடைமையாக பெற்றுள்ளவர் என்பதையும் ஐயமற உணர்ந்து தெளிவுப்பட்டிருப்பார்கள்.

தானியேலது வெகுமதி Daniel's Reward

தானியேலது வெகுமதி இருமடியானது. அவன் ஓர் மேன்மைக்குரிய மாபெரும் மனிதனாக்கப்பட்டார். ஒரு மனிதனை மாபெரும் நிலைக்கு உயர்த்த இவ்வுலகில் இரு காரியங்கள் உள்ளன என கருதப்படுகிறது. முதலாவது: 'செல்வம் / ஐசுவரியம்'. இரண்டாவதுள்ளது 'அதிகாரம்' Power. தானியேல் இரண்டையும் பெற்றிருந்தார். அநேகம் சிறந்த வெகுமதி களினால் நிரப்பப்பட்டான். அவன் பாபிலோன் மாகாணம் முழுமைக்கும் அதிபதி Ruler ஆக்கப்பட்டான். சகல ஞானிகள் மேலும் பிரதான அதிகாரி (ஆளுநர்களின் தலைவன்)! தானியேல் தனது கூட்டாளிகளை மறந்துபோகவில்லை - தனது உயர்த்தப்படலில்! ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோரை! ராஜாவின் சொப்பணம் குறித்த தேவையான விவரங்களை பெற்றுக்கொள்ள அவர்கள் தங்கள் ஜெபத்தினால் உதவிசெய்தனர். ஆகவே தனது மேன்மை உயர்வில் அவர்களும் பங்குபெற தானியேல் தீர்மானித்தார். ஆகவே அவர்கள் பக்கத்தில் நின்று ராஜாவை வேண்டிக்கொண்டான். அதன்படி அவர்களுக்கு பிரதான பதவிகள் கொடுக்கப்பட்டன. தானியேலோ ராஜாவின் கொலுமண்டலத்தில் இருந்தான். அங்கே தான் அதிகாரத்துக்குரிய குழுக்கள் Councils கூடின. தலைமை நிலையிலுள்ள காரியங்கள் தீர்மானிக்கப்பட்டன.

இந்த அதிகாரம் வேதாகமத்திலே மிக உன்னத / குறிப்பிடத்தக்க உயர்ந்த அதிகாரங்களில் ஒன்றாகும். புறஜாதிதேசங்களது சரித்திரத்தின் ஓர் தீர்க்கதரிசன வரை-

கோட்டை நமக்கு தருகிறது, இஸ்ரவேல் தேசத்தோடுள்ள இவைகளின் தொடர்பு சம்பந்தத்தை! நேபுகாத்நேச்சார்காலம் துவங்கி கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையுள்ள! பூமியினுடைய ஆட்சியாளர்களும், ராஜாக்களும் இதைப்பற்றி அறிந்திருந்தால், அதின் படிப்பினையை கவனித்திருந்தால், அவர்கள் உலக தலைவர்களாகிட அதிக பேராசை கொள்ளமாட்டார்கள். மேலும் சட்டமின்மையின் நிறுவனங்களின் மேலெழும்பலில் அவர்கள் எதைக் காண்பார்கள் என்றால் நாம் புறஜாதியாரது காலங்களின் இறுதியை காண்பதோடு கர்த்தரின் இரண்டாம் வருகை வெகுதொலைவில் இல்லை என்பதையே!

'பொற்சிலை'
The Golden Image

'சிலை' Image

தானியேல் 3:1

'ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறுபதுமுழ உயரமும், ஆறுமுழ அகலமுமான ஒரு பொற்சிலையை பண்ணுவித்து, பாபிலோன் மாகாணத்திலிருக்கிற தூரா என்னும் சமபூமியிலே நிறுத்தினான்'.

'பொன்னாலான தலையுடைய சிலையுடைய' Golden Headed Image தனது சொப்பனத்தை நேபுகாத்நேச்சார் அடைந்தபிற்பாடு சுமார் இருபத்துமூன்று வருடங்கள் கழித்து இந்த அதிகாரத்தில் (3- வது) எழுதப்பட்ட சம்பவங்கள் Events நிகழ்ந்தன. ஆகவே அந்த சொப்பனம் இப்பொற்சிலையை கருத்துத் தூண்டுகை செய்ததென்பது Suggested சாத்தியமாக கடினமாயுள்ள Hardly Likely. அது எப்படியெனில், நேபுகாத்நேச்சார் தனது பெருமையில் முன்னிலும் மிகு நலமுடையதற்கு போக மனத்துணிவு கொண்டவனாக தலைமட்டுமே பொன்னாயிருந்து மீதமுள்ள சிலையின் பகுதி தரங்குறைந்த உலோகங்களினாலான ஓர் சிலையை நிறுத்துவதற்கு பதிலாக சிலை முழுமையையும் பொன்னால் செய்ய உளவுறுதி கொண்டான் Resolved

நேபுகாத்நேச்சார் தனது வாழ்க்கை வளர்ச்சி தொடரில் Career ஓர் கட்டத்தை அடைந்திருந்தபோது அவன் எகிப்திய ராஜாக்களை முன்மாதிரியாக்க Emulate விரும்பினான். அவர்கள் இன்னமும் உயிரோடிருக்கையில் தங்களது ஞாபகார்த்தத்தை Memory மற்றும் அவர்களுடைய ஆட்சியின் மகிமையை நிலைபேறுடையதாக்க Perpetuate கடினப் பாறையிலிருந்து தங்களுடைய உருவச்சிலையை செதுக்கி உருவாக்கினர். ஆனால் பாபிலோன் பாறைகளற்ற ஓர் சமபூமியில் இடவமைப்பு

பெற்றிருந்ததால், நேபுகாத்நேச்சார் ஓர் வேறுவிதமான சிலை அல்லது ஸ்தூபி Statue யை நாடியடையவேண்டிவந்தது, ஆகவே பாபிலோனிலுள்ள பேல்கோபுரம் மற்றும் தொங்குதோட்டம் போன்ற மகோன்னத கட்டிடங்களுக்கு ஒப்பனையான ஓர் சிலையை பொன்னினாலே உருவாக்க உறுதிபூண்டான். அது பாபிலோன் நகரத்தில் நிறுத்தப்படாமல் தூராவின் சமவெளியில் நிறுத்தப்பட்டதான மெய்மை அதின் அவ்விடத்து நிறுவுகையில் நேபுகாத்நேச்சாருக்கு ஓர் இருமடியான நோக்கமிருந்ததான மெய்மையை வெளிப்படுத்துகிறது. முதலில் அது பாபிலோனுடைய மாபெரும் கட்டிடங்களால் நிழலடிப்பு செய்யப்பட Over Shadowed அவன் விரும்பவில்லை. இரண்டாவதாக, பல்வேறு மதநம்பிக்கைக்கொண்ட பல தேசத்திலிருந்துள்ள மக்கள் உள்ளாக்கப்பட்ட மாபெரும் சாம்ராஜ்யத்தை முழுமையாக கட்டிக்காக்க வேண்டுமென்றால், ஏதாமோர் அமைப்பிலான அரசு மதத்தின் State - Religion மூலம் அவன் அவர்களை ஒருங்கிணையச் சேர்க்கவேண்டும் எனும் முடிவுக்கு எட்டியிருந்தான். மேலும், அவன் தனது சாம்ராஜ்யத்தினுடைய பற்பல மாகாணங்களின் சகல மேன்மைக்குரிய மனிதரை அழைக்க அவன் புதுத் திட்டமிட்டதால், பாபிலோன் நகரினுள் போதுமான அளவு விஸ்தாரமான இடம் இருக்கப்போவதில்லையென்பதால் அவன் தூராவின் சமவெளியை தேர்வுசெய்தான்,

'கண்மூடித்தனமாக மிகைப்படுத்துகை' Reckless Exaggeration யின் முத்திரையை தானியேல் புத்தகத்தின் ஒவ்வொரு காரியமும் தாங்கியுள்ளதாக இப்புத்தகத்தின் தர்க்க பிரியர்கள் Critics உரிமையாளுகின்றனர். தொண்ணூறு அடி உயரமும், ஒன்பதடி அகலமும் உடைய ஓர்சிலை அதின் உருவ அளவில் மகாமிஞ்சிய பெரிது மட்டுமின்றி, விகித பொருத்தமின்றியுமுள்ளது Out of Proportion என்கின்றனர். மட்டுமின்றி, முழுதும் கட்டித்தங்கத்தால் அத்தகைய ஓர் பிரமாண்ட சிலையை உருவாக்க போதுமான அளவு தங்கம் Gold அந்நாட்டில் இல்லையென்பதும் அவர்களுடைய வாதம். ஆனால் அவர்கள் பாபிலோன் மற்றும் எகிப்தினுடைய அந்நாட்களின் செல்வங்கள் Riches மற்றும் உசிதங்கள் Splendour நமது காலத்தை நிழலடிப்பு செய்து விடுவதாயுள்ளதை மறந்து

விடுகின்றனர். மேலும், நேபுகாத்நேச்சார் எகிப்தை முறியடித்து தன்னோடு மிகப்பெரிய அளவிலான தங்கத்தை எடுத்து திரும்பிவந்திருந்தான்.

ஆனால் சிலையானது முழுதும் கட்டித்தங்கத்திலானது என்று இது சொல்லுகிறதில்லை; இது சந்தேகமின்றி தங்கத்தாலான தகடுகளினால் பொதியப்பட்ட Gold Plated ஓர் மரத்துடைய சிலையாயிருந்தது. கட்டித்தங்கத்திலான ஓர் சிலையைப்போன்ற அதே தோற்றத்தை உடையதாயிருந்து, அதே நோக்கத்தை நிறைவுசெய்வதாயிருந்தது. மேலும் சிலையின் உயரம் அதின் அகலத்துடைய விகிதத்தில் கணிக்கையில் அச்சிலை ஓர்மேடை மீது Pedestel ஆகாயத்தில் உயர்ந்ததாய் நின்றதாக காணப்படுகிறது. அதினால் தூரா சமவெளியெங்குமுள்ள திரளான கூட்டத்தினரது தலைகளுக்கு மேலாகக் காணப்படக் கூடியதாயிற்று. ஆக, சிலையின் உயரம் மேடையின் உயரத்தையும் உட்படுத்தீற்று. இம்மேடை தங்கத்தால் செய்யப்படத்தேவையில்லாதிருப்பதால், இது சிலையின் தங்கத்தாலான பாகத்தை குறைத்துவிடும். நேபுகாத்நேச்சார் செய்தது எதுவாயினும் அது பிரமாண்டமானதாயிருந்தது Colossal. பாபிலோனின் பிரமாண்ட சுவர்கள் எக்காலத்தும் ஈடற்றதாயிருந்தது. அதுபோல் அதின் பொதுத்துறை கட்டிடங்கள்கூட!

சிலையின் அளவீடுகள் தனிச்சிறப்பற்றதாயில்லை. அதின் உயரம் அறுபது முளமாயிருந்தது (ஓர் முளம் என்பது பதினெட்டு அங்கும்). அதின் அகலம் 'ஆறு' முளமாயிற்று. இப்போதும் 'ஆறு' - 'மனிதனது எண்' Number of Man, ஏழுக்குசற்று குறைவானது. 'ஏழு' 'பூரண எண்' Perfect Number அல்லது முழுமையின் எண்ணாகும். ஆகவே 'ஆறு' மானிட முழுமை இன்மையின் எண்! மனிதன் ஆறாவது நாளில் படைக்கப்பட்டான். அவனது பணிக்கான நாட்கள் ஆறு! ஏழாவது நாளோ தேவனுடைய நாள்! எண் ஆறு வெளி. 13:18-லுள்ள மிருகத்தினுடைய எண்ணை நமக்கு ஞாபகமூட்டுகிறது. அது: 666! 'தூரா சமவெளியே நாட்டப்பட்ட பொற்சிலை' கள்ளத்தீர்க்கதரிசி மிருகத்துக்கு அல்லது அந்திக்கிறிஸ்துவுக்கு உருவாக்கும்படி மக்களுக்கு கட்டளையிடவுள்ள சிலைக்கு ஓர் தீர்க்கதரிசன

முன்னிழலாட்டமாயிருந்ததை Prophetic Fore - Shadowing நேபுகாத்நேச்சார் சிறிதும் அறிந்தானில்லை. அச்சிலைக்கு ஜீவன் Life மற்றும் பேசக்கூடிய Power to Speak சக்தி அளிக்கப்படவுள்ளது. மிருகத்தை வணங்காத யாவரும் கொலை செய்யப்படுவர், ஓர் எரிகிற சூளைக்குள் தூக்கி எறியப்படாமல் தலைவெட்டுப்பொறியால் Guillotine கொல்லப்படுவர். சிரச்சேதம் பண்ணப்படுவர். வெளி. 20:4 அந்நாளில் மிருகத்தின் முத்திரையை பெற்றிராத ஒருவனும் வாங்கவோ விற்கவோ கூடாதேபோம்; அம்முத்திரை அவனது எண்ணாகிய 666. மனிதனுடைய எண்! வெளி. 13: 13-18. மிருகத்தின் சொரூபத்துடைய தொழுகையே 'மனிதனை தெய்வமாக்குகை' Deification of Manயுடைய உச்சநிலையடைதலாகவுள்ளது Culmination. அத்தகைய சகல விக்கிரகவணக்கத்துடைய முடிவானவிளைவு Out Come 'மனிதனின் நாளை' Man's Day முடிவுக்கு கொண்டு வரப்போவதாகும். அல்லது புறஜாதியாரின் காலங்களை Time of the Gentiles முடிவுக்குக்கொண்டுவருவதும் கல்ராஜ்யத்தை Stone Kingdom நிறுவுகை செய்வதுமாகும்.

'சிலையுடைய அர்ப்பணிப்பு' Dedication of the Image

'தானியேல் 3:2-3'

சிலையுடைய அர்ப்பணிப்புக்கான ஒழுங்குகாரியங்கள் மிக விரிவான முறையிலிருந்தன Elaborate. பாபிலோனுக்கு கீழ்ப்பட்டிருந்த பூமியின் அனைத்து தேசங்களும் இவ்வைபவத்துக்குப் பிரதிநிதிகளை அனுப்ப அழைக்கப் பட்டனர். தேசங்களுடைய மேன்மைதங்கிய மனிதர் மற்றும் ஆளுநர்கள் Rulers மற்றும் அவர்களது உடன்துணைவர்களால் Retainers பாபிலோன் நெருங்கித்திரண்டிருந்தது. ஒவ்வொன்றும் ஓர் மகா பிரமாண்ட அளவில் இருந்தது. இது பாபிலோனின் முழு வரலாற்றிலேயே அதிகபட்சம் மகோன்னத நாளாயிருந்தது.

'தானியேல் 3:4-7'

சிலையுடைய அர்ப்பணிப்புக்கு வரவழைக்கப்பட்டோர் அர்ப்பணிப்பு ஓர் மதத்துக்குரிய தன்மையிலாயிருக்கவும், தொழுகை Worship வடிவத்திலானதெனவும் தெரிந்து

புரிந்திருந்ததாக வாசகபகுதியிலிருந்து தெளிவாயில்லை. அவர்கள் அதிக பட்சமும் வைபவங்கள் வழக்கப்படியான தன்மையுள்ள அவ்வாறான கொண்டாட்டங்களாக இருக்கவுள்ளனவாக எதிர்பார்த்தனர். ஆகவே இசைமேளம் மற்றும் கூடுகொள் இன்னியம் Orchestra அவர்களை சந்தேகத்துக்குள்ளாக்கவில்லை. அவர்கள் அதிகபட்சமும் சிலை ராஜாவை மேன்மைப்படுத்தவும், அவருடைய ஆளுகையின் பொற்தன்மையை நினைவுச் சின்னப்படுத்தவும் ஏற்பட்டதென்று அறிவிக்கப்பட்டிருந்தனர். ஆனால் நேபுகாத்நேச்சார் மன்னனுக்கு மனதில் வேறொரு எண்ணம் இருந்தது; அவன் ஓர் பரந்த சாம்ராஜ்யத்தின் தலைமையிலிருந்தான்; அது வெவ்வேறான மொழிகளைப் பேசுகின்ற மற்றும் பல்வேறு மதங்களைக்கொண்ட அநேக ராஜ்யங்களானது; ஓர் தேசம் முழுமைக்கும் ஒரே மதம் இருப்பது ஓர் ஒன்றிணைக்கின்ற விளைவை உருவாக்கு மென்பதை அவன் அறிந்தான். இத்தகைய ஒருங்கிணைப்பு Unification அதிகபட்சமாக Probably ஓர் அரசியல்தேவை Political Necessity ஆகிவிட்டிருந்தது. ஆகவே அவன் ஓர் பாபிலோனிய மாதிரியிலான 'ஓர் அரசாங்க மதத்தை' State religion நிறுவும்படி தீர்மானித்தான். அது 'பாபிலோனின் மதம்' Religion of Babylon என அறியப்பட்டதான ஓர் விக்கிரகாராதனை தன்மை கொண்டதாய், சுற்றிலுமுள்ள தேசங்களின் மதங்களது தன்மையை பிரதிபலித்ததாயமைந்தது. இதைச்செய்வதின் மூலம் அவன் மதப் பொறுதியின்மை Religeous Intolerance யுடைய குற்றவாளியானான்; ஏனெனில் மறுப்புக்கான Refusal தண்டனை ஓர் எரிகின்ற சூளையின் Fiery Furnace மரணமாயிருந்து முரண்சமய ஒடுக்குமன்ற தண்டனை Inquisition க்கு ஒப்பாயிருந்தது.

சகல மனிதரும் இயற்கையாக மதவுணர்வுள்ளோரே! அவர்களது மத உணர்ச்சிகளை கிளறுகின்ற எதினாலும் அவர்கள் இலகுவாக வாரிக்கொள்ளப்படுபவர்கள்! இதையறிந்து, நேபுகாத்நேச்சார் அதை சாதகமாக்கிக்கொண்டார். 'தூரா' சமவெளியின் மீது பெருங்கூட்டத்தாரின் மத உணர்ச்சிகளை தூண்டி எழுப்பிட வேண்டுவதெல்லாம் செய்யப்பட்டது; பல்வேறு வகை இசைக்கருவிகளைக் கொண்ட மாபெரும் இசைக்கருவியாள் குழுக்கள் வசதியான இடங்களில் அமர்த்தப்பட்டன; விக்கிரகாராதனை தொழுகையிலான சகல

எடுபிடி கொடிகளாலான சடங்காசாரங்களால் நிறைந்த ஆசாரசடங்குகள் மற்றும் பாபிலோனிய வழிபாட்டு மரபு Cult முறையில் பயன்படுத்தப்படுகின்ற மத அணிமணியாடைத் தொகுதியின் மிகப்பகட்டான காட்சியளிப்பு வழிநிற்போரை சந்தேமின்றி கவர்ந்து சிலையை வணங்கத்தூண்டுவதாயிற்று. இன்றும் இதே முறையினுடைய ஆதரிப்பு வாதிடுவோர் உளர், அவர்கள் வாதாடுகைக்காக ரோமன் கத்தோலிக்க சபையை சுட்டிக்காட்டுகின்றனர்; அதினுடைய ஒன்றாந்தன்மை மற்றும் வெற்றி பாபிலோனிய மூல ஆரம்பத்தை தழுவிய அதனுடைய மதசம்பந்தமான ஆராதனைகளின் கவர்ச்சிக்காட்சிக்குரிய தன்மையின் காரணமாக அதிகப்படியும் உள்ளது என வாதாடுகின்றனர்.

எல்லா சமயப்பிரிவுகளையும் Denominations சங்கக்குழுக்களையும் Sects ஒரே மாபெரும் நிறுவனத்தில் Organisation ஒருங்கிணைக்க இன்று இயக்குகைகள் நடந்து கொண்டிருக்கின்றன, அதன் நோக்கம் ஓர் உலகளாவிய மதம் நிறுவுகையே! மனிதனில் கலைக்குரியோரையும் Artistic மற்றும் அழகுணர்ச்சியோரையும் Esthetic கவர்ச்சிக்கும் நோக்கங்கொண்டதே! காயினிய Cainite தன்மை கொண்ட ஓர் மதம்! ஏனெனில் அதில் 'இரத்தம்' Blood இல்லாதுள்ளது. மனிதனையும் அவனது கிரியைகளையும் மேன்மைப்படுத்தும் மதம்! புறஜாதிகளின் காலத்து முடிவுநாட்களின் தன்மையே இதுவென வேதம் எடுத்துரைக்கிறது. அவ்வமயம் தேவபக்தியின் வேஷத்தை தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாய் மனிதர் இருக்கவுள்ளனர்! 2தீமோ. 3:1-7. உண்மையான சபை எடுத்துக்கொள்ளப்பட்டதும் பின்விடப்பட்டோர் போப் பாதிக்கத்துள் அடித்துச்செல்லப்படுவர். அத்தோடு அது உலகளாவிய சபை Universal Church ஆகிடும். அதினுடைய கடைப்படிநிலை பாபிலோனித்துவம் Babylonish ஆகிறது. இரத்தாம்பரமும் 'சிவப்பாடையும் தரித்த ஸ்திரீ' Purple Clad Woman வெளி 17:1-5-ன்படி சிவப்புநிற மிருகத்தில் சவாரிசெய்பவளாக காணப்படுகிறது, அதாவது 'இரகசியம், மகாபாபிலோன், வேசிகளுக்கும் பூமியின் அருவருப்புகளுக்கும்தாய்' என்னப்படும் ஸ்திரீயாக!

நேபுகாத்நேச்சார் தனது திட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்த ஓர் முன்னெச்சரிக்கை மேற்கொண்டான். ஒற்றுமையுடைய இல்லாமை ஏற்பட்டு விடக்கூடாதென அவன் கங்கணம் கட்டிக்கொண்டான் Determined. தொழுகை இயற்கைமுழுதளாவியிருக்க வேண்டும் Universal அல்லாவிடில் ஒவ்வாமைபிணக்கு Discard ஏற்பட்டுவிடும்; எனவே வருமுன் காப்பு / சிறிதளவிலான வருமுன்தடுப்பு பெருமளவிலான நிவாரணத்திற்கு ஈடானது; எந்தவொரு எதிர்க்கிளர்ச்சியையும் Rebellion முன்னதாக செயலற்றதாக்குவது சாலச்சிறந்ததாகக் கண்டு சிலைக்கு அருகாமையில் ஓர்பெரிய 'சூளை'யை Furnace- ஓர் வெப்பக்காற்றூட்டப்பட்ட உலைபோன்றதை Blast Furnace கட்டியிருந்தான். அக்கினி மூட்டப்பட்ட அதினுள் அவனது பொற்சிலையை மண்டியிட்டு தொழுதுகொள்ளாத எந்த நபரையும் எறிந்து போடப்போவதாக அச்சுறுத்தினான். எந்தவொரு எதிர்ப்பையும் தடுக்க உயிர்மீதுள்ள பாசத்தையும், துன்பவதைப்பாட்டின் பயத்தையும் அவன்முன்நிறுத்தி கணக்கிலெடுத்தான் Counted. சந்தேகமின்றி அவனது இரகசியக்காரியங்களை அறியாதோர் ஏன் சூளை Furnace ஏற்கனவே கொளுத்தப்பட்ட நிலையில் அங்கு உள்ளதென வியந்து நோக்கினர். ஆனால் சந்தேகத்தில் அதிகதூரம் இருந்துவிடவில்லை; ஏனெனில் ஓர் கட்டியர் - தூதுவர் Herald யாதாமொருவர் தாழவிழுந்து பொற்சிலையை தொழுது கொள்ளாதிருந்தால் உயிரோடே அந்நபர் எரிகிற சூளையினுள் தள்ளப்படப்போவதாக கூறி அறிவித்தான். முடிவுயாதெனில், இசைக்கருவிகளின் முழக்கத்தில் திரண்டிருந்த பெருங் கூட்டத்தார் முகங்குப்புற விழுந்தனர். ஆனால் யாவருமல்ல! தங்கள் முழந்தாளை முடக்காத மூன்று மனிதர் அதுவும் மேம்பாடுடைய உயர் அதிகாரிகள் மூவர் இருந்தனர். அவர்கள் யூதராயிருந்தனர். அவர்கள் பெயர்கள் சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ என்பனவே! தானியேல் எங்கிருந்தார் என அறியோம். அவர் சுகவீனமாயிருந்திருக்கலாம் அல்லது அரசு பணியில் தூர அகன்றிருக்கலாம். ஆனால் அவர் அங்கிருந் தாலும்கூட அவர் சிலையை வணங்க மறுத்திருப்பார் என்று நிச்சயமாய் நாம் அறிவோம்.

மூன்று எபிரேய குமாரர்களது வணக்கத் தவறுகை சில குறிப்பிட்ட கல்த்தேயரால் கண்ணோட்டம் செய்யப்பட்டது.

அவர்கள் ஒருகால் வேவுகாரர்களாய் நியமிக்கப் பட்டிருந்திருக்கலாம்; அல்லது அதிகாரிகளாய் அல்லது அரசியல்வாதிகளாய் இருந்திருப்பார்கள். இவர்களுடைய திட்டங்கள் இவ்வுத்தமமான பொது அரசூழியர்களால் தடுக்கப்பட்டிருக்கலாம்; சாம்ராஜ்யத்தினுடைய காரியாதை களில் யூதர்களுடைய செல்வாக்கு மற்றும் அதிகாரத்தைக் குறித்து பொறாமை கொண்டவர்களாய் அவர்கள் மூவர் எதிராக ஓர் குற்றச்சாட்டை கொண்டுவர ஓர் சாக்குப்போக்குக்காய் அவர்கள் மகிழ்ந்தனர். அதின்மூலம் அவர்களை(மூவர்) வழி மார்க்கத்தைவிட்டு The Way அப்புறப்படுத்திப்போட ஏதுவுண்டானதற்காய்!

'தானியேல் *3: 8-12*'

ராஜா இம்மூன்று தெளிவாய் எடுத்துவைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை கேள்விப்பட்டதும் அவன் கடுங் கோபங்கொண்டெழுந்தான். அவனுக்கும், அவனது தெய்வங்களுக்கும் அவமரியாதை காண்பிக்கவும், பொற்சிலையை தொழுவதற்கான அவனது ஆணைக்கு கீழ்ப்படியாதிருக்கவும் எவனொருவனுக்காகிலும் மடத்துணிச்சல் Temerity உண்டாயிருந்ததற்காக மூர்க்க வெறிகொண்டான் Furious. நிச்சயமாக தவறு ஏதோவொன்று ஏற்பட்டுவிட்டது. இம்மனிதர் ஒன்றிலோ ஆணையை கேள்விப்பட்டிருக்கா திருக்கவேண்டும்; அல்லது அதை தவறாகப் புரிந்திருக்க வேண்டியது. ஆகவே உடனடியாக அவன் அவர்களை தனது சமூகத்துக்கு அழைத்தனுப்பினான். பின்பு அவர்களை தன்முன்நிறுத்தி கூறியதாவது:

'தானியேல் *3: 14-15*'

'உங்களை என் கைக்கு தப்புவிக்கப் போகிற தேவன் யார்?' என்பதான ராஜாவுடைய எதிர்க்கிற அறைகூவல் Defiant Challenge ராஜாவுடைய சொப்பனத்தை பொருள்விளக்கமளித்த தானியேலிடம் அவனளித்த அறிக்கைக்கு Confession நேர்மாறுபட்டதாயிருக்கிறது. 'மெய்யாகவே உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார்'

என்பதே அவ்வறிக்கை! எனவே யூதர்களுடைய தேவனுக்கு எதிராக இம்முழுவதுமான மாறுதலை Radical Change ஏதுவாக்கியது யாதென நாம் விசாரித்தறிய வழி நடத்தப்படுகிறோம். தானியேலிடம் நேபுகாத்நேச்சார் அறிக்கை செய்தபோது அவன் நேர்மையோடில்லாதிருந்தானா? அல்லது அதற்குப்பின்னேற்பட்ட சம்பவங்கள் அவனது மனதை மாற்ற ஏதுவாயிற்றோ? நேபுகாத்நேச்சாருடைய சொப்பனம் இருபது வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டிருந்தது என்பதை நாம் மறக்கலாகாது. இந்த இடைக்காலத்தே, அவன் எருசலேமை இரண்டாம் தரம் பிடித்திருந்து (கி.மு. 598) அதின் பெருமளவிலான குடிவாழ்மக்களை சிறைப்பிடித்துச் சென்றிருந்தான். அவ்வமயம் தேவாலயத்து புனித பாத்திரங்களில் பலவற்றை எடுத்துச் சென்றிருந்தான். இதையும் தாண்டி எருசலேம் நகரை மூன்றாவது முறையும் முற்றுகை இட்டிருந்தான் (கி.மு. 587) அதைப்பிடித்து அதை அழித்தான். அத்தோடு தேவாலயத்தை சுட்டெரித்தான். பரிசுத்த நாட்டை Holy Land பாழ்நிலையில் Desolation விட்டுச்சென்றான். கீழ்த்திசைக்குரிய முடிமன்னர்கள் நம்புகிறபடி அவர்களுடைய வெற்றிகள் அவர்களுடைய தெய்வங்கள் அவர்களால் வென்றுகீழடக்கப்பட்ட பகைவர்களது தெய்வங்களின் மீதாக அடைந்த ஓர் வெற்றியாயிருந்தது. இந்நம்பிக்கையின் அடிப்படையில் நேபுகாத்நேச்சாருடைய முடிவான சான்றறிவிப்பு யாதெனில் யேகோவாவுடைய பூமிக்குரிய தலைநகரமீதான அவனுடைய வெற்றிகள் மற்றும் தேவாலயத்தினது அழிக்கப்படுகை யேகோவா எல்லாருக்கும் மேலான மிக உன்னத தெய்வம் ஆகிடவில்லை, மாறாக அவனது சொந்த தெய்வமான Merodach மெரதாக்கே அவ்விதமானவராகிட்டதாக பொருள்படுத்தீற்று Meant என்பதே! ஆகவே அவனுடைய சவாலானது 'உங்களை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார்?' என்பதே!(தானி. 3:15)

சவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது
The Challenge Accepted

'தானியேல் 3: 16-18'

'சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை

நோக்கி நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக்குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை; நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்; விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு அராதனை செய்வதுமில்லை. நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்கிறார்கள்'.

எத்தகைய உயர்நோக்குடைய பதிலுரை! அவர்கள் எப்பேர்ப்பட்ட விசுவாச மனிதர்! அது ஓர் தகாத்துணிவுடைய பதிலுரையன்று! ஏனெனில் அவர்கள் தங்கள் தேவனை அறிந்தனர். அவர்கள் ஓர் வீறார்ந்த தீர்மானத்தோடு பேசினர். அவர்கள் கூறினர் 'எங்களுக்கு அவசியமில்லை/ அக்கரையில்லை We are not Careful' அதாவது, 'இந்த விஷயத்தைக் குறித்து எங்களுக்கு கவலை ஏதுமில்லை' பிலி 4: 6-7. எங்களை விடுவிக்க தேவன் வல்லவராயிருக்கிறார். அவர் விடுவிப்பார் Will Deliver. ஆனால் அப்படி இல்லாமற் போனாலும், அதாவது எங்களை விடுவிக்க தகுதியுடையோராய் எங்களை காணாதிருந்தால் எங்களது தீர்மானத்தை பொறுத்தவரை அது எந்தவித வித்தியாசத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனைசெய்வதுமில்லை; நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்துக் கொள்வதுமில்லை, 'இரத்த சாட்சிகளுடைய ஆவி அவர்களிடமிருந்தது மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும், அதற்கு தப்பும்படி தங்கள் ஜீவனை அருமையாய் எண்ணவில்லை' வெளி. 12:11. அதாவது மரணபரியந்தம் உண்மையாயிருக்க(வெளி. 2:10) அவர்கள் உளவுறுதி கொண்டனர் Resolved. அவர்களது இயற்கையான வாழ்வுகளது முடிவுவரை என்றல்ல, மாறாக தீக்சூளையுடைய மரணபரியந்தம் Unto! அவர்கள் பணிந்து கொடுக்கவோ, சமரச இணக்கம் செய்யவோ மாட்டார்கள். அவர்களுடைய பதிலுரையின் அர்த்தத்தை தவறு செய்தல் ஏதும் ஏற்படவில்லை. அது ராஜாவைமுன் எப்போதையும்விட கூடுதலாக கோபாவேசப்படுத்தியது Furious.

தீங்கில்லா தீச்சூளை
The Harmless Furnace

'*தானி3:19-25*'

எரிகிற தீச்சூளையிலிருந்து மூன்று எபிரேய புத்திரர்களது விடுதலை ஓர் அற்புதம் Mirack என்பதில் எவரும் வினாஎழுப்ப முடியாது. இரும்பை உருக்கக்கூடியதான கடுமையான வெப்பக்கொழுந்தினுள் பிழைத்திருந்து சேதப்படாமல் தரித்திருக்க மட்டுமின்றி அதனுள் அம்மனிதர் இங்குமிங்கும் உலாவி சூரியகாந்தியின் ஆதரவான வெப்பத்தால் சூழப்பட்டதுபோன்று சுவாசிக்கவும் கூடிற்று என்பது நம்புவதற்கரியதாக Incredible காணப்படுகிறது. ஆனால் பொற்சிலையை பணிந்து கொள்ளலை எதிர்த்து தடைசெய்யவும் மற்றும் தங்கள் மதத்தில் உண்மையாயிருந்த பாபிலோனிலுள்ள யூதச்சிறைக்கைதிகளது துன்பவதைப்பாட்டை நிறுத்தவும் அத்தகைய ஓர் அற்புதம் தேவையாயிற்று என்பது தெளிவாகிறது.

தீச்சூளை ஏழுமடங்கு அதிகச்சூடாக்கப்பட கட்டளை பிறப்பித்தபோது ராஜா, அவனது மூர்க்கவெறியில் தன்னை மிஞ்சிவிட்டான். அது அவனது பலியாட்களுடைய Victims கஷ்டவேதனைகளை குறுக்கி Shorten அவர்கள் அழிவை துரிதப்படுத்தும். இதுவே அவர்களை தூக்கி உள்ளெறிந்த பலசாலிமனிதரது சாவுக்கு காரணமாயிற்று. தீச்சூளையின் வெப்பம் ஏழுமடங்கு அதிகரிக்கப்பட்டதானது அற்புதத்தை அதிக உயர்ந்ததாக்கீற்று; அத்தோடு அவர்களுடைய விடுதலையில் தேவனுடைய கரத்தை வெளிப்படுத்தீற்று; ஏதாமோர் இயற்கைக்கு மேற்பட்ட நுண்மதி Intelligence அக்கினி கொழுந்தை கட்டுப்படுத்தினது தெளிவாயுள்ளது. ஏனெனில் அவர்கள் கட்டப்பட்டிருந்த கயிறுகளை அது(கொழுந்து) எரித்துப் போட்டதாயினும், அது அவர்களுடைய உடுப்புகளையோ, அவர்களது முடியில் ஒன்றையும் தொடவேயில்லை; அவர்கள் தீச்சூளையைவிட்டு வெளிப்படுகையில் அவர்கள் மீது அக்கினியின் வாசனை இல்லாதிருந்தது. தீக்கொழுந்துகள் அவர்களது கயிறுகளை எரித்தில்லாமலாக்கியவுடன், தீச்சூளையைவிட்டு தப்பித்துஓட எந்த முயற்சியையும்

எடுக்கவில்லை. ராஜா அவர்களை உள்ளே இட்டான்; அவர்களை வெளியே அழைப்பது அவனைச் சார்ந்தது. ஆனால் தீச்சூளையை விட்டுவர அவர்களுக்கு விருப்பமில்லாதிருந்தது; ஏனெனில் அங்கே அவர்களுக்கு தேவகுமாரனுடைய கூட்டாய்மை Companionship கிடைத்தது; ராஜாவுடன் அரண்மனையிலிருப்பதை விட தேவகுமாரனோடு Son of GOd தீச்சூளையுள் இருப்பதை நாடினர். அவர்களிடம் கீழ்க்காணும் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று:

'நீ தண்ணீர்களை(செங்கடல் போன்ற) கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது (யோர்தான் போன்ற) அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜீவாலை உன்பேரில் பற்றாது' ஏசாயா *43:2* 'அவர்கள் அக்கினியின் உக்கிரத்தை அறிவித்தார்கள்' என எபிரேயர்களது ஆக்கியோன் கூறியபோது இம்மூன்று எபிரேய புத்திரரையே அவர் குறிப்பிட்டார்.

'உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார்?' என்னும் ராஜாவுடைய மமதைமிக்க சூளுரைக்கு தீக்கொளுந்தின் வல்லமையிலிருந்து இம்மனிதருடைய விடுதலை எத்தகைய புண்படுத்தும் கண்டனமாயிருந்தது! அவர்களுடைய விடுதலை அவர்கள் எடுத்த மார்க்கத்தின் நேர்மை நிறுவீடாயிற்று! Vindication அதைப்போன்ற ஒர்விடுதலையை புறசமய தெய்வங்களில் ஒருவனும் ஒருபோதும் செய்திருந்ததில்லை, அவ்விதம் செய்ய கழிவுள்ளவர்களாயு மில்லை! 'அற்புதம்' ராஜாவை மனமாறுதலடைவித்தது. யூதர்களுடைய தேவனே அவனது சொந்ததெய்வங்களைவிட அதிக வல்லமைமிக்கவர் என்பதை அவன் அங்கீகரித்தான் (ஒப்புக்கொண்டான்).

ஓர் நம்பவைக்கப்பட்ட ராஜா
A Convinced King

'தானியேல் *3: 26-27*'

ஏவலிடப்பட்டதும் ஷாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ

மூவரும் எரிகின்ற சூளையை விட்டு வெளிநடந்து வந்தனர். பிரபுக்கள், ஆளுநர்கள், சேனைத்தலைவர்கள் மற்றும் ராஜாவின் ஆலோசகர்கள் ஒன்றாக கூட்டிச்சேர்க்கப்பட்டனர். அவர்கள் யாவரும் பார்வையிடும்படியும், ஓர் அற்புதம் நடத்தப் பட்டதற்கான கண்பார்வைக்குரிய மற்றும் தொட்டுணரத்தக்க நிரூபணம் பெறும்படியும் அழைக்கப்பட்டனர், இம்மூன்று மனிதர்களின் பாதுகாப்பு பொற்சிலை வணக்கத்துக்கு ஓர் முற்றுப்புள்ளி வைத்தது.

அரச கட்டளை The Royal Decree

'*தானியேல் 3: 28-30*'

இம்மூன்று யூதர்களும் சந்தர்ப்பவாதிகளாக Time Servers இருந்திருப்பின் மெய்யான தேவனுடைய நாமம் பாபிலோனில் உயர்த்தப்பட்டிருக்காது, அவர்கள் பதவி உயர்த்தப் பட்டிருக்க முடியாது, ராஜாவினால் 'சமய சமரச ஆணை' Decree of Toleration வெளியிடப்பட்டிருக்காது. அற்புதத்தின் நோக்கம் அம்மூன்று மனிதருடைய விடுதலை மாத்திரமன்று, மாறாக ராஜாவுடைய உள்ளத்தின் உறைப்பு Conviction மற்றும் அவனது 'ராஜஆணை' பிறப்பிப்பு! அற்புதத்தின்மூலம் தேவன் கொண்டுவந்த சமயசமரச ஆணை நேபுகாத்நேச்சாரின் நாளின் புறஜாதிதேசங்களாலான ஓர் தற்காலிக மனப்பான்மைக்காக தேவனால் திட்டமிடப் பட்டதல்ல! மாறாக 'புறஜாதிகளது காலங்கள்' முழுமையின்போதும் யூதர்களுக்கு நேராய் சகல புறஜாதி தேசங்களுடையதாக இருக்கும்படி தேவன் வேண்டுகின்ற மனப்பான்மையாயுள்ளது. கிறிஸ்துவின் சகோதரர்களான யூதர்களை நடத்துமுறை Treatment-க்காக தேசங்கள் Nations நியாயத்தீர்ப்படையப் போகும் போது(*மத். 25:31-46*) யூதர்களை நோக்கிய அவர்களது மனப்பான்மைக்காக Attitude அவர் (இயேசு) புறஜாதி தேசங்கள் முழுமையையும் நியாயந்தீர்ப்பார்.

அற்புதத்தினுடைய மாதிரி போதனை
Typical Teaching of the Miracle

நாம் பார்த்துள்ளபடி நேபுகாத்நேச்சாருடைய பொன்சொரூபம் Golden Image வெளி. *13:13-15* -ன்

மிருகத்தினுடைய சொரூபத்தின் Image of the Beast ஓர் மாதிரியாயிருந்தது. இச்சொரூபம் இந்த காலசகாப்தத்தின் இறுதி நாட்களில் எருசலேமில் நிறுவப்படவுள்ளது; இதனால் நேபுகாத்நேச்சாரின் பொன் சொரூபத்தை வணங்காதிருந்த மூன்று எபிரேயப் புத்திரர் Three Hebrew Children, மீந்திருக்கும் யூதர்களான Jewish Remnant *1,44,000* முத்திரை இடப்பட்டோரின் ஓர் மாதிரியாகின்றனர். வெளி *7:3-8*-ன் இம் முத்திரையிடப்பட்டோர் மகா உபத்திரவ காலத்தினூடே சிறிதும் தீங்குறாது Unscathed கடந்து செல்லவுள்ளனர். இவர்களே பிற்பாடு ஓர் அக்கினிக்கலந்த Mingled with Fire கண்ணாடிக்கடலின் மீது நிற்கிறவர்களாக வெளிப்படுத்தல் புத்தகத்தின் அதி. *15: 1-3* -ல் காணப்படுகின்றனர். அவர்கள் கடந்து சென்றிருந்த அக்கினி சோதனைகளின் *(1* பேது. *1:7)* மாதிரியாக இது உள்ளது. அவர்கள் மகாஉபத்திரவக் காலத்தைவிட்டு வெளியே வந்திருந்தனர். எதினாலெனில், அவர்கள் மிருகத்தின் மேலும், அவனது சொரூபத்தின் மேலும், அவனது முத்திரையின் மேலும் வெற்றி அடைந்தவர்களாய் இருந்தனர். அவர்கள் இஸ்ரவேலரே! ஏனெனில் மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவரது புதியபாட்டை பாடுகிறார்கள். அப்பாட்டை மீட்கப்பட்ட இஸ்ரவேலரே பாடமுடியும்.

ஷாத்ராக், மேஷாக், அபெத்நெகோ மூவரும் விடுவிக்கப்பட்டது மட்டுமின்றி பதவிஉயர்வும் பெற்றனர். அதுபோல கடைசி நாளின் யூதீக மீந்திருப்போரும் Jewish Remnant பதவி உயர்த்தப்படுவர்; கிறிஸ்துவின் நல்லாயிர ராஜ்யத்தில் அதிகாரமும் செல்வாக்குமுரிய பதவிகள் அளிக்கப்படவுள்ளனர்.

‘விருட்சத்துச் சொப்பனம்’
The Tree Dream

‘அரச அறிவிப்புச் செய்தி’
The Proclamation

‘தானியேல் *4:1*’

‘ராஜாவாகிய நேபுகாத் நேச்சார் பூமி எங்கும் குடியிருக்கிற சகல ஜனத்தாருக்கும், ஜாதியாருக்கும், பாஷைக்காரருக்கும் எழுதுகிறது என்னவென்றால், உங்களுக்கு சமாதானம் பெருகக்கடவது; உன்னதமான தேவன் என்னிடத்தில் செய்த அடையாளங்களையும், அற்புதங்களையும் பிரசித்திப்படுத்துவது எனக்கு நன்மையாய்க் கண்டது. அவருடைய அடையாளங்கள் எவ்வளவு மகத்துவமும், அவருடைய அற்புதங்கள் எவ்வளவு வல்லமையுமாயிருக்கிறது. அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம் அவருடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக நிற்கும்’.

இந்த அதிகாரம் ‘பாபிலோனிய அரசு ஆவணம்’ Babylonian State Document. இது உலக முழுமைக்கும் ராஜா நேபுகாத் நேச்சாருடைய ஓர் ‘அரச அறிவிப்புச் செய்தி’யாய் உள்ளது. இது கி.மு.562-ல் பிறப்பிக்கப்பட்டது. அது அவனுடைய மூளை திறம்பிய பித்துப்பிடித்தலிலிருந்து Insanity மீண்டெழுந்த வருடம்! அது அவனுடைய மரணத்துக்கு ஒரு வருடம் முன்னர்! அது அவனது பெருமையின் பாவத்துக்கான ஓர் அறிக்கையாக செயல் குறிக்கப்பட்டது. அது அவனது மனப்பித்தின் Insanity காரணத்திற்கான அவனுடைய ஓர் விளக்கமாயிருந்தது Explanation; மற்றும் மகா உன்னதமான வருடைய Most High சேவைக்காக அவனது மன மாற்றத்தையும் Conversion விளக்குகிறது. இதனுடைய தொனி அவனுடைய முந்தைய எடுத்துரைப்புகளினின்று Utterances ஓர் முனைப்பான மாறுபாட்டுடனிருந்தது. வாழ்த்துரையில் ‘உங்களுக்குச்

சமாதானம் பெருகக்கடவது'என்பது ஓர் கிறிஸ்தவனுடைய வார்த்தைகளாயின. ஓர் புறசமயி ராஜாவின் உதடுகளிலிருந்து வருவது மிக விசித்திரமாயுள்ளது. அவனது வாழ்வு ஓர் உலகளாவிய சாம்ராஜ்யம் எழுப்புதற்கு நோக்கங்கொண்ட யுத்தங்களில் செலவிடப்பட்டது. ஆனாலோ, அவனுடைய சொப்பனங்கள் மற்றும் அனுபவம் அவனது ராஜ்யம் எக்காலத்தும் நீட்சிக்கவுள்ளதல்ல என்பதைக் கற்பித்தது. அவன் மகா உன்னத தேவனுடைய கல்ராஜ்யமே Stone Kingdom ஓர் நித்தியராஜ்யமென்றும், அவருடைய ராஜரீகம் Dominion-ஆளுகை தலைமுறைத் தலைமுறைக்கும் இருக்கவுள்ளது எனவும் கற்பிக்கப்பட்டான்.

அரச அறிவிப்புச் செய்தியின் முக்கிய பாகம்: ராஜா பெற்றிருந்த ஓர் சொப்பனம் மற்றும் அதின் அர்த்த விளக்கவுரை மற்றும் அவனது சொந்த அனுபவத்தில் அதின் நிறைவேறுகையின் ஓர் தொகுப்பை எடுத்தாள்கிறது.

ஓர் திகிலடைந்த ராஜா A Troubled King

'தானியேல் *4:4-7*'

அரச அறிவிப்புச் செய்தி தனிச்சிறப்புக்குரிய வார்த்தைகளைக் கொண்டு ஆரம்பிக்கிறது: 'நேபுகாத்நேச்சாராகிய நான் என் வீட்டிலே சவுக்கியமுள்ளவனாயிருந்து என் அரண்மனையிலே வாழ்ந்து கொண்டிருந்தேன்' (தானி.4:4). உவமையில் காணும் ஐசுவரியவான் போன்று அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற மெல்லிய வஸ்திரமும் தரித்து, அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். மற்றவர்களுடைய துன்பியல்களைச் சிறிதும் கவனியாதிருந்தான். ஏனெனில், அவனுடைய சிந்தனைகள் சுய-மையங்கொண்டவை Self Centred. தன் சொந்த மகத்துவத்தால் நிறைந்திருந்தான். அவன் இளைப்பாறி சவுக்கியமாயிருந்தான் At Rest: ஏனெனில், அவனுடைய எல்லா விரோதிகளையும் மேற்கொண்டு கீழடக்கியிருந்தான். யுத்தகளத்தின் இடர்களனைத்தோடும் அவன் பழக்கப்பட்டிருந்தான். அவைகளைப் பயமின்றி எதிர்ப்பட்டிருந்தான். இப்போதும் அவன் எந்த விரோதிக்கும் பயப்படாமல், அரண்மனையில் அமரிக்கையோடே இளைப்

பாறிக் கொண்டிருக்கையில், அவன் ஓர் சொப்பனத்தால் கலங்கடிக்கப்படுகிறான்.சொப்பனம் அவனது சாம்ராஜ்யத்தோடு சம்பந்தப்பட்டிருந்தால் அதிகபட்சமும் அவன் அதிகக் கவலைப்பட்டிருக்க மாட்டான் ஆனால், அது ஏதாவோர் வகையில் தன்னையே சம்பந்தப்பட்டிருந்ததை அவன் உணர்ந்தான். ஆகவே, அது பொருளளிப்பு செய்யப்பட அவன் கரிசனை அவா கொண்டான். ஆகவே, பாபிலோனின் ஞானிகளை அழைத்தனுப்பினான். இச்சமயம் அவன் தனது சொப்பனத்தை மறந்துவிடாது அதைத் திரும்ப எடுத்துக்கூறியபோதும், அவர்கள் முன்போலவே அவனுக்கு உதவாது தோற்றனர். பின்பு தானியேல் அக்காட்சிக் கட்டத்தில் தோன்றினார். அவர் எங்கிருந்தார் அல்லது முதலிலேயே அவர் ஏன் அழைக்கப்பட்டிருக்கவில்லை என்பது சொல்லப்பட வில்லை,'தானியேல் *4:8-9*'

சொப்பனம் The Dream

'தானியேல் *4:10-12*'

நேபுகாத் நேச்சார் 'விருட்சத்தின் காட்சி' அர்த்த மளிப்பது யாதுவென வியந்து கொண்டிருக்கையில், ஓர் காவலாளன் Watcher அல்லது பரிசுத்தவான் Holy One பரலோகத்தினின்று இறங்கி வரக் கண்டான். வசனம் *17*-ல் இருந்து பரலோகத்தில் 'காவலர்களது வழக்குமன்றம்' Court of the Watchers அல்லது 'பரிசுத்தவான்களது வழக்குமன்றம்' Court of the Holy என அறியப்படுகிற ஓர் வழக்குமன்றம் உள்ளது என நாம் அறிகிறோம். அந்த வழக்கு மன்றத்துக்கு நேபுகாத்நேச்சாரின் வழக்கு பிணைபெற எடுத்துச்சுட்டப்பட்டது Referred. அவ்வழக்குமன்றத்து ஓர் ஆணையினால் அவன் ஓர் மிருகமாக ஏழுவருடங்களுக்கு வாழக் கண்டனத் தீர்ப்படைந்தான் Condemned. உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்கு சித்தமானவனுக்கு அதைக்கொடுக்கிறார் என்று நரஜீவன்கள் அறியும்படிச் செய்ய இவ்வாணை நோக்கங்கொண்டிருந்தது. தானியேலின் புத்தகம் பூமிக்கும் ஆவி உலகத்துக்கும் Spirit World இடையேயுள்ள நெருங்கிய தொடர்பை வெளிப்படுத்துகிறது. அதிகாரம் *9:21*-ல் தானியேலுக்கு தூதன் காபிரியேலுடைய வருகைதருகை Visit

குறித்து வாசிக்கிறோம். *அதி.10:4-12*-ல் வேறு வானலோகத்து Heavenly உயிருருக்களுடைய Beings வருகைதருகை! எபேசியர்*6:11-12*-ல் தேவனுடைய முழு சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளும்படி நமக்குச் சொல்லப்படுகிறது. ஏனெனில் நாம் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் அல்ல (பூமிக்குரிய Earthly உயிருருக்களோடு); துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலத்திலுள்ள Heavenly பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் Spiritual Wickedness நமக்குப் போராட்டம் உண்டு.

வேத சத்தியங்களில் மூன்று வானங்கள் உள்ளனவாகச் சொல்லப்படுகிறது. முதலாவது நமது பூமியினுடைய வளிமண்டலம்Atmosphere; மூன்றாவது தேவன் தாபரிக்கின்ற பரலோகம் Heaven; இரண்டாவது ஓர் இடைவழிப்பட்ட வானம் Intermediate; அதிலே (இரண்டாவதில்) குடிகொண்டுள்ளதோ சாத்தானுடைய ராஜ்யம் Kingdom of Satan. அது பொல்லாத துரைத்தனங்களாலும்Principalities, தீய அதிகாரங்களாலும் Powers of Evil உள்ளடக்கப்பட்டுள்ளன. சாத்தான் ஆகாயத்து Prince of the Powers of the Air அதிகாரப்பிரபுவாகிறான். அவனது தடுப்புப் Obstructive பணியைச் செய்ய நியமிக்கப்பட்ட அனேகக் கீழ்ப்பட்ட Sub-Ordinate பிரபுக்கள் அவனுக்குண்டு. அவர்களில் இருவர் தானியேலால் குறிப்பிடப்பட்டுள்ளனர். பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி Prince of Persia *(தானி 10-13)* மற்றும் கிரேக்கு தேசத்தின் அதிபதி Prince of Grecia *(10:20)*. இதிலிருந்து சாத்தானுக்கு ஒவ்வொரு தேசத்திலும் அவனது பணியைக் காண்காணிக்க ஓர் நியமிக்கப்பட்ட பிரபு இருந்துள்ளதாகத் தோன்றுகிறது. இப்பிரபுக்கள் மிகப்பெரிதான வல்லமை மிக்கோராயிருக்கின்ற படியால் இவர்களை மேற்கொள்ளப் பரலோகச் சேனைகளுடைய தலைமைத் தளபதியான மிகாவேலெனும் பிரதான தூதனது Arch Angel வல்லமையும், பெலனும் வேண்டியதாயிருக்கின்றது. *தானி 10-13; யூதா.9; வெளி.12:7-9.* வான மண்டலங்களிலுள்ள பொல்லாத அதிகாரங்கள் மற்றும் பூமிக்குரிய அதிகாரங்களின் நடத்தைகள் சரிவரக் கட்டுப்படுத்தப்பட மற்றும் பணித்துறைநிலையில் Officially தீர்ப்புக் கூறப்பட பரலோகில் ஓர் நீதிபதிக்குகந்த

வழக்குமன்றம் Judicial Court உள்ளது. அதன் முன்பு அவர்களது வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன; அதையே தானியேலின் புத்தகம் காவலர்களுடைய வழக்குமன்றம் Court of the Watchers என அழைக்கிறது. அதினுடைய ஆணைகள் Decrees நேபுகாத்நேச்சாரின் காரியத்திலுள்ளது போல, பூமியின் மீது செயலாக்கப்படுகின்றன Executed.

நேபுகாத் நேச்சாரைக் கலங்கடிக்கப்பண்ணியது விருட்சத்தின் காட்சியன்று; மாறாகக் காவலனால் Watcher அல்லது பரிசுத்தவானால் அது (விருட்சம்) ஆளுருவாக்கப் பட்டதேயாம் Personification! 'அது' It எனும் பதம் 'அவன்' His எனும் தனியாள் பகிர்வு மறுபெயராய் Pronoun மாற்றப்பட்டதேயாகும்.

'தானியேல் *4:13-18*'

தானியேல் சொப்பனத்தைக் கேட்டபோது அவர் வெகுவாய் கலக்கமடைந்தார்; ஒரு மணி நேரத்துக்கு பேசக்கூடாதபடி மிகத்திகைப்படைந்தார் Astonished. சொப்பனத்தின் அர்த்தத்தினை அறியாததினாலல்ல; மாறாக, இன்னாத வெறுப்புமிக்க Un-Pleasant செய்தியை ராஜாவிடம் கூறுவதற்கு அச்சத்தால் பின்னிட்டார். எப்படியாயினும் சொப்பனத்தின் தனிப்பட்ட தன்மையை உணர்ந்தவனாய் காணப்பட்ட ராஜா தன்னிடம் அதைக்கூற அவர் (தானியேல்) பயப்படத் தேவையில்லை என்று உறுதியளிக்கவே பின்பு தானியேல், ராஜாமேல் வரவிருந்த நியாயத்தீர்ப்புக்கு அவனை ஆயத்தம்பண்ணும்படி கீழ்வருமாறு கூறினார்."என் ஆண்டவனே, அந்தச் சொப்பனம் உம்முடைய பகைவரிடத்திலும், அதின் அர்த்தம் உம்முடைய சத்துருக்களினிடத்திலும் பலிக்கக் கடவது"*(4:19)*. அதாவது உமதுமேல் வரவுள்ள தீங்கு Calamity உமது சத்துருக்கள்மீது விழட்டும் என விரும்புகிறேன். அது ஓர் ஞானமான பதிலாயும், பொருள்விளக்கத்துக்கு Interpretation வழி வகுப்பதாயும் அமைந்தது.

'தானியேல் *4:20-26*'

பொருள் விளக்கத்திலிருந்து அவனுடைய சொப்பனத்தின் அர்த்தத்தைத் தவறாகக் கருதக்கூடவில்லை; பின்பு, நேர்மையுள்ள

தீர்க்கனாயிருந்து அத்தருணத்தை ஆதாயப்படுத்தி ராஜா தனது பாவ வழிகளைத் தவிர்க்கும்படி ஆலோசனையளித்தார்.

'ஆகையால், ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக் கொண்டு, நீதியைச் செய்து, உமது பாவங்களையும், சிறுமையானவர்களுக்கு இரங்கி, உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்; அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம்'.

சொப்பனம் நிறைவேறுதலடைந்தது
The Dream Fulfilled

ஆனால், ராஜா தானியேலுடைய அறிவுரையை எடுத்துக் கொள்ளவில்லை; பின்னர், அவனைக் குறித்து முன்கூறப்பட்ட எல்லாம் நிறைவேற்றமடைந்தது என்ற தாழ்வுபடுத்தப்படுதலின் அறிக்கையை அவன் செய்யவேண்டியதாயிற்று. ஆனால், அது உடனடியாக வரவில்லை; தேவன் அவனுக்கு ஒரு வருடத்தினது கிருபையை ஈந்தார். தீர்ப்பு Sentence உடனடியாக செயல்படுத்தப்படாததால் தானியேல் தவறாக்கப்பட்டார் Mistaken அல்லது தேவன் மறந்து போய்விட்டிருப்பார் என நேபுகாத்நேச்சார் எண்ணியிருந்திருக்கலாம். ஆனால், பன்னிரண்டு மாதங்களின் இறுதியில் ராஜா தனது மாளிகையில் உலாவிக் கொண்டிருக்கையில், அவனது மாளிகைப் பலகணி வழியாக அவன்முன்னதாகப் பரவி வியாபித்திருந்த பாபிலோன் மகா நகரை கண்ணுற்ற போது, அவன் தனது பெருமையில் உணர்ச்சி வியப்பொலி எழுப்பிக் கூக்குரலிட்டதாவது:

'இது என் வல்லமையின் பராக்கிரமத்தால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா' என்று! (தானி 4:30)

அது சாவுக்குரிய வேளையாயிற்று Fatal Moment. முதனிலைத் தேர்வின் நேரம் Probation உடனியாகத் தொடங்கியது.

'தானியேல் 4:31-32'

தீர்ப்பு உடனடியாக செயலாக்கப்பட்டது. கிருபையின்

இன்னொரு தருணம் ராஜாவுக்கு கொடுக்கப்படவில்லை.

‘அந்நேரமே, இந்த வார்த்தை நேபுகாத் நேச்சாரிடத்தில் நிறைவேறிற்று; அவன் மனுஷரினின்று தள்ளப்பட்டு, மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான்; அவனுடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப் போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப்போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது’

‘தானி. 4:33’

நேபுகாத் நேச்சாருக்கு நேரிட்ட புத்திமாறாட்டம்/பித்து Insanity ‘lycanthropy’ என அழைக்கப்படும் ஓர் நோயாகும். ‘தான் விலங்காய்ப் போய்விட்டதாக மருட்சிகொண்டு அதைப்போல நடக்கின்ற நோயாளிக்குரிய’ ஓர் நோயாகும். அதில் நோயாளி தன்னை ஓர் எருது Ox என மனோபாவித்தான். அவன் ஓரிடத்தே தனிமைப்படுத்தப்படவில்லை; மாறாக பயிர்வெளிகளில் அலைவதற்கு, ஒருகால் மாளிகையின் புல்தரையில் மேயவிடப்பட்டான். ஏனெனில் மாடுகளைப் போல புல்லை மேய்ந்தான் என சொல்லப்படுகிறது. அவன் சரீரம் ஆகாயத்துப் பனியில் நனைந்தது. மருட்சி மயக்கத்தினை முழுமைப்படுத்த அவன் அதிகபட்சம் நாலு கால்களால் நடந்து திரிந்தான்.

நேபுகாத்நேச்சாரின் புத்திமாறாட்டம் ஏழு வருடங்களுக்கு நீடித்தது. ஏனெனில் ‘ஏழு காலங்கள்’ Seven Times (தானி.4:32) அர்த்தப்படுத்துவது அதையே! காலவரையறை Period தீர்க்கதரிசன தனிச்சிறப்பு இல்லாமல் இல்லை; ‘புறஜாதி மக்களது காலங்கள்’ Times of the Gentiles காலநீட்சியை இது அடையாளப்படுத்துவது இல்லை. ஏனெனில் ஓர் காலம் Time 360 வருடங்கள் கொண்ட ஓர் காலகட்டமன்று. மாறாக ‘ஒரு வருடம்’ மாத்திரமே! அதி.9-ஐப் பார்க்கவும். ‘ஏழுகாலங்கள்’ அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியின் ஏழுவருடங்களை முன் நிழலிடுகிறது. அல்லது தானியேலது எழுபது வாரங்களின் எழுபதாவது வாரத்தை முன் குறித்துக்காட்டுகிறது. அதாவது தடைசெய்கிறவர் - பரிசுத்த ஆவியானவர் - பூமியைவிட்டு சபையுடன் கூடத் திரும்பிச்செல்கைக்குப் பின்வரும் வாரம்! அதில் அவ்வமயம் மனிதர் தங்கள் புத்திமாறாட்டத்தில் விலங்கு

நடத்தையில் Beastiality மிருகங்களைப் போல நடந்துகொள்வர் Act; அந்திக்கிறிஸ்துவுக்கு தங்கள் சேவையையும், தொழுகையையும் அளிப்பர்; அவனே யோவான் தனது வெளிப்படுத்தலில் அழைக்கிற 'மிருகம்' The Beast. ஏழு காலங்கள் (வருடங்கள்) முடிவில் நேபுகாத் நேச்சாரின் புத்தி அவனுக்கு மீட்டாக்கப்பட்டது.

'ராஜாவினுடைய மீட்டெழுகை'
The King's Recovery

'தானி *4:34-35*'

ஏழு வருடங்களின் முடிவில் நேபுகாத் நேச்சார் தனது கண்களை வானத்துக்கு ஏறெடுத்தான். ஓர் மிருகம் அதைச் செய்வதில்லை. அது, குறிப்பாக ஓர் எருது Ox, கீழ்நோக்கிப் பார்க்கிறது. நேபுகாத் நேச்சார் எதை மனத்துட் கொண்டிருந்தானெனில் Meant, அவன் ஜெபத்தில் தேவனை மேலே ஏறெடுத்துப்பார்த்து, அவருடைய மகோன்னதத்தை Supremacy ஒப்புக்கொண்டான் Acknowleged என்பதையே! இதைச்செய்கையில் அவனுடைய புத்தித் திருப்பி அளிக்கப்பட்டது; அவன் தனது ராஜாவுக்குரியப் பணிகளை மீளத் தொடங்குவதற்குத் தகுதியடைந்தான்.

'தானியேல் *4:36-37*'

நேபுகாத் நேச்சாருடைய ராஜரீக உரிமைகளுக்கு அவனது மீட்டாக்கம், அவனது புத்திமாறாட்டம் ஏழுவருடங்களுக்கு மாத்திரமே நீட்சிக்க வேண்டும் என்கிற வாக்குத்தத்தத்தினுடைய நிறைவேறுதலின்படியிருந்தது. அதன் பின்பு அவனுடைய ராஜ்யம் கட்டாயமாக உறுதியாக்கப்பட வேண்டும்; அல்லது அவனுக்கு மீட்டளிப்புச் செய்யப்படவேண்டியது.(4:26); அவனது மனப்பிறழ்வின் போது அவன் ஸ்தாபனத்தில் பகர ஆளுநராக அவனுடைய மகன் Evil-Merodach ஆட்சி செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவன் ஆலோசகர் களாலும், பிரபுக்களாலும் மரியாதையோடு திரும்ப ஏற்றுக்கொள்ளப்பட்டான் எனும் மெய்மை அவர்கள்

அவனுடைய மனப்பித்தைத் தற்காலத்துக்குரியது மாத்திரமே என்று எண்ணிக் கண்ணோக்கினர். அப்படியிருந்தும், அது உண்மையானால், அவனை அரண்மனையிலேயே தனிமைப்படுத்தி வைத்திராதிருந்தது ஓர் வினோதமாய்க் காணப்படுகிறது; அதாவது மனிதரது நடமாட்டப்பகுதியை விட்டு தூரமாய் வயல்வெளிக்குள் துரத்திவிடுதற்குப் பதிலாக! இதுவே வேத எழுத்துக்களில் நேபுகாத்நேச்சாரைக் குறித்துக் கடைசியாக நாம் வாசிக்கிறதாயுள்ளது. அவன் அரியணைக்கு மீட்டாக்கம் பெற்றபின்னர் சுமார் ஒருவருடம் மட்டுமே உயிர்வாழ்ந்தார். ஆனால், அவ்வருடத்தில்தான் அதிகப்படியான மேன்மைகள் அவன்மேல் குவிக்கப்பட்டன; அதில் அவன் தேவனை மகிமைப்படுத்தினான். ஓர் சிறிதுகால நோய்க்குப்பின் கி.மு. 561-ல் அவன் மரித்தான். அவன் குமாரனால் Evil-Merodach பின் வாரிசாகத் தொடரப்பட்டான்.

அதிகாரம் ஐந்து

பாபிலோனின் வீழ்ச்சி
The Fall of Babylon

பாபிலோன் நகரம்
The City of Babylon

நிம்ரோத் Nirod பாபிலோனை அஸ்திபாரமிட்டு நிறுவியவனாயிருந்தான் Founder. அவன் நோவாவின் கொள்ளுப்பேரனாய் (Great Grand Son - பேரனின் மகன்) இருந்தான். கிறிஸ்துவுக்கு, *2000* வருடங்களுக்கு முன்னுள்ளவனாயிருந்தான்.

'கூஷ் நிம்ரோதைப் பெற்றான். இவன் பூமியிலே பராக்கிரமசாலியானான்; இவன் கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனாயிருந்தான். ஆகையால் கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனான நிம்ரோதைப்போல என்னும் வழக்கச்சொல் உண்டாயிற்று. சிநேயார் தேசத்திலுள்ள பாபேல், ஏரேக், அக்காத், கல்னே என்னும் இடங்கள் அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதி ஸ்தானங்கள்' (ஆதி. *10: 8-10*).

நிம்ரோத் ஓர் காமியனாயிருந்தான் Hamite. நினிவே Nineveh சேமின் ஓர் மகனான அசூரால் Asshur அஸ்திபாரமிட்டு நிறுவப்பட்டது. ஆதி.*10:11-22*. நினிவே Nineveh அசீரியாவின் Assyria தலைநகராயிற்று. சுமார் கி.மு. *1270*-ல் அசீரிய ராஜாக்கள் Assyrian Kings கல்தேயா அல்லது பாபிலோனியாவுக்கு Babylonia மேலாட்சியாளர் Masters ஆயினர். பாபிலோன் Babylon அதற்கு தலைநகராயிற்று. அநேக நூற்றாண்டுகளாக பாபிலோனின் சரித்திரம் நினிவேயின் சரித்திரத்தால் நிழலடிக்கப்பட்டது. அசீரியாவுடைய Tiglath - Pileser -ன் காலத்தே நெபுநாசர் Nabonassar கி.மு. *747*-ல் பாபிலோனின் அரியணை ஏறினான். சுமார் கி.மு. *720* -ல் Berodach - Baladan பாபிலோனின் அரசனானான். அவன் யூதேயா ராஜாவான எசேக்கியாவுக்கு Hezekiah அரசாங்க தூதுவர்களை அனுப்பினான். *2* ராஜா.

20:12-18; ஏசா39: 1-7. சில வருடங்கள் கழித்து Sargon எனும் அசீரியாவின் ராஜா பாபிலோன் ராஜா Berodach - Baladan வை முறியடித்து சிங்காசனமிழக்கச் செய்தான். Dethroned. பாபிலோனின் கீழடங்கலை சனகரீப் Sennacherib பூர்த்தியடைவித்தான். அத்தோடு பாபிலோனை சுமார் கி.மு. 690-ல் அசீரிய சாம்ராஜ்யத்துடன் Assyrian Kingdom சேர்த்திணைத்தான் Annexed.

நினிவேயின் மீது வெற்றி மற்றும் அசீரிய சாம்ராஜ்யத்தின் கவிழ்த்துவீழ்த்தப்படுகை மேதியாவின் The Mede 'Cyaxeres' மற்றும் அவனது கூட்டாளியும், பாபிலோனின் கிளர்ச்சித் தலைமை ஆளுநருமான The Rebellious Governor of Babylon 'நெபோபொலாசர்' Nebopolassar என்போரால் சுமார் கி.மு. 625-ல் நிறைவேற்றமடைந்தது. இதன்காரணமாக Nebopolassar பாபிலோனிய சாம்ராஜ்யத்தை அடித்தளமிட்டு நிறுவக் Found கூடியதாயிற்று. அவன் கி.மு. 625 முதல் கி.மு. 605 வரை அரசாண்டான். அவன் அவனுடைய அதிக பிரசித்திப்பெற்ற நேபுகாத்நேச்சாரால் பின்வாரிசாகத் தொடரப்பட்டான்; பூர்வீக காலங்களின் தலைசிறந்த உன்னத ராஜாவான இவரே பாபிலோன் நகரை உலகமே அதுவரைக் கண்டிராத மகோன்னத நகரமாக்கும்படி அதை மீள எடுப்பித்துக் கட்டி அழகுப்படுத்தினான். ஒவ்வோர் பக்கத்துக்கு 15 மைல்கள் கொண்ட சரிசமசதுரமாக பாபிலோன் நகர் கட்டப்பட்டது, சுற்றளவு 60 மைல்கள் கொண்டது. இது 87 அடி கனம் கொண்ட ஓர் செங்கல் சுவரால் சூழப்பட்டது. Herodotus-ன் படி அச்சுவர் 350 அடி உயரமானது. சுவரின் மீது 250 கோபுரங்கள் இருந்தன. அது இரதங்கள் இணையாக ஓட Drive abreast அனுமதிக்குமளவு சுவரின்மேல் அகலம் போதுமான தாயிற்று. சுவரைச் சூழ வெளியே ஓர் பரந்த அகழி அல்லது ஓடை இருந்தது. ஆறு ஐப்பிராத்து நதிநீரால் நிரப்பப் பட்டிருந்தது. இழுத்துச்சுருக்குப் பாலங்கள் Draw - Bridges அகழியின் குறுக்கே கோட்டைவாயில்கள் எதிரே அமைக்கப் பட்டன. கோட்டைச்சுவருக்கு உள்ளே, இன்னொரு சுவர் அதிக இடைவெளியில்லாது , அதிக தரம் குறைவில்லாது ஆனால் சிறிது குறைந்த கனமாக நகரத்தைச் சுற்றி உள்பக்கம் நீட்சிசெய்தது. 150அடி அகலமான இருபத்தைந்து மகோன்னத மரம்பயில்

சாலைகள் Avenues வடக்கு தொடங்கி தெற்குவரை நகரத்தினூடே கடந்தன. அதே எண்ணங்களிலான சாலைகள் கிழக்கு மேற்காக முன்னுள்ளவைகளுக்கு நேர்குறுக்கான செங்கோணத்தில் கடக்கவே, ஒவ்வொரு பக்கமும் ஓர் மைலின் 3/5 (ஐந்தில் மூன்று கொண்ட) 676 மாபெரும் சமசதுரங்கள் உருவாக்கப்பட்டன. ஓர் பரந்த மரம்பயில் சாலைகூட உள் சுவர்களுக்குள் பக்கம் ஆனால் அருகாமையில் நகரை சுற்றி ஓடீற்று. அதனுள் குறுக்காக இருதிசைகளிலும் ஓடுகின்ற சாலைகள் முடிவடைந்தன. இக்குறுக்குசாலைகளின் முடிவுகளில் நகரத்து சுற்று சுவர்களில் வெண்கலத்தாலான மகோன்னதமாக பளப்பளப்பான இரு மடிப்புகளாலான வாயில்கள் கட்டப்பட்டன. அவை திறக்கப்படும்போதும் பூட்டப்படும் போதும் சூரிய உதயத்திலும் அஸ்தமனத்திலும் சுடரொளி இலைகள் போன்று பிரகாசித்தன.

ஐப்பிராத்து நதியால் நகரம் இரு சரிசம பாகங்களாக பிரிக்கப்பட்டன. அது நகருக்கு மூலைவாட்டாக குறுக்கிடும்படி ஓடியது. அதன் கரையோரங்கள் சுவரெழுப்பப்பட்டன. அச்சுவர்கள் வெண்கலவாயில்களால் பிரதான சாலைகள் சந்திப்பிடங்களில் துளைத்து பொருத்தப்பட்டன. இந்நதிக்கரைச் சுவர்களின் வெளியே அவைகளுக்கும் நதிக்குமிடையே அழகிய கப்பல்துறை மேடைகள் Wharves நதியின் ஒவ்வொரு பக்கத்தையும் நகரத்துள்ளே வரியிட்டு நிரப்பியது. தோணித்துறை படகுகள் Ferry Boats ஒவ்வொரு பிரதான சாலைகளது ஆற்றுப்பகுதியிலும் ஆற்றைக்கடந்தன. அதோடு நடுமைய பிரதான சாலைகடருமிடத்தே ஓர் மகோன்னத பாலம் ஆற்றை குறுக்கே கடர நீட்சித்தது Spanned. அதின் இரு முடிவுகள் ஒவ்வொன்றிலும் ஓர் அழகிய மாளிகை இருந்தது. இம்மாளிகைகள் நிலத்தடி சுரங்கப்பாதையால் நதியின் படுகைக்கு அடியில் இணைக்கப்பட்டன. இச்சுரங்கப் பாதையினுள், பல வெவ்வேறு இடங்களில் முழுதும் வெண்கலத்தாலான நிறைவான பெருவிருந்து அறைகள் கட்டப்பட்டன. இம்மாளிகைகளின் ஒன்றினருகாமையில் 'பேல் கோபுரம்' நின்றது Tower of Bel.

இப்பேல் கோபுரம் எட்டு கோபுரங்களை ஒன்றின்மேல்

ஒன்றாகக் கொண்டது. ஒவ்வொரு கோபுரமும் 75அடி உயரம் கொண்டது அதன் உச்சிக்கு செல்லுவதற்கு அதன் வெளிப்பக்கத்தே ஓர் சுற்றி வளைந்து செல்லும் Winding Staircase படிக்கட்டு வழி இருந்தது. இவ்வுச்சி அதன் மேலிருந்த தொழுகையிடத்தோடு Chapel கூட ஓர் 660 அடி உயரத்தை அடைய எழும்புகிறது. இத்தொழுகையிடம் உலகத்திலேயே எந்தவொரு தொழுகையிடத்தேயுமுள்ள மிக உச்ச விலையேறப்பெற்ற தட்டுமுட்டுப் பொருட்களை உள்ளடக்கியது. 45 அடி உயரமான 'ஓர் பொன்னாலான சிலை' Golden Image ஒன்றே $17,500,000 டாலர்கள் மதிப்பிலானது. தொழுகைக்கு பயன்படுத்தப்பட்ட புனித பணிமுட்டு பாத்திரங்கள் முழுமையும் $200,000,000 டாலர்கள் மதிப்பிலானதாக கணக்கிடப்பட்டன. பிரசித்திப்பெற்ற உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றான 'தொங்கு தோட்டங்கள்' Hanging Gardens கூட பாபிலோன் உள்ளடக்கியிருந்தது. இந்த 'தோட்டங்கள்' 400அடி சமசதுரமாயிருந்தது. அடுக்குத்தள கட்டுமானமாக ஒன்றன்மேல் ஒன்றாக 350அடி உயரத்துக்கு எழுப்பப்பட்டது. பத்துஅடி அகலங்கொண்ட படிக்கட்டுகளால் எட்டப்பட்டன. ஒவ்வொரு அடுக்குத்தளத்து மேல்மட்டமும் மாபெரும் கற்பாளங்களால் பாவிமூடப்பட்டது. அப்பாளங்கள் மீது ஓர் நாணற்புல் மெத்தை வைக்கப்பட்டது; அதன்மீது ஓர் கனமிக்க நிலக்கீல் படுகை அடுக்கு-Layer! அடுத்தது சிமிட்டியால் சேர்த்திணைக்கப்பட்ட செங்கல்களாலான இரு தளவரிசைகள் Two Courses! கடைசியாக ஈயத்தகடுகள் கசிவுகளைத் தடுக்க! பின்பு முழுவதும் மண்ணால் மூடப்பட்டது. அதில் தோட்டப் புதர்ச்செடித்தொகுதி Shrubbery மற்றும் பெரிய மரங்கள் நடப்பட்டன. முழுமையும் சேர்ந்து ஓர் தூரப்பார்வைக்கு ஓர் காடுமூடிய மலைப்போன்று காட்சியளித்தது. ஐப்பிராத்து நதி சமமட்டவெளியே அது ஓர் அற்புதமான காட்சிக்குரியதாயிற்று.

இத்'தோட்டங்கள்' நேபுகாத்நேச்சாரால் தனது மனைவியை பிரீதிப்படுத்துவதற்கென கட்டி எழுப்பப்பட்டன: அவள் மலை நிறைந்த மேதியா நாட்டு ராஜாவான Cyaxaresன் மகளான Amyitis. அவள் இவ்வாறான சூழ்நிலைகளோடு அதிக திருப்தியடையும்படி செய்யப்பட்டது. நகரத்தின் மீதபகுதி

இம்மாளிகைகள், கோபுரங்கள் மற்றும் தொங்கு தோட்டங்களுக்கு ஒப்பனையாக அதின் மகிமையிலும் உச்சக்கவர்ச்சியிலும் விளங்கியது. இது அனேக அழகிய பூங்காக்கள் உள்ளடக்கி இருந்தது. உழுது பண்படுத்தவுள்ள காலிநிலங்களும் மிகுதியாயிருந்தன: அதின்மூலம் 1,000,000 -க்குமேலான ஜனத்தொகைக் கொண்ட குடியிருப்பார்களை போஷிக்கப்பட! அக்குடிமக்களது தன்மை மற்றும் அதின் சரித்திரத்து உன்னத நிலையில் அதின் அதிகாரிகளது தன்மை பெல்ஷாத்சாரின் Belshazzar's விருந்தின் விவரணத்தில் காணப்படுகிறது, இதற்கு முன்போ அல்லது அதன்பின்போ இப்பூமி இதற் கிணையானதொன்றை காணவில்லை. தீர்க்கண் ஏசாயா அதைப்பற்றி கூறும்போது 'ராஜ்யங்களுள் அலங்காரமும், கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோன் என்கிறார்'. ஏசாயா 13:19

பெல்ஷாத்சாரது விருந்து Belshazzar's Feast

'தானியேல் 5:1-4'

நேபுகாத்நேச்சார் அவனது மரணத்தோடு கி.மு. 561 -ல் அவனது குமாரன் Evil - Merodach 'தீய மெரடோக்' பின்வாரிசாக தொடரப்பட்டான். அவன் உடன்தானே யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனை Jehoiachin சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கி, அவனைத் தன்னுடன் நித்தம் போஜனம் பண்ணும்படிச் செய்தான். 2ராஜா. 25:27-30; ஏரே. 52:31-34. இரு வருடங்களது ஓர் ஆட்சிக்குப்பின்பு Evil Merodach அவனுடைய சதிக்காரர்களால் Conspirators மரணத்துக்கு கையளிக்கப்பட்டான் Put to Death. இச்சதிக்காரர்கள் அவனுடைய மைத்துனன் Brother-in-Law Neriglissar தலைமையில் இக்காரியத்தை நிறைவேற்றினர். பின்னர் Neriglissar அரியணை ஏறினான். சுமார் நான்கு வருடங்கள் அரசாண்டான். அவன் கி.மு. 556-ல் யுத்தத்தில் கொல்லப்பட்டான். அவனுடைய குமாரன் மற்றும் வாரிசாளன் ஓர் ஏலா மூளைத்தளர்ச்சியுடைய Imbecile பிள்ளையான Laborosoarchod என்பவன் ஒரு வருடத்துக்கு குறைவாக ராஜாவாயிருந்த பின் அடித்துக்கொல்லப்பட்டான். அவனுடைய சிங்காசனம் ஓர் நெறிமீறி உரிமையாளனும் நேபுகாத்நேச்சாரது இன்னொரு

மைத்துனனுமான Nabonidus (அல்லது) Nabonnaid-ஆல் பிடிக்கப்பட்டது. Neriglissarருடைய விதவையை Widow விவாகம் பண்ணியிருந்த அவன் கி.மு. 555முதல் பாபிலோனின் வீழ்ச்சி கி.மு.538 வரை அரசாண்டான்.

தானியேலின்படி Nabonidus அல்ல, பெல்ஷாத்சாரே பாபிலோன் வீழ்ச்சியின்போது அதின் ராஜாவாயிருந்தான். ஆனால் தானியேலுக்கு 250 வருடங்களுக்கு பின்னர் வாழ்ந்த Berosus எனும் புறச்சமயத்தின வரலாற்றாசிரியன் Heathen Historian தனது பாபிலோன் ராஜாக்கள் பட்டியலில் பெல்ஷாத்சார் பெயரை விட்டுவிட்டு Nebonnaid (Nebonidus) பெயரை பாபிலோனின் கடைசிராஜாவாக குறிப்பிடுகிறார். இதன் காரணமாக தர்க்க வல்லுனர் Critics தானியேல் புத்தகத்தினுடைய உண்மைத் தன்மையை / நம்பகத் தன்மையை Truthfulness எதிரிட்டுத் தாக்குகின்றனர்; ஆனால் பாபிலோனியாவின் அழிவுகளினின்று எடுக்கப்பட்ட ஏராளமான களிமண் பட்டயத்தகடுகளின் Clay Tablets மறைகுறியெழுத்து மூலப்பொருளளிப்பிலிருந்து அதன் நம்பகத்தன்மை மெய்பித்துக்காட்டப்படுகிறது. அவைகளின் மீது பெல்ஷாருசாரின் Belsharuzzar பெயர் Nabonnaid-ன் குமாரனாக மற்றும் அவனோடு அரசாங்கத்தில் பங்கீடுடையவனாக Sharing the Government அடிக்கடி Frequently வெளியாக்கப்படுகிறது. இதிலிருந்து பட்டயத்தகடுகளின் பெல்ஷாருசார் Belsharuzzar வேதாகமத்தின் பெல்ஷாத்சார் Belshazzar என்றும் தானியேல் சரித்திரத்தின்படி சரியானதே என்றும் நாம் காண்கிறோம்.

தீர்க்கன் எரேமியா முன்னுரைத்திருந்ததாவது 'அவனுடைய தேசத்துக்காலம் வருகிறவரையில் சகல ஜாதிகளும் அவனையும் (நேபுகாத்நேச்சார்) அவனுடைய புத்திர பௌத்திரரையும் சேவிப்பார்கள்' எரே. 27:7. அதின்படி பெல்ஷாத்சார் நேபுகாத்நேச்சார் உடைய ஓர் பேரனாயிருந்திருக்க வேண்டும் A Grand Son. அதாவது நேபுகாத்நேச்சாருடைய ஓர் மகனுடைய ஓர் மகனா யிருந்தானேயின்றி ஓர் மகளுடையதல்ல! ஆனால் நாம் பார்த்துள்ளபடி பெல்ஷாத்சாரின் தகப்பனான பிரசித்திப்பெற்ற நேபோனிடஸ் Nabonidus நேபுகாத்நேச்சாரின் ஓர் மகனாயில்லை.

அப்படியானால் காணப்படும் ஒரேத் தீர்வு யாதெனில் பெல்ஷாத்சார் நேபுகாத்நேச்சாரின் ஓர் மகனுடைய ஓர் மகனாயிருந்து அவன் நேபோனிடஸால் அரசக்குடும்பத் தோடு Royal Family இணைக்கத் தன்வயப்படுத்த Conciliate தத்து எடுத்துக்கொள்ளப்பட்டான் Adopted. அவனது தத்தெடுப்பின் Adoption காரணமாக நெபோனிடஸின் சட்டப்படி Legally குமாரனாக அவன் அழைக்கப்படக்கூடிற்று.

இந்த அதிகாரத்தின் நிகழ்வுகள் நடந்தேறிய காலத்தே பெல்ஷாத்சார் தனது தகப்பனார் நெபோனிடசுடன் ஒருங்கிணைந்து Conjunction ஆண்டுக்கொண்டிருந்தான். நெபோனிடஸ் சில இராணுவ படையெழுச்சி மீது தூரமான வேளையில் பாபிலோன் நகரின் பொறுப்பை பெல்ஷாத்சாரிடம் விட்டுச் சென்றான். பாபிலோனில் விருந்துகள் அசாதாரண மானவையல்ல! ஆனால் பெல்ஷாத்சாரின் விருந்தோ சாதாரண விருந்தாயில்லை. இதற்கொத்த எந்த விருந்தும் சரித்திரம் முழுமையிலும் பதிவுச் செய்யப்படவில்லை. அதற்கருகாமையில் நெருங்கி வரக்கூடியதாயிருந்த ஒரே விருந்து பெர்சியன் ராஜாவான ஆகாஸ்வேரு Ahasuerus-வால் சூசான் அரண்மனையில் வைத்து கி.மு. 521-ல் அவனுடைய ராஜ்யத்தின் மாகாணங்களில் உள்ள 120 பிரபுக்களுக்குக் கொடுக்கப்பட்ட விருந்தேயாம். அது எஸ்தரின் முதல் அதிகாரத்தில் பதிவுச் செய்யப்பட்டுள்ளது. பெல்ஷாத்சாரின் விருந்து பாபிலோனின் சரித்திரத்தில் ஓர் திருப்பு முனையாயிருந்தது. அது பேருருவச்சிலையின் பொன்னாலான தலையிலிருந்து வெள்ளியாலான புயங்கள் மற்றும் மார்புக்குக் கடந்துசெல்கையை குறிப்பீடு செய்வதாயிற்று. மேலுமாக புறஜாதியாளுகையின் சிங்கத்திலிருந்து கரடி Bear படி நிலைக்கு கடந்து செல்கை! Transition தானி7:1,5. இது கி.மு. 538 -ல் நேபுகாத்நேச்சார் மரித்து 23 வருடங்கள் கழித்து நடந்தேறியது, இவ்வருடங்கள் யூதர்களுடன் சம்மந்தப்படாதிருந்த நிகழ்ச்சிகள் கொண்டிருந்தமையால் அவை அமைதியாக விட்டுவிடப் பட்டுள்ளன; தானியேலும்கூட காட்சியிலிருந்து விலகிக் கொண்டுள்ளார் ஆனால் அவர் தேவனால் மறக்கப்படவில்லை. வரவுள்ள நிகழ்வுகளைக் குறித்தக் காட்சிகளை Visions அவருக்கு அளிக்கிறார்.

பெல்ஷாத்சாரின் விருந்து அவமதிப்பின் மற்றும் எதிர்ப்பின் ஆவியோடு கொடுக்கப்பட்டது. பாபிலோன் நகர் முற்றுகை நிலையிலிருந்தது. அதினுடைய சுவர்களின் வெளியே மேதியர் மற்றும் பெர்சியருடைய சேனைகள் சூழ்ந்து பாளயமிறங்கின. ஆனால் பெல்ஷாத்சார் பத்திரமாயிருப்பதாய் உணர்ந்தான். ஏனெனில் இழுத்துயர்த்தும் பாலங்கள் Draw Bridges மேலிழுக்கப்பட்டுவிட்டன. வெண்கல வாயில்கள் மூடப்பட்டு தாழ்ப்பாளிடப்பட்டன. நகருடைய புறச்சுவர்கள் ஊடுருவ முடியாதவையென பெல்ஷாத்சார் அறிந்திருந்தார். மிக உயர்ந்த சுவர்களின் மீதுள்ள படைவீரர்கள் அவர்களுடைய ஸ்தானத்தினின்று வாயில்களை உருக்குலையுமாறு தகர்க்க முனையும் எவரையும் அழித்துப்போட இயலுபவர்களென அவன் நம்பிக்கையோடிருந்தான். அநேக வருடங்களின் முற்றுகையையும் சமாளிக்க நகரானது போதுமான உணவுப் பண்டகப் பொருட்களைக் கொண்டிருந்தது Provisioned. மேலும் நகர்ச்சுவரினுள்ளான உழவுக்குரிய நிலத்தைக்கொண்டு நகரின் பிடிப்பு Capture குறிக்கமுடியா காலத்துக்கு தள்ளிப் போடப்படக்கூடியது. ஆகவே முற்றுகையிடுகின்ற சேனையை அவமதிக்குமுகனாய் பெல்ஷாத்சார் தனது மிகப்பெரிய விருந்தை அளித்தான். விருந்தின் தன்மையை விருந்தாளிகளது நடத்தையிலிருந்து காணப்படுகிறது, 'அவர்கள் திராட்சை ரசம் குடித்து, பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், இரும்பும் (நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தை நினைவுப்படுத்தும்) மரமும் கல்லுமாகிய தேவர்களை புகழ்ந்தார்கள்'. தானி. 5:4. அது மிகுசிற்றின்ப இழிவான, பெருங்குடி மயக்கம் மற்றும் விக்கிரகாராதனையின் ஓர் விருந்தாயிருந்தது.

விருந்தின் மத்தியில், பெல்ஷாத்சார் ராஜா திராட்சை ரசத்தால் அவனது மூளை வெறிமயக்கமுற்ற நிலையில், ஏதாமோர் தனிவேறான, உணர்ச்சிவசமான காரியம் செய்யும் ஆவேற்றத்தில் அவனது முந்தைய தூஷணத்துக்குரிய மற்றும் தீட்டாக்கும் சகல கிரியைகளையும் மிஞ்சியதாய் அவனுடைய தாத்தா நேபுகாத்நேச்சார் எருசலேமின் தேவாலயத்திலிருந்து 68 வருடங்களுக்கு முன்னர் கொண்டுவந்த பொன் மற்றும் வெள்ளியாலான பரிசுத்த பாத்திரங்களை வெறி விருந்துண்ணும் சாலைக்குள் கொண்டுவரப்படும்படி ஆணையிடுவித்தான்.

இப்பாத்திரங்கள் உள்ளே கொண்டுவரப்பட்டபோது வெறி கொண்ட விருந்தாளிகள் மத்தியில் பகர்ந்துக் கொடுக்கப் பட்டன. அவைகளில் அவர்கள் திராட்சைரசத்தை பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, மரம் மற்றும் கல்களினாலான தேவர்களுக்காக குடித்து இவ்விதமாக பரிசுத்தத் தேவனுடைய பாத்திரங்களை தீட்டாக்கிப்போட்டனர். அதுவே மரணத்தின் வேளையாய், விருந்தின் திருப்புமுனையாயிற்று. அது பாபிலோனது அக்கிரமத்தின் பாத்திரத்தை விளிம்புவரை நிரப்பீற்று. அவளுடைய அழிவு Doom முத்திரிக்கப்பட்டது.

தேவனுடைய விரல் The Finger of God

'தானியேல் *5:5-6*'

தேவனுடைய குறுக்கீட்டை அவர்களுடைய துன்மார்க்க மதுபான விருந்தின்போது அறிவிக்கும் வெளிப்பாடாக இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒளியோ, காதடைக்கும் இடிமுழக்க சப்தமோ குடித்து வெறித்த அக்கும்பலை திடுக்கிடச் செய்யவில்லை. மாறாக இரவின் மறைவிடத்தை விட்டு Sleeve of the Night தேவனுடைய கரம் தோன்றியது. அதின் விரல் புதிரான மொழிகளில், கொளுத்தப்பட்ட விளக்குத்தண்டின் எதிரேயிருந்த சுவரின்மீது, குழுமியிருந்த விருந்தாளிகள் அனைவராலும் தாராளமாய் பார்க்கப்படும்படியாய் பாபிலோனது ஊழ் அழிவை Doom நிசப்தமாய் எழுதீற்று. மதிமயக்கத்தாலான மனிதனுடைய மனோபாவனையின் மாயக்காட்சியாயில்லாதபடி துடைத்தழிக்கப்படாதுவாறு அவ்வெழுத்து சுவரின்மீது நிலையாய் பதிந்திருந்தது Remained Fixed. இது ராஜாவை கலங்கடித்து பயத்தால் அவனை நிரப்பீற்று. உடனடியாய் அவன் பாபிலோனின் ஞானிகளை அதின் அர்த்தத்தை விரிவுரைக்க அழைத்தனுப்பினான்.

ஓர் விரிவுரையாள் தேடப்படல்
An Interpreter Sought

தானியேல் *5: 7-9*

மீண்டுமாக, பாபிலோனின் ஞானிகள் Wisemen

நேபுகாத்நேச்சாரின் நாட்களில் தோற்றுப்போனதுபோல இங்கும் அவர்களது அலுவலில் Office தோற்கிறார்கள். *தானி.2: 1-13.* எழுத்தை அவர்கள் விரிவுரைக்க முடியவில்லை, அவர்கள் பழக்கப்பட்ட ஓர் மொழியில் அது இருந்ததோவென்று நமக்குச் சொல்லப்படவில்லை. உண்மையான காரணமாவது அது தேவனிடமிருந்துள்ள ஓர் தூதாக இருந்தது. தேவனுடைய வார்த்தைகளை விரிவுரைக்க Interpret ஓர் தேவனுடைய மனிதனாலேதான் ஆகிறது. கையெழுத்தை விரிவுரைக்க ஞானிகளின் கூடாமை - தோல்வி ராஜாவை அதிகமாய் கலங்கடித்தது. அவருடைய முகம் வேறுபட்டது. எல்லா களிப்பும், உவகையும் அதைவிட்டு நீங்கியது. பயத்தின் மற்றும் பயங்கரத்தின் நிலையை அது பிரதிபலித்தது. அம்மாறுகை அதிக பிரத்தியட்சமாயிருந்ததால் கூடியிருந்த பிரபுக்கள் அதிர்ந்து ஆச்சர்யப்பட்டனர்; ஏனெனில் சுவரின்மீதான கையெழுத்து அவர்களை களிப்பாக்கவுள்ள ராஜாவின் தொடர்பான நிகழ்ச்சி நிரலின் ஓர் பாகமல்ல; மாறாக ஏதோவோர் இயற்கைக்கு மேலானது மற்றும் ராஜா தேவையில்லாமல் எச்சரிப் படையவில்லை என்றும் கண்டுகொண்டனர்.

உடனடியாக விருந்தின் பேரிரைச்சல் பீதியின் கூக்குரலாய் மாறிற்று. கொந்தளிப்பும் கிளர்ச்சியும் மிகுதியாய்ப்போகவே, இது என்னத்திற்காய் என கண்டறிய ராணி உள்ளே வந்தாள். குறிப்பிடப்பட்ட இவ்வரசி Queen பெல்ஷாத்சாரின் மனைவியாயிருந்தாளென்பதற்கு அதிகபட்சம் ஏதுவில்லை; Hardly Likely. அவன் விவாகம் செய்திருந்தால் அவனுடைய மனைவியின் ஸ்தானம் அவனோடு அவ்விருந்தினிடத்தில் இருந்திருக்கும். குறிப்பிடப்பட்ட ராஜாத்தி Queen நேபுகாத்நேச்சாரின் விதவையாகக் கூட இருக்கவாய்ப்பில்லை; அவள் அதிகபட்சம் மரித்துப்போனாள், அல்லாவிடில் அவள் மிக விருத்தாப்பிய நிலையில் அவ்வாறான நிகழ்வுக்கு பொருந்தாத வேறுநிலைப்பட்டிருந்திருப்பாள். ஆகவே குறிப்பிடப்பட்ட ராஜாத்தி Queen ராஜா நேபோநிடஸ்ஸின் King Nebonidus-ன் ராணியான Queen அவனது மனைவியானவள் எனத்தோன்றுகிறது. அம்மன்னர் அவ்வேளையில் வெளியே இருந்தாலும் அவரே தேசத்தின் முதல் ஆளுநராக First Ruler இன்னமும் இருந்தார். அவரது மனைவிக்கு அவ்வேளையில்

மாளிகையில் வசிக்க ஓர் முழு பூரண உரிமை இருந்தது. மேலும் நேபுகாத்நேச்சாரின் ஓர் மகளாக அவளது தகப்பனாரின் அலுகையின்போது சாம்ராஜ்யத்தின் விவகாரங்களில் தானியேல் எடுத்த ஆச்சரியமான பங்கைக்குறித்த தெளிவான மற்றும் கண்முன்நிற்பது போன்ற ஓர் ஞாபகம் இன்னமும் அவள் கொண்டிருந்தாள். இக்கண்ணோட்டம் உமது 'தகப்பனார்' Father எனும் பதத்தை ராஜாத்தி Queen பிரயோகிப்பதால் உறுதி செய்யப்படுகிறது. நேபுகாத்நேச்சாரை பெல்ஷாத்சாரின் தகப்பனார் Father என ராஜாத்தி Queen அழைக்கிறதில் 'பாட்டனார்' Grand Father பதத்திற்கு பதில் 'தகப்பனார்' பதம் உபயோகிப்பு பழைய ஏற்பாட்டு காலத்து பிரயோகிப்புக்கு ஒத்துப்போகிறது. மட்டுமின்றி, அப்பிரயோகிப்பு தேவையாக்கப்பட்டதெனில் செமிட்டிக் இனத்தவர் மொழியில் Semitic Language பாட்டனார் Grand Father அல்லது பேரனுக்கான Grandson வார்த்தைகள் இல்லை!

'தானியேல் 5:10-12'

தானியேலை மற்றவர்கள் மறந்துவிட்டிருந்தபோதும் 'தாய் ராஜாத்தி' Queen Mother அப்படியாயிருக்கவில்லை. உடனடியாக தானியேல் அழைத்தனுப்பி வைக்கப்பட்டார். அவர் தூரத்தில் இருந்திருக்கமுடியாது; அப்படியானால் அவ்வளவு விரைவாக அவர் தோன்றியிருக்கமுடியாது. அவரது தூக்கத்தினின்று சந்தேகமின்றி எழுப்பிவிடப்பட்டார்; ஏனெனில் இரவின் வெகுஜாமமாயிருந்தது. இது இலேசான காரியமன்று! ஏனெனில் அவர் இப்பொழுது ஓர் நரைமயிருள்ள விருத்தாப்பியரா யிருந்தார். நேபுகாத்நேச்சாரது சொப்பனத்தை விரித்துரைத்திருந்த பிற்பாடு 65வருடங்கள் கடந்துவிட்டிருந்தன. பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அவர் 20வயது உடையவராயிருந்தால், மாளிகை பள்ளிக்கூடத்தே 3 வருடங்களை கணக்கிட்டால் அவர் இப்போது 88வருடங்களான விருந்தாப்பியராயிருந்தார்.

'தானியேல். 5:13-16'

இவ்வாக்குறுதிகள் யாவும் எவ்வளவு வீணான சூனியமானவையென்று தானியேல் அறிந்தார். ஏனெனில் 'சுவரின்

மீதான கையெழுத்து' மூலம் பாபிலோன் சாம்ராஜ்யம் அழிவின் ஊழ் Doomed கொண்டிருந்ததைக் கண்டார். அவைகளை நிறைவேற்ற பெல்ஷாத்சார் கழிவற்றிருந்தார் / வல்லமை யற்றிருந்தாரென அறிந்தார். ஆகவே 'தானி *5:17-21*'-ல் காண்கிறபடி பதிலுரையளித்தார். பின்னர் தானியேல், உத்தமமான தீர்க்கனாக இருந்தபடியே, சந்தர்ப்பத்தை தகுந்தபடி பயன்படுத்தியவராய் ராஜாவை கடிந்து கொண்டார். அவருடைய பயமற்ற மேதகு சிறப்புமிக்க வார்த்தைகளைக் கேளுங்கள்:

'தானியேல் *5: 22-24*'

ஓர் தீர்க்கருடைய கடிந்துரை A Prophet's Rebuke

நேபுகாத்நேச்சாரரான அவரது பாட்டனாருக்கு அவருடைய பெருமைக்கான ஓர் தண்டனையாக சம்பவித்திருந்த அனைத்தையும் நன்கறிந்தவரென பெல்ஷாத்சாரை குறிப்பிட்டு தானியேல் தனது கடுமையான கடிந்துரையில் குற்றம் சாட்டினார். நேபுகாத்நேச்சார் மூளைதிறம்பிய நிலையினின்று மீண்டெழுந்தபோது Recovered பெல்ஷாத்சார் அதிகபட்சமும் பதினைந்து வருட வயதுடையவனாக இருந்தான். எப்படியும் அவன் தனது தாயின் உதடுகளிலிருந்து அவையெல்லாவற்றையும் குறித்துக் கேட்டான். அரியணைக்கு சட்டப்படி உறுதியான பின்வாரிசாக Heir Apparent அவனுடைய பாட்டனாரின் பாவத்தை தவிர்க்க அவன் எச்சரிக்கப்பட்டான் Warned. ஆனாலோ, அப்பாடத்தினால் அவன் பயனடைய தவறிவிட்டான். அதேபோது அவனது குற்றத்தை அதிகரிக்கச்செய்ய அவனது பாட்டனார் ஒருபோதும் செய்யத் துணியாத பாவத்தை கூட்டினான். அதாவது தேவாலயத்து 'பரிசுத்த பாத்திரங்களை' Sacred Vessels தீட்டுப்படுத்துகின்ற Profanation பாவத்தை செய்து தேவனையே அற்பமாக்கி கேலியாக்கி எதிர்த்துநின்றான்.

தானியேல் அழைப்பிக்கப்பட்டபோது, தானியேல் ஓர் யூதனாயிருந்தானா எனக்கண்டுபிடிக்க தனிப்பட்ட சிரமத்தை பெல்ஷாத்சார் எடுத்ததும் அவருடைய (தானியேலுடைய) பிரசன்னம் தேவாலயத்தின் பரிசுத்த பாத்திரங்களின் Sacred

Vessels ராஜாவுடைய அவமதிப்புபழி கேடாக்கலோடு தொடர்புடையதாக இருப்பதைப் போன்றிருந்ததும் ஓர் அபூர்வ சரிப்பொருத்தமாயுள்ளது. ஆகவே பெல்ஷாத்சாரின் ஆக்கினை ஊழ் Doom யூதனாகிய தானியேலால் கூறி அறிவிக்கப்பட வேண்டுமென்பது பொருத்தமாய் காணப்பட்டது. ஏனெனில் பரிசுத்த பாத்திரங்களது தீட்டுப்படுத்துகை காரணமாகவே சுவரின்மீது கையெழுத்துத் தோன்றியது மற்றும் பெல்சாத்சாரின் ஆக்கினை அழிவு Doom கூறி அறிவிக்கப்பட்டது. ஏனெனில் அவன் அரியணையில் தொடர்ந்திருந்தால் தீர்க்கர்கள் முன்னறிவித்தபடி எருசலேமுக்கு யூதர்களுடைய மற்றும் பரிசுத்த பாத்திரங்களுடைய திரும்ப வருகையின் நம்பிக்கையற்றுப் போயிருக்கவுள்ளது.

பாபிலோனின் ஆக்கினை ஊழ் The Doom of Babylon

தானி. 5:25-28

'எழுதப்பட்ட எழுத்து என்ன என்றால்: மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் என்பதே. இந்த வாசகத்தின் அர்த்தமாவது: மெனே என்பதற்கு தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு அதற்கு முடிவுண்டாக்கினார் என்றும்; தெக்கேல் என்பதற்கு நீ தராசிலே நிறுத்தப்பட்டு, குறையக் காணப்பட்டாய் என்றும்; பெரேஸ் என்பதற்கு உன்ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப் பட்டது என்றும் அர்த்தமாம்'.

அர்த்தப்படுத்தலில் தானியேல் 'உப்பார்சின்' வார்த்தையை பெரேஸ்-க்கு மாற்றுகிறார். 'பெரேஸ்' வார்த்தை உப்பார்சினுடைய ஒருமைச்சொல் Singular! இம்மாற்றுகை அர்த்தப்படுத்துகைக்கு உதவுகிறது; ஏனெனில் சுவரின்மீது எழுதப்பட்ட P-R-S மெய்யெழுத்துக்கள் Consonants பெர்சியர்களுக்காக Persians பயன்படுத்தப்பட்டவைகளேயன்றி வேறல்ல! அப்படியானால் எங்கிருந்து தானியேல் 'மேதியர்' Medes மற்றும் 'பெர்சியர்' Persians வார்த்தைகளைக் கிடைக்கப்பெற்றார் என்பதை இது காண்பிக்கிறது. அக்காலத்தே 'மேதியா மற்றும் பெர்சியா' ஓர் இரட்டை ராஜ்யங்களாயிருந்தன Dual Kingdom. 'மெனே, தெக்கேல்,

உப்பார்சின்' வார்த்தைகள் ஆங்கிலத்தில் மொழியாக்கப் படுகையில் அர்த்தப்படுத்துவதாவது: 'எண்ணப்பட்டது' Numbered, 'எண்ணப்பட்டது' Numbered 'எடையிடப்பட்டது' Weighed, 'பிரிவுகள்' Divisions.

அவைகளை தானியேல் கீழ்வருமாறு அர்த்தப்படுத்தினார்:

மெனே: 'தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு (எண்ணிக்கையிட்டு) அதற்கு முடிவுண்டாக்கினார்'

தெக்கேல்: 'நீ (பெல்ஷாத்சார்) தராசிலே நிறுக்கப்பட்டு (எடையிடப்பட்டு) குறையக்காணப்பட்டாய்'.

பெரேஸ்: 'உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது'

எழுத்து அரமிய மொழி(அரமியா Aramaea - மேலை ஆசியா)யிலிருந்தது; எழுத்துக்கள் Letters வார்த்தைகளின் முதல் அல்லது கடைசியெழுத்தை வைத்து சொல்லுண்டாக்கும் பாணியில் Acrostic Style ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கலாம். அது ஞானிகளை திகைப்படைவித்த புதிராயிருந்தது. பாபிலோனிய யூதர் திருமறை தால்மத்திலிருந்து Talmud எடுக்கப்பட்ட கீழ்காணும் உதாரணம் இது எவ்வாறு செய்யப்பட்டிருக்கக்கூடு மென்பதை காண்பிக்கவுள்ளது

P	T	M	M
R	K	N	N
S	L	A	A

கல்தேயர்கள் Chaldeans (ஞானிகள்) எபிரேய மற்றும் அரமிய மொழியிலுள்ளதுபோல வலதிலிருந்து இடதோ மற்றமொழிகளிலுள்ளது போல இடதிலிருந்து வலதோ எழுத்துக்களை வாசிப்பதால் Reading the Letters வார்த்தைகளுடைய அர்த்தம் ஏதும் விளங்கவழியற்றிருந்தனர். ஆனால் தானியேல் மேலேயிருந்து கீழாக வலதிடமிருந்து தொடங்கி இடது நோக்கி வாசித்தார்.

'அப்பொழுது பெல்ஷாத்சார் தானியேலுக்கு இரத்தாம்பரத்தையும், அவனுடைய சமூகத்தில் பொற் சரப்பணியையும் தரிப்பிக்கவும், ராஜ்யத்திலே அவன் மூன்றாம் அதிகாரியாயிருப்பவன் என்று அவனைக்குறித்து பறை முறையிடவும் கட்டளையிட்டான்' தானி. *5: 29*

மேலேயுள்ள வசனத்தின் உண்மையிலிருந்து பெல்ஷாத்சார் தீர்க்கனை நம்பவில்லை அல்லது அவரை அவன் நம்பியிருந்தாலும், தீர்க்கதரிசனம் அவனது நாளில் உண்மையாகப் போவதாக அவன் எதிர்பார்க்கவில்லை என்பது நம்பகவாய்ப்புள்ளது.

பெல்ஷாத்சார் தானியேலை மூன்றாவது அதிகாரி 'Third Ruler' ஆக்கவேண்டியிருந்தது; ஏனெனில் அவன் தானே இரண்டாவதானவன்; எப்படியெனில் அவனுடைய தகப்பனான நெபோனிடஸ் Nebonidus முதலானவராயிருந்தான். ஆனால் தானியேலுக்காயிருந்த மேன்மை கண்ணியம் Honour ஓர் சூனிய வெறுமையாயிருந்தது. ஏனெனில் தேவனுடைய வார்த்தை உண்மையாயிருந்ததேயானால் பெல்ஷாத்சார் தானியேலை இரத்தாம்பரத்தால் அணிவித்தபோது மேலும் பொற்சரப்பணியை கழுத்தில் தரிப்பிக்கும்போது அவனிடம் பங்கிடுதற்கு ராஜ்யம் இருந்ததில்லை; எப்படியெனில் ராஜ்யம் மேதியருக்கும் பெர்சியருக்கும் ஏற்கனவே கொடுக்கப்பட்டாயிற்று. அதாவது 'அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலைசெய்யப்பட்டான். மேதியனாகிய தரியு தன் அறுபத்திரண்டாம் வயதில் ராஜ்யத்தைக் கட்டிக் கொண்டான்' என நாம் வாசிக்கிறோம். தானி *5: 30-31.*

மேதியனாகிய தரியு பாபிலோனை கட்டிக் கொள்ளவில்லை(எடுக்கவில்லை). அது கோரேசால் பிடிக்கப்பட்டது. ஆனால் மதிப்புரிமைச் சலுகையின் Courtesy கிரியையாக, மேலும் மேதிய - பெர்சியா இரு ராஜ்யங்களில் மேதியா மூத்ததாக இருந்த காரணத்தால், மேலுமாக அவனுக்கு(கோரேசு) வேறுசில ராணுவ படைமுயற்சிகள் முடிக்கவிருந்தமையால், கோரேசு பாபிலோனின் ஆளுகை அதிகாரத்தை தனது தந்தையுடன் பிறந்தவர் Uncle தரியுவான

மேதிய அரசனுக்கு கையளித்தான் Committed. அவன் (தரியு) இரண்டு வருடங்கள் ஆண்டான்.

பாபிலோன் பிடிபடல் Taking of Babylon

நேபுகாத் நேச்சாரின் மரணத்திற்கு இருவருடங்கள் கழித்து பாபிலோனியருக்கும், மேதியருக்குமிடையே ஓர் யுத்தம் வெடித்தது. அது இருபது வருடங்களுக்கு மேலாக விட்டு விட்டுத் தொடர்ந்தது. முடிவாக மேதிய ராஜா Cyaxares, தானி.5:31-ன் படி தரியு Darius என்றழைக்கப்பட்டவன் தன்னுடைய உடன்பிறந்தார் மகன் கோரேசை Cyrus அழைத்தனுப்பினான் Summoned. பெர்சியா வழி முறையிலானவன் Persian Line கோரேஸ்! Nabonidus யுடைய பதினேழாம் வருடத்தே மற்றும் பெல்ஷாத்சாரின் மூன்றாம் வருடத்திலே கோரேசு பாபிலோன் நகரை முற்றுகையிட்டான் Laid Siege. பாபிலோனியர்கள் நகரத்துடைய துளைக்கப் படயியலா கோட்டைச் சுவர்களுக்குப்பிறகே Behind அகழிக் காப்பிடத்தே வருடங்களுக்குப் போதுமான சேமிப்புப் பண்டங்களோடு மற்றும் வினியோகத்தைத் தொடர்ந்து அளிக்கவுள்ளப் போதுமான உழுநிலங்களோடிருந்து கோரேசை ஏளனம் செய்து, முற்றுகையை இலேசாய் எடுத்துக் கொண்டனர். ஆகவே எந்தவொரு விரோதியும் அவர்களுடைய அழிவை எதிர்நோக்கி, கவனித்து விழித்துப் பார்த்துக் கொண்டிராதது போன்று அவர்கள் சுயாதீனமாக சுவாசித்து, மெய்மறந்து கடுமையாய்த் தூங்கிக் கொண் டிருந்தனர். ஆனால்,அதுவோர் தவறானப் பாதுகாப்பாயிற்று; ஏனெனில் தேவன் 175 ஆண்டுகளுக்கு முன்பாக நகரானது கோரேசு எனும் அன்று பிறவாதிருந்த ஓர் மனிதனால் பிடிக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பு ஆணையிட்டிருந்தார் Decreed (ஏசாயா 44:28 - 45:1 - 4). அவரே (கோரேசு) அந்நாளில் அதனுடைய வாசல்களில் தட்டிக்கொண்டிருந்தார். தேவன் தமது வார்த்தையின் நிறைவேறுகைக்கான கால வேளையைக் குறித்திருக்கையில் Set the Time, எந்த ஊடுருவ முடியாத பலத்தக் கோட்டையானாலும் தகர்ந்து விழவேண்டியதே!

நகரத்தை முற்றுகையால் By Siege பிடிக்கிறதென்பது பயனற்றதென்று உணர்ந்து, கோரேசு போர்க்கலை

சூழ்ச்சிமுறையைப் Strategy பிரயோகிக்க தீர்மானித்தான். நகரத்தினூடே பாய்ந்து கொண்டிருந்த ஐப்பிராத்து நதியை நீர்வடித்திட தீர்மானித்தார். அதின்மூலம் அப்படுகையினூடே தமது படைவீரர்களை உள்ளே நடைபோட வைத்தான். இதற்காக அவன் ஓர் மகாபரந்த செயற்கை ஏரியை, நகரத்திலிருந்து மைல்கள் மேலேக் கட்டினதாகவும் அதினுள் நதிநீரைத் தேக்கியதாகவும் சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் கூறுகிறபடி, அதிகபட்சம் சாத்தியமாவதாவது: புதிய கால்வாய் ஒன்றை வெகு தொலைவில் கோட்டைச் சுவர்களின் மேலுள்ள கோபுரங்களின் உச்சியிலிருந்து கண்ணுக்கெட்டா தூரத்தில் வெட்டி அக்கால்வாயினுள் நகரத்தின் மேலேயுள்ள நதியின் தண்ணீரை திருப்பிவிட்டான் என்பதே! அதின் மூலம் நகரத்தினூடே பாய்ந்துக்கொண்டிருந்தத் தண்ணீர் தூரமாக தள்ளிப்பாயவே ஆற்றுப்படுகை நகரத்தினூடே காய்ந்து விடப்பட்டது. தனது திட்டத்தை நிறைவேற்ற சகல ஒழுங்கு நடவடிக்கைகளையும் மேற்கொண்டபின், கோரேசு ஓர் தகுந்த தருணத்துக்காக காத்திருந்தான். பெல்ஷாத்சார் தனது சீமான்களான துரைகளில் ஓர் ஆயிரம் பேருக்கு கொடுக்கப்போகிற விருந்தையும் கேள்விப்பட்டு, அவ்விருந்தின் தன்மையை அறிந்தவராய் பெல்ஷாத்சாரின் போர்வீரர்கள் தங்களது காவலைவிட்டு அகன்றிருப்பதை off their Guard தெரிந்து, கோரேசு தனது படையை மூன்று பிரிவுகளாக பிரித்தார். ஒரு பிரிவு ஐப்பிராத்து நதியின் தண்ணீரை தகுந்த நேரத்தில் புதிய கால்வாயில் திருப்பிவிடயிருந்தது; அடுத்தப் பிரிவு நகரத்திற்குள் நதி புகுகின்ற வடக்கே நிறுத்தப்பட்டது; மூன்றாவது பிரிவு நதியானது நகரத்தை விட்டு வெளியேவரும் தெற்கே நிறுத்தப்பட்டது.

நதியின் நீர்மட்டம் குறைந்தவுடன்தானே இரண்டாம் மற்றும் மூன்றாம் பிரிவுகள் நதியின் படுகையினுள் புகுவதற்கும் ஒன்றையொன்று சந்திக்கும்படி எதிரெதிரே நடை போடும்படிக்கும் கட்டளையிடப்பட்டன. நகரின் மத்தியில் அரண்மனை இடவமைப்புப் பெற்றுள்ள இடத்தே சந்திக்க திட்டமிட்டபடியே திட்டம் துல்லிபமாக நிறைவேறியது; வரம்பு மீறிய ஒழுக்கக்கேட்டின் Debauchery மிகுதிக்கு நகரம் தள்ளப்படாதிருந்ததானால் அத்திட்டம் ஓர் தோல்வியாய்

முடிந்திருக்கும். பாதுகாவலரின் கவனக்குறைவுக் காரணமாய், நகரத்தினுள்ளே நதியின் இருமருங்கு கரைகளை கரையொட்டிக் கட்டப்பட்ட சுவர்களின் வெண்கல வாசல்கதவுகள் பூட்டப்படாது விடப்பட்டிருந்தன; இவ்விதமாய் கோரேசின் படைவீரர்களுக்கு இலகுவான உட்பிரவேசிப்பை அளிக்கவே, அவர்கள் வெகுதுரிதமாக நகரத்தை பிடித்தனர். அதற்கு மாறாயிருந்திருந்தால் படைவீரர்கள் அதினுள் அகப்பட்டிருப்பார்கள்; அல்லது அதைவிட்டு வெளியே பின்வாங்க நேரிட்டிருக்கும்; ஆனால் தேவனுடைய கரம் அதில் இருந்தது; கோரேசு நகரத்தை பிடிக்க வேண்டுமென்று தேவன் கூறியிருந்தார்; அதற்கான வேளைவரப்பட்டதும் கோரேசின் திட்டம் சந்தேகமின்றி தேவனால் உள் உந்தப்பட்டிருந்ததால் Inspired, தேவன் நதியின் கரையோர வாசல்கள் அடைப்படாதிருக்க பார்த்துக்கொண்டார். நதியின் கதவுகளின் காவலாளிகள் பணியில் விழித்திருந்தால் நதியின் நீர்மட்டம் கீழிறங்குவதை கவனித்திருந்தால், அவர்கள் எச்சரிப்பு கொடுத்திருக்கலாம்; ஓர் கால் நகரத்தை பாதுகாத்திருக்கலாம். ஆனால் தேவன் வேற்றுவிதமாய் கட்டளையிட்டிருந்தார். கோரேசின் படைவீரர்கள் உடனடியாக நகரத்தை தங்கள் வசமாக்கினர்; அரண்மனையை சூழ்ந்து நெருக்கினர்; ராஜாவை வெட்டிக் கொன்றனர். அந்த இரவின் கேளிக்கை விருந்து Revelry பெல்ஷாத்சாரது உயிரை எடுத்ததுமன்றி பாபிலோனின் வீழ்ச்சிக்கும் இடமளித்தது.

வேதாகமசத்தியங்களின் உள்ளுயிர்ப்புக்கு நிரூபணமாக பாபிலோனது வீழ்ச்சி முன்னறிவிக்கப்பட்டது; நகரின் பிடிபடுகையின் முறைகூட விவரிக்கப்பட்டது; பிடிக்கிறவனது பெயர்கூட 175 வருடங்களுக்குமுன் கொடுக்கப்பட்டது என்பது கவனிக்கத்தகுந்தது. தீர்க்கத்தரிசனம் ஏசாயா. *44: 28-45:1-4* வரைக் காணலாம்.

'*ஏசாயா 44:28-45:1-4*'

ஏசா. 45:4

வெண்கலக்கதவுகளை உடைத்து, இருப்பு தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்

களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; நான் என்தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்து கொண்ட இஸ்ரவேலினிமித்தமும், நான் உன்னைப் பேர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்

ஏசா. 45:6(b)

'நீ என்னை அறியாதிருந்தும் நான் உனக்கு இடைக்கட்டுக் கட்டினேன்; நானே கர்த்தர்; வேறொருவர் இல்லை'.

பாபிலோனை முற்றிகையிட்டு பிடித்தபோது கோரேசு தேவனிடத்தேயான ஓர் விசுவாசியில்லை என்பது கடைசி வாசகம் அர்த்தப்படுத்தலாம். அவன் நகரத்தின் வீழ்ச்சிக்கு தேவனுடைய கருவூலமாக/செயலாளியாக Agent அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டதை அவன் அறியாதிருந்தான். கோரேசு அவனுடைய பிறப்புக்கு நூறு வருடங்களுக்கு மேலான முன்னரே இரு காரியங்களை நிறைவேற்ற முன் குறிக்கப்பட்டிருந்தான் என இந்த வேதப்பகுதியிலிருந்து நாம் பார்க்கிறோம். முதலாவது பாபிலோனை முற்றுகையிட்டு பிடித்தல்; இரண்டாவது இரண்டுவருடங்களுக்கு பிற்பாடு ஓர் அரசாணை பிறப்பித்தல்; அதாவது பாபிலோனிய சிறையிருப்பின் காலவரம்பான Time 70 வருடங்கள் முடிவுக்கு வந்ததும் Expired கி.மு. 536-ல் யூதர்கள் எருசலேமுக்கு திரும்பிவருகைக்கான அரசாணை!

பாபிலோனுடைய மீளக்கட்டப்படல்
The Rebuilding of Babylon

மீட்டாக்கம் பெற்ற பாபிலோன் பூர்வீக நகரம் இக்கால சகாப்தத்துடைய கடைசி நாட்களின் திடுக்கிடவைக்கும் நிகழ்வுகளில் ஓர் முக்கியபாகம் நிகழ்த்தவுள்ளது என்பது தெளிவாயுள்ளது. வெளிப்படுத்தல் புத்தகத்தின் பதினேழாவது மற்றும் பதினெட்டாவது அதிகாரங்களில் இதைக்குறித்து சொல்லப்பட்டவைகளிலிருந்து இது காணப்படுகிறது. முதல் பார்வையில் பொதுப்படையாக In Common சில காரியங்களை

உள்ளடக்கிய இவ்விரு அதிகாரங்களை ஒத்திசைவிக்கிறது Reconcile கடினமாயுள்ளது. ஆனால் திறவுகோலை பெறுகிறபோது ஒத்திசைவு எளிதாகிறது. பதினேழாவது அதிகாரம் 'இரகசியம் மகா பாபிலோன் வேசிகளுக்கும் பூமியிலுள்ள அனைவருக்கும் தாய்' என அழைக்கப்படுகிற ஓர் ஸ்தீரியைக்குறித்துப் பேசுகிறது. பதினெட்டாவது அதிகாரம் 'மகா பாபிலோன்' என அழைக்கப்படுகிற ஓர் எழுத்தின் படியான நகர் Literal City அதாவது ஓர் நகரைக் குறித்து பேசுகிறது. 'ஸ்திரீ' மற்றும் 'நகர்' ஒரே காரியத்தை உருவக அடையாளப் படுத்துவதில்லை Symbolize என்பது தெளிவாயுள்ளது; எப்படியெனில், ஸ்திரீயைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ளது ஓர் நகருக்குப் பொருந்துவதில்லை; நகரைப்பற்றி சொல்லப்பட்டது ஓர் ஸ்திரீக்கு ஒவ்வாது. 'ஸ்திரீ' பத்து ராஜாக்களால் அழிக்கப்படுகிறாள். அதேவேளையில் அடுத்த அதிகாரத்தே பூமியின் ராஜாக்கள் Kings of the Earth நகருடைய அழிவைக்குறித்து அழுது புலம்புவார்கள். அது அவர்களால் அழிக்கப்படுவதில்லை மாறாக ஓர் வல்லமைமிக்க பூமியதிர்ச்சி மற்றும் அக்கினியால் அழிக்கப்படும்; மீண்டுமாக, ஸ்திரீ நகருடையதற்கு (அழிவுக்கு) மூன்றரைவருடங்கள் முன்னர் அழிக்கப்படுகிறாள்.

'இவைகளுக்குப்பின்பு' அதாவது ஸ்திரீயின் அழிவுக்குப்பின்பு, நகருக்கு சம்பவிக்கவுள்ளது நடைபெறுகிறது என பதினெட்டாம் அதிகாரம் முதலாம் வசனம் சொல்லுகிற மெய்மை ஸ்திரீயும் நகரும் ஒன்றான ஒன்றில்லை என்பதை காட்டுகிறது. மேலும், இரண்டும் இருவெவ்வேறு தூதர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற மெய்மையால் இரு அதிகாரங்களும் வெவ்வேறு காரியங்களை குறிப்பீடு செய்கின்றதை மேலுமாக சரிபார்க்கப்படுகிறது. பதினேழாவது அதிகாரத்தின் நிகழ்ச்சிகள் 'கலச' Vial தூதர்களில் ஒருவனால் கூறி அறிவிக்கப்படுகின்றன; அதே வேளையில் பதினெட்டாவது அதிகாரத்தி னுடையவையோ 'வேறொரு தூதனால்' Another Angel கூறி அறிவிக்கப்படுகின்றன. அவ்வேறொரு தூதனே அதிகபட்சமும் இரண்டாவது தூதுவதூதனாக இருக்கவுள்ளான் Second Angel Messenger. அவன் முன்னெதிர்பார்ப்புக்குரியதாய் Anticipation, வெளி. 14:8-ல் பாபிலோனின் வீழ்ச்சியை கூறி அறிவித்தான்.

அவ்விடம் ‘மகாநகரம்’ That Great City என்றழைக்கப்படுகிறது.

‘இரகசியத்தாலான பாபிலோன் Mystical Babylon பதினேழாம் அதிகாரத்தில் அழிக்கப்பட்டால், அவள் பதினெட்டாம் அதிகாரத்தில் காட்சியளிக்கமுடியாது. ஆகவே, பதினெட்டாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட ‘நகர்’ ‘பாபிலோன்’ என அழைக்கப்படுகிற ஓர் எழுத்தின்படியான நகராய் இருக்கவேண்டும். இப்பெயர் உடைய நகர் இன்று பூமியின் மீது இருக்கவில்லை என்பதாலும், பூர்வீக பாபிலோன் அழிக்கப்பட்ட பின்பிலிருந்து இதுவரை இருந்திருக்கவில்லை என்பதாலும் குறிப்பீடு செய்வது எதிர்காலத்தேயான பாபிலோன் நகராயிருக்கவேண்டும். பாபிலோன் நகரம் தேவனுடைய மக்களான யூதர்களுடைய சரித்திரத்தோடு மிக நெருக்கமாய் தொடர்புடையதாவதால். வேதாகம சத்தியங்கள் அதைக்குறித்து சொல்ல அதிகமுள்ளது. தானியேல் புத்தகத்தின் பெரும்பகுதி இதைப்பற்றி வருகிறது; பழைய ஏற்பாட்டின் வேறு பன்னிரண்டு புத்தகங்களிலும், புதிய ஏற்பாட்டின் நான்கு புத்தகங்களிலும் இதைக்குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. வெளிப்படுத்தல் புத்தகம் தானியேல் புத்தகத்தின் ஓர் தொடர்ச்சி என்பது அதில் பாபிலோன் நகர் பற்றி மீண்டுமாக கூறப்படுகின்ற மெய்மை நிரூபிக்கின்றது. மேலும் கடைசி காலத்தில் End Time உலக விவகாரங்களில் Affairs அதினுடைய முக்கியத்துவம் Prominence வெளிப்படுத்தப்படுகிறது; அத்தோடு அதின் முழுமையான இறுதி அழிவு முன்னுரைக்கப்பட்டுள்ளது.

பூர்வீக பாபிலோன் நகர் அழிக்கப்பட்டதென்பதில் கேள்விக்கிடமில்லை; ஆனால் அது மீளக்கட்டப்படவும் மீண்டுமாக அழிக்கப்படவுமுள்ளது என நாம் வலியுறுத்திக்கூறுகையில் Affirm நாம் இரு எதிர்ப்புகளால் Objections சந்திக்கப்படுகிறோம்.

1. அதினுடைய அழிவைக்குறித்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் யாவும் எழுத்துப் பூர்வமாய் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதால் அது மீண்டும் கட்டப்பட முடியாது.

2. இப்போது பாபிலோன் நகர் ஏதும் உளதாயிருக்கவில்லை

Existence; என்பதால் வெளிப்படுத்தல் புத்தகத்திலுள்ள அத்தகைய ஓர் நகருடைய அழிவைக்குறித்த குறிப்பீடுகள் உருவக அடையாளங்களே Symbolical அல்லாமல் ஓர் எழுத்தின்படியான ஓர் நகரை குறிப்பீடு செய்யாது.

அதினுடைய அழிவைக்குறித்துள்ள சகல தீர்க்க தரிசனங்களும் எழுத்தின்படியே நிறைவேறிவிட்டதெனப்படும் முதல் மறுப்புரை / எதிருரையை நாம் எடுத்துக்கொள்வோம்.

பாபிலோன் மற்றும் அவளது அழிவுடைய ஓர் விவரணத்துக்கு ஏசாயா அதி.13,14 மற்றும் எரேமியா 50 மற்றும் 51க்கு திருப்பவேண்டும்; இவ்விரு தீர்க்கத்தரிசனங்களில் பாபிலோன் நகரைப் பொறுத்தவரை As Yet இன்னமும் நிறைவேற்றமடையாத அநேகமானவைகளைக் Much காண்கிறோம். இது நாம் தொடரும்போது தோற்றமளிக்கும். ஆனால், முதலில் பாபிலோனது சரிதையை கோரேசால் நகரம் கி.மு.538-ல் பிடிபடுகைத் தொடங்கி தற்காலம் வரை Present Time நாம் ஆராய்வோம். கோரேசால் நகரம் மிகத் துரிதமாக, மிக அமைதியாகப் பிடிபட்டதால், நகர்வாசிகளில் சிலர், ராஜா கொல்லப்பட்டு நகரம் பிடிக்கப்பட்டபின் மூன்றாவது நாள்வரை அறியாதிருந்தனர். நகரம் அவ்வேளைதானே அழிக்கப் படவில்லை;

சில வருடங்கள் கழித்து (தரியு ஹிஸ்தாப்பி) Darius Hystaspis- க்கு இது(இந்நகர்) எதிராகக் கிளர்ச்சி Revolted செய்தது; இருபது மாதங்களது ஓர் பயனற்ற முற்றுகைக்குப் பின்னர் போர்க்கலை சூழ்ச்சித் திறமையால் Strategy பிடிக்கப்பட்டது. கி.மு. 516ல் நடந்தது. சுமார் கி.மு.478ல் Xerxes கிரேக்கிலிருந்து திரும்பிவரும்போது மாபெரும் பாபேல் கோவிலை Great Temple of Bel அழித்துப்போடாதிருந்தாலும் சூறையாடி, காயப்படுத்தினான்.

கி.மு. 331-ல் மகாஅலெக்சாண்டர் நகரத்தை நெருங்கியபோது அது மிக்க வல்லமையுடனும் தளைத்தோங்கியுமிருந்தது. எனவே அது எதிர்த்தடுத்தல் கொடுக்க கூடுமென்ற கணிப்பில் தனது சகல படையணிகளையும் ஈடுபடுத்த ஆயத்தங்கள் செய்தான். மாறாக நகர மக்கள்

வாசல்களைத்திறந்து அவனை கோலாகலமாக வரவேற்றனர். பேலுக்கு பலி செலுத்திவிட்டு. அத்தேவனது கோவிலை திரும்பக் கட்டப்போவதாக அறிக்கை வெளியிட்டான். வாரங்களுக்கு 10,000 மனிதரை அவ்வஸ்திபாரத்தினின்று அழிவுகளை அகற்றிப்போடவும் பாபிலோனின் மகிமையை மீளஎழுப்பவும், அதை அவனுடைய தலைநகராக்கவும் சந்தேகமின்றித் திட்டமிட்டான். ஆனால் தனது முப்பத்து மூன்றாவது வயதில் Marsh Fever காய்ச்சலாலும் தன்னடக்கமின்மையாலும் பாதிக்கப்பட்டு மகாஅலெக்சாண்டர் திடீரென மரிக்கவே அவனது எண்ணங்கள் தோல்வியடைந்தன. அவனுடைய தளபதிகளாலான பின்னுள்ள போர்களின்போது பாபிலோன் அதிகம் பாதிப்படைந்தது; கடைசியாக செலுக்கஸ் Seleucus-ன் அதிகாரத்தின்கீழ் வந்தது. தனக்கென்று ஓர் தலைநகரம் கட்டவுள்ள பேராவலால் அவன் உந்தப்பட்டு பாபிலோன் நகரின் அருகாமையில் கி.மு. 293-ல் செலூக்கியா Seleuciaவை நிறுவினான். இப்போட்டி நகர் பாபிலோன் குடிமக்களை கொஞ்சம் கொஞ்சமாக இழுத்துக் கொண்டுவரவே கி.பி. 25-ல் மரித்த Strabo பாபிலோனைக் குறித்து அதிகளவும் வெறுமையாக விடப்பட்டுப் போனதாக கூறுகிறார். அப்படியிருந்தும் அடிமைத்தளையிலிருந்து விடப்பட்ட யூதர்கள் அதிக எண்ணிக்கையில் இன்னமும் அங்கு குடியிருந்தனர்; கி.பி. 60-ல் பேதுரு அப்போஸ்தலன் அவர்கள் மத்தியில் ஊழியம் செய்ததை பார்க்கிறோம். ஏனெனில் பாபிலோனிலிருந்தே பேதுரு தனது முதல் நிருபத்தை (1 பேதுரு 5:13) ‘பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களில் சிதறியிருக்கிற பரதேசிகளுக்கு’ முகவரியிட்டு எழுதி முடிக்கையில் ‘உங்களுடனேகூட தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிற பாபிலோனிலுள்ள சபையும், உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்’ என்கிறார்.

சுமார் ஐந்தாவது நூற்றாண்டில் மத்தியில் பாபிலோன் யூதர்களால் மட்டுமே குடிவாழப்பட்டதாக Theodoret கூறுகிறார். அவர்களுக்கு இன்னமும் அங்கே மூன்று யூத பல்கலைக்கழகங்கள் இருந்தன. அதே நூற்றாண்டின் கடைசி வருடத்தில் பாபிலோனிய தால்முத் Babylonian Talmud வெளியிடப்பட்டது. அதுமுழு உலக யூதர்களால் அதிகாரபூர்வமானதாய் அங்கீகரிக்கப்பட்டது.

கி.பி. 917-ல் Ibu Hankel பாபிலோனை ஓர் சிறப்பின்மை வாய்ந்த ஓர் கிராமம் மட்டுமே, ஆனால் இன்னமும் உளதாகிறது என குறிப்பிடுகிறார். கி.பி. 1100-ல் அது மீண்டும் ஓரளவுக்கு ஓர் பட்டணமாக வளர்ந்தது. அவ்வமயம் அது 'இரு மசூதிகள்' என அறியப்பட்டது. சிறிது பிற்பாடு 'ஹில்லா' என பெயர் பெறுமளவுக்கு அது விரிவாக்கம் பெற்றுப் புறசுவரால் பலப்பட்டது. கி.பி. 1898-ல் ஹில்லாவில் 10,000பேர் குடிவாழ்ந்தனர். ஐப்பிராத்து நதி ஓரத்தேயுள்ள பகுதியில் பேரீச்ச மரதோப்புகள் மற்றும் செழிப்பு நிலங்கள் ஹில்லாவை சுற்றிலும் தோன்றின. நிச்சயமாய் இதன் காரியத்தில் இன்னமும் 'இனி ஒரு போதும் அதில் ஒருவரும் குடியேறுவதுமில்லை; தலைமுறைதோறும் அதில் ஒருவரும் தங்கியிருப்பதுமில்லை; அங்கே அரபியன் கூடாரம் போடுவதுமில்லை அங்கே மேய்ப்பர் மந்தையை மறிப்பதுமில்லை' (ஏசா. 13:20) என்னும் வாக்கு உண்மையாகவில்லை.

மற்றும் பாபிலோனைக்குறித்து 'எரேமியா 51:43 -ன் வாசகம்' உண்மையாகாது! 'அதின் பட்டணங்கள் பாழுமாய், வறட்சியும் வனாந்தரமுமான பூமியுமாய், ஒரு மனுஷனும் குடியிராததும், ஒரு மனுபுத்திரனும் கடவாததுமான நிர்மூலமுமாய்ப் போயிற்று' என்று பாபிலோனைக் குறித்து சொல்லப்படமுடியது. எரேமியா 51:26: 'மூலைக்கல்லாகிலும், அஸ்திபாரக்கல்லாகிலும், ஒரு கல்லையும் உன்னிலிருந்து எடுக்கமாட்டார்கள்; நீ என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கிற ஸ்தலமாவாய்' என்றும் அதைக்குறித்து சொல்லப்படமுடியாது. ஏனெனில் அநேக பட்டணங்கள், நகரங்கள் பாபிலோன் அழிவிலிருந்து கட்டப்பட்டுள்ளன, நான்கு தலைநகரங்கள் அதில் முக்கியமானவை: 'Seleucia"கிரேக்கரால் கட்டப்பட்டது; 'Ctesiphon' பார்த்தியர்களால்; 'Almaiden' பெர்சியர்களால்: 'Kufa' Caliphs-களால்! 'ஹில்லா' உடைந்த கற்கூட்டங் களிலிருந்து முற்றிலும் கட்டப்பட்டது. பாக்தாத்தின் வீடுகளிலும் பாபிலோனிய முத்திரைபதித்த செங்கல்களை அதிகமும் பார்க்கலாம்.

ஆனால் ஏசாயா அதிகதுல்லிபமாக எந்த காலநேரத்தில் Time அவரது தீர்க்கதரிசனம் நிறைவேறப்போகிறது என்கிறார்.

‘கர்த்தருடைய நாள்’ என அதை அழைக்கிறார். ஏசா. 13:9. ‘கர்த்தருடைய நாள்’ உபத்திரவ காலத்தையும், திருநல்லாயிரத்தையும் உட்படுத்துகிறது. எப்பொழுது பாபிலோன் அழிக்கப்படும் என கூறும்போது ‘வானத்தின் நட்சத்திரங்களும் ராசிகளும் ஒளி கொடாதிருக்கும்; சூரியன் உதிக்கையில் இருண்டுபோம்; சந்திரன் ஒளிகொடா திருக்கும்’ (ஏசா. 13:10) என்கிறார்.

இவை ஏதும் பாபிலோன் கி.மு. 538-ல் கோரேசால் பிடிபட்டபோது அல்லது அதன் பின்பும் இன்றுவரை ஏற்படவில்லை. வானமண்டல சத்துவங்கள் ‘இருளடைவது பாபிலோனது அழிவின் காலத்தை மகா உபத்திரவகாலத்தின் முடிவில் காலஇடவமைக்கிறது. அது கிறிஸ்துவால் ஒலிவமலை உபந்நியாசத்தில் முன்னுரைக்கப்பட்டது’ (மத். 24:29-30). 7-வது கலசஊற்றலின்போது நிகழவுள்ளது (வெளி. 16:17-19).

சகரியா தீர்க்கனால் கண்ட எப்பாவின் Ephah காட்சி (சகரி. 5:5-11) பழங்கால நகரான பாபிலோன் திரும்ப கட்டப்பட்டு உலகத்தின் வாணிப வியாபார கேந்திரமாகப் போகிறது Centre என்பதற்கு மேலுமான உறுதியான சான்றாயுள்ளது. ‘எப்பா’ எபிரேய மிகப்பெரியதாய் உள்ள ஈரமற்ற Dry தானியஅளவு Measure குவளையாகும். அது வாணிபத்துக்கு ஓர் சின்ன அடையாளமாகும்.

காட்சியில் ‘எப்பா’ இரு ஸ்திரீகளால் தூக்கி எடுத்துச் செல்லப்படுகிறது; ஸ்திரீகளுக்கு நாரையின் செட்டைகளிருந்தன; காற்றின் வேகத்தோடு அவ்விரு ஸ்திரீகள் பறந்தனர்; அவர்கள் அதை சிநேயார் தேசத்துக்கு அதற்கு அங்கே ஓர் வீட்டைக்கட்டும் படிக்கு எடுத்துச் செல்கிறார்கள் என தீர்க்கனுக்குச் சொல்லப்பட்டது. ‘சிநேயார் தேசம்’ என்பது பாபேல் கோபுரம் கட்டப்பட்ட இடமாயுள்ளது. (ஆதி. 11: 1-9) அதுவே பாபிலோனின் இடவமைப்பு. முடிவான கணிப்பு யாதெனில் சிநேயார் தேசத்தே எப்பாவுக்காக கட்டப்படவுள்ள வீடே House மீள கட்டப்படவுள்ள பாபிலோன் நகரம். பாபிலோன் உலகத்தின் மாபெரும் வாணிப கேந்திரமாகப் போகிறது. எப்பாவினுள் அடைத்துவைக்கப்பட்ட ஸ்திரீ ஓர் அக்கிரமக்காரி என்றழைக்கப்பட்ட மெய்மை, அந்நாளில்

வாணிப நடவடிக்கைகள் Commercialism சகல நேர்மையற்ற திட்டங்களாலும் வழி முறைகளாலும் கறைப்பட்ட தன்மையுடையதாய் இருக்கும் Characterized அதுவே அன்று வாங்கவோ விற்கவோ கூடியவர்களது தொழில் வர்த்தக முறைகளாயிருக்கும். மிருகத்தின் முத்திரையை தரித்தவர்களாகவே Mark of the Beast. (வெளி. *13:16-17*)இவ் விதமக்கள்(வர்த்தகர்கள்) இருக்கப்போகின்றனர்.

பழங்கால நகரான பாபிலோன் திரும்பக் கட்டப்படுதலுக்கான சாத்தியக்கூறு பொறுத்தவரை உலகத்தின் அந்தப்பகுதியில் சில குறுகிய முற்காலங்களாக Recent Years இத்தகைய ஓர் காரியத்தை எதிர்நோக்கியவாறு நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சம்பவங்களை மாத்திரம் கவனித்தால் போதுமானது. சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா தங்களது தூக்கத்தையும், தனிநிலையையும் Isolation விட்டெழுந்து உலக பொருளாதார-வர்த்தக நாடுகளாக உருவெடுத்துள்ளன. ஆகவே ஏதாமொரு கண்டங்களூடான போக்குவரத்துமுறை Transportation கிழக்கத்திய பூகோளபாதியில் கிழக்குக்கும் மேற்குக்குமிடையே ஏற்பட்டாக வேண்டும்; அதற்கான பொருத்தமான வாதிக்கவுள்ள செல்வழி Route மெசப்பொத்தோமியா ஊடாக மீளக்கட்டப்படும் பாபிலோனை வர்த்தக மையமாகக் கொண்டிருக்கவுள்ளது.

பாரீசிலுள்ள பிரான்சின் 'போர்த்துறை'யில் நெப்போலியன் I-ன் ஆணையினால் பாபிலோனியாவில் எடுக்கப்பட்ட விலையேறப்பெற்ற நிலஅளவைகள் மற்றும் வரைபடங்களது Maps பதிவேடுகள் காணப்படவுள்ளன. அவைகள் மத்தியில் பாபிலோனின் ஓர் புதிய நகரத்துக்கான New City of Babylon ஓர் திட்டவரைபடம் Plan உள்ளது. அது நெப்போலியனது பரந்து விரிந்தத் திட்டங்களான பூர்வீக பாபிலோன் நகரின் மீளக்கட்டுகை மற்றும் அதனை அவனது தலைநகராக்குகை கூர்ந்து ஆராயப்பட்டுள்ளதை காண்பிக்கிறது. அவரது பேராவல் Ambition ஐரோப்பா மற்றும் ஆசியா முழுமையை ஜெயித்து கீழடக்க இருந்தபடியால் இப்படியான புதுத்திட்டம்! இந்நோக்கத்திற்கென பூர்வீக பாபிலோன் போர்த்திற முக்கியம் வாய்ந்த இடவமைப்பாக Strategical Position

ஓர் அரசாங்கத்துக்குரிய மற்றும் வர்த்தகத்துக்குரிய மையமாக அமைவதைக் கண்டறிந்தார்.

காலஞ்சென்ற ஜெர்மனியின் சக்கரவர்த்தி William வில்லியமுடைய கனாவும் அதுவாயிருந்தது. அந்த ஆவல்தான் அவரையும் துருக்கியுடைய அப்துல் ஹமீதையும் Abdul Hamid of Turkey நெருங்கிய அரசியல் நண்பர்களாக்கீற்று. அலெப்போ Aleppo வழியாக Bosphorus யுடைய ஆசியப்பக்கத்திலிருந்து ஓர் ரயில் பாதை போடுவதற்கான ஓர் சலுகையை Concession அப்துல் ஹமீதிடமிருந்து அவர் கிடைக்கப்பெற்றார். அப்பாதை முதலாவது Bosphorus-ன் ஆசிய பக்கத்திலிருந்து திக்ரி Tigris ஆற்றுக்கு, பின் அங்கிருந்து பாக்தாத்துக்கு Bagdad; பாக்தாத்திலிருந்து பாபிலோன் வழியாக (Via Babylon) பெர்சிய வளைகுடா Persian Gulf மேலுள்ள குவைத்து Kuweit -க்கு! பாக்தாத்திற்கு Bagdad செல்லுகின்ற பாதையின் பெரும்பகுதி போடப்பட்டுள்ளது.

மேலுமாக உண்மை தெரியப்பட்டிருந்ததானால், உலக மகாயுத்தத்துடைய World Great War கெய்சரது Kaiser's மட விரைவுத் துணிச்சல் Precipitation அதிகபட்சமும் Largely ஓர் 'Trans- European-Asiatic-Indian Airline' 'ஐரோப்பியா -ஆசியா- இந்திய இணைப்பு ஆகாய மார்க்கத்துக்கான' அவனது திட்டங்களை கொண்டு நடத்துவதற்கான அவனது ஆவலின் காரணமாகத்தான்! அவ்வாகாயமார்க்கம் Airline ஐரோப்பாவை இந்தியா, சீனா மற்றும் ஜப்பானோடு இணைக்கும். மேலும் பூர்வீக பாபிலோனிய இடவமைப்பில் ஓர் புதிய நகர் கட்டுவதை அது கட்டாயத் தேவைப்படுத்தியிருக்கும்! ஆனால் அவனது மற்றும் நெப்போலியனது திட்டங்கள் அவசரப்பட்ட முதிராநிலையிலானது Premature. தேவனால் அவை ஒன்று மில்லாக்கப்பட்டன. பாபிலோன் மீளக்கட்டப்படுவதற்கான அவருடைய நேரம் His Time வந்து சேரும் வரை இப்படியாயின.

அசீரியா மற்றும் பாபிலோனியா உட்பட மெசப்பத்தோமியாவின் முழு தேசத்திற்கும் ஏற்கனவே ஒருகால் இருந்ததுபோல ஓர் நீர்ப்பாசன திட்டம் மாத்திரமே அதை மீளஉலகத்தின் மாஉன்னத செழிப்பான தேசமாக்குவதற்கு தேவைப்படுகிறது. எண்ணற்ற நீர்ப்பாசன கால்வாய்களின்

தோண்டியெடுப்புகளால் இம்முந்தைய நிலை வெளிப் படுத்தப்படுகிறது. கி.பி. 1850 -ன் போதே ஆங்கிலேய அரசு ஓர் $150000(டாலர்) செலவில் ஐப்பிராத்து நதியை நில அளவீடு செய்து துருவி ஆய்வு செய்யவுள்ள ஆணையுடன் ஓர் ராணுவ அதிகாரியை அனுப்பிவைத்தது. ஐரோப்பிய போர் வெடித்தபோது அஸ்வான் அணையை Assouan Dam எகிப்தில் கட்டிய பெரிய ஆங்கிலேய பொறியாளர் ஓர் தொடர்ச்சியான நீர்ப்பாசன கால்வாய்கள் வெட்டுகின்ற நோக்கத்திற்காக ஐப்பிராத்து நதிப்படுகையை நில அளவை செய்வதில் ஈடுபடுத்தப்பட்டார். அந்நாட்டை மீட்டாக்கம் செய்து அந்நாடு ஒருகால் இருந்ததுபோல அதை மாபெரும் தானிய விளைச்சலின் நாடாக மீண்டும் மாற்றும்படி இதை மேற்கொண்டார். இவ்வுண்மைகளை மனதில் கொண்டு பாபிலோனிய நாட்டை மீட்டாக்கம் செய்து அதின் நகரங்களை மீள எடுத்துக்கட்டுவது ஐரோப்பிய முதலாளித்துவர்களின் European Capitalists ஆவலாயுள்ளதை தாராளமாய் பார்க்கக்கூடும். தேவனுடைய நோக்கத்திலான வேளை வருகையில், பாபிலோன் நகரம் உலகம் இதுகாறும் பார்த்திராத ஓர் மகோன்னத அளவில் ஒரே இரவுக்குள்ளாகக்கூட மீளகட்டபடப்போகிறது.

ஆனால் நான் ஓர் எதிர்கூற்றை கேட்கிறேன். இயேசு வருவதற்குமுன்னர் பாபிலோன் கட்டப்படவேண்டுமென்றால், 'எந்த வேளையிலும்' Any Moment இயேசுவர நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடுமென எவ்வாறு நீவிர் சொல்கிறீர்? இயேசுவின் இரண்டாம் வருகை இருபடிநிலைகளில் இருக்கவுள்ளதென்பதே எங்களது பதிலுரை! முதல் படிநிலையில் அவர் முழு வழியாக இறங்கி பூமிக்கு வரப்போவதில்லை; மாறாக ஆகாயத்தே Air நின்றுவிடுவார்; அவ்வமயம் மறுபடியும் பிறந்துள்ள எல்லா விசுவாசிகளும் அவரிடத்துக்கு மேலே எடுத்துக் கொள்ளப்படுவர், 1தெச. 4:13-18; கிறிஸ்துவின் நியாசனத்தே ஓர் தகுதியான வெகுமதியை பெறுதற்காக அவர்கள் தங்கள் கிரியைகளுக்காக நியாயந்தீர்க்கப்படுவர். 2 கொரி. 5:10; 1கொரி.3:11-15. இது கொஞ்சம் காலம் Time பிடிக்கவுள்ளது. பின்பு சபையானது கிறிஸ்துவுடன் கலியாணத்தில் இணைக்கப்படும் 'Church will be Married to Christ; அதின் பின்பு தேசங்களை நியாயந்தீர்க்கவும் (மத்.25:31-46)

அவருடைய திருநல்லாயிர ராஜ்யத்தை நிறுவவும் கிறிஸ்து பரிசுத்தவான்களுடன் (சபை) வருவார். இதுவே அவருடைய வருகையின் இரண்டாம்படிநிலை! காட்சிக்குரியது Visible. இவ்விரண்டு படிநிலைகளுக்கிடையே தானியேலது எழுபது வாரங்களின் கடைசிவாரமான ஏழு வருடங்களாவது At Least Seven Years ஓர் கால இடைவெளி Time Space இருக்கவுள்ளது(*தானி.9*). ஆனால் அவ்வேழு வருடங்களின் தொடக்கத்திற்கு முன்னர் அவர் வரக்கூடாது என்று கூற வேதாகமத்தில் எந்தவொரு வார்த்தையுமில்லை. ஐந்து, பத்து, இருபது வருடங்களுக்கு முன்னதாகக்கூட அவர் வரலாம். இது அப்படியானால் அந்திக்கிறிஸ்துவாகிய கடைசி புறஜாதி ஆட்சியாளனுடைய எழுச்சிக்கு முன்னர் பாபிலோன் மீளக்கட்டப்படுகைக்கு போதுமான காலம் Time அளிக்கப்படவுள்ளது. ஏழு வருடங்களில் முதல் மூன்றரை வருடங்களின்போது பாபிலோன் மீளக்கட்டப்படப்போகிறது என்றும் பிந்திய மூன்றரை வருடங்க்ளுக்கு அந்திக்கிறிஸ்து அதைத்தனது தலைநகராக்கவுள்ளான் என்றும் சிலர் உரிமை கோருவர். எவ்வளவு துரிதமாக நகரங்கள் இந்நாட்களில் எழும்புகிறதை அல்லது மீளக்கட்டப்படுவதை கண் ணோக்கும்போது, உதாரணத்திற்கு சிக்காகோ மற்றும் சான்பிரான்ஸிஸ்கோ Chicago And San Francisco அவைகளை மேற்கொண்ட பேரிடரழிவுகளினின்று மீள எழுந்துள்ளதை கண்ணோக்குகையில் உலகமுதலாளித்துவர் Capitalists ஒரு தடவை தீர்மானித்த மாத்திரத்தில் பாபிலோன் மீளக்கட்ட ஒருசில வருடங்களே எடுக்கவுள்ளது.

மகா பாபிலோன் Babylon the Great

வெளி. *18:1- 24-* ல் நமக்கு கொடுக்கப்பட்ட மகா பாபிலோனின் விவரணத்தை எடுத்து அதைக் கண்ணோக்க முயலுவோமாக. அது அளக்க முடியாத மிகப்பரந்த Immense ஓர் நகரமாயிருக்கும்; உலகம் எக்காலத்தும் கண்டிராதபடி ஒவ்வொரு வகை நுணுக்கத்திலும் மகா உன்னதமானது The Greatest. அதின் நாளில் லண்டன், பாரீஸ், பெர்லின், பெட்ரோகிரேட், நியுயார்க், சிக்காகோ போன்ற ஓர் மாதிரி நகரமாயிருக்கும். உலகத்தின் மகா உன்னத வர்த்தக

நகராயிருக்கும் Commercial City. அதினுடைய வியாபாரப் பொருட்கள் பொன், வெள்ளி, இரத்தினங்கள், முத்துக்கள், இராத்தாம்பரம், பட்டாடை, சிவப்பாடை மற்றும் விலையுயர்ந்த கம்பளிகள் முதலியனவையாலானவை. அதினுடைய நவநாகரீக சமுதாயம் மிக்கவிலையுயர்ந்த ஆடைகளால் உடுத்தி, மிகவிலையேறப்பெற்ற அணிகலங்களால் Jewels அலங்கரித்து விளங்கும். அவர்களுடைய வீடுகள் மிகவிலையேறிய தட்டுமுட்டு பொருள்களால் Furniture, அதாவது விலையேறிய மரங்கள், வெண்கலம், இரும்பு, சலவைக்கற்களாலான பொருட்களால் மற்றும் வீறழகுவாய்ந்த மடிப்புதொங்கல்கள், தரைவிரிப்புகள், கம்பளங்களால் நிரம்பியிருக்கும். அவர்கள் விலையுயர்ந்த வாசனைப்பொருட்கள் Perfumes, இலவங்கப்பட்டை வாசனைமிகுந்த தூபவர்க்கங்கள், தைலங்கள், வெள்ளைப்போளங்கள் பயன்படுத்துவார்கள். அவர்களது பெருவிருந்து சாலைகள் இனிமைமிக்கதான திராட்சைரசங்கள், உச்சித மாப்பண்டவகைகள் மற்றும் ருசிமிக்க புலால்வகைகள் பறிமாறப்படும். பூமியிலும் ஆகாயத்திலும் வெகுதுரிதமாகச் செல்லும் வாகனங்களில் பாய்ந்தோடுபவை, குதிரைகள் இரதங்கள் வைத்திருப்பர். அவர்களுக்கு அடிமைகளிருப்பர். மனிதரது தன்மான நிலைகளில் இழிதொழில் வாணிகஞ்செய்வர் Traffic in the Souls of Men. அதாவது பெண்டிர் தங்கள் உடலைகளை விற்றும், ஆடவர்கள் தங்கள் ஆத்துமாக்களை விற்றும் தங்கள் தங்கள் இச்சைகளை விருப்ப நிறைவேற்றுவர்.

சந்தைகளெல்லாம் கால்நடை, ஆடுகள் மற்றும் குதிரைகளால் குவிந்து நெருங்கிப்போயிருக்கும் Crowded. கப்பல்துறை மேடைகள் எல்லா நாடுகளின் Climes சரக்குகளாலும் குவிக்கப்பட்டிருக்கும். உற்பத்திசாலைகள் விலையேறிய துணிவகைகள் தயாரித்து வெளிக்கொண்டுவரும். மனிதரது சௌகரியத்துக்கும் சுகபோக வசதிக்குமாயுள்ள மானிட கூர்மதி Genius கண்டுபிடிக்கக்கூடிய சகலமும் அங்காடி, சந்தையில் காணப்படும். உல்லாசத்துக்கும், தொழிலுக்கும் கையளிக்கப் பட்ட ஓர் நகரமாயிருக்கவுள்ளது; எவ்வாறு துரிதபணம் ஈட்டுவது எனத்திட்டமிடுவதில் தொழில் செய்வோரும் தொழில் முனைவோரும் Promoters தங்கள் நாட்களையும் இரவுகளையும் செலவிடுவர். உல்லாசப்பிரியர் புதுபுதுச் சிற்றின்பங்களுக்கென

முழுநேரத்தையும் ஒதுக்கி திட்டமிடுவர். கிளர்ச்சிகளின் கோலாகலமும் தொடர்ந் தேர்ச்சியான விருந்துண்ணலுமிருக்கும்; நோவாவின் மற்றும் லோத்தின் நாட்களைப்போல அவர்கள் விவாகத்தில் கொள்வனையும் கொடுப்பவையும் தீவிரித்து தொடருவதாகும்; வாங்குவதும், விற்பதும், கட்டுவதும், நாட்டுவதும் கடந்து கொண்டேயிருக்கும்.

அவர்கள் இரத்தநாளங்களில் இரத்தம் கொதித்து ஓடும்; பணமே அவர்கள் தெய்வமாகும்; உல்லாசமே அவர்கள் பிரதான ஆசாரியன்; அடங்காத உணர்ச்சியே Passion அவர்களது தொழுகையின் சடங்குமுறை!

இது ஓர் இசையின் நகரம்! அதின் வியாபார வாழ்க்கையின் பேரிரைச்சலும், ஓயாசப்தங்களின் மத்தியில் அதின் உல்லாச களியாட்டு ஸ்தலங்கள் மற்றும் திரையரங்குகளின் இசையோசை மேலெழுந்து கேட்டுக் கொண்டிருக்கும். சுரமண்டலக்காரரும், கீத வாத்தியக்காரரும், நாகசுரக்காரரும், எக்காளக்காரருமுடைய சத்தம் கேட்டுக்கொண்டிருக்கும்(வெளி *18:22*). உலகத்தின் பிரதித்திபெற்ற பாடகர்களும், இசைமீட்டர்களும் அங்கிருப்பர். இரவும் பகலும் அதின் திரையரங்குகளும், இசையரங்குகளும் ஓடிக்கொண்டிருக்கும்; உண்மையில் இரவென்று இருக்காது; பகலைப்போல மின்னொளிவிளக்குகளின் ஜோடனை அந்நகரை நிழலில்லாமல் பிரகாசிக்கச்செய்யும்; பண்டகசாலைகளும், தொழில்கூடங்களும் அடைப்பதேயில்லை; இரவென்றோ பகலென்றோ, ஞாயிறென்றோ வித்தியாசமிராது; உல்லாசத்தின் பைத்திய துடிப்பும் ஐசுவரிய பெருக்கத்துக்கான உள்ளீர்ப்பு வேட்கையும் தொடந்தேர்ச்சியாய் அணையாது தொடரும். இவையாவும் இலகுவானதாயிருக்கும், ஏனெனில் இவ்வுலகத்தின் தேவன் சாத்தான் மானிடரின் இதயங்களையும் சரீரங்களையும் ஆட்கொண்டிருப்பான் Possess; வசனம் *2*-ல் *(18:2)* பாபிலோன் அவ்வமயம் 'பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிருக்கவுள்ளது'. தீவிரமான மாயமந்திரம் சார்ந்த முறைமைகளின் Occultism இருக்கையாய் இதுகாணப்படும்; ஆவியுலக இடையீட்டாளாக Medium இருந்து

மாற்று உலகங்களோடு தொடர்பு கொள்ள விருப்பமுள்ளோர் பாபிலோனுக்கு தீவிரிப்பர்; எப்படி மாம்சீக உணர்வு உல்லாசங்களுக்கும் புதிர்மாதிரிகளுக்கும் Fashions பாரீஸ் நகரை ஆண்களும், பெண்களும் அணுகுவதுபோல அந்நாளில் பிசாசுகளும், சரீரங்களில்லா ஆத்துமாக்களும், மற்றும் அசுத்த ஆவிக்களும் மானிடர்களது சரீரங்களில் புகுந்து தாபரிப்பதற்கு ஏற்ற தருணத்தை தங்கள் வாழ்விலே அவ்வமயம் பாபிலோனில் கண்டடையும். மேலே காணும் வளிமண்டலம் மற்றும் கீழுள்ள பாதாள உலகத்திலிருந்து Abyss எண்ணுக்கடங்கா லேகியோன்களான பிசாசுகளது ஆவிகள் பாபிலோன் பிசாசு பிடித்த மனிதராலும், பெண்டிராலும் நிரப்பப்படுமளவுக்கு வந்து கொண்டிருக்கும். அதின் உச்சக்கட்டத்து மகிமையின்போது பாபிலோனின் வீழ்ச்சிக்கு சற்று முன்னர் சாத்தானாலேயே, அந்திக்கிறிஸ்துவில் 'மிருகமாக' அவதாரமெடுத்து, ஆளப்படப்போகிறது.

ஆனால் பாபிலோனின் அழிவுக்கு முன்பாக தேவன்தமது சொந்த மக்களை கிருபையாக இரங்கி மீட்டுக்கொள்வார். ஏனெனில் வானத்திலிருந்து வருகின்ற ஓர் சத்தம் இவ்விதமாக கூக்குரலிடவுள்ளது: 'என் ஜனங்களே! நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உட்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாடமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்' (வெளி. *18:4*).

நீதிமானான லோத்து தப்பியது வரையில் சோதோமும் கோமோராவும் அழிக்கப்படக் கூடாதிருந்ததுபோல, பாபிலோன் அதின் சகல நீதிமான்களும் அதினின்று வெளியேறி தீவிரித்து சென்று விடுகிறவரை அழிக்கப்படாதிருக்கவுள்ளது.

இந்நகரத்தின் அழிவு திடீரெனவும், எச்சரிப்பற்றதாயும் இருக்கும்; ஓர் பயங்கரமான புசல் Storm நகரத்தின்மேல் வீசும்; மின்னலும் இடிமுழக்கமும் நிற்காதவாறு உண்டாகும்; நகரம் அக்கினியால் கொளுத்தப்படும்; நடு மத்தித் தொடங்கி சுற்றுவட்டம் வரை பூமியதிர்ச்சி அதனை குலுக்கும். உயரமிக்கக் கட்டடங்கள், தொங்குத் தோட்டங்கள், மாபெரும் கோபுரங்கள் அசைவுற்று கீழே சாயும்; பூமியின் மேல்பரப்பு கீறலுற்று திறக்கும்; முழு நகரம் அதின் குடிவாழ்வோருடன் ஓர் ஏந்திரக்கல்

போன்று(வச. 21) ஓர் எரிகின்ற தாரின்(கீல்) உள்ளிறங்கும்; மற்றும் புகை ஓர் எரிகின்ற நெருப்படுப்பினதுபோல மேலெழும்பும்; ஐப்பிராத்து நதி நீர்கள் எரிகின்ற நிலக்கீல் ஏரியினுள் கொட்டுவதால் உருவாகின்ற நீராவிகளின் ஏராள மேகக்கூட்டத்தால் காட்சியின் அகோரம் இன்னமும் கடுமையாக்கப்படும் Intensified. அந்நீராவிகள் இரவுவரும்போது எரிகிற நகரத்தின் வெளிச்சத்தை பிரதிபலிக்கும் Reflect அதினால் அந்த சமபூமியிலிருக்கும் அத்தேசத்தின் எல்லாதிசைகளிலும் மைல்கள் தூரத்துக்கும் இக்காட்சி காணக்கூடியதாகும். பூமியின் ராஜாக்களும், பூமியின் வர்த்தகர்களும் கப்பல் மாலுமிகள் யாவரும், கப்பல்களில் யாத்திரை பண்ணுகிறவர்களும் கப்பலாட்களும் சமுத்திரத்திலே தொழில் செய்கிறயாவரும் தூரத்திலே நின்று அவளது அழிவினிமித்தம் 'ஐயையோ, மகாநகரமே! ஓரே நாளிகையில் பாழாய்ப்போனாயே!' என்று ஓலமிட்டு அழுவார்கள்; அதே வேளையில் பரலோகங்கள் களிகூரும்; அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக தேவன் அவளுக்கு இரட்டிப்பாக பலனளித்துள்ளார்; இவ்விதமாக பாபிலோன் மகாநகரம் வேகமாய்த்தள்ளுண்டு, இனி ஒருபோதும் காணப்படாமற் போகும்.

அதிகாரம் ஆறு

சிங்கத்தின் குகை
The Lion's Den

தானியேலுடைய முதன்மை
The Primacy of Daniel

'தானி. *6:1-3*'

'ராஜ்யம் முழுவதையும் ஆளும்படிக்கு தன் ராஜ்யத்தின் மேல் நூற்றிருபது தேசாதிபதிகளையும், ராஜாவுக்கு நஷ்டம் வராதபடிக்கு அந்த தேசாதிபதிகள் கணக்கு ஒப்புவிக்கிறதற்காக அவர்களுக்கு மேலாக மூன்று பிரதானிகளையும் ஏற்படுத்துவது தரியுவுக்கு நலமென்று கண்டது; இவர்களில் தானியேல் ஒருவனாயிருந்தான்; இப்படியிருக்கையில் தானியேல் பிரதானிகளுக்கும், தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாய் இருந்தான்; தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்'.

இந்த அதிகாரம் மேதிய- பெர்சியா Medo Persian சாம்ராஜ்யமான புறஜாதியாரின் காலங்களுடைய இரண்டாம் உலக சாம்ராஜ்யத்தை நமக்கு அறிமுகம் செய்கிறது. 'பொன்னாலான தலை' The Head of Gold அறுபத்து ஏழுவருடங்கள் நீடித்தது; இப்பொழுது பேருருவச்சிலையின் வெள்ளியிலான மார்பும், புயங்களும் தோன்றுகின்றன. பாபிலோனின் வீழ்ச்சி கி.மு.538-ல் ஏற்பட்டதாலும், மேலுமாக தரியு Darius உடனடியாக சிங்காசனத்தை எடுத்து, 536-ல் மரித்ததாலும் இவ்வதிகாரத்தில் உரைக்கப்பட்ட சம்பவம் அவ்விரண்டு வருடங்களுக்குள்ளே நடந்தேறியிருக்கவேண்டும். தானியேல் அவ்வமயம் சுமார் தொன்னூறு வருடங்கள் வயதுடையவராயிருந்தார்; இவ்வயது மூப்பில் தானியேல் தரியு அவர் மீது வைத்த அத்தகைய ஓர் பெரும் பொறுப்புப்பணிக்கு ஈடு இணையாகும் படி விளங்கினார் என்பது அதிசயிக்கத்தக்கது;

தரியு மூன்று பிரதானிகளில் ஒருவராக மட்டுமன்றி அவர்களுக்கும் தலைவராக்கினார். இதைச்செய்யத் தரியுவைத் தூண்டியது என்னவென்று சொல்லப்படவில்லை. ஏதோ வழியில் அவன் தானியேலுடைய நாணயம் Integrity மற்றும் மேலோங்கிய அரசியல் மேதகைப்பண்பு ஆகியவையுடன் பழக்கத்தொடர்பு கொண்டிருக்கவேண்டும்; மேதியா-பெர்சியா சாம்ராஜ்யம் பாபிலோன் இருந்தது போல் ஓர் முழுமையான முடியரசா யில்லை Absolute Monarchy; பிரதானிகள் Presidents மற்றும் தேசாதிபதிகள் Princes ஒருவகையான பேராண்மைக் கழகம் Congress அல்லது சட்டமன்றம் Parliament உருவமைத்தனர்; அதற்கு சட்டங்கள் உருவாக்க ஓர் அதிகாரம் இருந்தது; இவைகள் ராஜாவினால் பின் ஒப்புதல் பெற்றபின்பு சட்டம் மாற்றப்பட முடியாததாயிற்று Unalterable.

வெகுசீக்கிரத்தில் தரியு தானியேலது தகுதிப்பாட்டை அறிந்து கொண்டான். அவருடைய விசேஷித்த Excellent Spirit ஆவியின் காரணமாகப் பிரதானிகளுக்கும், தேசாதிபதிகளுக்கும் மேலாக முன் மதிப்பீடிட்டான் Preferred, முழு ஆட்சி அதிகார எல்லைக்கும் மேலாக நியமிக்க எண்ணினான். இது அறியப்பட்டபோது மற்ற தேசாதிபதிகளும், பிரதானிகளும் பொறாமையினாலும், பயத்தினாலும் நிரப்பப்பட்டனர். ஏனெனில் தானியேல் சாம்ராஜ்யத்தின் காரியாதைகளின் நடைமுறை ஆட்சியில் எந்தவிதக் கைக்கூலியோ அல்லது நாணயமின்மையோ Dishonesty ஏற்காதவர் என்று நன்கறிந்திருந்தனர்; அவர்கள் தங்கள் பதவிகளையோ அல்லது லாபமீட்டலின் தருணத்தையோ இழக்க விரும்பவில்லை; ஆகவே அவர்கள் அலுவலகப்பணியில் நெறிதவறிய நடத்தையின் குற்றச்சாட்டை பழம் பெரும் யூதனுக்கு எதிராக எழுப்ப வகைதேடினர். ஆனால், அவர்கள் எந்தவொரு தருணத்தையோ, குற்றத்தையோ காணவில்லை; பின்பு அவர்கள் நரகத்துக்குரிய மற்றும் பேய்த்தனமான திட்டம் ஒன்றைத் தீட்டினர்.

ஓர் பேய்த்தனத் திட்டம் A Diabolic Plot

'அப்பொழுது பிரதானிகளும், தேசாதிபதிகளும் ராஜ்யத்தின் விசாரிப்பில் தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள்; ஆனால், ஒரு முகாந்தரத்தையும்

குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது. அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன் மேல் சுமத்த யாதொரு குற்றமும்,குறைவும் காணப்படவில்லை அப்பொழுது அந்த மனுஷர் நாம் இந்தத் தானியேலை அவனுடைய தேவனைப் பற்றிய வேதவிஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடிக்கக்கூடாது என்றார்கள்; பின்பு அந்தப் பிரதானிகளும், தேசாதிபதிகளும் கூட்டங்கூடி ராஜாவினிடத்தில் போய் அவனை நோக்கி தரியு ராஜாவே நீர் என்றும் வாழ்க எவனாகினும் முப்பது நாள் வரையில் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்தத்தேவனையானாலும், மனுஷனையானாலும் நோக்கி யாதொரு காரியத்தைக்குறித்தும் விண்ணப்பம் பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட, ராஜா கட்டளைப் பிறப்பித்து, உறுதியான தாக்கீது செய்யவேண்டுமென்று ராஜ்யத்தினுடைய எல்லாப் பிரதானிகளும், தேசாதிபதிகளும், பிரபுக்களும், மந்திரி மார்களும், தலைவர்களும் ஆலோசனைப் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால், இப்போதும் ராஜாவே, மேதியருக்கும்-பெர்சியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படியே, அந்தத் தாக்கீது மாற்றப்படாதபடி நீர் அதைக்கட்டளையிட்டு அதற்குக் கையெழுத்து வைக்க வேண்டும் என்றார்கள். அப்படியே ராஜாவாகிய தரியு அந்தக்கட்டளைப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைத்தான்’.

‘தானி. 6:4-9’

சர்ப்பத்தின் Serpent தந்திரத்தை இச்சதித்திட்டம் வெளிப்படுத்துகிறது. தானியேல் ஒர் ஆழமான மதநம்பிக்கையுள்ளவர் என்று அவர்கள் அறிந்திருந்தனர்; அவருடைய தேவனிடம் மெய்ப்பற்றற்றிருக்கச் செய்ய Disloyal எதாலும் எவராலும் கூடாதெனவும் அறிவர்.பழம்பெரும் யூதனுக்காயிருந்த தரியுவின் பிரீதியின்காரணமாக அவர்கள் அவரை (அகப்படுத்த) தொடர்ந்திருந்ததை தரியுவை அறியவிடுவது அடாதகாரியமெனவும் அறிந்தனர். அதே வேளையில் அவர்கள் அவரை (பழைய யூதனை) வயது

காரணமாக ஒதுக்கிவைக்கப்பட்டவர் ஆகவும் Super Annuated, சிறுபிள்ளைத்தனமுடையவராகவும் Dotage கருதினர். அவர்கள் எந்தவொரு விண்ணப்பமும் எபிரேயரின் தேவனிடம் ஏறெடுக்கக்கூடாது என்ற அந்த 'ஆணை'யை Decree வாசிக்கச் செய்திருந்தால், ராஜா உடனடியாக அது தானியேலைக் குறிவைத்தது என உள்ளாத்தலால் முன்னறிந்து அதைக் கையெழுத்திட மறுத்திருப்பார். அதினால் அவர்கள் அதனைப் பொதுப்படையாக்கி இவ்விதம் தங்கள் சொந்த தெய்வங்களின் மீது நிந்தையைக் குவித்தனர்; அதாவது அவர்களுடைய விரோதத்தின் இலக்கானவரை அழித்தொழிக்கும்படியாய்! நேபுகாத்நேச்சாரைப் போன்று தரியு ராஜா ஓர் முழுமையான முடியரசனல்ல என்பதையும் அவன் தனது ஆலோசகர்களது சித்தத்துக்கு Will கட்டுப்பட்டவர் என்பதையும் அவர்கள் முன்வைத்த எந்தவொரு ஒருமித்திணைந்த கருத்துக்களையும், பரிந்துரைகளையும் அவர் நிராகரிக்க வலுவிழந்தவர் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். அவர்களது திட்டம் வெற்றிபெற்று ராஜா அத்தகைய ஓர் ஆணையில் ஒருதரம் கையெழுத்திட்டு முத்திரையிட்டால் அதை அவரால் பின்வாங்கிப் போடமுடியாது Repeal ஏனெனில் மேதியா-பெர்சியாவுடைய சட்டத்தின்கீழ் ஆணை Decree மாற்றப்படமுடியாதது Irrevocable.

அவர்களது நடத்தையின் வழிமுறையைத் தீர்மானித்தவர்களாய், பொய் நாவுகளோடு, ராஜாவின் சமூகத்துக்குள் பிரவேசித்தனர்; சகலப் பிரதானிகளும், ஆளுநர்களும், தேசாதிபதிகளும், ஆலோசகர்களும், படைத்தலைவர்களும் ஒருங்கிணைந்து அத்தகைய ஓர் அரச ஆணையை Royal Decree நிலை நாட்ட ஆலோசிக்கப் பட்டிருப்பதாக அவனிடம் எடுத்துரைத்தனர். ஆனால், பிரதானிகளது தலைவர் தானியேலிடம் அவர்கள் கலந்தாய்ந்திருக்கவில்லை அதில் அவர்கள் பொய்கூறினர். அவர்களின் புதுக்கருத்தால் தரியு ராஜா சந்தேகமின்றி முகப்புகழ்ச்சி செய்யப்பட்டான்; ஏனெனில், அந்நாட்களில் அவர்களது ராஜாக்களை கடவுள்களாக கண்ணோக்கிப் பார்ப்பது அசாதாரணமல்ல! அத்தகைய ஸ்தானத்தே அவனை உயர்த்துவதாக, எந்தவொருவனும் ராஜாவைத் தவிர வேறொருவருக்கும் முப்பது நாட்களுக்கு விண்ணப்பிக்க லாகாது

என்பது கட்டளையாக இருந்தது. ஆகவே ராஜா, தான் நேசித்த தானியேல் கலந்தாயப்பட்டிருக்கவில்லை என்பதையறியாது பொறிக்குள் விழுந்தான்; ஆணை தயாரிக்கப்பட்டு ராஜாவால் கையெழுத்திடப்பட்டது; அரச முத்திரையால் பதிக்கப்பட்டது; மேதிய - பெர்சிய சட்டத்தின்படி வெளிப்படையாக பிரகடனம் செய்யப்பட்டது; அதினால் மாற்றப்பட முடியாததாயிற்று.

ஓர் பயமற்ற பணிமுதல்வர்
A Fearless Official

விரைவில் என்ன செய்யப்பட்டிருந்தது என்பது தானியேலின் காதுகளில் எட்டின; அரச ஆணை Royal Decree அவரையே இலக்காக்கியதை அறிந்தார். அவனது தேவனிடம் ஜெபிப்பது என்பது அதை உடைக்கிறதாயிற்று. அவரது தேவனிடம் பற்றுறுதிகொள்கை அல்லது அவரது ராஜாவிடம் அரசப்பற்றுகை இவ்விரண்டில் அவர் ஒன்றைத் தெரிவு செய்யவேண்டும்; அவரது தேவனிடம் வாய்மைப் பற்றில்லாது இருந்து அதனால் தனது ஜீவனைக் காப்பதா? அது அவரது சகல கடந்த காலத் திடநம்பிக்கைப்பற்றையும் மறுதலிப்பதாகிவிடும். ஆனால், அவனது தேவனிடம் இரகசியமாக ஜெபிக்க வேறுவழியேதுமிருக்கவில்லையா? அவர் தன் சொந்த வீட்டில் ஏதாமோர் இரகசிய அறைக்குள் பிரவேசித்து, கதவைத் தாழிட்டுப் பூட்டி, சாவி துவாரத்தை மறைத்து, கதவுப்பலகணிகளை மூடி, நிசப்தமாய் ஜெபிப்பதால், அவரது விரோதிகளுக்கு அவருக்கு எதிரான எந்தவித அறிகுறி சான்றிருக்கக்கூடுமோ? நம்மில் அநேகர் அதைச்செய்ய சோதிக்கப்பட்டிருப்பர். ஆனால் தானியேல் அந்தவித மூலச்சரக்கால் Stuff ஆக்கப்பட்டவரல்ல! அவர் ஓர் கோழையல்ல! அவருடைய தேவனோடுள்ள பற்றுறுதியின் ஓர் கேள்வியைப் பொறுத்தவரை தனது ஜீவனை அவர் மதிக்கவில்லை அவர் செய்தது என்ன?

'தானியேலோவென்றால், அந்தப்பத்திரத்திரத்துக்கு கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்த போதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்றுவேளையும் தன் தேவனுக்கு

முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்'. (தானி.6:10)

இதைத்தான் அச்சதிகாரரர்கள் தானியேல் செய்ய எதிர்பார்த்தார்கள். எந்த ஆணையும், தன் ஜீவனை ஆபத்துக்குள்ளாக்கும் ஓர் ஆணையாலும் தினமும் தன் தேவனிடம் ஜெபிப்பதிலிருந்து தடுக்கமுடியாது என அவர்கள் அறிந்தனர். செய்யவேண்டியதெல்லாம் ஜெபிக்கின்ற மணி நேரத்தே அவரது வீட்டின் எருசலேம் நோக்கியபக்கத்தே அவர்கள் ஒன்று திரண்டு அவரை அவருடைய ஜெபநிலையில் பார்ப்பதோடல்லாது அவரது ஜெபவிண்ணப்பத்தைக் காதாரக்கேட்டலுமாயிற்று.

'அப்பொழுது அந்தமனுஷர் கூட்டங்கூடி, தானியேல் தன் தேவனுக்கு முன்பாக ஜெபம்பண்ணி விண்ணப்பம் செய்கிறதைக் கண்டார்கள்' தானி. 6:11.

தானியேலின் விரோதிகள் அவரைத் தவறாய் நிதானிக்கவில்லை அவர்கள் தங்கள் திட்டத்தின் வெற்றியில் களிகூர்ந்தார்கள்; உடனடியாக ராஜாவின் கவனத்துக்கு விவகாரத்தைக் கொண்டுவந்தார்கள்.

ஓர் துணையில்லா ராஜா A Helpless King

'தானி 6:12-15'

'பின்பு அவர்கள் ராஜாவுக்கு முன்பாக வந்து, ராஜாவின் தாக்கீதைக் குறித்து எந்த மனுஷனாகிலும் முப்பது நாள் வரையில் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்தத் தேவனையானாலும், மனுஷனையானாலும், நோக்கி யாதொரு காரியத்தைக் குறித்தும் விண்ணப்பம் பண்ணினால் அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்படவேண்டும் என்று நீர் கட்டளைப்பத்திரத்தில் கையெழுத்து வைத்தீரல்லவா என்றார்கள். அதற்கு ராஜா அந்தக்காரியம் மேதியருக்கும்-பெர்சியருக்கும் இருக்கிற மாறாதப் பிரமாணத்தின்படி உறுதியாக்கப்பட்டதே என்றான். அப்பொழுது அவர்கள் ராஜாவை நோக்கி சிறைப்பிடிக்கப்பட்ட யூதேயா தேசத்தின் புத்திரரில் தானியேல் என்பவன் உம்மையும்

நீர் கையெழுத்து வைத்துக்கொடுத்தக் கட்டளையையும் மதியாமல், தினம் மூன்று வேளையும் தான் பண்ணும் விண்ணப்பத்தைப் பண்ணுகிறான் என்றார்கள். ராஜா இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தன்னில் மிகவும் சஞ்சலப்பட்டு, தானியேலைக் காப்பாற்றும்படிக்கு அவன்பேரில் தன் மனதை வைத்து, அவனை தப்புவிக்கிறதற்காகச் சூரியன் அஸ்தமிக்கும் மட்டும் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்த மனுஷர் ராஜாவினிடத்தில் கூட்டமாய் வந்து; ராஜா கட்டளையிட்ட எந்தத் தாக்கீதும் கட்டளையும் மாற்றப்படக்கூடாதென்பது மேதியருக்கும் - பெர்சியருக்கும் பிரமாணமாயிருக்கிறதென்று அறிவீராக என்றார்கள்'.

'சிறைப்பிடிக்கப்பட்ட யூதேயா தேசத்தின் புத்திரரில் அத்தானியேல்' என்று சதிகாரரர்கள் தானியேலைக் குறித்து இகழ்ச்சியாய்ப் பேசுகிறதைக் கவனிக்கவும். 'அப்பழம்பெரும் யூதன்' ஓர் சிறையடிமை Captiveயாய் அவனது பதவிக்காக உம்மைச் சார்ந்துள்ளவன், உமது நட்பாதரவுகளுக்கு நன்றியோடும் பாராட்டிப் போற்றுதலோடும் இருப்பதைவிட்டு தூரமாகி உமது ஆணையை மதிக்காமல் உம்மை அவமரியாதைப்படுத்துவதா! என்பதுபோல! தானியேலோடு ராஜா கோபமூளச் செய்வதற்கு மாறாக அவர்களின் குற்றச்சாட்டு எதிர்மறை விளைவை உண்டாக்கியது. ராஜா தான் எவ்வாறு மோசடி செய்யப்பட்டதை Tricked அறிந்தவனாய்,அவன் தனக்குள்ளே மிகவும் சஞ்சலப்பட்டான். அவன்தான் பொறியிலக்கப்பட்டதான உணர்ச்சியில் புண்பட்டான். அவன் தனது உள்பார்வை மற்றும் நிதானிப்பை அவனது பெருமை எவ்விதம் மேற்கொண்டுவிட்டதெனக் கண்டான். எல்லாப் பிரதானிகளும் இக்காரியத்தில் சம்மதித்ததாக அவனிடம் அவர்கள் கூறியபோது அவன் தான் சந்தேகப்பட்டிருக்கவேண்டியது என இப்போது உணர்ந்தான். தானியேல் இத்தகைய ஓர் விக்கிரக வணக்கத்துக்குரிய Idolatrous ஆணைக்கு ஒருபோதும் சம்மதித்திருக்க மாட்டார் என்று ஓர் கணப்பொழுது சிந்தனை அவனுக்குத் தெளிவுபடுத்தியிருக்கும் எனவும் உணர்ந்தான். தானியேல் ஆதரவு கொடுக்காத எந்தக் காரியமும் கேள்விக்குரியதென்று ராஜா நன்கறிந்தார். ராஜா தான் ஓர் உதவியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டதை விரைவில்

கண்டுபிடித்தான். அவன் தானியேலை நேசித்தான்; அவனைக் காப்பாற்ற விரும்பினான்; அவன் சூரியன் அஸ்தமிக்கும் மட்டும் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தான். சட்டத்தை மீறாது தவிர்க்க எந்த வழிவகையும் அவன் காணவில்லை; மாலையில் தானியேலது விரோதிகள் மீண்டும் கூடி தானியேல் சட்டமீறுகையின் தண்டனையைச் செலுத்த வேண்டுகை விடுத்தனர்.

சிங்கத்தின் கெபி The Lion's Den

'அப்பொழுது ராஜா கட்டளையிட அவர்கள் தானியேலைக் கொண்டுவந்து சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள்; ராஜா தானியேலை நோக்கி: நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்றான். ஒருகல் கெபியினுடைய வாசலின்மேல் கொண்டுவந்து வைக்கப்பட்டது; தானியேலைப் பற்றிய தீர்மானம் மாற்றப்படாதபடிக்கு ராஜா தன் மோதிரத்தினாலும், தன் பிரபுக்களின் மோதிரத்தினாலும், அதின்மேல் முத்திரை போட்டான். தானி. *6:16-17*'

இவ்விதமாக வயதுமிகுந்த உண்மையுள்ள ஊழியன் தானியேல் இழிந்த மாபெரும் கேடுவிளைவிப்பவன் போல சிங்கங்களால் விழுங்கப்படுவதற்காக சிங்கங்களின் கெபிக்குள் தள்ளப்பட்டார். மூன்று நேர்மைமிக்க எபிரேயப் புத்திரர்கள் எரிகின்ற அக்கினிச் சூளையினுள் தள்ளப்படுதற்கு அனுமதித்திருந்த தேவன் அவர்களுடைய விடுதலைக்காக ஓர் அற்புதத்தை அங்கே நிகழ்த்தும்படியான ஒரே காரணத்துக்காக அதை அனுமதித்ததுபோல, இங்கேயும் அதே காரணத்துக்காக தேவன் தமது வயதுமுதிர்ந்த ஊழியன் சிங்கங்களின் கெபிக்குள் தள்ளப்பட அனுமதித்தார். ராஜா தானியேலை விடுவிக்கத் தன்னால் முடிந்ததையெல்லாம் செய்தும் தோல்வியுற்றார். இப்போது காட்சிகளத்தில் தோன்றுகின்ற தானியேலின் தேவன் தோற்பாரா?

ஓர் மாபெரும் விடுதலை A Great Deliverance

'பின்பு ராஜா தன் அரண்மனைக்குப்போய், இராமுழுதும் போஜனம் பண்ணாமலும், கீதவாத்தியம் முதலானவைகளைத்

தனக்குமுன்பாக வரவொட்டாமலும் இருந்தான். அவனுக்கு நித்திரையும் வராமற்போயிற்று. காலமே கிழக்கு வெளுக்கும்போது ராஜா எழுந்திருந்து சிங்கங்களின் கெபிக்குத் தீவிரமாய்ப்போனான்; ராஜா கெபியின் கிட்ட வந்தபோது, துயரசத்தமாய் தானியேலைக் கூப்பிட்டு: தானியேலே ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று தானியேலைக் கேட்டான். அப்பொழுது தானியேல்: ராஜாவே, நீர் என்றும் வாழ்க, சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு தேவன் தன்னுடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக்கட்டிப் போட்டார்; அதேனென்றால், அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன். ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிக்கேடு செய்ததில்லை என்றான். அப்பொழுது ராஜா தன்னில் மிகவும் சந்தோஷப்பட்டு, தானியேலை கெபியிலிருந்து தூக்கிவிடச் சொன்னான்; அப்படியே தானியேல் கெபியிலிருந்து தூக்கிவிடப்பட்டான்; அவன் தன் தேவன் பேரில் விசுவாசித்திருந்தபடியால், அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை' தானி.6:18-23

மேலே காண்பதிலிருந்து, தானியேலிலிருந்த ராஜாவின் அக்கறை மற்றும் தன்னைத்தானே கண்டனப்பழித்துரைப்பு நேர்மையாயிருந்தது Genuine எனக் காண்கிறோம். அல்லாவிடில் அவன் ஓர் தூக்கமற்ற இரவைக் கழித்திருக்க மாட்டான். தானியேலுடைய தேவன் மீதிருந்த அவருடைய நேர்மையானப் பற்றுறுதியால் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுத்ததில் ராஜா மிகவும் அழுத்தமாய் இழுக்கப்பட்டபடியால் எப்படியாயினும் தானியேலின் தேவன் அவரை விடுவிப்பார் என்று உணர்ந்தான். இப்படியான நம்பிக்கையுடன் சிங்கத்தின் குகைக்கு அதிகாலமே விரைந்தான். தன் நம்பிக்கை நிரூபிக்கப்பட்டதை கண்டான். பின்பு ராஜா மகிழ்ச்சிப் பெருக்கால் நிறைந்து குகையிலிருந்து தானியேலை வெளியே தூக்கி எடுக்க கட்டளையிட்டான். அவன் பரிசோதிக்கப்பட்ட போது எந்தவிதக் காயத்தின் அறிகுறியும் அவரில் காணப்படவில்லை இது எரிகிற அக்கினிச் சூளையின் அற்புதத்தினது ஓர் மறு நிகழ்வாயிற்று; அதிலிருந்து மூன்று எபிரேயப் புத்திரர் ஓர் முடிகூட கருகாமல் விடுவிக்கப்பட்டனர்.

எபிரேயரது ஆக்கியோன் இதைக்குறிப்பீடு செய்கையில் 'சிங்கங்களின் வாய்களை அடைத்தனர்' எனும் வார்த்தைகளில் குறிப்பிடுகிறார்: எபி.11:33. இவ்விதமாய் தானியேலுடைய நம்பிக்கை மெய்ப்பித்துக் காட்டப்பட்டது.

தானியேலின் விடுதலையில் ஓர் அழகான ஆவிக்குரிய பாடம் உள்ளது. சிங்கங்களின் குகை அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புடையக் கல்லறையை முன்னுருவமாக்குகிறது. அதினுள் கர்த்தர் கிடத்தப்பட்டார். அதின்முன் ஓர் கல் உருட்டப்பட்டு, பாதுகாப்பாக மூடப்பட்டு ராஜாவின் சிறப்பு முத்திரையால் அடையாளப்படுத்தப்பட்டது. ஆனால், தானியேலை சிங்கங்கள் சேதப்படுத்த முடியாததுபோல, மரணத்தின் பற்களுக்குள் சென்ற இயேசுவும் மரணத்தால் பிடித்துவைக்கப்படக் கூடவில்லை; தானியேலைப் போல அவரது சிறைக்கூடத்திலிருந்து உயிர்த்தெழுகை மூலம் விடுதலையாக்கப்பட்டார். தானியேல் சிங்கங்களின் குகையிலிருந்து விடுதலையாக்கப்பட்ட போது, அதினுள் மீண்டுமாக எறியப்படக்கூடவில்லை அவர் அந்தச் சட்டத்திலிருந்து சுயாதீனமடைந்தார், ஏனெனில் அவர் அதன் தண்டனையைச் செலுத்திவிட்டார். அப்படியே இயேசுவை நாம் நமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது, நாம் 'பாவம் மற்றும் மரணம்' முடைய சட்டத்திலிருந்து சுயாதீனராகிறோம்; ஏனெனில் நமது இரட்சகராகிய இயேசு சிலுவை மீது அதினுடைய தண்டனையைச் செலுத்திவிட்டார். மேலும் உயிர்த்தெழுதலினால் கல்லறையிலிருந்து அவருடைய விடுதலை மூன்று நாட்களுடைய தண்டனைத்தீர்ப்பை அவர் நிறைவேற்றிவிட்டிருப்பதை காட்டுகிறது. கல்லறை அதற்கு மேலுமாக அவரைப் பிடித்து வைக்கக்கூடவில்லை ஓர் குற்றவாளி தனது சிறைக்காலம் முடிந்தபின் சிறைக்கூடக் கம்பிகளுக்குப் பின்னால் அதற்கப்புறம் எப்படி வைக்கப்பட முடியாதோ அதேப்போல்!

ஓர் நியாயமான தண்டனை A Just Punishment

ஆனால், தானியேலின் விடுதலை ராஜாவைத் திருப்திபடுத்தவில்லை. சுய-நலத்துடனும், மனிதாபமற்ற முறையில் தானியேலின் ஜீவனை இடுக்கண்ணுக்குள்ளாக்கிய

சதிமோசக்காரர்கள் அவர்களது சொந்த மருந்தின் ஓர் சிறிதளவை அவர்களே அருந்தவேண்டும், அத்தோடு அவர்களது கடவுள்கள் சிங்கத்தின் வாய்களினின்று அவர்களைக் காப்பாற்றப் போகின்றாரா எனப் பார்க்க உணர்த்தப்பட்டார். ஆகவே,

'தானியேலின் மேல் குற்றஞ்சாட்டின மனுஷரையோ வென்றால், ராஜா கொண்டுவரச் சொன்னான்; அவர்களையும் அவர்கள் குமாரரையும் அவர்கள் மனைவிகளையும் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள்; அவர்கள் கெபியின் அடியிலே சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள்மேல் பாய்ந்து, அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப் போட்டது'. தானி. *6:24*.எவ்வாறு பொல்லாதோர் அவர்களுடைய குடும்பங்களைத் தங்கள் பொல்லாப்புக்களில் சிக்க வைக்கிறார்கள், அத்தோடு அவர்கள்மீது துக்கத்தையும், மரணத்தையும் வருவிக்கிறார்கள் என இங்கே நாம் பார்க்கிறோம். சிங்கங்கள் பசியாயில்லை, ஆகவே தானியேலது ஜீவன் காப்பாற்றப்பட்டதில் எந்தவித அற்புதமுமில்லை எனும் வாதாடல் அதே சிங்கங்கள் அந்தப் பொல்லாத மனிதரையும் அவர்கள் குடும்பங்களையும் பிடித்து விழுங்கியக் கடும்பசியுள்ள வகை விதத்தால் நிராகரிக்கப் படுகிறது. தானியேலின் பக்கமாகத் தானியேலுடைய தேவனின் குறுக்கீடு ராஜாவை மனமாற்றப்படுத்தியது. அத்துடன் ஓர் அரசாணையைப் பிறப்பிக்கச் செய்தது:

'ராஜாவின் அரசாணை' The King's Decree

'பின்பு ராஜாவாகிய தரியு தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும், ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதினது என்னவென்றால் உங்களுக்குச் சமாதானம் பெருகக் கடவது. என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டுமென்று என்னாலே தீர்மானிக்கப்படுகிறது; அவர் ஜீவனுள்ள தேவன்; அவர் என்றைக்கும் நிலைத்திருக்கிறவர்; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவு பரியந்தமும் நிற்கும் தானியேலை சிங்கங்களின் வாய்க்குத் தப்புவித்த அவரேத் தப்புவிக்கிறவரும், இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும்

அடையாளங்களையும், அற்புங்களையும் செய்யகிறவருமாக இருக்கிறார் என்று எழுதினான்' தானி. 6:25-27.

இவ்வரசாணை Decree சாம்ராஜ்யத்தின் மதத்தினுள் யோகோவாவுடைய தொழுகையை கூட்டிணைவாக்கியதற்கு Incorporating அதிகமும் ஈடாயிருந்தது. அது நிச்சயமாய் ஒரு காரியத்தைச் செய்தது; 'மத சகிப்புத்தன்மையை' Religious Toleration பிரகடனப்படுத்தீற்று. அத்தோடு யூத சிறைக்கைதிகள் தங்கள் தேவனை நச்சரிப்பு ஏதுமின்றி இதற்குப்பிற்பாடு தொழுது கொள்ள அனுமதிக்கப்பட்டனர். மீண்டுமாக தானியேலின் தேவனிடமுள்ள அவரது உத்தமப் பற்று அவரது பதவி உயர்வால் வெகுமதியளிக்கப்பட்டது. தரியுவின் ஆட்சிக் காலத்தில் மட்டுமின்றி பெர்சியரான கோரேசின் ஆட்சியினூடேயும் தானியேலின் ஜீவன் பாதுகாக்கப்பட்டது. 'தரியுவின் ராஜ்யபாரக் காலத்திலும், பெர்சியராகிய கோரேசுடைய ராஜ்யபாரக் காலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது' தானி. 6:28.

இவ்விதமாக முதல் இரு முடியரசுகளுடையவும் தலைமை ஆலோசகராக Chief Advisor இருக்கும்படி தானியேல் சிங்கங்களின் குகையிலிருந்து விடுவிக்கப்பட்டார். இவ்விரண்டில் ஒன்று மேதியரை(தரியு) யும்,அடுத்தது பெர்சியரையும்(கோரேசு) பிரதிநிதித்துவப்படுத்தும் மேதிய - பெர்சிய இரட்டை ராஜ்யமாகும். பேருருவச் சிலையின் வெள்ளியிலான புயங்கள் மற்றும் மார்பால் உருவகப் படுத்தப்படுபவை.

மனிதன் தெய்வமாக்கப்படுகை Deification of Man

தூரா சமவெளியில் பொற்சிலை Golden Image நிறுத்தப்பட்டதில் முதல் அல்லது பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் தனித்தன்மையின் முனைப்பான கவர்ச்சிக்கூறு Characteristic Feature 'மனிதனை தெய்வமாக்குதலாய்' Deification of Man இருந்தது என நாம்கண்டோம். இந்த அதிகாரத்தில் ஒருவரும் முப்பது நாட்களுக்குத் தரியு ராஜாவைத் தவிர எந்தவொரு தெய்வத்துக்கோ, மனிதனுக்கோ, எந்தவொரு விண்ணப்பமும் ஏறெடுக்கக் கூடாது என்ற 'அரசாணை'யில் மனிதனுடைய தெய்வமாக்கம் என்னும் அதே தனித்தன்மைக்கூறு இரண்டாம்

அல்லது மேதிய - பெர்சிய சாம்ராஜ்யத்திலேயும் இருந்ததைப் பார்க்கிறோம். அதேப்போல் அது கிரேக்கத்திய மற்றும் ரோம சாம்ராஜ்யத்திலேயும் இருந்ததைப் பார்க்கிறோம். இதேக்கூறு 'புறஜாதியாரின் காலங்களின் முடிவு வரை இருக்கவுள்ளது'. அதின் கடைசி சான்றுருவாகயிருக்கவுள்ளது அதின் கடைசி மகா புறஜாதி அரசாளனான 'மிருகம்' Beast அல்லது அந்திக்கிறிஸ்து! வெளி.*13:4; 14-15.* தானியேல், மூன்று எபிரேயப் புத்திரர் போன்று மகா உபத்திரவ காலத்தே அற்புதமான முறையில் Miraculously விடுவிக்கப்படவுள்ள யூத மீந்திருப்போருடைய ஓர் மாதிரியாயிருக்கிறார் A Type.

புத்தகத்தின் விரிவுரை

இரண்டாம் பிரிவு

Prophetical
தீர்க்கதரிசனம்

அதிகாரங்கள் 7-12

அதிகாரம்: ஏழு

நான்கு காட்டியல்பு மிருகங்கள்
The Four Wild Beasts

காட்சிகளுடைய காலவேளை
The Time of the Visions

தானியேல் 7:1

இந்த அதிகாரம், காலக்கிரம வரிசை ஒழுங்குப்படி Chronologically அதிகாரங்கள் ஐந்து மற்றும் ஆறுக்கு முந்தியதாக இருக்கவேண்டும்; இப்புத்தகத்தின் சரிதைப் பகுதியை தீர்க்கத்தரிசன பகுதியினின்று தனி வேறுபடுத்தும் நோக்கத்துடன் இக்கால வரிசை ஒழுங்கு கவனியாதபடியாயுள்ளது Disregarded. இப்பொழுது நாம் இரண்டாம் அல்லது தீர்க்கதரிசன பகுதிக்குள் புகுவோம். இந்த அதிகாரத்தின் ஆரம்ப வார்த்தைகள் பெல்ஷாத்சாரது ஆட்சியின் முதல் வருடத்துக்கு நம்மை திரும்ப எடுத்துச் செல்கிறது. அதன் துல்லிபமான தேதி நிச்சயமற்றதாக உள்ளது; அதிகபட்சமும் அவன் தனது தகப்பனாருடன் மூன்று வருடங்களுக்கு மேலாக பாபிலோன் ராஜாவாக உடன் பங்காளியாயிருக்கவில்லை Not Associated. அவன் கி.மு. 538-ல் கொல்லப் பட்டதால் அவனுடைய ஆட்சியின் முதல் ஆண்டு கி.மு. 541 ஆக இருந்திருக்கலாம். அவ்வமயம் தானியேல் சுமார் 85 வருட வயதுடையவராக இருந்திருக்கலாம். அப்படியானால் இந்த அதிகாரத்தின் காட்சிகளுடைய தேதி பொன்னாலான தலையுடைய சிலையுடைய சொப்பனம் நேபுகாத்நேச்சார் பெற்றதற்கு 62 வருடங்கள் பின்னராயிருக்க வேண்டும். நேபுகாத்நேச்சாரின் மரணத்திலிருந்து (கி.மு. 561) பாபிலோனின் வீழ்ச்சிவரை (கி.மு. 538)யான 23 வருடங்களாலான அமைதியின் காலங்களின்போது years of Silence தானியேல் ஓர் ஓய்வு வாழ்வினை வாழ்ந்தார் எனத் தோன்றுகிறது. அந்த இளைப்பாறுதலின் தேவனோடுள்ள உறவின் வருடங்கள் எத்துணை பாக்கியமுள்ளதாக இருந்திருக்கவேண்டும்! அவைகள் அதிகப்படியும் மோசேயினது எழுத்துரைகள் மற்றும் அவ் வேளையினதாயிருந்த சங்கீதங்கள் மற்றும் தீர்க்கர்களது எழுத்துரைகளை படிப்பதில் செலவிடப்பட்டிருந்தன. இது தானி

9:2-ல் புத்தகங்களுக்கான அவரது குறியீடுகளினின்று தெளிவாகிறது. இவ்வமைதியின் வருடங்களிலேதான் தானியேல் புறஜாதிகளின் காலங்கள் மற்றும் தனது சொந்த ஜனங்களாகிய யூதர்களோடு அக்காலங்களின் அவர்களது தொடர்பு குறித்ததான அதிகப்படியான வெளிச்சத்தை வேத எழுத்துக்களினின்று தேடிக்கொண்டிருந்தபோது நான்கு காட்டியல் மிருகங் களுடைய காட்சி அவருக்கு கிட்டியது. பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் வெளிப்பாட்டு Apocalyptic எழுத்தாளர்களான தானியேல் மற்றும் யோவான் தங்களது வெளிப்பாடுகளை தேவனிடமிருந்து பெற்றபோது அவர்கள் மூதாதையராயிருந்தனர் Old Men. கர்த்தருக்கு மிகவும் பிரியப்பட்டவர் களாகவும் Greatly Beloved இவ்விருவரும் யிருந்தனர். அவர்களது உண்மைத் தன்மையினிமித்தமாக இவ் வெளிப்பாடுகளை அவர்கள் பெற்றனர்.

இந்த அதிகாரம் தானியேல் பெற்ற 3 காட்சிகளை பதிவு செய்கிறது.

1. நான்கு காட்டியல் மிருகங்களின் காட்சி.

2. ஓர் நியாயத்தீர்ப்பின் காட்சி.

3. மனுஷகுமாரன் ராஜ்யத்தை பெறுதலின் காட்சி.

இக்காட்சிகள் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டுள்ள மெய்மை இம் மூன்றும் ஒரே காலத் தருணத்தே காட்சி அளிக்கப்பட்டவை என்பது மறைமுகமாக சுட்டப்படுகிறது.

முதலாவது காட்சி

நான்கு காட்டியல் மிருகங்கள் *தானி. 7:2-3*

இக்காட்சியின் நிகழ்விடம் பெரிய சமுத்திரத்தினது Great Sea கடற்கரையிலாயிற்று. இது ஓர் முக்கியமான உரைவாக்காகும். எப்படியெனில் பழைய ஏற்பாட்டினில் 'பெரிய சமுத்திரம்' எனும் சொல் மத்தியதரைக் கடலுக்காக நிற்கிறது. நான்கு காட்டியல் மிருகங்களால் உருவக அடையாளப்படுத்தப்படுகின்ற தேசங்களுடைய புவியியல்

இடவமைப்பை இடநிறுவுகின்றது. பாபிலோனிய மற்றும் மேதிய - பெர்சிய சாம்ராஜ்யங்கள் மத்தியதரைக்கடல் மீது இடவமைப்பு பெறாவிட்டாலும் கிரேக்கத்திய மற்றும் ரோம சாம்ராஜ்யங்கள் பெறுவது போன்று, அவைகள் வெற்றிபெற்று கீழடக்கிய மத்திய தரைக்கடற்கரை நிலப்பகுதிக்கு அதிகமாய் கடன்பட்டுள்ளன, அவைகளது ஆஸ்தி மற்றும் ஆற்றலுக்கு! இக்கடற்கரை நிலப்பகுதி கிரேக்கத்திய மற்றும் ரோம சாம்ராஜ்யங்கள் நிலைகொண்டதோடு அதிகமதிகமாய் ஈர்த்துக்கொள்ளப் பட்டபோது, பாலஸ்தீனா மையமாய் உட்படுத்தப்பட்ட 'தீர்க்கதரிசன பூமி' மத்தியதரைக்கடலுடைய எல்லை வரையறையாயிற்று; மற்றும் 'பெரிய சமுத்திரம்' Great Sea ரோம சாம்ராஜ்யத்தினுள்ளே 'ரோம ஏரி' Roman Lake-கைவிட சற்று பெரிதாக மாறிற்று.

கொந்தளிக்கும் அலைகளில் தேசங்களுடைய அமரிக்கையின்மை மற்றும் கொந்தளிப்புடைய ஓர் அடையாளச் சின்னம் நமக்கு கிட்டுகிறது. எப்படியெனில், வேதசத்தியங்களில் 'கடல்' தேசங்களுடைய ஓர் மாதிரியாயுள்ளது, வெளி.17:15, ஏசா. 17:12-13. ஆனால் கடல் ஒருபோதும் தன்னில்தானே கொந்தளிப்புக்கு உட்படுவதில்லை; அதினுடைய தடுமாற்றம்/ அலைக்கழிப்பு ஏதாமோர் வெளிப்புற ஆற்றலினால் தூண்டப்படுகிறது, சூறாவளி அல்லது பூமியதிர்ச்சி போன்ற! ஆகவே, தேசங்கள் வெளிப்புறத்தேயிருந்து மாத்திரமே ஒவ்வாமைக்குள் தள்ளப்படுவது கிடையாது. காட்சியில் இத்தகைய வெளிப்புற இயக்கவிளைவுகள் வானத்தின் நாலு காற்றுகள் Four Winds of Heaven என கூறப்படுகிறது இந்நாலு காற்றுகளின் திசைகளை சுட்டுகிறது. அதாவது திசைமானியின் நான்கு புள்ளிகளிலிருந்து வருகிறதான காற்றுகளின் திசைகள்! அவைகளது சர்வ வியாபகத்தை Universality குறிப்பிடுகிறது. இக்காற்றுகள் ஆகாயத்து அதிகாரங்களை Powers of the Air உருவக வெளிப்பாடாக்குகிறது. அதாவது பொல்லாங்கனின் Evil One வல்லமைகளை! அவைகளைக் குறித்து அப்போஸ்தலர் கூறுவதாவது:

எபேசியர் 6:12

அதாவது வானத்தின் நாலுகாற்றுகளால் நாம் புரியவேண்டுவது 'ஆகாயத்து பொல்லாத வல்லமைகளே'!

பூமியுடைய தேசங்கள் மத்தியில் அலைக்கழிப்பை தூண்டிவிடுகிறதற்காக சாத்தான் பயன்படுத்துகிற! மற்றும் இந்த காலசகாத்தத்தின் இறுதி நாட்கள் சமீபமாக நெருங்கிவருகையில் மற்றும் பாலஸ்தீனா யூதர்களால் மீளகுடியமர்வு செய்யப்படுகையில், அதை மையமாகக் கொண்ட சுற்றியுள்ள தேசங்கள் அதிகமதிகமாக கொந்தளிப்பில் தள்ளப்படவே, சாத்தான் தனது கடைசி முயற்சியாக தேவனுடைய திட்டங்களை தோல்வியுறச் செய்யும்படியாக ஆகாய மண்டலத்தின் சகல தீயசக்திகளையும் கட்டவிழ்த்து விடுவான் / செயல்படும்படி செய்வான்.

தனது காட்சியில் தானியேல் கண்ட நான்கு மிருகங்களுடைய பொருளளிப்பை நாம் இப்போது ஆழ்ந்துபடிக்க முற்படுவோமாக! நாம் இவை நான்கும் நேபுகாத்நேச்சார் சொப்பனத்தில் கண்ட பேருருவச்சிலையினது நான்கு உலோகங்களோடு ஒத்திசைவு கொள்வதை பார்க்கமுடியும். பின்னர் ஏன் அதே வெளிப்பாடுடைய மீள மறு நிலைப்படி Repetition இருக்கவேண்டும்? என நீ கேட்கலாம். பதிலுரையாதெனில் மனிதரும், தேவனும் வெவ்வேறு கோணங்களில் தேசங்களை நோக்குகின்றனர். மனிதன் அவைகளில் காண்கிறதுயாதெனில் செல்வம், புகழ்வீறு மற்றும் அதிகாரம் ஆகியவற்றின் நெருக்க ஒருங்கிணைவு, பொன்மயமான தலையினுடைய பேருருவச்சிலையில் காண்கிறபடி! தேவன் அவைகளை உயிர்வேட்டையாடுகிற, ஒன்றையொன்று கடித்துப் பட்சிக்கிற காட்டியல் மிருகங்களின் வகையறாவாக! தன்மையில் விலங்கின் இயல்புள்ளவைகளாக அவைகளை அவர் காண்கிறார்; மற்றும் காட்டுமிராண்டித்தன பலத்தால் தங்கள் மேலாதிக்கத்தை காத்து பராமரிக்கின்றவை. சிங்கம் பீறிவிழுங்குபவை; கரடி நசுக்கிபட்சிப்பவை; சிவிங்கி அதின் பலியாள் மீது பாய்ந்து இரத்தத்தை உறிஞ்சுகிறது. மற்றும் நான்காவது காட்டியல் மிருகத்தின் தன்மை இயற்கையில் வேறெந்த மிருகத்தோடும் ஒப்பிடப்படக் கூடாதவாறுள்ளது. தேசங்கள் அறிந்தோ அறியாதவாறு அவைகளது தேசீக தனிமரபுச் சின்னமாக தங்களது மிருகத்தன்மையை நிரூபித்து உறுதிப்படுத்துகின்றன. ஆங்கிலேய சிங்கம், ரஷ்ய கரடி, அமெரிக்கன் கழுகு, சீன வலுசர்ப்பம்,

பெர்சிய செம்மறி ஆட்டுக்கடா, மெசப்பத்தோமிய வெள்ளாடு முதலியன சான்றாகின்றன.

மேலும், இந்த காட்டியல் மிருகங்களின் காட்சி தானியேலுக்கு அளிக்கப்பட்டதின் நோக்கம் புறஜாதியாரின் காலங்கள் மீது கூடுதல் அதிகப்படியான வெளிச்சத்தை அவர் பெற்றுக்கொள்வதற்காகவே! அவ்வெளிச்சம் தேவன் புறஜாதிய ராஜாவான நேபுகாத்நேச்சாருக்கு கொடுக்க விரும்பவில்லை; அதை தமது ஊழியக்காரரான தானியேலுக்கும் அவ்வேளையில் அளிக்க ஆயத்தமாயிருக்கவில்லை.

முதல் மிருகம் The First Beast

"தானி. *7:4*"

தானியேல் கண்ட 'முதல் மிருகம்' 'பெருங்கடல்' / சமுத்திரம் Great Sea-ன் கொதித்து குமுறுகின்ற நுரையினின்று கிளம்பிவந்தது. அது ஓர் கழுகினுடைய சிறகுகளைக் கொண்ட ஓர் சிங்கத்தைப் போலிருந்தது. அதின் தோற்றம் தானியேலுக்கு நினிவே மற்றும் பாபிலோனின் அரண்மனைகளை அலங்கரித்த சிங்கங்களது பேருருவச் சிலைகளை ஞாபகப்படுத்துவதாயின. அவைகளுக்கு ஓர் கழுகுக்குரிய சிறகுகள் இருந்தன. அது முதல் மிருகம் பாபிலோனிய சாம்ராஜ்யத்தினுடைய ஓர் உருவகச் சின்னமாயிருந்ததை அவருக்கு சுட்டுக்குறிப்பு செய்தது. அத்தோடு அதினுடைய முதல் ராஜா நேபுகாத்நேச்சாரை! அது பேருருவச் சிலையின் பொன்னினாலான தலையை ஒத்திசைவு செய்தது. இந்த கழுகு சிறகுகள் கொண்ட சிங்கத்தில் நாம் காண்கிறதாவது: 'மிருகங்களது ராஜா' மற்றும் 'பறவைகளது ராஜா'வுடைய ஓர் கலப்பு சேர்க்கையை! அது நேபுகாத் நேச்சாருடைய ஓர் 'முழுமையான முடியாட்சி' Absolute Monarchy யுடையதும் மற்றும் அவனது தேசங்கள்மீதுள்ள ஜெயித்து மேற்கொள்ளுகின்ற வான் விரைவியக்கத்துடையதும் மாதிரியுருவாயிருந்தது. ஆனால் அம்மிருகத்தை கூர்ந்து நோக்குகையில் அதின் சிறகுகள் பிடுங்கப்பட்டன. அதாவது, நேபுகாத்நேச்சார் தனது ஜெயித்து மேற்கொள்கையுடன் திருப்தி பட்டவராக மாளிகைகள் கட்டுவதிலும், மற்றும் சமாதானத்திற்கான முயற்சிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த சமயத்திலிருந்து சாம்ராஜ்யத்தினுடைய மகிமை

தேய்வுபடத் தொடங்கியது. பின்பு அது (மிருகம்) தூக்கி எடுக்கப்பட்டு இரு கால்களினால் நடக்க உந்தப்பட்டது - நான்கு கால்களாலன்றி - ஓர் மனிதனைப் போன்று, மற்றும் ஓர் மனிதனுடைய இதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது; மற்றப்படி அது இன்னமும் ஓர் மிருகமே! அதாவது, அது அதினுடைய பற்களையும், நகங்களையும் எதிரிகளை மேற்கொள்ள பயன்படுத்த மேலுமாக ஈடுபடுத்தவில்லை; மாறாக அதினுடைய புத்திக்கூர்மையை Intellect நேபுகாத்நேச்சாரது மூளைதிறம்பிய/ பித்துப்பிடித்த நிலையை சிறகுகள் பிடுங்கப்பட்ட நிலை சுட்டுகிறது. அதேபோது, ஓர் மனிதனைப்போல இரு கால்களில் நிற்பது மற்றும் ஓர் மனித இதயத்தை பெற்றுக்கொள்ளல் அவனது மிருகத்திய நிலையிலிருந்து மீட்டாக்கம் பெறுகிறதையும் அவனது மனுஷீகத் தன்மையை அதின்பின்பு பெற்றுக் கொள்வதையும் சுட்டுக்குறி செய்கிறது.

இரண்டாவது மிருகம்
The Second Beast

"தானி. *7:5*"

இரண்டாம் மிருகம் ஓர் கரடியைப்போன்றிருந்தது. சிங்கத்திற்கு பிற்பாடு கரடிதான் மிக பலம் மிகுந்த மிருகமாகும். பேருண்டி விருப்பத்தில் ஈடு இணையற்றது. ஆனால் சிங்கத்தினுடைய கெம்பீரமோ, சுறுசுறுப்போ அதற்கு கிடையாது. அதினுடைய இயக்கங்கள் அலங்கோலமானவை. தனது நோக்கத்தை நிறைவேற்ற மிகமந்தமான / மெதுவான இயக்கத்தை கொண்டுள்ளது; முரட்டுத்தனமான பலத்தையும், திடுதிப்பான வலிமையையும் பயன்படுத்தும். இவைகள் மேதிய - பெர்சிய சாம்ராஜ்யத்தினுடைய சிறப்பியல்புகளாயின. அதினுடைய இயக்கங்களில் பளுவான / மெதுவான நடைகொண்டது. Ponderous மேலும், வெற்றிகள் அடைந்தபோது மிக்க அதிகப்படியான அளவுக்கடங்கா படைகளை அதின் எதிரிகள் மீது அனுப்பி தாக்கியே சாதித்தது. கிரேக்குக்கு எதிரான அர்தசஷ்டாவின் Xerxes படையெடுப்பு 2,500,000 படைவீரர்களால் நடந்தேறியது. இத்தகைய கணக்கிலடங்கா மனிததிரள் கூட்டத்தினுடைய ஒட்டுமொத்த இயங்குகை எவ்வளவு அதிகப்படி அளவிலான மாம்சத்தை விழுங்க

வேண்டிவரும் என்பதை நாம் காணக்கூடுவது இலேசானதே! ஆகாரத்தின் வடிவத்தில் மாத்திரமல்ல, யுத்தத்தில், நோயினால், மற்றும் கடுமையான காலசூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டதினால் ஏற்பட்ட மரணத்தினால்! கரடியின் உயர்ந்து / எழும்பியிருந்த பக்கம், தாக்குதலுக்கு ஆயத்தமாக்கப்பட்ட பக்கம் Side பெர்சியாவை பிரதிநிதித்துவப்படுத்தீற்று. இரட்டை சாம்ராஜ்யத்தின் பெர்சியப்பகுதி கூடுதல் பலமும், அதிக துணிச்சலான / பாய்ச்சலுள்ளதாயிருந்தது. அதுவே பேருருவச் சிலையுடைய வலது தோள்பகுதி மற்றும் அத்தோடுள்ள வலது புயமால் ஒத்திசைவுகொள்கிறது.

மூன்று விலா எலும்புகள் மூன்று ராஜ்யங்களான லிதியா, பாபிலோன் மற்றும் எகிப்துக்காக உருவகமாய் நிற்கின்றன. அவை ஓர் முக்கூட்டணியை Triple Alliance உருவாக்கின 'மேதிய - பெர்சிய' வல்லமையை தடுத்து நிறுத்தும்படியாக! ஆனால் அவ்வல்லமையால் அவை மூன்றும் அழிக்கப்பட்டுப்போயின! கரடியானது சிங்கத்தைவிட கீழ்த்தர மிருகமானதால் மேதிய-பெர்சிய சாம்ராஜ்யம் பாபிலோனியாவைவிட கீழ்த்தரமானதே! எப்படியாயினும் வல்லமையில் அல்ல! மாறாக செல்வத்திலும், வீறார்ந்த உயர் நிலையிலும் மற்றும் அதின் அரசாங்க அமைப்பிலும்! இவ்விதமாக நான்கு காட்டியல் மிருகங்கள் பேருருவச்சிலையின் உலோகங்களை ஒத்திசைவு கொள்கின்றன. அதில் பின்தொடருகின்ற மிருகம் அதற்கு முன்னுள்ள மிருகத்தைவிட கீழ்த்தரமாயிற்று.

மூன்றாவது மிருகம் The Third Beast

"*தானி. 7:6*"

மூன்றாவது மிருகம் ஓர் சிவிங்கியைப்போலிருந்தது; அதற்கு நான்கு தலைகளும், நான்கு செட்டைகளுமிருந்தன - அதுவே வித்தியாசம்! காட்டியல் மிருகங்களில் மிக்க துடிப்புள்ளதும், இயல் நயமுடையதுமாகும் சிவிங்கி! அதின் கட்டமைப்பு மிக மெல்லிதானது, ஆனால் பலமிக்கது, விரைவு துடிப்பு கொண்டது; மற்றும் மூர்க்கமானது! அதினுடைய குண இயல்புகள் மகா அலெக்சாண்டரின் கீழ் கிரேக்கர்களது விரைவு மேற்கொள்ளுதலுக்கு ஓர் பொருத்தமான உருவக சின்னமாக விளங்கச்செய்கிறது. ஓர் சிறிய ஆனால் சரிவர அணிகலங்கள்

பொருத்தப்பட்டதாய், மற்றும் உச்சித வீரத்தோடுள்ள படைகளால் தாங்கப்பட்ட / பின்தொடரப்பட்ட மகா அலெக்சாண்டர் மகாதிறமையுடனும், விரைவுடனும் இயங்கி சுமார் பத்துவருடங்களில் பெர்சியாவின் எளிதில் கையாளமுடியாத படைகளை மேற்கொண்டு கவிழ்த்துப் போட்டது. தொடர்ந்து முழு நாகரீக உலகத்தையும் கீழடக்கியது. அதினுடைய ஓர் பட்சியின் நான்கு செட்டைகள் அதின் தீவிர முன்னேற்ற இயக்கத்தை மேலும் கூட்ட உதவின, என்றாலும் அச்செட்டைகள் ஓர் பட்சியினுடையனவே! ஓர் கழுகினுடையவையன்று! ஆனதால், அதின் முன்னேற்ற இயக்கம், விரைவிலானதென்றாலும் நேபுகாத்நேச்சாரின் சேனைகளைப் போன்று அத்தனை ராஜரீகவெற்றிகளை உரித்தாக்கவில்லை! ஏன் நான்கு செட்டைகள் மட்டும்? 'நான்கு தலைகள்' எட்டுசெட்டைகளை வேண்டும்போது! என்பது நாம் அறிகிறதில்லை. ஒருகால் 'நான்குசெட்டைகள்' அலெக்சாண்டர் தனது சாம்ராஜ்யத்தை விரிவாக்க முயன்ற பூமியின் நான்கு காற்பகுதிகளையும் சுட்டிக்காட்ட நோக்கங்கொண்டதாக இருக்கலாம். 'நான்கு தலைகள்' நான்கு ராஜ்யங்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாகலாம். அதாவது திரேஸ், மெசப்பத்தோமியா, சிரியா மற்றும் எகிப்து என நான்கு ராஜ்யங்களாக அலெக்சாண்டருடைய சாம்ராஜ்யம் பிரிக்கப்பட்டதை குறிப்பீடு செய்வதாயிருக்கலாம். 'மிருகங்கள்' மற்றும் பேருருவச்சிலை இடையேயுள்ள ஒத்திசைவை தானியேல் விளங்கிக்கொண்டிருக்கையில், சிவிங்கியானது பேருருவச் சிலையுடைய வயிறு மற்றும் தொடைபகுதிகளோடு Hips ஒத்திசைவு கொள்வதை காண்கையில் அவர் சிவிங்கியுடைய நான்கு தலைகளால் குழம்பிப் போயிருக்கவேண்டும்; ஏனெனில் சிலையின் வெண்கலத்தாலான வயிற்றின் கீழ்பகுதியில் 'நான்கு மடியான பிரிவு' ஏதும் இல்லாதிருந்ததால்! அதாவது கிரேக்க சாம்ராஜ்யம் நான்கு பகுதிகளாக பிளவுபடவுள்ளது என்பதை சுட்டிக்காட்ட! இவ்விதமாக தானியேலது தலையில் தோன்றிய காட்சிகள் அவரைக் கலங்கப்பண்ணின என நாம் வாசிக்கிறோம்; (வச. 7:15) மேலும் அவரது முகம் ஆழ்ந்தசிந்தனை காரணமாக வேறுபட்டது, (வச. 7:28). தானியேல் இரண்டு வருடங்கள் மேலுமாக காத்து நிற்க வேண்டிவந்தது. அவரது பிரச்சனைக்கு

தீர்வுகாண! ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் காட்சி அவருக்கு கிட்டும்வரை! அதிகாரம் 8-ஐ பார்க்கவும்.

நான்காவது மிருகம் The Fourth Beast

தானி. 7:7-8

'அதற்குப்பின்பு' எனும் வார்த்தைகள் 'நான்காவது காட்டியல் மிருகம்'-ன் காட்சி அதின் முந்தின மூன்று மிருகங்களது காட்சியினின்று காலசமயத்தைப் பொறுத்தவரை வேறுபட்டிருந்தது என்பதாய் உள்ளர்த்தமளிக்காது! ஏனெனில் மூன்றாவது மிருகத்தினுடைய காட்சியும் அதேவித வார்த்தைகளாலே ஆரம்பிக்கிறது, (வச. 7:6). வசனம் 7:4 -ல் கூறியபடி, உண்மையாதெனில், தானியேல் நான்கு மிருகங்கள் சமுத்திரத்தினின்று எழும்பியதை கண்டார், (7:3). நான்கும் ஒரே சமயத்திலல்ல! மாறாக ஒன்றன்பின் ஒன்றாக! அவைகளது வேறுபட்ட தோன்றுகைகள் ஒரே காட்சியில் உள் அடக்கப்பட்டிருந்தன. இக்கண்ணோட்டம் சரியாகப்படுகிறது. அல்லாவிடில் நான்கு காட்டுமிருகங்கள் மற்றும் பேருருவச்சிலையின் நான்கு உலோகங்களினிடையேயான இடைஒப்புமை Correspondence இணக்குவிக்க Harmonize இயலாது. எப்படியெனில், நேபுகாத்நேச்சார் பேருருவச் சிலையினது இரு வெவ்வேறு காட்சிகளை பெறவில்லை. ஒரு காட்சியில் சிலையின் பொன், வெள்ளி மற்றும் வெண்கலமடங்கிய சிலையின் பாதியும், மீதமுள்ள பாதியிலான 'இரும்பு' பகுதி இன்னொரு அதாவது பிந்திய காட்சியிலும் பெறவில்லை.

'நான்காவது மிருகம்' பூமியின்மீது காணப்படவுள்ள எக்காலத்திலும் இதுகாறும் தோன்றியுள்ள எந்த மிருகத்தையும் போலல்லாது தோற்றமுள்ளதாயிருந்தது. அது பார்வைக்கு பயங்கரமானதாய், அருவருப்பானதாய் இருந்தது. எந்தவோர் இயற்கையான மிருகத்துக்கும் இல்லாதவாறுள்ள இரும்பிலான பற்கள், மற்றும் வெண்கலத்தாலான நகங்களைக் கொண்டிருந்தது, (7:19). நான்காவது மிருகத்தின் இரும்பு பற்கள் மற்றும் பத்துகொம்புகள் தானியேலை முறையே பேருருவச்சிலையின் இரும்பு கால்களோடு மிருகத்தின் இரும்பு பற்களையும், சிலையின் பத்து கால்பாதங்களோடு மிருகத்தின்

பத்துகொம்புகளையும் இடை ஒப்புமையாகின்றதை பார்க்கவைத்தது. ஆகவே நான்காவது மிருகம் ரோம சாம்ராஜ்யத்தை உருவக வெளிப்பாடாக்கிற்று என்பதை! பத்துக்கொம்புகளின் இடையே முளைத்துகிளம்பிய 'சின்னக்கொம்பு' தானியேலை மருட்சிக்கு ஆளாக்கியது. ஏனெனில் பேருருவச்சிலையின் பத்து கால்விரல்களின் மத்தியில் ஓர் சிறிய கால்விரல் காணப்பட்டிருக்கவில்லை. 'சின்னக்கொம்பு' ஓர் மனித கண்களுடனும், பெருமையான வைகளைப் பேசும் வாயுடனும் கொண்ட அதில் தானியேல் ஓர் புதிய, கூடுதலான வெளிப்பாட்டை கண்டார். அதுவும் நேபுகாத்நேச்சாருக்கு பேருருவச்சிலை மீது தேவன் வெளிப்படுத்த தகுதியற்றவனாகக்கண்ட வெளிப்பாட்டை தானியேலுக்கென்று மற்றும் அவரது மக்களுக்கென்று தனிப்படுத்தி வைத்திருந்தார். ஏனெனில் தானியேலது சொந்த 'காட்சிகள்' இப்புத்தகத்தின் கடைசி ஆறு அதிகாரங்களி லுள்ளவை யூத மக்களோடு கடைசி நாட்களில் தேவன் இடைபடுவதை இப்புத்தகம் எடுத்துரைத்து சம்பந்தப்படுவதை, நாம் மறக்கலாகாது! எனவே தானியேலது நான்காவது காட்டியல் மிருகம் ரோம் சாம்ராஜ்யத்தை அதின் முதல் First மற்றும் கடைசி Last காலகட்டங்களை விவரிப்பதாயுள்ளதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்வது நலமானது! தானியேல் இச்சின்னக்கொம்பைக் குறித்த ஓர் விளக்கத் தெளிவுரையை கேட்குமுன்னர் அவருக்கு இன்னொரு காட்சி கிட்டியது.

இரண்டாவது காட்சி

ஓர் நியாயத்தீர்ப்பின் காட்சி

The Second Vision

தானி. 7:9-12.

நான் பார்த்துக்கொண்டிருக்கையில் சிங்காசனங்கள் வைக்கப்பட்டன. நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போலவும் அவடைய சிரசின் மயிர் வெண்மையாகவும், பஞ்சைப்போல துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினி ஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமா யிருந்தது. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது. ஆயிரமாயிரம்பேர்

அவரைச் சேவித்தார்கள்; கோடானுகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாய சங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது.

அப்பொழுது நான் பார்த்தேன்; நான் பார்த்துக் கொண்டிருக்கையில்,அந்தக்கொம்பு பெருமையான பேச்சுக்களை பேசினதினிமித்தம் அந்த மிருகம் கொலை செய்யப்பட்டது. அதின் உடல் அழிக்கப்பட்டு, எரிகிற அக்கினிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மற்ற மிருகங்களுடைய ஆளுகையோவென்றால் அவைகளைவிட்டு நீக்கப்பட்டது; ஆனாலும் அவைகளுக்கு காலமும் சமயமும் ஆகுமட்டும், அவைகள் உயிரோடே இருக்கும்படி கட்டளையிடப்பட்டது, (தானி. 7:9-12).

இங்கே ஓர் நியாயத்தீர்ப்பின் காட்சி Judgement Scene மற்றும் கிறிஸ்து ராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளும் ஓர் காட்சியின் அறிமுகப்படுத்துகை; புறஜாதி தேசங்கள்மீது விழப்போகின்ற நியாயத்தீர்ப்பு மற்றும் கிறிஸ்து ராஜ்யத்தைப் பெறப்போகிற முறை Manner மாதிரியை தானியேலுக்கு வெளிப்படுத்தும் நோக்கம் கொண்டதாயிருந்தது. இது நேபுகாத்நேச்சாருடைய பொன்னாலாகிய தலையையுடைய சிலையைப்பற்றிய சொப்பனக் காட்சியில் அளிக்கப்படாதிருந்த ஓர் தகவாயிருந்தது Information. இக்கதவு புறஜாதி தேசங்களைப் பொறுத்தவரை தேவனுடைய திட்ட ஒழுங்கை Programme பூர்த்தியடைவிக்க Fillout தானியேலுக்கு உதவியாயிருந்தது. இவ்விதமாக தானியேல் படிப்படியாக பிந்திய காலங்களில் Latter Times அல்லது முடிவுக்கான காலத்தே நடக்கவேண்டிய காரியங்களைக் குறித்த வெளிச்சம் பெற்றுக்கொள்ளலானார். கால நேரத்தின் முடிவல்ல! மாறாக தற்சமய காலசகாப்தத்தின் முடிவு!

இந்த நியாயத்தீர்ப்பின் காட்சி வெளி.20:11-15-ன் பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பாகாது. அது திரு நல்லாயிரத்தின் முடிவில் நடைபெறவுள்ளது, அல்லது 2கொரி.5:10, 1கொரி.3:11-15-ல் காட்சியாக்கப்பட்ட கிறிஸ்துவின் நியாயாசனமுமல்ல! அது, திருநல்லாயிரத்துக்கு முன்னர் அதேபோது சபை எடுத்துக்கொள்ளப்படுகைக்கு

உடனடி பின்னர் Soon After நடந்தேறுகிறது. இந்த (தானியேல் கண்ட) நியாயத்தீர்ப்பின் காட்சி நான்கு காட்டியல் மிருகங்களால் உருவகமாக்கப்படுகின்ற புறஜாதி தேசங் களுடைய நியாயத்தீர்ப்புடையது. ஏனெனில் நியாயத்தீர்ப்பின் முடிவுவிளைவாக நான்காவது காட்டியல் மிருகமான "மிருகம்" (சின்னக்கொம்பல்ல! ஏனெனில் தானியேலில் 'சின்னக்கொம்பு' ஓர் மிருகமாக அழைக்கப்படவில்லை) அதாவது ரோம ராஜ்யத்தை உருமாதிரியாக்கும் 'மிருகம்' கொலைச் செய்யப்பட்டு அதின் உடல் அழிக்கப்பட்டு எரிகிற அக்கினிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது. இது ரோம சாம்ராஜ்யத்தினுடைய அழிவை விவரிக்கின்ற உருவக மொழியிலானது! 'மிருகம்' என யோவானால் அழைக்கப் படுகின்ற 'சின்னக்கொம்பு' (வெளி.13:1-8) தானியேலின் 'மிருகம்' கொல்லப்பட்டதைப் போல கொல்லப்படுவதில்லை! மாறாக அக்கினிக் கடலினுள் உயிரோடே தள்ளப்படவுள்ளது. (வெளி.19:20)

"நான்காவது காட்டியல் மிருகம்", ரோம சாம்ராஜ்யம், இந்நியாயத்தீர்ப்பின் முடிவுவிளைவாக அழிக்கப்படபோகையில் மற்ற மிருகங்களோவெனில் அதாவது சிங்கம், கரடி மற்றும் சிறுத்தையால் முறையே உருவகமாக்கப்படுகின்ற பாபிலோனிய, மேதியா-பெர்சிய, மற்றும் கிரேக்கு வல்லரசுகள் தங்களது ஆதிக்கத்தை Dominion இழந்துவிடவுள்ளன. (எடுப்பட்டுப் போகவுள்ளன Taken Away) ஆனால் அவைகளது ஜீவன்கள் Lives ஓர் காலமும் சமயமும் For a Season and a Time நீட்சிக்கப்படவுள்ளன Prolonged. இவ்விடம் கவனிக்கத் தகுதியானது யாதெனில் பெர்சியன் மற்றும் கிரேக்கு ராஜ்யங்கள் மீட்டாக்கம் பெறவுள்ளன! Revived! அதேப்போல் 'பாபிலோனிய ராஜ்யம்' பாபிலோன் திரும்பக் கட்டப் படுகையில் ஏன் மீட்டாக்கம் பெறமுடியாது?

தற்சமய காலசகாத்தத்திற்கும் திருநல்லாயிரத்திற்கும் இடையே ஓர் நியாயத்தீர்ப்பின் காலசகாத்தம் உள்ளதென்பதை நினைவுகூருதல் நலமானது. அவ்வேளையில் மூன்று நியாயத்தீர்ப்புகள் நடந்தேறவுள்ளன. (1) 'விசுவாசிகளுக்கான நியாயத்தீர்ப்பு' - அவர்களுடைய கிரியைகளுக்காக! கிறிஸ்துவின் நியாயாசனத்தில் வைத்து! 2கொரி.5:10. (2) யூதர்களுக்கான நியாயத்தீர்ப்பு - மகா உபத்திரவக் காலத்தே! யூதர்கள் ஓர்

பூமிக்குரிய மக்கள்; அவர்களுக்குரிய சகல வாக்குத்தத்தங்களும் பூமிக்குரியவைகளாய் இருந்ததால் அதைத் தொடர்ந்து அவர்களது நியாயத்தீர்ப்பும் ஓர் பூமிக்குரிய தன்மை யுடையதாயிருக்க வேண்டுவதாகும். இது எரேமியா மற்றும் தானியேலால் 'யாக்கோபின் இக்கட்டுக்காலம்' Jacob's Trouble என அழைக்கப்படுகிறது. எரே.30:4-7, தானி.12:1. கிறிஸ்து இதை 'மகா உபத்திரவக்காலம்' என அழைக்கிறார், மத். 24:21-31.

இந்த நியாயத்தீர்ப்பின் முடிவு விளைவாக Result யூதர்களுடைய 'மனமாற்றம்' இருக்கவுள்ளது.

(3) தேசங்களது நியாயத்தீர்ப்பு, மத். 25:31-46. பூமிக்கு கிறிஸ்துவுடைய திரும்ப வருகைக்குப்பிறகு ஓர் தேசங்களுடைய நியாயத்தீர்ப்பு இருக்கவுள்ளது. யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே இது நடந்தேறவுள்ளது (யோவேல் 3:1-2). வெள்ளாடு மற்றும் செம்மறியாடு தேசங்களை பிரித்து வேறுபடுத்துவதே இதன் நோக்கமாயிருக்கவுள்ளது. அதின்மூலம் செம்மறியாடுகள் Sheep Nations உலகம் உண்டானது முதல் அவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள்; அதுவே திருநல்லாயிரம், அல்லது கிறிஸ்துவின் 'கல்ராஜ்யம்' Stone Kingdom. வெள்ளாடு Goat Nations தேசங்கள் தேசங்களாக As Nations அழிக்கப்பட்டுவிடும். இதிலிருந்து தானியேல் தனது இரண்டாவது காட்சியில் கண்ட நியாயத்தீர்ப்பின் காட்சி Judgement Scene 'நியாயத்தீர்ப்பின் காலசகாத்த' காலக்கட்டம் முழுமையையும் பரவி மூடுகின்ற ஓர் பொதுப்படையான விவரணமாயுள்ளது.

வசனம் தானி. 7:9-ல் 'நான் பார்த்துக்கொண் டிருக்கையில் 'சிங்காசனங்கள்' வைக்கப்பட்டன' எனும் வாசகம் இந்த நியாயத்தீர்ப்பின் காலத்தே சின்ன கொம்போடு ஆளுகை செய்துகொண்டிருக்கவுள்ள Shall be Reigning பத்து ராஜாக்களுடைய 'சிங்காசனங்களை' சுட்டுக் குறிப்பீடு செய்யலாம்; அல்லது அவைகள் எழுத்தாளரது சிந்தனையின்படி அதிகபட்சமும் More Probably ஆகாயத்து / வானமண்டலங்களி லுள்ள பொல்லாத அதிகாரங்களுடைய Evil Powers of the Air சிங்காசனங்களைக் குறிப்பிடலாம். ஏனெனில் இந் நியாயத்தீர்ப்பின் காலத்தில் வலுசர்ப்பம் (சாத்தான்)

வானமண்டலத்திலுள்ள எல்லா துரைத்தனங்களோடும் Principalities வான மண்டலங்களை விட்டு வெளியே தள்ளப்பட்டுப் போவான் என நாம் அறிகிறோம், எபேசி. *6:12;* வெளி. *12:7-9* 'கீழே தள்ளப்பட்டன' Castdown எனும் வார்த்தைகள் புதிய திருப்புதலில் 'வைக்கப்பட்டன' Placed என மாற்றப் பட்டுள்ளதை எழுத்தாளர் அறிகிறார். ஆனாலும் அதின் கரை ஓரத்து அல்லது சரிபதிலான Alternate வாசிப்பில் 'கீழே தள்ளப்பட்டது' Cast Down என்றும் இருக்கிறது. இந்த நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்தின்மீது அமர்ந்திருக்கிறவர் யார்? நீண்ட ஆயுசுள்ளவர் Ancient of Days என அவர் அழைக்கப்படுகிறார். நீண்ட ஆயுசுள்ளவர் யார்? அவர் 'மனுஷகுமாரனே' Son of Manயன்றி வேறொருவரும் ஆவதில்லை; ஏனெனில் நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் பிதாவானவர் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்து இருக்கிறார்; 'பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமல் நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார், (யோவான் *5:22*) மேலும் அவருடைய விவரணம் வெளி. *1:12-15*-ன் மனுஷகுமாரனுடையதற்கு சரி ஒப்புமையாகிறது'. அவருடைய சிரசும், மயிரும் வெண் பஞ்சைப்போலவும், உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது; அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தது; அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்து பிரகாசமான வெண்கலம் போலிருந்தது. அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது, வெளிப்படுத்தல் அதிகாரம் ஒன்றின் மனுஷகுமாரன் படக் காட்சி Picture நியாயாதிபதியாக கிறிஸ்துவுடையதாகிறது; பிரதான ஆசாரியராகவல்ல High Priest! அந்த சமயத்தே கிறிஸ்து தமது பிரதான ஆசாரிய அலுவலகப் பணியை High Priestly Office முடித்திருக்கவுள்ளார்; நியாயாதிபதியுடைய அலுவலகப் பணியை ஏற்றெடுத்திருக்க உள்ளார்; நல்லாயிர ராஜ்யம் நிறுவப்படுகையில் அவருடைய ராஜரீக பணிகளில் Kingly Duties அவரது பிரவேசிப்புக்கு ஆயத்தப்படுகையாக இவ்வாறு ஏற்றெடுக்கவுள்ளார் (நியாயாதிபதி). ஓர் ஆசாரியர் கட்டுகின்றதுபோல அரைக்கச்சை இங்கே கட்டப் படாதிருப்பதில் இது காணப்படுகிறது. மாறாக ஓர் நியாயாதிபதி போல தமது தோள்பட்டையிலும் Shoulder மற்றும்

மார்பகத்திலும் Breast அணிதோட்பட்டிகை Sash ஒன்று அணிந்திருக்கிறார். வெண் பஞ்சைப்போன்ற White Wool அவருடைய தலை மயிர் ஆங்கிலேய நியாயாதிபதிகளால் அணியப்படுகின்ற பனிவெண்மை பொய் மயிர்த்தோகையை Snow White Wig சரி ஒப்புமை செய்கிறது.

மூன்றாவது காட்சி

மனுஷகுமாரன் ராஜ்யத்தை பெற்றுக்கொள்ளல் **Third Vision**

தானி. 7:13-14

இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார். சகல ஜனங்களும், ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்கு கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும் (தானி. 7:13-14).

பட்டங்களிலே Titles ஓர் வெளிப்படையான முரண்பாட்டை இங்கு நாம் சந்திக்கிறோம். முந்தைய காட்சியில் மனுஷகுமாரன் நீண்ட ஆயுசுள்ளவராயிருந்தார் எனப் படித்தோம். இங்கே பிதாவானவர் நீண்ட ஆயுசுள்ளவராய் இருக்கிறார் எனச் சொல்லப்படுகிறது. இவ்விரு வாசகங்களை எவ்விதம் சரிபொருந்த வைக்கக்கூடும்? அதற்கு ஒரே ஒரு வழி உள்ளது. அது 'இப்பட்டம்' இடைமாற்றுஞ் செய்யக்கூடியதாய் Inter-Changeably பயன்படுத்தப்படுகிறது என்பதாகும். 'நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்' என்றார் இயேசு! யோவா. 10:30. பவுல் கூறுகிறார் 'தேவபக்திக்குரிய இரகசியமானது' யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது; தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்; 1 தீமோ. 3:16. யோவான் கூறுகிறார்: 'ஆதியிலே வார்த்தை (கிறிஸ்து) இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது' யோவா. 1:1. இவ்விதமாக திரித்துவத்தின்

இரகசியத்தை விவரிக்க முயற்சிக்காமலே தேவனும் மனுஷகுமாரனும் ஒன்றாக Same ஒருவராயிருக்கின்றனர் One and the Same எனப் பார்க்கிறோம்; ஆகவே அவர்களது பட்டங்கள் Titles இடைமாற்றஞ் செய்து பயன்படுத்தக் கூடியதாகிறது.

இப்போதும் கிறிஸ்து பிதாவிடமிருந்து ராஜ்யத்தை பெறவுள்ளார் என மற்ற வேதாகமப் பகுதியிலிருந்து நாம் அறிகிறோம். ஆகவே இந்தக் காட்சியில் 'நீண்ட ஆயுசுள்ளவர்' Ancient of Days பிதாவாகிய தேவனை பிரதி நிதித்துவப்படுத்த வேண்டும்.

பிலாத்து இயேசுவை, 'நீ யூதருடைய ராஜாவா? என்று வினவினான். அவர் இக்கேள்வியை தவிர்த்தவராய் என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல' எனக் கூறினார். அதாவது இது அவருக்கு பிதாவாகிய தேவனால் அளிக்கப்படப்போகிறது; ஆகவே பரலோகத்திலிருந்து அருளப்படவுள்ளது! யோவா. 18:33-37, லூக்கா 19:11-12ல் நாம் படிக்கிறதாவது:

'அவர் எருசலேமுக்கு சமீபமாயிருந்தபடியினாலும், தேவனுடைய ராஜ்யம் சீக்கிரமாய் வெளிப்படுமென்று அவர்கள் நினைத்தபடியினாலும் அவர் ஓர் உவமையைச் சொன்னார்: பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி தூரதேசத்துக்குப் போக புறப்பட்டான்'.

இதிலிருந்து இயேசுவே 'அந்த பிரபுவாகிய ஒருவர்' Certain Noble Man எனப் பார்க்கிறோம். ராஜ்யத்தை The Kingdom பெற்றுக்கொள்ளும்படி தூரதேசம் Far Country (பரலோகம் Heaven) சென்றுள்ளவர் அவரே! அவர் அதைப் பெற்றுக் கொண்டுள்ள போது அவர் திரும்ப வருவார்; அவர் இன்னமும் அதைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை என்பது அவர் இன்னமும் திரும்பிவராதுள்ள மெய்மையால் சான்றளிக்கப்படுகிறது. ராஜ்யத்தை பெற்றுக்கொள்கின்ற காலவேளை Time இன்னும் எதிர்காலத்தது என்பது இக்காட்சியால் காண்பிக்கப்படுகிறது. ஆனால் இக்காலவேளை யோவானால் வெளி. 11:15-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

'ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது

உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் எனும் கெம்பீரசத்தங்கள் வானத்தில் உண்டாயின'.

கிறிஸ்து, ராஜ்யத்தை பெறப்போகின்ற காலவேளை Time யானது ஏழாவது எக்காளம் ஊதப்படப்போகிறதான வேளையென்று இப்பகுதி இடச்சூழல் காண்பிக்கிறது. Locates அவ்வூதப்படுகையின் வேளை தானியேலது எழுபதாவது வாரத்தின் மத்தியின் அருகாமையிலென As Near the Middle of the Daniel's 70th Week இடச் சூழல் காண்பிக்கிறது. இவ்விதமாக தானியேலும் வெளிப்படுத்தலும் ஒத்துடன்பாடு கொள்கின்றன.

தானியேலுடைய தடுமாற்றம் The Perplexity of Daniel

தானியேல்மீது இம்மூன்று காட்சிகளுடைய பாதிப்பு ஓர் குழப்பமான ஆவியாயிருந்தது.

'தானியேலாகிய நான் என் தேகத்தினுள் என் ஆவியிலே சஞ்சலப்பட்டேன், என் தலையில் தோன்றின தரிசனங்கள் என்னைக் கலங்கப்பபண்ணினது' தானி. *7:15.*

'பொன் தலையாலான சிலை' Goldenheaded Image யுடைய நேபுகாத்நேச்சாருடைய சொப்பனக் காட்சியிலிருந்து புறஜாதியாரின் காலங்களின் முடிவுக்கு முன்பு நான்கு மாபெரும் உலகளாவிய சாம்ராஜ்யங்கள் ஒன்றையொன்று தொடர்வதாக இருக்கவுள்ளன என தானியேல் அறிந்தார். முதலுள்ளது பாபிலோனியது; இன்னமும் இருந்து கொண்டிருந்து அதன் ஓர் விரைவு முடிவுக்கு அவ்வேளையே எந்த அடையாளமும் இல்லாதிருந்தது. இதைத் தொடரவுள்ள மூன்று ராஜ்யங்கள் ஒவ்வொன்றும் இந்த அளவுக்கு கால நீட்சி செய்ய வேண்டுவதானால் புறஜாதியாரின் காலத்தின் முடிவு ஓர் வெகு தூரத்துக்கப்பால் உளதாகும். அப்படியானால் 'கல்' அல்லது மேசியாவுடைய ராஜ்யம் அந்த தூரத்துக்கப்பால் இருக்கவுள்ளது என்பது அதன் பொருளாகிடும். ஆனால், அவரை அதிகம் கலங்கடிக்கச் செய்தது நான்கு காட்டியல் மிருகங்களுடைய தன்மை மற்றும் சின்ன கொம்பினுடைய பொருள் அர்த்தமே! ஆகவே அவர் கூறுகிறார்:

'சமீபத்தில் நிற்கிறவர்களில் ஒருவனிடத்தில் நான் போய், அதன் பொருள் எல்லாவற்றையும் எனக்குச் சொல்லும்படி அவனை வேண்டிக்கொண்டேன்; அவன் அந்தக் காரியங்களின் அர்த்தத்தை எனக்கு அறிவித்துச் சொன்னான்' தானி. 7:16.

தானியேல் பக்கத்தில் நெருங்கிய 'அருகாமை நிற்பாளன்' Bystander எந்தவொரு மானிடனுமல்ல Humanbeing. ஏனெனில் தானியேல் இன்னமும் காட்சி நிலை Vision State யிலே இருந்தார். எந்த மானிடனும் காட்சிகளின் அர்த்தத்தை அவருக்கு (தானியேல்) வெளிப்படுத்தியிருக்கக்கூடாது! தானியேலிடம் பிற்காலத்தே அனுப்பப்பட்டோரைப்போன்று, ஏதாமோர் விண்ணுலகத்து தூதுவராயிருந்தார்; இவர் (தூதுவர்) காட்சிகளை பொருளாக்கம் செய்வதற்கு Interpret காத்துக்கொண்டிருந்தார் Waiting.

காட்சிகளுடைய பொருளளிப்பு
Interpretation of the Visions

'அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள்; ஆனாலும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரீகத்தைப் பெற்று என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள்', தானி. 7:17-18.

நான்கு காட்டியல் மிருகங்கள் பூமியிலிருந்து எழும்பவுள்ள நான்கு ராஜாக்களை அல்லது ராஜ்யங்களை உருவகப்படுத்தியதாக 'விண்ணுலக பக்கத்து நிற்பான்' தானியேலுக்கு அறிவித்தார். இவ்விதமாக இவைகளை பேருருவச் சிலையின் உலோகங்களால் உருவகமாக்கப்பட்ட நான்கு ராஜ்யங்களோடு சரியின அடையாளங் காட்டுகின்றன. அவைகளுடைய அதிகார வல்லமை அவர்களிடமிருந்து உன்னதமானவருடைய பரிசுத்தவான்களால் எடுத்துக் கொள்ளப்படும் என்றும், அவர்களுடைய (பரிசுத்தவான்கள்) ராஜ்யம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்றும், தானியேலுக்கு அறிவித்தார் அத்தூதுவர்!

இந்த உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் யார்யார்? அவர்கள் சபையின் பரிசுத்தவான்களல்ல! ஏனெனில் சபையின்

பரிசுத்தவான்கள் சின்னக் கொம்பு பரிசுத்தவான்களோடு யுத்தம் பண்ணும் (வசனம் 7:22) முன்பே எடுத்துக் கொள்ளப்படுவர்! அந்த யுத்தத்தின் இடம் பூமியின்மீது என்பதாலும் அதன் காலம் சின்னக் கொம்பின் ஆளுகையின்போது என்பதாலும் அவ் ஆளுகை கால நீட்சி துல்லியமாக 3½ வருடங்கள் (வச. 25) எனப்படுவதாலும், உன்னதமானவரின் பரிசுத்தவான்கள் யூதர்களாகிய தானியேலின் மக்களாகவே இருக்கவேண்டும். ஏனெனில் மகா உன்னதமானவர் மனுஷகுமாரனேயாவார். யூதர்களுடைய மேசியா! ஆகவே அவர்கள் முடிவு காலத்துடைய அவருடைய பரிசுத்தவான்களே! அவரோடுகூட ராஜ்யத்தை எடுத்துக்கொள்வோரே ஆவர். வச. 22. இது மீண்டுமாக வசனம் 27-ல் உறுதிசெய்யப்படுகிது.

'வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து அவருக்குக் கீழிருக்கும்' (தானி. 7:27).

இப்போதும் 'உன்னதமானவருடைய பரிசுத்தவான்களது ஜனங்கள் யூதர்களேயாவர்; ஏனெனில் திருநல்லாயிரத்தின் போது அவர்கள் தேசங்களது தலைமையில் இருக்கப் போகின்றவர்கள் (உபா. 28:13). மேலும், உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் மகா உபத்திரவ காலத்தே சின்னக் கொம்பாலது அழிவுக்கு தப்பப்போகின்ற தேவனுக்கு பயப்படும் யூதர்களாவர் Godfearing Jews.

விண்ணுலக பக்கத்து நிற்பாளரது பதிலுரை தானியேலுக்கு முழுமையாக போதுமாயிருக்கவில்லை; நான்காவது காட்டியல் மிருகத்துடைய மற்றும் தானியேலின் ஜனங்களான உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள்மீது யுத்தம் பண்ணவுள்ள சின்னக் கொம்புடைய அர்த்தப் பொருளை அப்பதிலுரை விவரிக்கவில்லை; சின்னக் கொம்புடைய நடத்தையே தானியேலைக் கலங்கடித்து வேதனைப்படுத்திற்று.

'அப்பொழுது மற்றவைகளையெல்லாம் பார்க்கிலும் வேற்றுருவும் கெடியுமுள்ளதுமாய், இரும்புப் பற்களும்,

வெண்கல நகங்களுமுடையதாய் நொறுக்கிப் பட்சித்து, மீதியானதை தன் கால்களால் மிதித்துப்போட்டதுமாயிருந்த நாலாம் மிருகத்தைக் குறித்தும், அதின் தலைமேலுள்ள கொம்புகளைக் குறித்தும், தனக்கு முன்பாக மூன்று கொம்புகள் விழுந்துபோக எழும்பினதுமாய், கண்களையும் பெருமை யானவைகளைப் பேசும் வாயையுடையதுமாய், மற்றவைகளைப் பார்க்கிலும் பருமனாகத் தோன்றினதுமாயிருந்த அந்த வேறே கொம்பைக் குறித்தும், அவற்றின் பொருளை அறிய மனதாயிருந்தேன்' *(தானி. 7:19-20).*

நான்காவது காட்டியல் மிருகத்தினுடைய தனது முதல்விவரணத்தில் குறிப்பிடாததை இங்கே தானியேல் பதிவு செய்கிறார்:

'நீண்ட ஆயுசுள்ளவர் வருமட்டாகவும், நியாயவிசாரிப்பு உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்கு கொடுக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளும் காலம் வருமட்டாகவும், இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணி அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன்' (தானி. 7:21-22).

நான்காவது காட்டியல் மிருகத்துடைய அவரது (தானியேல்) காட்சியின் இக்கூடுதலான விவரணம் விண்ணுலக பக்கத்து நிற்பாளனது விளக்கவுரைக்கு உதவுகிறது.

'நான்காவது மிருகம் பூமியின் மீதுள்ள நான்காவது சாம்ராஜ்யமாயிருக்கவுள்ளது. அது எல்லா ராஜ்யங்களிலுமிருந்து மாறுபட்ட தன்மையுடையதுமாயிருக்கும்; முழு பூமியையும் சூழ்ந்து பாழ்ப்படுத்தி அதைக் கால்களால் மிதித்து கீழே தள்ளி நொறுக்கி துண்டு துண்டாக்கி பட்சித்துப் போடவுள்ளது; மற்றும் இந்த ராஜ்யத்திலிருந்து வெளிப்படும் பத்து கொம்புகள் எழும்பவுள்ள 10 ராஜாக்களாகிறார்கள்; அவர்களுக்கு பின்பாக இன்னொருவன் (ராஜா) எழும்புவான்; அவன் முதலில் எழும்பியவர்களின்று (ராஜாக்கள்) மாறுபட்டத் தன்மை கொண்டவனாய் மூன்று ராஜாக்களைக் கீழ்ப்படுத்தி அடக்கிப் போடுவான் Subdue. உன்னதமானவருக்கு எதிராய் பெருமையானவைகளைப் பேசுவான்; உன்னதமானவருடைய

பரிசுத்தவான்களை மீண்டும் பயன்படாத அளவுக்கு Wearout ஒடுக்குவான் / பயன்படுத்துவான்; காலங்களையும் பிரமாணங் களையும் மாற்ற நினைப்பான். அவர்கள் (பரிசுத்தவான்கள்) ஒரு காலமும் காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்; (3½ வருடங்கள்) ஆனால் நியாய சங்கம் Judgement உட்காரவுள்ளது (வச. 9-12). அவர்கள் அவனுடைய ஆளுகையை Domain அவனிடமிருந்து எடுத்துப் போடுவார்கள்; முடிவுபரியந்தம் அவனைச் சங்கரிக்கவும் அழிக்கவுமாக இவ்வாறு ஆளுகை நீக்கிப்போடப்படும்! வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகம் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்த வான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து அவருக்கு கீழ்ப்பட்டிருக்கும்' என்றான், தானி. 7:23-27.

இந்தப் பொருளாக்கத்தில் நமது கவனத்தை வேண்டு கின்ற இரு உருவங்கள் உள்ளன. முதலாவதுள்ளது 'மிருகம்' Beast, இரண்டாவதோ 'சின்ன கொம்பு' Little Horn. இவைகளிடையேயுள்ள வேறுபாட்டை பிரித்தறிய வேண்டும்.

காலங்களும் பிரமாணங்களும்
Times and Laws

தானியேலின் 7-வது அதிகாரத்தின் 'சின்னக்கொம்பு' காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான். அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லு மட்டும் (அல்லது 3½ வருடங்கள்) அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவார்கள், (தானி. 7:25). காலங்கள் மற்றும் பிரமாணங்கள் Times and Laws என்பதால் எபிரேய ஏழாம் நாளான ஓய்வுநாட்கள் மற்றும் பண்டிகைகள் Festivals என்றும் மற்றும் Law பிரமாணம் (லேவிய - Levitical) என்பது அவைகளை கட்டுப்படுத்தி நெறிப் படுத்துபவையென்றும் ரபிமார்கள் Rabbis புரிந்துகொண்டனர். யூதர்கள் தங்கள் தாயகம் திரும்பிவந்து, தேவாலயத்தை மீளக் கட்டுகிறபோது, வெவ்வேறான காலங்களும், பிரமாணங்களும் மீள நிறுவப்பட்டிருக்கும்; சின்னக்கொம்பு 'அந்திக்கிறிஸ்து' அவர்களுடன் ஒரு வாரத்துக்கு அல்லது ஏழு வருடங்களுக்கு ஓர் உடன்படிக்கை

செய்யவுள்ளபோது அவைகள் (காலங்கள் - பிரமாணங்கள்) நடைமுறையிலிருக்கவுள்ளது In Force. ஆனால் வாரத்தின் மத்தியில் அந்திக்கிறிஸ்து உடன்படிக்கையை முறித்துப் போடுவான் (*தானி 9:27*). அத்துடன் யேகோவாவின் வணக்கத்தை, தன்னை வணங்கும் வணக்கத்தால் பதிலீடு செய்வான் Substitute. இவ்விதமாய் யூதீய பலி செலுத்தல் களையும், காணிக்கைகளையும் ஒழியப்பண்ணுவான்; எல்லா யூதீய நிறுவனங்களையும் Jewish Institutions ஒழித்து இல்லாமலாக்கும் அவனது தீவிர விருப்பத்தில் எல்லா யூதருடைய காலங்களையும், பிரமாணங்களையும் மாற்றிப்போட நினைப்பான். இதை வாரத்தின் மீதமுள்ள பாதியில் அல்லது 3½ வருடங்களில் அவன் நிறைவேறுகை செய்யப்போகிறான்.

மிருகம் The Beast

நான்காவது மிருகத்தின் இருப்புப் பற்கள் அதை பேருருவச் சிலையின் இருப்புக் கால்களோடு இனங்கண்டு கொள்ளச் செய்கிறது; அல்லது நாம் பார்த்துள்ளபடி கடந்த படிநிலையிலுள்ள Past Stage ரோம சாம்ராஜ்யத்தோடு! பத்துக் கொம்புகள் பெரிய சிலையின் பத்து விரல்களோடு சரி ஒப்புமையாகிறது; அல்லது ரோம சாம்ராஜ்யத்தின் கடைசி படி நிலையோடு Past Stage! ஆகவே விவரிக்கயியலா மிருகம் Non Descript Beast ரோம சாம்ராஜ்யத்தை அதினுடைய முதல் மற்றும் கடைசி படி நிலைகளை உருமாதிரியாக்குகிறது. ஆனால் இவ்விருபடி நிலைகளிடையே என்ன நடக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறதில்லை. இப்போதும் வெளிப்படுத்தல் புத்தகம் நமக்கு அளிக்கிறபடி, அதிகாரங்கள் 6 முதல் 19 முடியவரை தானியேலின் எழுபதாவது வாரத்தே அதாவது பெரிய சிலையின் கால் விரல்களால் Toes அதாவது தானியேலின் நான்காவது காட்டியல் மிருகத்தின்மேலுள்ள பத்துக் கொம்புகளால் பரந்து மூடிய காலக்கட்டத்தே என்ன நடக்கவுள்ளது பற்றிய விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது. மேலுமான மிருகத்தைப் பற்றிய மற்றும் சின்னக் கொம்பைப்பற்றிய வெளிச்சம் பெறுவதற்கு நாம் வெளிப்படுத்தல் புத்தகத்துக்கு திரும்ப வேண்டும். நாம் தானியேலின் மிருகத்தையும் யோவானின் மிருகத்தையும் ஒப்பிடுவோமாக.

தானியேலின் மிருகம் Daniel's Beast

தானி. 7:7-8, 7:23-25

யோவானின் மிருகம் John's Beast

வெளி. 13:1-7

இவ்விரு மிருகங்களையும் ஒப்பிடுகையில் அவை இரண்டும் சமுத்திரத்தைவிட்டு எழும்பி வருகிறதாகக் காண்கிறோம். தானியேலின் மிருகம் பெரிய கடலினின்று (மத்திய தரைக்கடல்) எழுந்து வந்ததால் (தானி. 7:3) மேலும் யோவான் அதே கடலின் ஓர் தீவாகிய பத்மு தீவில் ஓர் கைதியாக இருந்த போது தனது காட்சியை அடைந்ததால், இரு மிருகங்களும் ஒரே இடவமைப்பினின்றே வந்தன Same Locality. இவ்விரு மிருகங்களும் இதுகாறும் எப்போதுமே கேட்டுள்ள எவ்வகை மிருகங்களிலிருந்தும் முற்றிலும் வித்தியாசப்பட்டவை. தானியேலின் மிருகம் கொடூரமாகவும், பயங்கரமாயும், பலமிக்கதாயும் இருந்தது. அதற்கு மாபெரும் இருப்புப் பற்களும், வெண்கல நகங்களும் இருந்தன. அதே வேளையில் யோவானது மிருகம் ஓர் கரடியின் கால்களோடு ஓர் சிங்கத்தின் வாயோடு ஓர் சிறுத்தை Leopard சிவிங்கியைப் போல் உடலிருந்தது. 'தானியேலின் மிருகம்' ரோம சாம்ராஜ்யமான நான்காவது ராஜ்யத்தை ரூபகாரப்படுத்தியதால் மேலே கொடுக்கப்பட்ட அதின் குணாதிசயங்கள் பழைய ரோம ராஜ்யத்தை விளக்குகின்றதென்பது தெளிவாயுள்ளது. அதே வேளையில் யோவானின் மிருகத்தின் 'குணாதிசயங்கள்' எதிர்காலத்திய ரோம சாம்ராஜ்யத்தை Future Roman Empire விவரிக்கின்றன.

பழைய ரோம சாம்ராஜ்யம் அதிமிகுதியான பெலமுள்ளதாய் இருந்ததென்றும், அதின் Grip பிடிப்பு மற்றும் வல்லமை Power மாபெரும் இருப்புப் பற்களையும், வெண்கல நகங்களையும் கொண்ட ஓர் மிருகத்தைப் போலிருந்தது என நாம் அறிவோம். அதே வேளையில் யோவானின் மிருகத்தினது விவரணத்திலிருந்து எதிர்காலத்திய ரோம சாம்ராஜ்யம் நான்கு உலக சாம்ராஜ்யங்களது 'தன்மைகளை'யும் உடலுருக் கொடுக்கவுள்ளதாய் Embody நாம் படிக்கிறோம்; அதின் சிறுத்தை போன்ற சரீரம், ஓர் கரடியுடைய கால்கள், ஓர் சிங்கத்துடைய வாய் இம்மிருகத்தில் காண்கிறபடியே! மிருகத்தினுடைய சரீரமே

அதினுடைய மிகப்பெரிய அம்சம்-பகுதியாவதால் மிருகத்தினுடைய சிறுத்தை அல்லது கிரேக்கு குணாதிசயமே அதிகபட்சம் முதன்மை நிலை பெறும்.

இரு மிருகங்களும் 'பத்துக்கொம்புகள்' Ten Horns கொண்டுள்ளது. அவை இரண்டும் பெருஞ்சிலையின் பத்து கால்விரல்களால் சுட்டிக் காட்டப்பட்ட கால சமயத்தே உளதாயிருக்கப் போவதான In Existence மெய்மையை வெளிப்படுத்துகிறது. அவை (அச்சமயம்) கிறிஸ்துவினுடைய 'கல்' அல்லது திரு நல்லாயிர ராஜ்யம் நிறுவுகைக்கு சற்று முன்பாக இருக்கப்போன்றன. 'தானியேலின் மிருகத்துடைய' பத்துக் கொம்புகள் பத்து ராஜாக்களுக்காக நிற்கின்றதாக சொல்லப்படுகிறது (தானி. *7:24*). அதுபோல் யோவானின் மிருகத்தின் 'பத்துக்கொம்புகளும்' அதே விதமானதற்கே நிற்கின்றன வெளி. *17:12*. இதிலிருந்து ரோம சாம்ராஜ்யம் பத்து கூட்டணி ராஜ்யங்களாக Ten Federated Kingdoms முடிவாக Eventually பிரிக்கப்பட இருந்ததை தானியேலும், யோவானும் முன் கண்டனர் Foresaw என்பதை நாம் காண்கிறோம்.

இரு மிருகங்களுக்கும் 'பத்துக்கொம்புகள்' உள்ளபோது, யோவானதற்கு ஏழு தலைகள் உள்ளபோது தானியேலதற்கு ஒரு தலை மாத்திரம் இருந்ததில் இவை வேறுபடுகின்றன. மேலும், தானியேலது மிருகத்தின் மேலிருந்த பத்துக் கொம்புகளின் இடையிலிருந்து ஓர் சின்னக் கொம்பு Little Horn எழும்பியது. அது யோவானது மிருகத்தின் பத்துக் கொம்புகளிடையே காணப்படுகிறதில்லை. இவை நாம் பார்க்கப் போகின்றபடி, மிருகத்துடைய கடைசி படிநிலையை சுட்டிக் காட்டுகிற முனைப்புக் கூறுகளாகும் Features. தானியேலது மற்றும் யோவானது மிருகங்களை கவனமாக ஒப்பிடாத பட்சத்தில், 'மிருகத்தின் கடைசி படிநிலையை' நாம் புரிந்துகொள்ள இயலாது என்பதையும் இவை காண்பிக்கின்றன; ஏனெனில் தானியேலது மிருகத்தின் 'சின்னக் கொம்பு' Little Horn பத்துக் கொம்புகளில் மூன்றை பிடுங்கி அழித்துப் போடுகிறது (தானி. *7:8; 7:20*) அல்லது அவர்களது ராஜ்யத்தை கைவசமாக்கிக் கொள்கிறது Takes Away. இது யோவான் நமக்கு சொல்லாது விட்டுவிடுகிறார் Omits.

தானியேலது மிருகத்தின் 'அந்திக் கிறிஸ்தவ தன்மை' Anti Christian Character அதினுடைய 'சின்னக் கொம்பில்' காணப்படுகிறது. அதேவேளையில் 'அச் சின்னக் கொம்பின் நடத்தை' Conduct யோவானின் மிருகத்தின் ஓர் பகுதியோடல்லாது, மாறாக 'யோவானின் மிருகத்தின் முழுமையோடும்' Whole of John's Beast சரி ஒப்புமை செய்கிறது. அதுவும் ஒரே கால நீட்சிக்கு! எப்படியெனில் தானியேலது ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் (தானி. 7:25) யோவானது நாற்பத்திரண்டு மாதத்துக்கு (வெளி. 13:5) சரிசமமாகிறது. அதாவது மூன்றரை வருடங்கள்! இரு மிருகங்களும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களோடு யுத்தம் பண்ணி, உன்னதமானவருடைய நாமத்தை தூஷித்தன (தானி. 7:25, வெளி. 13:6). இந்த ஒப்பிடுகையிலிருந்து இவ்விரு மிருகங்களுடைய சம ஒருமைப்பாட்டை நாம் பார்க்கிறோம். எனவே படத்தினை நிரப்புவதற்கு அவை இரண்டையும் ஒன்றாக இணைத்து படிக்கப்பட வேண்டும்.

சின்னக் கொம்பு The Little Horn

நமது தீர்க்கதரிசன ஆய்வில், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைமீது அதிக அழுத்தம் வைக்கிறோம்; ஆனால் கிறிஸ்துவுடைய வருகையைப் போன்றே பெருவிளைவுகளை உண்டாக்கவல்ல Momentous-தாயுள்ள இரு வேறு நபர்களது வருகைகள் Two Other Comings of Persons உள்ளனவென்று மறந்து விடுகிறோம். முதலுள்ளது அந்திக்கிறிஸ்துவுடையது; அடுத்தது சாத்தானுடையது Of Satan. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் ஓர் புதிர் நிலையிலான Mysterious அச்சந்தருகிற Terrible ஆளத்துவம் Personage கடைசிக் காலங்களில் Last Times அல்லது இந்தக் கால சகாப்தத்தின் இறுதி நாட்களில் வெளிப்படவுள்ளதை நமக்கு சொல்லப்பட்டுள்ளது. அவன் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறான்.

பழைய ஏற்பாட்டில்

*அசீரியன் **Assyrian** ஏசா. 10:5-6; 14:24-25; 30:27-33.*

துன்மார்க்கன் ***The Wicked***

ஏசாயா 11:4

பாபிலோன் ராஜா
ஏசாயா 14:4

லூசிபர்
ஏசாயா 14:12

*தீருவின் ராஜா **King of Tyrus***
எசேக். 28: 11-19

சின்னக் கொம்பு
தானி. 7:8; 8:9-12

ஓர் மூர்க்க முகமுள்ள ராஜா
தானி. 8:23

வரப்போகிற பிரபு
தானி. 9:26

தன்னிஷ்ட ராஜா
தானி. 11:36

புதிய ஏற்பாட்டில்

பாவ மனிதன்
2 தெச. 2:3-8

கேட்டின் மகன்
2 தெச. 2:3-8

*அந்த அக்கிரமக்காரன் **That Wicked***
2 தெச. 2:3-8

அந்திக்கிறிஸ்து
1யோவான் 2:18

மிருகம்
வெளி. 13: 1-8

தீர்க்கன் ஏசாயா அந்திக்கிறிஸ்துவை அசீரியனாகக் காண்கிறார், ஏசா. 10:5-6; 30: 27-33. ஏசாயா 11:4-ல் தெளிவாக Evidently, *மேசியாவுக்கே உரியதான* Messianic *அதிகாரத்தில், மேசியா செய்யவுள்ள பல்வேறு காரியங்களின் மத்தியில் அவர்*

'பூமியை தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரை சங்கரிப்பார்'. 'துன்மார்க்கர்' Wicked என மொழிபெயர்க்கப்பட்ட சொல் ஒருமை எண்ணிலானது; எனவே பொதுப்படையாக துன்மார்க்கரைக் குறிப்பிட முடியாது; மாறாக முனைப்பான / தெளிவுபடத் தெரிகிற துன்மார்க்கனான ஓர் நபரையே குறிப்பிடும்! 2தெச. 2:8-ல் பவுலின் சொற்றொடரையொத்து 'அந்த அக்கிரமக் காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்'. ஏசாயாவும் பவுலும் ஒரே தனி நபரையே குறிப்பிடுகின்றனர் என்பது தெளிவு; அவன் வேறொருவனுமல்ல! அந்திக் கிறிஸ்துவே!

ஏசாயா 14:4-17-ல் ஒரு பாபிலோன் ராஜாவின் ஓர் விவரிப்பு உள்ளது; அவன் உக்கிரங்கொண்டு ஓயாத அடியாய் ஜனங்களை அடித்து, கோபமாய் ஜாதிகளை அரசாளுவான். அவன் லூசிபர் - அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி என அழைக்கப்படுகிறான்; அவனுடைய வீழ்ச்சி விவரிக்கப் பட்டுள்ளது; இத்தகைய ஓர் பாபிலோன் ராஜா இதுகாறும் ஒருபோதும் இருந்ததில்லை. அப்படியானால் அவன் ஏதாமோர் எதிர்காலத்திய பாபிலோன் ராஜாவையே குறிப்பீடு செய்ய வேண்டும்; அதாவது பாபிலோன் மீளக் கட்டப்படவுள்ள போது! அது அப்படியாகப்போவதை நாம் பார்த்துள்ளபடி எதிர்காலத்தே! ஏசாயா 12 முதல் 14 வரையுள்ள வசனங்கள் லூசிபர் என இங்கு அழைக்கப்படுகிற சாத்தானை நிச்சயமாய் Evidently குறிப்பீடு செய்கிறது; அதுவும் அவனது வீழ்ச்சிக்கு முன்பாக அவனைப்பற்றிய விவரிப்பாகிறது. ஆனால் அவன் தன்னை அந்திக்கிறிஸ்துவில் அவதாரமெடுக்கவுள்ளதால் (வெளி. 13: 1-2) அவனே (அந்திக்கிறிஸ்து), எதிர்காலத்திய பாபிலோன் ராஜாவாகப் போவதால், அவை அந்திக் கிறிஸ்துவின் பெருமை மற்றும் வரம்புமீறிய நடத்தைக்குமான Presumption மூல புறப்பிடத்தை விவரிக்கின்றன. சாத்தானுடைய வீழ்ச்சிக்கு அவை (பெருமை முதலியவை) வழிநடத்தியதுபோல அவை அந்திக் கிறிஸ்துவின் வீழ்ச்சிக்கும் வழிநடத்தப் போகிறது.

'தீருவின் ராஜா' எனும் பெயரின்கீழ் அந்திக்கிறிஸ்துவைக் குறித்த ஒரேபோலுள்ள கண்ணோட்டம் Similer View தீர்க்கன்

எசேக்கியேலுக்குள்ளது, எசேக். *28:11-19*. எதிர்காலத்திய ரோம சாம்ராஜ்யம் தீருவையும் பாபிலோனையும் உள்ளடக்கப் போவதால், அந்திக்கிறிஸ்து பாபிலோன் ராஜாவாகவும், தீருவின் ராஜாவாகவும் இருப்பான்.

நாம் இப்போது தானியேலுடைய சின்னக் கொம்புக்கு வருகிறோம்; தானியேலுக்கு அவனைக்குறித்த மூன்று காட்சிகள் கிட்டியிருந்ததால், அதிகாரங்கள் எட்டு மற்றும் பதினொன்றில் அவனைக்குறித்து கொடுக்கப்பட்ட விவரணத்தில் சிறிதளவை நாம் எதிர்நோக்க Anticipate வேண்டியுள்ளது. ஏற்கனவே இந்த அதிகாரத்தில் அவனை எடுத்து ஆய்ந்துள்ளோம். தானி. *8:3-12, 20-25*-ல் ஆட்டுக்கடா Ram மற்றும் வெள்ளாட்டுக்கடா He-Goat-ன் காட்சியில் வெள்ளாட்டுக் கடாவின் கண்களுக் கிடையே இருந்த பெரிய கொம்பு முறிந்துபோய் அதினிடத்தில் விசேஷித்த நாலு கொம்புகள் முளைத்து எழும்பினதையும் அவைகள் ஒன்றிலிருந்து ஓர் சின்னக் கொம்பு புறப்பட்டு வந்ததையும் தானியேல் கண்டார்.

தானி. *8:9-11*

சின்னக் கொம்பினது அவரது பொருள் அர்த்தப் படுத்தலில் காபிரியேல் தூதன் கூறியதாவது:

தானி. *8: 23-25*

ஒருசில வேதாகம வல்லுநர் இந்த சின்னக் கொம்பு (வெள்ளாட்டுக்கடாவின் பெரிய கொம்பினிடத்தே முளைத்த நான்கிலொன்றிலிருந்து வெளிவந்த) நான்காவது காட்டியல் மிருகத்தின் பத்துக் கொம்புகளின் மத்தியில் முளைத்தெழுந்த சின்னக் கொம்பும் ஒன்றாகாது; ஏனெனில் இது (வெள்ளாட்டுக் கடாவினின்று முளைத்த) அந்தியோகு எபிப்பானஸை உருவகப்படுத்துகிறது Antiochus Epiphanes என வாதாடுகின்றனர். அவன் கி.மு. *166*-ல் எருசலேமில் தேவாலய பலிபீடத்தின் Altar மீது ஓர் விக்கிரக பலிபீடத்தை நிறுவி அதன்மீது பன்றி மாம்சத்தை பலியிட்டு அதைத் தீட்டுப்படுத்தினான். ஆனால், இந்த சின்னக் கொம்பின் விவரணம் மற்றும் அவனது நடத்தை அந்தியோகு எபிப்பானசுடையதோடு சரி ஒப்புமையாவதில்லை; மாறாக நான்காவது காட்டியல் மிருகத்தினுடைய

சின்னக்கொம்போடு சரி ஒப்புமையாகிறது.

அந்தியோகு எபிப்பானஸ், வானத்தின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றை ஒருபோதும் விழப்பண்ணவில்லை; அல்லது சேனையினுடைய அதிபதிபரியந்தம் தன்னை உயர்த்தவில்லை; அதிபதிகளுக்கு அதிபதியாயிருக்கிறவருக்கு (கிறிஸ்து) விரோதமாய் எழும்பவில்லை; அவன் கையினாலல்ல வேறுவிதமாய் முறித்துப்போடப்படவில்லை. ஆனால் கி.மு. 165-ல் தாபேயில் Tabae இயற்கை மரணத்தில் மரித்தான்.

காபிரியேல் தூதன், இக்காட்சி அந்தியோகு எபிப் பானாசின் காலத்துக்கு உரித்தானதில்லை; மாறாக முடிவு காலத்தைச் சார்ந்தது எனக் கூறுகிறார், தானி. 8:17. அதாவது புறஜாதியாரின் காலங்களின் முடிவுக்குரியது! அது இன்னமும் எதிர்காலத்தது! கோபத்தின் இறுதி முடிவுகாலத்திலே Last End of the Indignation சம்பவிப்பதை தானியேலுக்கு அறியச் செய்வதே தனது பணியாயிருந்தது என்றும் காபிரியேல் தூதன் கூட்டியுரைத்தார், (தானி. 8:19). அல்லது மகா உபத்திரவ காலத்தது! ஆகவே காலத்தை (முடிவு காலத்தை) பொறுத்தவரை தானியேலின் சின்னக்கொம்பு, (தானி. 8:9-12, 23-25). தானியேலின் நான்காவது காட்டியல் மிருகத்தின் சின்னக் கொம்புடன், (தானி. 7: 7-8). ஒத்திசைவு Synchronizes கொள்வதையும் இவை இரண்டும் அந்திக்கிறிஸ்துவெனும் ஒரே நபரையே சுட்டிக் காட்டு கிறதையும் நாம் பார்க்கிறோம்.

தன்னிஷ்ட ராஜா காட்சியில் சின்னக் கொம்பினது இன்னொரு முன்னோட்டத்தை தானியேல் பெற்றிருந்தார்; ஆனால் அதைப் பாராயணம் செய்ய இப்பொழுது இங்கே நாம் நிறுத்தப்போவதில்லை. அதிகாரம் 11-ன் விரிவுரையாக்கத்தில் அது விவரிக்கப்படப் போகிறது.

சின்னக்கொம்பினது பவுலுடைய முன்னோட்டம்
Paul's Foreview of the Little Horn

'2 தெசலோ 2:3-12'

பவுல் இங்கே தானியேலுடைய சின்னக்கொம்பை மூன்று வெவ்வேறு பெயர்களால் அழைக்கிறார்:

'பாவமனுஷன்' - The Man of Sin

'கேட்டின் மகன்' - The Son of Perdition

'அக்கிரமக்காரன்' - The Wicked

'கேட்டின் மகன்' என்கிற பெயர் தனிமுறைச் சிறப்பில்லாமலில்லை. 'சின்னக்கொம்பு' அல்லது அந்திக்கிறிஸ்துவின் மூலபுறப்பிடத்தை Origin இடவமைப்பு Locate செய்ய இது நமக்கு உதவுகிறது. இருமுறை Twice வேத எழுத்துகளில் இப்பெயர் பயன்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவால் யூதாசைக் குறித்து இது முதலாவது பயன்படுத்தப்படுகிறது, (யோவான் 17:12) மற்றும் இவ்விடத்தே அந்திக்கிறிஸ்துவைக் குறித்து! ஆதியாகமம் 3:15-ல் 'வலுசர்ப்பம்' Serpent (சாத்தான்)னிடம் தேவன் கூறியதாவது: 'உனக்கும், ஸ்திரீக்கும், உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்' என்று! ஸ்திரீயின் வித்து கிறிஸ்தவானார்; பின்பு சர்ப்பத்தின் வித்து அந்திக்கிறிஸ்துவாயிருக்க வேண்டும். கிறிஸ்து ஓர் கன்னியிடமாய் பரிசுத்த ஆவியால் பிறந்தார்; அதேபோல், அந்திக்கிறிஸ்து ஓர் ஸ்திரீயினால் (ஓர் கன்னியென்று தேவையில்லை) சாத்தானால் பிறப்பிக்கப்படுவான். இது ஓர் புதிய கண்ணோட்டமன்று! ஏனெனில் அப்போஸ்தலர் யோவான் நாட்கள் தொடங்கி அநேக தேவனின் ஆவிக்குரிய இதயம் கொண்ட பிள்ளைகள் இதைக் கொண்டிருந்தனர். அத்தகையோர் ஓர் 'பிசாசுமகன்'Demon Manஆக இருக்க வேண்டிய ஓர் மனிதன் மானிடர் மத்தியில் பிறக்கப்போகிறதை எதிர்பார்த்திருந்துள்ளனர். அவனது தாய் மீது சாத்தான் இறங்குவான்; அவளை ஆட்கொள்ளுவான்; அதினிமித்தம் அவளிடம் பிறக்கின்ற உயிருரு முற்றிலும் சீர்க்கெட்டுப் போயிருப்பான் Depraved. 'தேவபுத்திரர்கள்' Sons of God (தேவ தூதர்கள்Angels) மானிட உருவை தங்களில் எடுத்து மனுஷக்குமாரத்திகளோடு கனவன்-மனைவி போன்று கூடிவாழக் கூடுமானால் - பெருவெள்ள ஆழிக்குமுன்னருள்ள நாட்களில் - மேலும் அக்கூடுகையினாலான விளைபயன் Off Spring பலசாலிகளான மனுஷராயிருந்திருந்து, அதுவும் சாத்தானது இயல்புத்தன்மையிலான மனிதர்! Satanic Character தங்கள் அவக்கேடான நடவடிக்கையால் பெருவெள்ள ஊழியை

தோற்றுவிக்கக் கூடுமானால், (ஆதி. 6:1-8) ஏன் சாத்தான் ஓர் மனித உயிருரு தோற்றத்தை எடுத்து, ஏதாமோர் ஸ்திரீமூலம் அந்திக்கிறிஸ்துவுடைய தகப்பனாக முடியாது? அத்தகைய ஓர் நபர் ஏன் Son of Perdition 'கேட்டின் மகன்' அல்லது சாத்தானுடையவன் என சரிவர அழைக்கப்படமுடியாது? கேடு/அழிவு/நரகம் ஓர் இடம், (வெளி. 17:8,11) என்கையில், யூதாசும், அந்திக்கிறிஸ்துவும் கேட்டின் மக்கள் Sons of Perdition ஆகின்றனர்; ஓர் பிரத்தியேகக் கணிப்பில்! ஏனெனில் அவர்கள் கேட்டின் ஆக்கியோனான சாத்தானுடைய மகன்கள் ஆகின்றனர்.

யோவான் 6:70-71-ல் இயேசு பன்னிரு சீடர்களை நோக்கி, 'பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் எனக் கூறியதை நாம் வாசிக்கிறோமே! யூதாசு ஸ்காரியோத்தை - சீமோனின் மகனைக் குறித்தே அவன் பன்னிருவரி லொருவனாயிருந்தும், தம்மைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனாயிருந்த படியால் இயேசு இப்படிச் சொன்னார். வேறெந்த வேதபகுதியிலும் 'பிசாசு' எனும் பதம் எந்தவொரு நபர்க்கும் சாத்தானைத் தவிர்த்து, பிரயோகிக்கப்படவில்லை. இங்குள்ள வார்த்தை Diabolus என்பது நிலையான/உறுதியான விதி definite article பயன்படுத்தப்படுவதால் உங்களில் ஒருவன் பிசாசாயிருக்கிறான் The Devil என்பதே சரி! இது யூதாசை 'பிசாசு அவதாரம்' Devil incarnate ஆக்குகிறது. இயேசு அவனை 'கேட்டின் மகன்' The Son of Perdition என ஏன் அழைத்தார் என்பதற்கு விளக்கமளிக்கிறது. 'சீமோனின் குமாரன்' என வசனப்பகுதியில் அழைக்கப்படுவதை சொல்வது போதுமானதில்லை; ஏனெனில் குமாரன் The Son என்கிறபதம் Italics-ல் இருப்பது அது மூலப்பதிப்பில் இல்லை என்பதை காட்டுகிறது. அதேபோது 'சிமியோன்' Simon என்ற பெயர் கொடுக்கப்பட்டதன் காரணம் யூதாசுடைய தகப்பனென கருதப்படுபவனாவான், reputed father. அதேபோது யூதாசு வேறே எவனோவுடைய மகன் ஆகலாம்.

அடுத்த கேள்வி எதுவெனில் 'யூதாசும் அந்திக்கிறிஸ்துவும் இருவரும் 'கேட்டின் மகன்' என அழைக்கப்படுகையில், அவர்கள் இருவரும் ஒரே நபரா? அல்லது இருவேறு கேட்டின்

மகன்களா? எதிர்பார்ப்பு இவ்வாறானது: வெளி. 11:7-ல் நாம் படிக்கிறதாவது: 'இரண்டு சாட்சிகளை' ஜெயித்துக் கொன்று போடுகிற 'மிருகம்' பாதாளத்திலிருந்து Bottomless Pit(Abyss) ஏறிவருகிறதாக! அந்த மிருகம் அந்திக்கிறிஸ்துவாயிருக்கிறது. இப்போதும் அவன் எவ்வாறு பாதாளத்திற்குள் சென்றிருந்தான்? பிரவேசித்தான்? சரி, 'கேட்டின் மகன்' ஒருவன் மாத்திரம் இருக்கிறதானால் மற்றும் யூதாசும் அந்திக்கிறிஸ்துவும் ஒரே ஒருவன் மாத்திரமே(ஒரே நபரே) என்றால், பின்பு யூதாஸ் தனக்குரிய இடத்துக்கு போனபோது (பாதாளத்துக்கு), அப். 1:25, அந்திக்கிறிஸ்துவே அவ்வாறு பாதாளத்துக்குச் சென்றிருந்தான். வேறெந்த நபரைக் குறித்தும் 'அவன் தனக்குரிய இடத்துக்கு சென்றான், என வேதாகமத்தில் வேறெங்காவது சொல்லப்பட்டுள்ளதா? மீண்டும் வெளி. 17:8-ல் சொல்லப்பட்டுள்ளதாவது: "நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது. இப்பொழுது இல்லை; இது பாதாளத்திலிருந்து (Abyss) ஏறிவந்து, நாசமடையப்போகிறது!" இந்த மிருகமே இரண்டு சாட்சிகளை கொன்று போடுகிற அதே மிருகம்! அவனே அந்திக்கிறிஸ்து! இப்போதும் அவனைக் குறித்து நான்கு காரியங்கள் சொல்லப்பட உள்ளன. முதலாவது: அவன் இருந்தான்; இரண்டாவது: அவன் இல்லை; மூன்றாவது: அவன் பாதாளத்திலிருந்து ஏறிவெளிவருவான்; நான்காவது: அவன் நாசமடையப் போகிறான். இதிலிருந்து நாம் படிக்கிறதாவது: யோவானின் நாளில் 'மிருகம்' இருக்கவில்லை; ஆனால் அவன் பூமியின் மேல் முன்னதாக before இருந்திருக்கிறான் மற்றும் மீண்டும் வரவிருந்தான்; அவ்வமயம் அவன் பாதாளத்திலிருந்து Bottomless pit வெளியேறிவர இருந்தான். இது ஓர் ஐயக்கிடமற்ற positive நிருபணமாகிறது. அந்திக்கிறிஸ்து பூமியின் மேல் முன்னதாக before இருந்திருக்கிறான் என்பது! மேலும் அவன் எதிர்காலத்தே வருகிறபோது அவன் பாதாளத்தினின்று வெளிக்கிளம்பி வருவான்.

இப்போதும் ஓர் கேள்வி எழுகிறது. அந்திக்கிறிஸ்து பூமியின் மேல் எப்பொழுது இதற்கு முன்னதாக இருந்தான்? யூதாஸும் அந்திக்கிறிஸ்துவும் ஒரே ஓர் நபரே என்பதின் மூலம் இப்புதிர் தீர்வாகிறது. பூமியின் மீது யூதாஸ் இருந்தபோது, அவன் இருந்தான்; யூதாஸ் தனக்குரிய இடத்துக்கு போனபோது அவன்

இல்லாமல் போனான்; யூதாஸ் திரும்பவருகையில், comes back பாதாளத்திலிருந்து கிளம்பிவரும்போது அவன் அந்திக் கிறிஸ்துவாயிருப்பான். இவ்வாக்குயோன் இக் கண்ணோட்டத்தை திறந்த மனதோடு அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறார்.

பவுல் அப்போஸ்தலன் அந்திக்கிறிஸ்துவை 'பாவமனிதன்' என அழைக்கிறார். அதாவது எல்லா பாவமும் அவனில் தலையோங்கி நிற்கும்; கொள்கைமீறுகை Apostasy/ விசுவாச துரோகம்/ கிறிஸ்தவத்தின் கறைப்படுகை / ஒழுக்கக்கேடு Corruption மட்டுமல்ல அதனுடைய உரிமைத்துறப்புமாகும். அது பிதாவையும், குமாரனையும் மறுதலிப்பதாயிருக்கும்! அது சகல சட்டமீறுகையுடைய Lawlessness ஆளத்துவமாயிருக்கவுள்ளது. அக்கிரமத்தின் இரகசியம் Mystery of Iniquity(Lawlessness) பவுலின் நாளிலும் இரகசியமாக கிரியை செய்து கொண்டிருந்தது. அந்திக்கிறிஸ்து சட்டமீறுகையின் காரணமாயிராமல் அதின் விளை பயனாயிருப்பான். அவன் சட்டமீறுகையுடைய கொந்தளிக்கும் கொப்பரையிலிருந்து வெளிக்கிளம்பி வருவான். இப்பொழுதே இவ்வுலகில் மிக வெளிப்படையாக, முனைப்புடையதாக தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கிறது. சகல சட்ட மீறுகையின் முழு நிறைவேற்றம் Consummation அவனில் நேரிடவுள்ளது.

இப்போது சின்னகொம்பு அல்லது அந்திக்கிறிஸ்துவின் தடம்பின்பற்றுவதில் யோவானுக்கு கிட்டிய மிருகத்தைக் குறித்த இருகாட்சிகளை ஒப்பீடு செய்கிறதே இனி மீந்திருக்கிறது.

வெளி. 13:1-7 - சமுத்திரத்திலிருந்து எழும்பிவந்த மிருகம்

வெளி. 17:3,7-17 - சிவப்பு நிறமுள்ள மிருகம்

மேலே கொடுக்கப்பட்டுள்ள இரு விவரிப்புகளில், மிருகம் ஓர் இரட்டை அர்த்தத்தை Dual Meaning கொண்டுள்ளதை காண்பது மிக முக்கியமானதாயுள்ளது. இது புத்துயிரடைந்த ரோம சாம்ராஜ்யம் மற்றும் அதின் 'ஏகாதிபத்திய தலைவர்' அந்திக்கிறிஸ்துவையும் பிரதிநிதித்துப் படுத்துகிறது. புத்துயிரடைந்த ரோம சாம்ராஜ்யமாக தேசங்களுடைய சமுத்திரத்தினின்று வெளிக்கிளம்பிவருகிறதாக காணப்படுகிறது,

(வெளி. 13:1). அந்திக்கிறிஸ்துவாக அது பாதாளத்திலிருந்து ஏறிவருகிறது, வெளி. 11:7;17:8. எடுத்துக்காட்டாக யோவானின் நாளிலுடைய ரோமசாம்ராஜ்யம் 'அது முன்னே இருந்தது. ஆனால், இப்போது இல்லை' என சொல்லப்படக் கூடாது. ஏனென்றால் அது யோவானின் நாளில் அதின் அதிகாரத்தின் உச்ச கட்டத்திலிருந்தது; மேலும், அது பாதாளத்திலிருந்து ஏறி வந்து நாசமடையப்போகிறது என்றும் அதைக் குறித்து சொல்லப்படமுடியாது. அதை ஓர் நபரைக் Person குறித்தே சொல்லப்பட முடியும். மீண்டும் மிருகத்தினுடைய உடல் Body மற்றும் அதின் தலைகள் மற்றும் கொம்புகள் இடையே வேறுபடுத்தி கண்டறிதல் வேண்டும். சரீரம் ஓர் சிவிங்கியுடையதாயும், கால்கள் ஓர் கரடியுடையதாயும் மற்றும் வாய் ஓர் சிங்கத்தினுடையதாயும் கொண்டதான தோற்றம் மீட்டாக்கம் பெற்ற ரோம சாம்ராஜ்யத்தை அதின் கடைசி காலகட்டத்தே காண்பிக்க வேயாகும். தானியேலுடைய முதல் மூன்று காட்டியல் மிருகங்களது தனி இயல்புகளும் அதில் உட்படுத்தப்பட்டிருக்கும் என்பதை காண்பிக்க! அதாவது சிங்கத்துடைய (பாபிலோன்), கரடியுடைய (மேதிய-பெர்சியா) மற்றும் சிவிங்கியுடைய (கிரேக்கு)! மிருகத்தினுடைய அதிக பகுதியைக் கொண்ட பாகம் சரீரமே! அப்பகுதி சிவிங்கியால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதால், மீட்டாக்கம் பெற்ற ரோமசாம்ராஜ்யத்தின் மேலோங்கிய தனித்தன்மை கிரேக்கத்தியதாகும்!

சமுத்திரத்தை விட்டு வெளியேவந்துள்ள மிருகம், (வெளி. 13) ஏழுதலைகளும், பத்து கொம்புகளும் கொண்டுள்ளது; மற்றும் கொம்புகள் கிரீடங்கள் தரிக்கப்பட்டுள்ளன. இது மிருகத்தை அல்லது சாம்ராஜ்யத்தை அதின் அதிகாரத்தின் உச்ச நிலையிலுள்ளதை உருவக வெளிப்பாடு செய்கிறது. அவ்வமயம் அது அதின் எல்லா தலைகளையும் கொண்டுள்ளது. மற்றும் பத்து ராஜ்யங்களுடைய, அதாவது சாம்ராஜ்யம் பிரிக்கப்படவுள்ளபோது ஏற்படப்போகின்ற பத்து ராஜ்யங்களது பத்து ராஜாக்கள் யாவரும் கிரீடம் தரிக்கப்பட்டிருப்பார்கள். பாதாளத்தை விட்டு எழுந்து வருகிற மிருகமும் கூட ஏழு தலைகளும், பத்து கொம்புகளும் கொண்டுள்ளது; ஆனால் அவைகள் கிரீடம் சூட்டப்படவில்லை Not Crowned.

எப்படியெனில், பத்துகொம்புகளால் உருவக வெளிப்பாடு செய்யப்பட்ட பத்து ராஜாக்கள் இன்னமும் தங்களது ராஜ்யங்களை பெற்றுக்கொள்ளவில்லை, (வெளி. 17:12). இது வெளி 17-ன் மிருகம் சாம்ராஜ்யத்தை வாரத்தின் தொடக்கத்திலுள்ள நிலையை உருவகவெளிப்பாடாக்குகிறது என்பதை குறிப்பாக சுட்டுகிறது. இக்கருத்துப் பாங்கை உறுதிசெய்யும் வண்ணமாக 'ஸ்திரீ' மிருகத்தின் மீது இந்த கட்டத்தில் முதுகுமீது அமர்ந்திருக்கிறதற்காக காணப்படுகிறாள். இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்திருந்த ஸ்திரீ அதிகாரம் 17 வரை காணப்படாதிருக்கையில் அவள் வாரத்தின் ஆரம்பமுதலே அவ்வாறு மிருகத்தின்மேல் சவாரி செய்கிறாள் என்பது தெளிவாயுள்ளது; எப்படியெனில் அவள் போப்பாதிக்க சபையை உருவகவெளிப்பாடு செய்கிறாள். அது 'சபை'Church எடுத்துக் கொள்ளப்படுகின்றதின் பிற்பாடு after அதிகாரத்தே வருகிறது. அந்திக்கிறிஸ்துவின் எழுச்சிக்கு முன்னர் ஏற்படும் யுத்தங்களின்போது பழைய ரோம சாம்ராஜ்யத்து நிலஇயல் எல்லை வரம்புக்குட்பட்டதாக காணப்படும் தேசங்கள் தங்கள் பரஸ்பரமான பாதுகாப்புக்கென்று ஓர் கூட்டணி Alliance அமைக்கப்போகின்றன. அத்தகைய தேசங்களின் எண்ணிக்கை பத்தாகும். மிருகத்தின் பத்து கொம்புகளால் உருவக வெளிப்பாடாகின்ற! சந்தேகமின்றி 'போப்பாதிக்க சபை' இதற்கான நடவடிக்கைகளில் முக்கியமான பங்குவகிக்கும் அதற்கு பதிலீடாக அவள் அரசியல் அதிகாரத்திற்கான மீட்டாக்கம் அளிக்கப்படுவாள். இதன்மூலம் சபையும் அரசாட்சியும் State ஒன்றிணைக்கப்படவே இவ்வமைப்பில் சபை மேலானதாக கட்டுப்பாடு செய்யவுள்ளது. இதுவே ஸ்திரீ மிருகத்தின் முதுகுமீது ஏறி இருப்பதின் மூலம் காண்பிக்கப்படுகிறது. அதாவது சபை அரசை கட்டுப்படுத்துவதாக! ஆனால் 'பத்துராஜாக்கள்' தங்கள் ராஜ்யங்களை பெற்றுக்கொண்டவுடன்; கிரீடம் தரிப்பிக்கப்பட்டவுடன் அவர்கள் அந்த வேசியை பகைத்து அவளை பாழும், நிர்வாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தை பட்சித்து அவளை நெருப்பினால் சுட்டெரித்துப்போடுவார்கள்! (வெளி. 17:16) அதாவது அவளது ஆலயங்கள், பேராலயங்கள் சுட்டெரிக்கப்படும். இது வாரத்தின் மத்தியில் நிகழவுள்ளது.

வெளி. 17:9-ல் 'ஏழுதலைகள்' ஏழுமலைகளை உருவாக்க வெளிப்படாக்குவதாக நமக்கு சொல்லப்படுகிறது. (இது ரோம சாம்ராஜ்யத்தோடு அதை இனம் அறியச்செய்ய) அடுத்த வசனத்தில் அவை (ஏழு தலைகள்) ஏழு ராஜாக்களையும் உருவக வெளிப்பாடு செய்வதாக! "அவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள்; ஒருவன் இருக்கிறான்; மற்றவன் இன்னும் வரவில்லை; வரும்போது அவன் கொஞ்சகாலம் தரித்திருக்கவேண்டும்" என்றும் (வெளி. 17:10) சொல்லப்படுகிறது. அதாவது யோவானின் நாளில் இவ்ராஜ்யங்களில் ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருவர் அவ்வமயம் ஆளுகின்ற பேரரசர்; ஏழாவதானவன் இன்னும் வரவிருக்கிறான். விழுந்து விட்டிருந்த ஐந்து ராஜாக்கள் யாரார் என அறியோம், அவர்கள் நீரோ ராயன் மாதிரியான ராஜாக்களே! யோவானின் நாளில் அரியணையில் வீற்றிருந்தவர் டொமிஷியன் Domition ஆயிருந்தார். யோவானை பத்முதீவுக்கு நாடுகடத்தியவர்! 'கடைசி ஏழாவது ராஜா' சந்தேகமின்றி இனிமேல் வரவுள்ளது அந்திக்கிறிஸ்துவே! வெளி. 13:3ல் ஏழுதலைகளில் அல்லது ராஜாக்களில் ஒன்று சாவுக்கேதுவான காயம் பட்டதாக சொல்லப்படுகிறது. எந்த ஒன்று என சொல்லப்படவில்லை. முடிவுரையாதெனில் இது கடைசியுள்ளதே! ஏனெனில் மிருகம் அதின் எல்லா தலைகளையும் பெற்றிருந்தது, அவைகளில் ஒன்று காயப்பட்டுள்ளதற்கு முன்பு! வெளி 17:11-ல் அவன் "இருந்ததும், இராததுமாகிய மிருகம் என்று! அம்மிருகமே எட்டாவதானவனும் (எட்டாவது தலை) அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும் (தலை) நாசமடையப் போகிறவனுமா யிருக்கிறான்". ஒரே தெளிவான விளக்கம் யாதெனில் அந்த ஏழாவது தலை அந்திக்கிறிஸ்துதான் - சாவுக்கேதுவான காயம் பட்டவன். ஒருகால் ஓர் கொலையாளியின் கரத்தால்! அதின் விளைவாக நிஜமாக மரித்துவிடுகிறான்; அல்லது மரணத்தை தழுவியதாக பாவிக்கிறான்; அச்சரீரம் அடக்கத்துக்காக கிடத்தப்பட்டிருக்கையில் அவன் மரணத்தைவிட்டு எழுந்துவிடுகிறான்; இவ்விதம் அவன் எட்டாவதாகிறான் (தலை) ஏழாவதினின்று (தலை) உயிர்மீட்சியடைந்து! இவ்வாறான பாவனை கொண்ட மரணத்தைவிட்டு உயிர்த்தெழுதலில் அந்திக்கிறிஸ்து கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பாவித்து காட்டுகிறான். உலகமே ஆச்சரியப்படும்படி, பூமியிலுள்ள

அனைவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தை பின்பற்றச் செய்கிறது, (வெளி. 13:3). இது அவனது செல்வாக்கையும், அதிகாரத்தையும் அதிகரிக்கச் செய்யும்! வாரத்தின் மத்தியில் இது ஏற்படுமானால், வலுசர்ப்பம் வானத்தை விட்டு கீழே தள்ளப்படும் நேரத்தே, (வெளி. 12:7-9). அது அந்திக்கிறிஸ்துவில் மாபெரும் மாறுதலை உருவாக்குவதை காரணம் காட்டுவதாகும். ஏனெனில் அவன் 'சாவுக்கேதுவான காயம்' பெறுதற்கு முன்பாக இனிமையானவன், விரும்பப் படத்தக்கவன்; ஆனால் அவன் உயிர்த்தெழுதலுக்கு பின்பு அல்லது மீளசரீர மீட்டாக்கம் பெற்றபின்பு அவன் பிசாசு தன்மை பெற்று விடுகிறான் Satanic. (சாத்தான்) வலுசர்ப்பம் அவனில் அவதாரம் எடுத்ததின் விளைவாக! இவ்வேளையில் அவன் யூதரோடுள்ள உடன்படிக்கையை முறிக்கிறான், (தானி. 9:27). மீளக்கட்டப்பட்ட ஆலயத்தை (எருசலேமின்) பாழாக்குகிறான். பாழாக்கும் அருவருப்பை நிறுவதின் மூலம்! அது தனது விக்கிரக சொரூபத்தை - பாழாக்குகிறவனான The Desolator அவனது உருவச்சிலையை! (வெளி. 13:13-15). நான்காவது காட்டியல் மிருகத்தின் 'சின்னகொம்பாக' அவன் பத்து கொம்புகள் தோன்றுகைக்கு பின்னர் வரை தோன்றவில்லை. அதாவது பத்து கூட்டணி ராஜ்யங்களது! தோன்றுகை வரை! இதன் மூலம் அந்திக்கிறிஸ்து கூட்டணியை அமைக்கிறவனல்ல என்றும் அவன் அதினின்று உருவெடுத்து வெளிவருபவனே என்பது தெளிவாகிறது.

இவ்வாறான முன்னோட்டங்களை ஒப்பிடும்போது மற்றும் தானியேலின் சின்னகொம்பின் நடத்தை ஒத்திசைவை கவனிக்கும்போது அதுபோல பவுலின் 'பாவமனிதன்' மற்றும் யோவானின் மிருகம் நடத்தையை! மேலும் தானியேலின் சின்னகொம்பும், யோவானின் மிருகமும் ஒரே காலநீட்சிக்கு தொடர இருக்கிறதை அதாவது நாற்பத்தி இரண்டு மாதங்கள் அல்லது மூன்றரை வருடங்கள்! மேலும் தானியேலின் சின்னகொம்பு, பவுலின் பாவ மனிதன் மற்றும் யோவானின் மிருகம் ஆகிய யாவும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது ஒரே விதமாக அழிக்கப்படப் போகின்றன என்பதை கவனத்தில் எடுக்கும்போது அவையாவும் ஒரே தீயவல்லமையை Evil Power முன் உருவாக்கம் செய்கிறது Pre-Figure என நாம் பார்க்கிறோம். அவ்வல்லமையை 'சாத்தானின்

செயலின் பின் தொடருதல்படி' after the working of Satan, 1யோவான் 2:18 அழைக்கிறபடி 'அந்திக்கிறிஸ்து' என்பவனே! இன்னொரு வார்த்தையின்படி தீர்க்கதரிசனத்தில் மூன்று ஒரே அடையாளத்துவ ஆளத்துவங்கள் Three Symbolic Personages ஒரே சமயத்தே செயல் காட்சி களத்தில் தோன்றி, ஒரே இடபரப்பெல்லை Same Territory இடம் பிடித்து, ஒரே பண்புருவடிவத்தை Same Character வெளிபடுத்தி ஒரே பணியை செய்து, ஒரே கால நீட்சிக்கு வாழ்ந்து, ஒரே முடிவு விதியை Same Fate பெற்றிருந்தால், அம்மூன்றும் ஒரே காரியத்தையே உருவ அடையாளப்படுத்த வேண்டும்.

அந்திக்கிறிஸ்து The Antichrist

அந்திக்கிறிஸ்து அல்லது கடைசி 'புறஜாதி ஆட்சியாளன்' ஓர் 'கலவையான மனிதன்' Composite Man 'சிவிங்கியை ஒத்த மிருக' Leopard like Beast -த்தின் விவரணத்திலிருந்து காணப்படுகிறபடி! ஓர் கரடிக்கு ஒத்த கால் பாதங்கள் மற்றும் சிங்கத்தின் வாயையும் கொண்டதான ஓர் கலப்பு மிருகம்! வெளி. 13:2. அவன் ஒருங்கிணைந்த திறமைகளையும் அதிகாரங்களையும் உடையவனாவான். வலுசர்ப்பம் Dragon அவன்மீது பொழியவுள்ள வல்லமையால் இன்னும் பெரிதாக்கப்பட்டதான இத்திறமைகள்/அதிகாரங்கள் நேபுகாத்நேச்சார், அர்த சஷ்டா, மகா அலெக்சாண்டர் மற்றும் அகஸ்து சீசர் ஆகியோருடையவை கொண்ட ஓர் கலப்பு சேர்க்கையாகும்! மறுபடிபிறக்காத மனிதரை கவரக் கூடிய ஓர் அற்புதமான திறமை Gift உடையவன் மற்றும் அவனது தடுக்க இயலா ஆளத்துவத்தின் கவர்ச்சி, அவனது குறைவில்லா நிறை வெற்றிப்பேறுகள், மீமானிட அறிவு, மாபெரிய நிர்வாகத் திறமை, ஆட்சித்திறன் அத்தோடுள்ள ஓர் முழுநிறைவிலான முகப் புகழ்ச்சிக்காரனாக ஓர் அரசியல் செயலாட்சிதிறன் கொண்டவனாக, தலைசிறந்த போர்த்திறவல்லுநனாக அவனை மனிதரில் உச்சிமுனைப்பான மற்றும் முனைத்த முக்கியம் வாய்ந்த மனிதனாக விளங்கச்செய்யும். இத்தகைய எல்லாஅருந்திறன்களும் அவன்மீது சாத்தான் கையளிப்பான். சாத்தானது தலைசிறந்த படைப்பாக மற்றும் கருவியாக அவன் இருக்கவுள்ளான். இவ்விதமாக அவனை மீமனிதனாக The Superman ஆக்குவான்.

அவன் மனிதரை வெறியூட்டச்செய்வான். ஓர் பலமான மருட்சி மயக்கத்தால் மற்றும் அவனது ஒருபோதும் மாறாத வெறியால்! அவன் கொலை செய்யப்பட்டு மீள எழுகையில் அவன் மேற்கூறிய வல்லமைகள் எதையும் இழந் திருக்கமாட்டான். மாறாக இன்னும் கூடுதலாக அவன் சகலவித துர்க்குணத்துக்கும் மற்றும் தூஷணத்துக்கும் ஓர் மானிட அவதாரமாகவுள்ளான். சின்னகொம்புடைய விவரணத்துக்கு பதிலளிக்கின்ற எந்த ஓர் நபரும் பூமியின் மீது இதுகாறும் தோன்றினதில்லை. அத்தகைய உருவவடிவம் Character அதிகபட்சம் நினைத்துப் பார்க்கக் கூடாதவாறுள்ளது. அத்தகைய உருவவடிவம் எந்த எழுத்தாளனாலும் கற்பனை செய்ய முடியாதுள்ளது. ஆயினும் வேதாகம எழுத்துக்கள் அத்தகைய ஓர் 'ஆள்' Person வருகிறதை தெளிவாக முன்னுரைத்துள்ளன. இன்று நித்திய இரட்சிப்பாக கிறிஸ்துவை நிராகரிக்கின்ற உலகம் Eternal Salvation அந்திக்கிறிஸ்துவை நித்திய அழிவுக்காக தாராளமாக/ உடனடியாக ஏற்றுக் கொள்ளப்போகிறது. ஆட்டுக்குட்டியை மறுக்கின்ற உலகம் மிருகத்தை ஏற்றுக்கொள்ளும்.

கள்ளத் தீர்க்கதரிசி The False Prophet

கள்ளத் தீர்க்கதரிசியான சின்னக் கொம்பின் கூட்டாளியை தானியேல் காணாதிருக்கையில் அது யோவானுக்குக் கொடுக்கப்பட்ட ஓர் கூடுதலான வெளிப் பாடாக இருந்தது, அதினிமித்தம் தானியேல் புத்தகத்துக்கு உரியதாகாதுள்ளது. ஆயினும் அநேகர் வெளி. 13-ன் இரு மிருகங்களை Two Beasts குழப்படி செய்கின்றனர். எப்படியெனில், சமுத்திரத்திலிருந்து எழும்பி வருகிற முதல் மிருகத்தை 'மீட்டாக்கம் பெற்ற ரோம சாம்ராஜ்யத்தின்' Revived Roman Empire அரசுக்குரிய தலைவன் Political Head என்றும் பூமியிலிருந்து எழும்பிய இரண்டாம் மிருகம் Second Beast சமய கோயில் தொடர்பான தலைவன் Ecclesiastical Head அல்லது அந்திக் கிறிஸ்து Antichrist என்றும் அழைத்து தாறுமாறாக குழப்பு கின்றனர். ஆகையால் இக்கட்டத்தில் இவ்விரண்டுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை மேம்படுத்திக் காட்ட வேண்டுவது தேவையாகக் காணப்படுகிறது. இரண்டாவது மிருகத்தை யோவான் கீழ்வருமாறு விவரிக்கிறார்:

வெளி. *13:11-18*

பின்பு வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்தது; வலு சர்ப்பத்தைப்போலப் பேசினது; அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச் சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படிச் செய்தது. அன்றியும், அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப் பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து, மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்துக்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று. மேலும், அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத் தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்கு சத்துவம் கொடுக்கப்பட்டது. அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும் படிக்கும், அதே மிருகத்தின் முத்திரையாவது அதின் நாமத்தையாவது, அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது; இதிலே ஞானம் விளங்கும். அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன். அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றி அறுபத்தாறு.

இரண்டாவது மிருகம் ஓர் ஆட்டுக்குட்டியாயிருந்தது என்று யோவான் சொல்லாத நிலையில் ஓர் ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாக இருந்தது; அதாவது அது ஆட்டுக்குட்டி போலிருந்து ஓர் வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது; அதற்கு ஓர் பெயர் இருந்தது; அது கள்ளத்தீர்க்கதரிசி என மூன்றுமுறை அழைக்கப்படுகிறது; வெளி. *16:13; 19:20;*

20:10. இரண்டுமுறை முதல் மிருகத்தோடும் (அந்திக்கிறிஸ்து) ஒரு முறை வலுசர்ப்பம் (சாத்தான்) மற்றும் முதல் மிருகத்தோடும் ஒருமித்து வருகிறது. அவைகள் நபர்கள் Persons ஆவதுபோன்று இதுவும் அப்படியிருக்க வேண்டும்; இரண்டாவது மிருகம் கள்ளத்தீர்க்கதரிசி என அழைக்கப்படுகிற மெய்மை அவன் அந்திக்கிறிஸ்துவல்ல என்பதற்கு நிரூபணமாகிறது. இயேசுவுக்கு அவனைக் குறித்த ஓர் முன்னோட்டம் இருந்து கூறியதாவது: 'கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்' மத். *24:24.* இங்கே இயேசு கள்ளக் கிறிஸ்துக் களையும், கள்ளத் தீர்க்கதரிசிகளையும் வகை வேறுபடுத்திக் காண்பிக்கிறார். ஆகவே அந்திக் கிறிஸ்துவும் கள்ளத் தீர்க்கதரிசியும் ஒரே ஒன்றாக முடியாது.

இரண்டாவது மிருகம் பூமியிலிருந்து எழும்பி வருதல் அவன் ஓர் உயிர்த்தெழப்பட்ட நபர் Resurrected Person என்பதைக் குறித்துக் காட்டுகிறது. நாம் சாடையாய் குறிப்பிட்டுள்ளபடி அந்திக் கிறிஸ்து உயிர்த்தெழப்பட்ட யூதாசாயிருந்தால் கள்ளத் தீர்க்கதரிசியும்கூட ஓர் உயிர்த்தெழப்பட்ட நபராக Resurrected Person ஆக ஏன் இருக்கக்கூடாது? அந்நாட்களில் பரலோகத்தினின்று திரும்பி வருவதற்குள்ள இரு நபர்களாக இரு 'சாட்சிகளான' மோசேயும் எலியாவும் இருப்பர், வெளி. *11:3-7.* பாதாள உலகினின்று The Underworld 'இரு நபர்கள்' இரு சாட்சிகளுடைய பணியை எதிர்த்துத் தடைசெய்ய சாத்தானால் ஏன் வெளிக் கொண்டுவரப்படக் கூடாது? இரு மிருகங்களும் அக்கினிக் கடலினுள் உயிரோடே Alive தள்ளப்படுகின்ற (வெளி. *19:20*) மெய்மையே, அவர்கள் சாதாரண மாள்வுக் குரியவரினின்றும் மேலானவர்களென்பது நிரூபணமாகிறது. 'முதல் மிருகம்' மீட்டாக்கம் பெற்ற ரோம சாம்ராஜ்யத்தினுடைய கடைசி சக்கரவர்த்தியைக் காட்டிலும் மேலானவன்; அவனே மீமானிடனான அந்திக்கிறிஸ்து! மேலுமாக அந்திக்கிறிஸ்து ஓர் ராஜாவாகயிருந்து, ஓர் ராஜ்யத்தை அரசாளப்போகிறான்; சாத்தான் கிறிஸ்துவுக்குக் கொடுக்க முன்வந்த, ஆனால் அவர் ஏற்க மறுத்த உலகத்தின் ராஜ்யங்களை அந்திக்கிறிஸ்து ஏற்றுக்கொள்வான், லூக். *4:5-8.* அவன் தன்னை

உயர்த்தி தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான், 2தெச.2:4. ஆனால் கள்ளத் தீர்க்கத்தரிசி ஓர் ராஜாவல்ல! அவன் தன்னை உயர்த்தமாட்டான். அவன் முதல் மிருகத்தை (அந்திக் கிறிஸ்துவை) உயர்த்துகிறான்; முதல் மிருகத்தோடுள்ள அவனது தொடர்பு கிறிஸ்துவோடுள்ள பரிசுத்த ஆவியின் தொடர்புக்கு சரிசமமாயுள்ளது. அதாவது பரிசுத்த ஆவியானவர் தன்னை மகிமைப்படுத்தாமல் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவது போன்றது, யோவா. *16:13-15.* அவன் *(கள்ளத்தீர்க்கத்தரிசி)* பூமியையும் அதின் குடிகளையும் முதல் மிருகத்தை வணங்கும்படி செய்வான்; வெளி. *13:12.* கிறிஸ்துவின் அடியார்கள் மீட்கப்படும் நாளுக்கென்று (நாள்வரையில்) பரிசுத்த ஆவியால் முத்திரை இடப்பட்டுள்ளது போல (எபேசி. *4:30*). முதல் மிருகத்தின் அடியார்கள் அழிவடையும் நாளுக்கென்று (நாள்வரைக்கும்) இரண்டாவது மிருகத்தால் (கள்ளத் தீர்க்கதரிசியால்) முத்திரையிடப்படுவர் (வெளி. *13:16-17;* 2பேது. *3:7*).

கள்ளத்தீர்க்கதரிசி ஓர் 'அற்புத பணியாள்' Miracle Worker. இயேசு ஓர் அற்புதப் பணியாளராக இருந்தபோதிலும்,அவர் தமது மகத்தான வல்ல கிரியைகளை பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே செய்தார். கள்ளத் தீர்க்கதரிசி செய்யப் போகின்ற அற்புதங்களில் ஒன்று வானத்திலிருந்து அக்கினியை இறங்கப்பண்ணுவதேயாகும், வெளி. *13:13.* அவ்வமயம் மோசேயும் எலியாவும் திரும்பி பூமியின்மீது வந்திருக்கவுள்ளதால் (வெளி.*11:3-12*) அதிகபட்சமும் எலியாவுக்கும் கள்ளத் தீர்க்கதரிசிக்குமிடையே ஓர் அக்கினிப் பரீட்சை நடக்கவுள்ளது. கர்மேல் பர்வதத்தின் மீது அன்று யார்தேவன், யேகோவாவா அல்லது பாகாலா என்னும் பரீட்சை மீள நடக்கவுள்ளது.

ஆனால் இவ்வமயம் நடக்கவுள்ள பரீட்சை யேகோவாவா அல்லது அந்திக்கிறிஸ்துவா, யார் தேவன்? என்பதே! எலியாவும் கள்ளதீர்க்கதரிசியும் அக்கினியை இறங்கப்பண்ண உள்ளதால், பரீட்சை முடிவுக்குரியதல்லாதபோதும். கள்ளத்தீர்க்கதரிசி சாத்தானால் சக்தியேற்றப்பட உள்ளதால் அவனால் இதைச் செய்யக்கூடியவனாவான். ஏனெனில், யோபுவின் புத்தகத்திலிருந்து, சாத்தான் வானத்திலிருந்து அக்கினி

இறக்கக்கூடியவன் என அறிகிறோம், (யோபு 1:16). முதல் மிருகம் அந்திக்கிறிஸ்துவே என்பதற்கான மேலுமான சான்றாக, கள்ளத்தீர்க்கத்தரிசி பூமியின் குடிகளுக்கு மிருகத்தினுடைய ஓர் சொரூபம் பண்ணவேண்டுமென்றும், அதை வணங்க வேண்டுமென்றும் கட்டளையிடுகிறதிலிருந்து வெளியாகிறது; முதல் மிருகம் அந்திக்கிறிஸ்துவாயிராதபட்சத்தில் இதை அவன் செய்யப்போவதில்லை! (வெளி. 13:14)! வாங்குகிறவர்கள் மற்றும் விற்கிறவர்களனைவரும் ஓர் முத்திரை Mark - நரகத்து சூட்டுக்குறி Brand of Hell தரித்துக்கொள்ளச் செய்வான். இச்சூட்டுக்குறி Brand வலது கையிலோ அல்லது நெற்றியிலோ இடப்படும்; இக்குறிமூன்று வகையிலாயிருக்கவுள்ளது; முத்திரை Mark (ஏதோவோர் விசித்திர அடையாளம்) அல்லது 'மிருகத்தின் நாமம்' அல்லது அவன் 'நாமத்தின் இலக்கம்'; அது (அவ்விலக்கம்) 666! அது 'மனிதனது எண்'! வெளி. 13:16-18.

இவ்வாறான முதல் மிருகத்துக்கும் இரண்டாம் மிருகத்துக்குமிடையேயுள்ளதான பற்பல தனி வேறுபாடுகள் மற்றும் அவை இரண்டும் தனித்தனியே கீழுலகத்திலிருந்து மேலெழும்பவுள்ளதும் (வெளி. 17:8; 13:11), அதினிமித்தம் சாதாரண மாள்வுக்குரியவர்போன்று கொல்லப்பட முடியாதோராக அக்கினிக்கடலில் உயிரோடே தள்ளப்பட வேண்டுவதும், (வெளி. 19:20) இவைகளை வேறுபடுத்திக் காண்பிக்கிறதோடு, கள்ளத்தீர்க்கதரிசி அந்திக்கிறிஸ்தாகான், மாறாக முதல் மிருகமே அவன் என்றும் தெளிவாக காண்பிக்கிறது. வேறு வார்த்தைகளில் கள்ளத்தீர்க்கதரிசி எந்தவித முன்னணியான விளக்கமளிப்புமில்லாமல், ஓர் மதம் தழுவிய பொதுசபை தொடர்பான Ecclesiastical கூட்டாளியாக மற்றும் முதல் மிருகத்தின்கீழ் பணியாளனாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளான். மேலும் தன் சொந்தத்தில் வல்லமை இல்லாதவனாய், அவனுக்கு கையளிக்கப்பட்ட / அதிகாரமளிக்கப்பட்ட வல்லமை மாத்திரமே உடையவனாக (வெளி.13:12) அறிமுகப் படுத்தப்படுகிறான்.

அவன் தனக்குரியதாய் For Himself ஏது வணக்கமும் உரிமை கோருவதில்லை; மாறாக முதல் மிருகத்தையே யாவரும் வணங்கும்படிச் செய்வான் (13:12). வணங்காதோரை முரண்கோட்பாடுடையவரென Heretics தீர்த்து அவன்

அவர்களைத் தண்டிப்பான். தனது அதிகாரத்தை அடையாளங்களினாலும், பொய்யான அற்புதங்களினாலும் அசையழுத்தப்படுத்துவான். இதன்மூலம் மக்கள் பொய்யை The Lie ஏற்கும்படிச் செய்வான் 2தெச. 2:8-12.

சாத்தானிய மும்மை
The Satanic Trinity

வலுசர்ப்பம், மிருகம் மற்றும் கள்ளத் தீர்க்கத்தரிசியில் தெய்வீக மும்மையின் சாத்தானின் பாவனையான சாத்தானிய மும்மை உள்ளது. காண்பதற்கியலா, கட்புலனாகாததான Invisible வலு சர்ப்பத்தில் பிதா Father (தெய்வ எதிரி) உள்ளான். மிருகத்தில் கேட்டின் மகன் (அந்திக்கிறிஸ்து) எனும் வலுசர்ப்பத்தின் ஒரே பேறானவன் Begotten of the Dragon உள்ளான். அவன் (அந்திக்கிறிஸ்து) பூமியின்மீது தோன்றுகிறான், மரிக்கிறான், பின்பு உயிர்ப்பிக்கப்படுகிறான்; அவனுக்குப் பிதாவான வலுசர்ப்பத்தால் ஒரு சிங்காசனம் கொடுக்கப் படுகிறது (வெளி. 13:2), கள்ளத் தீர்க்கதரிசியில் 'ஆவி - எதிரி' Anti Spirit உள்ளான். அவன் வலுசர்ப்ப பிதா Dragon Father மற்றும் வலு சர்ப்ப குமாரனிலிருந்து Dragon Son புறப்படுகிறவனாய் இருந்து வலுசர்ப்பத்தைப்போல பேச்சு உடையவனாய் இருப்பான் (வெளி. 13:11). இதன்படி வலு சர்ப்பம் அந்திக் கடவுள்; மிருகம் அந்திக் கிறிஸ்து மற்றும் கள்ளத் தீர்க்கதரிசி அந்தி ஆவியாக இருக்கவுள்ளது. இம்மூவரும் அக்கினிக் கடலினுள் உயிரோடே தள்ளப்படப் போகின்ற மெய்மையிலிருந்து (வெளி. 20:10) அவர்கள் கூட்டாக ஓர் பணிப்பெருமூவர் Triumvirate உருவாக்குவர்; அதை 'சாத்தினிய மும்மை' எனப் பொருத்தமாய் அழைக்கலாம்.

அதிகாரம்: எட்டு

செம்மறியாட்டுக் கடா மற்றும் வெள்ளாட்டுக்கடா
The Ram and the He - Goat

காட்சியின் காலநேரமும் இடமும்
The Time and Place of the Vision

"தானியேல் *8:1-2*"

இந்த எட்டாவது அதிகாரம் தொடங்கி தானியேல் புத்தகத்தின் எஞ்சிய பகுதி எபிரேயரில் எழுதப்பட்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கது. முதல் அதிகாரம் மற்றும் இரண்டாம் அதிகாரத்தின் முதல் நான்கு வசனங்களும் கூட எபிரேயரில் உள்ளன. ஏனெனில் இப்பகுதி எருசலேமின் வீழ்ச்சி மற்றும் இஸ்ரவேலின் சிறைப்பிடிப்பின் விவரணத்தை அளிக்கிறது. ஆனால் அதிகாரம் 2:4-லிருந்து ஏழாவது அதிகாரம் முடிய அரெமெனிய Aramaic மொழியிலுள்ளது. ஏனெனில் புத்தககத்தின் அப்பகுதி புறஜாதிய உலக வல்லரசுகளை Gentile World Powers சம்மந்தப்படுத்திவருகிறது. அதிகாரம் 8:1-லிருந்து புத்தக முடிவுவரை எபிரேய Hebrew மொழியில் உள்ளது; ஏனெனில் இதற்கு யூதர்கள், எருசலேம் மற்றும் பரிசுத்த ஸ்தலத்தோடு (Sanctuary = Temple) நேரடியான சுட்டுக் குறிப்பு உள்ளது; அத்துடன் கொடூரமான ரோம சக்கரவர்த்தி (அந்திக்கிறிஸ்து)-யோடும் குறிப்பீடு உள்ளது; அவனே பரிசுத்த ஸ்தலத்தை தீட்டுப்படுத்தி, யூதர்களை ஒடுக்கி துன்பப் படுத்துபவன்! தானியேலின் மக்களுக்கு (யூதர்கள்) கடைசி / பிந்தைய நாட்களில் Later Days நேரிடப்போவதை தானியேலுக்கு காட்டுவதே நோக்கமாயிருந்தது.

செம்மறியாட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் காட்சி பெல்ஷாத்சாரது ஆளுகையின் மூன்றாவது வருடத்தில் கி.மு. 538-ல் நடந்தேறியது Occurred அல்லது முந்தைய நான்கு காட்டியல் மிருகங்களின் காட்சிக்கு இரு ஆண்டுகள் கழித்து

ஏற்பட்டது. பாபிலோனின் வீழ்ச்சியின் அதே ஆண்டில் அல்லது பெரும்பாலும் Probably அதின் வீழ்ச்சிக்கு முன்னர் ஏற்பட்டது. அதின் நோக்கம் பாபிலோனியாவைத் தொடர்ந்து ஆட்சி செய்யவுள்ள சாம்ராஜ்யங்கள் எவையென்பதை தானியேலுக்கு அறிவிக்கவாயிருந்தது. அத்துடன் சின்னக் கொம்பை மேலுமாய் துப்புத்துலக்கவாயிருந்தது. ஏனெனில் ஏசாயாவின் தீர்க்க தரிசனங்கள் கிறிஸ்துவை பிரதானமாய் சம்மந்தப் படுத்துகையில் தானியேல் தரிசனக்காட்சிகள் அந்திக்கிறிஸ்துவை திரை நீக்கி வெளிக் காட்டும் நோக்கத்துக்காக உள்ளன. தீர்க்கன் தானியேல் காட்சிபெற்றபோது பாபிலோனில் இருந்தார். ஆனால் ஏலாம் தேசத்திலுள்ள பெர்சியாவின் தலைநகர் சூசானுக்கு ஆவியில் எடுத்துச் செல்லப்பட்டார். அங்கே ஊலாய் ஆற்றங்கரையிலே அவர் நின்றபோது ஓர் ஆச்சரியமான காட்சி கண்டார்.

காட்சி Vision

ஆட்டுக்கடா ***The Ram***
தானியேல் 8:3 முதல் 8:4 வரை

வெள்ளாட்டுக்கடா ***The He-Goat***
தானியேல் 8:5 முதல் 8:7 வரை

நான்கு கொம்புகள் ***The Four Horns***
தானி. 8:8

சின்ன கொம்பு ***The Little Horn***
தானி. 8:9 முதல் 8:12 வரை

ஓர் தேவதூத உரையாடல்
An Angelic Conversation

தானியேல் ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் காட்சியுடைய பொருளளிப்பைக் குறித்து Meaning சிந்தித்துக் கொண்டிருக்கையில், இரு பரிசுத்தவான்கள் Saints அல்லது பரிசுத்த நபர்கள் Holy Ones இடையேயான ஓர் உரையாடலை செவியில் விழக்கேட்டார் Over heard.

தானி. 8:13-14:

“பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக்கேட்டேன்;

அப்பொழுது வேறொரு பரிசுத்தவான் பேசினவரை நோக்கி: அன்றாட பலியைக் குறித்தும் பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக் குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் Sanctuary சேனையும் Host மிதிபட ஒப்புக் கொடுக்கப்படுவதைக் குறித்தும் உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்டான். அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும் வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்தீகரிக்கப்படும் என்றான்".

நாம் தொடர்ந்து முன்செல்லுமுன்பாக "இரண்டாயிரத்து முந்நூறு நாட்கள்" உடைய பொருளாக்கத்தை Meaning தெளிவுப்படுத்திக் கொள்ள முனைவோமாக. எபிரேய சொல்லாட்சி Expression நாட்கள் Days என்றல்ல! மாறாக மாலை, காலைகள்" Evening - Morning என்பதாகும்; அதாவது 2300 'மாலை-காலை பலியிடல்கள்' Evening - Morning Sacrifices. அது இருபத்திநான்கு மணித்துளிகளைக் கொண்ட துல்லிபமான நாட்களை அர்த்தப்படுத்துவதை Intended நிரூபிக்கிறது. இரண்டாவது பரிசுத்த நபர் முதலாவதிரிடம் கேட்ட கேள்வியானது "அன்றாட பலியைக் குறித்தும் பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக் குறித்தும், பரிசுத்த ஸ்தலமும், சேனையும் மிதிபட ஒப்புக் கொடுக்கப்படுவதைக் குறித்தும் உண்டான தரிசனம் எதுவரைக்கும்" என்று! How long ? இந்த கேள்வியானது முந்தைய வாசகத்தால் உந்தப்பட்டதாகும்; அதாவது சின்னக்கொம்பு அன்றாட பலியை நீக்கிப் போடும் மற்றும் அவருடைய பரிசுத்த ஸ்தானம் (ஆலயம் The Temple) தள்ளுண்டுபோம் அல்லது தீட்டுப்பட்டுப்போம் என்பதே அவ்வாசகம்! இக்கேள்விக்கு விடை 'இரண்டாயிரத்து முந்நூறு நாட்கள் வரைக்கும்' என்பதாகும். இப்போதும் இந்த நாட்கள் எழுத்தின்படியான நாட்களாவதாலும், சின்னக் கொம்பால் (அந்திக்கிறிஸ்து) அன்றாட பலி நீக்கிப் போடப்படுவதின் கால வேளையில் இருந்துள்ளதாலும், மேலும் அத்தேதி தானியேலின் எழுபதாவது வாரத்தின் மத்தியிலிருப்பதாலும் (தானி. 9:27) இந்த 2300 நாட்கள் வாரத்தின் மத்தியில் ஆரம்பமாகிறது. மேலும் 'வாரம்' ஏழு வருடங்கள் நீட்சிக் கொண்டதால் அரை (பாதி) வாரம் 3½ வருடங்கள் அல்லது 30 நாட்கள் கொண்ட 1260 நாட்களே!

அப்படியானால் இந்த *2300* நாட்கள் வாரத்தின் பிற்பாதியை *1040* நாட்கள் கடந்து மிஞ்சிவிடுகிறது Overun. *1040* நாட்கள் = *2* வருடங்கள், *10* மாதங்கள் மற்றும் *20* நாட்களாகும். அதுவரையில் பரிசுத்த ஸ்தானம் Sanctuary சுத்திகரிக்கப் படாதிருக்கவும், அல்லது அன்றாட பலி மீள நிறுவப் படாதிருக்கவும் உள்ளதால், எசேக்கியேலின் ஆலயம் Ezekiel's Temple கட்டப்படுகின்றவரையில் ஆலய ஆராதனைகள் Temple Services மீள நிறுவப்படப்போவதில்லை என்பதாகவே தோன்றுகிறது, எசேக். *41:1-43:27.*

தானியேல் அவரது காட்சியின் அர்த்தத்தின் (பொருளளிப்பு)மேல் சிந்தித்துக்கொண்டிருக்கையில், அவர் ஓர் மனிதனுடைய தோற்றத்தினாலான ஆவியுரு Apparition-வால் திடுக்கிட்டுப்போனார்.

பொருளளிப்பாளர்
The Interpreter

தானியேல் 8: 15-16

காட்சியைத் தானியேலுக்கு புரியவைப்பதற்கு எல்லாமே செய்யப்பட்டது. பொருளளிப்பாளர் Interpreter விரிவுரையாளர் தூதன் காபிரியேலேயன்றி வேறே பூமிக்குரிய நபர் யாருமில்லை. அவர் தானியேலுக்கு சொன்னவை முற்றிலும் அவருக்கு தெளிவாயிருந்திருக்க வேண்டும். அவை நமக்கும்கூட, நாம் நம்மைத் தானியேலின் ஸ்தானத்தில் வைத்தால், தெளிவாயிருக்கும். நான்கு காட்டியல் மிருகங்களுடைய காட்சியில் தானியேலை கலங்கப் பண்ணியிருந்தது சின்னக் கொம்பேயாகும். இப்போது ஆட்டுக் கடா மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் காட்சியில் இன்னொரு 'சின்னக் கொம்பு' வருகிறது. இவ்விரண்டும் ஒன்றான ஒன்றேயா அல்லது வித்தியாசமானவையா? அல்லது முதல் சின்னக் கொம்புடைய மூல புறப்பிடத்தைக் Origin குறித்தக் கூடுதலான வெளிச்சத்தை அளிக்க இந்தக் காட்சி கொடுக்கப்பட்டதா? தேவன் தானியேலை படிப்படியாக நடத்தினாரென்பதை மறக்கக்கூடாது. ஒவ்வொரு பின்தொடருகின்ற காட்சியும் அதற்கு முன்சென்ற காட்சிகள்மீது கூடுதலாக வெளிச்சம் வீசுவதற்கேயிருந்தது.

'தானியேல் 8:17-19':

இப்போது கவனி! இதுவே காட்சிக்குள்ள திறவு கோலாயுள்ளது. 'காட்சியானது கடைசி / இறுதி காலத்துக் கடுத்தது' என்பதே அது!

'கடைசி காலம்' Time of the End வேதாகம சத்தியத்தின் திடமான Definite ஓர் வாசகமாகும். புறஜாதியாரின் காலங்களின் முடிவுடன் சம்மந்தப்பட்டது. அப்படியானால் இக்காட்சி தானியேல் வாழ்ந்த காலங்கள்மீது எவ்வகைத் தாக்கமும் இருப்பதில்லை என்பதாகும்; ஆகவே அவருக்கு இது விளக்கப்பட்டபின்பு அதை 'மறைத்துவை' என்று கூறப்பட்டது; ஏனெனில் இது அநேக நாட்களுக்கு நிறைவேறப்போவதில்லை **(8:26).** அதாவது முடிவுக்கான காலம்வரை! ஆகவே இந்தக் காட்சியின் முடிவுகாலமும் End Time இந்தப் புத்தகத்திலுள்ள எல்லா சொப்பனங்கள் மற்றும் காட்சிகளின் முடிவுகாலமும் ஒன்றான ஒன்றேயாகும்.

விளக்கவுரை
The Interpretation

தானியேல் 8:20-25

ஒன்றன்பின் ஒன்றாக தொடரவுள்ள நான்கு உலகளாவிய சாம்ராஜ்யங்கள் இருக்கப்போகின்றதை நேபுகாத்நேச்சாருடைய *(கி.மு. 603)* 'சொப்பனச் சிலை' Dream Image-யிலிருந்து தானியேல் அறிந்துகொண்டார். அவை முறையே சிலையுடைய பொன், வெள்ளி, வெண்கலம் மற்றும் இரும்பாலே உருவக அடையாளப்பட்டிருக்கையில் (தானி. *2: 36-40*) முதலுள்ள பாபிலோனைத்தவிர்த்து மற்றவைகளது பெயர்கள் அவருக்கு சொல்லப்படவில்லை; அறுபத்திரண்டு வருடங்கள் கழித்து (கி.மு. *541*) நான்கு காட்டியல் மிருகங்களது அவருடைய காட்சியிலும் (அதிகாரம் *7*) கூட பாபிலோனை பின்தொடரவுள்ள ராஜ்யங்களின் பெயர்கள் கொடுக்கப்படவில்லை; ஆனால் இந்த ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடா காட்சியில் பெருஞ்சிலையின் வெள்ளி மற்றும் வெண்கலத்தால் உருமாதிரியாக்கப்பட்ட ராஜ்யங்களின் பெயர்கள் வெளிப் படுத்தப்பட்டன; மற்றும் அவையிரண்டை முறையே சரி

ஒப்புமை செய்கின்ற மிருகங்களாகிய கரடி மற்றும் சிவிங்கியுடையது! இந்த செய்தியறிவிப்பு பாபிலோனிய சாம்ராஜ்யத்தினுடைய வீழ்ச்சியின் காலம் வந்ததுவரை தடைபண்ணப்பட்டிருந்தது. அது தானியேலுக்கு இந்த வேளையில் At This Time கொடுக்கப்பட்டது. அதினால் நகரத்தை அவ்வமயம் முற்றுகையிட்டு பிடித்துக்கொண்டிருக்கின்ற மேதிய பெர்சியர்கள் பெருஞ்சிலையின் புயங்களும் மார்பும் உரு மாதிரியாக்குபவை என அவர் அறிந்துகொள்ளவும், அதினிமித்தம் பாபிலோனின் வீழ்ச்சி வெகுவிரைவிலுள்ளது என்பதை உறுதியாக்கிக் கொள்ளவுமேயாகும். இந்த அறிவே சுவரின்மீது எழுதப்பட்ட கையெழுத்தை பொருளளிப்பு செய்ய சந்தேகமின்றி தானியேலுக்கு உதவிசெய்தது.

நான்கு காட்டியல் மிருகங்களுடைய தானியேலின் காட்சியில் மேதியா - பெர்சியா மற்றும் கிரேக்கு முறையே ஓர் கரடி மற்றும் ஓர் சிறுத்தையால் ரூபகாரப்படுத்தப்படுகிறது. .இந்தக் காட்சியில் அவைகள் ஓர் ஆட்டுக்கடா Ram மற்றும் ஓர் வெள்ளாட்டுக்கடாவால் He - Goat கூட ரூபகாரப்படுத்தப்படுகிறது. மிருகங்களில் இந்த மாறுதல் சாம்ராஜ்யங்களை மேலுமாக அவைகளது கட்டியம் சார்ந்த (குலமரபுச் சின்னங்கள் சார்பான) அடையாளங்களால் Heraldic Devices இன அடையாளம் காண்பதற்கே! பெர்சியாவின் சின்னம் Emblem ஓர் ஆட்டுக்கடாவாய் இருந்தது; ஆட்டுக் கடாவின் தலை ஒரு பக்கமும், சாய் நிலையில் ஆட்டுக்கடா மறுபக்கமும் பதித்துக் காட்டிய நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஓர் பெர்சிய ராஜா ஓர் மணிமுடிக்குப் பதிலாக இரத்தினக்கல் பதித்த ஓர் ஆட்டுக்கடாவின் தலையுடைய ஓர் பொன் உருவம் Golden Figure அணிந்து அவனது படைக்கு முன்பாக சவாரிசெய்வதையும் கூட நாம் வாசிக்கிறோம்.

பார்சியர் வேதத்தில் பெர்சியாவின் காவற்காக்கும் ஆவி Guardian Spirit Izad Behram பிளவுடைய கால்பாதம் Cloven Feet மற்றும் கூர்மையானக் கொம்புகளோடு உள்ள ஓர் ஆட்டுக்கடா போல காட்சியளிக்கிறது. மாசிதோனியா (கிரேக்கு)வின் தேசீகச் சின்னம் ஓர் வெள்ளாடாய் Goat இருந்தது . அந்நாட்டின் நாணயங்களின் மீதும் அது காணப்படுகிறது. அதன் பூர்வீகத்

தலைநகர் Aegae அல்லது ‘வெள்ளாட்டு நகர்’ Goat City என அழைக்கப்பட்டது. அதேவேளை அதின் அருகாமையின் தண்ணீர்கள் Aegean அல்லது ‘வெள்ளாட்டுக் கடல்’ Goat Sea என அழைக்கப்பட்டன. ஆகவே, Roxana மூலமான மகா அலக்சாண்டரது புதல்வன் Aegus, ஓர் ‘வெள்ளாட்டு குமாரன்’ Son of a Goat என அழைக்கப்பட்டான்.

தானியேலுக்கு ஆட்டுக்கடா Ram மற்றும் வெள்ளாட்டுக்கடா He-Goat நான்கு காட்டியல் மிருகங்களது காட்சியின், கரடி மற்றும் சிறுத்தையை சரி ஒப்புகையாக்கியது. மேலும் முறையே பெரிய சிலையின் வெள்ளியாலான புயங்கள், மார்பையும் மற்றும் வெண்கலத்தாலான வயிறையும் ஒப்புமையாக்கியதோடு இவைகள் ரூபகாரப்படுத்திய சாம்ராஜ்யங்கள் மேதியா -பெர்சியா மற்றும் கிரேக்கு என்பதாக அவரது இருகாட்சிகளின் மிருகங்களையும் இன்னும் உன்னிப்பாக ஒப்பிடுகையில் இச்சரி ஒப்புமை மேலுமாக உறுதியாக்கப்பட்டது. கரடியின் உயர்வானத் தோள்பட்டை Higher Shoulder பிந்தி எழும்பிய ஆட்டுக்கடா (பெர்சியா)வின் உயரங்கூடியக் கொம்பை Higher Horn சரி ஒப்புமை செய்தது. கரடியின் வாயிலிருந்த ‘மூன்று விலா எலும்புகள்’ நாம் பார்த்துள்ளபடி லிதியா, பாபிலோன் மற்றும் எகிப்து என்னும் மூன்று ராஜ்யங்களுக்காக நின்றன. அம்மூன்றும் மேதிய-பெர்சியா அதிகார வல்லமையைத் தடுப்பதற்கென ஓர் முக்கூட்டணி Triple Alliance உருவாக்கியது; ஆனால், அதால் அவை அழிக்கப்பட்டுப் போயின. இதுவே ஆட்டுக்கடா Ram மேற்கு நோக்கி (லிதியா நோக்கி) வடக்கு நோக்கி (பாபிலோன் நோக்கி) மற்றும் தெற்குநோக்கி (எகிப்து நோக்கி) பாய்ந்ததானச் செய்கையை சரி ஒப்புமையாக்குகிறது.

சிறுத்தை (சிவிங்கி) மற்றும் வெள்ளாட்டுக் கடாவை தானியேல் ஒப்பிட்டபோது சிறுத்தையின் நான்கு தலைகள் (தானி. 7:6) வெள்ளாட்டுக்கடாவின் தலையின் மேல் இருந்த விசேஷித்தக் கொம்பு Great Horn முறிந்துபோன இடத்தில் முளைத்தெழும்பிய நான்கு கொம்புகளை சரி ஒப்புகை செய்ததை அவர் கண்டார். ஆனால் வெள்ளாட்டுக் கடாவின் நான்குக் கொம்புகளில் ஒன்றிலிருந்துப் புறப்பட்டதானச் சின்னக் கொம்பால் அர்த்தப்படுத்தப்படுவது என்னவென்பதே அவருக்கு

ஓர் புதிராக (இரகசியம்) இருந்தது. சிவிங்கியின் மேல் அதற்கு இணையான ஒன்றையும் அவர் காணவில்லை. முந்தினக் காட்சியின் நான்காவது காட்டியல் மிருகத்தை ஒப்பிட இந்தக் காட்சியில் (தானி. 8) எந்த ஒரு மிருகமும் காணப்படவில்லை. அம்மிருகத்தின் (நான்காவது காட்டியல்) தலையின் மீது பத்துக் கொம்புகளும் அவைகளின் இடையில் ஓர் சின்னக்கொம்பு முளைத்தெழும்பியதும் அறிந்ததே! இவ்விரு சின்னக்கொம்புகள் ஒன்றுக்கொன்று எந்தவித சம்பந்தம் Relation இருந்திருந்தால் அது என்ன? இச்சின்னக் கொம்பைப் பொறுத்தவரை, இப்போது எந்த யூகிப்பையும் நாம் செய்யலாகாது. நாம் காபிரியேல் தூதனுடைய பொருள் விளக்கத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

வெள்ளாட்டுக்கடாவின் கண்களுக்கு இடையேயிருந்த விசேஷித்த கொம்பு Great Horn முதல் ராஜாவை (கிரேக்குடைய) ரூபகாரப்படுத்தியதாக காபிரியேலால் நமக்குச் சொல்லப்படுகிறது. இப்போதும் எல்லா சரித்திராசிரியர்கள் Historians அறிகிறபடி மகா அலெக்சாண்டராயிருந்தார். (கி.மு. 356-323 மாசிடோனியாவின் பிலிப்புவின் மகனான) Son of Philip of Macedon அவன் கி.மு.336-ல் இருபது வயதாயிருக்கையில் கிரேக்கின் ராஜாவானான். இரு வருடங்களுக்குப் பிற்பாடு (கி.மு. 334) வெள்ளாடு போன்றப் பாணியில், அவன் Helles-Pont-ஐத் துள்ளிக்குதித்து, 30,000 காலாட்படை Infantry மற்றும் 5000 குதிரைப்படை Cavalry கொண்ட ஓர் சேனையைக் கொண்டு Granicus கரையோரங்களின் மேல் வைத்து ஓர் பெர்சிய சேனையை முறியடித்தான். அடுத்த வருடத்திலே, கி.மு.333 கிழக்கு நோக்கிய ஓர் துரித முன் ஏகுகையால் அவன் தரியு Darius என்ற பெர்சிய ராஜா தலைமையிலான 6,00,000 மனிதர் கொண்ட ஓர் பெர்சியச் சேனையை Issus -ல் வைத்து முறியடித்தான், Phoenicia மற்றும் எகிப்தில் சிறிய வெற்றிகளுக்குப் பிற்பாடு அவன் சிரியாவுக்கு திரும்பி வந்தான். அங்கே Tigris நதிக்கரையோரங்களில் வைத்து தரியுவினால் Darius முன் நடத்தப்பட்ட மாபெரும் சேனையை அவன் முறியடித்தான். இதற்கு Arbela போர் War of Arbela கி.மு.331 என அழைக்கப்பட்டது. கி.மு. 330 லிருந்து 327 வரை, பெர்சிய சாம்ராஜ்யத்தினுடைய சுற்றிக்கிடந்த பிராந்தியங்களை கீழடக்குவதில் அலெக்சாண்டர் ஈடுபட்டான். பிற்பாடு அவன்

பாபிலோனுக்குத் திரும்பி வந்தான். அங்கே, அவனது மகிமையின் உச்சக்கட்டத்தில் அவன் Marsh Fever மற்றும் நெறிபிறழ்வுகளில் தனது முப்பத்தி மூன்றாவது வயதில் ஜூன் 323-ல் மரித்தான்.

அலெக்சாண்டரின் மரணத்துக்குப் பிற்பாடு அவனது பின்னாட்சியாளனாய் யார் வர வேண்டும் என்பதில் பிளவு ஏற்பட்டது. ஆனால் தீர்க்கத்தரிசனம் முன்னறிவித்தபடி அவனது நான்கு தளபதிகள் Generals சாம்ராஜ்யத்தின் பிராந்தியத்தை Territory தங்களுக்குள்ளேப் பங்கிட்டுக் கொள்வதில் முடிவடைந்தது, Gassander மாசிதோனியா மற்றும் மேற்கத்தியப் பகுதியை எடுத்தான். Lysimachus திரேஸ் மற்றும் வடக்கத்தியப் பகுதியை எடுத்தான். Seleucus சிரியா மற்றும் கிழக்கத்தியப் பகுதியை எடுத்தான். Ptolemy எகிப்தை மற்றும் தெற்கத்தியப் பகுதியை எடுத்தான்.

ஆகவே, 'நான்கு கொம்புகள்' மாசிடோனியா, திரேஸ், சிரியா மற்றும் எகிப்து எனப் பெயரிடப்படலாம். இந்நான்கு ராஜ்யங்களும் காலப்போக்கில் உலகளாவியப் பரந்த சாம்ராஜ்யமான ரோமையால் உள்ளிழுக்கப்பட்டு விட்டன. கடைசியாய் தன் இன அடையாளத்தை இழந்தது எகிப்தாக இருந்தது கி.மு. 30ல்! இவ்விதமாக புறஜாதியாரின் காலங்களின் போது பாபிலோனிய, மேதிய-பெர்சியா, கிரேக்கு, மற்றும் ரோமை ஆகிய நான்கே நான்கு உலகளாவிய சாம்ராஜ்யங்கள் இருந்துள்ள போதிலும், அவை நான்கும் ஒன்றன் பின் ஒன்றாக ஓர் இடைமுறிப்பு இல்லாது தொடருவதற்கில்லாதிருந்தது. இது பெருஞ்சிலைமீதோ, நான்கு காட்டில் மிருகங்களின் காட்சியிலோ காண்பிக்கப்படவில்லை. ஆனால் வெள்ளாட்டுக் கடாவின் காட்சியிலே தான் முதன்முறை வெளிப்படுத்தப் பட்டுள்ளது. கிரேக்கத்திய மற்றும் ரோம சாம்ராஜ்யங்களிடையேயான இடைமுறிப்பு அல்லது இடைவெளி நான்கு சிறிய ராஜ்யங்களான மாசிடோனியா, திரேசு, சிரியா மற்றும் எகிப்தால் மூடி இணைக்கிறதாக உள்ளது. தீர்க்கதரிசனத்தை நிரூபிக்கும் சரித்திரம் இங்குள்ளது.

ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடாவினுடைய மற்றும் விசேஷித்தக் கொம்பினிடம் முளைத்து எழும்பிய நான்கு

கொம்புகளுடைய பொருள் அர்த்தத்தை Meaning விவரித்தப் பின்னர் காபிரியேல் தூதன் நான்குக் கொம்புகளின் ஒன்றிலிருந்து முளைத்தெழும்பியச் சின்னக் கொம்புடைய விவரணத்துக்குச் செல்லுகிறார். காட்சியானது ஓர் விரிவுரையின்றி நமக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் அந்தியோடு எபிப்பானஸ் போன்ற நான்கு ராஜ்யங்கள் நிறுவப்பட்ட பின் உடன்தானே அவைகளின் ஒன்றிலிருந்து எழுந்த ஏதாமோர் பேரரசன் Monarch அச்சின்னக் கொம்பு என்பதாக நாம் இயற்கையாக யூகித்திருக்க கூடும். வசனங்கள் 9-12-ன் விவரிப்புக்கு இந்த அந்தியோடு எபிப்பானஸ் சில வகையில் பதிலளிக்கிறார். வசனம் 23-ன் படி பாதகருடையப் பாதகம் 'நிறைவேறுகின்ற' "அவர்களுடைய ராஜ்யபாரத்தின் கடைசிக் காலம்" Latter Time of their Kingdom வரை அவன் எழும்பப்போவதில்லை என காபிரியேல் நமக்கு உரைக்கிறார். அலெக்சாண்டருடைய சாம்ராஜ்யம் பிளவுப் பட்டதால் ஏற்பட்ட நான்கு ராஜ்யங்களுடைய முந்திய மற்றும் பிந்திய காலத்தின் இடையேயுள்ள ஓர் வெளிப்படையான வேறுபாடு Distinction இங்கு உள்ளது. அந்நாலு ராஜ்யங்களும் உயிர்ப்பிக்கப்பட்டு Resuscitated புத்துயிர் அடைந்த ரோம சாம்ராஜ்யம் பிரிக்கப்படவுள்ள பத்து ராஜ்யங்களில் 'நான்காகவிருக்கவுள்ளதாக' அது (அவ்விரு கால வேறுபாடு) தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்துகிறது. ஏனெனில் செத்த தேசங்களையும் Dead Nation, செத்த மனிதரையும் உயிர்ப்பிக்க தேவனால் கூடும். இதற்கு நிரூபணமாக கிரேக்கு Greece ஓர் தனியாற்றலுடைய நாடாக Sovereign State இருந்துள்ளது; எகிப்து மீண்டுமாக அதிகாரத்துள் வந்துக் கொண்டிருக்கிறது; இன்றைய தேசங்களது எழுச்சியின் போது திரேஸ் மற்றும் சிரியா சுதந்தர ராஜ்யங்களாக Independent Kingdoms எவ்வளவு விரைவாக மீண்டும் தோன்றப் போகின்றன என்பதை ஒருவரும் முன்னறிவிக்கக்கூடாது.

அவர்களுடைய ராஜ்யத்தின் கடைசிக் காலத்தால் LatterTimes அர்த்தப்படுவது ரோம சாம்ராஜ்யத்தால் நான்கு ராஜ்யங்கள் விழுங்கப்பட்டுப் போவதற்கு முன்புள்ளதான அந்நான்கு ராஜ்யங்களின் பிந்திய / கடைசி Latter காலங்களென்று சொல்வது மட்டும் போதாது! ஏனெனில் அவைகள் நான்கும் ஒரே காலத்தே விழுங்கப்பட்டுப்

போகவில்லை! எகிப்து கடைசியாக கி.மு. 30 -ல்! சின்னக் கொம்பால் அர்த்தப்படுவது அந்தியோடு எபிப்பானஸ் எனக்கூறுவதும் போதுமானதாகாது! அந்தியோடு எபிப்பானஸ் அவ்விராஜ்யங்களின் பிந்திய /கடைசி நாட்களில் /காலங்களில் ஜீவித்திருக்கவில்லை. சிரியாவை அரசாண்ட இருபத்தி ஆறு ராஜாக்களில் அவன் எட்டாவதானவன்; அவன் கி.மு.164-ல் மரித்தான். அதாவது நான்கு ராஜ்யங்களில் கடைசி ராஜ்யம் மறைந்துப் போவதற்கு 134 வருடங்களுக்கு முன்னதாக மரித்தான். 'சிரியாக் கொம்பை' உருவேற்படுத்திய Constituted 26 ராஜாக்களில் ஒருவனாக அந்தியோடு எபிப்பானஸ் இருந்தமையால், அவன் அந்தக் கொம்பாகக் That Horn கூடாது. மேலும் அதினின்று முளைத்தெழும்பிய சின்னக்கொம்பும் ஆக முடியாது. அச்சின்னக் கொம்பு மிகவும் பெரிதாக வளர்வுற்றது Waxed Exceedingly Great ஆனால் அந்தியோடு எபிப்பானஸ் ஒரு போதும் அப்படியாகவில்லை.

எருசலேமின் தேவாலயத்தை அவன் தீட்டுப்படுத்தியது உண்மையே! ஆனால் மக்கப்பேயர்கள் Maccabees எதிர்த்துக் கிளர்ச்சிச் செய்தனர்; கி.மு.165-ல் அதன் தொழுகையை மீள ஸ்தாபித்தனர்; தீர்க்கன் தானியேலால் சொல்லப்பட்ட பாழாக்கும் அருவருப்பைக் Abomination of Desolation குறித்து இயேசு கூறுகையில் (மத். 24:15) அவர் அதை ஓர் கடந்தகால காரியமாக குறிப்பிடவில்லை; மாறாக இன்னமும் எதிர்காலத்துக்குரிய ஒன்றாகவே குறிப்பிட்டார். ஆகவே அந்தியோகுடைய வாழ்க்கைத் தொடரினை சம்மந்தப்பட்ட ஒன்றாக அது இருக்கவில்லை. ஏனெனில் அவன் 200 வருடங்களுக்கு முன்னமே மரித்து விட்டிருந்தான். அந்தியோகு அதிபதிகளுக்கு அதிபதியாக இருக்கிறவருக்கு (கிறிஸ்து) விரோதமாக ஒருபோதும் எழும்பவில்லை. ஏனெனில் கிறிஸ்து பிறப்புக்கு 160 வருடங்கள் முன்னமே அவன் மரித்தான். மேலும் அவன் கையினாலல்ல வேறுவிதமாய் முறித்துப் போடப்படவில்லை. ஏனெனில் அவன் தாபே Tabae (Persia)-வில் கி.மு.164-ல் இயற்கை மரணம் எய்தினான். வசனங்கள் 9-12 அந்தியோகுவையும், வசனங்கள் 23-25 அந்திக் கிறிஸ்துவையும் குறிப்பிடுவதாகச் சொல்வது சரிப்பொருத்தமாகாது. ஏனெனில் வசனங்கள் 23-25, வசனங்கள் 9-12-ன் விளக்கவுரையாக

உள்ளன. ஆகவே ஒரே நபரையே Same Person அர்த்தப்படுத்த வேண்டும். ஆகவே வசனங்கள் 23-25 ஏதாவதோர் எதிர்காலத்திய நபரை குறிப்பிடுகிறதானால், வசனங்கள் 9-12 அந்தியோகுவைக் குறிப்பிட முடியாது. இதிலிருந்து அலெக்சாண்டரது சாம்ராஜ்யம் பிளவுபட்டதால் ஏற்பட்ட நான்கு ராஜ்யங்களுடைய முந்தைய Former மற்றும் பிந்தைய Latter காலங்களின் இடைவெளியை ஓர் பிளவு Gap உள்ளடங்கலாகக் கொள்ளுகிறது என்பதை நாம் காண்கிறோம். இந்தப் பிளவு Gap தானியேலுடைய அறுபத்தொன்பதாவது மற்றும் எழுபதாவது வாரத்திடையேயுள்ளப் பிளவோடு Gap ஒத்திசைவு கொள்கிறது. அது தானியேலுக்கு அடுத்த அதிகாரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சின்னக் கொம்பு The Little Horn

சின்னக் கொம்பின் வர்ணனைகளை ஒப்பிடுகையில் விவரங்கள் முதலியன பொறுத்தவரை அவைகள் உடன்பட வேண்டும் Agree எனும் யூகிப்பில் தவறு செய்யப்படுகிறது. ஆனால், அவைகள் தொடர் முன்னேற்றத்துக்குரியன Progressive, ஒவ்வொரு பின்தொடர் விவரணமும் புதிய விவரங்களை முன்னுள்ளதுடன் கூட்டிச் சேர்க்கிறதாயுள்ளது. இவ்விதமாக சின்னக்கொம்பின் (அந்திக்கிறிஸ்து) ரூபப் படம் Portrait பூரணப்படும் வரை, அப்படம் நிரப்பப்படுகிறது Filled Out.

அதிகாரம் 7-ல் சின்னக் கொம்பு பத்துக் கொம்புகளில் மூன்றைப் பிடுங்கிப் போடுவதாயும், மனுஷகண்களுக்கு ஒப்பான கண்கள் மற்றும் பெருமையானவைகளைப் பேசும் ஓர் வாய் கொண்டுள்ளதாயும் தானியேல் விவரிக்கிறார். பக்கத்து நிற்பாளர் By-Stander (ஓர் பரிசுத்தர் A Holy One) காட்சியை விரிவுரைக்கையில் சின்னக்கொம்பு மூன்று ராஜாக்களை தாழ்த்தி கீழ்ப்படுத்துவான் என மீளஉரைத்து மேலும் கூட்டிக் கூறுவதாவது "அவன் உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்த வான்களை ஒடுக்கி, காலங்களையும், பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லு மட்டும் அவன் கையில் ஒப்புக்

கொடுக்கப்படுவார்கள்" (தானி 7: 24-25).

தானியேல் அதிகாரம் எட்டின் சின்னக்கொம்பு (வச. 8:9-12) "தெற்குக்கும், கிழக்குக்கும் எதிராகவும், சிங்காரமானத் தேசத்துக்கு (பாலஸ்தீனா) நேராகவும் மிகவும் பெரியதாயிற்று Waxing Exceedingly Great என்று தானியேல் விவரிக்கிறார். அது வானத்தின் சேனை பரியந்தம் வளர்ந்து அதின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றைப் பூமியிலே விழப்பண்ணி, அவைகளை மிதித்தது; அது சேனையினுடைய அதிபதி பரியந்ததும் தன்னை உயர்த்தி, அவரிடத்திலிருந்து அன்றாட பலியை நீக்கிற்று; அவருடைய (கிறிஸ்து) பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது. பாவத்தினிமித்தம் அன்றாட பலியோடுங்கூடச் சேனையும் அதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது; (சின்னக் கொம்பு) அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று; அது கிரியை செய்து அனுகூலம் அடைந்தது". (தானி. 8:9-12)

காபிரியேல் தூதன் இச்சின்னக் கொம்பை விரிவுரைக்கையில் கூறுகிறார் "மூர்க்கமுகமும் சூதானப் பேச்சுமுள்ள சாமர்த்தியமான ஒரு ராஜா எழும்புவான்; A King of Fierce Countanance And Understanding Dark Sentences அவனுடைய வல்லமை பெருகும்; ஆனாலும் அவனுடைய சுய பலத்தினால் அல்ல; (அது மீமானிடத்ததாக இருக்கவுள்ளது) Super Human அவன் அதிசயமான விதமாக அழிவு உண்டாக்கி, அனுகூலம் பெற்றுக் கிரியை செய்து, பலவான்களையும் பரிசுத்த ஜனங்களையும் (யூதர்கள்) அழிப்பான். அவன் தன் உபாயத்தினால் His Policy வஞ்சகத்தைக் கைகூடிவரப் பண்ணி, தன் இருதயத்தில் பெருமைக் கொண்டு, நிர் விசாரத்தோடு இருக்கிற அநேகரை அழித்து (By Peace He Shall Destroy Many), அதிபதிகளுக்கு அதிபதியாய் இருக்கிறவருக்கு (கிறிஸ்து) விரோதமாய் எழும்புவான்; ஆனாலும், அவன் கையினாலல்ல, வேறு விதமாய் முறித்து போடப்படுவான்" (தானி. 8: 23-25)

ஆனால் சின்னக்கொம்பின் வரைபடத்தை Picture அதிகாரங்கள் ஏழு மற்றும் எட்டிலிருந்துள்ள இவ்விவரங்கள் பூர்த்தியாக்குகிறது இல்லை; ஆகவே அதிகாரம் 11:36-39 -ல் 'தன்னிஷ்ட ராஜா' விவரணத்துக்கு நாம் எதிர் நோக்கி திருப்புவோமாக. The Wilful King 'ராஜா (வடதிசை) தனக்கு

இஷ்டமானபடிச் செய்து, தன்னை உயர்த்தி, எந்தத் தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி, தேவாதித் தேவனுக்கு விரோதமாக ஆச்சரியமானக் காரியங்களைப் பேசுவான்; கோபம் தீரு மட்டும் அவனுக்குக் கைகூடிவரும்; நிர்ணயிக்கப்பட்டது நடந்தேறும்; அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாமலும், ஸ்திரீகளின் சிநேகத்தையும், எந்தத் தேவனையும் மதியாமலும் எல்லாவற்றிலும் தன்னைப் பெரியவனாக்கி, அரண்களின் தேவனை God of Forces தன் பிதாக்கள் அறியாத ஒருதேவனைப் பொன்னாலும், வெள்ளியினாலும், இரத்தினங்களினாலும், உச்சிதமான வஸ்துக்களினாலும் கனம் பண்ணுவான்; அவன் அரணிப்பான கோட்டைகளுக்காவும், அந்நிய தேவனுக்காகவும் செய்வது என்னவென்றால், அவைகளை மதிக்கிறவர்களுக்கு மகா கனமுண்டாக்கி அவர்கள் அநேகரை ஆளும்படிச் செய்து, அவர்களுக்குத் தேசத்தைக் கிரயத்துக்காக பங்கிடுவான்' (தானி. 11:36-39) தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்டவரை இது சின்னக்கொம்பின் வரை படத்தைப் பூர்த்தி செய்கிறது.

இதுகாறும் வெளிப்படுத்தப்பட்டவைகளிலிருந்து ரோம வல்லரசான நான்காவது காட்டியல் மிருகத்தினுடைய பத்துக் கொம்புகளினிடையே சின்னக் கொம்பு எழும்பப் போகிறதாகத் தெளிவாகிறது. அப்பத்துக் கொம்புகள் அல்லது ராஜ்யங்களில் 'நான்கு' அலெக்சாண்டரது சாம்ராஜ்யம் பிரிக்கப்பட்டதால் ஆன நான்கு ராஜ்யங்களாயிருக்கவுள்ளன. அதாவது மாசிதோனியா-மெசப்பத்தோமியா (கிரேக்கு), திரேசு (சின்ன ஆசியா), சிரியா (அசிரியா) மற்றும் எகிப்து எனும் நான்கு! இந்நான்கின் ஒன்றிலிருந்து சின்னக் கொம்பு (அந்திக்கிறிஸ்து) எழுப்பப்போகிறான். அது சிரியாதான் அந்த ஒன்று என நமக்கு பிற்பாடு வெளிப்படுத்தப்படவுள்ளது; அதிகாரம் 11:36-45-ல் தன்னிஷ்ட ராஜாவைப் Wilful King படிக்கலாம்.

இந்த மூர்க்க முகமுள்ள ராஜா சாமர்த்தியமும், சூதானப் பேச்சும் உள்ளவன். Understanding Dark Sentences அதாவது இரகசியக் காரியங்களை வெளிப்படுத்துபவன், Revealer of Secret Things; இது அவனுடைய வல்லமையின் இரகசியத்தைக் கூட்டுவதாக இருக்கும். அவன் அதிபதிகளுக்கு அதிபதியாக இருக்கிறவருக்கு (கிறிஸ்து) விரோதமாய் எழும்புவான். அது அவனுடையப் பாதகத்தை முழுமைக்குக் கொண்டுவரவுள்ளது.

அவன் அத்துடன் கையினால் அல்ல வேறுவிதமாய் முறித்துப் போடப்படுவான். இதன் அர்த்தம் 2 தெச. 2:8-ல் வெளியாக்கப்படுகிறது. அங்கே அந்திக் கிறிஸ்து (That Wicked அந்த அக்கிரமக்காரன்) கர்த்தருடைய வாயின் சுவாசத்தினாலே அழிக்கப்பட்டு அவருடைய வருகையின் பிரசன்னத்தினால் நாசம் பண்ணப்படுவான் என்று நமக்குச் சொல்லப்படுகிறது; அர்மெகதோன் யுத்தத்தை வெளி. 19:11-20- யைப் படிக்கலாம்.

காட்சியைப் (தரிசனத்தை) பெற்றதும் தானியேல் அதை மறைத்து வைக்கும் படி சொல்லப்பட்டார். ஏனெனில் அதின் நிறைவேறுகைக்கு இன்னும் அநேக நாள் செல்லும். நான்கு ராஜ்யங்களுடைய கடைசி காலம் Latter Time வரை நிறைவேறப்போவதில்லை! அது இன்னமும் எதிர்காலத்ததே! பின்பு தானியேல் சோர்வடைந்து சில நாள் வியாதிப் பட்டிருந்தான். கடைசி நாட்களில் அவருடைய ஜனங்களுக்கு நேரிடப் போவதைப் பற்றிய வெளிப்பாடு அவனுக்கு மிக அதிகமாய்ப் போன படியால் Too Much அவனுடைய இருதயம் சோர்வடைந்து வியாதிப்பட்டது. அவர் கூறுகிறார் ‘அந்த தரிசனத்தினால் திகைத்துக் கொண்டிருந்தேன்; ஆனால் ஒருவரும் அதை அறியவில்லை’ என்று! அதை என்பது மூலப்படிவத்தில் இருக்கிறதில்லை; அதனால் தானியேல் அர்த்தப்படுத்தியது யாதெனில் ஏன் அவர் வியாதிப்பட்டார் என ஒருவரும் புரிந்துக் கொள்ளவில்லை; ஏனெனில் அவர் தரிசனத்தை மறைத்து வைத்தார். ஏனெனில் அதைக் குறித்து அவர் சொல்லவில்லை, ஆகவே அவரது சுகவீனத்தின் காரணத்தை அவர்கள் அறியவில்லை; ஆனாலும் தானியேலது குழம்பிப்போன மனது தேசத்துக் காரியாதைகளை அவர் கவனிப்பதில் அவரைத் தடுக்கவில்லை. ஏனெனில் அவர் கூறுகிறார் ‘பின்பு நான் எழுந்திருந்து ராஜாவின் வேலையைச் செய்தேன்’ என்று!

எழுபது வாரங்கள்
The Seventy Weeks

காட்சியின் காலம் The Time of the Vision

"கல்தேயருடைய ராஜ்யத்தின் மேல் ராஜாவாக்கப்பட்ட மேதிய குலத்தானாகிய அகாஸ்வேருவின் புத்திரனான தரியு ராஜ்யபாரம் பண்ணுகிற முதலாம் வருஷத்திலே, தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித் தீர எழுபது வருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியாத் தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்து கொண்டேன்" தானி. *9:1-2.*

அதிகாரத்தின் தேதி முக்கியமானது; பாபிலோனின் மேல் மேதியன் தரியுவின் முதலாம் வருஷமாக இருந்தது என தீர்க்கன் நமக்குக் கூறுகிறார். அது கி.மு.538 ஆயிற்று. காலம் தீர்வு நெருக்கடி கட்டமாயிருந்தது Critical. தானியேலுடைய மனது ஓர் தடுமாற்றமற்றும் குழப்ப நிலையிலிருந்தது; நான்கு காட்டியல் மிருகங்களுடைய மற்றும் ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடாவுடையக் காட்சிகளை அறிந்து புரிந்திருந்தார்; அவை அவருடைய மக்களுடைய சிதறுகையின் Dispersion ஓர் நீட்டிப்பான Prolonged காலக்கட்டத்தை முன்னறிவித்தன. ஆனால் அவர் தனக்கு வெளிப்பட்டு இருந்தவைகளை நம்பியிருக்கையில், யூதர்களாகிய அவருடைய மக்களுடைய சிறைவாசத்தைப் Captivity பொறுத்தவரை மோசேயுடைய மற்றும் தீர்க்கதரிசிகளுடைய எழுத்துக்களாகிய புத்தகங்களை அவர் அறிந்து புரிந்தவைகளோடு What He Under stood 'The Books' ஒத்திசைவிக்கிறதற்கு அவர் கடினமாய்க் கண்டார். எரேமியாவின் புத்தகத்திலிருந்து பாபிலோனிய சிறைவாசம் எழுபது வருடங்கள் மாத்திரமே நீட்சிக்க விருந்ததை தானியேல் புரிந்து கொண்டார்.

"இந்த தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவை சேவிப்பார்கள்", எரே. *25:11.*

கள்ளத்தீர்க்கதரிசிகள் இதற்கு முரண்பட்டனர்; சிறைவாசம் குறுகியகால நீட்சியுடையதென்று நம்புவதற்கு மக்களை உற்சாகப்படுத்தினர். இதனை எதிர்த்து மாறுசெய்ய Counteract ஓர் நீண்ட கால தங்குகைக்கு நிலைகொள்ள Settledown பாபிலோனிய சிறைவாசிகளுக்கு தீர்க்கன் எரேமியா எழுதினார் கீழ்வருமாறு:

"இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர், தாம் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போகப்பண்ணின அனைவருக்கும் அறிவிக்கிறது என்னவென்றால், நீங்கள் வீடுகளைக் கட்டி, குடியிருந்து, தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைச் சாப்பிடுங்கள்; நீங்கள் பெண்களை விவாகம் பண்ணி, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்று, உங்கள் குமாரருக்குப் பெண்களைக் கொண்டு, உங்கள் குமாரத்திகளைப் புருஷருக்குக் கொடுங்கள்; இவர்களும் குமாரரையும், குமாரத்திகளையும் பெறட்டும்; நீங்கள் அங்கே குறுகாமல் பெருகி, நான் உங்களைச் சிறைப்பட்டுப் போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம் பண்ணுங்கள்; அதற்குச் சமாதானம் இருக்கையில் உங்களுக்குச் சமாதானம் இருக்கும். மேலும் உங்கள் நடுவிலிருக்கிற உங்கள் தீர்க்கதரிசிகளும் உங்கள் குறிகாரரும் உங்களை மோசம் போக்கவொட்டாதிருங்கள்; சொப்பனம் காணப்பண்ணுகிற உங்கள் சொப்பனக்காரருக்குச் செவிகொடாமலும் இருங்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் என் நாமத்தைச் சொல்லி உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள்; நான் அவர்களை அனுப்பினதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்; பாபிலோனிலே எழுபது வருஷம் நிறைவேறின பின்பு, நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்கு (எருசலேம்) திரும்பி வரப் பண்ணும்படிக்கு உங்கள்மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்". எரே. *29:4-10.*

இதிலிருந்து எரேமியா ஓர் தெய்வீக உள்ளுணர்வு கொண்டத் தீர்க்கனாக இனங்கண்டுக் கொள்ளப்பட்டார் என நாம் பார்க்கிறோம்; தானியேல் தானும் ஓர் தீர்க்கனாகையில்,

ஓர்தீர்க்கதரிசன மாணாக்கனாகவுமிருந்தார். அவர் தேவனுடைய வார்த்தையை படித்தது மாத்திரமல்ல, அதை விசுவாசிக்கவும் செய்தார்; தானியேலைப் போல வேத வாக்கியங்களை ஆராய்தல் வேண்டும்; நாம் வாழ்கின்ற காலங்களைக் குறித்து அவைகள் சொல்லவிருக்கிறதை கண்டுபிடிக்க வேண்டும்; பின்பு அவைகள் சொல்வதை விசுவாசிக்க வேண்டும்.

கி.மு.606-ல் தானியேல் ஓர் கைதியாக பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுகையில் சிறைவாசம் தொடங்கியதை அவர் அறிந்தார்; அதனால் இப்பொழுது எழுபதில் அறுபத்தெட்டு வருடங்கள் (கி.மு.538) ஏற்கனவே கடந்துப் போய்விட்டிருந்ததை அறிந்தார். தீர்க்கன் முன்னுரைத்தபடியே யூதர்களுடைய திரும்ப வருகைக்கான ஆணையை பிறப்பிக்கின்ற கோரேசு என்னும் மனிதர் தீர்க்கதரிசனப்படியே பாபிலோனைப் பிடித்ததையும் அறிந்தார். ஏசா. 44:28 ஆகவே அவருக்கு ஒருசில வருடங்களில் சிறைவாசம் முடிவுபெற வேண்டும்; ஆனால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் 'தேசீக வாழ்வு நிலைகொள்ளுகை' National Existence -க்கு மீட்டாக்கம் பெறுதற்கு முன்பாக 'நான்கு உலகளாவிய சாம்ராஜ்யங்கள்' வந்து போவதற்குள்ளதான அவருடைய காட்சிகளோடு இதை (பாபிலோனிய சிறைவாச முடிவு) எவ்வாறு அவர் ஒத்திசைவிக்க இருந்தார். பாபிலோனியா ஒன்றே வந்திருந்து போயுள்ளது. அப்படியானால் மற்ற மூன்றும் கடந்துப்போக இருவருடங்கள் மட்டுமே மீந்துவிடப் பட்டுள்ளனவே! அவரது தடுமாற்றத்துக்கு காரணம் இதுவே! பாபிலோனில் இஸ்ரவேலுடைய எழுபது வருட குறுந்தங்கல் so journ ஓர் நீண்ட கால சிதறுகைக்கு Dispersion ஓர் மாதிரி Type என அவர் அறிய வேண்டியிருந்தது. அதாவது அந்நீண்டகாலம் அதைப்போல ஏழு மடங்கு கூடுதல் கால நீட்சிக்குரியதாக இருக்கப் போகிறது என்பதை! இந்நோக்கத்துக்காகவே, நாம் இனிப்படிக்கப்போகிற 'எழுபது வாரங்களின்' Seventy Weeks காட்சி தானியேலுக்குக் கொடுக்கப்பட்டது. இதற்கிடையே தானியேல் தன்னை ஜெபத்திற்குக் கையளித்தார்; ஏனெனில் இஸ்ரவேல் ஓர் தேசமாக மனமாற்றமடைந்து தேவனிடம் திரும்பினால், அவர் அவர்களது கூக்குரலைக் கேட்டு, அவர்களைத் தங்கள் சொந்த பூமிக்கு மீட்டாக்கம் செய்யவுள்ளார் என மோசேயின் எழுத்துக்களில் (லேவி.26:40-45; உபா. 30: 1-10) தானியேல் வாசித்திருந்தார்.

தானியேலின் ஜெபம்
Daniel's Prayer

வேதாகமத்தில் மிக வியப்பார்வத்திற்குரிய Sublime ஜெபமாகத் தானியேலின் ஜெபம் உள்ளது; அறிக்கை, விண்ணப்பம் மற்றும் பரிந்துரைத்தலுக்கு ஓர் மாதிரியாயுள்ளது; இதில் கிறிஸ்துவுக்கு வெளியே மாசுமறுவற்ற தன்மையாலான தானியேல் தன்னை ஓர் பாவியாகத் தனது மக்களோடு இணைத்துக் கொள்ளுகிறார். இந்த வருடத்திலேதான் தானியேல் தனது தேவனிடம் ஜெபித்ததற்காக சிங்கக் குகைக்குள் தள்ளப்பட்டார். இச் சோதனையின் காலகட்டத்தே, அந்திப்பலி Evening Oblation நேரமாகிய வேளையில் *(பி.ப. 3 மணி -* 3 P.M.*)* வசனம் *21,* அவர் முழங்காற்படியிட்டபோது இந்த ஜெபத்தை தானியேல் ஏறெடுத்திருக்கலாம். அத்துடன் 'எழுபது வாரங்களின்' இக்காட்சியையும் கண்டிருந்தார் எனலாம். அப்படியானால் அது (அந்த ஜெபம்) சிங்கத்தின் குகையை எதிரிட எவ்விதம் அவரைப் பலப்படுத்தியது என்பதை நாம் புரிந்து கொள்ளக்கூடும். ஜெபத்துக்கு ஓர் ஆயத்தமாக தானியேல் உபவாசித்து இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து தாழ்மைக்கு ஓர் அமையாளமாக தனித்திருந்தார் என்கிறது வசனம் *9:3.*

அறிக்கை The Confession

தானி. 9 (வசனங்கள் 4-15)

விண்ணப்பம் The Supplication

தானி. 9 (வசனங்கள் 16-19)

தானியேல் தன்னடைய ஜெபத்தில், பாவம் செய்கிற இஸ்ரவேலுடன் தன்னை இணைத்துக்கொள்கிறார். 'தேவனே! மக்கள் பாவஞ்செய்தனர்' என்று அவர் சொல்லாமல் 'நாங்கள்' பாவஞ்செய்தோம், அக்கிரமக்காரராயிருந்தோம், துன்மார்க்க மாய் நடந்தோம்; கலகம்பண்ணி, உம்முடைய கற்பனை களையும் உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்று போனோம். நாங்கள் எங்கள் சுற்றுப்புறத்தார் யாவருக்கும் நிந்தையானோம்; வெட்கம் எங்களுக்கே உரியது; அவர்களுக்கு நேரிட்ட தீங்கெல்லாம் மோசேயின் நியாயப் பிரமாணத்தை முறித்துப் போட்டக் காரணத்தினாலேயே என அவர்

அறிக்கையிடுகிறார். அவரோ, இஸ்ரவேலோ செய்திருந்த எந்த நீதியையும் அவருடைய விண்ணப்பம் அடிப்படையாகக் கொள்ளவில்லை; மாறாக எகிப்திய அடிமைத்தனத்தினின்று இஸ்ரவேல் தேவனால் பெற்ற விடுதலையையே சார்ந்திருக்கிறது. அதினுடைய கீர்த்தி, தேவன் அவர்களை அழியும்படி அனுமதிக்கச் செய்தால் இழக்கப்பட்டுவிடும். எருசலேமினிமித்தம் அவருடைய பரிசுத்த பர்வதத்தினிமித்தம் கர்த்தர் அவர்களை விடுவிக்கும்படி அவர் கெஞ்சினார். அதினிமித்தம் பாழாய் அன்று கிடக்கின்ற பரிசுத்த ஸ்தலம் Sanctuary மீண்டும் கட்டப்படும்படிக்கு 'தேவனுடைய மகிமை' ஒன்றே அவரது கண்ணோட்டத்திலிருந்தது View; அல்லாமல் அவர்களுடைய தகுதிப்பாடல்லல

குறுக்கீடு செய்யப்பட்ட ஜெபம்
The Interrupted Prayer

'இப்படி நான் சொல்லி ஜெபம்பண்ணி என் பாவத்தையும் என் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு என் தேவனுடைய பரிசுத்த பர்வதத்துக்காக என் விண்ணப்பத்தை என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக செலுத்திக் கொண்டிருந்தேன். அப்படி நான் ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கும்போது முதல் தரிசனத்திலே நான் கண்ட புருஷனாகிய காபிரியேல் வேகமாய்ப் பறந்துவந்து, அந்திப் பலியின் நேரமாகிய வேளையிலே என்னைத் தொட்டான். அவன் எனக்குத் தெளிவுண்டாக்கி என்னோடே பேசி: தானியேலே, உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டு வந்தேன்; நீ மிகவும் பிரியமானவன்; ஆதலால் நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப் பட்டது; நான் அதை அறிவிக்க வந்தேன்; இப்போதும் சொல்லுகிற வார்த்தையை கவனித்து கேட்டு தரிசனத்தை அறிந்து கொள்' தானி. 9: 20-23.

நம்முடைய ஜெபங்கள்மீது தேவன் அதிகமும் திடீரென்று குறுக்கிடுகிறதில்லை; ஆனால் இச்சந்தர்ப்பத்திலே அவர் அதைச் செய்தார். வேதாகமத்தில் இதுவே குறுக்கீடு செய்யப்பட்ட ஜெபமாகும். அக்குறுக்கீட்டின் நேரம் தேவாலயத்தில் அந்திப் பலி செலுத்தப்படும் நேரமான பி.ப. 3 மணி. பாபிலோனில் ஆலயம் இருக்கவில்லை; எருசலேமிலிருந்த ஒன்றும் அழிக்கப்பட்

டிருந்தது; ஆனாலோ தானியேல், அவருடைய வாலிபத்தில் கற்பிக்கப்பட்டிருந்தபடி தேவாலயத்து ஆராதனையின் நிர்ணயிப்பு நேரங்களை அநுசரித்தார். இது அவரது மதத்துக்குரிய பழக்க முறைகளின்மீது ஓர் பக்க Side Light வெளிச்சம் வீசுகிறது. மனிதன் காபிரியேலது விரைவுபற்றி தனிச்சிறப்பிலான குறிப்பீடு செய்யப்படுகிறது (வச. 21). தானியேலது ஜெபத்தின் ஆரம்பத்திற்கும் அதின் முடிவுக்குமிடையே காபிரியேல் பரலோகத்திலிருந்து பாபிலோனுக்கு பறந்திருக்கிறார். கரையோரம் Margin 'விரைவை' களைப்பு Weariness என அர்த்தப்படுத்துகிறது. களைப்பை உண்டாக்கும் அளவுக்கு பறந்துள்ள தூரம் வெகு அதிகமென்பதுபோல! காபிரியேல் ஓர் தூதனாயிருக்கையில், தானியேல் ஓர் மனிதனைப்போல அவனைப் பற்றிப் பேசுகிறார்; ஏனெனில் தூதர்கள் மானிடருக்கு தோன்றுகையில் எப்போதுமே ஓர் மனித ரூபத்தையே எடுத்துக் கொள்கின்றனர், ஆதி. 18:1-2. தானியேலிடம் வருவதற்கு காபிரியேல் கொடுத்த காரணம் யாதெனில் அவர் (தானியேல்) பரலோகில் மிகவும் பிரியமானவன் என்பதே! அண்டசராசரத்தே மிகவும் மகோன்னத வானலோகத்திற்குரிய அழியா உயிருருக்களை - பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் மற்றும் தூதர்களை எண்ணிப்பார்! பூமியின்மீதுள்ள ஓர் மாள்வுக்குரிய மனிதனிடம் அத்தகைய உயர்வான மதிப்பும், பரிவும் கொண்டிருந்ததையும், அதினிமித்தம் ஓர் தேவதூதனை அதுவும் காபிரியேல் எனும் உயர் படிநிலையிலானவனை அவ்விதமே எடுத்துச் சொல்வதற்கு தானியேலிடம் அதிகாரப்படுத்தி அனுப்பியதை எண்ணிப்பார்!

'முதல் தரிசனத்திலே In the Vision at the Begining நான் கண்ட புருஷனாகிய காபிரியேல்' (வச. 21) எனும் வார்த்தைகளிலிருந்து பதிவு செய்யப்படாதிருக்கிற ஓர் காட்சி தானியேலுக்கு அவரது ஜெபத்தின் ஆரம்பத்தில் கிடைத்திருந்தது போன்று தோன்றலாம். ஏனெனில் முந்தைய காட்சியில் தானியேலுக்கு விவரிக்கப்படாத எந்தவொரு காரியமும் இருந்ததாக தோன்றுகிறதில்லை. பதிவு செய்யப்பட்டிராத ஓர் காட்சி இருக்கிறதானால் எழுபது வாரங்களின் வெளிப்பாட்டுடைய தன்மையிலிருந்து அது எதுவாயிருந்தது என நாம் ஐயுற்று ஊகிக்கலாம் Surmise. அது பாபிலோனிய

சிறைவாசத்தின் எழுபது வருடங்களோடு ஏதோவொரு வகையில் சம்பந்தப்பட்ட ஓர் காட்சியாகத்தான் இருந்திருக்கவேண்டும். அதுவே தானியேல் செய்ததுபோல அவரை ஜெபிக்க வழிகோலியதானது! எழுபது வருடங்கள் ஓர் நீண்ட கால கட்டத்தினுடைய ஓர் மாதிரியாயிருந்தன Type என்றும், அக்காலக்கட்டம் ஏழு மடங்கு அதிக நீட்சியுடையதாயிருக்கும் என்று அவருக்குக் காண்பிக்க காபிரியேல் அனுப்பப்பட்டான். ஆகவே எழுபது வாரங்களின் காலக்கணிப்பு முறை சார்ந்த Chronological வெளிப் படுத்துகையின் காலம் அதிக சரிப் பொருத்தமானதே! அவ்வமயம் முடிவுறப்போகிற சிறைவாசத்தின் எழுபது வருடங்கள் இருந்ததுபோல இஸ்ரவேலுக்கு இன்னமும் மீந்திருந்த சிதறுகையின் 490 வருடங்களது முன்னறிவிப்பும் அத்தனை துல்லிபமாயிருந்தது. தானியேல் கூறுகிறார்: 'அவன் (காபிரியேல்) எனக்குத் தெளிவுண்டாக்கி என்னோடு பேசி தானியேலே உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டு வந்தேன்' என்று! (வச. 22). உலகக் காரியங்களைக் குறித்த தேவனுடைய திட்டம் மற்றும் நோக்கத்தில் நமக்கு அறிவுரைக்க ஓர் தேவதூதன் அல்லது பரிசுத்த ஆவி கிட்டுவது எத்தனை பாக்கியமானது!

எழுபது வாரங்கள் The Seventy Weeks

தானி. 9: 24-27

வசனம் 24: 'மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும், தீர்க்க தரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது.

வசனம் 25: இப்போதும் நீ அறிந்து உணர்ந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், எருசலேமை திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்படுவது முதல் பிரவுவாகிய மேசியா வருமட்டும் ஏழுவாரமும் அறுபத்திரண்டு வாரமும் செல்லும். அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும்

கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும்.

வசனம் 26: அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு, மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப் போடுவார்கள்; அதின் முடிவு ஜலக் பிரவாகம் போலிருக்கும்; முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நிர்ணயிக்கப்பட்டது.

வசனம் 27: அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்ற போது பலியையும் காணிக்கையையும் ஒழியப் பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்'.

எழுபது வாரங்களின் காட்சி அநேக வகைகளில் வேதாகம வார்த்தைகளில் கொடுக்கப்பட்ட மிக அதிமுக்கிய வெளிப்பாடாயிருக்கிறது. தீர்க்கதரிசன கால வரிசைப்பட்டியின் Chronology பொருளாக்க விரிவுரை Interpretation மட்டுமன்றி, வேதவாக்கியங்களின் உண்மையை திறக்கின்ற திறவுகோலாவும் இருக்கிறது. அது மேலுமாக இன்னொரு முக்கியமான உண்மையை வெளிப்படுத்துகிறது; எழுபது வாரங்கள் யூதர்கள் தங்கள் சொந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிற கால கட்டத்தை மட்டுமே மூடிவுப் பரவுகிறதென்பதே அவ்வுண்மை! அது தற்போதைய அவர்களது சிதறுகையின் காலக்கட்டத்தை Period of Dispersion மூடிப் பரவுகிறதில்லை; ஆனால் அவர்கள் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பி வருகையில் அவர்களது சரிதையை மீண்டும் எடுத்துக் கையாளுகிறது. இவ்விதமாக எருசலேமை மீளக் கட்டி மீட்டளிப்பு செய்வதற்கான அரசாணை வெளியானது தொடங்கி கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டும் வரையுள்ள காலத்தை மூடிப் பரப்புகிறது.

எழுபது வாரங்களுடைய நோக்கம்
The Purpose of The Seventy Weeks

வசனம் 24-ல் எழுபது வாரங்களின் நோக்கம் ஆறு மடியானதென்று சொல்லப்படுகிறது.

1. மீறுதலைத் தவிர்க்கிறதற்கு To Finish the Transgression.

2. பாவத்தைத் தொலைக்கிறதற்கு To Make an End of Sin (Seal up Sin).

3. அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கு To Make Reconcilation for Iniquity.

4. நித்திய நீதியை வருவிக்கிறதற்கு To Bring in Evelasting Righteousness.

5. தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கு To Sealup Vision & Prophecy.

6. மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம்பண்ணுகிறதற்கு To Anoint the Most Holy .

1. மீறுதலைத் தவிர்க்கிறதற்கு To Finish the Transgression

இந்த ஆறு காரியங்களும் தானியேலின் மக்கள் (The Jews) மற்றும் பரிசுத்த நகரம் (Jerusalem) ஆகிய இரண்டோடும் மாத்திரமே தொடர்புடையதென்று சொல்லப்படுகிறது. இது மிகவும் முக்கியமானது; 'எழுபது வாரங்கள்' புறஜாதிகளோடோ சபையோடோ சம்பந்தப்பட்டதல்ல; மாறாக யூதர்களோடும் எருசலேமோடும் மாத்திரமே சம்பந்தப்பட்டது; வசனம் 26ல் விவரிக்கப்பட்டபடி பிரபுவாகிய மேசியா (கிறிஸ்து) சங்கரிக்கப்பட்டபோது Cut off' (Crucified) எபி.10:12-ன்படி பாவத்துக்கு ஓர் முடிவுண்டாக்கினார் Made an End of Sin; மற்றும் ரோமர் 5:6-10-ன்படி அக்கிரமத்தை நிவிர்த்தியாக்கி ஒப்புரவாக்கினார் Reconciliation for Iniquity. இவை இரண்டும் முழு உலகுக்குரியவையாயின; ஆனால் முழு உலகுக்குரிய கிறிஸ்துவின் பிராயச்சித்தம் Atonement of Christ இங்கு கண்ணோட்டத்தில் இல்லை. யூதர்களாகிய ஒரே வகுப்பிலான நபர்களுடைய மீறுதலை களைதல் Putting Away அல்லது தவிர்த்தலே Finishing இங்குள்ளது. அவர்கள் இன்னமும் தேவ தயவின்மையில் இருக்கின்ற உண்மையே அவர்களுடைய மீறுதல் இன்னமும் முடிவடையவில்லை என்பதற்கு ஆதாரமாயுள்ளது.

ஓர் தேசமாக அவர்கள் மனந்திரும்பி தேவனிடம் திரும்பும்வரை முடிவடையப்போவதுமில்லை.

2. பாவத்தைத் தொலைக்கிறதற்கு
To Make an End of Sin

மீண்டும் இங்கேயும் இஸ்ரவேலின் பாவமே அர்த்தப்படுத்தப்படுகிறது. கரையோரத்தே Margin- ல் அடைத்து வைக்க Seal up sin என வருகிறது. அதாவது ஓர் குற்றவாளி சிறைக்கட்டறைக்கு உள்ளாக்கப்பட்டு கதவு முத்திரை பொறித்து மூடுவது போன்று பாவத்தைக் கட்டுப்படுத்தி வைப்பதையே சுட்டுகிறது. 'மீட்கிறவர் (தேவன்) வந்து அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார்; இஸ்ர வேலிலிருந்து அவர்களுடைய பாவங்களனைத்தையும் நீக்கிப் போடுவார்' என ரோமர் 11:26-27 கூறுகிறது. ஆனால் மீட்கிறவர் Deliverer (கிறிஸ்து அவருடைய இரண்டாம் வருகையின்போது) வருகிறவரைக்கும் இது ஏற்படப்போவதில்லை.

3. அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கு
To Make Reconciliation for Iniquity

இங்கேயும் மீண்டுமாக இஸ்ரவேலுடைய அக்கிரமமே அர்த்தப்படுத்தப்படுகிறது. அக்கிரமம் எனும் பதம் பொல்லாங்கு Wickdness, அநீதி Unrighteousness முதலியவற்றை பொருட்படுத்துகிறது. கர்த்தரோ 'நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் (கிறிஸ்து)மேல் விழப்பண்ணினார்' என்று ஏசாயா 53:6-ல் எழுதப்பட்டுள்ளது. இது பாக்கியமான உண்மையே. ஆனால் ஒரு ஜனமாக As a People 'இக்கால சகாத்தத்தில்' யூதர்களுக்கு இதனுடைய பொருந்தவைத்தல் Application அல்லது பிரயோகிப்பு இருக்கிறதில்லை. ஓர் யூதன் கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட விரும்பினால் அவன் தன்னுடைய தேசீகத்தை Nationality துறந்து Renounce கிறிஸ்துவின் சரீரத்தின் Body of Christ (சபை Church) ஓர் அங்கமாக வேண்டும். அதில் யூதனென்றோ, பிற ஜாதியானென்றோ பாகுபாடு இருப்பதில்லை, கலா. 3:26-28; கொலோ. 30:10-11. ஆனால் கிறிஸ்துவின் சரீரம் (சபை) முழுமையானதும் எடுபட்டுப் போனதும் Caught Out அதன் பின் யூதர்கள், தனி நபர்களாக அல்லாதவாறு ஓர் தேசமாக As a

Nation அவர்கள் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள், (வெளி1:7) அவருடைய இரண்டாம் வருகையின்போது! ஓர் தேசம்-யூத தேசம்-ஒரே நாளில் பிறக்கும் (மனமாறுதலடையும்), ஏசா. 66:8. அந்நாளிலே (கர்த்தருடைய நாள்) பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் (இஸ்வேல்) எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஊற்று உண்டாயிருக்கும், சகரி. 13:1.

4. நித்திய நீதியை வருவிக்கிறதற்கு To Bring in Everlasting Righteousness

கிறிஸ்துவின் திருநல்லாயிர ராஜ்யம் நிறுவப்படுகிறவரை நித்திய நீதி இருக்கக்கூடுவதில்லை; இஸ்ரவேலின் மீறுதல்கள் முடிவுக்கு வருவதுவரை திருநல்லாயிர ராஜ்யம் நிறுவப்படக் கூடுவதில்லை. அதுபோல, அவர்களது பாவங்கள் அடைத்து வைக்கப்படுவதுவரை நிறுவப்படாது! பின்பு கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தோடு ஓர் புது உடன்படிக்கை பண்ணுவார்.

'அந்நாட்களுக்குப் பிற்பாடு (தற்கால அவர்களுடைய சிதறுகையின் நாட்களுக்குப் பிற்பாடு) நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது: நான் என் நியாயப்பிரமாணததை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பான்; அவர்கள் என ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை அறிந்து கொள்ளு வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன், எரே. 31:33-34.

5. தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கு To Seal up the Vision and Prophecy

தரிசனமும் தீர்க்கதரிசனமும் யூதர்களுக்கு தற்சமயத்தே முத்திரை பொறித்து மூடப்பட்டிருப்பதாகத் Seal-up

தோன்றினாலும் இது தற்காலிகமாயுள்ளதே!

‘சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டு மென்றிக்கிறேன்; அதென்னவெனில் புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்கு கடினமான மனதுண்டாயிருக்கும், ரோமர் *11:25.*

இஸ்ரவேலின் மீறுதல் தீர்க்கப்பட்டு அவர்களுக்கு தேவனோடு குறுக்கீடற்ற ஐக்கிய தொடர்பு ஏற்படும்போது தரிசனத்துக்கோ அல்லது தீர்க்கதரிசனத்துக்கோ எந்தவித தேவையும் மேலுமாக இருக்கப்போவதில்லை.

அன்பு ஒருக்காலும் ஒழியாது; தீர்க்க தரிசனங்க ளானாலும் ஒழிந்துபோம்; (நின்று போகும் Cease) . . . நம்முடைய அறிவு குறைவுள்ளது; நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது; நிறைவானது வரும்போது Perfect is Come குறைவானது ஒழிந்துபோம்’ கொரி. *13:8-10.*

தரிசனமும் தீர்க்கதரிசனமும் யூதகுலத்துக்கே வரை யறுக்கப்பட்டு அடுத்துள்ளதாக்கப்பட்டது என்பது ஓர் குறித்துக் கொள்ளப்பட வேண்டிய உண்மை. மேலும், தரிசனங்கள் மற்றும் தீர்க்கதரிசனங்கள் யாவும் நிறைவேற்றப்படவுள்ளபோது மற்றும் அவைகளுக்கு மேலுமான பயன் இல்லாது போகையில் அவை காப்பீட்டுக்கென முத்திரைபொறித்து பாதுகாப்பாக அடைத்து வைக்கப்பட்டுப்போம் Sealed-up for Preservation.

6. மகா பரிசுத்தமுள்ளவரை (மகா பரிசுத்தமுள்ளதை) அபிஷேகம் பண்ணுகிறதற்கு To Anoint the Most Holy

மகா பரிசுத்தமுள்ளவரால் கிறிஸ்து பொருள் கொள்ளப்படுகிறார் என்றும், மற்றும் மகா பரிசுத்த முள்ளவருடைய இந்த அபிஷேகம், அவருடைய திருமுழுக்கின் போது பரிசுத்த ஆவியினால் அவர் அபிஷேகிக்கப்பட்டபோது, நிறைவேற்றப்பட்டது என்றும் சிலர் உரிமை கோருகின்றனர்.

ஆனால், மகா பரிசுத்தமுள்ளது The Most Holy ஒர் இடமாகிறதேயன்றி ஒர் நபர் அல்ல! புதிய திருநல்லாயிர ஆலயத்தினுடைய மகா பரிசுத்த ஸ்தலத்துக்கு இது சந்தேகமின்றி சுட்டுக் குறிப்பீடு செய்கிறது. இது எசேக். 41:1-42:20-ல் விவரிக்கப்பட்டுள்ள இதன் நிர்மாணிப்பு இன்னமும் எதிர்காலத்தியது; தேவனுடைய ஷெக்கினா மகிமையின் முதல் தோன்றுகை யாத்திராகமத்தில் இருந்தது; அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் முன்பாக பகலில் ஓர் மேகஸ்தம்பத்திலும் இரவில் ஒர் அக்கினி ஸ்தம்பத்திலும் சென்றார் யாத். 13:21-22. பிற்பாடு ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டபோது, 'ஷெக்கினா மகிமை' மகா பரிசுத்த ஸ்தலத்தை கையாட்சி எடுத்துக்கொண்டது. உடன்படிக்கைப் பெட்டியின்மீது கேரூபீன்கள் Cherubim இடையே தாபரித்தது, யாத் 40:34-35, யாத். 25:10-22; எண். 7:89. சாலொமோனின் தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது ஷெக்கினா மேகம் Shekinah Cloud பரிசுத்த ஸ்தலத்தை நிரப்பீற்று. அதனால் பிரதான ஆசாரியர்கள் அதினுள் நின்று ஊழியம் செய்யக் கூடாது போயிற்று, 1ராஜா. 8:10-11. தீர்க்கன் எசேக்கியேல் தேவனுடைய ஷெக்கினா மகிமை 'விருப்பமில்லா தயக்கத்துடன்' வீட்டை (ஆலயம்) விட்டு நீங்கியதையும் (எசேக். 9:3), பிற்பாடு நகரத்தையும் (எருசலேம்) (எசே. 11:23) விட்டு நீங்கி பரலோகுக்கு திரும்பிவந்ததையும் கண்டதாக நம்மிடம் அவர் கூறுகிறார். திருநல்லாயிர தேவாலயத்தின் அவருடைய காட்சியில் ஷெக்கினா மகிமை கிழக்கிலிருந்து திரும்பி வருகிறதாகக் காண்கிறார், எசேக். 43:1-6. இதிலிருந்து திருநல்லாயிர தேவாலயம் கட்டப் படுகிறபோது, கர்த்தரின் ஷெக்கினா மகிமை திரும்ப வந்து மகா பரிசுத்த ஸ்தலத்தை அபிஷேகிக்கிறதைப் பார்க்கிறோம். இவ்விதமாக ஷெக்கினா மகிமையின் வெளிச் செல்லுகை மற்றும் திரும்ப வருகையின் 'கால இடைவெளி' Time Space புறஜாதியாருடைய காலங்களது காலவரையறையைக் குறியீடு செய்கிறது.

எழுபது வாரங்களின் ஆறுமடியான நோக்கம் முழுமையும் இன்னமும் எதிர்காலத்தியதாகையால், எழுபது வாரங்கள் சிலர் வாதிடுகிறபடி கிறிஸ்துவின் முதல் வருகையோடு

முடிவாகிடவில்லை; மாறாக அவருடைய இரண்டாம் வருகை வரையில் நீட்சிக்கிறது.

எழுபது வாரங்கள்
The Seventy Weeks

எழுத்தின்படி இவ்வார்த்தைகள் 'எழுபது ஏழுகள்' Seventy Sevens என்று வாசிக்க வேண்டும்; 'வாரம்' விடாது வைத்திருப்பது எதனாலெனில் ஏழுடைய ஓர் காலகட்டத்தை Period குறித்துக் காட்டுகின்ற எபிரேய மூலப்படிவத்துக்கான சரிநுட்பமான சரிமாற்றுச் சொல் நமக்கு இல்லாததினால்! அவ்வேழுகள் நாட்களா, வாரங்களா அல்லது வருஷங்களா என்பது சந்தர்ப்பத்திற்கேற்ப தீர்மானிக்கப்படவுள்ளது. இயற்கை உலகம் Natural World மற்றும் ஆவி உலகம் Spirit World இரண்டும் 'ஏழுகளது சட்டத்தின்' Law of Sevens மீதே கட்டப்பட்டுள்ளன என்பது கவனிக்கத்தக்க உண்மை! அவைகளுக்கு ஓர் பொதுப்படையான மூலப்பிறப்பிடம் A Common Origin உள்ளதை இதனால் நிரூபிக்கப்படுகின்றது. இயற்கை உலகத்தில் தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என வாசிக்கிறோம். வேதசத்தியங்கள் அனைத்ினூடேயும் எண் 'ஏழு' ஓர் அடிப்படை எண்ணாக உள்ளது; நாட்களின் வாரம் Week of Days, வாரங்களின் வாரம் Week of Weeks, மாதங்களின் வாரம் Week of Months, வருடங்களின் வாரம் Week of Years, வருடங்களது வாரங்களின் வாரம் Week of Weeks of Years, ஆயிர வருடங்களின் வாரம் Week of Millenniums, மற்றும் யுகங்களின் வாரம் Week of Ages எல்லாவற்றிலும் ஏழு! வேதாகமத்தின் கடைசி புத்தகமான வெளிப்படுத்தல் புத்தகம் அதாவது 'நிறைவேற்றத்தின் புத்தகம்' The Book of Consumation ஏழு பிரிவுகளாலானது:

1. ஏழு சபைகள்
2. ஏழு முத்திரைகள்
3. ஏழு எக்காளங்கள்
4. ஏழு ஆளத்துவங்கள்
5. ஏழு கலசங்கள்
6. ஏழு ஆக்கினைகள் / ஊழ்கள்

7. ஏழு புதியகாரியங்கள்

எண் ஏழு பூரண எண்ணாகும் The Perfect Number. இது தெய்வீக எண் 'மூன்று' Divine Number - 'Three'- பிதா, குமாரன், பரிசுத்த ஆவி - மற்றும் உலக எண் நான்கு The World Number - 'Four' - இளவேனிற்காலம் Spring, கோடைக்காலம் Summer, இலையுதிர்காலம் Autumn மற்றும் பனிக்காலம் Winter இவை இணைந்து ஆக்கப்பட்டது.

தீர்க்கதரிசன காலவரிசைப்பட்டி
Prophetical Chronology

இப்போதும், இயற்கையும் வேதசத்தியங்களும் 'ஏழுகளின் சட்டத்தை' அடிப்படையாக்குமானால், தேவனுடைய எல்லாத் திட்டங்களின் உள்ளேயும் பிரவேசிக்கிற ஓர் நேர ஆக்கக்கூறு Time Element இருக்கிறது என்பதை நியாயமாய்க் காணமுடிகிறதில்லையா? யுகங்களையும், கால சகாத்தங்களையும் பொறுத்தவரை தேவனுடைய திட்டங்களையும், நோக்கங்களையும் அவர் அறியப்படச் செய்ய ஏதுவாக தீர்க்கதரிசன காலவரிசைப் பட்டியின் ஓர் ஒழுங்குமுறை System அவர் கொண்டுள்ளார் என்பதும் நியாயமாய்ப் படவில்லையா? இது இவ்விதமாயுள்ளதை சீடர்கள் கிறிஸ்துவிடம் கேட்ட கீழ்க்காணும் கேள்விக்கு அவருடைய பதிலுரையிலிருந்து தெளிவாகிறது: 'அப்பொழுது கூடி வந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்கு திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும், வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல' அப். 1:6-7. இதிலிருந்து யுகங்களுக்காகவுள்ள தேவனுடைய திட்டங்களில் 'காலங்களும்' Times மற்றும் 'பருவங்களும்' Seasons உள்ளன என்பதை நாம் காண்கிறோம். 'காலம் நிறைவேறினபோது... தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார்' கலா. 4:4 என்று நாம் அறிகிறோம். வேறு வார்த்தைகளில், இவ்வண்டசராசரத்தில் ஒவ்வொரு காரியமும் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் Schedule Time நடந்தேறுகிறது. நிறைவேற்றம் அடைந்த தீர்க்கதரிசனத்திலிருந்து நாம் பார்த்துள்ளபடி எதுவும் குறிப்பிட்ட நேரத்தின் போது

On Time நிறைவேற்றமடைய தவறிடவில்லை; ஆகவே, எதிர்காலத்தை வேதாகம சத்தியங்கள் முன்னுரைக்கின்ற எல்லாம் அதேவிதமாக நிமிடம் தவறாது நிறைவேறப் போகின்றன.

தீர்க்கதரிசன காலவரிசைப்பட்டியில் 'மணித்துளிகள்', 'நாட்கள்', 'வாரங்கள்', 'மாதங்கள்', 'வருடங்கள்', 'காலம், காலங்கள் மற்றும் அரைக்காலம்' என்பவை போன்ற இத்தகைய காலத்தின் Time, பிரிவுகளை Divisions நாம் எதிர்கொள்கிறோம். இக் காலப்பிரிவுகள் புலப்படக்கூடியதாக்க, எல்லாமே ஒரே அளவுகோல் வைத்து On the Same Scale பொருள் படுத்தப்பட வேண்டும் Interpreted. அது என்ன அளவுகோல்? தேவன் தமது வார்த்தை Word-யில் நமக்குத் 'திறவுகோல்' Key கொடுத்துள்ளார். எண்ணாகமம் 14:34-ல் நாம் வாசிப்பதாவது:

'நீங்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பது நாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமப்பீர்கள்'.

இப்போதும் இந்த நியாயத்தீர்ப்பு எழுத்தின்படியே நிறைவேற்றப்பட்டது என நாம் அறிகிறோம். எப்படியெனில், இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே நாற்பது வருடங்கள் அலைந்து திரிந்தார்கள். கானானை வேவுகாரரர்கள் சுற்றிப்பார்த்த ஒவ்வொரு நாளுக்கென ஒரு வருஷம் வைத்து! 'நீ இவைகளை நிறைவேற்றின பின்பு மறுபடியும் உன் வலதுபக்கமாய் ஒருக்களித்து, யூதா வம்சத்தாரின் அக்கிரமத்தை நாற்பது நாள் வரைக்கும் சுமக்கவேண்டும்; ஒவ்வொரு வருஷத்துக்குப் பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன்' எசேக். 4:6. இதிலிருந்து தீர்க்கதரிசன காலவரிசைப் பட்டியின் 'தெய்வீக அளவுகோல்' Divine Scale யாதெனில் 'ஒரு நாள் ஒரு வருடத்துக்காக நிற்கிறது' A Day Stands for a Year என்பதே!

இதை எழுபது வாரங்களுக்குப் பிரயோகி! 70 வாரங்களில் 490 நாட்கள்! அல்லது 'வருடநாள் அளவுகோல்' படி 490 வருடங்கள். தானி. 9:25-ல் நமக்குச் சொல்லப்படுகிறது: 'எருசலேமை திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அதாவது 7 + 62 = 69 வாரங்கள் அல்லது வருட நாள் அளவுகோல்படி 69

x 7 = 483 வருடங்கள். கி.மு. 536 கோரேசின் அரச ஆணையை இக்காலகட்டத்தின் ஆரம்பமாக மற்றும் கி.மு. 4 கிறிஸ்துவின் பிறப்பை அதினுடைய முடிவாக நாம் எடுத்தோமானால், இக் காலகட்ட நீட்சி 532 வருடங்கள் நமக்கு கிட்டுகிறது. அதாவது 49 வருடங்கள் கூடுதலாகிறது. இங்கே தான் மேலேயுள்ள காலகட்டத்தினுடைய 'காலவரிசைப்பட்டி' Chronology குறித்து நிச்சயமற்றுள்ளதை நாம் குறித்துக்கொள்வது நலமாய்ப் படுகிறது.

பழைய ஏற்பாடு மல்கியாவுடன் நின்றுவிடுகிறது; அதாவது கிறிஸ்துவுக்கு 400 வருடங்களுக்கு முன்னர்! அக் காலங்களின் காலவரிசைப் பட்டிக்கு Chronology டாலமி Ptolemy போன்ற விவிலிய ஏடுசாராத Profane எழுத்தாளர்களை சார்ந்திருக்க வேண்டியுள்ளது. பெர்சியாவின் Persia ராஜாக்களுக்கு அதிகப்படியான காலத்தைக் கொடுத்தவனாக அவன் காலத்தை அதிகமாக நீட்டி விடுகிறதாக சிலர் எண்ணுகின்றனர். வேதாகமம் இருந்திராத பட்சத்தில், மானிட வம்சம் பூமியின்மீது எவ்வளவு கால நீட்சிக்கு இருந்திருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்க மாட்டோம் என்று பொதுப் படையாக தெரிந்து கொள்ளுகிறதில்லை; யாத்திராகமம் வரையில் Exodus குடிமுதல்வர்களுடைய Patriarchs காலங்களின் நீட்சி, அதன் பின்பு பாபிலோனிய சிறைப்பிடிப்பு வரையில் நியாயாதிபதிகள் மற்றும் இஸ்ரவேல் - யூதாக்களின் ராஜாக்களுடைய வாழ்வுகளின் காலநீட்சியைக் கொடுக்கின்ற 'குடும்ப மரபுமூலங் காட்டுகிற பட்டியல்கள்' Genealogical Tables நம்மை கி.மு. 606வரைக் கொண்டு வருகின்றன. அங்கிருந்து விவிலிய ஏடுசாராத Profane வரலாற்றையே நாம் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. நாம் விவிலியம் சாரா வரலாற்றைப் படித்து எகிப்து, அசீரியா, பாபிலோன், மேதிய-பெர்சியா, கிரேக்கு மற்றும் ரோம தேசங்கள் போன்றவைகளது மூலப் புறப்பிடத்தை Origin கண்டறிய முயலும்போது, புராண இலக்கிய Mythology பனிமேகங்களால் அவைகள் சூழப்பட்டுள்ளதைக் காண் கிறோம். பிந்தைய ஓர் தேதிவரை எந்தவொரு காலவரிசைப் பட்டிகளைப் பேணுகிறதின் முக்கியத்துவத்தை கண்டிருப்பதாக அவை காணப்படவில்லை. அரசர் குலங்கள் Dynasties மூலம் அல்லது அவர்களுடைய வரலாற்றின் ஏதாவது ஒரு நிகழ்விலிருந்து பதிவேடு Record பேணுகிறதான சிலர்

கையாளுகின்ற முறைமை மிகவும் குழப்படியாக்குவதாக உள்ளது. உண்மை யாதெனில், அவர்கள் அனைவரும் பாபேல் தொடங்கி, அல்லது பாஷைகள் தாறுமாறுகை தொடங்கி தேதியிடுகின்றனர், ஆதி. *11:1-9.* மற்றும் சிருஷ்டிப்புடைய பெருவெள்ளத்துடைய Flood அவர்கள் கொண்டுள்ள செவிவழி மரபுரைகள் Traditions இதற்கான நிரூபணமாகிறதே அன்றி எதிர்மறையாவதில்லை.

ஆதாமிலிருந்து கிறிஸ்து வரையான மரபுவழி இறக்கத்து வரிசையின் Line of Descent செல்வழித்தடம் Trace தேடுவதே அதில் (காலவரிசைப் பட்டியில்) தேவனுடைய நோக்கமாயிருந்தது என நாம் புரிந்துகொள்ளும்போது பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட வேதாகம கால வரிசைப் பட்டியின் நம்பகத் தன்மை Reliability காண்பதாகிறது. சில நேர்வுகளில் Cases பதிவேடுகள் முழுமையற்று இருக்கையில், பிறப்பு தேதி கொடுக்கப்படாமை அல்லது தகப்பன் மற்றும் மகனது ஆட்சி எங்கே கவிழ்ந்துள்ளது Overlap என்பன போன்றவைகளில் இவ்விதமிருக்கையில், சம்பந்தப்பட்டுள்ள வருடங்களின் எண்ணிக்கை கூட்டு ஒட்டு மொத்தத்துடன் Sum Total ஒப்பிடுகையில் அற்பசொற்பமாயுள்ளன. ஆதாம் தொடங்கி கிறிஸ்துவரை கீழ்க்காணும் முன்னணி காலக் கணிப்பாளர்களால் Chronologists கொடுக்கப்பட்டுள்ளபடியான ஒட்டுமொத்த வருடங்களின் எண்ணிக்கையை ஒப்பிடுவோ மானால் இதைக் காணலாம்.

Archbishop Ussher	கி.மு. *4004*
Henry F. Clinton	கி.மு. *4138*
Martin Anstey	கி.மு. *4124*

இங்கே *4000* வருடங்களில் *134* வருடங்களின் ஓர் வித்தியாசமே இருக்கிறது. அப்படியானால் பூமியின்மீது மனிதன் தோன்றியிருந்த காலத்தின் நீட்சி கி.மு. *4004* + கி.பி.*1924* (*1924* புத்தக ஆசிரியர் மரித்த வருடம்) அல்லது *5928* வருடங்களே! சரி துல்லிபமான காலவரிசைப் பட்டி புள்ளி விபரங்கள் Data பெறுவதிலுள்ள சிக்கலை மனதிற்கொண்டு, நாம் மீண்டும் 'எழுபது வாரங்களுக்கு' திரும்பி வருவோமாக:

எழுபது வாரங்களின் தொடக்கப் புள்ளி
The Starting Point of The Seventy Weeks

எழுபது வாரங்களின் காலக்கட்டத்தை ஆராய்வதில் அதின் தொடக்க தேதியை கண்டுபிடிப்பதே முதல் காரியமாக இருக்கிறது. இங்கே எண்ணக் கருத்தில் ஓர் முரண்பாடு உள்ளது; பாபிலோனிய அடிமைத்தளைக்குப் பின்னர் எருசலேம் மற்றும் தேவாலய மீட்டாக்கத்தைப் பொறுத்தவரை நான்கு அரசாணைகள் Decrees உள்ளன.

முதல் அரசாணை
First Decree

முதல் அரசாணை கோரேசினால் கி.மு. 536-ல் கொடுக்கப்பட்டது:

'எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசுடைய முதலாம் வருஷத்திலே, கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே அவன்: பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ, அவனோடே அவனுடைய தேவன் இருப்பாராக. அவன் யூதாவிலுள்ள எருசலேமுக்குப் போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டக்கடவன்; எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன். அந்த ஜனங்களில் மீதியாக இருக்கிறவன் எவ்விடத்தில் தங்கி இருக்கிறானோ, அவ்விடத்து ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்துக்கென்று அவனிடத்தில் உற்சாகமாய் காணிக்கை கொடுத்து அனுப்புகிறதுமன்றி அவனுக்குப் பொன், வெள்ளி முதலிய திரவியங்களையும், மிருக ஜீவன்களையும் கொடுத்து உதவிசெய்ய வேண்டும் என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று தன் ராஜ்யமெங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணுவித்தான்' எஸ்தர் *1:1-4*. கோரேசின் இப்பிரகடனம் *2 நாளா. 36:22-23-ல்* உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதில் 'எருசலேமை மீளக்கட்டி மீட்டாக்கம்' குறித்து

எதுவும் சொல்லப்படவில்லை; சொல்லப்பட்டதெல்லாம் கர்த்தருடைய வீடு அல்லது ஆலயம் ஒன்றே எனும் உண்மையை, ஓர் கவனமுள்ள வாசிப்பு வெளிப்படுத்தும். ஆனால் ஏசாயா 44:28-ன் வாசகம் மூலம் இது பொருள்படுத்தப்பட வேண்டும் என சிலர் கோருகின்றனர். இதில் கோரேசு சிங்காசனம் ஏறுவதற்கு 176 வருடங்களுக்கு முன்னதாக கோரேசைப்பற்றி கர்த்தர் சொல்லுகிறதாவது:

'அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி: நீ கட்டப்படு என்றும், தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதை யெல்லாம் நிறைவேற்றுவான்', ஏசா. 44:28.

இந்த அரசாணையை பிறப்பிக்க மன்னர் கோரேசை உந்தியது என்னதுவென்று அறிய சுவாரசியமாயுள்ளது; யூதர்கள் பாபிலோனிலே எழுபது வருடங்களுக்கு சிறைக் கைதிகளாக இருக்க ஏற்பட்டவர்கள் என்ற எரேமியாவின் தீர்க்கதரிசனத்துக்கு (எரே. 25:11-14) கோரேசின் கவனத்தை தானியேல் வரவழைத் திருப்பாரோ? மேலுமாக அதன் நிறைவுக்காலம் வந்துவிட்டது. எனவே, அவர்களது சுதந்திரத்துக்காகக் கேட்டிருப்பாரோ, அல்லது ராஜாவின் கவனத்தை ஏசாயா 44:28-க்கு அவர் திருப்பினாரோ, அதை (ஏசா. 44:28) பரிசுத்த ஆவியானவர் யூதர்களை அவர்களது சிறைவாழ்வினின்று விடுவிக்க கோரேசை அசைவிக்க பயன்படுத்தினாரா? மட்டுமல்லாது தேவாலயத்தை மீளக் கட்டுவதற்கு அவர்களை திருப்பி அனுப்பவும் தூண்டுதல் செய்ததோடு தேவாலயத்திலிருந்து நேபுகாத்நேச்சார் எடுத்துச் சென்ற பொன், வெள்ளிப் பாத்திரங்களையும் மீட்டாக்கம் செய்ய வகைசெய்தாரா? கோரேசை அரசாணை பிறப்பிக்க வகைசெய்தது எதுவாயினும்; அதன் விளைவாக 50,000 சிறையடிமைகள் எருசலேமுக்கு திரும்பி வந்தனர் (எஸ்தர் 2:64-65) என சொல்லப்படுகிறது. மேலும் அவர்கள் ஒரு பலிபீடத்தைக் கட்டி, தங்கள் பலிப் படைப்புகள் மற்றும் பந்திகளையும் மீளப் புதுப்பித்தனர். பின்பு ஆலயத்தை திரும்பக் கட்டத் தொடங்கினர். ஆனால் அப்பணி எதிரிகளினிமித்தம் முன்னேற்றத் தடைக்குள்ளானது. இதுவோ தானியேலுக்கு காபிரியேலின் வார்த்தைகளது ஓர் நிறைவேறுதல்? தேவாலயத்து மீளக்கட்டுகைக்கு கோரேசு தனதுமட்டில் கட்டளையை

மட்டுப்படுத்தியதால், அதேவேளையில் எருசலேமை மீளக்கட்டி மீட்டாக்கம் செய்வது குறித்து எதையும் சொல்லாததால், இவ்வாறு நாம் முடிவெடுக்கவா? அதாவது கோரேசு அதை (எருசலேம்) உட்படுத்தியிருந்தார்; அதேபோது எசாயாவின் தீர்க்கதரிசனத்துக்கும் கோரேசின் அரசாணை பிறப்பித்தலுக்கு மிடையேயான 176 வருடங்களில் கர்த்தரே தமது மனதை மாற்றியவராக கோரேசின் பணியை, தேவாலயத்தை மீளக் கட்டுதலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தினாரா? தானாகவே உரைத்த கோரேசுடைய வார்த்தைகளுக்கு நம்மை மட்டுப்படுத்த வேண்டும் என்பதுபோல, கர்த்தர் தமக்கு ஓர் வீட்டை House எருசலேமில் கட்ட மாத்திரம் அவர் கோரேசை பொறுப்பாணையிட்டதாக எடுத்துக்கொள்ளுவோம்.

இரண்டாவது அரசாணை
Second Decree

இரண்டாவது அரசாணை, கி.மு.519-ல் தரியுவுடையதாக இருந்தது; இது எஸ்றா 6:1-12-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது; தேவாலயத்தை திரும்பக் கட்ட முயற்சித்தவர்கள் அவர்களது வேலையில், அவ்வேலைக்கு அதிகாரம் அவர்கள் பெற்றிருக்க வில்லையென்னும் கணிப்பில் குறிக்கீடு செய்யப்பட்டதை எஸ்றா 5:1-17-ல் வாசிக்கிறோம். ஆகவே ராஜாவின் கஜானாவில் ஓர் தேடுகை செய்யும்படி அவர்கள் தரியுவுக்கு ஓர் விண்ணப்ப மனு செய்தனர். அதை அவன் செய்தான். தேடுகை கோரேசின் அரசாணையை வெளிப்படுத்தியது; தரியுவுடைய அரசாணை கோரேசுடைய அரசாணையின் ஓர் மறுவுறுதிப்படுத்துகையாய் Reaffirmation மட்டும் இருந்தது; ஆனால் தண்டத் தொகைகளோடு பிணைக்கப்பட்டதாய்! தரியுவுடைய அரசாணையும் தேவாலயத்துக்கு மட்டுமே சுட்டுக் குறிப்பீடுள்ளது. நகரத்தை மீளக் கட்டி மீட்டாக்கம் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை; இவ்விதம் கோரேசின் அரசாணை தேவாலயத்துக்கே மட்டுப்படுத்தப்படுவதை உறுதியாக்குகிறது.

மூன்றாவது அரசாணை
Third Decree

மூன்றாவது அரசாணை கி.மு. 458-ல் பெர்சியாவின் ராஜா அர்தசஷ்டாவுடையது Artaxerxes ; எருசலேமுக்குச்

செல்லவும், தன்னோடு சில ஆசாரியர்களையும் லேவியரையும் கூட்டிச் செல்லவும் எஸ்றாவுக்கு அனுமதி வழங்குகின்ற ஓர் கடிதமாக மட்டும் இருந்தது. அத்தோடு காளைகள், ஆட்டுக் கடாக்கள் மற்றும் ஆட்டுக்குட்டிகளை ஆலயத்தில் படைப் பிற்காக வாங்குவதற்கான பொன் மற்றும் வெள்ளி சேகரிக்கவுள்ள அதிகாரத்தோடு மாத்திரமன்றி தேவையானால் நூறு தாலந்து வெள்ளி, நூற்றுக்கலக் கோதுமை, நூற்றுக் கலத் திராட்சரசம், நூற்றுக்கல எண்ணெய், தேவைக்கு வேண்டிய உப்பையும் கொள்வதற்கானதை ராஜாவின் கஜானாவிலிருந்து பெற்று எடுத்துச்செல்லவும் எஸ்றா அனுமதிக்கப்பட்டார் (எஸ்றா *7:11-22*). எருசலேமை மீளக் கட்டுவதற்கோ, மீட்டாக்கம் செய்வதற்கோ சம்பந்தப்பட்ட எதுவும் இந்த அரசாணையில் இல்லை. கர்த்தருடைய பிரமாணத்தை தேட தன் இருதயத்தை ஆயத்தம்பண்ணியிருந்த ஓர் வேதபாரகனுக்கு கொடுக்கப்பட்ட ஓர் கடிதமாக மாத்திரமிருந்தது. அவ்வேதபாரகன் கர்த்தருடைய வீட்டின் பணிவிடையில் அப்பிரமாணம் நடைமுறைப் படுத்தப்படுவதை காண வாஞ்சித்தவனாயிருந்தான்.

நான்காவது அரசாணை Fourth Decree

இது கி.மு. 445-ல் அர்த்சஷ்டா Artaxerxes Longimanus-ஆல் அவனது ஆட்சியின் இருபதாம் ஆண்டில் கொடுக்கப்பட்ட அரசாணையாயிருந்தது; இது நெகேமியா *2:1-8*ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெர்சிய அரசவையில் ஓர் மிக உயர்ந்த அதிகாரியும் ராஜாவின் நம்பிக்கையான ஊழியர்களில் ஒருவனான ராஜாவின் பானபாத்திரக்காரனான Cup-bearer நெகேமியாவுக்குக் கொடுக்கப்பட்டது; அது எருசலேமுக்கு திரும்பிப் போய் அதைக் கட்டுவதற்கான அனுமதியாயிருந்தது; அது அரசாங்க தூதுப் பணியாயிருந்ததேயன்றி மத சம்பந்தமானதல்ல. இது சன்பல்லாத்து மற்றும் தொபியா போன்ற வெளியாட்களது எதிர்ப்பிலிருந்து தெளிவாகிறது. அலங்கச் சுவர்கள் மீளக் கட்டுதல் மற்றும் நகரத்தை அரண்காப்புகளால் வலுப்படுத்துதல் ஓர் ஆட்சியை எதிர்க்கிற செயல் என அவர்கள் எண்ணினர். அலங்கச் சுவர்கள் ஐம்பத்திரண்டு நாட்களில் பழுது பார்க்கப்பட்டிருக்கையில் நகரை மீளக்கட்டி, மீட்டளிப்பு செய்ய மற்றும் பிரமாணச் சட்டத்தை மீள நிறுவ

நெகேமியாவுக்கு பன்னிரண்டு வருடங்கள் பிடித்தன. 'வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும்' எனும் தானி. 9:25-ன் தீர்க்கதரிசனம் இவ்விதமாய் நிறைவேறுதலாயிற்று. நெகேமியாவின் தூதுப்பணியின் நோக்கம் எருசலேமை ஓர் அரசுக்குரிய தலைநகராக மீட்டாக்கம் செய்வதும், யூத தேசமாக மீள அதை நிறுவுகை செய்யவுமாயிருந்தது. அரசாணையின் வார்த்தைகள் கொடுக்கப்படாதிருக்கையில், மீட்டாக்கம் Restoration என்பதான நெகேமியாவின் பணியினுடைய சிறப்பியல்பு Character அதன் இயல்புத்தன்மைக்கு Nature சான்றாயிருக்கிறது. ஓர் அரசாணை வடிவில் நெகேமியாவுக்கு ராஜாவால் கொடுக்கப்பட்ட 'கடிதங்கள்' Letters இருந்தன. அல்லாவிட்டால் நெகேமியா செய்த பணிக்கு செய்யவுள்ள அதிகாரம் ஏதும் அவருக்கு இருந்திருக்காது. இத்தகைய மீட்டாக்கத்தை அதிகாரப்படுத்துகின்ற அரசாணை வேறேதும் இல்லா திருப்பதால் அர்தசஷ்டாவுடையதான இது ஒன்றே காபிரியேலால் அர்த்தப்படுத்திய ஒன்றாயிருக்கவேண்டும்.

இன்னொருவிதத்தில இதைப் பார்ப்போமாக. கி.மு. 536 கோரேசுடைய முதல் அரசானையை எழுபது வாரங்களது தொடக்க புள்ளியாக எடுப்போமானால் பின்னர் 7+62 வாரங்கள் அல்லது 483 வருடங்கள் வருட-நாள் அளவுகோல் படி பிரபுவாகிய மேசியாவரை கி.மு. 53-ல் அல்லது 49 வருடங்கள் கிறிஸ்துவின் பிறப்பு கி.மு.4-க்கு முன்னதாக ஓடி முடிந்தது. தரியுவுடைய கி.மு. 519-ன் இரண்டாம் அரசாணையை எடுத்தோமானால் 483 வருடங்கள் கி.மு. 36-ல் அல்லது கிறிஸ்துவின் பிறப்புக்கு 32 வருடங்கள் முன்னர் ஓடித் தீருகிறது. நமது தற்போதய கால வரிசைப்பட்டி சரியாயிருக்கிறதானால் முதல் இரண்டு அரசாணையில் எந்தவொன்றையும் ஓர் தொடக்கப் புள்ளியாக எடுக்க முடியாது. '7 வாரங்கள்' மற்றும் 62 வாரங்களிடையே 49 அல்லது 32 வருடங்களின் ஓர் கால நிரப்பிடம் Time Space இருக்கிறதாக ஒப்புக்கொள்ளாதிருந்தால் அவ்விதம் எடுக்க முடியாது. இதை தீர்க்கதரிசனம் அனுமதிக்கு மென்றால், உண்மையில் இது 69 வாரங்களை 7 வாரங்கள் மற்றும் 62 வாரங்கள் என பிரிக்கிறதின் மூலமாகவே என மறைமுகமாக சுட்டுகிறது Implies..

நாம் மூன்றாவது அரசாணை கி.மு.458-ல் அர்த சஷ்டாவுடையதை எடுப்போமானால் 483 வருடங்கள் நம்மை கி.பி. 25 அல்லது கிறிஸ்துவின் பிறப்புக்கு (கி.மு.4) 29 வருடங்கள் பிற்பாடுக்கு After எடுத்துச் செல்லுகிறது. நாம் நான்காவது அரசாணை கி.மு. 445-ன் Artaxerxes Longimanus யுடையதை எடுப்போ மானால் 483 வருடங்கள் கி.பி. 38-க்கு அல்லது 8 வருடங்கள் கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்கு (கி.பி. 30) பிற்பாடுக்கு எடுத்துச் செல்லும். இதிலிருந்து நாம் 7 வாரங்கள் மற்றும் 62 வாரங்களுக்கு இடையே ஒர் கால நிரப்பிடம் ஒன்றிலோ அனுமதிக்க வேண்டும் அல்லது நாம் வேறொரு கணக்கீடு முறையை பிரயோகிக்க வேண்டும்.

அறுபத்தி ஒன்பது வாரங்களின் முடிவிடம்
The Terminus of The Sixty Nine Weeks

ஆனால் இந்த பிரச்சனையினுள் புகுகிற இன்னொரு ஆக்கக்கூறு Factor உள்ளது. எழுபது வாரங்களின் சாத்தியமான நான்கு தொடக்கப் புள்ளிகளை நாம் சிந்தித்துள்ளோம். அவைகளின் முடிவைப்பற்றி என்ன? 'பிரபுவாகிய மேசியாவரை' எனும் வாசகம் எதை அர்த்தப்படுத்துகிறது? பிரபுவாகிய மேசியா கிறிஸ்துவை பொருள்படுத்துகிறது; ஆனால் அவருடைய வாழ்வின் எந்த குறிப்பிட்ட காலக்கட்டத்தை அல்லது சம்பவத்தை இந்த தீர்க்கதரிசனம் சுட்டிக்காட்டுகிறது? அவரது பிறப்பையா, அவரது ஞானஸ்நானத்தையா அல்லது அவரது வெற்றியின் பிரவேசத்தையா? இவை 33 வருடங்களாலான காலக்கட்டத்தை மூடிப்பரப்புகிறது; மற்றும் நம்முடைய கணிப்பைப் பாதிக்கிறது. அவைகளை உற்று நோக்குவோமாக. கிறிஸ்துவின் பிறப்பு அறுபத்தொன்பது வாரங்களின் முடிவிடமா? இயற்கையாக அது அப்படித்தான் என நிதானிப்போம். காபிரியேல் தானியேலுக்கு எழுபது வாரங்களை அறிவிக்க அனுப்பப்பட்டிருந்தால் அவரைத்தவிர 69 வாரங்களின் முடிவை மற்றும் பிரபுவாகிய மேசியாவின் பிறப்பை அறிவிக்க வேறே யார் அதிக தகுதியான நபர் இருக்கக்கூடும்? ஆகவே எழுபது வாரங்களின் காலம் Fulness of Time நிறைவேறியபோது (கலா. 4:4) பிரபுவாகிய மேசியாவின் தோன்றுகைக்கான காலம் வந்தபோது காபிரியேல் மரியாளுக்கு தோன்றிக் கூறியதாவது:

'மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்; இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்; அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக; அவர் பெரியவரா யிருப்பார்; உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்; அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது' என்றான், லூக். *1:30-33.*

இயேசுவே பிரபுவாகிய மேசியாவாயிருந்தார் என்று மரியாளுக்கோ அல்லது தூதர்களுக்கோ காபிரியேல் அறிவிக்கா திருக்கையில் அவர் (இயேசு) தமது பிதாவான தாவீதின் சிங்காசனத்தை பெறவிருந்தார் என அறிவித்தார். அதினால் தாவீதின் வீட்டின் House of David ஓர் பிரபு Prince ஆக அவர் பிறந்தார். ஞானிகள் Wise Men *(மத். 2:1-2)* மற்றும் பிலாத்து *(யோவா. 18:33-39)* அவரை ஓர் ராஜாவென்று அழைத்தனர்; அவ்விதமாகவே அவர் சிலுவையிலறையப்பட்டார்; அவர் இன்னமும் ஓர் பிரபுவே! A Prince! ஏனெனில் ஓர் ராஜாவாக உருவேற்படப் போகின்றவரே ஓர் பிரபு Prince! இயேசு இன்னமும் முடிசூட்டப்படவில்லை; அவருடைய ராஜ்யத்தை இன்னமும் பெற்றுக்கொள்ளவில்லை; ஏனெனில், அவர் இப்பொழுது ஓர் பிரதான ஆசாரியர். அவர் பிதாவினிடமிருந்து ராஜ்யத்தை பெற்றுக்கொள்ளுகிறவரைக்கும் அவர் ஓர் ராஜாவா யிருப்பதில்லை. 'இராத் தரிசனத்திலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார்; சகல ஜனங்களும், ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்கு கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்', தானி. *7:13-14.* ஆகவே, இயேசு முதல் தடவையாக வந்தபோது பிரபுவாகிய மேசியா என இயேசு அழைக்கப்பட்டதில் ஓர் ஆச்சரியப் படத்தக்க தகுதிப் பொருத்தம் இருந்தது. ஏனெனில் காபிரியேல் ராஜாவாகிய மேசியா என சொல்லியிருந்தால், '69 வாரங்கள்' ராஜாவாக

அவருடைய இரண்டாம் வருகையை எட்டியிருந்திருக்கும். ஆனால் இயேசு அவரது பிறப்பின்போது வெளிப்படையாக Publicly அறியப்படாதிருந்ததால், அந்நிகழ்வு தீர்க்கதரிசனத்தை நிறைவடைவிக்கிறதா என்பது ஓர் கேள்விக்கானதாயுள்ளது.

இயேசுவின் வாழ்வின் முதல் வெளிப்படையான நிகழ்வு அவருடைய ஞானஸ்நானமே! அப்பொழுது, முப்பதாவது வயதில் பிதா மற்றும் பரிசுத்த ஆவியுடைய இருமடியான சாட்சி அவருடைய தெய்வீகத்துக்கு கிட்டியது, மத். 3:13-17. பிதா 'இவர் என்னுடைய நேசகுமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன்' என எடுத்தியம்ப, பரிசுத்த ஆவியானவர் ஓர் புறாவின் ரூபத்தில் அவரை அபிஷேகம் செய்தார், லூக். 4:16-19. இப்போதும் 'மேசியா' எனும் வார்த்தை 'அபிஷேகிக்கப்பட்டவர்' The Anointed One எனப் பொருள்படும். அப்படியானால் கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தினுடைய தேதி அறுபத்தொன்பது வாரங்களின் முடிவுறுதலின் கால வேளையாயிருந்திருக்கலாம்; ஏனெனில் அந்நேரத்தே அவர் அவருடைய வெளிப்படையான தூதுப் பணிக்குள் பிரவேசித்தார். பரலோக ராஜ்யம் சமீபித்தது Kingdom of Heaven was at Hand என்று பிரகடனம் பண்ணினார். ஆனால் ராஜ்யத்தினுடைய கொடுக்க முன்வருகை Offer நிராகரிக்கப்பட்டது; அந்நேரத்திலிருந்து இயேசுவின் தூதுப்பணி Ministry வேறொரு வடிவத்தை எடுத்தது Took on a Different Form. ஆகவே இயேசுவின் ஞானஸ்நானம் 69 வாரங்களின் முடிவிடமாக இருந்திருக்கக்கூடாது; ஏனெனில் மேசியாவாக அவரது உரிமைக் கோரிக்கையின் வெளிப்படையான சகல அங்கீகார ஏற்பையும் Recognition இயேசு தவிர்த்தார். அவருடைய சீடர்களைக்கூட அவர்கள் அவரை அறியப்படும்படி செய்யக்கூடாது Not Make Him Known என அவர் கண்டிப்பாய் கட்டளையிட்டிருந்தார்.

அறுபத்தொன்பது வாரங்களின் முடிவிடமாக கருதப்படும்படியான கிறிஸ்துவின் வாழ்வின் மூன்றாவது நிகழ்வு குருத்தோலை ஞாயிறன்று எருசலேமுக்குள் கிறிஸ்துவின் வெற்றிகரமான பிரவேசம் அது ஏப்ரல் 2, கி.பி. 30-ல் அவரது சிலுவை மரணத்துக்கு ஓர்சில நாட்கள் முன்னர், நான்கு சுவிசேடங்களிலும் பதிவு செய்யப்பட்டபடி நடந்தேறியது. அவர்

தாம் சீக்கிரமாக சங்கரிக்கப்படப் போகிறதை Cut off (சிலுவையிலறையப்பட) தானி. 9:26 அறிந்தவராக மற்றுமாக அந்நிகழ்வுக்கு முன்னதாக அவரது மேசியாத்துவம் Messiahship வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென Publicly Recognized உணர்ந்தவராக இயேசு தாமே சகரி. 9:9-ன் நிறை வேறுகைக்கு நேராகக் காலடி எடுத்துவைத்தார்.

'சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே கெம்பீரி; இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும், கழுதைக் குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்' சகரி. 9:9.

யோவான் 12:13-ல் இயேசு ஒலிவ மலையை விட்டிறங்குகையில் அவரை சந்திக்கச் சென்ற மக்கள் 'ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர்' என்று ஆர்ப்பரித்தார்கள். ஏன் இயேசுவுடைய ராஜ்யத்துவத்துடைய Kingship இந்த வெளிப்படையான பொது அறிவிப்பு? இயேசு அவ்வேளையில் சம்மதித்ததுமன்றி தமது வெற்றிகரமான பிரவேசத்தை மேற்கொள்ள நடவடிக்கைகளும் எடுத்தார்; இதற்காக ஓர் குறிப்பிட்ட கழுதையை கொண்டுவரும்படி அவரது சீடர்களுக்கு கட்டளையிட்டார்; அக்கழுதையின் இருப் பிடத்தை அவர்களுக்கு குறிப்பாய் சுட்டிக் காட்டினார், மத். 21:1-3. அவர் தமது சீடர்களை அதட்டும்படி கேட்டுக் கொள்ளப்பட்டபோது (லூக். 19:39-40) அதற்கு அவர் 'இவர்கள் பேசாமலிருந்தால், கல்லுகளே கூப்பிடும்' என பறைசாற்றினார். இயேசு தம்மை ராஜா என அழைக்கப்பட சம்மதித்தது மட்டுமல்ல, அது நடந்தேறவும் துணைபுரிந்தார் எனும் உண்மை வெற்றிப்பவனி பிரவேசம் ஓர் தீர்க்கதரிசன முக்கியத்துவம் கொண்டுள்ளது என்பதற்கு அத்தாட்சி சான்றாயுள்ளது. அது அறுபத்தொன்பது வாரங்களின் முடிவிடம் மற்றும் பிரபுவாகிய மேசியாவின் வருகை எனும் பறைசாற்றலைவிடவும் கூடுதல் மேன்மையான முக்கியத்துவம் அதற்கென்ன இருந்திருக்கக் கூடும்? தானி. 9:25 மற்றும் சகரி. 9:9-ன் தீர்க்கதரிசனங்கள் 'வெற்றிப்பவனி பிரவேசம்' எனும் ஒரே நிகழ்வில் ஏன் நிறைவேற்றப்பட

முடியாது என்பதற்குக் காரணம் ஏதும் இருக்கவில்லை; ஏனெனில் அச்செயலில் இயேசுவை ராஜாவாக இவ்விதமாக ஏற்றுக்கொண்டோர் அவரை 'பிரபுவாகிய மேசியா' என்று ஏற்றுக்கொண்டனர்; இயேசு முதல்முறை வந்த போது அவர் ஓர் கழுதையின் மீது தாழ்மையோடும் பணி வோடும் ஏறிவந்தார். அவர் எருசலேமுக்கு இரண்டாம்வேளை வரும்போது அது ஓர் வெள்ளைக் குதிரைமீது, பரலோகத்தின் சேனைகளால் பின்தொடரப்பட்டவராக இருக்கப்போகிறது. வெளி. 19:11-16. ஆகையால் அவருடைய வெற்றிப் பவனி பிரவேசமே அறுபத்தொன்பது வாரங்களின் முடிவிடமாக Terminus நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுவது வாதப் பொருத்த முடையதாக காணப்படுகிறது. அதாவது அவருடைய பிறப்பையோ அல்லது ஞானஸ்நானத்தையோவிட அதிக பொருத்தமாயுள்ளது.

69 வாரங்களின் தொடக்கப்புள்ளி மார்ச் 14, கி.மு. 445-ல் கொடுக்கப்பட்ட Artaxerxes Longimanus உடைய அரசாணையாயிருந்தது; மற்றும் முடிவிடம் ஏப்ரல் 2, கி.பி. 30 குருத்தோலை ஞாயிறுடைய எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிப்பவனி பிரவேசமாயிருந்தது என்கிற முடிவுக்கு எட்டிய பின்பு, 69 வாரங்கள் இவ்விரு தேதிகளுக்கிடையேயுள்ள கால நிரப்பிடத்தை மூடி நிரப்புகின்றனவாயென காண்பது இன்னமும் மீந்துள்ளது. ஆனால் நாம் மேலும் தொடருமுன் கிறிஸ்துவின் பிறப்பு தேதி மற்றும் இறப்பு தேதியைப் பொறுத்தவரை ஓர் கருத்து வேறுபாடு உள்ளதை கவனிப்பது நல்லது; கி.பி. 1-ல் அவர் பிறக்கவில்லை; ஏனெனில் ஏரோதின் மரணத்துக்குமுன்னர் இயேசு பிறந்தார், (மத். 2:1-23). ஏரோது கி.மு. 4-ன் பிற்பகுதியிலே மரித்தான். கிறிஸ்து ஞானஸ்நானப் பட்டபோது அவர் சுமார் முப்பது வயதுடையவராயிருந்தார் (லூக். 3:23). இது அவருடைய ஞானஸ்நானத்தின் தேதியை கி.பி. 26-ன் பிற்பகுதிக்குக் கொண்டுவரும்; அவருடைய வெளிப்படையான தூதுப்பணி மூன்றரை வருடங்களுக்கு நீட்சித்தால், அவரை கி.பி. 30 இளவேனிற்காலம்வரை எடுத்துச் செல்லும். அப்போது பஸ்கா பண்டிகையின் வேளையில் அவர் சிலுவையில் அறையப்பட்டார். அது அவ்வருடம் வெள்ளிக் கிழமையில் விழுந்தது. அதாவது ஏப்ரல் 7-ல்! அப்படியானால் அவருடைய வெற்றிப் பவனிப்பிரவேசம் அதன் நேர் முந்தைய ஞாயிறான ஏப்ரல் 2, கி.பி. 30-ல் ஆகச்செய்கிறது.

இதுகாறும் நாம் ஜூலியன் அல்லது 365¼ நாட்கள் கொண்ட வானசாஸ்திர Astronomical வருடத்தின்மீது கணிப்பு செய்துள்ளோம்; ஆனால் வேறு வருடங்கள் உள்ளன. 365 வருடங்கள் கொண்ட சூரிய மண்டல Solar வருடமுள்ளது; 360 வருடங்கள் கொண்ட நாள்கட்டி வருடமுள்ளது; 354 நாட்கள் கொண்ட சந்திர மண்டல Lunar வருடமுமுள்ளது. இவ்வாறான வருடங்ளில் வேதவார்த்தைகளில் எதை தேவன் பயன்படுத்துகிறார்? ஆதி. 7:11-24, 8:3-4-ல் பெருவெள்ள Flood விவரத்தொகுப்பில் நாம் பதிலைக் காண்கிறோம். அங்கே இரண்டாம் மாதத்தின் 17-வது நாளிலிருந்து ஏழாவது மாதத்தின் 17-வது நாள்வரையில் உள்ள 5 மாதங்கள் 150 நாட்களாக கணக்கீடு செய்யப்படுகிறது; அல்லது ஒரு மாதத்துக்கு 30 நாட்கள் அல்லது ஒரு வருடத்துக்கு 360 நாட்கள்! ஆகையால் தீர்க்கதரிசன காலவரிசைப் பட்டியில் Prophetical Chronology 360 நாட்கள் கொண்ட ஓர் நாள்காட்டி வருடத்தை நாம் பயன்படுத்தவுள்ளோம். தீர்க்கதரிசன 'காலவேளையுடைய' தேவனுடைய அளவீடுகள் ஒரு வருடத்துக்கு ஒரு நாள் மற்றும் ஒரு மாதத்துக்கு முப்பது நாட்கள் என கண்டுபிடித்தபடியே, தானியேலுடைய எழுபது வாரங்களுக்கு நாம் அவைகளை பிரயோகிப்போமாக.

சாதாரண காலவரிசைப் பட்டியின்படி கி.மு. 445 முதல் கி.பி. 30 உட்பட முடியவுள்ள 475 வருடங்கள் ஒவ்வொன்றும் 365 வருடங்கள் கொண்ட சூரியமண்டல வருடங்களாகும். இவ்விரு தேதிகளிடையேயுள்ள வருடங்களை (444+29 வருடங்கள்=473) எண்ணி கணக்கிட்டு மற்றுமாக கி.மு. 1 மற்றும் கி.பி. 1ஐ 2 வருடங்களாகக் கணக்கிட்டு சேர்த்தால் நமக்கு 473 சூரியமண்டல வருடங்கள் கிட்டுகின்றன. இதை 365 (ஓர் சூரிய மண்டல வருடத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கைகள்) கொண்டு பெருக்கினால் 172645 நாட்கள் கிட்டுகின்றன. அத்தோடு மார்ச் 14 முதல் டிசம்பர் 31 உட்பட முடியவுள்ள 293 நாட்களின் எண்ணிக்கையான நாட்களையும் கி.பி. 30 ஜனுவரி 1 முதல் ஏப்ரல் 2 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கையான 92 நாட்களையும் சேர்த்து கூட்டினால் 172645+293+92 = 173030 நாட்கள் கிட்டுகின்றன. இவைகளை ஓர் தீர்க்கதரிசன வருடத்தின் நாட்களின் எண்ணிக்கையான 360 கொண்டு வகுத்தால் 14 நாட்கள் குறைவாகி 481 வருடங்கள

கிட்டுகின்றன அல்லது 2 வருடங்கள் 14 நாட்கள் குறைவாகி 483 வருடங்கள் கிட்டுகின்றன. அதாவது 69 வாரங்களின் வருட நாட்களுடைய எண்ணிக்கை!

இக்கணக்கீட்டு முறை சர் ராபர்ட் ஆண்டர்சனின் கணக்கீட்டு முறையோடு ஒத்துப் போகிறதில்லை; இயேசுவின் பெற்றிப்பவனி பிரவேசிப்பு கி.பி. 32, ஏப்ரல் 6 ஞாயிறன்று நடந்தது என Sir Robert Anderson வாதாடுகிறார். திபேரியு சீஸர்-ன் ஆட்சியின் பதினைந்தாவது ஆண்டில் யோவான் ஸ்நாபகன் தனது தூதுப்பணியை தொடங்கினான் எனும் லூக்காவின் கூற்றுரை (லூக். 3:1-3)யின்மீது அவர் (சர் ராபர்ட்) தேதியை திட்டப்படுத்துகிறார். அது வேதம்சாரா சரிதை சரியென்றால் கி.பி. 29 ஆயிற்று. இப்போதும் யோவானது தூதுப்பணியின் முதலாம் வருடத்தின்போது இயேசு ஞானஸ்நானப் பட்டதினால் அவர் கி.பி. 29-ல் ஞானஸ்நானப்பட்டிருக்க வேண்டும். சர். ராபர்ட் இயேசுவின் திருப்பணியை மூன்று வருடங்களுக்கு மட்டுப்படுத்தியவராய், வெற்றிப்பவனி பிரவேசிப்பின் தேதியை கி.பி. 32 ஏப்ரல் 6 ஞாயிற்றுக்கிழமைக்கு கொண்டு வைக்கிறார். இது இயேசு கி.மு. 4ல் பிறந்தார் எனும் இப்புத்தக ஆசிரியரது (கிளாரன்ஸ் லார்க்கின்) முந்தைய கூற்றுரைக்கு முரண்படுகிறது. ஏனெனில் இயேசு ஏரோதின் மரணத்துக்கு முன்னர் பிறந்தார் (மத் 2:1-23) என்றும் ஏரோது அவ்வருடத்தின் பிந்திய பாகத்தில் இறந்தார் என்றும் நிதானித்தார். இப்போதும் இயேசு ஞானஸ்நானம் எடுத்தபோது (லூக். 3:23) சுமார் முப்பது வயதாயிருந்தார் என லூக்கா நமக்குக் கூறுகிறார். கி.மு. 4-ல் அவர் பிறந்திருந்தால், கி.பி. 29ல் யோவான் ஸ்நாபகன் தனது தூதுப்பணியை தொடங்கியிருந்தால் இயேசு ஞானஸ்நானமெடுத்தபோது 33 வருட வயதுடையவரா யிருந்திருப்பார். அவரது தூதுப்பணி 3½ வருடங்கள் நீட்சித்தால், அவர் சிலுவையில் அறையப்பட்டபோது அவர் 36½ வருட வயதுடையவராயிருந்தார். எல்லாமே ஏரோது கி.மு. 4-ல் இறந்தாரா அல்லது திபேரியு சீஸர் தனது ஆட்சியை கி.பி. 14-ல் தொடங்கினாரா என்பதில் தொக்கி நிற்கிறது.

முதலிலுள்ள இவ்வெழுத்தாளரது கணக்கீடுகள் 483 வருடங்களுக்கு 2 வருடங்கள் 14 நாட்கள் குறைவாயுள்ளது; அதே வேளையில் இரண்டாவதுள்ள சர். ராபர்ட் ஆண்டர்சன் கணக்கீடுகள் 1 வருடம் 5 நாட்கள் குறைவாயுள்ளது.

இக்குறைபாட்டை எவ்வாறு விளக்கப்போகிறோம்? வேதம் சாரா கால வரிசைப்பட்டியில் ஒன்று அல்லது இரண்டு வருடங்களது பிழை Error கி.மு. *445* மற்றும் கி.பி.*30* அல்லது *32*-க்கிடையில் உள்ளது என விளக்குவது ஒன்றே நமக்குள்ள ஒரே வழி! இத்தகைய பிழை கண்டுபிடிக்கப்படுமானால், மேலும் அப்பிழை ஒன்று அல்லது இரண்டு வருடத்துக்குக் கூடுதலாக வந்து சேருமானால் அது கணக்கீடுகளை தவறாக்கிப் போடுவதில்லை; மாறாக 7 வாரங்கள் மற்றம் 62 வாரங்களிடையேயான ஓர் கால நிரப்பிடம் Time Space உள்ளது என்னும் ஊகக் கருத்தின்மீது அது உடனடி தாராளமாக விளக்கம் காட்டப்படக்கூடும். மேற்கூறிய இரு கணக்கீடுகளின் எதிலுமுள்ள காலத்து வித்தியாசம் மிக சிறியதாயுள்ளதால் '*69* வாரங்கள்' கி.மு. *445*-ன் Artaxerxes Longimanus சுடைய அரசாணைக்கும், எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிப்பவனி பிரவேசிப்புக்கும் இடையேயுள்ள கால வேளையை பரந்து மூடுகிறது என்கிறதான ஓர் கண்கூடான தெளிவுக்கு பொருட்டாவதில்லை.

கிறிஸ்துவின் நாட்களது தீர்க்கதரிசன மாணாக்கர் விழித்திருந்தால் மற்றும் எழுபது வாரங்களது தானியேலது தீரக்கதரிசனத்தைப் புரிந்திருந்தால் அவர்கள் அவருக்காக எதிர் நோக்கியிருந்திருப்பார்கள்; அவர் மேசியாவா அல்லவாவென்று ஓர் நிச்சயப்பாட்டுடன் அறிந்திருப்பார்கள். தேவனுடைய வார்த்தையிலுள்ள தீர்க்கதரிசன வாசக வார்த்தைகளை இலேசாக எடுத்துக்கொள்ளும் இன்றைய நாட்களின் போதகர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இவையாவும் எத்தனை ஓர் கடிந்துரையா யுள்ளது! யூதர்கள் அவருடைய முதல் வருகையின்போது அவரை ஏற்றுக்கொள்ள எத்துணை ஆயத்தமற்றிருந்தனரோ அதேப்போன்று கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் இவர்களை அவரை ஏற்றுக்கொள்ள ஆயத்தமற்றவர்களா யிருக்கின்றதைக் காணும்! சணல் வஸ்திரம் தரித்தவரும் ஆற்றின் தண்ணீர்களின்மேல் நிற்கிறவருமான புருஷன் தானியேலிடம் 'துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கத்தில் ஒருவனும் உணரான்; ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள்' என்பதாய் சொன்ன விதமாக இருக்கும், தானி. 12:10. அதாவது வேதாகமப்படியும் ஆவிக்குரியபடியும் ஞானவான்கள்!

மாபெரும் இடைமுறிப்பு நுழைவு காலம்
The Great Parenthesis

70 வாரங்களில் 69 எருசலேமுக்குள் கிறிஸ்துவுடைய வெற்றிப் பவனி ஏகுகையோடு ஓடித்தீர்ந்ததை காண்பித்தபின், அடுத்த கேள்வி யாதெனில் 69-வது வாரத்தை 70-வது வாரம் உடனடி பின்தொடருகிறதா? அல்லது அவைகளிடையே ஓர் கால நிரப்பிடம் உள்ளதா? தற்போதைய கால சகாப்தம் முழுவதையும் உட்படுத்துகின்ற ஓர் கால நிரப்பிடம் உள்ளது. 'கால நிரப்பிடம்' இல்லையென வாதாடுவோரும் உளர். 69-வது வாரம் கிறிஸ்துவின் பிறப்பில் முடிவடைந்தது என்றும் 70-வதுடைய மத்திபம் Middle *அவருடைய சிலுவையறைதலில், அதாவது அவர் சங்கரிக்கப்பட்டபோது முடிவடைந்தது என்றும், 70-ஆவதில் மீந்திருப்பு இப்போது நிறைவேறுதலின் செயலாக்கத்தில் உள்ளது என்றும் வாதாடுவோரில் சிலர் உரிமைகோருகின்றனர். இதன் தவறுகை 70-வது வாரத்தை இரு சம அளவற்ற பகுதிகளாக இது பிரிக்கிறதில் காணப்படுகிறது. ஒன்று கிறிஸ்துவின் பிறப்புமுதல் அவரது சிலுவயிலறையப்படுகை வரையான 33½ வருடங்களும், மற்றது 1900 வருடங்களுக்கு மேலானதாகவும் பிரிப்புகை! அதேபோது 69 வாரங்களின் ஒவ்வொரு வாரத்தையும் அதாவது 7 வருடங்களே கொண்ட வாரத்தையும்விட 70-வது வாரம் ஒருபோதும் கூடுதல் நீட்சியாயிருக்க முடியாது என்பதால் இது சாத்தியமாகாது!*

69-வது மற்றும் 70-வது வாரங்களிடையே கால நிரப்பிடம் இருப்பதில்லையென வாதாடுவோர் இவ்விதம் இரண்டுக்குமிடையே ஓர் காலியிடம் நுழைப்பது மற்ற வேதாகமப் பகுதிகளுக்கு எதிரிடையாயிருக்கும் என உறுதிப்படுத்துகின்றனர். பாபிலோனிய 70 வருட சிறைப்பிடிப்பை சுட்டுக் குறிப்பிட்டு, அது சரியாக எந்தவோர் இடைமுறிவுமின்றி நீட்சித்தது என்கின்றனர். மேலும் ஆபிரகாமுடைய சந்ததியார் எகிப்தில் 430 வருடங்களின் இடைத்தங்கலையும் so journeying *(ஆதி. 15:13, யாத். 12:40, கலா. 3:17) அது அப்படியே நாள் பிசகாமல் தொடர்ச்சியாய் நிறைவேறியதையும், அதுபோல இஸ்ரவேல் மக்களின் 40 வருட வனாந்தர அலைச்சல் (எண். 14:34) எழுத்தின்படியே ஓர் முறிவில்லாமல் நிறைவேறியதையும் குறிப்பிட்டு வாதிடு*

கின்றனர். ஆனால் அந்தத் தீர்க்கதரிசனங்களில் கால பிரிப்புகள் Time Division இருக்கவில்லை என்பதை மறந்துவிட்டனர். அதே வேளையில் எழுபது வாரங்களின் தீர்க்கதரிசனத்தில் மூன்று பிரிப்புகள் (7+62+1) உள்ளன; ஒவ்வொரு காலப்பிரிவுக்கும் உரித்தான பிரத்தியேகப்பட்ட பணி செய்வதற்குள்ளது. ஒவ்வொரு காலப்பிரிவும் தனிப்படுத்தி குறிப்பிடப்பட்டுள்ள உண்மையானது தேவனுடைய மனதில் இவைகளிடையே ஓர் முறிப்பு Break, ஓர் பிளவு gap என்றில்லாவிட்டாலும், இருந்தாக வேண்டுமென்றுள்ளதற்கு ஓர் அறிவிப்பாக, நேரடி நிரூபண மில்லாவிட்டாலும், அமைந்துள்ளது.

இது உண்மையெனில் 7 வாரங்கள் மற்றும் 62 வாரங்களுக்கிடையேயுள்ள பிளவை Gap என்ன நிரப்பியது என நீ கேட்கலாம். 7 வாரங்கள் மற்றும் 62 வாரங்களுக்கிடையே என்ன சம்பவித்தது என்பதுபற்றி எந்தவொரு கூற்றுரையும் இல்லாதிருக்கையில், அதேவேளையில் 69-வது வாரம் மற்றும் 70-வது வாரத்துக்கிடையே (கிறிஸ்துவின் சிலுவையறைவு மற்றும் எருசலேமின் அழிவு) என்ன சம்பவித்தது என்பதைப்பற்றி கூற்றுரை உள்ளதால் அவை தனிப்படுத்தி குறிப்பிடப் பட்டுள்ளதான உண்மையிலிருந்து தெளிவாகிறது. அப்படியானால் ஓர் கால நிரப்பிடத்தைக் குறிப்பிடுகிற ஏதாமோர் நிகழ்ச்சிக்கு நேராக '7 வாரங்கள்' நடத்துகிறதாகிறது. அது ஒருகால் ஒரு நாளாய் அல்லது ஒருவருடம் மட்டுமே இருந்திருக்கலாம். இப்போதும் 7 வாரங்கள் அல்லது 49 வருடங்கள் தேவாலயத்தை திரும்பக் கட்டி ஆலயத் தொழுகை முறைமையை மீள நிறுவுவதற்கு எடுத்திருந்த காலத்தை கொடுக்கின்றன. அது கி.மு. 445-ல் அர்தசஷ்டாவுடைய அரசாணைக்கும், கி.மு. 396-ல் எபிரேய தீர்க்கதரிசனம் மற்றும் பழைய ஏற்பாட்டு வேதாகம சத்திய வார்த்தைகளுடைய முடிவுக்கும் இடையிலான துல்லிப காலத்தை 49 வருடங்கள் நீண்டு நிரப்புகின்றன. அப்படியானால் 62 வாரங்களை அமைதியின் காலத்துக்கு விட்டுவிடுகிறது. அதாவது கி.மு. 396-ல் பழைய ஏற்பாட்டின் முடிவிலிருந்து எருசலேமுக்குள் கிறிஸ்துவின் வெற்றிப்பவனி வருகையான கி.பி. 30 வரையுள்ள அமைதியின் காலம்!

69-வது மற்றும் 70-வது வாரத்தினிடையே என்னென்ன

நடக்கவுள்ளன என்பதை வசனம் 26 கூறுகிறது. முதலாவது, பிரபுவாகிய மேசியா (கிறிஸ்து) சங்கரிக்கப்பட வேண்டும். இரண்டாவது, எருசலேம் மற்றும் தேவாலயம் ரோமர்களால் அழிக்கப்படவேண்டியது. மூன்றாவது, அவைகளது அழிவுக்குப் பின்பு யுத்தங்கள் முதலியவற்றால் நீண்டு நிரப்பப்பட ஓர் நீண்ட காலம் இருக்கப்போகிறது. இந்த கடைசிக் காலக்கட்டத்தைக் குறித்தே இயேசு சொன்னார்: ‘புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் உருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்’ லூக். 21:24. புறஜாதியாரின் காலம் இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறபடியால் வசனம் 26 (தானி. 9:26) 69-வதுடைய உடனடி பின்தொடருகின்ற 70-வது வாரத்தி னுடைய ஓர் விவரிப்புரையாகிட முடியாது. ஏனெனில் இது இப்பொழுதே 1900 வருடங்களுக்குமேல் நீட்சியான ஒரு காலத்தை நீட்டி மூடுகிறதாயுள்ளது; அதேபோது 70-வது வாரம் ஏழு வருடங்களை மட்டுமே நிரப்பி மூடவுள்ளது.

69-வது வாரம் முடிவுற்று 70-வது வாரம் இயேசு யோர்தானில் ஞானஸ்நானம் எடுக்கத் தோன்றியபோதே ஆரம்பமானது என்றும், அவரது வெளிப்படையான தூதுப் பணியின் 3½ வருடங்கள் 70-வது வாரத்தின் முதல் பாதி என்றும், அவருடைய சிலுவையிலறையப்படுகை வாரத்தின் நடுமத்திபம், அப்பொழுது தமது சிலுவை மரணத்தால் அவர் பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணினார் என்றும். அதாவது அவர் சகல இரத்தத்தாலான பலிசெலுத்தலையும் நிறுத்தப்பண்ணினார் என அது அர்த்தமளிக்கிறதாயும் வாதிடுவோர் தேவாலயத்தின் இரத்தத்துடைய பலி செலுத்தல்கள் சிலுவையறையப் படலின்போது நின்றுவிட வில்லை அல்லது கிறிஸ்துவால் அவை ஒழிக்கப்படவில்லை என்பதை மறந்துவிடுகின்றனர். அவை 40 வருடங்கள் பிற்பாடு ரோமரால் தேவாலயம் அழிக்கப் பட்டுப்போனதுவரை நின்றிடவில்லை Cease.

ஒலிவமலை போதனையுரை
The Olivet Discourse

மத். 24:1-35, மாற். 13:1-31, லூக். 21:5-33

இயேசு தமது ஒலிவமலை போதனையுரையை நிகழ்த்திய போது 69 வாரங்கள் ஏற்கனவே அவருக்குப் பின்னால் Behind

போய்விட்டன. அவர் சங்கரிக்கப்படப்போகிறதற்கு, அதாவது தானி. 9:26-ன் 'பின்பு' After-க்கு இரண்டு நாட்களுக்குள்ளாக Within Two Days அவர் நின்றிருந்தார். எருசலேமின் அழிவை அப்போதனையுரையில் முன்னறிவித்தார்; அத்தோடு, புறஜாதியாரின் காலங்கள் நிறைவேறுகின்றவரை (அது இன்னமும் ஓடிக்கொண்டிருக்கிறது) எருசலேம் புறஜாதியாரின் காலின்கீழ் எவ்விதம் மிதிக்கப்படவுள்ளது என்றும், பின்பு அவர் திரும்பவருவார் என்றும் முன்னுரைத்தபடியே 70-வது வாரம் இந்த காலசகாப்தம் முடிவடையும்வரை தோன்ற முடியாது என நாம் காண்கிறோம். ஆகவே, 69-வது மற்றும் 70-வது வாரத்துக்கிடையே 2000 அல்லது அதற்கும் கூடுதலான வருடங்களின் கால நிரப்பிடம் Gap உள்ளது எனவும் காண்கிறோம். அப்படியானால் ஒலிவ மலை போதனையுரை தானி. 9:26-27ன் பொருள் விளக்கத்துக்கு Interpretation திறவுகோலாயிருக்கிறது Key.

ஆனால், எருசலேமின் அழிவுக்கு இருபத்தாறு வருடங்களுக்குப் பிற்பாடு கி.மு. 96-ல் எழுதப்பட்ட வெளிப்படுத்தல் புத்தகத்தில் இன்னமும் கூடுதலாக உறுதிப் படுத்துகிற வலிமையான சான்று நமக்குள்ளது. அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப்பட்டிருக்கையில் வெளிப்படுதல் புத்தகம் இயேசு கிறிஸ்துவுடைய வெளிப்படுத்துகை (வெளி. 1:1) என்பதை நாம் மறக்கலாகாது. ஆகவே அவருடைய பரத்துக்கேறுகைக்குப் பிற்பாடு அவரால் அளிக்கப்பட்ட ஓர் வெளிப்படுத்துகையாக உள்ளது. அது அவருடைய ஒலிவமலை போதனையுரையுடைய உறுதிப் படுத்துகை மட்டுமன்றி, தானியேலது எழுபதாது வாரத்தில் நடைபெறப் போகின்றதின் விவரணங்களையும் கொடுக்கிறது. காலவரிசைப்பட்டி ஒழுங்கில் எழுதப்பட்டதே வெளிப்படுத்தல் புத்தகமாகும். அதிகாரங்கள் 2 மற்றும் 3-ல் 'சபைகளுக்கான தூதுகளில்' இப்போதைய காலசகாத்தத்தின்போது கிறிஸ்தவ சபையுடைய ஓர் தீர்க்கதரிசன உருவரை Outline உள்ளது. அதிகாரம் 4-ல் சபை சட்டென பிடுங்கி எடுத்துக்கொள்ளப் படுகிறது. திறக்கப்பட்ட வாசல் (வெளி. 4:1) வழியாக பரலோகுக்குள் கடந்து செல்லுகிறது.

இதுவே 1தெச. 4:13-18ல் விவரிக்கப்பட்டுள்ள

சபையுடைய ‘பிறிதிடம் பரவச உய்த்தல்’ Rapture ஆகும். வெளி. 5-ஆம் அதிகாரம் தொடங்கி 19-ஆம் அதிகாரம் உட்படவரை தானியேலது எழுபதாவது வாரம் முழுமையுடைய ஓர் விவரணம் நமக்குள்ளது. இந்த காலசகாத்தத்தின் கடைசிகால வேளையை இது நிரப்பி மூடுகிறது.

இதிலிருந்து தானியேலது எழுபதாவது வாரம் (தானி. 9:24-27) இயேசுவின் ‘ஒலிவமலை போதனையுரை’ (மத். 24:1-35) மற்றும் யோவானது ‘முத்திரைகள், எக்காளங்கள் மற்றும் கலசங்கள்’ (வெளி 6:1 முதல் 18:24 வரை) ஒரே Same காலக்கட்டத்தை பரப்பி மூடுகிறது எனப் பார்க்கிறோம். மற்றுமல்ல அவை யூதீகமயமானவை Jewish. கிறிஸ்தவ சபைக்கு எந்தவித தொடர்பும் அவைகளுக்கு இல்லை.

தானியேல் தனது ‘எழுபதாவது வாரத்தில்’ உருமாதிரி Out Line வரைகிறார். இயேசு தனது ஒலிவமலை பேருரையில் வரைபடத்தை முதல் நிலை உருவரையாக அமைவிக்கிறார். Roughs in. யோவான் வெளிப்படுத்தல் புத்தகத்தில் விவரங்களை நிரப்பி பூர்த்தியாக்கினார். ஒரே வசனத்தில் தானியேல் எதை சுருக்கி அடக்கினாரோ அதை யோவான் பதிமூன்று அதிகாரங்களில் விரிவடையச் செய்தார்.

தானியேலின் எழுபதாவது வாரம், கிறிஸ்துவின் ஒலிவமலை பேருரை மற்றும் வெளிப்படுத்தல் புத்தகம் ஒப்பிடப்படுதல்

தானியேலின் எழுபதாவது வாரம்
Daniel’s Seventieth Week

தானி. 9:27

முதல் பாதி *(3 ½ வருடங்கள்)* “வரப்போகிற பிரபு” (அந்திக்கிறிஸ்து) யூதர்களோடு ஓர் 7 வருட உடன்படிக்கை	இடையிடம் உடன்படிக்கை முறிக்கப்பட்டது ——— பலியும் காணிக்கையும் நிறுத்தப்படல் (ஒழியப் பண்ணல்)	கடைசி பாதி *(3 ½ வருடங்கள்)* பாழ்படுத்துதல்களின் ஓர் காலகட்டம்

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் திருவருகை
The Second Advent
கிறிஸ்துவின் ஒலிவமலை பேருரை
Christ's Olivet Discourse

(மத். 24:1-31)

முதல்பாதி (3½ வருடங்கள்) யுத்தங்கள் பஞ்சங்கள் கொள்ளை நோய்கள் பூமியதிர்ச்சிகள் கள்ளக்கிறிஸ்துக்கள் இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம் மத். 24:4-14.	இடையிடம் தானியேலால் உரைக்கப்பட்ட பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணுகை மத். 24:15-19.	கடைசி பாதி (3½ வருடங்கள்) இது வரை இராத மிகுந்த உபத்திரவம் உண்டாக்கும் காலக்கட்டம் மத். 24: 20-22.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் திருவருகை

மத். 24:29-31

வெளிப்படுத்தல் புத்தகம்
The Book of Revelation

வெளி. 5: 1-19:21.

முதல்பாதி (3½ வருடங்கள்) முத்திரைகள் மற்றும் எக்காளங்கள் வெளி. 5:1-11-19	இடையிடம் பெரிய வலுசர்ப்பம் பூமியிலே விழத் தள்ளப்படல் மற்றும் அந்திக்கிறிஸ்துவினுள் அவதாரம் எடுத்தல் வெளி. 12:1-17	கடைசி பாதி (3½ வருடங்கள்) கலசங்கள் ———— மகா உபத்திரவ காலம் வெளி.13:1-18:24.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் திருவருகை

வெளி. 19:1-21

புறஜாதிகளுடைய காலங்களை Times of the Gentiles தானியேல் புத்தகம் எடுத்து ஆளுகிறது என்பதை நாம் மறக்கக்கூடாது. ஆகவே இதன் காட்சிகள் Visions புறஜாதிக்

காலங்களின் Gentile Times முழு வீச்சையும் Full Sweep பரப்பிமூட வேண்டும் Cover. நேபுகாத்நேச்சாரின் சொப்பன காட்சியை Dream Vision எடுத்துக் கொள்வோம். புறஜாதியாரின் காலம் முழுமையையும் நீட்டிப் பரப்புகிறது. அவன் கண்ட பொன்தலையுடைய சொரூபம் Golden Headed Image கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின் போது தமது கல் ராஜ்யத்தை நிறுவுகின்ற வரை அழிக்கப்பட்டுப் போவதில்லை Not to be Destroyed. தானியேலின் மிருகக்காட்சிகளும் Beast Visions, நம்மை முடிவு End வரை எடுத்துச் செல்லுகிறது. அவ்வேளை சின்னக்கொம்பு (அந்திக்கிறிஸ்து) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அழிக்கப்படுகிறது. எழுபது வாரங்களின் காட்சி இவைகளுக்கு ஓர் விதிவிலக்காயுள்ளதா? கிறிஸ்துவின் முதல் வருகை வரைதான் அது நீட்சிக்கிறதா? எருசலேமின் அழிவோடு அது முடிவடைகிறதா? புறஜாதிகளின் காலங்களுடைய முழு காலகட்டத்தையும் Whole Period அதுவும் பரவி வியாபிக்க வேண்டும் என்பது மற்றவைகளைப்போல பின் தொடருவதில்லையா? (யூதர்களது) மீறுதல்கள் முடிவுக்கு வருகிற (தவிர்க்கப்படுகிற) வரைக்கும் தானியேலுடைய மக்களுக்கு (யூதர்கள்) என்னென்ன நடக்கப் போகின்றது என்பதை அவருக்கு அறிவிப்பதற்காக ஏற்பட்டிருந்த காட்சியின் நோக்கத்தோடு உள்ள இசைவு இணைப்பில் இதுவும் மற்றவைகளைப்போல தொடர வேண்டுவதில்லையா? அவர்களது (யூதர்கள்) மீறுதல்கள் இன்னமும் முடிவடைய வில்லை; அப்படியில்லாதிருந்தால் அவர்கள் ஏன் உலகம் பூராவும் சிதறிக்கிடக்கின்றனர்? புறஜாதிகளால் எருசலேம் இன்னமும் ஏன் மிதியுண்டு கிடக்கிறது?

இதிலிருந்து எழுபது வாரங்கள் தீர்க்கமாக Distinctively யூதீகமே Jewish எனப்பார்க்கலாம். அவை புறஜாதிகளின் காலங்களின் முழு செல்வழிப்போக்கிலிருந்தும் பிரித்து வேறாக்கப்பட்டுள்ளன Cut Out. கிறிஸ்தவ சபையோடு அவற்றிற்கு எந்தவித தொடர்போ, பயன்பாடோ கிடையாது. பழைய ஏற்பாட்டில் கிறிஸ்தவ சபை வெளிப்படுத்தப்படவில்லை என்பதை நாம் மறக்கலாகாது. இதன் காரணமாகத்தான் தானியேல் கிறிஸ்துவின் சங்கரிக்கப்படுகை Cutting Off மற்றும் எருசலேமின் அழிவிலிருந்து (வச. 9:26) அந்திக் கிறிஸ்துவிலான

ஓர் உடன்படிக்கையின் உறுதியாக்குகைக்கு தாவிக் குதிக்கிறார். அது (உடன்படிக்கை) இன்னமும் எதிர்காலத்தியது. சிலுவையறையப்படுகை மற்றும் வரப்போகிற பிரபு (அந்திக்கிறிஸ்து)வின் வெளிப்படுகை இரண்டுக்கும் இடையே வருகிற கிறிஸ்தவ சபைக்கு தானியேலது மக்கள் மற்றும் நகரம் பற்றிய (சம்பந்தப்பட்ட) ஓர் தீர்க்கதரிசனத்தில் இடமளிக்கப் பட்டிருக்கவில்லை என்பதான மெய்மை ஓர் இடைவெளி Gap அல்லது நுழைவு இடைமுறிப்பு Parenthesis 69-வது மற்றும் 70-வது வாரத்துக்கிடையே இருக்க வேண்டுவதை தவிர்க்க முடியாததாக்குகிறது. சபை காலசகாப்தம் எந்த மட்டுக்கு நீட்சிக்கிறதோ அந்த நீட்சியளவு இந்த இடைவெளி Gap அகலங்கொண்டிருக்கும்.

வேதசத்தியங்களின் எழுபது வாரங்கள்
The Seventy Weeks of Scripture

வேதசத்தியங்களில் ஒரு 'எழுபது வார' காலகட்டம் மட்டுமன்றி நான்கு 'எழுபது வார' கால கட்டங்கள் உள்ளன என்றும் இந்நான்கும் ஆபிரகாமின் பிறப்போடு தொடங்கி ஒன்றையொன்று இடைமுறிப்பின்றி கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையில் தொடர்கிறது என்பது மிக சுவாரசியமாயுள்ளதோடு வேதமாணாக்கருக்கும் பொதுவாக அறியப்படாததாக உள்ளது. இவை நான்கும் யூதர்களோடு மட்டும் தொடர்புடையவை மட்டுமன்றி அத்தேசத்தினுடைய தீர்க்கதரிசன காலவரிசைப்பட்டியையும் நமக்குக் கொடுக்கிறது. மேலும், வேத எழுத்துக்களில் தேவனுடைய பிரீதியில் யூதர்கள் இருக்கின்ற காலநேரத்தை மட்டுமே அவர் கணக்கிலெடுக்கிறார் என்பதையும் அவை நிரூபிக்கின்றன. ஏனெனில், புறஜாதி களுடைய கால நீட்சியையோ அல்லது சபைக்காலத்தின் நீட்சியையோ பற்றி வேதத்தில் வெளிப்பாடு ஏதும் இல்லை; அப்படியான வெளிப்பாடுகள் இருந்திருந்தால் கர்த்தருடைய வருகையின் கால நேரத்தை நாம் கண்டுகொண்டிருக்க முடியும்.

முதலாவது எழுபது வாரங்கள் The First Seventy Weeks

*ஆதி. 12:1-4*ல் நாம் வாசிக்கிறதாவது: ஆபிரகாம் வாக்குத் தத்தத்தைப் பெற்றபோது அவன் எழுபத்தைந்து வயதுள்ளவனாக இருந்தான். *கலா. 3:17*-ல் 430 வருடங்களுக்கு பிற்பாடு

கொடுக்கப்பட்ட பிரமாணத்தால் (சீனாய் மலை மீது கொடுக்கப்பட்ட பிரமாணம் Law) ‘உடன்படிக்கை’ அல்லது ‘வாக்குத்தத்தம்’ தள்ளப்பட்டு இல்லாமல் ஆக்கப்படமாட்டாது Annulled என்று பவுல் நமக்குக் கூறுகிறார். இது ஆபிரகாமின் பிறப்பு முதல் யாத்திராகமம் Exodus வரையுள்ள கால நீட்சியை *75 + 430 = 505* வருடங்களாக்கும். ஆனால், இக்காலத்தின் போது இஸ்மவேலது கருக்கொள்ளுதல் Conception ஆதி *16:16* தொடங்கி ஈசாக்கின் பிறப்பு (ஆதி. *21:5*) வரையான *15* வருடங்களின் போது இஸ்மவேல் தகாமுறை Usurper உரிமையாளனாயிருந்தான். ஆகவே, *505* வருடங்களில் *15* வருடங்களை கழிக்கும்போது நமக்கு மீதியான *490* வருடங்கள் அல்லது ‘முதலாவது எழுபது வாரங்களின்’ வருடங்கள் கிட்டுகின்றது. இது கி.மு. *2111*- ஆபிரகாமின் பிறப்பிலிருந்து கி.மு. *1606* - யாத்திராகமம் Exodus வரை ஓடுகிறது. இந்த தேதிகள் நமது வேதாகமங்களில் கொடுக்கப்பட்டுள்ள Archbishop Ussher-ருடையவைகளாயில்லை. அதேபோது அத்தேதிகள் ஏறத்தாழ சரியானவை மட்டுமேயாகையால், இந்நான்கு எழுபதுகளை Seventies அடிப்படையாய் கொண்டு கிறிஸ்துவிலிருந்து பின்னோக்கிக் கணக்கிடுதல் மூலம் மேலே குறிப்பிட்ட தேதிகள் சரியென உறுதிப்படுத்தப்பட்டுள்ளன எனப்பார்க்கின்றோம்.

இரண்டாவது எழுபது வாரங்கள்
The Second Seventy Weeks

யாத்திராகம புறப்பாட்டிலிருந்து சாலோமோனது ஆளுகையின் நான்காவது வருடம் வரை *480* வருடங்களாயின என்று Iராஜா *6:1*- ல் சொல்லப்படுகிறது. அப்பொழுது அவன் தேவாலயத்தைக் கட்டத்தொடங்கினான். ஆனால், அப்போ. *13:18-21* -ல், வனாந்தரத்தில் *40* வருடங்களுக்கு இஸ்ரவேலது நடைப்பாங்குகளை வருத்தப்படுத்தினார் என்று பவுல் அந்தியோகுவில் வைத்து தனது பிரசங்கத்தில் நமக்குக் கூறுகிறார். பிற்பாடு, நாட்டின் பங்கீடுகைக்கு பின்பு சுமார் *450* வருடங்களுக்கு (சரியாக *448* வருடங்கள்) தேவன் அவர்களுக்கு சாமுவேல் தீர்க்கன் வரை நியாயாதிபதிகள் (யோசுவா மற்றும் அவரைக் கடந்து வாழ்ந்த மூப்பர்கள் Elders உட்படுத்தப் படுவதாக தோன்றுகிறது) கொடுத்தார். தீர்க்கன் சாமுவேல்

சுமார் 20 வருடங்கள் நியாயாதிபதியாக பணி செய்தார். பின்பு 40 வருடங்கள் சவுல் ராஜாவின் ஆளுகைத் தொடர்கிறது. பின்னர் தாவீது ராஜா 40 வருடங்கள். அத்துடன் சாலோமோனின் ஆட்சியின் நான்காவது வருடம் வரை. இவை புறப்பாடு தொடங்கி தேவாலயம் கட்டுகை வரை 591 வருடங்கள் ஆக்கும். இங்கே அப்போஸ்தலர் நடபடிகள் வாசகத்துக்கும் 1 ராஜாக்களிலுள்ள வாசகத்துக்குமிடையே 111 வருடங்களுடைய வித்தியாசமுள்ளது. எவ்வாறு இக்கணக்கை சரிக்கட்ட உள்ளோம்? மேற்கூறிய காலகட்டத்தே இஸ்ரவேல் மக்கள் தேவனோடு நட்பாதரவு இல்லாதுபோன காலத்தை கணக்கிலெடுக்காது விடுவதால் இக்கணக்கு சரிக்கட்டப் படுகிறது. புறப்பாடு தொடங்கி தேவாலயம் கட்டப்படுகைவரை இஸ்ரவேல் மக்கள் ஆறு முறை கீழ்க்கண்டவாறு அடிமைப் பட்ட வாழ்விலிருந்தனர்:

		வருடங்கள்
1. மெசப்பத்தோமியாவுக்கு	நியாயா 3:8	8
2. மோவாபியருக்கு	நியாயா. 3: 12-14	18
3. கானானியர்களுக்கு	நியாயா. 4:2-3	20
4. மீதியானியர்களுக்கு	நியாயா. 6:1	7
5. பெலிஸ்தியர் மற்றும் அம்மோனியருக்கு	நியாயா. 10:7-8	18
6. பெலிஸ்தியர்களுக்கு	நியாயா. 13:1	40
	மொத்தம்	111

அப்போ. நடபடிகளின்படி பவுலுடைய வாசகத்திலுள்ள 591 வருடங்களிலிருந்து 111 வருடங்களின் அடிமைப்பட்ட Servitude வாழ்வை கழிக்கவும். ராஜாக்களில் குறிப்பிடப்பட்ட காலமான 480 வருடங்கள் கிட்டும். ராஜாக்களின் எழுத்தாளர் புறப் பாட்டிலிருந்து தேவாலயம் கட்டுகை வரையான காலத்திலிருந்து அடிமை வாழ்வு வருடங்களை கழித்தார் எனத் தெரிகிறது. இவ்விதமாக இஸ்ரவேல் மக்கள் மற்ற தேசங்களுக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தை தேவன் கணக்கில் எடுக்கிறதில்லை எனும் மெய்மையை எழுத்தாளர் கண்டறிந்துள்ளார்.

தேவாலயம் 7 வருடங்கள் பிற்பாடு வரை (1 ராஜா. 6:38) முடிக்கப்படவில்லை என நாம் அறிவோம். வெண்கலத் தூண்களை வார்த்து, தேவாலய பணிக்கென வெண்கல பாத்திரங்களை உருவாக்க (1ராஜா. 7:13-51) மேலும் 3 வருடங்களைக் கூடுதலாக ஈராம் Hiram அதிகபட்சம் எடுத்திருந்தார் என்றால் 10 வருடங்கள் கூடவே 480-துடன் 10ஐ சேர்த்து புறப்பாடு முதல் தேவாலய பிரதிஷ்டை வரை (1 ராஜா. 8: 1-66) 490 வருடங்கள் கிட்டுகின்றன. அதாவது, யூத முறைமையின்படியான கால கணக்கீட்டின்படி! ஆனால், சரியாகவுள்ள காலம் 480 வருடங்களோடு அடிமைவாழ்வின் 111 வருடங்கள் சேர்த்து 591 வருடங்களாகின்றன. அது ஆலய பிரதிஷ்டையின் தேதியை கி.மு. 1005 ஆக்குகிறது.

புறஜாதியாரின் காலங்களுடைய நீட்சி
Length of the Times of the Gentiles

இங்கேதானே புறஜாதியாரின் காலங்களுடைய நீட்சியை கணக்கீடு செய்கின்ற தவறான முறையை திருத்துவது நலமாயிருக்கும். புறஜாதியாரின் காலங்களுடைய நீட்சிக்கான வெளிப்பாடு ஏதுமில்லை என ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது; அல்லது சபைக் காலத்துடையது வேத சத்தியங்களில் ஏதும் இல்லை; ஆனால் சிலர் உள்ளது என உரிமை சாதிக்கின்றனர்; அத்தகையோர் லேவி. 26:18-21; 24:28-ன்மீது தங்கள் உரிமையை அடிப்படையாக்குகின்றனர்; இங்கே மோசே முன்னறிவித்தது அதுவும் நான்குமுறை மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தது யாதெனில் இஸ்ரவேல் மக்கள் தேவனை கீழ்ப்படியாவிட்டால் அவர் அவர்களது பாவங்களுக்காக ஏழத்தனையாகத் தண்டிக்கப் போவதாக! இயேசு புறஜாதியாரின் காலங்களைக் குறித்து பேசியபோது அவர் இவ்வேழு மடங்குகளைக் குறிப்பீடு செய்தார். ஓர் மடங்கு என்பதால் அவர் அர்த்தப்படுத்தியது ஓர் தீர்க்கதரிசன காலம் என்றும் அது 360 நாட்கள் கொண்ட ஒரு வருடம் என்றும் உரிமைபாராட்டுகின்றனர்; ஒவ்வொரு நாள் ஒரு வருடத்துக்காக நிற்கிறதானால் ஒரு மடங்கு என்பது 360 வருடங்களுக்கு சமமாகின்றது. அப்படியானால் ஏழு மடங்கு என்பது 2520 வருடங்களுக்கு சரிசமமாகின்றது.

இது உண்மையானால் ஏழு மடங்குகள் புறஜாதியாரது காலங்களுடைய நீட்சியானால், பின்பு புறஜாதியாரின் காலங்கள் நீட்சி 2520 வருடங்களாகின்றது. அவை கி.மு.606-ல் ஆரம்பித்ததால் அவை கி.பி.1914-ல் ஓடித்தீர்ந்தன; அது உண்மையல்ல என அறிவோம்; ஏனேனில் புறஜாதியாரின் காலங்கள் இன்னமும் ஓடிக்கொண்டிருக்கின்றன; முடிவு காண்பதற்கில்லை; நாம் ஓர் மடங்கு 360 வருடங்களல்ல, மாறாக ஒரு வருடம் மட்டுமே என ஏற்கனவே பார்த்துள்ளோம்; அப்படியானால் ஏழு மடங்குகள் ஏழு வருடங்கள் மட்டுமே!

புறஜாதியாரின் காலங்கள் 2520 வருடங்கள் நீட்சியுடையதாக ஒப்புக்கொள்ள வேண்டுமெனில் அவை 365¼ நாட்களைக் கொண்ட வருடங்களாவதில்லை; மாறாக 360 நாட்கள் கொண்ட தீர்க்கதரிசன வருடங்களாகும். இப்போதும் 2520 வருடங்களை 365¼ நாட்கள் கொண்ட வருடத்திலிருந்து 360 நாட்களுக்கு தணிக்கை செய்தால் 2556¾ வருடங்கள் கிட்டும்; அது 2520-க்குமேல் 36¾ வருடங்கள். ஆகவே 365¼ வருடங்கள் கொண்ட 2520 வருடங்கள் கி.பி. 1914-ல் ஓடித் தீர்ந்தால் 360 நாட்கள் கொண்ட 2520 வருடங்கள் 36¾ வருடங்கள் முன்னமே ஓடித்தீரும் அல்லது கி.பி. 1878-ல்! புறஜாதியாரின் காலங்கள் இன்னமும் ஓடிக் கொண் டிருக்கிறபடியால் அவை 2520 வருடங்கள் நீட்சியைவிட அதிகமானது என நிரூபணமாகிறது. அவைகளது நீட்சி கொடுக்கப்படவில்லை என்பதும் உறுதி யாகிறது. உண்மையாதெனில் லேவி. 26:18-28-ன் ஏழு மடங்குகள் புறஜாதியாரது காலங்களோடு எந்தவித தொடர்பும் கொண்டிருப்பதில்லை; மாறாக நியாயாதிபதிகளது காலத்தே ஏற்பட்ட ஆறு அடிமைத்தனங்களுக்கும் மற்றும் ஏழாவதுள்ள பாபிலோனிய சிறைப்பிடிப்புக்கும் குறிப்பீடு செய்கின்றன என்பதேயாகும். தற்காலத்திய யூதர்களுடைய சிதறுகை கணக்கில் எடுக்கப்படுவதில்லை; ஏனெனில் இச்சிதறுகை ஓர் அடிமைத்தனமும் இல்லை; ஓர் சிறைப்பிடிப்பும் இல்லை. இதிலிருந்து இஸ்ரவேல் மக்கள் ஏற்கனவே ஏழுமடங்குகள் தண்டிக்கப்பட்டுள்ளனர் என்றும் லேவி. 26:18-28 நிறை வேற்றப்பட்டாயிற்று என்றும் பார்க்கிறோம்.

மூன்றாவது எழுபது வாரங்கள்
The Third Seventy Weeks

கி.மு. 1005 ஆலயப் பிரதிஷ்டை தொடங்கி கி.மு.445-ல் எருசலேமை மீளக் கட்டி மீட்டாக்கம் செய்வதற்கான அர்த்தசஷ்டா ஆணைப்பிறப்பிப்பு வரை 560 வருடங்கள் நமக்குக் கிட்டுகின்றன. ஆனால் 70 வருடங்களது பாபிலோனிய சிறைப்பிடிப்பை நாம் கழிக்கும்போது 490 வருடங்கள் கிடைக்கின்றன. அதுவே மூன்றாவது எழுபது வருடங்களாம். யூதர்கள் நட்பாதரவின்றி இருக்கும்போது அக்காலத்தை தேவன் தீர்க்கதரிசன ரீதியிலான கணக்கீட்டில் எடுக்கிறதில்லை என்கிற நமதுகருத்து முடிவை இது நிரூபிக்கிறது. எழுபது வாரங்கள் கி.மு. 445-ல் அர்த்தசஷ்டாஅரசாணையோடு ஆரம்பிக்கின்றன என்பதற்கு மேலுமான சான்றாயுள்ளது.

நான்காவது எழுபது வாரங்கள்
The Fourth Seventy Weeks

தானியேலுடைய எழுபது வாரங்களால் நீட்சித்து மூடப்பட்ட காலக்கட்டத்துக்கு இப்பொழுது நாம் எட்டியுள்ளோம். எழுபது வாரங்களில் வருட நாள் அளவு கோலின்படி 69 வாரங்கள் அல்லது 483 வருடங்கள் கி.பி. 30ல் எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிப்பவனி புகுதலோடு முடிவடைந்தது. கி.பி. 70-வரை எருசலேம் அழிக்கப்படாது யூதர்கள் சிதறப்படாதிருக்கையில் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது அவர்களின் அழிவு ஊழ் Doom நிச்சயப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்டது. மீதமுள்ள 40 வருடங்கள் வனாந்தரத்தின் 40 வருடங்களைப்போன்று, தெரிந்தாய்வு நிலையிலான வருடங்கள் Probation மாத்திமே! ஆகவே நட்பாதரவு வருடங்களாக எடுக்கலாகாது. தானியேலின் எழுபது வாரங்களில் இதுகாறும் 483 வருடங்கள் முடிந்துள்ளன. ஒரு வாரம் அல்லது ஏழு வருடங்கள் இன்னமும் நிறைவேற்றமடைய உள்ளன; சுமார் 1900 வருடங்கள் யூதர்கள் பூமியெங்கும் சிதறடிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தேசங்களால் ஒருபோதும் தங்களோடு இணைவிக்கப்படவில்லை. தங்கள் தனித்துவத்தை அல்லது தேசீக தனித்தன்மைகளை ஒருபோதும் இழந்துவிடவில்லை; ஒரு ராஜா, அரசாங்கம் அல்லது தேசம்

இல்லாத ஓர் ஜனத்தினுடைய தன்னிகரற்ற காட்சி நமக்குள்ளது. தங்கள் தேசீக உளதாகுகையை மற்றும் பாலஸ்தீனாவெனும் ஓர் நாட்டை விடாது பிடித்துக்கொண்டுள்ள ஓர் ஜனம்! அப்பாலஸ்தீனாவோ ஓர் சாபத்துக்குள் இருப்பதாக காணப்பட்டு சட்டப்படி உரிமையாளருக்காக காத்துக் கொண்டிருக்கிறது. ஏன் இப்படி? இது ஓசியாவுடைய தீர்க்கதரிசனத்தின் ஓர் நிறைவேறுகையல்லவா? ஓசியா. 3:4.

இஸ்ரவேல் புத்திரர் அநேக நாள் ராஜா இல்லாமலும், அதிபதி இல்லாமலும், பலி இல்லாமலும், சிலை இல்லாமலும், (அவர்கள் விக்கிரக ஆராதனைக்காரராய் ஒருபோதும் இருக்கிறதில்லை) எபோத் வஸ்திரம் இல்லாமலும், தேராபீம் இல்லாமலும் இருப்பார்கள் (ஓசியா 3:4). தீர்க்கன் அடுத்த வசனத்தில் கூடுதலாகக் கூறுகிறார்:

பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பி, தங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும் தேடி, கடைசி நாட்களில் கர்த்தரையும் அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் வருவார்கள், ஓசியா 3:5.

அவர்களுடைய பாதுகாப்புடைய இரகசியம் இங்குள்ளது; கடைசி நாட்களில் திரும்ப வரும்படி அவர்கள் காக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலிருந்து தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளி விடவில்லை (யூதர்கள் - ரோமர் 11:1-2) எனக் காண்கிறோம். புறஜாதியாருடைய நிறைவு (சபை) (ரோம. 11:25) உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஓர் பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும் எனவும் மற்றும் யூதர்கள் தேசமாகத் தங்கள் சொந்த நாட்டுக்கு மீட்டாக்கம் செய்யப்படவுள்ளனர் எனவும் (எரே. 30:10-11, 16: 14-15; 24:6, ஏசாயா 11:11-12; 43:5-7; ஆமோஸ் 9:14-15) பார்க்கிறோம்.

தற்சமயத்தே யூதர்கள் தேவனோடு நட்பாதரவு அற்றிருக்கின்றனர். தானியேலின் எழுபது வாரங்களில் 69-வது வாரத்து இறுதியில் தேவனுடைய கடிகாரம் யூதர்களைப் பொறுத்தவரை நின்றுவிட்டது. அதாவது அவர்கள் கர்த்தரை சிலுவையில் அறைந்தபோது! அப். 2:22-23. 69-வது மற்றும் 70-வது வாரத்தினிடையேயான இடைவெளியில் நாம் வாழ்ந்து

கொண்டிருக்கிறோம். தேவன் மீண்டுமாக இஸ்ரவேலை எடுத்தாளத் தொடங்கும்வரை 70-வது வாரம் தொடங்க முடியாது. நான்கு எழுபது வார காலக் கட்டங்களின் ஆய்விலிருந்து கி.மு. 2111 ஆபிரகாமின் பிறப்பு முதல் கி.பி. 1924 தற்கால வேளைவரை 4035 வருடங்கள் தாண்டி முடிந்தன என பார்க்கிறோம். ஆனால் ஆபிரகாமும் அவரது பின் சந்ததியாரும் தேவனுடன் நட்பாதரவற்றிருந்த-இருக்கின்ற வருடங்களின் எண்ணிக்கை 2090 ஆண்டுகள் ஆகும் (15+111 +70+1894=2090). 4035 வருடங்களிலிருந்து 2090 ஆண்டுகளை கழித்தால் தேவனுடைய ஜனம் இஸ்ரவேல் மக்கள், தண்டனை கண்டிப்புக்குள் பாதிகாலத்துக்குமேல் இருந்து வந்துள்ளனர் என்று நாம் காண்கிறோம்.

இடைவெளி Gap

69 மற்றும் 70-வது வார இடையிலுள்ள பிளவில் Gap நான்கு காரியங்கள் நிகழும் எனச் சொல்லப்படுகிறது.

1. மேசியா சங்கரிக்கப்பட வேண்டும்; ஆனால் தமக்காக அல்ல!

2. நகரம் (எருசலேம்) மற்றும் பரிசுத்த ஸ்தலம் (ஆலயம்) அழிக்கப்படும்.

3. நகரத்தையும், பரிசுத்த ஸ்தலத்தையும் அழிக்கவேண்டிய ஜனங்களுடைய அதே நாட்டினச் சார்பு கொண்ட ஓர் பிரபு வருவான்.

4. பாலஸ்தீனா முழு நிறைவேற்ற முடிவுவரை Consummation பாழக்கப்படும், Desolated. அதாவது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு எழுபது வாரங்கள் முடிவடைவதுவரை பாழ்க்கடிக்கப்படும்; அந்திக் கிறிஸ்துவாகிய பாழாக்குகிறவனை இரண்டாம் வருகையின்போது கிறிஸ்து அழித்துப்போடுவார்.

இந் நான்கு காரியங்களையும் அதிக விபரமாய் பார்ப்போமாக

1. மேசியா சங்கரிக்கப்பட வேண்டும்; ஆனால் தமக்காக அல்ல!

இயேசு தமக்காக மரிக்கவில்லை; அவர் மற்றவர் களுக்காக மரித்தார்; நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமக்கும்படிக்கு அவர் மரித்தார்; 1பேது 2:24. கரையோரம் Margin கூறுகிறது: ஒன்றுமில்லாதவரானார்; எதுவும் தமக்கென இருக்கவில்லை; காபிரியேல் தூதனால் மரியாளுக்கு கூறி அறிவிக்கப்பட்டது: நீ பெறப்போகிற குமாரன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் லூக். 1:30-33 என்பதாய்! யோவான் ஸ்நாபகன், இயேசு மற்றும் அவருடைய சீடர்கள் "சமீபமாயிருக்கிறது" எனப் பிரகடனப்படுத்திய ராஜ்யத்தை பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, இயேசு மேசியாவாக நிராகரிக்கப்பட்டார்; ஏதொன்றும் இல்லாதவராய் சிலுவையில் அறையப்பட்டார். தமது பிதா தாவீதின் சிங்காசனத்தின்மீது அமருவதற்குப் பதிலாக மற்றும் முழு பூவுலகத்தையும் சமாதானத்தில் ஆட்சிசெய்வதற்குப் பதிலாக அவர் இரு கள்ளர்கள் இடையே சிலுவையில் அறையப்பட்டார். இஸ்ரவேலரது வாக்குபண்ணப்பட்டவரான மேசியாவாக அவர் உரிமைப்பட்டிருந்த பூமிக்குரிய தகுதிகள் மற்றும் மேன்மை மகிமைகள் ஏதும் அவருக்கு இல்லாதிருந்தது. முட்களாலான கிரீடத்தைத்தவிர அவர் கிரீடம் ஏதும் பெறவில்லை; சிங்காசனமில்லை; ராஜ்யமில்லை; இவ்விதமாக தானியேலால் கிறிஸ்துவின் சிலுவையறையப்படுகை முன்னுரைக்கப்பட்டது மற்றும் ராஜ்யத்துடைய தள்ளிவைக்கப்படுகை முன்னுரைக்கப் பட்டது.

**2. நகரம் (எருசலேம்) மற்றும்
பரிசுத்தஸ்தலம் (ஆலயம்) அழிக்கப்படும்**

யூதர்கள் இயேசுவை தங்கள் ராஜாவாக நிராகரித்த உடன்தானே இயேசு அவர்களை ஒரு தேசமாக அந்நேரம் முதல் ஏற்பிசைக்க Recognize மறுத்துவிட்டார் என்பது தெளிவு. வெற்றிப்பவனி பிரவேசத்துக்கு மறுநாளில் இயேசு தேவாலயத்தில் ஏகினார். காசுக்காரரர், புறா விற்கிறவர்களை வெளியே துரத்தி 'என்னுடைய வீடு My House ஜெபவீடு என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்' என்று தீர்க்கமாய் எடுத்துரைத்தார், மத். 21:13. அந்நேரமுதல்

இயேசு ஆலயத்தை தேவனுடைய வீடாக இனிமேலாக No longer ஒருபோதும் ஏற்பிசைவளிக்கவில்லை. மாறாக அவர் அதைக்குறித்து 'இதோ உங்கள் வீடு Your House உங்களுக்கு பாழக்கிவிடப்படும்' என்றார். அதாவது தேவனால் புறக்கணிக்கப்பட்டதாக! மத். 23:38. நேர் அடுத்த நாளின் மாலைப்பொழுது, அவர் எந்த எருசலேம் நகரைக் குறித்து அதன்மீது அழுதிருந்தாரோ, அந்நகரை நேரடி பார்வைக் குள்ளாக்கும் ஒலிவ மலை மீது உட்கார்ந்த போது, அதின் அழிவை முன்னுரைத்தார். அதைக் குறித்தும் அதின் குடிமக்களைக் குறித்தும் "பட்டயக்கருக்கினாலே விழுவார்கள்; சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்" லூக். 21:24 என்றுரைத்தார்.

இது, இயேசு சொன்னபடியே, கி.பி. 70ல் சம்பவித்தது என நாம் இப்பொழுது அறிகிறோம். எருசலேம் ஓர் யூத நகராக இதுவரை ஒருபோதும் ஆகவில்லை; இருபது முறைகளுக்கு மேலாக முற்றிகையிடப்பட்டு மீண்டும் கட்டப்பட்டது. அது அநேக எண்ணிக்கையிலான வெளிநாட்டு அரசாங்கங்களின் கட்டுப்பாட்டுக்கள் இருந்துகொண்டுள்ளது; ஆனால் யூதர்களோ அதிகபட்சமும் (கி.பி. 1925வரை) அதில் மேல் தங்கள் காலடி பதிக்க அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை; Zionism என அழைக்கப்படும் ஓர் இயக்கம், பாலஸ்தீனாவை தங்கள் வசமாக்கும் மீட்டாக்கத்துக்காக தற்போது தொடங்கப் பட்டுள்ளது. ஆனால் பயனேதுமிருக்கப் போவதில்லை. ஏனெனில் புறஜாதியாரின் காலங்கள் நிறைவேறித்தீரும்வரை அது பாழாய்க்கிடந்தாக வேண்டும். அப்பொழுது (தீர்ந்த பின்) தேவன் மீட்டளிப்பு செய்வார். ஒரு காசு கூட செலவின்றி! யாருக்கெனில் அதன் மூலமுதல் உரிமையாளருக்கு! அதாவது இஸ்ரவேல் மக்களுக்கு! இவ்விதமாய் ஆபிரகாமுடனான அவருடைய உடன் படிக்கையை நிறைவேற்றுவார் ஆதி. 13:14-18. அந்தியாகு எபிப்பானசு (கி.மு. 175-164) காலத்துக்கு பின்பு ஏதோவோர் புனித யூதனால் தானியேல் புத்தகம் எழுதப்பட்டது எனக்கோருவோர், எதிர்காலத்திய சம்பவங்களை முன் கூற சாத்தியமுண்டு என நம்பாதவர்களானோர், இரு தலையோங்கிய சரித்திர சம்பவங்களான கிறிஸ்துவின் சிலுவையறையப்படுகை

மற்றும் எருசலேமின் அழிவு இரண்டையும் நாம் இப்போது பாராயணம் செய்கின்ற வசனம் முன்னுரைக்கின்ற மெய்மையை எவ்வாறு காரணம் கணக்கு காட்டப் போகின்றனர்? இவ்விரண்டில் ஒன்று கூட தானியேல் புத்தகம் எழுதப்பட்டதாக அவர்கள் கோருகின்ற காலத்திற்கு 190 வருடங்களுக்கு பின்னால் வரை சம்பவிக்கவில்லையே?

3. நகரத்தையும், பரிசுத்த ஸ்தலத்தையும் அழிக்க வேண்டிய ஜனங்களுடைய அதே நாட்டினச் சார்பு கொண்ட ஒரு பிரபு வருவான்.

இது வசனம் 25ன் பிரபுவாகிய மேசியா ஆக மாட்டான்; ஏனெனில் வரப்போகிற பிரபு ஓர் ரோமனாயிருக்கவுள்ளான்; அதாவது எருசலேம் நகரை அழித்த ஜனங்களிலிருந்துள்ளவன்; அவர்கள் ரோமர்களாயிருந்தனர்; ஆனால் பிரபுவாகிய மேசியா (இயேசு) ஓர் ரோமரல்ல. வரப்போகிற பிரபுவால் அர்த்தப்படுத்தப்பட்டது தீத்து, ரோமப் படைகளின் தலைவனேயன்றி ஏதாமோர் எதிர்காலத்திய பிரபு அல்ல என கோருகின்றோர் பிரபு ஓர் ரோமனாயிருக்க வேண்டுவதாலும் இன்று ரோம தேசம் இல்லாதிருப்பதாலும் தீத்துவைப் போன்ற ஏதாமோர் கடந்தகால ரோம பிரபுவே அர்த்தப் படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றுரைக்கின்றனர். ஆனால் ரோமசாம்ராஜ்யம் மீட்டாக்கம் பெறப்படவுள்ளது என்றும் அதில் ஓர் பிரபு 'அந்திக்கிறிஸ்து' எழவுள்ளான் என்பதையும் அத்தகைய கோருவோர் மறந்து விடுகின்றனர். ஜனங்கள் மற்றும் வரப்போகிற பிரபு எனும் பதங்களின் பயன்பாடு தீத்து அந்த பிரபுவாயிருக்கவில்லை என்பதை காட்டுகிறது. ஏனெனில் வரப்போகிற என்கிற வார்த்தைகள் அவைகளது பிரயோகிப்பில் எதிர்காலத்துக்குரியது; அதேபோல் 'வரப்போகிற பிரபு' தீத்துவின் மற்றும் எருசலேமின் அழிவின் காலத்திலிருந்து வெகு தள்ளி அகன்ற ஓர் காலத்தே வரவிருந்தான் என்பதையும் மறைமுகமாக சுட்டுகிறது. இதே வாதவிளக்கம் ஏரோதுக்கும் பிரயோகிக்க பொருந்துகிறது.

வரவிருந்த பிரபு The Prince that was to Come யாராயிருந்தான் என்பதை அதிக விவரமாக அளிக்க அல்லது அவரது பெயரை தானியேலுக்குக் கொடுக்க காபிரியேல்

தூதனுக்குத் தேவைப்படவில்லை; ஏனெனில் தானியேல் ஏற்கனவே அறிந்திருந்தான் என்பதை நாம் மறக்கக்கூடாது. நான்காவது காட்டியல் மிருகத்தின் தலைமீதுள்ள பத்துக் கொம்புகளிடையே எழும்பப்போகின்ற சின்னக்கொம்பு Little Horn அவனாயிருப்பான் என்று தானியேல் அறிந்தான், தானி. *7:7-8, 23-27.* முதல் மூன்று காட்டியல் மிருகங்கள் எந்தெந்த சாம்ராஜ்யங்களுக்காக நின்றன (பாபிலோன், மேதிய பெர்சியா மற்றும் கிரேக்கு) என்று தானியேல் அறிந்துள்ளபோதிலும், நான்காவது காட்டியல் மிருகம் ரோமுக்காக நின்றது என அவர் அறிந்தார் என்பதை நாம் நிச்சயம் பண்ணாதுள்ளோம்; அவர் அதை அறிந்திருந்தால் பின்பு நகரத்தையும், பரிசுத்த ஸ்தலத்தையும் அழிக்க வேண்டுவதான ஜனம் People ரோமரா யிருக்கவுள்ளதை அவர் அறிந்தார். தானியேல் புத்தக ஆய்வில் இது (இப்புத்தகம்) புறஜாதியாரின் காலங்களோடு சம்பந்தபட்டதென்றும், சின்னக்கொம்பில் கடைசி மாபெரும் புறஜாதி ஆட்சியாளன் அந்திக்கிறிஸ்துவை வெளிப்படுத்துவதே அதின் நோக்கமாயுள்ளது என்றும் நாம் மறக்கக்கூடாது. இயல்பாக, எழுபது வாரங்களுடைய தீர்க்கதரிசனம் அவனை (அந்திக்கிறிஸ்து) உட்படுத்த வேண்டும். ஏனெனில் தீர்க்க தரிசனத்தின் நோக்கமே கடைசிக் காலத்தைக் குறித்து நமக்கு அறிவிப்பதாகும். மேலும், பிந்திய நாட்களில் என்ன நடந்தேறவுள்ளது என்பதை தெரிவிப்பதுமாகும்.

4. பாலஸ்தீனா முழு நிறைவேற்ற முடிவுவரை Consummation **பாழாக்கப்படும்;** அதாவது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு 'எழுபது வாரங்கள்ஃ முடிவடைவதுவரை, பாழ்க்கடிக்கப்படும். அந்திக் கிறிஸ்துவாகிய பாழாக்குகிறவனை Desolator இரண்டாம் வருகையின்போது கிறிஸ்து அழித்துப்போடுவார்.

பாலஸ்தீனா நாடு யோசுவாவின்கீழ் இஸ்ரவேல் மக்களால் குடிபுகப்பட்டபோது பாலும், தேனும் உடைய மற்றும் எல்லாவகைப் பழங்களுடைய ஓர் தேசமாயிருந்தது. (உபா. *8:7-9*). அதின் மண் மிகத் திரளாய் பலனை பிறப்பித்தது. இஸ்ரவேல் மக்கள் அதின் ஓய்வு நாட்களை ஆசரித்து வந்த காலங்கள் நீட்சிவரை இது தொடர்ந்தது. ஆனால் அவர்கள் கீழ்ப்படியாமல்

வேறு தெய்வங்களை தொழுதுகொள்ளத் திரும்பி வழிவிலகினால் வானங்களை அடைத்து விடுவதாகவும், அறுவடைகள் பொய்த்துப்போகும்படி ஆகுமென்றும் தேவன் அவர்களை கண்டிப்பாக எச்சரித்தார், உபா. 11:13-17. பாலஸ்தீனா யோசுவா காலத்தே கொண்டிருந்த அதே மண் தரத்தை இன்று கொண்டுள்ளது. ஆனால் அது மழை மற்றும் நீப்பாசனத்தில் குறைவுபட்டுள்ளது; அது சாபத்தின் கீழுள்ளது; தேவன் முன்மாரி (அக்டோபர் மற்றும் நவம்பர்) மற்றும் பின்மாரி (ஏப்ரல் மற்றும் மே) மழைகளை நிறுத்திப் போட்டுள்ளார். ஆயினும் இப்பொழுது அவைகள் மீண்டும் அடிக்கடி நிகழ்வுகளாகின்றன. இம்மாறுகை சாபத்தின் எடுபடுகை அருகாமையிலுள்ளது என்பதற்கு ஓர் அடையாளமாம்! பாலஸ்தீனாவின் இப் பாழ்க்கடிப்பு வசனம் 9:26-ல் தானியேலால் முன்னுரைக்கப் பட்டதாக உள்ளது. இது திருநல்லாயிரம்வரை தொடரவுள்ளது அப்பொழுது:

'வனாந்திரமும், வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும்' ஏசாயா. 35:1.

'முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும், ஏசாயா. 55:13.

'பூமி தன் பலனைத்தரும்', சங். 67:6.

'களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்; நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன். நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்ருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை', யோவேன் 2:24-26.

இவ்விதமாக 69-வது வாரத்துக்குப் பிற்பாடு

நிகழப்போவதாக வசனம் 9:26-ல் தீர்க்கதரிசிக்கப்பட்ட இந்த நான்கு காரியங்களிலிருந்து நாம் பார்க்கிறதாவது, அவைகளில் இரண்டு நிறைவேறியாயிற்று; ஒன்று நிறைவேறுதலின் வழிமுறையில் இப்பொழுது உள்ளது; மூன்றாவதுள்ள - பிரபுவுடைய வருகை இன்னமும் எதிர்காலத்தது; மேலும் 69-வது மற்றும் 70-வது வாரத்துக்கிடையே ஓர் பிளவுவெளி Gap உள்ளது; அது இப்போதைய 'சபைக்கால சகாத்தம்' முழுமையையும் நீட்சித்து மூடுகிறதாயுள்ளது.

எழுபதாவது வாரம் The Seventieth Week

இப்பொழுது நாம் தீர்க்கதரிசனத்தின் கடைசி வசனம், 27-வதுக்கு வந்துள்ளோம்.

'அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்தவாரம் பாதி சென்றபோது, பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழக்குகிறவன் வந்து இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்' தானி. 9:27.

முதல் கேள்வி யாதெனில் 'அவர்' என்கிற மறுபெயர்ச்சொல்லால் Pro Noun அர்த்தப்படுவது யார்? அவர் என்ற மறுபெயர் பிரபுவாகிய மேசியா அல்லது கிறிஸ்துவை குறிப்பிடுகிறதென்றும், 'உடன்படிக்கை' கிறிஸ்து பறைசாற்றிய புதிய உடன்படிக்கை என்றும் சிலர் உரிமை கோருகின்றனர். அதாவது கிறிஸ்து பாத்திரத்தை எடுத்து சீடர்களுக்குக் கொடுத்து 'இது பாவ மன்னிப் புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது' எனக் கூறி Lord's Supper (மத்.26:28) கர்த்தருடைய இராப்போஜனத்தை அவர் நிறுவியபோது ஏற்படுத்திய உடன்படிக்கை என்கின்றனர். ஆனால், கர்த்தருடைய உடன்படிக்கை ஓர் நித்திய உடன்படிக்கை Everlasting Covenant என்பதை மறந்துவிட்டனர். அத்துடன், இந்த உடன்படிக்கை (9:27) வாரத்தின் இடைப்பாதியில் அல்லது மூன்றரை வருடங்கள் முடிவில் முறிக்கப்பட்டுவிடுகின்றது. அப்படியானால் 'அவர்' என்கிற மறுபெயர் கிறிஸ்துவை

குறிப்பிட முடியாது; மாறாக முந்தின வசனத்தின் கடைசி நபரை குறிப்பிட வேண்டும்; அந்நபரே வரப்போகிற பிரபு அல்லது அந்திக்கிறிஸ்து!

யூதர்கள் தங்கள் சொந்த பூமிக்கு திரும்பக் கூட்டிச் சேர்க்கப்படவுள்ளனர்; மற்றும் ஓர் தேசமாக மாறப் போகின்றனர் என்று மற்ற வேதாகமப் பகுதிகளிலிருந்து நாம் அறிகிறோம், எரே. *30:10-11*, ஆமோஸ் *9:14-15*, எரே. *16:14-15*, ஏசா. *43:5-7*. இதற்கான காலம் வருகிறபோது ஓர் மாபெரும் எண்ணிக்கையிலான யூதர்கள் பாலஸ்தீனாவுக்கு திரும்ப கூட்டிச் சேர்க்கப்படப் போகின்றனர். ***அவர்களது பேராவல் எல்லாமே நாட்டை திரும்பக் கைவசமாக்குவது மற்றும்ஓர் தேவாலயத்தைக் கட்டுவதுமாகும்; அதினுள் ஆலயம்) அவர்கள் தங்களது பலிசெலுத்து முறைமையிலான தொழுகையை மீள நிறுவுவது;*** அத்துடன் யூதீக தேசத்தை மீள நிலைநாட்டுவதாகும். புறம்பேயிருந்துள்ள உதவியின்றி இதை அவர்கள் செய்யக்கூடாது; அக உணர்வு சார்பான உற்ற வேளையில் Psychological Moment ***அந்திக்கிறிஸ்து காட்சி மேடையில் தோன்றுவான்; அவர்களோடு ஓர் உடன்படிக்கையில் பிரவேசிப்பான்;*** இதை தீர்க்கன் ஏசாயா:

'மரணத்தோடு செய்த உடன்படிக்கை' A Covenant with Death மற்றும் 'பாதாளத்தோடு செய்த உடன்படிக்கை' An Agreement with Hell என அழைக்கிறார், ஏசாயா. *28:15,18*.

இந்த உடன்படிக்கையை 'அநேகருடன்' Many செய்யப்பட்டதேயன்றி எல்லாரோடுமல்ல Not All என்பதைக் கவனிக்கவும்; ஏனெனில் தேவன் தமது 'தனி ஒதுக் கீட்டுக்குட்பட்டோரை Reserves வைத்திருக்கவுள்ளார்; இஸ்ரவேலுடைய *7000* பேரைப்போல (*1* ராஜா. *19:18*) மற்றும் வெளி. *7:2-10* துடைய அந்திக் கிறிஸ்துவுக்கு முழங்கால் முடக்காத *1,44,000* பேரைப்போல இருக்கவுள்ளனர்; அசுத்த ஆவியின் Unclean Spirit தமது உவமையில் கிறிஸ்து இந்தக் காலத்தை சட்டுக் குறிப்பீடு செய்கிறார்.

'அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும்

கண்டடையாமல், தான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்று சொல்லி அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்டு, திரும்பப் போய் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடு கூட்டிக்கொண்டு வந்து உட்புகுந்து அங்கே குடியிருக்கும்; அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்; அப்படியே இந்த பொல்லாத சந்ததியாருக்கும் This Wicked Generation சம்பவிக்கும்' என்றார், *மத். 12:43;45.*

'இந்த பொல்லாத சந்ததியார்' எனும் வார்த்தை களிலிருந்து கிறிஸ்து இந்த உவமையை யூதர்களுக்குப் பொருத்தி தொடர்புபடுத்தினார்; அவருடைய சொந்த காலத்திய யூதர்களை மாத்திரமல்லாமல், எல்லா காலத்திய யூதர்களையும் பொருத்திக் குறிப்பிட்டார். ஏனெனில் 'சந்ததியார்' Generation பதம் 'வம்சத்தை' Race அர்த்தப்படுத்துகிறதேயன்றி ஓர் குறிப்பிட்ட காலத்தை அல்ல!

யூதர்கள் தங்கள் பாபிலோனிய சிறைப்பிடிப்பால் Babylonian Captivity விக்கிரகாராதனையின் அசுத்த ஆவியினின்று Unclean Spirit of Idolatry விடுவிக்கப் பட்டனர் என்பது சரித்திரத்து ஓர் நிகழ்வாயிருக்கிறது. அவர்கள் இன்று அதிலிருந்து விடுதலையாயிருக்கின்றனர்; அவர்களது வீடு வெறுமையாக, பெருக்கி, ஜோடிக்கப்பட்டிருக்கிறது; ஆனால் அசுத்த ஆவி அவர்களைக்குறித்து 'என் வீடு' My House என இன்னமும் சொல்லக்கூடும். 'விக்கிரகாராதனையாகிய அசுத்த ஆவி' யூதர்களுக்கு இன்னமும் திரும்பி வரவுள்ளது; அப்பொழுது அவன் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டு வருவான். 'வாரத்தின் இடை மத்தியில்' அந்திக்கிறிஸ்து உடன்படிக்கையை உடைக்கப் போகின்ற, அதாவது அதை ஓர் வெத்துக் காகிதமாக தள்ளிப்போடுகின்ற வேளையில் இது நிகழப்போகிறது. பலியையும், காணிக்கையையுயம் நிறுத்தி இல்லாமற் செய்து, மீளக் கட்டியெழுப்பப்படும் தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலத்துள் பாழாக்கும் அருவருப்பை நிற்கச் செய்யும் போது (மத். *24:15*)

நிகழப்போகிறது; அப்பாழாக்கும் அருவருப்பு Abomination of Desolation மிருகத்தினுடைய ஓர் சொரூபமாக Image of the Beast இருக்கவுள்ளது. மீறுகைமீது மரண தண்டனை விதிப்பின் கீழ் அந்திக்கிறிஸ்துவின் பின் தொடர்பாளர்கள் அனைவரும் Followers மீறுகையின்றி நிறுவி வணங்கும்படி கள்ளத் தீர்க்கதரிசியால் கட்டளையாக ஏவப்பட்டதே மிருகத்தின் சொரூபமாகும்! அதுவே, பாழாக்கும் அருவருப்பாகும்! (வெளி. 13: 14-15) பாபிலோன் மாகாணத்தில் தூராசமவெளியில் உருவாக்கி நிறுத்தும்படி நேபுகாத்நேச்சாரால் கட்டளையிடப் பட்ட 'பொற்சிலை' Golden Image (தானி. 3:1-30) யுடைய ஓர் நிஜவுரு Antitype ஆக இது (மிருகசொரூபம்) இருக்கவுள்ளது. அப்பொற்சிலையின் முன்பாக, கீதவாக்கியங்களின் சத்தம் உண்டாகையில், சகல ஜனத்தாரும் தாழவிழுந்து பணிந்து கொள்ளும்படி கட்டளையிடப்பட்டனர். மீறுகின்றவர்கள் யாராயிருந்தாலும் எரிகிற அக்கினிச் சூளையினுள் போடப்பட வேண்டியது அன்றைய தண்டனை விதிப்பாயிருந்தது;

அந்திக்கிறிஸ்துவின் நாளில் மிருகத்தின் சொரூபத்தை தாழவிழுந்து பணிந்து கொள்ள மறுக்கின்றவர்கள் சந்தேகமின்றி அநேகர் இருக்கப் போகின்றனர். ஆனால், 'அன்று மூன்று எபிரேய புத்திரர்' சூளையினுள் இருந்து தப்புவிக்கப்பட்டது போல, தேவனால் அற்புதகரமாக விடுவிக்கப்பட்டாலொழிய, இவர்கள் (மிருகவணக்க மறுப்பாளர்) விடுவிக்கப்படார்கள்; மாறாக தலைவெட்டுப் பொறியால் வெட்டுண்டு மரிப்பர், வெளி. 20:4.

'அருவருப்பு' Abomination சொல் எபிரேயர்கள் மத்தியில் ஓர் பொய் தெய்வத்துக்குரிய A False God ஓர் பொதுவான பதமாகும்; பழைய ஏற்பாட்டில் இச்சொல் ஓர் விக்கிரகத்தை Idol அர்த்தப்படுத்துகிறது; 1 ராஜா 11:5 - 7 எனும் பகுதியில் எவ்விதம் சாலொமோன் ராஜா தனது புறசமயி மனைவிகளை Heathen Wives பிரீதிப்படுத்த எருசலேமுக்கு எதிரான மலையிலே மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும் Chemosh, அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மோளேகுக்கும் Molech ஒவ்வொரு மேடையைக் கட்டினான் என நாம் வாசிக்கிறோம். 'கவிந்து பரவுகின்ற Over Spreading எனப் புகுத்தப்பட்ட

'வார்த்தை' எழுத்தின்படி Literally செட்டைகள் Wings என அர்த்தமாகிறது; வேத எழுத்துக்களில் 'பாதுகாப்பு' Protection எனும் கருத்தை சுற்றுமுகமாகக் குறிக்கிறது; அவருடைய செட்டைகளின் கீழ் நம்பிக்கையாயிருப்பாய்' போன்று! அதின் அர்த்தம் யாதெனில் அந்நாளில் யூதர்கள் 'பாழாக்கு கிறவனுடைய அருவருப்பான செட்டைகளின் கீழாக' Under the Wings of the Abomination of Desolation பாதுகாப்பு தேடுவார்கள் அல்லது அந்திக்கிறிஸ்துவுடைய விக்கிரக சொரூபத்தின் கீழ்! 'இது விக்கிரகாராதனையின் அசுத்த ஆவியுடைய' ஏழு மடங்கு Seven Fold Return திரும்பிவருகையை அர்த்தப்படுத்தும். அதினிமித்தம் அவர்கள் பின்னிலைமை முன்னிலைமையிலும் அதிகக் கேடுள்ளதாயிருக்கும். இந்நிலை முழுநிறைவேற்றம் Consummation வரைத் தொடரும்; அதாவது வாரத்தின் இறுதிவரை; அப்போது கிறிஸ்து திரும்ப வருவார்; அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள்; (வெளி. 1:7) தங்கள் விக்கிரகாராதனையை விட்டுத் திரும்புவார்கள்; அத்தோடு பாழாக்குகிறவன் (அந்திக்கிறிஸ்து) அவருடைய 'வருகையின் பிரகாசத்தினால்' அழிக்கப்படுவான். 2 தெச 2:8; வெளி. 19:20 இதிலிருந்து அந்திக் கிறிஸ்துவின் நாட்களில் மீளகட்டப்படும் தேவாலயத்தில் 'கேரூபீன்களுடைய செட்டைகளுக்கு' Wings of the Cherubim பதிலாக 'அருவருப்பின் செட்டைகள்' Wings of Abomination நிறுவப்படவுள்ளது.

இந்த வேளையில், அவர்களுடைய தேசீக மனந் திரும்புதல் National Repentence ஏற்பட்டு மற்றும் தங்கள் 'ராஜாவாகிய மேசியாவாக' Messiah The King அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ள போது, அவர் அவர்களோடு ஓர் புதிய உடன்படிக்கையை New Covenant செய்வார். அது ஒருபோதும் முறிக்கப்படுவதில்லை;

'இதோ நாட்கள் வருமென்று (அவை இன்னமும் எதிர்காலத்தே) கர்த்தர் சொல்லுகிறார்; அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்; நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகாயிருந்தும், அந்த என்

உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணுகிற உடன்படிக்கையாவது: நான் என் நியாயப் பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்' எரேமியா. *31:31-34.*

எபிரேய ஆக்கியோன் மேற்காணும் பகுதியை கோடிட்டுக் காட்டுகிறார் (எபி. *8: 7-13;* புதுஉடன்படிக்கையின் New Covenant வாக்குத்தத்தம் யூதர்களுக்கேயுரியது அல்லாது சபைக்குரியதல்ல எனத் தீர்க்கமாக எடுத்துரைக்கிறார் Declares. சபைக்கு அதில் ஓர் பங்கு உள்ளதானாலும்! Has a Share in it! யூதர்களோடு இப்புது உடன்படிக்கை பண்ணப்படப் போகின்ற காலம் அவர்களுடைய பாவங்களும், அக்கிரமங்களும் Sins and Iniquities களையப்பட்டு போகின்ற போதே! அக்காலம் தானி. *9:24* லுடன் ஒத்திசைவு கொள்ளுகிறது அல்லது எழுபது வாரங்களின் இறுதியாகிறது. இது எழுபது வாரங்கள் அவைகளது இறுதியை இன்னமும் எட்டவில்லை என்பதற்கு மேலுமான நிரூபணமாகிறது.

சத்திய வேத வசனங்கள்
The Scripture of Truth

தானியேல் அதிகாரங்கள் பத்து, பதினொன்று, பன்னிரண்டு

தானியேல் புத்தகத்தின் கடைசி மூன்று அதிகாரங்கள் ஏரே இணைப்பகுதி கூட்டாகின்றன: மற்றும் அதிகார பிரிப்புகள் இருக்கவேண்டுவதில்லை: இம் மூன்று அதிகாரங்களும் தெளிவுபடுத்துதலுக்காக மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படலாம்.

முதல் பாகம்
Part One

இயல்நிலை கடந்த உயிருருக்களது பூமிக்குள்ள தொடர்பு.

அதிகாரம் 10:1 - 11:1.

பாகம் இரண்டு
Part Two

வடதிசை மற்றும் தென்திசை ராஜாக்களுடைய முன்னெழுதப்பட்ட சரித்திரம். அதிகாரம் 11:2 - 35

பாகம் மூன்று
Part Three

இறுதிகால நேரம் Time of the End.

அதிகாரம் 11:36 - 12:13

சத்திய வேத வசனங்கள்
முதல் பாகம்

Part One

இயல்நிலை கடந்த உயிருருக்களுடைய பூமிக்குள்ள தொடர்பு

The Relation of Supernatural Beings to the Earth

அதிகாரங்கள் 10:1 - 11:1

காட்சியின் காலவேளை The Time of the Vision

'பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே பெல்தெஷாத்சார் என்றுபெயரிடப்பட்ட தானியேலுக்கு ஒரு காரியம் வெளியாக்கப்பட்டது; அந்தக் காரியம் சத்தியமும் நீடிய யுத்தத்துக்கு அடுத்ததுமாயிருக்கிறது; அந்தக்காரியத்தை அவன் கவனித்து, தரிசனத்தின் பொருளை அறிந்து கொண்டான்'. தானி. 10:1

தானியேலது கடைசிக் காட்சியான இது கோரேஸ் ராஜாவின் ஆட்சியுடைய மூன்றாவது வருடத்தே, கி.மு. 533ல் அவருக்கு வந்தது; அவ்வேளையில் தானியேல் தொண்ணூறுக்கு அதிகமான வயதுடையவராயிருந்தார்; அதிக பட்சமும் அவர்பொது அரசு விவகாரங்களில் மேலுமாக அதற்கு அப்புறம் சுறுசுறுப்பாயில்லை. அதிகாரம் 1:21-ல் நமக்குச் சொல்லப்பட்ட படி கோரேஸ் ராஜாவின் முதல் ஆண்டு வரை மாத்திரமே அவர் தொடர்ந்தார். மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக கோரேஸ் ராஜாவுடைய அரசாணையை சாதகமாக்கித் திரும்பி வந்தோரோடு ஏன் தானியேல் திரும்பிவரவில்லை என்பது சொல்லப்படவில்லை எஸ்றா 1:1-11. அவரது வயது மூப்பினாலாய் இருக்கலாம்; அதிகபட்சமும் தேவனுக்கு தானியேல் வசம் கொடுக்க மேலுமாக சில வெளிப்பாடுகள் இருந்த காரணத்தால் தீர்க்கனை போவதிலிருந்து தடுத்து நிறுத்தியிருந்தார்.

பொது அரசுத்துறை விவகாரங்களின் பளுவிலிருந்து விடுவிக்கப்பட்டவராய் தானியேல் சந்தேகமின்றி எருசலேமுக்குத் திரும்பிவந்தோர் மதிற்சுவர்களைக் கட்டி எழுப்புவதிலும், தேவாலயத்தை மீட்டாக்கம் செய்வதிலும் அடைந்த வெற்றிகளைக் குறித்து விசாரித்தறிவதில் தனது நேரத்தை செலவு செய்தார். திரும்பிச் சென்றோருடைய எண்ணிக்கை *42,360* மாத்திரமே! என்பதில் அவர் சந்தேகமின்றி ஏமாற்றமடைந்தார் எஸ்றா *2:64* ஆசாரியர்களில் மற்றும் ஜனத்தலைவர்களில் வெகுஅதிகமானோர் Great Majority பாபிலோனியாவிலே அவர்கள் கட்டியிருந்த வீடுகள் மற்றும் அவர்கள் நட்டிருந்த தோட்டங்களையே தங்கள் சொந்த நாட்டின் பாழாக்கப்பட்டவைகளைவிட அதிகமாய் விரும்பினர்.

எஸ்தர் புஸ்தகத்திலிருந்து பின்தங்கி இருந்தவர்கள் எவ்வளவு அதிக எண்ணிக்கையாயிருந்தார்கள் என்று நாம் படிக்கிறோம்; சமாரியர்கள் Samaritans தங்களது உதவியையும், ஒத்துழைப்பையும் ஏற்க யூதர்கள் மறுக்கிறதால் எரிச்சலடைந்து தங்கள் அதிகாரத்துள்ளான ஒவ்வொரு முறையாலும் பணியை முட்டுக்கட்டைப் போட்டுக் கொண்டிருக்கிறதையும், மேலுமாக அவர்கள் பெர்சியா நீதிமன்றத்திலிருந்து ஓர் தடை அதிகார ஆணை Injunction பெற முயற்சி செய்திருக்கிறதையும் கூட தானியேலுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது என்பது சாத்தியதையாயிருக்கும், எஸ்றா. *4:1-6.* அவருடைய மக்களில் அநேகர் எருசலேமை மற்றும் தேவாலயத்தை மீட்டாக்கம் செய்வதில் உற்சாகமாற்றிருப்பதையும், திரும்ப வந்தோர் ஓர் மனஉறுதியற்ற Feeble கூட்டமாய், எழுச்சி ஆவியின்றி, தங்கள் சத்துருக்களால் ஒவ்வொரு திக்கும் நெருக்கப்பட்டவர்களாயும் இருந்த மெய்மையால் மனந்தளர்ந்து போன தானியேல் உபவாசித்து துக்கித்ததில் எந்தஓர் வியப்பு உண்டா?

‘அந்த நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வார முழுவதும் துக்கித்துக் கொண்டிருந்தேன். அந்த வாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை; இறைச்சியும், திராட்சை ரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை; நான் பரிமளதைலம் பூசிக்கொள்ளவுமில்லை’. தானி. *10:2-3*

இது அவர் எதையும் புசிக்கவோ, குடிக்கவோ இல்லை என்பதாக அர்த்தப்படுவதில்லை. மாறாக, சகல அருஞ்சுவையுண்டிகளைத் தவிர்த்தார்; எளிமையான உணவு வகைகளுக்குத் தனது விருப்புகளை மட்டுப்படுத்தினார். இதை அவர் இருபத்தொரு நாட்களுக்குச் செய்தார். ஓர் தேவதூதஉரு அவருடைய துயர்த்தீர்வுக்கு வந்திராதிருந்தால் அவர் சந்தேகமின்றி அதைத் தொடர்ந்து செய்திருப்பார்.

மனுஷகுமாரனுடைய காட்சி
The Vision of the Son of Man

'முதலாம் மாதம் இருபத்து நாலாந்தேதியிலே நான் இதெக்கேல் (Tigris) என்னும் பெரிய ஆற்றங்கரையில் இருந்து, என் கண்களை ஏறெடுக்கையில், சணல் வஸ்திரந்தரித்து, தமது அரையில் ஊப்பாசின் தங்கக்கச்சையைக் கட்டிக் கொண்டிருக்கிற ஒரு புருஷனைக் கண்டேன்; அவருடைய சரீரம் படிகப்பச்சையைப் போலவும், அவருடைய முகம் மின்னலின் பிரகாசத்தைப் போலவும், அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப் போலவும், அவருடைய புயங்களும், அவருடைய கால்களும் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப் போலவும், அவருடைய வார்த்தைகளின் சத்தம் ஜனக் கூட்டத்தின் ஆராவாரத்தைப் போலவும் இருந்தது'. தானி. *10: 4-6*

இந்த ஓர் புருஷன் யாராயிருந்தார்? மகிமையின் கர்த்தரேயன்றி Lord of Glory வேறு யாருமல்ல! கர்த்தர் ஆபிரகாமுக்குத் தோன்றினார் (ஆதி. *18:1-8*) மற்றும் மோசேக்கு எரிகிற முட்செடியில் தோன்றினார் (யாத். *3:1-6, 13-14*) என்றால் தானியேலுக்கு ஏன் தோன்றக்கூடாது? யாரை அர்த்தப் படுத்துகிறது என்பதைக் கண்டறிய நாம் செய்ய வேண்டுவதெல்லாம் வெளிப்படுத்தல் புத்தகத்துக்குத் திரும்ப வேண்டியதேயாம்! அங்குள்ள மனுஷகுமாரனுடைய விவரணத்தை, யோவானுக்கு பத்மு தீவில் வைத்து அவர் தோன்றிய விதமாக, ஒப்பீடுச் செய்ய வேண்டியது. இரு விவரணங்களும் ஒரே நபருடையவையே Same Person என்பதை காணவேண்டியது.

'அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத்

திரும்பினேன்; திரும்பினபோது, ஏழு பொன் குத்து விளக்குகளையும், அந்த ஏழு குத்து விளக்குகளின் மத்தியிலே நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக் கொப்பானவரையும் கண்டேன்; அவருடைய சிரசும், மயிரும் வெண்பஞ்சைப்போலவும், உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது; அவருடைய கண்கள் அக்கினி ஜூவாலையைப் போலிருந்தது; அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருந்தது'. வெளி. *1:12-15.*

'எழுபது வாரங்களின்' காட்சியில் 'மேசியா' வந்திருக்கும்போது அவர் துண்டிக்கப்படுவார் Cut off - Crucified என்று தானியேலுக்குச் சொல்லப்பட்டது; இந்த வேளையில், தானியேல் திகிலோடும், கவலையோடும் நிரம்பியிருந்தபோது அவருக்கு மேசியா காட்சியளிக்க வேண்டியதை விட வேறென்ன கூடுதல் நியாயமாயிருக்க முடியும்?

தானியேல் கர்த்தரை அவருடைய மனுடாவதாரத்துக்கு Incarnation முன்னர் கண்டார்; அதேபோது யோவான் கர்த்தரை அவருடைய பரமேறுகைக்குப் பின்னர் கண்டார். ஆனால் இரு தருணங்களிலும் அவருடைய தோற்றக் காட்சி ஒன்று போலிருந்தது. தானியேல் மற்றும் யோவானுடைய காட்சிகளுடைய தங்கள் மீதுள்ள விளைவு Effect இருவருக்கும் ஒரே விதமாகவே இருந்தது Same. தானியேல் கூறுகிறார்: 'என்பெலனெல்லாம் போயிற்று; என் உருவம் மாறிவாடிப் போயிற்று. திடனற்றுப் போனேன்......நான் முகங்கவிழ்ந்து, நித்திரைப் போகிறவனாய்த் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தேன்'. தானி. *10:8-9* அதாவது தானியேல் மயக்கமுற்றார்; யோவான் கூறுகிறார்: 'நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்' வெளி. *1:17.* யோவானும் மயக்கமுற்றார். இவ்விதமாக, தானியேல் மற்றும் யோவானுடைய காட்சிகள் அவர்கள் மீது ஏற்படுத்திய விளைவின் ஒன்றாந்தன்மை Similarity தானியேல் கண்ட 'ஒரு புருஷன்' Certain Man மகிமையின் கர்த்தரேயன்றி வேறு யாருமில்லை!

தானியேலாகிய நான் மாத்திரம் அந்தத் தரிசனத்தைக் கண்டேன்; என்னோடே இருந்த மனுஷரோ அந்த தரிசனத்தைக் காணவில்லை; அவர்கள் மிகவும் நடுநடுங்கி, ஓடி ஒளிந்து கொண்டார்கள்; நான் தனித்து விடப்பட்டு அந்தப் பெரிய தரிசனத்தைக் கண்டேன்; என் பெலனெல்லாம் போயிற்று. என் உருவம் மாறி வாடிப் போயிற்று; திடனற்றுப் போனேன். அவருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டேன்; அவருடைய வார்த்தைகளின் சத்தத்தை நான் கேட்டபோது, நான் முகங்கவிழ்ந்து, நித்திரைப் போகிறவனாய்த் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தேன்' தானி. *10:7-9.*

தானியேல் கண்ட 'ஒரு புருஷன்' Certain Man மகிமையின் கர்த்தர் ஆனார் என்பதும் சிலர் உரிமைகோருகிறபடி பிரதான தூதன் மிகாவேல் அல்ல என்பதும் மேலே கொடுக்கப்பட்டதான தானியேலுக்கு ஏற்பட்ட அனுபவத்தை தர்சு பட்டணத்து சவுலுக்கு கர்த்தர் தமஸ்குவுக்குப் போகும் வழியில் காட்சியளித்த போது, ஏற்பட்ட அனுபவத்தோடு ஓர் ஒப்பீடு செய்வதிலிருந்து தெளிவாகிறது, அப். *9:1-9.*

வானலோகத்து தூதுவர்
The Heavenly Messenger

'இதோ ஒருவன் கை என்னைத் தொட்டு, என் முழங்கால்களும், என் உள்ளங்கைகளும் தரையை ஊன்றியிருக்க என்னைத் தூக்கி வைத்தது; அவன் என்னை நோக்கி: பிரியமான புருஷனாகிய தானியேலே, நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன்; ஆதலால், நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளின் பேரில் நீ கவனமாயிருந்து, கால் ஊன்றி நில் என்றான்; இந்த வார்த்தையை அவன் என்னிடத்தில் சொல்லுகையில், நடுக்கத்தோடே எழுந்து நின்றேன்' தானி. *10. 10-11.*

இதிலிருந்து 'மகிமையின் கர்த்தர்' மாத்திரமே இந்தக் காட்சியில் தோன்றியிருக்கவில்லை என நாம் பார்க்கிறோம்; ஓர் பரலோகத்து தூதுவரால் கூட அவர் தொடரப்பட்டிருந்தார். அவர் தூதன் காபிரியேலைத் தவிர வேறு யாருமல்ல! இதை தூதனுடைய வார்த்தைகள் மற்றும் நடத்தையிலிருந்து நாம்

அறியலாம். நாம் செய்ய வேண்டுவதெல்லாம் இந்த காட்சியை ஆறு வருடங்களுக்கு முன்னர் தானியேலால் பார்க்கப்பட்ட ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடாவினுடைய காட்சியோடு ஒப்பீடு செய்ய வேண்டுவதேயாகும். தானி : 8:15-19. அதில், ஊலாய் ஆற்றங்கரையில் தானியேல் நின்று கொண்டிருந்த போது, ஆற்றின் கரைகளுக்கிடையே ஓர் மேகத்தால் அதிகபட்சம் தாங்கப்பட்டவராய் 'மனுஷசாயலான ஒருவர்' Appearance of Man நின்றதாக நமக்குச் சொல்லப்பட்டது; தானியேல் அந்த நேரத்தில் அவரை விவரிக்காதிருக்கையில், அவர் சந்தேகமின்றி இந்த (தானி. 10) காட்சியிலுள்ள "ஒரு புருஷனாயிருந்த" Certain Man அதே நபரேயன்றி வேறல்ல! அதாவது மகிமையின் கர்த்தரே! இந்த 'மனிதன்' Man தூதன் காபிரியேலைக் கூப்பிட்டு, தானியேலது காட்சியை பொருளளிப்புச் செய்ய அவருக்கு (தூதன்) கட்டளையிட்டதை தானியேல் கேட்டார். இந்த தருணத்தைப்போல, (தானி. 10) மயக்கமுற்று, முகங்குப்புற விழுந்து கிடந்த தானியேல் காபிரியேலால் காலூன்றி நிற்கும்படி எழுப்பப்பட்டு, அறிவுரையளிக்கப்பட்டார். (தானி. 8)

பின்னர், எழுபது வாரங்களின் காட்சியில், (தானி. 9) தானியேல் பேசிக்கொண்டு, ஜெபித்துக் கொண்டு, தனது ஜனங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டுக் கொண்டிருக்கும்போது, காபிரியேல் அவரிடம் மீண்டுமாக அனுப்பப்பட்டார். இந்தவேளையில் காபிரியேல் தானியேலை வாழ்த்தினார்: மிகவும் பிரியமானவனாக! இந்த காட்சியில் இருமுறை பரலோக தூதுவர் அதே 'வாழ்த்தலை' Salutation பயன்படுத்துவதை இப்போது நாம் கருத்திற்கொண்டுள்ளோம் (தானி. 10:11 மற்றும் 19) இவர் நிச்சயமாக, காபிரியேலேயன்றி வேறுயாருமாக இருக்கக் கூடாது. தானியேலைத் தொட்டது காபிரியேலேயல்லாமல் 'ஒரு புருஷனல்ல' The Certain Man என்பதற்கு கூடுதல் நிரூபணமாக இருக்கும் மெய்மை யாதெனில், தானியேலைத் தொட்டவர் மிகாவேலை அதாவது தலைமை அதிபதிகளில் ஒருவரானவரை, தன்னைப் பெர்சியவின் அதிபதியின் Prince of Persia பிடியிலிருந்து விடுவிக்கும்படி வேண்டுகை செய்ய வேண்டியிருந்தது. மகிமையின் கர்த்தருக்கு செய்திருந்திருக்க தேவையில்லாத ஒரு காரியம் அது! ஏனெனில்,

அம்மகிமையின் கர்த்தர் தமது வாயிலுள்ள இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தால் அவனை (பெர்சிய அதிபதி) நிக்கிரகம் பண்ணியிருந்திருப்பார் வெளி. *1:16; 19:15.* தானியேலைத் தொட்டு, அவரைக் காலூன்றி நிற்கச் செய்தவருடைய வாய்மொழியிலிருந்து Language அவர் ஓர் ஊழியன், ஓர் கீழ்ப்பணியாளர் Sub - ordinate என்றல்லாமல் மகிமையின் கர்த்தரல்ல என்பது தெளிவாகிறது.

பெர்சியாவின் அதிபதி
The Prince of Persia

"அப்பொழுது அவன் என்னை நோக்கி: தானியேலே பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாக சிறுமைப்படுத்துகிறதற்கும் உன் மனதைச் செலுத்தின முதல் நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்; பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள் மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான்; ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான்; ஆதலால் நான் அங்கே பெர்சியாவின் ராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன்" தானி. *10:12-13.* 'நான் தரித்திருந்தேன்' என்பது புதிய திருப்புதல்களின் கரையோரத்தின்படி Margin 'நான் தேவைப்பட்டிருக்கவில்லை' I was not needed என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பிற்பாடு Later காபிரியேல் பெர்சியாவின் அதிபதியுடன் போரிட தான்; திரும்பி செல்வதாகக் கூறினார்.

காபிரியேல் தானியேலிடம் கூறிய முதல் வார்த்தைகளே தானியேலின் ஜெபத்திற்கு பதிலளிக்கிறதில் அவருடைய தாமதத்துக்கான ஓர் விளக்கமே! இருபத்தொரு நாட்களுக்கு பெர்சியாவின் அதிபதியால் தான் தடுத்து நிறுத்தப்பட்டதாக அவர் கூறினார். அதாவது தானியேல் ஜெபித்துக் கொண்டிருந்ததான அதே கால நீட்சிக்கு! பிரதானதூதனான Archangel (யூதா. *9)* மிகாவேல் அவரது மீட்புதவிக்கு வந்திராதிருந்தால் அவர் இன்னமும் அங்கேயே இருந்திருக்கநேரிடும். இங்கே திரையானது நீக்கப்படுகிறது. காணப்படா உலகத்தின் Unseen World செயற்பாடுகளில்

சிலவற்றை நமக்கு காட்டப்படுகிறது. ஆவி உலகத்துக்கும் Spirit World மற்றும் பூமியின் மீதுள்ள மனிதர் மற்றும் தேசங்களுக்கு இடையே உள்ள தொடர்பைப் பற்றியும் காட்டப்படுகிறது. இங்குவரும் பெர்சியாவின் அதிபதி பெர்சியாவின் ராஜா கோரேஸ் அல்ல! கோரேஸ் போன்ற ஓர் மானிட உரு Human Being காபிரியேல் போன்ற தேவனுடைய ஓர் தூதைக் கொண்ட ஓர் இயல் நிலைகடந்த உருவை இருபத்தொரு நாட்களுக்கு தடுத்து நிறுத்தக் கூடுமோ என்பதை யாராலும் ஒரு வினாடிக்குக்கூட நினைத்துப் பார்க்க இயலாது. வேதசத்தியங்கள் ஓர் 'இருளின் ராஜ்யம்' இருக்கிறதை தெளிவாகக் கற்பிக்கிறது.

இருளின் ராஜ்யம்
Kingdom of Darkness

இதன் மீது சாத்தான் ராஜாவாக அரசாளுகிறான், (மத். 12:24-30). இந்த ராஜ்யம் துரைத்தனங்களாலும், அதிகாரங்களாலும் இவ்யுகத்தின் அந்தகார லோகாதிபதிகளாலும் வான மண்டலத்து பொல்லாத ஆவிகளாலும் இணைந்து ஆக்கப்பட்டுள்ளது, எபே. 6:12-ல் இவை யாவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கே பவுல் கூறுகிறார்: 'நாம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் (மானிட உருக்கள் Human beings) மாத்திரமல்ல' எனக் கூறியபின் மேற்கூறிய இருளின் ராஜ்ய ஆக்கக்கூறுகளைக் குறிப்பிடுகிறார். சாத்தான் 'ஆகாயத்து அதிகாரப்பிரிவு' எனப்படுகிறான், எபே. 2:2, மற்றும் 'இவ்வுலகத்தின்(யுகத்தின்) தேவன்' என்னப்படுகிறான், (எபே. 2:2). இவ்வுலகத்தின் சகல ராஜ்யங்களையும், அவைகளின் மகிமையும் இயேசுவுக்கு கொடுக்க முன்வந்தபோது, அது சாத்தான் பண்ணின தவறான உரிமைக்கோரல் அல்ல!, மத். 4:8-9.

இதிலிருந்து சாத்தான் தனது ராஜ்யம் ஓர் அற்புதமான விதத்தில் நிர்வகிக்கப்பட்டதாகக் கொண்டுள்ளதைப் பார்க்கிறோம். அது துரைத்தனங்களாகவும், ராஜ்யங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன; இந்த பிரிவுகள் நமது பூமியின் ராஜ்ய பிரிவுகளோடு ஒத்திசைவு கொண்டுள்ளன. சாத்தான் ஓர் பெர்சியாவின் அதிபதி மற்றும் ஓர் கிரேசியாவின் அதிபதியைக் கொண்டிருந்தால், ஒவ்வொரு தேசத்துக்கும் ஏன் இருக்கக்

கூடாது? சாத்தானுக்கு தனக்கென வறையறைகள் உள்ளன. அவன் சர்வவியாபி Omnipresent அல்ல! சர்வவல்லவன் Omnipotent அல்ல! மற்றும் சர்வ நிறைபேரறிவாளன் Omnicient அல்ல! அவன் தனது செயலிகளை Agents சார்ந்து இருக்க வேண்டியுள்ளது. அவனது அதிபதிகள் Princes மிக உயர்ந்து சக்தி வாய்ந்துள்ளபடியால் பிரதான தூதன் மிகாவேல் போன்ற இயலுலகு கடந்த வானுருக்களாலேதான் அவர்களை மேற்கொள்ள முடியும். மிகாவேலுக்கே சாத்தான் தானும் ஓர் ஈடுகோடானவனாய் Match உள்ளது. வேதசத்தியங்களில் பதிவு செய்யப்பட்ட இரு சான்றுகளிலிருந்து காணலாம். யூதா.9-ல் மோசேயுடைய சரீரத்தைக் குறித்து மிகாவேல் சாத்தானுடனே தர்க்கித்துப் பேசினதையும், மிகாவேல் வெற்றி எடுத்த போதிலும், அவர் சாத்தானை மரியாதையோடு நடத்தினதைப் பார்க்கிறோம். ஏனெனில், சாத்தான் ஓர் மாபெரும் மற்றும் 'வல்லமைமிக்க ஆளுநன்' வெளி. *12:1-9*ல் 'வானத்தில் யுத்தம்' இருக்கப் போகிறதையும், மிகாவேல் மற்றும் அவனது தூதர்கள் சாத்தானையும் அவனது தூதர்களையும் மேற்கொண்டு ஜெயிக்கவுள்ளதையும், அத்துடன் அவர்கள் (சாத்தான் பரிவாரம்) வான மண்டலங்களிலிருந்து பூமியின் மேல் தள்ளப்பட்டுப் போவதையும் நமக்கு சொல்லப்படுகிறது. வெளி. *12:1*லிருந்து மிகாவேல் இஸ்ரவேல் மக்களுக்காக நிற்கிற 'பாதுகாப்பு தேவதூதன்' Guardian Angel எனவும் அறிகிறோம்.

பெர்சியாவின் அதிபதி காபிரியேலை தடுத்து நிறுத்தியதின் நோக்கம் யாதெனில், அவனது மேலெஜமான்- சாத்தான் யூதர்களுக்கு எதிராளியாயிருந்தான் Hostile; அவனுடைய திட்டங்கள் தானியேலுக்கு வெளிப்படுத்தப்படுவதை அவன் விரும்பவில்லை; இது அடுத்த வசனத்தில் உருவரை செய்யப்பட்டபடி தானியேலின் வருகை சந்திப்பினுடைய நோக்கத்தில் காணப்படுகிறது.

காபிரியேலுடைய வருகைச் சந்திப்பின் நோக்கம்
The Purpose of Gabriel's Visit

'இப்போதும் கடைசி நாட்களில் உன் ஜனங்களுக்கு சம்பவிப்பதை உனக்குத் தெரியப்பண்ணும்படிக்கு வந்தேன்; இந்த தரிசனம் நிறைவேற இன்னும் நாள் செல்லும் என்றான்' தானி. *10:14*

இது ஓர் மிக முக்கிய வாசகம் Statement. புத்தகத்தின் மீந்த பகுதியின் பொருள் விளக்கத்துக்கு திறவுகோலை நமக்குக் கொடுக்கிறது. ஆனால், கடைசி நாட்களில் தேவனுடைய மக்களுக்கு என்ன நேரிடவுள்ளது என காபிரியேல் வெளிப்படுத்து முன்பாக ஓர் 'முற்செயல்' Prelude உள்ளது; அது தாலமியர்கள் Ptolemies மற்றும் செலூக்கியர்கள் Seleucidae எனும் மகா அலெக்சாண்டரது சாம்ராஜ்யம் பிளவுபட்டதால் ஏற்பட்ட நான்கு ராஜ்யங்களில், இரண்டு ராஜ்யங்களுடைய யுத்தங்களை விவரிக்கின்றது. அவை வடதிசை ராஜா மற்றும் தென்திசை ராஜா என பேசப்படுகின்றன. அவை அந்தியோகு எபிப்பானஸ்சுடைய ஆட்சியின் முடிவு கி.மு. *164* வரை நம்மை எடுத்துச் செல்லுகின்றன. இந்த முற்செயல் Prelude அதிகாரம் *11:31*வுடன் முடிவடைகிறது. வசனங்கள் *32-35* மக்கபேயர்கள் Maccabees கி.மு. *166* காலம் தொடங்கி முடிவின் காலம் Time of the End வரைக்கும் உள்ள முழுகால நீட்சியையும் பரப்பி மூடுகிறது. வசனம் *36* தன்னிஷ்டராஜா - அந்திக்கிறிஸ்துவுக்கு நம்மை அறிமுகம் செய்கிறது; அதிலிருந்து புத்தகத்தின் முடிவுவரை கடைசி நாட்களில் Latter Days தானியேலின் மக்களுக்கு நேரிடப்போவதைக் குறித்த ஓர் தொகுப்பு நமக்குள்ளது.

தீர்க்கன் பலப்படுத்தப்படுகை
The Prophet Strengthened

'அவன் (காபிரியேல்) இந்த வார்த்தைகளை என்னோடே சொல்லுகையில், நான் தலை கவிழ்ந்து தரையை நோக்கி, பேச்சற்றுப் போனேன் Dumb. அப்பொழுது மனுபுத்திரரின் சாயலாகிய ஒருவன் என் உதடுகளைத் தொட்டான்; உடனே நான் என் வாயைத் திறந்துப் பேசி எனக்கு எதிரே நின்றவனை நோக்கி: என் ஆண்டவனே, தரிசனத்தினால் என் மூட்டுகள் புரண்டன; பெலனற்றுப் போனேன்; ஆகையால், என் ஆண்டவனுடைய அடியேன் என் ஆண்டவனோடே பேசக்கூடுவதெப்படி? இனி என்னில் பெலனில்லை, என்னில் மூச்சுமில்லை என்றேன்': தானி. *10:15-17*

தானியேல் காபிரியேலின் வார்த்தைகளுடைய உட்பொருளை தெளிவாக உணர்ந்தபோது, அவர் பேச்சற்று ஊமையாகினார்; ஆனால், மனுபுத்திரரின் சாயலாகிய ஒருவன்

அவரது உதடுகளைத் தொட்டது வரைக்கும்! பின்பு அவர் (தானியேல்) வாயைத் திறந்து பேசினார்; இது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து ஒரு நெருப்புத்தழலை எடுத்துவந்து, ஏசாயாவின் உதடுகளைத் தொட்டதை (ஏசா. 6:6-7) நமக்கு ஞாபகப்படுத்துகிறது; ஆண்டவனென்று Lord இந்த தேவதூதுருவை Angelic Being முகவரியிட்டு பேசினாலும், ஆங்கிலத்தில் Lord என்பதிலுள்ள 'L' எனும் முகட்டெழுத்தில் தொடங்காதபடியால் இது மகிமையின் கர்த்தரை Lord of Glory இங்கே குறிப்பிடாது எனக் காட்டுகிறது. தானியேலின் பேச்சுத்திறனை சேராபீன் Seraphim மீட்டாக்கம் செய்திருந்த பின்பு, காபிரியேல் அவரை மீண்டுமாக அணுகி பலப்படுத்தினார்.

'அப்பொழுது மனுஷரூபமான ஒருவன் (தூதர்கள் மனிதர் போன்று தோன்றினர்) திரும்ப என்னைத்தொட்டு, என்னைத் திடப்படுத்தி, பிரியமான புருஷனே பயப்படாதே உனக்கு சமாதானம் உண்டாவதாக! திடங்கொள், திடங்கொள் என்றான்; இப்படி அவன் என்னோடே பேசுகையில் நான் திடங்கொண்டு, அவனை நோக்கி என் ஆண்டவன் பேசுவாராக என்னைத் திடப்படுத்தினீரே என்றேன். அப்பொழுது அவன்: நான் உன்னிடத்திற்கு வந்த காரணம் இன்னதென்று உனக்குத் தெரியுமா? இப்போது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம் பண்ணத் திரும்பிப்போகிறேன்; நான் போன பின்பு, கிரேக்கு தேசத்தின் அதிபதி வருவான். சத்திய எழுத்திலே கண்டிருக்கிறதை நான் உனக்குத் தெரிவிப்பேன்; உங்கள் அதிபதியாகிய மிகாவேலைத் தவிர என்னோடே கூட அவர்களுக்கு விரோதமாய்ப் பலங்கொள்ளுகிற வேறொருவரும் இல்லை. மேதியனாகிய தரியு அரசாண்ட முதலாம் வருஷத்திலே நான் அவனைத் திடப்படுத்தவும், பலப்படுத்தவும் அவனுக்கு துணை நின்றேன்', தானி.10:18-11:1.

மீண்டுமாக தானியேலைத் தொட்ட தேவதூத வானுரு Angelic Being வசனம் 10-ல் அவரைத் தொட்ட அதே வானுருவாயிருந்தார். ஏனெனில் அவர் 'பிரியமான புருஷனே' எனும் அதே வாழ்த்துரையை பயன்படுத்துகிறார்; மற்றும் பெர்சியாவின் அதிபதியோடே யுத்தம் பண்ண உடனே திரும்பிப் போகயிருப்பதாக தீர்க்கமாகக் கூறினார். அத்தோடு

அவர் தானும் மற்றும் மிகாவேலும் சாத்தானித்துவ அதிகாரங்களுக்கு Satanic Powers எதிரான 'உடன் பணியாட்கள்' Co - Workers என்றார். ஏனெனில், மேதியனாகிய தரியுவின் முதல் ஆண்டிலே 'பாபிலோனின் வீழ்ச்சி' மிகாவேலுடைய கூட்டுதவியால் Cooperation நடைமுறையில் கொண்டுவரப்பட்டது.

சத்திய வேத வசனங்கள்
இரண்டாம் பாகம்
Part Two

வடதிசை மற்றும் தென்திசை ராஜாக்களுடைய முன்னெழுதப்பட்ட சரித்திரம்

The Pre-Written History of the Kings of the North and the South

அதிகாரம் 11:2-35

இந்தஅதிகாரத்தில்'சத்தியத்தின் வேதஎழுத்துக்கள்' Scripture of Truth *எனக் காபிரியேல் அழைக்கிறதெதுவோ அது நமக்கு உள்ளது. இது தென்திசை ராஜாக்களான எகிப்தியருடைய* Ptolemies *'டாலமீயர்களுக்கும்' மற்றும் வடதிசை ராஜாக்களான 'சிரியாவுடைய'* Seleucidae *செலூக்கியர்களுக்குமிடையேயான யுத்தங்களின் ஓர் முன்னெழுதப்பட்ட சரித்திரமாகும். இங்கே மிகத்துல்லிபமாய் முன்னுரைக்கப்பட்ட, முன்னதாக எழுதப்பட்ட சரித்திரம் நமக்குள்ளது; அதின் சாத்தியக்கூறை ஏற்காத தர்க்கவல்லுநர்கள் தானியேல் புத்தகம் உரிமை கொண்டாடுகிறபடியான வெகுமுந்தைய காலத்தே (கி.மு. 533) எழுதப்பட்டிருக்கக்கூடாது, மாறாக தாலமியர்கள்* Ptolemies *மற்றும் செலூக்கியர்களின்* Seleucidae *யுத்தங்கள் முடிந்த பிற்பாடு அல்லது சுமார் கி.மு. 160ல் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்கின்றனர். ஏனெனில், தானியேலுக்கோ அல்லது வேறெந்த நபருக்கோ அத்தனைத் துல்லிபமாக இப்போர்களைக் குறித்து அவை நடைபெற்றதற்கு முன்பே விவரிப்பது என்பது கூடாதது என்கின்றனர். ஆனால், இங்கே வேத சத்தியங்கள் மற்றும் தர்க்க வல்லுநர்கள் வாதாடுகை பிரிவுபடுகின்றது உண்மை!*

வேத சத்தியங்கள் Scriptures *பரிசுத்த ஆவியால் உள்ளுணர்வு பெற்றிருந்துள்ளவையாக* Inspired *உரிமை*

பாராட்டுகின்றன. (2தீமோ. 3:15-17). 'தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்' என 2 பேதுரு. 1:19-21-ல் உரிமை கோரப்பட்டுள்ளது. தீர்க்கதரிசனம் அப்படியானால் முன்னதாக எழுதப்பட்ட சரித்திரமே! தேவனுடைய ஆவி Spirit of God சரித்திரத்தை முன்னதாக Before எழுதக்கூடும்; பின்னதாகவும் Afterwards எழுதக்கூடும். 'தீர்க்கதரிசனத்தைத் திரை நீக்கும் சரித்திரம்' History Unveiling Prophecy எனும் கவர்ச்சிக்கும் வாசகத்தை, 'சரித்திரத்தை முன்னுரைக்கும் தீர்க்கதரிசனம்' Prophecy Fore-Telling History என வாசிக்க எதிர்மறையாக்க வேண்டும், Reversed.

தீர்க்கதரிசனத்துடைய சரித்திர ரீதிய பொருள்படுத்துகை Historical Interpretation எப்பொழுதுமே தொல்லைக்குள்ளாக்கும். எப்படியெனில், சரித்திர நிகழ்ச்சிகளுடைய போலியான/வலிந்துபுகுத்திய பொருளளிப்புக்கு Forced Interpretation அது வழிகோலும். தீர்க்கதரிசனத்துக்கு சரித்திரத்தினுடைய தொடர்பு பொருள்படுத்தலினுடையதன்று. மாறாக, மெய்ப்பித்துச் சரி பார்த்தலிலுள்ளது Verification. இது தீர்க்கதரிசனத்தை 'இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கு' 2 பேதுரு 1:19 ஆக்குகிறது. அதாவது, எதிர்காலத்தை முன்மதிப்பீடு Forecast செய்தலால் தீர்க்கதரிசனம் எதிர்காலத்தைப் பிரகாசிப்பிக்கிறது.

தீர்க்கதரிசனத்துடைய விரிவான துல்லிபம் மிக்க அதிசயிக்கத்தக்கது! முந்தையக் காட்சிகளைப் போல தீர்க்கதரிசனம் உருவகங்களாலும், சின்னங்களாலும் உடுத்துவிக்கப்படுபவையல்ல! உண்மையில், இது ஓர் காட்சியல்ல! மாறாக, தானியேலின் காலத்திலிருந்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையுள்ள தானியேலின் மக்கள் மற்றும் பரிசுத்த பூமியைப் பற்றிய வரலாற்று நிகழ்வுகளுடைய எழுத்தியல்பான Literal மொழியிலான ஓர் விரித்துரைத்தலாகிறது. தெளிவுக்காக வசனம், வசனமாக தீர்க்கதரிசனத்தை எடுத்தாய்வோம். தேவையானால் அநேக வசனங்களை ஒன்றாகவும் எடுத்து ஆராய்வோமாக. தீர்க்கதரிசனம் அதிகாரம் பதினொன்றின் இரண்டாம் வசனத்திலிருந்து ஆரம்பிக்கிறது.

வசனம் 2: 'இப்பொழுது நான் மெய்யான செய்தியை ('மெய்மையின் திருவசனங்கள்' Scripture of Truth அதி. 10:21)

உனக்கு அறிவிப்பேன். இதோ இன்னும் மூன்று ராஜாக்கள் பெர்சியாவில் எழும்புவார்கள்; அதின்பின்பு நாலாம் ராஜாவாயிருப்பவன் எல்லாரிலும் மகா ஐசுவரிய சம்பன்னனாகி, தன் ஐசுவரியத்தினால் பலங்கொண்டு, கிரேக்கு ராஜ்யத்துக்கு விரோதமாகச் சகலரையும் எழுப்பிவிடுவான்'

தீர்க்கதரிசனம் கோரேசின் மூன்றாவது வருடத்தில் கொடுக்கப்பட்டதால், *(அதி. 10:1, கி.மு. 533)* இன்னமும் எழும்பவிருந்த, அதாவது, அவருக்குப் பின்பு நிற்கவுள்ள மூன்று ராஜாக்கள் அகாஸ்வேரு Ahasuerus, அர்த்தசஷ்டா Artaxerxes மற்றும் தரியு Darius *(எஸ்றா. 4:1-24)* ஆகிய இம்மூவர் சரித்திரத்தில் Cambyses *(கி.மு. 529 - 522)*, Pseudo-Smerdis *(கி.மு. 522 - 521)* மற்றும் Darius Hystaspes*(கி.மு. 521-485)* என அறியப்பட்டோரே! நான்காவது ராஜா Xerxes ஆனார் *(கி.மு. 485 - 465)*. இவர் Darius Hystaspes தரியுஹிஸ்தாஸ்பஸ்ஸூடைய குமாரனாவார். அவருடைய(Xerxes) அற்புதமிக்க செல்வச் செழிப்புகள் அவரைக் களத்திலே பரந்து விரிந்த மிகு சேனைகளை நிறுத்தக்கூடியதாக்கீற்று. அவன் கிரேக்குக்கு எதிராகப் பெர்சியாவை எழும்பப்பண்ணினான். அதைக் கி.மு. 480-ல் படையெடுத்துத் தாக்கினான்; ஆனால், அதை முறியடித்து ஜெயிக்கத்தவறினான். தீர்க்கதரிசனம் முக்கியமான நிகழ்வுகள் மற்றும் தன்மையாட்களை Characters தொடுகிறபடியால் பெர்சியாவின் மீதமுள்ள ராஜாக்கள் விடுபட்டுள்ளனர். தீர்க்கதரிசனம் 150 வருடங்களைத் தாவி மகா அலெக்சாண்டருடைய காலத்துக்குக் குதிக்கிறது *(கி.மு. 336 - 333)*

வசனம் 3-4: 'ஆனாலும், பராக்கிரமமுள்ள ஒரு ராஜா எழும்பி, பிரபலமாய் ஆண்டு, தனக்கு இஷ்டமானபடிச் செய்வான். அவன் எழும்பின பின்பு, அவனுடைய ராஜ்யம் உடைந்துபோய் வானத்தின் நாலுதிசைகளிலும் பகுக்கப்படும்; ஆனாலும், அது அவனுடைய சந்ததியாருக்கு அல்ல; அவன் செய்த ஆளுகையின் படியும் அல்ல; அவனுடைய ராஜ்யம் பிடுங்கப்பட்டு, அவனுடையவர்களல்லாத வேறேபேர்களிடமாய்த் தாண்டிப்போம்'.

இவ்வசனங்கள் நம்மை 'ஆட்டுக்கடா மற்றும்

வெள்ளாட்டுக்கடா'வின் காட்சிக்குத் (தானி. *8:3-8, 20-22*) திரும்ப எடுத்துச் செல்லுகின்றன; பராக்கிரமமுள்ள ராஜாவில் உடைபட்டுப்போன வெள்ளாட்டுக்கடாவின் விசேஷித்தக் கொம்பை அடையாளங்கண்டு கொள்கிறோம். அதினிடத்தில் முளைத்தெழும்பிய நான்கு கொம்புகளில் இப்பராக்கிரமமுள்ள ராஜாவின் ராஜ்யம் ஆகாயத்தின் நாலு திசைகளுக்கும் எதிராய்ப் பிளவுபடுதலையும், இனங்கண்டு கொள்கிறோம். இப்பராக்கிரமமுள்ள ராஜா அப்படியானால், மகா அலெக்சாண்டரே! அவனுடைய ராஜ்யம் ஆகாயத்தின் நான்கு திசைகளை நோக்கிப் பிளவுபடுதல் அவனுடைய ராஜ்யம், அவனது மரணத்தின் போது, அவனுடைய நான்கு தளபதிகளுக்குமிடையே பிளவுபடுகையாயிற்று. கசாண்டர் மாசிதோனியா மற்றும் மேற்குப்பகுதியை எடுத்தான்; லைசிமாக்கஸ் திரேசையும், வடபகுதியையும் எடுத்தான். செலூக்கஸ் சிரியாவையும், கிழக்குப் பகுதியையும் எடுத்தான்; Ptolemy தாலமி எகிப்தையும், தெற்குப் பகுதியையும் எடுத்தான். மகா அலெக்சாண்டரின் சந்ததியில் எவரும் அவனை ஆட்சி மரபில் தொடரவில்லை; பதினைந்து வருடங்களில் அவனது குடும்பம் இல்லாது மறைந்து விட்டது.

வசனம்: *5*

'தென்திசை ராஜா பலவானாயிருப்பான்; ஆனாலும், அவனுடைய பிரபுக்களில் ஒருவன் அவனைப்பார்க்கிலும், பலவானாகி ஆளுவான்; இவனுடைய ஆளுகை பலத்த ஆளுகையாயிருக்கும்.

மகா அலெக்சாண்டருடைய சாம்ராஜ்யம், நான்கு ராஜ்யங்களாக பிளவுபட்டதில் இரண்டுக்கு நேராக தீரக்கதரிசனம் இப்பொழுது சுருங்கி நெருங்குகிறது Narrowsdown. காரணம் தெளிவாயுள்ளது. தீர்க்கதரிசனம் தானியேலின் மக்களுக்கு உரித்தானது என்று தானியேலுக்குக் காபிரியேல் கூறினார். 'சிங்காரமானதேசம்' Glorious Land (பாலஸ்தீனா- வச. *26,41,45*) வடபக்கம் 'சிரியா' மற்றும் தென்பக்கம் 'எகிப்து', ஆகியவற்றினிடையே இடவமைப்புப் பெற்றிருந்ததால் தீர்க்கதரிசனம் வடதிசை ராஜாக்கள் மற்றும் தென்திசை ராஜாக்களிடையேயானப் போர்களது ஓர் விவரணத்துக்கு

நேராய் சுருங்கி நெருங்கிவிடுகிறது. அவைகளுடையப் படை அணிவகுப்புப் பூமியாகவும், போர்க்களமாகவும் சிங்காரமான தேசம் இருக்கவுள்ளது. அங்கே நூற்றாண்டுகளாக *(கி.மு. 320 - கி.பி.?)* தானியேலின் மக்கள் மேலுள்ள மற்றும் கீழுள்ள எந்திரக்கற்களினிடையே அரைக்கப்படவுள்ளனர்; இப்போர்கள் தானியேலின் மக்களுக்குக் கொண்டு வரவுள்ள துன்ப வேதனைகள் மற்றும் அவை நாட்டுக்கு ஏதுவாக்கப் போகின்ற பாழாக்குகைக் காரணமாக இப்போர்களை தேவன், தானியேலுக்கு வெளிப்படுத்தினார்; அதின்மூலம் அவரது ஜனங்கள் ஓர் தேசமாக எப்போதாகிலும் மீள உருவெடுக்க அநேக நாட்கள் (அதி. 10:14) செல்லும் என்று தானியேல் கண்டுகொள்ளவேயம்!

மகா அலெக்சாண்டரின் சாம்ராஜ்யம் பிளவுபட்டேற் பட்ட நான்கு ராஜ்யங்களில் எகிப்து ராஜ்யமே முதலில் தோன்றியது. இது Ptolemy Soter எனும் அலெக்சாண்டரது தளபதிகளில் ஒருவனால் ஸ்தாபிக்கப்பட்டது Founded. அலெக்சாண்டரது தளபதிகளில் இன்னொருவனானSeleucus Nicator பாபிலோனியாவின் பகர ஆட்பேராக Vice Gerent நியமிக்கப்பட்டான். ஆனால், அவன் அதைவிட்டு Anti-Gonus ஆல் துரத்தப்படவே எகிப்துக்கு ஓடிப்போனான்; அங்கே Ptolemy-யால் அவன் பேராதரவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பிரபுக்களில் ஒருவனாக்கப்பட்டான். Ptolemy- யுடைய உதவியுடன் தன்னுடைய பிராந்தியத்தை மீட்டெடுத்து அதை விரிவுபடுத்தினான். அதினிமித்தம் அது Indus வரை வியாபித்தது; மேலுமாக சிரியா மற்றும் அசிரியா அதில் உள்ளடக்கப்பட்டன; இவ்வாறாக, அவன் (Seleucus Nicator) Ptolemy- ஐவிட பலத்துப்போனான்; அவன் ஆதிக்கம் ஓர் மாபெரும் ஆதிக்கமானது.

வசனம் : 6

'அவர்கள் சில வருஷங்களுக்குப் பின்பு, ஒருவரோ டோருவர் சம்பந்தம் பண்ணும்படிக்குத் தென்திசை ராஜாவின் குமாரத்தி, வடதிசை ராஜாவினிடத்திலே வருவாள். ஆனாலும், அவளுக்குப் புயபலம் இராமற்போம்; அவனும், அவனுடைய புயமும் நிலை நிற்பதில்லை. அவளும், அவளை அழைத்து

வந்தவர்களும் Her Attendants, அவளைப் பெற்றவனும், அவள் பெற்றவனும் அவளை, அக்காலங்களில் பலப்படுத்தினவனும் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்'.

Ptolemy Soter மற்றும் Seleucus Nicator- ருடைய ஆட்சிகளின்போது, எகிப்துக்கும், சிரியாவுக்குமிடையே சமாதானம் நிலவியது. ஆனால், கடைசியில் Ptolemy Soter தனது குமாரன் Ptolemy Philadelphus - க்குச் சாதகமாக தனது பதவியைத் துறந்தான். அவனது ஒன்றுவிட்ட உடன்பிறந்தான்Half Brother 'Magas' என்பவன் Antiochus Soter -ருடைய ஓர் மகளை விவாகம் செய்திருந்தான். Antiochus Soter, சிரியாவின் ராஜாவாக Seleucus Nicator-ன் பின்வாரிசாகத் தொடர்ந்திருந்தான். இத்திருமணம் எகிப்து மற்றும் சிரியாவினிடையே போர்மூள வழிகோலியது. ஏனெனில், Magas தனது மாமனாராகிய Antiochus Soter -ஐ எகிப்துக்கு எதிரே போரைப் பிரகடனப் படுத்தத் தூண்டினான். Antiochus Soter, Antiochus Theus- ஆல் பின்வாரிசாகத் தொடரப் பட்டான்; அவனும் Ptolemy-யுடன் போர் செய்யத் தொடர்ந்தான். முடிவில் 'வருடங்களின் முடிவில்' At the End of Years சமாதானத்துக்கான ஓர் கைக்கூலியாக Bribe தனது மகள்-Berenice-ஐ ஓர் பெரிதளவு சீர்வரிசையுடன் Dower Antiochus Theusக்கு திருமணத்தில் கொடுக்க இசைவளித்தான். ஆனால், ஒரே நிபந்தனையின் பேரில்! அதாவது, சிரியாவின் ராஜா Laodice-சுடனான அவனது முந்தின திருமணத்தை செல்லுபடியற்றதாகப் பிரகடனப்படுத்த வேண்டும்; அத்தோடு அவனது இருகுமாரரையும் சட்டத்துக்குப் புறம்பே முறைகேடாய்ப் பிறந்தவர்கள் Illegitimate எனவும் பறைசாற்ற வேண்டும். இவ்வநீதி கொடுமைக்குரிய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், Ptolemy Philadelphus மரித்த வேளையில், அவனது மகள் Berenice -க்கு தனது புயபலத்தை Power of her Arm விடாது வைத்திருக்க முடியவில்லை; ஏனெனில், அவளை Antiochus Theus துரத்திவிட்டான்; அத்துடன் தனது முந்தைய மனைவி Laodice-ஐத் திரும்ப சேர்த்துக் கொண்டான். ஆனால், அவன் தன்னில்தான் நிற்கவும் இல்லை; ஏனெனில், Laodice, அவனுடைய செயல் நோக்கங்களை ஐயுறவு கொண்டு மற்றும் தன்னுடைய சொந்த குமாரன் கிரீடத்தைப் பற்றிக் கொள்வதற்கு பேராவல் கொண்டு தனது கணவனை

நஞ்சூட்டினாள். இவ்விதமாய் அரச பின்னுரிமை ஏற்பை Seleucus Callinicus-க்குத் திறந்து வைத்தாள். பின்னர், Laodice,Seleucus-ஐ Berenice படுகொலை செய்யப்படுவதற்கு அறிவுறுத்தி இணங்க வைத்தாள். அத்துடன் அவளுடைய மகன் (Child) கூட, அதாவது அவளது திருமண சட்ட உடன்படிக்கைகளின் படி அரியணைக்கு வாரிசாக்கப்பட்டிருந்த அவளது மகன் கூட கொல்லப்பட்டான்; அவளை அக்காலங்களில் பலப்படுத்தின அத்தனை பேர்களுங்கூட கொல்லப்பட்டனர்.

வசனம் 7-8: 'ஆனாலும் அவளுடைய வேர்களின் கிளையாகிய ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்பி, இராணுவத்தோடேவந்து, வடதிசை ராஜாவின் அரணிப்புக்குள் பிரவேசித்து, அவர்களை விரோதித்து, அவர்களுடைய அதிபதிகளையும், அவர்களுடைய விலையேறப் பெற்ற வெள்ளியும் பொன்னுமான பாத்திரங் களையும், அவர்களுடைய தெய்வங்களையும் கூட எகிப்துக்கு கொண்டு போய், சில வருஷங்கள் மட்டும் வடதிசை ராஜாவைப் பார்க்கிலும் நிலையாய் நிற்பான்'.

'அவளுடைய வேர்களின் ஓர் கிளையிலிருந்து' என்பது Bereniceன் பெற்றோருடைய ஓர் வழிமரபு Offspringஎனப் பொருளளிக்கும். அவளுடைய சகோதரன் Ptolemy Euergetus-ஐச் சுட்டும். அவன் தனது தகப்பன் Ptolemy Philadelphus-சுடைய வாரிசாய்ப் பின் தொடரப்பட்டவன். இவன் (Ptolemy Euergetus) தனது சகோதரி நடத்தப்பட்ட முறைக்காய் கடுஞ்சினங்கொண்டு, துரிதமாக ஓர் பெரிய படையுடன் சிரியாவை நோக்கி அணிவகுத்துச் சென்றான். பெர்னிசையும் Berenice அவளது குமாரனையும், காப்பாற்றக்கூடாதபடி தாமதமாய் வந்தடைந்த போதும் Laodice -ஐ மரணத்துக்குள்ளாக்கிப் பழி தீர்த்தான். செலூக்கியா எனும் வடதிசை ராஜாவின் கோட்டையைப் பிடித்தான். ராஜ்யம் முழுமையையும் தனது வசமாக்க விருந்தவேளையில், எகிப்தில் கிளர்ச்சிக்கானத் தொடக்க நிலை எழுச்சி காரணமாக, அவன் திரும்ப அழைக்கப்பட்டுவிட்டான். ஆனால், வெறுங்கையுடன் அவன் திரும்பி வரவில்லை. அவன் தன்னுடன் அநேகப் பிரபுக்களை கொண்டு வந்தவுடன் 40,000 தாலந்துகள் மதிப்பிலான எடைஅலகுள்ள வெள்ளி மற்றும் 2500 விலையேறிய பாத்திரங்கள் மற்றும் தெய்வங்களின் விக்கிரக

சிலைகள் பலவற்றையும் கொள்ளைப் பொருட்களாகக் கொண்டு வந்தான். இச்சிலைகளில் அநேகம் Cambyses (ஆகாஸ்வேரு) கி.மு.529-522 முன்னோடிய காலத்தே எகிப்திலிருந்து எடுத்துவந்து பெர்சியாவுக்குள் சேர்க்கப்பட்டிருந்தவை. இப்போது எகிப்தின் கோவில்களுக்குள் மிகுந்த ஆரவாரக் கொண்டாட்டங்களுடன் மீள வைக்கப்பட்டன. இம்மீட்டாக்கத்திற்கான நன்றிப்படையலாக எகிப்திய பூசாரிகள் Ptolemy மீது சிறப்புப்பெயர் Euergetes அல்லது Benefactor- ஐ வழங்கினர்.

வசனம் 9-10:

'தென்திசை ராஜா அவன் ராஜ்யத்துக்கு விரோதமாக வந்து, தன் தேசத்துக்குத் திரும்பிப் போவான்; ஆனாலும், அவனுடைய குமாரரர் யுத்தஞ்செய்ய எத்தனித்துத் திரளான சேனைகளைக் கூட்டுவார்கள்; இவர்களில் 'ஒருவன்' நிச்சயமாய் வந்து, வெள்ளம் போலக் கடந்து திரும்பவும் தன்னுடைய அரண் மட்டும் யுத்தங்கலந்து சேருவான்'.

'மறு திருப்புதல்'Revised Version இவ்விரு வசனங்களை வேறு விதமாக மொழியாக்குகின்றது. ஆனால், கீழ்வருமாறு வாசித்தால் அவைகளின் அர்த்தம் தெளிவாகும். 'அப்படியே தென்திசை ராஜா அவன் (வடதிசை ராஜா)வுடைய ராஜ்யத்துக்கு விரோதமாக வந்து தன் தேசத்துக்கு (எகிப்து) திரும்பிப்போவான். அவ்வாறு அவன் செய்ததை நாம் பார்த்துள்ளோம். ஆனால், அவனுடைய குமாரரர் - தென்திசை ராஜாவுடைய குமாரரல்ல - மாறாக, வடதிசை ராஜாவினுடைய குமாரரே! தென்திசை ராஜாவின் படையெடுப்பால் எழுச்சிப்பட்டெழுவர் Stirred up. 'திரளான எண்ணிக்கையிலான பெருஞ்சேனைகளைக் கூட்டுவார்கள்; இதுவே நிஜத்தில் நடந்தேறியது என நாம் அறிகிறோம். Seleucus Callinicus- உடைய குமாரர்கள் Seleucus Ceraunus மற்றும்'Antiochus' அதாவது Magnus (The Great) எனும் பட்டப்பெயர் கொண்டவன் மாபெரும் சேனைகளைக் கூட்டினர்; Seleucus Ceraunus தனது தகப்பனை வாரிசு பின் தொடர்ந்தான். அவன் தனது தகப்பனுடைய ஆதிக்கங்களை மீளப்பெற மாபெரும் சேனையைத் திரட்டினான். ஆனால், ஓர் பலவீன, மனவலிமையற்ற இளவரசனாயிருந்த அவன் தனது

சேனையைக் கட்டுப்படுத்தக் கூடாதவனா இருக்கவே, இரண்டு அல்லது மூன்று வருட பிரபலமற்ற ஆட்சியின் பின்பு, அவன் தனது படைத்தளபதிகளில் இருவரால் நஞ்சூட்டப்பட்டான். அவனது சகோதரன் Antiochus -ல் அவன் பின்னாட்சி தொடரப்பட்டான். அவன் ஓர் பெருஞ் சேனையைக் கூட்டித் தன் நிலையில் In Person களத்தை எடுத்தான். வசனத்தில் வரும், 'ஒருவன்' அவனே! வெள்ளம் போல Over Flow பொங்கி வழிந்து கடந்தூடாய் செல்பவன் Pass through. அவன் தனது வல்ல ஆற்றல்களை, தென்திசை ராஜாவான Ptolemy Philapatar-க்கு நேராக்கினான். அவன் தனது தகப்பன் Ptolemy Euergetes -ஐ ஆட்சிவழிப் பின் தொடர்ந்திருந்தான். அவன் Antiochus தீரு Tyre மற்றும் Ptolemais -ஐப் பிடித்தான். பொங்கிஎழுந்து, பாலஸ்தீனா ஊடாகக் கடந்தான். காசா Gaza -வுக்கு எதிராகப் படையை அணிவகுத்தான். அதாவது, தென்திசை ராஜாவுடையக் கோட்டைக்கெதிராய்! தீர்க்க தரிசனத்ததால் நிர்ணயிக்கப்பட்ட வரையறை! இது கி.மு. *218* -ல் நடந்தது.

வசனம் *11-12*:

'அப்பொழுது தென்திசை ராஜா, கடுங்கோபங்கொண்டு புறப்பட்டுபோய், வடதிசை ராஜாவோடே யுத்தம் பண்ணுவான்; இவன் பெரிய சேனையை ஏகமாய் நிறுத்துவான்; ஆனாலும், இந்தச்சேனை அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படும். அவன் இந்தச் சேனையை நீக்கின பின்பு, அவனுடைய இருதயம் கர்வங்கொள்ளும், அவன் அனேகமாயிரம் பேரை மடிவிப்பான்; ஆனாலும், பலங்கொள்ள மாட்டான்'.

சிற்றின்பத் தோய்வான Voluptuous மற்றும் ஒழுக்கக் கேடானPtolemy Philopater எனும் தென்றிசை ராஜாவின் ஆட்சி எல்லை Antiochus எனும் வடதிசை ராஜாவால், படையெடுக்கப்பட்டதனால், முற்றிலுமாக அதிர்ச்சியுற்று எழுந்தான். ஓர் பெருஞ்சேனையைக்கூட்டி, அவன் பெரிய மற்றும் சிறந்தமுறையில் நிர்மாணிக்கப்பட்ட அந்தியோகு வுடைய சேனையை, காசா Gaza -விலிருந்து அதிக தூரத்திலில்லாத Raphia -வில் கி.மு.*217*ல் முறியடித்தான். Ptolemy யுடைய இதயம் அவனது இவ்வெற்றியால் கர்வங்கொண்டது; இந்த அவனது வெற்றியைத் தொடர்ந்து முன்னேறி Antiochusசுடைய

ராஜ்யத்தையே பிடித்து இருந்திருக்கலாம்; ஆனால்,அவன் தன் புலனுணர்வு சிற்றின்பங்களுக்குத் திரும்பி வர அதிக ஆர்வங்கொண்டவனாய், உச்சநிலையை Supremacy பிடித்துக் கொள்ளவிருந்த தருணத்தை இழந்தான். இவ்வாறு அவனது மாபெரும் வெற்றியால் பலங்கொள்ளவில்லை.

வசனம் *13:*

'சில வருஷங்கள் சென்ற பின்பு, வடதிசை ராஜா திரும்ப முந்தின சேனையிலும் பெரிதான சேனையைச் சேர்த்து, மகா பெரிய சேனையோடும், வெகுசம்பத்தோடும் நிச்சயமாய் வருவான்'.

Ptolemy Philopater மற்றும் Antiochus இடையே முடிவான அமைதி சமாதானம் Peace பதிமூன்று வருடங்களுக்கு நீடித்தது. இக்காலப்பொழுது Antiochus தன்னைத் தனது ராஜ்யத்தில் பலப்படுத்திக்கொண்டான். அவனுடைய சேனைகள் எண்ணிக்கைத் திரளாய்த் தகுந்தவாறு படைத்தளவாடங்களால் பொருத்தப்பட்டு, அனேக வெற்றிகளால் புது வளமூட்டப் பட்டது; அவனது கஜானா கொள்ளைப் பொருட்களால் நிரம்பின. Ptolemy Philopater -ன் மரணத்தைக் கேள்வியுற்றவனாக, அவனை, அவனது மகன் சிறியபாலன் Infant Ptolemy Epiphanes பின் தொடர்ந்திருந்ததையும் அறிந்து, அதுவே தகுந்த காலவேளை என உணர்ந்து, ஓர் எளிதான வெற்றியை எதிர்பார்த்தவனாய், பெருஞ்சேனையுடனும் மிகுந்த செல்வ வளமுடனும் எகிப்துக்கு எதிராய் அணிவகுத்துச் சென்றான். எவ்வாறு அவன் வென்றான் என்பதைத் தற்போது பார்க்கவுள்ளோம். ஏனென்றால், இரு ராஜ்யங்களது விவகாரங்களில் புதிய சிக்கல்கள் புகுந்தன; சரித்திர மேடை மீது புதிய நடிகர்கள் Actors அறிமுகப்படுத்தப்பட்டனர். இவ்விரு ராஜ்யங்கள் மற்றும் அவைகளது ராஜாக்களுடைய சரித்திரத்தை ஆராய்கையில் ராஜ்யங்கள் அதேவிதமாய் நிலை கொண்டிருக்கையில் வடதிசைராஜா மற்றும் தென்திசை ராஜா மாறுகின்றனர் Change. அவர்களது பணி அலுவல் பட்டப்பெயர் மாறாத போதிலும்! Official Title does not Change.

வசனம் 14:

'அக்காலங்களில் தென்திசை ராஜாவுக்கு விரோதமாக 'அநேகர்' எழும்புவார்கள்; அப்பொழுது உன் ஜனத்திலுள்ள (யூதர்கள்) துண்டரிக்கக்காரரின் புத்திரர் தரிசனத்தை நிறைவேற்றத் தங்களை உயர்த்துவார்கள்'.

தென்திசையுடைய பாலனான ராஜாவுக்கு எதிராக எழுந்த அநேகரில் மாசிடோனிய மன்னன் King of Macedon பிலிப்பு Phillip இருந்தான். Ptolemy Epiphanes சுடைய ராஜ்யத்தை அவர்களிடையே துண்டாடும்படி அவன் (பிலிப்பு)Antiochus உடன் ஓர் கூட்டிணைவில் League பிரவேசித்தான். எகிப்து தானும் கூட ஆட்சி எதிர்ப்புக் கிளர்ச்சியுடைய ஓர் கொதித்துக் குமுறுகிறப் பானையாயிருந்தது Seething Pot. அந்தியாகுடைய Antiochus பிரீதியை சாதகமாக்கும் நம்பிக்கை கொண்ட 'கொடுமைவாய்ந்த யூதர்கள்' Wicked Jews பாலஸ்தீனாவில் இருந்தனர். அவர்கள் கொள்ளைக்காரரென அழைக்கப் பட்டனர் Robbers. ஏனெனில் அவர்களுடைய நடத்தையால் Conduct தங்களது சகோதரருக்கு இடர் சூழ்நிலை உண்டாக்கினர். இவ்விதமாக 'காட்சியை நிறைவேற்றினர்' Established the Vision அல்லது அக்காலங்களில் தானியேலின் மக்களுக்குள்ள பாடுதுன்பங்களைக் குறித்த தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினர். அந்தியாகுவோ கொடுமையுள்ள யூதர்களுக்கு எதிராகத் திரும்பினான். இவ்விதம் அவ்யூதர்களை விழும்படி To Fall ஏதுவுண்டாக்கினான். இவ்வசனம் பின்தொடர்ந்த அந்தியோகுடைய யுத்தங்களில் நிறைவேற்றப்பட்டது.

வசனம்: 15-19

'வடதிசை ராஜா வந்து, கொத்தளம் போட்டு, அரணான நகரங்களைப் பிடிப்பான்; தென்றிசை ராஜாவின் புயபலங்களும் அவன் தெரிந்து கொண்ட ஜனமும் நில்லாமற்போம். எதிர்க்கிறதற்கு பெலன் இராது; ஆனாலும், அவனுக்கு விரோதமாக வருகிறவன் (வடதிசை ராஜா) தன் இஷ்டப்படி செய்வான்; அவனுக்கு முன்பாக நிலை நிற்பவன் ஒருவனும் இல்லை; அவன் சிங்காரமான தேசத்தில் தங்குவான்; எல்லாம் அவன் கைவசமாகும். தன் ராஜ்யத்தின் வல்லமையோடெல்லாம் தானும் தன்னோடே கூடச் செம்மை மார்க்கத்தாரும் வர, இவன்

தன் முகத்தைத் திருப்புவான்; இப்படிச்செய்து கெடுதி யுண்டாகும்படி (தென்திசை ராஜா) அவனுக்கு ஓர் கன்னிப் பெண்ணைக் கொடுப்பான்; ஆனாலும், அவளால் ஸ்திரம் பெறான். அவள், அவன் பட்சத்தில் நில்லாள்; பின்பு இவன் தன் முகத்தைத் தீவுகளுக்கு நேராகத் திருப்பி, அநேகத் தீவுகளை பிடிப்பான்; ஆனாலும், ஒரு சேனாபதி இவன் செய்கிற நிந்தையை ஒழியப் பண்ணுவதுமல்லாமல், இவன் செய்த நிந்தையினிமித்தம் இவனுக்குச் சரிக்குச் சரிகட்டுவான்; ஆகையால், தன் முகத்தைத் தன் தேசத்தின் அரண்களுக்கு நேராகத் திருப்புவான். அங்கே இடறிவிழுந்து காணப்படாமற் போவான்'.

இவ்வசனங்கள் கூட்டாக எடுக்கப்பட்டுள்ளன; ஏனெனில், வடதிசை ராஜா மகா அந்தியோகுடைய Antiochus the Great யுத்தங்களில் மீந்துள்ளவைகளை Remainder அவை மூடிப் பரப்புகின்றன. இவைகளை சிந்திக்கையில், சிங்காரமான தேசம் Glorious Land தென்திசை ராஜாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்ததென்பதை மறக்கலாகாது. இப்போது Ptolemy Ephiphanes-ன் கீழ். ஆகையால், எகிப்தை எட்ட, சிங்காரமான தேசத்தை முதலில் பிடிக்கும்படி அந்தியோகுக்கு அவசியமாயிற்று. அத்தேசத்துள் அவனுடைய பிரவேசத்தின் கட்டத்தே அவன் Ptolemy-யின் சேனைத்தளபதியான Scopas-ஐ எதிரிட்டான். அத்தோடு அவன் பிடித்திருந்த Besieged பலமான அரணிப் புடையக் கோட்டை நகரான சீதோனில் Sedon அவனை Scopas அடைக்கலம் தேடும் படிக்குக் கட்டாயப்படுத்தினான். நகரத்தை விடுவிக்கும்படி எகிப்தியர்களால் நம்பிக்கை இழந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; ஆனால், யாவும் தோல்வியாயின; சீதோன் சரணடையக் கட்டாயப்படுத்தப்பட்டது. பின்பு, அந்தியோகு தன் சுய இஷ்டப்படிச் செய்யமுடிந்தது; அவனுக்கு முன்பாக நிலை நிற்பவன் ஒருவனும் இல்லை. (வச.16) ஆகவே, 'சிங்காரமான' தேசத்தை அவன் தன் உடைமையாக எடுத்துக் கொண்டான்.

பின்பு, அவன் தன் ராஜ்யத்தின் முழுபலத்தோடும் கூட எகிப்துள் பிரவேசிக்கத் தன் முகத்தைத் திருப்பினான். ஆனால், அவன் தனது திட்டங்களை மாற்றக் கட்டாயப் படுத்தப்பட்டான். எகிப்தின் 'பகர ஆட்சியாண்மை' Regency அவ்வமயம் வல்லமையில் எழுந்து கொண்டிருந்த

ரோமர்களுடைய உதவியை நாடியிருந்தது. அவர்களது(ரோமர்) உதவியும் வாக்குறுதி பண்ணப்பட்டிருந்தது. ஆகவே, அந்தியோகு சூழ்ச்சிதிறநயத்தைக் Diplomacy கையாட முடிவெடுத்தான். ஏழே வயது கொண்ட பாலனான ராஜாவாகிய Ptolemy Epiphanes -க்கு தனது மகள் கிளியோபட்ரா Cleopatra-வைத் திருமண நிச்சயம் செய்து வைக்க அந்தியோகு முன் மொழிந்தான் Proposed. கிளியோபட்ரா தானும் மிக இளமையானவள்; மேலும், இளநயம் வாய்ந்த வருடங்களில் இருந்ததோடு, இன்னமும் அவள் தனது தாயார் மற்றும் ஓர் தாதியின் கவனிப்பில் இருந்த காரணத்தால், அவள் ஓர் கன்னிப்பெண் Daughter of Women என அழைக்கப்பட்டாள். (வச. 17). திருமண நிறைவுவினை ஐந்து வருடங்கள் கழித்து நிறைவு செய்யப்பட்டது. 'Corrupting Her' அவளை நச்சுப்படுத்தல் எனும் வார்த்தைகள் அவன் தனது நோக்கங்களுக்கு இணங்க செயலாற்றும்படிக்கேயன்றி, அவளுடைய கணவனது நோக்கங்களுக்கு இணங்க செயலாற்றவிடாதபடிக்கான அவனது (அந்தியோகு) திட்டத்தைச் சுட்டுகிறது. ஆனால், அத்திட்டம் தோல்வியுற்றது. கிளியோபெட்ரா தனது கணவனின் பக்கமே சாய்ந்ததோடு, தனது தகப்பனார் மீது (அந்தியோகு மீது) வெற்றிகள் அடைந்த ரோமர்களுக்கு வாழ்த்துக்கள் அனுப்புவதில் அவனோடு (தன் கணவனோடு) சேர்ந்து கொண்டாள்.

ரோமர்கள் எதிரே தான் பழிவாங்குவதற்காக அந்தியோகு *300* கப்பல்கள் கொண்ட கப்பற்படையைப் பொருத்திக் கொண்டு ஏகி கடற்கரையிடங்களையும், சின்ன ஆசியாவின் சிறு தீபகற்பங்களையும் தாக்கினான். தீர்க்க தரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சேனாபதி Prince Scipio Asiaticus -ஆல் கி.மு.*190*-ல்Magnesia -வில் வைத்து அவன் (அந்தியோகு) முறியடிக்கப்பட்டான். பின்பு, அவன் தன் வீடுமுகனாக தன் முகத்தைத் திருப்பினான். அந்தியோகில் வைத்து சமாதானத்துக்கு வழக்காடும்படி அரசு நிலைத்தூதர்களை அனுப்பினான். நிபந்தனைகள் மிகக் கடுமையானவை. அவன் ஐரோப்பாவை மட்டுமன்றி Taurus -ன் ஐரோப்பிய பக்கமான ஆசியாவையும் கூட விட்டுவிட வேண்டுவது ஓர் நிபந்தனை! மேலும், காசாக *2550* தாலந்துகள் உடனடிப்பணம் கொடுப்பதோடு வருடா வருடம் பணம் *1000* தாலந்துகள் வைத்து அடுத்துவரும் பன்னிரண்டு வருடங்களுக்கு கொடுக்க வேண்டுவதும்

நிபந்தனை! சில மாதங்கள் கழித்து இந்தக் கப்பம் Tribute காசைத் திரட்டுவதற்கென அவனது கிழக்கத்திய மாகாணங்களைப் பிரயாணிக்கையில், Elimais -சிலுள்ள 'பேல்' கோவிலைச் சூறையாட முனைந்தான். ஆனால், மக்கள் அதைக்கண்டு கிளர்ந்து எழுந்து அவனை வெட்டிக் கொன்று போட்டனர். இதுவே 'அங்கே இடறி விழுந்து காணப்படாமற் போவான்' என வச.19-ல் வருகிறது.

வசனம் 20:

'செழிப்பான ராஜ்யத்தில் தண்டல் காரனைத் திரியப் பண்ணுகிற ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்புவான். ஆகிலும், கோபமில்லாமலும், யுத்தமில்லாமலும் நாசமடைவான்'.

மகா அந்தியோகு அவனது மூத்த மகன் Seleucus Philapator -ஆல் பின் வாரிசாகத் தொடரப்பட்டான். அவனது தகப்பனார் மீது விதிக்கப்பட்ட பாரமான கப்பத் தொகையைச் செலுத்த ஓர் வரிகள் திரட்டுகிறவனாயிருக்க a tax raiser கட்டாயப்படுத்தப் பட்டான். சுமார் பன்னிரண்டு வருடங்கள் அவன் ஆட்சி செய்வதாகக் காணப்படுகிறது. அக்காலத்து முடிவில், பணத்துக்கு மிக நெருக்கடியான போது அவன் தனது கருவூலத்தானை Treasurer Heliodorus செழிப்பான ராஜ்யம் Glory of the Kingdom என வேத எழுத்துக்களில் அழைக்கப்படுகிற (வச.20) எருசலேமுக்கு அனுப்பினான். தேவாலயத்து பொக்கிஷங்களைப் பறிமுதல் செய்ய அனுப்பினான். சிறிது கழித்து, சில நாளைக்குள் அவன் இரகசியமான வகையில் நஞ்சூட்டப்பட்டான். இவ்விதம் அவன் கோபமில்லாமலும், யுத்தமில்லாமலும் நாசமடைந்தான்.

அந்தியோகு எபிப்பானஸ்
Antiochus Epiphanes
கி.மு.175 – 164

வசனங்கள் 21-31

'அவன் ஸ்தானத்தில் அவமதிக்கப்பட்டவன் ஒருவன் எழும்புவான்; இவனுக்கு ராஜ்யபாரத்தின் மேன்மையைக் கொடாதிருப்பார்கள்; ஆனாலும், இவன் சமாதானமாய் நுழைந்து, இச்சகம் பேசி, ராஜ்யத்தைக் கட்டிக்கொள்ளுவான்.

பிரவாகமாய் வருகிற சேனைகள் இவனாலே பிரவாகமாய் முறியடிக்கப்படும்; உடன்படிக்கையின் தலைவனும் முறியடிக்கப்படுவான்; ஏனென்றால், அவனோடே சம்பந்தம் பண்ணின நாட்கள் முதல் அவன் சூதாய் நடந்து, கொஞ்சம் ஜனங்களோடேப் புறப்பட்டு வந்து பெலன் கொள்ளுவான். தேசம் சுகவாழ்வோடும், சம்பூரணத்தோடும் இருக்கையில் அவன் உட்பிரவேசித்து, தன் பிதாக்களின் பிதாக்களும் செய்யாததைச் செய்வான். கொள்ளையிட்டுச் சூறையாடி, பொருளை அவர்களுக்கு இறைத்து பங்கிட்டு, அரண்களுக்கு விரோதமாகத் தனக்குள் உபாயங்களை யோசிப்பான்; சில காலம் மட்டும் இப்படியிருக்கும்; பின்னும் தென்திசை ராஜாவுக்கு விரோதமாகப் பெரிய சேனையோடே போர்செய்யத் தன் வல்லமையையும் தன் வீரத்தையும் எழுப்புவான்; அப்பொழுது தென்திசை ராஜா மிகவும் பலத்த பெரிய இராணுவத்தோடே போய் யுத்தங்கலப்பான்; ஆனாலும், அவர்கள் அவனுக்கு விரோதமாகத் துராலோசனை பண்ணியிருந்தபடியால் அவன் நிற்கமாட்டான். அவனுடைய போஜனங்களைச் சாப்பிடுகிறவர்கள் அவனை நாசப் படுத்துவார்கள்; ஆகையால், அவனுடைய ராணுவம் பிரவாகமாய் வரும்; அநேகர் கொலையுண்டு விழுவார்கள்; இந்த இரண்டு ராஜாக்களின் இருதயமும் தீமை செய்ய நினைக்கும். ஒரே பந்தியிலிருந்து பொய் பேசுவார்கள்; ஆனாலும், அது வாய்ப்பதில்லை; குறித்த காலத்துக்கு முடிவு இன்னும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும். அவன் மகா சம்பத்தோடே தன் தேசத்திற்குத் திரும்பி, தன் இருதயத்தைப் பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாக வைத்து, அதற்கானதைச் செய்து, தன் தேசத்துக்குத் திரும்பிப் போவான்; குறித்த காலத்திலே திரும்பவும் தென் தேசத்திற்கு வருவான்; ஆனாலும், அவனுடைய பின் நடவடி, முன் நடவடியைப் போல் இராது. அவனுக்கு விரோதமாகச் சித்தீமின் கப்பல்கள் வரும்; அதினால், அவன் நோவடைந்து, திரும்பிப்போய், பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாகக் குரோதங்கொண்டு, அதற்கானதைச் செய்து, பரிசுத்த உடன்படிக்கையை தள்ளினவர்களை அனுசரிப்பான். ஆனாலும், அவனிடத்திலிருந்து புறப்பட்ட சேனைகள் எழும்பி, அரணான பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்த குலைச்சலாக்கி, அன்றாட பலியை நீக்கி, பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள்'.

அடுத்த வடதிசை ராஜா Antiochus Epiphanes ஆவான். இவனை, அவமதிக்கப்பட்டவன் Vile Person என வசனத்தில் கூறப்படுகிறது. மகா அந்தியோகுடைய Antiochus the Great இளைய மகனாவான். மிகவும் கீழ்த்தரமான, இயற்கைக்கு மாறான உணர்ச்சி இச்சைகளுக்குக் கையளிக்கப்பட்டவன்; பழி, பாவங்களுக்கு அஞ்சாதவன்;கொள்கையற்றவன்; குரூரமானவன், ஓர் பண்பாடற்ற கொடூர தன்மையுடையவன்; ஆனால், தைரியமும், திறமையும் குறைவில்லாது கொண்டிருந்தான். ராஜ்யபாரத்தின் மேன்மை Honour of the Kingdom அவனுக்குக் கொடுக்கப்படவில்லை. ஏனெனில், அவனது உடன்பிறந்தார் மகன் Nephew Demetrius தேமேத்திரியு உரிமைக்குரிய வாரிசாயிருந்தான் Heir. அவன் பெர்கமுவின் ராஜா King of Pergamum Eumenes மற்றும் அவனுடைய சகோதரன் Attalus ஆல் துணையளிக்கப்பட்டான். அவர்களின் துணையோடு அவனுடைய விரோதிகள் Enemies, வெள்ளப்பிரவாகமாய் இருந்தபோதிலும் பிரவாகமாய் முறியடிக்கப்பட்டனர் As the Arms of a flood. உடன்படிக்கையின் தலைவன் Prince of the Covenant யூத பிரதான ஆசாரியன் Jewish High Priest Onias III பணியிலிருந்து விலக்கப்பட்டான் Deposed. ராஜா Eumenes மற்றும் Attalus -சுடன் செய்திருந்த கூட்டிணையை League அவன் முறித்தான். எப்போதெனில், ரோமர்கள் தன்னை ஏற்பிசைவளித்துத் தகுதி ஒப்புக்கொள்ள Recognise, அவன் அவர்களை (ரோமர்களை) அறிவுறுத்தி இணங்க வைத்தபோது! அதற்கிடையே, அவன் தனக்கு ஓர் சிறிய பின்பற்றுவோர் குழு Following மட்டுமே உளதாயிற்றென்று பாவனை செய்துகொண்டு, வஞ்சகம் நிறைந்தவனாய் Deceitfully மாயம் பண்ணிக்கொண்டிருந்தான். ஆனால், கொஞ்சம் ஜனங்களோடே (பின்பற்றுக் குழுவோடு) புறப்பட்டுவந்து, வெகுவிரைவில் பெலன் கொண்டான். தேசத்தினுடைய Province சம்பூரணமும், சுகவாழ்வும் கொண்ட பிராந்தியங்களில் அமைதி நாடுகிற விதமாய்ப் பிரவேசித்தான். அவனது முன்னோடிகள் போலல்லாது, அவனது கொடைகளில் தங்கு தடையில்லாமலும் Profuse, மட்டுமீறிய தன்மையோடுமிருந்தான் Extravagant. அவனது வெற்றிகளில் கொள்ளையிட்ட பொருட்களைத் தனது நண்பர்கள் கூட்டத்திற்கு அள்ளி இறைத்தான். ஆனால், எந்நேரமும் எகிப்தின் அரண்களுக்கு விரோதமாகத் தனக்குள்

உபாயங்களை முன் குறி வைத்துக்கொண்டிருந்தான். அவ்வரண்களில் மூன்றான Pelusium, Naucratis மற்றும் Memphis-ஐ அவன், பிற்பாடு தன்வசமாக்கினான். ஆனால், Alexandriaவை எடுக்கத் தவறினான். சிலகால மட்டும் இதை அவன் செய்தான்; ஆனால், முடிவில் ரோமர்களால் தடுத்து நிறுத்தப்பட்டான்.

எகிப்தைப் படையெடுக்க ஆயத்தமானபோது, அதற்கு எதிராக ஓர் மாபெருஞ்சேனையோடு அணிவகுத்துச் சென்றான்; ஓர் சரிசமமான பெருஞ்சேனையால் எதிரிடப்பட்டான். அது பெரிய இழப்புகளோடு கலைக்கப்பட்டது. Ptolemy Philometer அந்தியோகுவின் கைகளில் வீழ்ந்தான். அவனது போஜனங் களைச் சாப்பிட்டவர்களால் அதிகபட்சமும் காட்டிக் கொடுக்கப்பட்டான். அவனது சகோதரன் Physcon அவனது ஸ்தானத்தில் ராஜாவாகப் பிரகடனம் செய்யப்பட்டான்; அந்தியோகு Ptolemy Philometerஐ மிகுந்த சிறப்பு நோக்கத்தோடு ஏற்றுக்கொண்டான்; சாதகமான நிபந்தனைகளில் ஓர் சமாதானத்தை முடிவெடுத்தான். அதன்பின்னர், அவனது சகோதரன் Physcon -க்கு எதிராகத் தனது செயலில் துணை செய்கிறதின் பாசாங்கில் அலெக்சாண்டிரியாவை முற்றுகை போட்டான். ஆனால், வெற்றியேதுமின்றி! இதற்கிடையே, அந்தியோகைக் குறித்து சந்தேகமுற்று, Philometer தனக்குள்ளேயே திட்டந்தீட்டி Physcon -னிடம் உடன்படிக்கைப் பேச்சைத் தொடங்கினான். ஓர் கூட்டுரிமை ஆட்சியின் அடிப்படையிலே! அத்தோடு அலெக்சாண்டிரியாவினுள் அவன் ஏற்றுக் கொள்ளப்பட்டான். இரு சகோதரர்களும் பின்னர், அந்தியோகுக்கு எதிராக முடிவு தெரிவித்தனர். ஆகவே, தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டது. 'இந்த இரண்டு ராஜாக்களின் (Antiochus and Philometer) இருதயமும் (ஒருவருக்கொருவர் எதிராய்) தீமை செய்ய நினைக்கும்; ஒரேபந்தியிலிருந்து (ஒருவருக்கொருவர்) பொய் பேசுவார்கள்'.

அந்தியோகு, பின்பு, சிரியா நோக்கித் திரும்பினான். எகிப்தின் செல்வமிக்க கொள்ளைகளால் நிரம்பி திரும்பினான். அணிவகுத்து வருகையில், அவனது மரணத்துடைய ஓர் தவறான செய்தியின் காரணமாக, பிரதான ஆசாரியன் பணிப் பொறுப்பை இழந்து விட்டிருந்த Jason என்பவன் எருசலேம் மீது ஓர்

தாக்குதல் நடத்தி, தனது பிரதான ஆசாரியத்துவப் பணிப் பொறுப்பை முனைந்து மீளப்பெற்றுக் கொண்டிருந்ததாக கேள்வியுற்றான். இதை யூதர்களுடைய கலக கிளர்ச்சியெனக் கருத தீர்மானித்து, அதிலும் விசேஷமாக, அவனது புனையப்பட்ட மரணச்செய்தி அவர்கள் மத்தியில் பேர்களிப்பை Great Joy உண்டாக்கியதாகக் கண்டபோது அவன் எருசலேமைத் தாக்கினான்; 40,000 குடிவாழ்வாரை கொலை செய்தான். அதற்கதிகமானோரை அடிமைகளாக விற்றான்; தேவாலயத்தைச் சூறையாடினான். 1800 தாலந்துகளுக்கு மதிப்புள்ள பொக்கிஷங்களை எடுத்துச் சென்றான். இவ்விதமாக, தனது கடுங் கோபத்தைப் பரிசுத்த உடன்படிக்கைக்கு (தேவாலயம்) விரோதமாக வெளிப்படுத்தி பின்னர், தொடர்ந்து அந்தியோகுக்கு நேராக அணிவகுத்து சென்றான். 2 Macc. 5:11-21.

கி.மு. 168-ன் இளவேனிலில் Spring அந்தியோகு மீண்டுமாக தனது படைகளை எகிப்துக்கு வழி நடத்தினான்; எதற்காயெனில், இருசகோதரர்களான Ptolemy Philometer மற்றும் Ptolemy Physcon -ஐ கீழடக்கும்படியாக! ஆனால், அதே வெற்றி அவனுக்குக் காத்திருக்கவில்லை; ஏனெனில், தாலமியர்கள் Ptolemies ரோமுக்கு மேல் முறையீடு செய்திருந்தனர்; சிரியா ராஜா கடந்து சென்றுள்ள நன்கறிந்த வழித்தடத்தே, Alexandria -வுக்கு நான்கு மைல்கள் தொலைவுக்குள் அவன் நெருங்கும் வரை ஒருவரும் அவனது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தத் தைரியங்கொள்ளவில்லை; ஓர் ரோம கப்பற்படை வளைகுடாவினுள் நங்கூரமிட்டிருந்தது; தற்பொழுது அந்தியோகு Popilius Laenas -ஆல் சந்திக்கப்பட்டான். அவன் அந்தியோகுவின் கையினுள் ரோமக்குடியரசின் ஆட்சி மன்றத்திலிருந்து Roman Senate மடல் Missive ஒன்றைத் திணித்தான். அதில் ரோமப்பிரஜைகளின் தோழர்களைத் தொல்லையளிக்காது Unmolested விட்டுவிடவும், தனது சொந்த ராஜ்யத்தோடு மனநிறைவடையவும் ஆணையிடப்பட்டிருந்தது. அதை வாசித்ததும் அந்தியோகு தனது ஆலோசகர்களை வரவழைத்து என்ன செய்யப்படவேண்டியதென்று கலந்து ஆலோசிக்கப் போவதாக கருத்துக் குறிப்பு அளித்தான். அதின் பேரில் மேற்கொண்டு Popilius தனது கோலினால் அவனைச் சுற்றி மணலில் வட்டம் வரைந்து கூறியதாவது இவ்வட்டத்தை

தாண்டுவதற்கு முன்பு ஆட்சி மன்றத்துக்கு அறிக்கை கொடுக்க ஓர் பதிலுரையை அளியும் என்று! ராஜா அச்சத்தால் அடங்கி பதிலளித்ததாவது ஆட்சி மன்றத்துக்கு பிரீதியானால் நாங்கள் விட்டு நீங்குகிறோம் என்று!

அந்தியோகு பின்னர் எகிப்திலிருந்து தனது படையை திரும்பப் பெற்றான். சிங்காரமான தேசத்தின் Glorious Land யூதர்கள் மீது தனது கோபச்சீற்றத்தை வெளிப்படுத்தினான். மக்கபேயரின் முதல் புத்தகத்து, முதல் அதிகாரத்தில் Book of Maccabees விவரிக்கப்பட்டபடியான திகிலுண்டாக்கும் படுகொலைகள் Massacres, துன்பவதைப்பாடுகள் மற்றும் தேவாலயத்துதீட்டுப்படுத்துகைகளில் அவன் அச்சீற்றத்தை வெளிப்படுத்தினான். இதைச் செய்கையில், அவன் தாவீதின் நகர் அரணுடைய பிரமாண்டச் சுவர்கள் மற்றும் கோபுரங்களை பழுது பார்த்தான்; அவைகளில் சிரியாவின் படைவீரர்களை காவல் செய்ய அமர்த்தினான். அவனது சகல பிரஜைகளும் ஒரே மக்களாக, ஒரே மதத்தையும், ஒரே பிரமாணச் சட்டங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்று கட்டளையிட்டான்; இதை யூதர்கள் மீது திணிப்பதற்காக அவர்களது பரிசுத்தஸ்தலம் Sanctuary தீட்டுப்படுத்தப்பட்டது; பலிகளும், காணிக்கைகளும் தடை செய்யப்பட்டன; யேகோவாவின் மேடை மீது ஓர் விக்கிரக மேடை கட்டப்பட்டது. அதின் மீது பன்றியின் மாம்சம் பலியிடப்பட்டது. அதின் மீது வைக்கப்பட்ட ஓர் விக்கிரக சிலைக்கு அதிக நம்பக வாய்ப்பின்படி அவ்விதம் பலியிடப்பட்டது. இதுவே இப்பகுதியில் பேசப்பட்ட பரிசுத்தகுலைச்சலாக்குகிற (பாழாக்கு செய்கின்ற) Abomination that Maketh Desolate மிக்க அருவருப்பாயிருந்தது. ஆனால். கிறிஸ்துவால் மத். 24:15-ல் சொல்லப்பட்ட 'பாழாக்குகிற அருவருப்பாகாது' Abomination of Desolation. அது இன்னமும் எதிர்காலத்தது! அது தானி. 12:11-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தானி.9:27-ன்படி அருவருப்பான செட்டைகளோடேயான பாழாக்குகிறவன் அல்லது 'பாழாக்குகிறவைகளின் கவிந்து மூடுகை' Over Spreading of Desolation யுடைய நிறைவேறுகையாக இருக்கவுள்ளது. அந்தியோகுடைய கிரேக்க இன மொழிப்பண்பாட்டை யூதேயாவில் புகுத்தலுக்கான Hellenization கெடுபிடியான நடவடிக்கைகள் 'மெக்கபேயர்' Maccabean ஆட்சி

மீறிய கிளர்ச்சி Revolt-க்கு காரணமாயின. இதற்கிடையே பெர்சியாவுக்குள் ஓர் சேனையுடன் அவன் போயிருந்தான். அங்கே எவ்விடமும் வெற்றிமேல் வெற்றி பெற்றான். பின்பாக, பாபிலோனுக்கு ஓய்வுப் பெற அவன் வற்புறுத்தப்பட்டான். பாலஸ்தீனாவில் மக்கபேயரது கிளர்ச்சி Maccabean Revolt குறித்த செய்தி கேட்டு மனமுடைந்து, தாபே Tabae -யில் வைத்து ஓர் இயற்கை மரணம் கி.மு. 164-ல் எய்தினான்.

வசனங்கள் 21 முதல் 31 முடியவரை பதிவு செய்யப்பட்டவை அனைத்தும் Antiochus Epiphanes -ஐ குறிப்பீடு செய்வதேயன்றி அந்திக்கிறிஸ்துவையோ வேறெந்த நபரையோ அல்ல! என்பதை நாம் குறித்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியமானது. முன்னுரைக்கப்பட்டபடியே, அவையாவும் அவனால் எழுத்தின்படியும் முழுமையாகவும் நிறை வேற்றப்பட்டுவிட்டன; ஆகவே, எதிர்காலத்துக்கென விட்டு வைக்கப்பட எதுவும் இவ்வசனங்களில் திட்டவட்டமாக இல்லை. அந்தியோகு எபிப்பானஸை அந்திக்கிறிஸ்துவின் ஓர் மாதிரி A Type என்றுகூட கருதப்பட எந்தவொரு ஆதாரச் சான்றுமில்லை. அவர்கள் தனித்தன்மைக் கொண்ட சரித்திர நாயகர்களாவர்; அவரவர்களுக்குரிய சொந்த ஸ்தானத்தே எடுத்து கையாளப் படுகின்றவர்கள்; சில கூறுவகைகளில், அவர்களது நடத்தை மற்றும் யூதர்குலத்துடைய அவர்களது நடத்து முறையின் காரணமாக ஒருவருக்கொருவர் ஒத்திருந்தாலும் அவர்களை ஒருவரையொருவர் குழப்படி செய்து விடக்கூடாது.

வசனங்கள் 2-31-ல் பதிவு செய்யப்பட்ட பெர்சிய Persian மற்றும் கிரேக்கிய Grecian ராஜ்யங்களது போர்கள் அதிலும் அதிக விவரங்களோடுள்ள கிரேக்கிய சாம்ராஜ்யத்து சிரியா மற்றும் எகிப்திய பிரிவுகளின் கி.மு. 536 முதல் கி.மு. 164 முடியவுள்ள 372 வருடங்களது போர்களுடைய தீர்க்கதரிசன மற்றும் முன்னெழுதப்பட்ட Pre-written சரித்திரத் தொகுப்பு முழு வேதாகமத்திலேயே மிகவும் வியப்புக்குரிய தீர்க்கதரிசன முன்னோட்டமாயுள்ளது Prophetic Foreview. ஏனெனில் இது எல்லாமறிந்த தேவனால் மட்டுமே வெளிப்படுத்த கூடுகின்ற விவரங்களுக்குள் செல்லுகிறது. ஆகவே, இதன் பக்கங்களினுள் காணப்படுகின்ற தேவனுடைய வார்த்தைகளின் தெய்வீக

உள்ளுயிர்ப்புக்கு Inspiration இது ஓர் மிக பலமிக்க உறுதிபடுத்துகிற சான்றுகளில் ஒன்றாயுள்ளது.

அந்தியோகு எபிப்பானாஸ் மற்றும் பிரபுவாகிய மேசியா இடையேயான காலகட்டம்
The Period Between Antiochus Epiphanes and Messiah The Prince
கி.மு.164 – கி.பி.30

வசனங்கள்; தானி. 11: 32-33

அந்தியோகு எபிப்பானஸின் ஒடுக்குதலின் கீழ் யூதர்களுடைய நடத்தையானது, வசனம்32-ல் காண்பிக்கப் படுகிறது. அவர்களில் சிலர் கொடுமை வாய்ந்தோராக Wickedly உடன்படிக்கையை மற்றும் தங்களது பிதாக்களுடைய சமயத்தை / மதத்தை துறந்து / கைவிட்டு விக்கிரகங்களை வணங்கினர். வஞ்சப் புகழ்ச்சிகளினால் / இச்சகப் பேச்சுகளினால் Flatteries இவர்கள் இவ்விதம் இதனுள் நடத்தப்பட்டார்கள். அதேவேளையில் தங்கள் தேவனை அறிந்த சிலரும் இருந்தார்கள். அவர்கள் தேவன் விடுவிக்கவல்லவர் என்று அறிந்ததினால் திடன் கொண்டு அப்பலத்தால் வீரச்செயல்கள் Exploits செய்தனர். இது வயது முதிர்ந்த ஆசாரியனான மத்தத்தியா மற்றும் அவனுடைய குமாரரை குறிப்பீடு செய்கின்றது. 'மக்கபேயர்கள்' Maccabees என அழைக்கப்பட்ட இவர்கள் கி.மு. 166 முதல் கி.மு. 47 வரை இஸ்ரவேலின் தேசீய வாழ்வை மீட்டெடுக்கும்படி போராடினர். மத்தத்தியா அந்தியோகுடைய அவமதிக்கும் பழிச்செயல்களால் மனக் கசப்புக்குள் தள்ளப்பட்டு / முரட்டுத் துணிச்சலுடன் அவனுக்கு எதிராக கலகம் / புரட்சி எழுப்பி, இஸ்ரவேலது நம்பிக்கைக்காக வைராக்கியம் கொண்ட அநேக எண்ணிக்கையிலான பின்னடியார்களுடன் மலைகளுக்கு ஓடிப்போனான். இரு வருடங்களுக்கு பிற்பாடு அவன் மரிக்கவே 'யூதாஸ்' எனும் அவனுடைய மூன்றாவது குமாரன் அவன் பின்வாரிசாக தலைமை ஏற்றான். 'சம்மட்டி' Hammer என அழைக்கப்பட்ட இவன் எதிரெதிராய் நின்றுப் போரிடுகையை Pitched Battles தவிர்த்து, கொரில்லா யுத்தமுறையைக் கையாண்டு அவனுக்கு எதிராய் அனுப்பப்பட்ட ஒவ்வொரு சிரியா

ராணுவத்தையும் மடங்கடித்து அழித்தான். கி.மு. 165ல் எருசலேமை திரும்பப் பிடித்து தேவாலயத்தை சுத்திகரித்து, தினசரி பலி செலுத்தலை மீள நிறுவினான். ஆனால் கி.மு. 160-ல் யுத்தத்தில் அவன் வீழவே, அவனது இளைய சகோதரன் ‘யோனத்தான்’ பின் வாரிசாகத் தலைமை ஏற்றான். தலைமை ஆசாரியனாயுமிருந்த யோனத்தானின் தலைமைத்துவ காலத்தே சிரியர்கள் உள்நாட்டுக் கலகத்தில் ஈடுபட்டிருந்ததால், யூதேயா சமாதானத்தில் விட்டுவிடப்பட்டது. அவ்வேளையில், யோனத்தான் தனது நிலைப்பாட்டை நிலைப்படுத்தி, ரோமர்கள் மற்றும் கிரேக்க நாட்டது ஸ்பார்ட்டா Spartans நகரத்தவர்களோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான். ஆனால், அவன் கி.மு. 143-ல் ஓர் சிரிய தளபதியினால் நம்பிக்கை துரோகமாக கொலை செய்யப்பட்டான். மத்தத்தியாவின் ஒரே கடைசி மீந்திருந்த குமாரனான யோனத்தானின் சகோதரன் சீமோனால் Simon தலைமை ஏற்பு வாரிசானான். சீமோனும் அவனது இரு குமாரர்களும் கி.மு. 135-ல் சீமோனின் மருமகனால் நம்பிக்கை துரோகமாய் கொல்லப்பட்டனர். தப்பிப்பிழைத்த சீமோனின் இன்னொரு மகன் யோவான் ஹைர்கானு John Hyrcanus என்னும் யோவான், சீமோனின் பின்வாரிசானான். அவன் ஓர் நீண்ட செழிப்புப்பெற்ற அரசாளுகை செய்தான். அவனுக்குப் பின் தொடர்ந்த பின்வாரிசார் ஏற்றத்தாழ்வு வெற்றிகளோடு மக்காபியர்கள் வெறுக்கப்பட்டுப் போகும்வரை Disfavour அரசாண்டார்கள். அவர்களைத் தொடர்ந்து இதுமேயனான Idumaen அந்திப்பாடர் Antipatar கி.மு.47-ல் பின்னாட்சிக்கு வந்தனர். கி.மு.43 -ல் அந்திப்பாடர் கொலை செய்யப்பட்டபின் மார்க் அந்தோணி Mark Anthony சிரியாவை விஜயம் செய்து அந்திப் பாடரின் இரு குமாரரான, பாசலஸ் Phasaelus மற்றும் ஏரோது Herod என்போரை யூதர்களைக் கண்காணிக்கும்படி நியமனம் செய்தான். இவர்களில் ஏரோது என்பவனே மகா ஏரோது Herod என அழைக்கப்பட்டு கி.மு. 37 முதல் கி.மு. 4 வரை அரசாண்டான். கிறிஸ்து பிறந்த கி.மு. 4-ல் (மத். 2:1-15) மகா ஏரோது ராஜாவாயிருந்தான். இதிலிருந்து மக்கபேயர்களே அந்தியோகு எபிப்பானாஸிலிருந்து தொடங்கி கிறிஸ்து பிறப்பு வரையுள்ள காலகட்டத்தில் பெரும்பகுதியை நீட்சித்து இணைத்தார்கள் என்று நாம் பார்க்கிறோம்.

இக்கால கட்டத்தின் பிற்பகுதியில் ஓர் புதிய வகுப்பான ஆவிக்குரிய தலைவர்கள் எழுந்தனர். அவர்கள் தீர்க்க தரிசன வேதசத்தியங்களை புரிய அறிந்திருந்தனர். மக்களை அறிவுறுத்தவும் தெரிந்திருந்தனர். அவர்களிலே இஸ்ரவேலின் ஆறுதலுக்காக காத்திருந்த சிமியோன் மற்றும் அன்னா போன்ற நபர்கள் இருந்தார்கள்.

பிரபுவாகிய மேசியாவுக்கும் முடிவுக்கான காலத்துக்கும் இடைபட்ட இடைவெளி

கி.பி.30 முதல் கி.பி. ?

வசனங்கள்: தானி. 11: 33-35

காலம் நிறைவேறுகை யில் கிறிஸ்து பிறப்படைந்து யூதர்களுக்கு அவர்களது மேசியாவாக கொடையளிக்கப் பட்டார். ஆனால் அவருடைய உரிமைக்கோரல் நிராகரிக்கப்பட்டது; அவர் சிலுவையிலறையப்பட்டார் (சங்கரிக்கப்பட்டார்) நாற்பது வருடங்கள் பின்னர் ரோமர்களால் எருசலேம் அழிக்கப்பட்டது. அதன் பின்பு வசனம் 33-ன் கடைசி பாதியின் நிறைவேறுகை ஆரம்பித்தது. அநேக நாள் மட்டும் பட்டயத்தினாலும் அக்கினியினாலும் சிறையிருப்பி னாலும் கொள்ளையினாலும் விழுவார்கள். அநேகநாட்கள் என்பது இப்போதைய கால சகாத்தத்தின் நாட்களாகின்றன. இந்நாட்களை குறிப்பிட்டு கிறிஸ்து அவர்களிடம் கூறியதாவது: பட்டயக்கருக்கினாலே அவர்கள் (யூதர்கள்) விழுவார்கள்; சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும், லூக். 21:24

இவைகளனைத்தும் நமது கண்களுக்கு முன்பாக நிறைவேறுகையின் செயல்முறைக்குள்ளாயிருக்கின்றது. யூதர்கள் கொள்ளையடிக்கப்படுகின்றனர்; அதாவது அநேக நாட்களாக அவர்களுடைய மூலப்பொருள் உடைமைகள் மீண்டும் மீண்டும் பறிக்கப்படுகின்றன. அவர்கள் வீழ்ந்துள்ள போதிலும் அவர்கள் பூண்டோடழிக்கப்பட்டிருக்கவில்லை. வேளைக்குவேளை கொஞ்சம் சகாயத்தால் ஒத்தாசையடைகின்றனர். அவர்கள் முகப்புகழ்ச்சி செய்யப்பட்டு அநேக காரியங்கள் வாக்குப்

பண்ணப்படுகின்றபோதிலும் இவ்வாக்குறுதிகள் ஒருபோதும் நிறைவேற்றப்படுகிறதில்லை; இப்போதும் அவர்கள் யூத தாயக இயக்கத்தில் 'Zionism' நம்பிக்கையை வைத்துள்ளார்கள்; தங்கள் சொந்த தேசத்தின் மறுசீரமைப்புக்காகவும் மற்றும் அதற்குள் அவர்களது மீட்டளிப்புக்காகவும் மேற்கூறிய சீயோனித்துவம் மற்றும் மனிதரது பல்வேறு திட்டங்களின் மேலேயே நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்களில் சில அறிவாளிகள்/ புரிந்து உணரும் திறனுள்ளோர் அந்திக்கிறிஸ்துவின் காலத்திலும் கூட ஏமாற்றப்பட்டுப்போய் விழுவார்கள். ஆனால் இது சுத்தீகரித்து துப்புரவாக்கும்படி Purging இருக்கப்போகிறது (எசேக். 20:34-38) அதாவது உருக்கி புடமிடுவதற்காக! Refining (எசே. 22:19-22, மல்கி. 3:1-3; சகரி. 13:9) மற்றும் முடிவுகால பரியந்தம் அவர்களை சுத்தீகரிக்கவும், அவர்களது எடுத்துக்காட்டு மாதிரி மூலம் மற்றவர்களையும் இதே விதமாய் சுத்தீகரித்து வெண்மையாக்கவும் இருக்கப்போகிறது. இங்கே நூற்றாண்டுகளாக முடிவுகாலம் பரியந்தம் யூதர்களுடைய சகல அல்லற்பாடுகள், இன்னல்கள் மற்றும் உபத்திரவங்களுக்கான நோக்கம் மற்றும் பொருள் விளக்கம் மேற்கண்ட ஒர வசனத்தில் உருவரை செய்யப்பட்டுள்ளது.

நாம் இப்போது கண்ணோக்கிய வசனங்கள் பிரபுவாகிய மேசியா (கி.பி. 30) மற்றும் முடிவுக்காலம் (கி.பி.?) இடையே காணும் இடைவெளியை விரிந்து மூடுகிறது. தானியேலது 69-வது மற்றும் 70-வது வாரங்களினிடையேயுள்ள இடைவெளியோடு சரி ஒப்பாயிருக்கிறது. இவ்விதமாக தானியேலது எல்லா தரிசனங்களது உடன்பாட்டையும் இது காண்பிக்கிறதோடு, அவைகள் தானியேலின் மக்களோடு (யூதர்கள்) மாத்திரம் சம்மந்தப்படுவதேயன்றி சபைக்கல்ல என நிரூபிக்கின்றன; ஏனெனில் ஒவ்வொரு சான்று நிகழ்வுகளிலும் இன்றைய சபை காலசக்கரத்தின் விடுபடல் மூலம் இந்நிரூபணம் தெளிவாக தெரிகிறது.

சத்திய வேத வசனங்கள்
மூன்றாம் பாகம்
Part Three

முடிவுக்கான காலநேரம்

அதிகாரம் 11:36 - 12:13.

"தன்னிஷ்ட ராஜா" (The Wilful King)

வசனம் 36-45

வசனம் 36-ல் திடீரென, திடு நிகழ்வாக 'ராஜா' The King *தோன்றுகை, நாம் ஏற்கனவே கேள்விப்பட்டுள்ள ஒரு நபரையே அது குறிப்பாக சுட்டுகிறதாகும். அவ்வாறாகையில் இந்நபர் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட தேவையற்றவராகிறார். ஓர் ராஜா* 'A' King *என சொல்லப்படாமல்* 'The King *ராஜா' என்னப்படுவதை கவனிக்கவும். தானியேல் புத்தகத்தில் மூன்று ராஜாக்கள் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகிறதாக உரிமை கோருகின்ற சிலர் உள்ளனர். முதலாவதுள்ளது, நான்காவது காட்டியல்பான குரூர* Wild *'மிருகத்' (தானி.7:8) தினுடைய 'சின்னக் கொம்பு' அல்லது கடைசி ரோம சக்கரவர்த்தி. இரண்டாவது வெள்ளாட்டுக் கடாவின்* He Goat *நான்கு கொம்புகளின் ஒன்றிலிருந்து மேலெழுந்து வந்த 'சின்னக் கொம்பு'* Little Horn *(தானி 8:9-12) உருவகப்படுத்துகின்ற 'அந்தியோக்கஸ் எபிப்பானஸ்'* Antiochus Epiphanes. *மூன்றாவது நாம் இப்பொழுது கவனத்திலெடுத்துள்ள அதிகாரத்தில் தோன்றும் 'தன்னிஷ்ட ராஜா' என உருவகப் படுத்தப் படுகின்ற 'அந்திக்கிறிஸ்து'. இது உண்மையாகில் நாம் காண்பிக்க முயன்றுள்ள அந்திக்கிறிஸ்துவினுடைய படிப் படியான முன்னேற்ற வெளிப்பாடு* Progressive Revelation *தானியேல் புத்தகத்தில் இல்லாததாகிறது. இரு சின்ன கொம்புகள் மற்றும் தன்னிஷ்ட ராஜாவாகிய மூன்று ஆளத்துவங்கள்* Three Personage *ஒரே காலவேளையில் அதாவது கடைசி காலத்தே தோன்றி ஆளுகை செய்வதோடு, அவை மூன்றும் ஒரேவித தன்னிஷ்ட தன்மையை* Wilful Disposition *வெளிப்படுத்தி மற்றும் ஒரே மாதிரியாக அழியப்படப் போகின்றதாவது இவை*

மூன்றுமே ஒரேஒரு நபரையே மறைமுகக் குறிப்பாக சுட்டுகிறதாயுள்ளன.

இத்தன்னிஷ்ட ராஜா 'பிரபுவாகிய மேசியா' மற்றும் 'முடிவுக்கான காலம்' இவ்விரண்டின் 'இடைவெளி' Gapபின் (வசனம் 33-35) முடிவில் At the Close காட்சித்திரைக்கு தோன்றுகின்ற மெய்மையே அவனை தானி. 9:26-27-ல் வரப்போகின்ற பிரபுவாக அடையாளம் கண்டுகொள்ளச் செய்கிறது. ஏனெனில் நாம் பார்த்துள்ளபடி தானி.11:33-35-ல் காணும் இடைவெளி Gap தானியேலின் எழுபது வாரங்களின் 69-வது வாரம் மற்றும் 70-வது வாரத்தின் இடைவெளியோடு Interval ஒத்திசைந்திருக்கிறது. தானியேல் 9:26-ல் 'வரப்போகின்ற பிரபு' கடைசி ரோம சக்கரவர்த்தி Last Roman Emperor ஆகப்போகின்றதால் இது தானி. 11:36ன் தன்னிஷ்ட ராஜாவைக் கடைசி ரோம சக்கரவர்த்தியாக இனமறியச் செய்வதோடு தானியேலின் நான்காவது காட்டியல் குரூர மிருகத்தின் சின்னக் கொம்பையும் அப்படியே செய்கிறது. மேலுமாய் வசனம் 40-ல் இத் தன்னிஷ்ட ராஜா 'வடதிசை ராஜா' என அழைக்கப் படுகிறான். சிலர் இதை மறுத்துரைக்க ஏதுவாக வசனம் 40-ன் "முடிவுகாலத்திலோவென்றால், தென்திசை ராஜா 'அவனோடு' முட்டுக்கு நிற்பான்: வடதிசை ராஜாவும் அவனுக்கு விரோதமாய் வருவான் என்பதில் வரும் பெயர்ச்சொல் ''மறுபெயர்' Pronoun 'அவன்' Him தன்னிஷ்ட ராஜாவுக்காக நிற்பதாகவும், மேலுமாக வடதிசை மற்றும் தென்திசை ராஜாக்கள் அவனுக்கு எதிரிடையாக இருந்து சூழ்ச்சிசெய்யும் கூட்டாளிகள் Colleagues எனவும் எடுத்துரைத்து" வாதாடுகின்றனர். ஆனால் இது வசனங்கள் 42-43-ல் மறுக்கப்படுகிறது. இங்கே வடதிசை ராஜா தென்திசை ராஜாவை ஓர் எதிரியாக Enemy நடத்துவதோடு, எகிப்தை கொள்ளையிடப்போவதாகவும் கூறப்படுகிறது. அப்படியானால் வசனம் 40 அர்த்தப்படுத்துவது யாதெனில் முடிவுக்கான காலவேலையிலே தென்திசை ராஜா அவனோடு (தன்னிஷ்ட ராஜாவோடு) முட்டுக்கு நிற்பான்: வடதிசை ராஜா (தன்னிஷ்ட ராஜா)வும் அவனுக்கு (தென்திசை ராஜாவுக்கு) 'விரோதமாய் வருவான்.' அதாவது வடதிசை ராஜா தென்திசை ராஜாவுடைய தாக்குதலுக்கு பதில் திருப்பி தாக்குவான்,Return the Attack.

தானியேல் 8-ஆம் அதிகார ஆய்விலிருந்து மகா அலெக்சாண்டரது சாம்ராஜ்யம் நான்கு ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டன என்பதையும் அவை மீண்டும் எழப்போகின்றன Revived என்பதையும் அவ்வாறான அவர்களது ராஜ்யங்களின் பிந்திய காலத்தே Latter Time ஓர் மூர்க்கமுள்ள ராஜா எழும்பவுள்ளான் என்பதையும் நாம் அறிகிறோம், தானி. 8:21-23. இப்போதும் அந்நான்கு ராஜ்யங்களில் ஒன்றாக 'வடதிசை ராஜ்யம்' என அழைக்கப்படுகின்ற 'சிரியா' இருந்தது. அதிகாரம் 8-ன் 'சின்ன கொம்பு' சிரியாவின் கொம்பிலிருந்து வெளிப்பட்டதால், அதிகாரம் 8-ன் மூர்க்கமுள்ள ராஜா மீண்டெழுந்த சிரியா ராஜ்யத்தினுடைய 'வடதிசை ராஜா' வாக அல்லது 'தன்னிஷ்ட ராஜா' வெனும் அதிகாரம் 11-ன் வடதிசைராஜாவாக இருக்கவேண்டும். இங்கேயே மீண்டும் அதிகாரம் 7-ன் சின்னக் கொம்பு, அதிகாரம் 8-ன் சின்னகொம்பு மற்றும் தன்னிஷ்ட ராஜா ஆகிய மூன்றும் ஒரே ஒரு நபராயுள்ளார்கள் என்பதையும் நாம் நிரூபித்துக் காட்டியுள்ளோம்.

தன்னிஷ்ட ராஜா அந்திக்கிறிஸ்துவாக இருக்கிறான் என்றாலும் அவனை கடைசி ரோம சக்கரவர்த்தியோடு குழப்படி செய்யக்கூடாதென்றும், சமுத்திரத்தினின்று எழுந்து வருகிற வெளி: 13:1-10-ன் 'மிருகமே' Beast கடைசி ரோம சக்கரவர்த்தியென்றும் Last Roman Emperor, அதேவேளையில் பூமியிலிருந்து எழுந்து வருகிறதான (வெளி. 13:11-18) மூன்றுமுறை கள்ளத்தீர்க்கதரிசி False Prophet (வெளி.16:13, 19:20, 20:10) என அழைக்கப்படுபவனே அந்திக்கிறிஸ்து என்றும் வாதாடிக் கோருவோர் Claim, கள்ளத் தீர்க்கதரிசி False Prophet ஓர் ராஜா அல்ல என்பதை மறந்துவிடுகின்றனர். அவனுடைய அலுவலகப் பணி முதல் மிருகத்தை உயர்த்துவ Exalt தேயாகும். ஆகவே அவன் ஓர் ராஜாவாகிறதில்லை; ஆனால் தன்னிஷ்ட ராஜாவே அவ்விதமாகிறதால் மற்றும் தன்னிஷ்ட ராஜா அந்திக்கிறிஸ்துவாகையில் கள்ளத் தீர்க்கதரிசி அவ்விதம் ஆகமுடியாது.

தன்னிஷ்ட ராஜா தனது இஷ்டத்தின் பிரகாரமாகவே செய்கிறவனாவான். தன்னை உயர்த்தி, எந்த தேவனிலும் தன்னை

பெரியவனாக்கி தேவாதிதேவனுக்கு (யெகோவா) விரோதமாக ஆச்சரியமான காரியங்களை Marvellous Things பேசுவான். கோபம் தீருமட்டும் (மகா உபத்திரவம் நிறைவேறித் தீருமட்டும்) அவன் தளைத்து ஓங்குவான் (அவனுக்கு கைக்கூடிவரும்) ஏனெனில் முடிவுகாலத்துக்கென்று தேவனால் நிர்ணயிக்கப்பட்டது செய்யப்படவுள்ளது.Shall be done. அவன் தன் பிதாக்களின் தேவனை - ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவனை - மதிக்கமாட்டான். இது 'அவன்' ஓர் 'யூதன்' என அர்த்தமளிக்கிறது. ஸ்திரீகளின் சிநேகத்தையும் மதிக்க மாட்டான். மேசியாவின் தாயாராவதே யூத ஸ்திரீகளின் ஆவலாயிருப்பதானதை Desire அது அர்த்தப்படுத்துமானால், மேலுமாக யூதர்களுக்கு மேசியா இன்னமும் வரவில்லை என்பதனை நாம் மறக்கலாகாது என்பதனால், குமாரனை The Son அவன் மதிக்கப்போவதில்லை என்பதுதான் அர்த்தம். அந்திக்கிறிஸ்துவின் இத்தன்மை அப்போஸ்தலன் யோவானால் முன்னுரைக்கப் பட்டுள்ளது. அவன் கூறுகிறதாவது, "பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து" (யோவான் 2:22). ஆனால் அவரது (யெகோவா) ஸ்தானத்தில் 'அரண்களின் Fortresses தேவனை' அல்லது பலத்தின் / ஆற்றலின் தேவனை God of Forces அவன் கனப்படுத்தி உயர்த்துவான். அதாவது இந்த உலகத்தின் ராஜ்யங்களை அவனுக்கு பெற்றுத்தரக்கூடிய தேவனை God அவன் சார்ந்திருப்பான். அதுவே இவ்வுலகத்தின்/ இவ்யுகத்தின் தேவனாகிய சாத்தான்! அவன் இவ்வுலகத்தின் ராஜ்யங்களை கிறிஸ்துவுக்குக் கொடுக்க வாக்குப்பண்ணினான் மத்.4:8-9. ஆனால் கிறிஸ்துவோ சாத்தானுடைய கரங்களால் அவைகளை பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ஏனெனில் அவரோ தேவனுடைய கரத்தினால் அவைகளை பெற்றுக்கொள்ளப் போவதை அறிந்திருந்திருந்தார், (தானி. 7:13-14, வெளி.11:15). ஆனால் அந்திக்கிறிஸ்து ஏற்றுக்கொள்வான். ஏனெனில் வெளி. 13:2-ல் வாசிப்பதாவது வலுசர்ப்பமானது (சாத்தான்) தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அவனுக்கு (மிருகத்துக்கு) கொடுப்பான். இந்நூதனமான / அந்நியமான Strange தேவனின் உதவி ஒத்திசையால் தன்னிஷ்ட ராஜா பத்து கூட்டணி ராஜ்யங்களது அரண்களை (Fortresses) அல்லது அரணிப்பான பட்டணங்களைப் பிடித்து கீழ்ப்படுத்துவான்.

மேலும், சமாதானத்தையும், சமரச ஒற்றுமையையும் நிலைப்படுத்தப் போவதான பாவனை முகமாக பேரரசுக்குரிய படைகளை Imperial Troops அரண்களை காவல்புரிய அமர்த்துவான். இவ்விதமாக அவனை மதித்து அங்கீகரிக்கச் செய்வான்: அத்தோடு அவர்களுக்கு அதிகாரத்தையும் கொடுத்து அவர்களுக்கு தேசத்தை கிரயத்துக்காக,பணி கைப் பொருளாக Graft (ஆதாயம் ஈட்ட) பங்கிட்டுக் கொடுப்பான்.

இவ்வேளையில் தென்திசை ராஜா மீண்டும் காட்சிக்கு Re-Appears வருவான். அவன் யாராயிருப்பான் என நமக்கு தெரியாது. ஆனால் அவன் பத்து கூட்டணி ராஜாக்களில் Ten Federated Kings ஒருவராயிருக்கப் போகிறான். ஏனெனில் அவன் மகா அலெக்சாண்டரது சாம்ராஜ்யம் பிளவுபட்டபோது ஏற்பட்ட 'நான்கு ராஜ்யங்கள்' திரும்ப உயிர்ப்பெற்று எழுகையில் தோன்றப்போகிறவன்; அவன் ஏதாமோர் எதிர்காலத்திய எகிப்து ராஜாவாயிருப்பதோடு வடதிசைராஜாவான தன்னிஷ்ட ராஜாவின் உரிமை கோரிக்கைகளையும் படைத்துறை வெற்றிகளையையும் எதிர்ப்பவனாயுமிருப்பான். தென்திசை ராஜாவை எதிர்ப்பதில் நேரமிழக்காமல் வடதிசை ராஜா சூறைக் காற்றைப்போல் இரதங்களோடும், குதிரைவீரர்களோடும், பெரியதோர் கப்பற்படையோடும் அவன்மீது பருந்து பாய்ச்சலாக திடீர் பாய்வுத் தாக்குதல் நடத்தி அவனது அனேக தேசங்களுள் பிரவேசித்து பிரவாகித்து கடந்து போவான். ஆனால் ஏதோமும், மோவாபும், அம்மோன் தேசத்தவர்களும் அவன் கைக்கு தப்புவார்கள். அவன் எகிப்து தேசத்தின் சகல உச்சிதமான எல்லா வஸ்துக்களையும், ஐசுவரியங்களையும் பறிமுதல் செய்வான். லீபியரும், எத்தியோப்பியரும் அவனது பாதங்களில் விழுந்து மண்டியிடுவர்.

ஆனால் எகிப்தை வெற்றிபெற்று மேலோங்கையில், கிழக்கிலிருந்து அவனுடைய தலைநகரான பாபிலோனிலிருந்து மற்றும் வடக்கிலிருந்து துர்ச்செய்திகள் அவனை வந்தடையும்; இவை அவனை வெகுளியால் Rage நிரப்பும். உடனே அவன் எகிப்தைவிட்டு கோபாவேசத்துடன் 'Great Fury' விலகி தன் "அரண்மனையாகிய கூடாரங்களை"Tabernacles of His Palace அதாவது அவன் வெளியுத்தத்தளங்களில் தாபரித்திருந்த நாகரீக

கூடாரங்களை RoyalTents சமுத்திரங்களுக்கிடையே (மத்திய தரைக்கடல் மற்றும் சவக்கடல்கள்)யுள்ள சிங்காரமான பரிசுத்த பர்வதத்தத்தின் மீதே Glorious Holy City நாட்டி நிறுவுவான். அங்கே வைத்து, ஒத்தாசை ஏதுமின்றி, அவன் தனது இறுதி முடிவுக்கு வருவான், சகரியா 14-ஐ பார்க்கவும்.

பிரபுவாகிய மிகாவேல்
Michael the Prince

வசனம் *12:1*

இங்கேயும் அதிகாரப்பிரிவு இருக்க வேண்டாம் என நாம் பார்க்கிறோம்; ஏனெனில் எடுத்தாளப்பட்ட பொருளில் எந்த முறிவுமில்லை. பன்னிரண்டாவது அதிகாரம் "அக்காலத்திலே" என்னும் வார்த்தைகளோடு ஆரம்பிக்கிறது. எக்காலத்தில்? தன்னிஷ்ட ராஜாவின் காலத்தில் என்கையில் நாம் படித்துள்ளபடி முடிவுக்கான காலமே! தானி. 11:40. அக்காலத்தில் மிகாவேல் Michael எழும்புவான். தானியேலின் ஜனத்துக்காக அல்லது அவர்களது இடத்தை எடுப்பதற்காக எழும்புவான். மிகாவேல் யார்? தானியேலில் மூன்றுமுறை அவன் குறிப்பீடு செய்யப்படுகிறான், (தானி. 10:13,21;12:1). தானியேலின் ஜனங்களான யூதர்களுக்காக இருக்கிற ஓர் 'பிரபு' Prince என அழைக்கப்படுகிறான். யூதா 9-ல் பிரதான தூதன் Arch Angel என அழைக்கப்படுகிறான். அவனுக்கேயென தூதர்கள் உள்ளனர். வெளி. 12:7-ல் வானலோக தேவதூத சேனைக்குத் தலைமை தாங்குவதாக அவன் காணப்படுகிறான். தேவனுடைய மக்களை, சாத்தானுடைய அதிகாரத்தினின்று விடுவிப்பதே அவனது பணியாகக் காணப்படுகிறது. அதிலும் முக்கியமாய் யூதர்களை! முடிவாக அவனையும் அவனது தூதர்களையும் வான மண்டலத்திலிருந்து பூமியின்மீது விழும்படி கீழே தள்ளுவது அவனது பணி, வெளி. 12:7-9. மரித்தோர் உயிர்த்தெழுதலிலும் அவனுக்கு செய்ய வேண்டிய சிலவை உண்டு. ஏனெனில் தானி.12:1-2-ல் குறிப்பிடப்பட்டுள்ள உயிர்த்தெழுதலோடு அவன் சம்பந்தமுடையவன் Associated. மேலும் மோசேயுடைய உயிர்த்தெழுதலைக்குறித்து அவன் பிசாசுடனே தர்க்கித்து போட்டியிட்டான், (தானி.9). கிறிஸ்துவுக்குள் மரித்தோர்

உயிரத்தெழுகையில் *(1தெச.4:16)* கேட்கப்போகிற பிரதான தூதனுடைய சத்தம் மிகாவேலின் சத்தமாயிருக்கவுள்ளது; ஏனெனில் வேத எழுத்துகளில் குறிப்பிட்டுள்ள ஒரே பிரதான தூதன் மிகாவேலேயாகும்.

மகா உபத்திரவம் The Great Tribulation

வசனம்.12:1

பூமியின்மீது வரப்போகிற ஓர் 'மகா உபத்திரவம்' குறித்து வேதாகமம சத்தியங்கள் எடுத்துரைக்கின்றன. ஒலிவமலையில் வைத்து கிறிஸ்து நிகழ்த்திய ஒலிவமலை உபந்நியாசத்தில், அதாவது செவ்வாய் மாலையன்று அவருடைய சிலுவையறைவுக்கு முன்னர் கூறியதாவது: "மத். *24:21-22*" கிறிஸ்து குறிப்பீடு செய்த "மகா உபத்திரவம்" எருசலேம் அழிவின்போது கி.பி. *70*-ல் யூத ஜனங்களைத் தாக்கிய பயங்கரமான துன்பப்பாடுகளல்ல! அது யூதர்களை மாத்திரம் தாக்கியதான அவர்களது உள்ளூருக்கடுத்ததே Local. அதேவேலையில் கிறிஸ்து முன்னறிவித்த உபத்திரவமோ முழு உலகத்தின்மேலும் வரப்போகின்றதாகும். அதனை உடனடித் தொடர்வது மாபெரும் பௌதீக மாறுதல்கள்! மனிதகுமாரனது திரும்ப வருகை வானமண்டல மேகங்களில் அதிகாரத்தோடும் மகா மகிமையோடும் தொடரப்போகிறது,

"மத்தேயு *24:29-30*."

எருசலேமின் அழிவின் உடனடித் தொடர்கையில் இங்கு கூறப்பட்ட காரியங்கள் நிகழவில்லை, இதுவரை நிகழவுமில்லை! பௌதீக மாறுதல்கள் எனப்படுகின்ற சூரியன் இருண்டுபோதல் முதலியன உருவகமானவை என்றும் அவை அரசியல் வான மண்டலத்தினின்று ஆளுநர்கள், அரசாங்கங்கள், மற்றும் அதிகாரங்களின் வீழ்ச்சியை உருவகப்படுத்துபவை; ஏனெனில், அத்தகைய பௌதீக மாறுல்கள் முற்காலத்தும் சம்பவித்தன இன்னும் சம்பவிக்கவுள்ளன என்பதாய் கூறிவிடுவது போதுமானதாகாது. It Will not Do. மோசேயின் நாட்களில் அவை சம்பவித்தன; அப்பொழுது எகிப்தில் மூன்று நாட்களுக்கு காரிருள் Darkness உண்டானது *(யாத்.10:21- 23)*. அவை மீண்டும்

வெளிப்படுத்தல் புத்தகத்தின் கலசங்கள் Vials ஊற்றப்படும்போது அதாவது மகா உபத்திரவத்தின்போது ஏற்படவுள்ளன (வெளி.*16: 1-21*). ஏனெனில் கலசங்களின் வாதைகளில் நான்கு, எகிப்தின் வாதைகள் நான்கின் மறுநிகழ்வாய் உள்ளன. அன்றுள்ளவை எழுத்தின்படியானவையெனில் அப்படியே கலச வாதைகளும்கூட! மகா உபத்திரவ காலத்து சமயத்தே "வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்" என கிறிஸ்து மொழிந்தார். அப்போஸ்தலர் பவுல் நம்மை எச்சரிக்கை செய்து குறிப்பிடுகின்ற வானமண்டலங்களிலுள்ள அதிகாரங்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள், அதிகார லோகாதிபதிகள்/ தீய ஆவிகள் (எபேசி.*6:12*) இன்னமும் அசைக்கப்படவில்லை. ஆனால், தானியேலின் எழுபதாவது வாரத்தின் மத்தியிலே, மகா உபத்திரவகாலம் தொடங்குகையில் வானத்தில் யுத்தம் உண்டாகும். அப்போது இத்தகைய வளிமண்டல (காற்று) தீய சக்திகளின் பிரபுவாகிய சாத்தான் அவைகளோடு சேர்ந்து அசைக்கப்படுவது மட்டுமின்றி வளி மண்டலங்களினின்று வெளியே தள்ளப்படும்படி அசைக்கப்பட்டு பூமியின்மீது வீழ்த்தப்படுவான். உடனடியாக அந்திக்கிறிஸ்துவின் அவதாரம் எடுக்கின்ற அவனது பிரசன்னமே Presence மகா உபத்திரவ காலத்தை பிறப்பிக்க ஏதுவாகும். மகா உபத்திரவ காலத்தின் பின் உடனடியாக Immediately After ஒருமுறைகூட Once More, மனிதகுமாரனுடைய அடையாளம் வானங்களில் காணப்படும். அந்த அடையாளம் ஓர் மேகமாய் உள்ளது. அவர் ஓர் மேகத்தில் ஏறிச்சென்றார். அதேப்பிரகாரம் அவர் மேகத்தினுள் திரும்ப வரவுள்ளார் மத். *24:30*. ஆனால் மனிதகுமாரன் (இயேசு) கி.பி. *70*ல் எருசலேமின் அழிவின்பின் உடனடியாக திரும்பிவராது போனதால் எருசலேமின் அழிவு மத்தேயுவினால் கூறப்பட்ட மகா உபத்திரவகாலமாகவில்லை.

நமது ஆண்டவருடைய தீர்க்கதரிசனம் தனித்து நிற்கிறதில்லை. இது பழைய புதிய ஏற்பாட்டு தீர்க்க தரிசனங்களால் பின்தாங்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டுக்கு திரும்புகையில், இஸ்ரவேலுக்கான ஓர் உபத்திரவகாலம் / இக்கட்டுக்காலம் குறித்து பேசிய தானியேல் தவிர மற்றும் பல திர்க்கதரிசிகள் இருந்ததை நாம் பார்க்கிறோம். ஏரேமியா தீர்க்கன் இதை யாக்கோபின் இக்கட்டுக்காலம் Jacob's Trouble

என அழைத்தான். ஓர் ஸ்திரீயினது பிரசவ வேதனைக்கு Birth Pangs-க்கு அதின் வேதனைகளை ஒப்பிட்டார் எரே.30:4-7. எசேக்கியேல், இஸ்ரவேல் கோலின் அடியில் கடந்து செல்லவுள்ள காலமென்று பேசுகிறார். எசே. 20:34-38. தேவன் இஸ்ரவேலை எருசலேமின் மத்தியில் கூட்டிச் சேர்க்கப் போகையில் அவரது உருக்கு மட்பாண்டத்தினுள் Melting Pot அவர்களை தள்ளிப்போடவே அங்கே அவர்கள் வெள்ளி புடமிடப் படுவதைப்போல புடமிடப்படுவர், எசே.22:18-22. மற்றும் சகரி.13:9, மல்கி. 3:1-3 பார்க்க! பழைய ஏற்பாட்டு தீர்க்கர் மற்றும் கிறிஸ்து இவ்வுபத்திரவத்தின் காலத்தை முன்னறிவிக்கையில் அப்போஸ்தலன் யோவான் வெளிப்படுத்தல் புத்தகத்தில் (வெளி 12:1 முதல் 19:21 வரை) விவரங்களை நமக்கு அளிக்கிறார். இக்குறிப்புகளிலிருந்து மகா உபத்திரவ காலம் யூதர்களுக்குரிய நியாயத்தீர்ப்புக்கான ஓர் சமயம் என்றும் அதின் மூலமாக, அதாவது ஓர் சுத்தீகரிப்புக்கான வழிமுறை Refining Process-ஆக அவர்கள் மீண்டும் தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாக திகழத் தகுதி அடையப் பெறுவர். மகா உபத்திரவ காலம் பரிசுத்தவான்களை பூரணப்படுத்த ஏற்படுகிறதில்லை. இதற்கு சபையோடு எந்த சம்பந்தமுமில்லை. வெளிப்படுத்தல் புத்தகம் கால வரிசை ஒழுங்கைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது. சபையானது உபத்திரவ காலம் தொடங்குவதற்கு முன்பு அதிகாரம் 4:1-ல் காணும் 'திறந்த வாசல்' வழியாக எடுத்துக்கொள்ளப்படுகிறது Caught Out. அவள் கிறிஸ்துவோடு அவரது இரண்டாம் வருகையின்போது ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாக திரும்பத் தோன்றுகிறவரை அவளை காண்பதிற்கில்லை, வெளி.19:6-9. சபை மகா உபத்திரவ காலத்தினுடே செல்ல வேண்டி இருக்குமானால் அவள் (சபை) உபத்திரவத்திற்கு எதிர் நோக்கி காத்திருக்க வேண்டுமேயன்றி அவரது குமாரன் வானத்திலிருந்து வர எதிர்நோக்கி காத்திருக்கத் தேவையில்லையே! Iதெசலோ.1:10. தானியேலின் உபத்திரவ காலத்தின் Time of Trouble போது புத்தகத்தில் பெயர்கள் எழுதப்பட்டோரான தானியேலின் ஜனங்கள் யாவரும் அற்புதகரமாக Miraculously விடுதலை யடையப் போகின்றனர் Delivered. இவர்களே முடிவுகாலத்திய End Time தேவனுடைய மீந்திருப்போராவர் Godly Remnant.

ஓர் யூதத்துவ உயிர்த்தெழல்
A Jewish Resurrection

வசனம் 12:2

வேதசத்தியங்கள் மூன்று வகைப்பட்ட உயிர்த்தெழுதல் களைக் குறித்துப் பேசுகின்றன.

1. ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் Spiritual

இது அக்கிரமங்களிலும் பாவங்களிலும் ஆவிக்குரிய பிரகாரமாய் Spiritually மரித்துள்ளோரை *எபேசி.2:1-16* குறிப்பீடு செய்கிறது. எபேசி. *5.14*, ரோமர். *6:11*. இது ஓர் "தற்கால உயிர்த்தெழுதல்". Present Resurrection இது தொடர்ச்சியாக போய்க்கொண்டேயிருக்கிறது Continuously. ஓர் ஆத்துமா 'மறுபடி பிறந்ததும்' Born Again மரணத்திலிருந்து ஜீவனுக்குள் ஓர் கடந்துசெல்லல் ஏற்படுகிறது. இதுவே ஆவிக்குரிய உயிர்த்தெழுதலாகும். யோவா.*5:24*.

2. உடல் சார்ந்த / சடப்பொருள் தொடர்பான Physical

இது மரித்த சடலத்தைப் பற்றியுள்ளது. மனிதனது 'ஆவி' Spirit மரிக்கிறதில்லை. அது தன்னைத்தந்த தேவனிடமே திரும்பிச் செல்கிறது. கல்லறைக்குள் செல்வதெல்லாம் சரீரம் மாத்திரமே. அதுபோல கல்லறையினின்று வெளிவரக் கூடியதெல்லாம் சரீரமே. நீதிமான்கள் மற்றும் பொல்லாதோர் ஆகிய இருவரது சரீங்களும் எழுப்பப்படுகின்றன. ஆனால் ஒரே சமயத்திலல்ல! ஓராயிரம் வருடங்களின் வித்தியாசம் இருக்கவுள்ளது. நீதிமான்கள் ஜீவனுக்கான உயிர்த்தெழுதலுக்கு Resurrection of Life நல்லாயிரத்துக்கு முன்னர் எழும்பவுள்ளனர். ஆனால் பொல்லாதோரோ நரக தண்டனைக்குரிய / அழிவுக்குரிய உயிர்த்தெழுதலுக்கு Resurrection of Damnation திருநல்லாயிரத்து முடிவின்போது எழும்பவுள்ளனர், யோவான் *5:28-29*.

3. தேசீக அளவிலான National

தேசீகமாக மரித்து Nationally Dead தேசங்களது கல்லறைத்தோட்டத்தில் அடக்கம் பண்ணப்பட்டுள்ள

இஸ்ரவேலை இது குறிப்பீடுசெய்கிறது. ஆனால் அவ்வாறுள்ளோர் மீள உயிர்ப்பிக்கப்பட்டு தங்கள் சொந்த தேசத்துக்குள் மீள கூட்டிச் சேர்க்கப்படவுள்ளனர், எரே.*16:14-15.*

இஸ்ரவேல் மக்கள் தங்கள் சொந்த பூமிக்கு மீளச் சேர்க்கப்படப் போகையில் முழு பன்னிரண்டு கோத்திரங்களும் திரும்பிவருவர். பவுல் கூறுகிறார், "இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்" ரோமர் *11:26.* எசேக்கியேலின் உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்குடைய காட்சியில் Valley of Dry Bones எலும்புகள் முழு இஸ்ரவேலின் வீட்டைWhole House of Israel பிரதிநிதித்துவப்படுத்துவதாக எசேக்கியேலுக்கு கூறப்பட்டது, எசே.*37:11.* ஆனாலோ, சிலர் திருநல்லாயிரத்துக்கு முன்னர் தேவன் இஸ்ரவேலது பின்வழித் தோன்றியதான அனைத்து பேரையும் உயிரடைய எழுப்பி அவர்களை பாலஸ்தீனா தேசத்துள் மீள வைக்கவுள்ளார் என இது அர்த்தப்படுத்துவதாக போதிக்கின்றனர். எசேக். *37:12*-ல் காணும் கூற்றை இதற்கு அடிப்படையாக எடுத்துக்கொள்கின்றனர்:

இவர்களது அர்த்தப்படுத்தல் அநேக காரணங்களால் உண்மையாக முடியாது! முதலாவது, பாலஸ்தீனா தேசம் அவ்வாறான ஓர் பெருந்திரளானோரை உள்ளடக்கி தாங்கிக்கொள்ளுமளவுக்கு பெரிதானதல்ல! இரண்டாவதாக இது மரித்த சடலங்களை ஓர் சடப்பொருள் சம்மந்தமான ஓர் உயிர்த்தெழுதலின் விவரணமல்ல /விரிவுரையல்ல! மாறாக ஓர் ஜனத்தின் தேசீக அளவிலான உயிர்த்தெழுதலுடையதாகும். எலும்புகளின் கூக்குரல் (வசனம் *11*)படி அவை கூறுகிறது: "எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டுபோகிறோம்" என்பது, தனித்தனி மரித்த இஸ்ரவேலர்களது கூக்குரல் அல்ல; மாறாக தனது சொந்த பூமியிலிருந்து தறிப்புண்டுப்போன Cut Off ஓர் மரித்த தேசத்தின் கூக்குரலேயாகும். அதாவது, ஓர் ஆவிக்குரிய மற்றும் தேசீகளவில் மரித்துப்போன ஜனத்தின் கூக்குரல்! "கல்லறைகள்" என்பதால் எழுத்தின்படியான கல்லறைகளென புரிவதற்குள்ளதல்ல; ஏனெனில் எலும்புகள் கல்லறைகளினுள் இல்லாமல் பள்ளத்தாக்கெங்கும் சிதறிக்கிடக்கின்றவை! (எசேக். *37:1-2*). இங்குள்ள வேதபகுதி பொருளளிப்பது யாதெனில்,

தேசங்களின் கல்லறைத்தோட்டத்தில் உருவகமாய் அடக்கம் பண்ணப்பட்ட தேவனுடைய இஸ்ரவேல் ஜனங்களை அவர் திரும்ப கொண்டுவந்து அவர்களை தங்கள் சொந்த நாட்டில் வைக்கப்போகிறார் என்பதே! எசேக். *37:12,21,22* இதை மேலும் தெளிவாக்குகின்றன.

இஸ்ரவேலது மூத்த குடிமக்கள், நியாயாதிபதிகள், தீர்க்கர்கள் மற்றும் ராஜாக்கள் அடக்கம்பண்ணப்பட்ட இஸ்ரவேல் பூமியிலுள்ள எந்த கல்லறைகளையும் திறக் கிறதைக்குறித்து இங்கே எதுவும் சொல்லப்படவில்லை என்பதைக் கவனிக்கவும். அப்படியானால், இஸ்ரவேலில் மரித்த அனைவரது ஓர் பொதுவான உயிர்த்தெழுதலாக இது இருக்கமுடியாது. மாறாக மற்ற தேசங்களில் மரித்தோ ருடையதாக மட்டுமே இருக்கமுடியும். அதேவேளையில் அடுத்த இரு வசனங்கள் இக் கேள்வியை நிறைவு செய்வதாகின்றன; ஏனெனில் கர்த்தர் கூறுகிறார்:

எசேக்கியேல் *37:13-14*

இப்பகுதி இஸ்ரவேல் தங்கள் தாயகத்துக்குள் கூட்டிச் சேரக்கப்படவுள்ளது என்கின்ற மற்ற வேதபகுதிகளோடு சரியான ஒத்திசைவு கொள்கிறது (எரே.*16:14-15*; எசா.*43:5-7*; ஆமோஸ் *9:14-15*). மீள சேர்க்கப்படும் தங்கள் தேசத்தே அவர்கள் உபத்திரவ காலத்தினுடைய அக்கினி நியாயத்தீர்ப்பினூடே - Fiery Judgement கடந்து செல்லவேண்டி வரும், (எசே.*20:34-38; 22:19-22*; சகரி.*13:9*; மல்கி.*3:1-3*). அவைகளது பாடு துன்பங்கள்/ உபத்திரவங்கள் கர்த்தரை நோக்கி விடுதலைக்காக கூப்பிடச் செய்ய வழிகோலும். அவ்வேளையிலே கர்த்தர் அவர்கள்மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் ஊற்றுவார் (சகரி.*12:10*). அவர்கள் தேசீக அளவில் மனந்திரும்புவார்கள் (சகரி.*12:11-14*). புதுப்பிறப்பின் மாற்றமடைவர், Converted.

"எசேக்கியேல் *36:24-27*"

பின்னர் எசாயாவின் தீர்க்கத்தரிசனம் நிறைவேறுகை நடந்தேறும்:

"எசாயா *66:8*"

பின்னர் ஓர் தேசம், யூதாதேசம் Jewish Nation மனமாற்றமடையும் Converted அல்லது மீளப்பிறக்கும், Reborn ஒரே நாளில் In a Day.

உதிர்ந்த எலும்புகளது பள்ளத்தாக்குடைய எசேக்கியேலது தரிசனத்தின் பொருள் விளக்கம் அதைத் தொடருகின்ற இரு கோல்களின் Two Sticks கருத்து நோக்கப் பாடத்தால் Object Lesson உறுதி செய்யப்படுகிறது, எசேக்.*37:15-28*. ஓர் கோலை எடுத்து அதன்மேல் "யூதாவுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் புத்திரருக்கும்" என எழுத தீர்க்கன் பணிக்கப் பட்டான். 'யூதா' என அறியப்பட்ட இரு கோத்திரங்களான யூதா மற்றும் பென்யமீனை இது அர்த்தப்படுத்துகிறது. பின்பு இன்னொரு கோலை எடுத்து அதன்மீது "எப்பிராயீமுக்கும் அதைச்சேர்ந்து இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் அடுத்த யோசேப்பின் கோல்"என எழுதச் சொல்லப்பட்டது. எப்பிராயீம் யோசேப்பின் குமாரனாயிருந்தான். அவனை வைத்து பத்து கோத்திரத்தாரும் யெரோபெயாமின் ஆட்சி எதிர்ப்பின் பின்னர் அநேக வேளைகளில் அழைக்கப்பட்டனர். அவ்விரு கோல்களையும் அடையாளப்படுத்தியதும் தீர்க்கன் அவைகளை நுனிக்கு நுனி சேர்த்து ஒரே கோலாகும்படி இணைக்கும்படி கூறப்பட்டான். அதை அவன் அப்படியே செய்தபோது கர்த்தர் கூறியதாவது:

"எசேக்கியேல் *37:18-22*"

இதிலிருந்து இஸ்ரவேலின் முழுக் குடும்பமும், அதாவது முழு பன்னிரண்டு கோத்திரங்களும் தங்கள் தாயகத்துக்கு திரும்பக் கூட்டிச் சேர்க்கப்படப் போகின்றனர்; மற்றும் எசேக்.*48*-ல் விவரிக்கப்பட்ட முறைப்படியே அதின்மேல் மீள மாவட்டங்களாக்கப்படவுள்ளனர் Redistricted எனப் பார்க்கிறோம். பின்பு எரேமியாவின் அதி.*3:18*-ன் வார்த்தைகள் நிறைவேறப்போகின்றன.

"எரேமியா *3:18*"

இவ்வாறான "சத்தியத்தின் வேத வார்த்தைகளில்"

Scriptures of Truth "கடைசி நாட்களில் அல்லது முடிவுகாலத்தில்" அவருடைய ஜனங்களுக்கு (யூதர்கள்) என்ன நேரிடப்போகின்றது (தானி10:14,11:35;12:4) என்பதை தானியேலுக்கு காபிரியேல் தூதன் புரியவைக்கும்படி முயற்சி பண்ணிக்கொண்டிருந்தான். ஆகவே யூத தேசத்தினது "தேசீக உயிர்த்தெழுகை" குறித்தும் சிலவற்றை சொல்லவுள்ளதாக அத்தூதனை நாம் இயற்கையாக எதிர்பார்க்க வேண்டும். அது இக்கட்டுக் காலத்தை (உபத்திரவ காலம்) பின்தொடர்வதாக இருக்கவுள்ளதால் வசனம் 12:2-ன் வார்த்தைகளில் முன்னறிவிப்பதைவிட வேறெந்த விதத்தில் முன் அறிவிக்க முடியும்? "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும் சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்" (தானி.12:2). மரித்த சடலங்களின் ஓர் சரீரபிரகாரமான உயிர்த்தெழுதலை இவ்வார்த்தைகள் பொருளளிப்பனவாக உரிமை கோரினால் Claim இவ்வசனம் உயிர்த்தெழுதலைக் குறித்த புதிய ஏற்பாட்டு போதனைக்கு முரண்பாடுடையதாகிறது. நாம் பார்த்துள்ளபடி திருநல்லாயிரத்துக்கு முன்னர் நீதிமான்களுடைய ஓர் 'வெளியேறு உயிர்த்தெழுதல்' Out Resurrection இருக்கப் போவதாக புதிய ஏற்பாடு போதிக்கிறது. அதாவது பொல்லாதோர் எழுவதற்கு ஓராயிரம் வருடங்களுக்கு முன்பாக இருக்கப்போவதால் நாம் கவனத்திலெடுத்துள்ள வசனம் எடுத்துரைப்பதன்படி அநேகர் (எல்லோருமல்ல) எழுவதற் கிருக்கையில், அதன்மூலம் 'வெளியேறு உயிர்த்தெழுகை' சாத்தியப்படுகையில், சிலர் நித்திய ஜீவனுக்கும் சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்குமாக எழுவதால் இதை ஓர் கலப்புத் தன்மையின் A Mixed Character உயிர்த்தெழுதலாக்கச் செய்கிறது. மேலுமாக, தானியேலது உயிர்த்தெழுகையின் சமயம் உபத்திரவக் காலத்துக்கு பின்னராயுள்ளது. அதேவேளையில் புதிய ஏற்பாட்டு நீதிமான்களது முதல் அல்லது வெளியேறு உயிர்த்தெழுகை உபத்திரவக் காலத்துக்கு முன்னிகழ்வாக எடுத்துரைக்கிறது. ஆனால், நீயோ நீதிமான்களது உயிர்த்தெழுதல் உபத்திரவக் காலத்தின் முடிவில் அல்லது பிற்பாடு என்கிறாயே? அது யாதென்றால் உபத்திரவக் கால பரிசுத்தவான்களது உயிர்த்தெழுதலேயாகும், வெளி.20:4-6. அதுவே உண்மை. ஆனால் இது ஓர் கலப்பின உயிர்த்தெழுகை அல்ல! இது

உபத்திரவ காலத்தின்போது மரித்தோருடையதேயாகும். அதுவும் இயேசுவின் சாட்சியினிமித்தமும் மற்றும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டோருடையதே! மேலும், மிருகத்தை வணங்காதோரும் இதிலடங்குவர். வேத வார்த்தைகளில் கூறப்போனால், நீதிமான்களான நபர்களுடைய உயிர்த்தெழுதலே!

சில விரிவுரையாளர்கள் இவ்வுரை மூலத்தை Text பொழிப்புரை Paraphrase செய்வதினால் பிரச்சனையை தீர்வுசெய்ய முயற்சிக்கின்றனர். திரெகெல்லஸ் Tregelles வசனத்தை இவ்வாறு மொழியாக்கம் செய்கிறார்: "பூமியின் தூளில் நித்திரை பண்ணுகிறவர்களிலிருந்து" அநேகர் விழித்து எழுந்திருப்பர். இவர்கள் நித்திய ஜீவனுக்கென்று எழும்புவர். ஆனால் இது திருப்திகரமாயுமில்லை அல்லது வேதத்தின்படியு மில்லை. ஏனெனில், இது எழவுள்ள அநேகரை இரு வகுப்பாராகப் பிரிக்கும் ஒரு பிரிப்பேயன்றி வேறல்ல. அதே வேளையில் மரித்தோரில் மிக அதிகப்படியானோரை அப்படியே கல்லறையிலே விட்டுவிடுவதாகிறது. "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்கள்" எனும் வார்த்தைகள் சரீரபிரகாரமான மரணத்தை மறைமுக சுட்டுகை செய்வதாய் காணப்பட்டாலும், சாதாரண சந்தர்ப்பங்களின்கீழே அதையே அர்த்தக்குறிப்பு செய்தாலும், இவ்வசனம் அவர்களது கடைசி நாட்களில் தானியேலின் மக்களது ஓர் நிஜ நிலையை குறிப்பீடு செய்கிறதை நாம் மறக்கக்கூடாது. ஓர் மரணத்தின் Death நிலையல்ல; ஆனால், அது தேசம் முழுமைக்குமுரிய/ தேசீய உளதாம் தன்மை/பிழைப்பு National Existence! "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகை" எனும் வார்த்தைகளை நாம் எசேக்கியேலது வார்த்தைகளுக்கு இணையாக அர்த்தமளிக்கப்போனால், அதாவது "நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக் குழிகளிலிருந்து வெளிப்படப் பண்ணுவேன்" *(எசே.37:12)* அர்த்தப்படுத்துகின்ற யூத மக்களுடைய கடைசி காலத்திய ஓர் தேசீய உயிர்த்தெழுகையை பொருள் அளிப்பதாக்கினால் இவ்வசனத்தின் அர்த்தம் தெளிவாகிறது. அதாவது, இது ஓர் சரீரபிரகாரமான அல்லது ஆவிக்குரிய அர்த்தமளிக்காமல், உபத்திரவ காலத்தின் பின்பு மற்றும் திருநல்லாயிரத்துக்கு முன்பு ஏற்படவுள்ள ஓர் தேசீக உயிர்த்தெழுகையையே அர்த்த

மளிக்கிறது என்பது தெளிவாகிறது.

அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடன் தானே Immediately After மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை சகல கோத்திரத்தாரும் (அதிகபட்சம் Possibly, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள்) கண்டு புலம்புவார்கள். வலுவாய் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களை வானத்தின் (பூமியின் வளிமண்டலம்) ஒரு முனை முதற் கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்கள் (மத் *24:29-31*).

இங்கே ‘தெரிந்துகொள்ளப்பட்டோர்’ சபையுடைய அத்தகையோராகார்கள். அவர்கள் உபத்திரவ காலத்தின் முன்பே எடுத்துக்கொள்ளப்பட்டனர். இங்கு வருவோரோ உபத்திரவகாலத்துக்கு பின்னர் எடுத்துக்கொள்ளப்படுவர். இங்குள்ள வேதபகுதி யூதரைப்பற்றியதாகையால், அவர்கள் இஸ்ரவேலில் தேர்ந்தெடுக்கப்பட்டோராக வேண்டும். இது மேலெடுக்கப்படுகை Catching up அல்ல; ஆனால் ஓர் கூட்டிச்சேர்க்கப்படுகை Gathering Together.

காட்சி பூமிக்குரியதாயிருக்கிறது. யூதர்கள் இக்காலத்தே “தூளில் வாசம் செய்வோராக” கண்ணோக்கப் படுகின்றனர். இனிமேல் அவர்கள் விழித்தெழுந்து பாடப்போகிறார்கள், எசா.*26:19*. அவர்களைக்குறித்து அப்போஸ்தலர் பவுல் கூறுகையில், “அவர்களைத் (இஸ்ரவேல்) தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க, அவர்களை அங்கீகரித்துக் கொள்ளுதல் என்னமாயிராது. மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானது போலிருக்குமல்லவா”, ரோமர்.*11:15*. இஸ்ரவேல் இழக்கப்பட்டிருக்கையில் மரித்தவர்களல்ல. கெட்டகுமாரன், இழக்கப்பட்டிருந்தபோது, மரித்தவன் என்று அழைக்கப் பட்டான். ஆனால் அவன் வீடு திரும்பிவந்ததும் அவன் தகப்பன் அவனைக்குறித்து ‘திரும்பவும் உயிர்த்தான்’ என்றார், லூக். *15:24*. நாம் இதே பொருளளிப்பை இஸ்ரவேலது உயிர்த்தெழுகை என

ஏற்போமானால், பின்பு விழித்து எழும்புகின்ற 'அநேகர்' Many இங்கே வெளிப்படுத்தும் உண்மையாதெனில் உலகத்திலுள்ள யூதர்கள் அனைவரும் பாலஸ்தீனாவுக்கு திரும்ப போவதில்லை என்பதும், "நித்திய ஜீவனுக்கென்றுள்ள சிலர்" நீதிமான்களாவார்கள் என்பதும், அதேவேளையில் நிந்தைக்கும் நித்திய இகழ்ச்சிக்கு முள்ளோர் அநீதிமான்களாவார்கள் என்பதுமே!

ஞானவான்களது வெகுமானம்
The Reward of the Wise

வசனம் 12:3

திருத்திய திருப்பத்தில் "அவர்கள்" They எனும் பதம் ஓரக்குறிப்பின்படி "ஆசிரியர்கள்" Teachers என வருகிறது. இவ்வேதப்பகுதியை "ஞானவான்களான ஆசிரியர்கள்" Teachers That be Wise என வாசிக்கவேண்டும். நமது நாட்களைப் போன்று சிலபேர் ஞானமற்றவர்களாயிருப்பர் என்பதே முடிவுக் கருத்தாகும். ராஜ்யத்தின் சுவிசேஷம் Gospel of the Kingdom மீண்டுமாக பிரசங்கிக்கப்படவுள்ளது என்பதை நாம் மறக்கக்கூடாது. ஏனெனில் இது பூலோகமெங்குமுள்ள சகல தேசங்களுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்பட வேண்டும். அப்போது முடிவுவரும் (இக்கால சகாத்தத்தின் முடிவு) *மத்.24:14.*

புதிய ஏற்பாட்டில் நான்கு சுவிசேஷங்கள் உள்ளனவாக சொல்லப்படுவதை நாம் மறக்கலாகாது.

1. ராஜ்யத்தின் சுவிசேஷம் Gospel of the Kingdom

2. தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் Gospel of the Grace of God.

3. மகிமையின் சுவிசேஷம் Glorious Gospel

4. நித்திய சுவிசேஷம் Everlasting Gospel

சுவிசேஷம் என்பது 'நற்செய்தி' Good News. ராஜ்யத்தின் சுவிசேஷம் என்றால் தாவீதின் குமாரன் இயேசு ஆளுகை செய்யப்போகின்ற ஓர் பூமிக்குரிய ராஜ்யம் தேவன் நிறுவுகை செய்யப்போகிறார் என்பதேயாகும், *லூக்.1:32-33.* இச்சுவிசேஷம்

யோவான் ஸ்நாபகனால் பிரகடனம் செய்யப்பட்டது; மற்றும் இயேசுவால் மற்றும் அவருடைய சீடர்களால் "மனந் திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" எனும் வார்த்தைகளில் பிரசங்கிக்கப்பட்டது. மனந்திரும்ப அழைப்பு தனி நபர்பளுக்கல்ல, மாறாக தேசத்துக்கு ! தேசமோ மறுத்து, ராஜாவை நிராகரித்து, அத்தோடு சிலுவையிலறையவும் செய்தது.

ராஜாவின் மரணத்திற்கு முன்பு பாலஸ்தீனாவில் மட்டுமே அதுவரையில் பிரசங்கிக்கப்பட்டுவந்த ராஜ்யத்தின் சுவிசேஷம் திரும்பப்பெறப்பட்டது / பின்வாங்கப்பட்டது Withdrawn. இச்சுவிசேஷம் மீண்டுமாக சபை எடுத்து கொள்ளப்பட்ட பின்பு பிரசங்கிக்கப்படவுள்ளது. அப்போது பாலஸ்தீனாவில் மட்டுமல்ல; முழு உலகத்திலும் Whole World அதாவது தேசமாக இஸ்ரவேலுக்கு மனந்திரும்ப ஓர் அழைப்பாகும். கிறிஸ்து கல்ராஜ்யத்தை (தானி 2: 34-35;44-45) அல்லது திருநல்லாயிர ராஜ்யத்தை நிறுவ வருகிறார் எனும் ஓர் பிரகடனமாகவுள்ளது. பூமியின் ராஜாக்கள், அதிலும் முக்கியமாய் அந்திக்கிறிஸ்து அவனது ராஜ்யத்தின் வீழ்ச்சியை பிரபல்லியப்படுத்தும் அத்தகைய ஓர் சுவிசேஷத்தை பகைப்பான். இது அந்திக்கிறிஸ்துவின் யூதர்கள் மீதான விரோதத்துக்கும், மற்றும் இச்சுவிசேஷத்தை பிரசங்கிப்போரது அவனுடைய்ய துன்பியில் வதைப்புக்கும் காரணம் கூறுகிறது

ராஜ்யத்தின் சுவிசேஷத்தின் இரு பிரசங்கிப்புகளிடையே தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் நமக்குள்ளது. இது சிலுவை மீது கிறிஸ்துவின் பிராயச்சித்த பலியில் விசுவாசத்தின் மூலம் இரட்சிப்புடையதை நற்செய்தியாக கூறி அறிவிக்கிறதாயுள்ளது. மகிமையின் சுவிசேஷம் என்பது நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசுகிறிஸ்துவின் மகிமையின் தோன்றுகை அல்லது இரண்டாம் வருகையின் சுவிசேஷமாகிறது, தீத்து 2:13. நித்திய சுவிசேஷம் பூமியின் மீது கலச நியாயத்தீர்ப்புகள் ஊற்றப்படுவதற்கு சற்று முன்பாக ஓர் தூதனால் பிரசங்கிக்கப்படவுள்ளது. இது மகா உபத்திரவ காலத்தினூடே கடந்து செல்லுகின்ற அனைவருக்கும் நற்செய்தியாயிருக்கவுள்ளது. ஏனெனில் இது அவர்களது துன்பப் பாடுகள் சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்பதாய் கூறி அறிவிக்கிறது. அதேவேளையில் இது அந்திக்கிறிஸ்துவுக்கும்

அவனது பின்னடியார்களுக்கும் ஓர் துர்ச்செய்தியாயிருக்கும் Bad News; ஏனெனில் இது அவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வேளை வந்துவிட்டது என கூறி அறிவிக்கிறதாயுள்ளது, வெளி.14:6-7. இன்னொரு சவிசேஷம் கூட உள்ளது (கலா.1:6-12, 2கொரி 11:4) என குறிப்பிட்டுள்ள பவுல் அதை கடிந்துகொண்டு அப்படி இன்னொன்றில்லை Not Another என்றார். மேலும் இதை சத்திய சவிசேஷத்தினுடைய ஓர் விபரீத நெறிபிறழ்வு மட்டுமின்றி அதற்கு அநேக கவர்ச்சி யூட்டும் / மருட்டுகின்ற வகைவடிவங்கள் உள்ளது. இரட்சிப்புக்கு விசுவாசம் போதுமானதல்ல; மேலும் காத்து, பூரணப்படுத்த திறனுடையதல்ல/ கூடியதல்ல எனவும், ஆகவே நல்ல கிரியைகள் இன்றியமையானவை எனவும் அழுத்தம் கொடுக்கிறதே இதன் முக்கிய போதனையாகிறது. கொலோ.2:18-23; எபி.6:1; எபி.9:14. இதை போதிக்கிறவர்கள் மற்றும் படிப்பிக்கிறவர்கள்மேல் பயங்கர சாபத்தை வசனிக்கிறார் பவுல் அப்போஸ்தலன்! (கலா:1:8-9).

கடைசி காலத்திய ஞானமுடைய ஆசிரியர்கள் 'இசக்காருடைய புத்திரர்', போன்றோராய் இருக்கவுள்ளனர். "காலங்களின் சமயோசித யோசனை / புத்தியுள்ள மனிதராயிருந்தனர்" 1நாளா.12:32 எனச் சொல்லப்பட்ட இவ்விசக்கார் புத்திரர் போன்று இவ்வாசிரியர்கள் திருவசன எழுத்துக்களை புரிந்து அறிந்துகொள்வார்கள். அவர்கள் அதிகமும் யூதர்களாவதால் பழைய ஏற்பாடு அதிலும் சிறப்பாக இஸ்ரவேல் சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனங்களை நன்கு புரிய அறிவர். அவர்கள் மிகப்பிரபல்லியமான குறிப்பிடத் தக்கவர்களாயிருக்கவுள்ளதால், தெளிவான இரவின் ஆகாய மண்டலத்திலுள்ள ஒளியைப் போலவும், தீர்க்கதரிசனத்து வானலோகில் நட்சத்திரங்கள் போலவும் பிரகாசிப்பார்கள். மேலும் மோசே, எசாயா, எசேக்கியேல் மற்றும் தானியேல், போன்ற பழைய காலத்து உன்னத தீர்க்கதரிசிகள்போல சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். மிகமிகத் தெளிவாகவும், உண்மையாகவும், அழுத்தமாகவும் தேவனுடைய வார்த்தையின் அவர்களது விரித்துரைத்தல் இருக்கப்போவதால் கேட்போரை அது மனந்திரும்ப உணர்த்துவதாவதால் அவர்கள் கேட்போரில் அநேகரை நீதிக்கு நேராக திருப்புபவர்களாயிருப்பர்.

முத்திரிக்கப்பட்ட புத்தகம்
The Sealed Book

வசனம் *12:4*

"தானியேலாகிய நீயோ வென்றால் முடிவுகாலம் மட்டும் இந்த வார்த்தைகளைப் புதைப்பொருளாக வைத்து வைத்து இந்தப் புத்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது (முடிவுக் காலத்தே) அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள்; அதிலும் (தீர்க்கதரிசன அறிவு) அறிவும் பெருகிப்போம் என்றான்".

தீர்க்கன் தானியேலுக்கும், அப்போஸ்தலன் யோவானுக்கும் கொடுக்கப்பட்ட கட்டளையின் வித்தியாசத்தை கவனிக்கவும். தானியேல் அவருக்கு கொடுக்கப்பட்ட வெளிப்பாடுகளை முத்திரை பொறித்து மூடும் படி Seal Up கூறப்பட்டார்; அதேவேளையில் யோவான் வெளிப்படுத்தல் புத்தகத்தின் தீர்க்கதரிசனங்களை முத்திரை போட வேண்டாம் Seal Not என்று சொல்லப்பட்டார். வெளி.22:10 காரணம் தெளிவாயுள்ளது; சீடர்கள் இயேசுவிடம் வந்து கேட்டதாவது:

"ஏன் அவர்களோடே (திரளான ஜனங்கள் அதிகமும் யூதர்கள்) உவமைகளாகப் பேசுகிறீர்? அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக பரலோகத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு (சீடர்கள்) அருளப்பட்டது; அவர்களுக்கோ அருளப்படவில்லை. அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகின்றேன்; எசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது. காதாரக் கேட்டும் உணரா திருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள் (எசாயா *6:9-12*). இந்த ஜனங்கள் (யூதர்கள்) கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும் இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும் Converted நான் அவர்களை ஆரோக்கிய மாக்காமலும் Heal இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க்கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே" (மத்தேயு *13:10-15*).

கிறிஸ்துவின் இவ்வார்த்தைகளிலிருந்து அவருடைய காலத்திய யூதர்கள் தீர்க்கதரிசன வேத எழுத்துக்களை 'வேண்டுமென்றே அறியாமைக்குரியவர்களாயிருந்தனர்' எனப் படிக்கிறோம். அவர்கள் கேட்க காதுகள் கொண்டிந்தனர்; ஆனால் அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை:

ஏனெனில் வேண்டுமென்றே அப்படி இருக்கின்றனர்; ஆகவே, அவர்களது பாவத்தைக் கூட்டாதபடிக்கு கிறிஸ்து பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை Mysteries உவமைகளில் திரைநீக்கிக் காட்ட வேண்டியிருந்தது. காரணம் யாதெனில் அவிசுவாசத்தின் திரை Veil of Unbelief அவர்கள் இருதயங்களின் மேலிருந்தது. இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து பவுல் கூறுகிறதாவது:

"அவர்களுடைய மனது கடினப்பட்டது; இந்நாள் வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையால் அந்த முக்காடு நீங்காமலிருக்கிறது; அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம்". *2கொரி.3:14-16.*

ஆகவே, யூதர்களைக் பொறுத்தவரை, "தானியேல் புத்தகம்"ஓர் முத்திரிக்கப்பட்ட புத்தகம், Sealed Book ஆனால் முடிவு காலம் Time of the End வரைக்கும் மாத்திரம் அவர்களுக்கு அது முத்திரையிட்டு மூடப்பட்டிருக்கவுள்ளது. அக்காலவேளை வருகையில் தானியேலின் ஜனங்களில் பலர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள்; அவர்களுடைய அறிவு (இப்புத்தகத்து) பெருகிப்போம். அவ்வுபத்திரவ காலத்து பாடுகள் மற்றும் சோதனைகளின் மத்தியில் அவர்கள் துயராற்றப்படுவார்கள் Comforted, தாங்கிப்பிடிக்கப்படுவார்கள் Sustained.

ஆனால் கிறிஸ்தவ விசுவாசிக்கு தானியேல் புத்தகம் இனி ஒருபோதும் முத்திரையிடப்பட்டிருக்கிறதில்லை; அவன் சரித்திரத்தில் இதன் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிக் கொண்டுள்ளதை கண்டுள்ளான். இப்புத்தகம் முன்னைவிட அதிகமாக புரியப்பட்டுவருகிறது; ஆராய்ந்து பார்க்கப்படுகிறது; முடிவின் காலத்து நெருங்குகைக்கு இது ஓர் அடையாளமாக இருக்கிறது.

முடிவு காலத்துடைய நீட்சி

The Length of the Time of the End

வசனங்கள்12:5-12:

"அப்பொழுது, தானியேலாகிய நான் ஆற்றுக்கு இக்கரையில் ஒருவனும் ஆற்றுக்கு அக்கரையில் ஒருவனுமாகிய வேறே இரண்டுபேர் நிற்கக்கண்டேன்; சணல் வஸ்திரம் தரித்தவரும், ஆற்றின் தண்ணீர்களின்மேல் நிற்கிறவருமாகிய புருஷனை ஒருவன் நோக்கி: இந்த ஆச்சரியமானவைகளின் முடிவு வர எவ்வளவு காலம் செல்லும் என்று கேட்டான்".

"அப்பொழுது சணல் வஸ்திரம் தரித்தவரும் ஆற்றின் தண்ணீர்களின்மேல் நிற்கிறவருமாகிய புருஷன் தம்முடைய வலதுகரத்தையும் தம்முடைய இடது கரத்தையும் வானத்துக்கு நேராக ஏறெடுத்து, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லும் என்றும், பரிசுத்த ஜனங்களின் வல்லமைச் சிதறடித்தல் முடிவுபெறும் போதே இவைகளெல்லாம் நிறைவேறித் தீருமென்றும் என்றைக்கும் ஜீவிக்கிறவர்பேரில் ஆணையிடக் கேட்டேன்"

"நான் அதைக் கேட்டும், அதின் பொருளை அறிய வில்லை ஆகையால் என் ஆண்டவனே, இவைகளின் முடிவு என்னமாயிருக்கும் என்று கேட்டேன்; அதற்கு அவன்: தானியேலே போகலாம்; இந்தவார்த்தைகள் முடிவுக் காலமட்டும் புதைப்பொருளாக வைக்கப்பட்டும் முத்திரிக்கப் பட்டும் இருக்கும்; அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்; துன்மார்க்கரோ துன்மார்க்கராய் நடப்பார்கள். துன்மார்க்கரில் ஒருவனும் உணரான்; ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள்".

"அன்றாட பலி நீக்கப்பட்டு, பாழாக்கப்படும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படும் காலமுதல் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூறு நாள் செல்லும்; ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள் மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்."

தானியேல் இன்னமும் இதெக்கேல் Hiddekel (Tigris) ஆற்றோரத்தே நின்று கொண்டிருந்தார் என்பதை மறக்கக்கூடாது. 10 முதல் 12 உட்பட முடியவுள்ள அதிகாரங்கள் ஒரே காட்சியாகின்றது One Vision என்பதையும் மறக்கலாகாது. ஆகவே, 'சணல் வஸ்திரம் தரித்த புருஷன்' அதிகாரம் 10:5-6ல் குறிப்பிடப்பட்ட அதே ஓர் புருஷனாயும், ஏற்கனவே விவரிக்கப்பட்டவராயுமிருக்கிறார். ஆனால் காட்சியின் இக்கட்டத்தில் வேறே இரண்டு தேவதூதர்கள் ஆற்றின் கரையில் பக்கத்துக்கு ஒருவராக நிற்கிறதை தானியேல் கவனித்தார்.

இவரிருவரில் ஒருவர் சணல் வஸ்திரம் தரித்து ஆற்றின் தண்ணீர்களின்மீது ஓர் மேகத்தால் தாங்கப்பட்ட புருஷனை நோக்கி கேட்டதாவது: "இந்த ஆச்சரியமானவைகளின் முடிவு வர எவ்வளவு காலம் செல்லும்?" அப்போது சணல் வஸ்திரம் தரித்த புருஷன் தனது இரு கரங்களையும் வானத்துக்கு நேராக ஏறெடுத்து "ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும்" அல்லது மூன்றரை வருடங்கள் செல்லும் என்று என்றென்றைக்கும் ஜீவிக்கிறவர்பேரில் ஆணையிட்டார்.

இந்த பதிலுரையில் இரு காரியங்கள் உள்ளன; ஆணை Oath மற்றும் காலத்தின் நீட்சி. இவை வெளி. 10:1-6-ஐ நமக்கு நினைவுபடுத்துகின்றன. வெளிப்படுத்தல் புத்தகமானது தானியேல் புத்தகத்தின் பொருள் விளக்கமளிப்பவராகுவதால் Interpreter நாம் குறிப்பீட்டுரைக்கு திரும்புவோம்:

"பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது; அவனுடைய சிரசின்மேல் வானவில் இருந்தது; அவனுடைய முகம் சூரியனைப்போலவும், அவனுடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப் போலவும் இருந்தன. திறக்கப்பட்ட ஒரு சிறு புத்தகம் அவன் கையிலிருந்தது; தனது வலது பாதத்தை சமுத்திரத்தின்மேலும், தன் இடது பாதத்தைப் பூமியின்மேலும் வைத்து சிங்கம் கெர்ச்சிக்கிறதுபோல மகா சத்தமாய் ஆர்ப்பரித்தான்; அவன் ஆர்ப்பரித்தபோது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின: அவ்வேழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது, நான் எழுதவேண்டும் என்று இருந்தேன்; அப்பொழுது ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரை போடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிறதாக நான் கண்ட தூதன் தன் கையை வானத்திற்கு நேராக உயர்த்தி: "இனி காலம் செல்லாது" ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியர்களாகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது வேதவாக்கியம் நிறைவேறும் என்று வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவை களையும் சிருஷ்டித்தவரும், சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறவருமானவர்மேல் ஆணையிட்டுச் சொன்னான்" வெளி. 10:1-7.

இங்குள்ள (வெளிப்படுத்தல்) பலமுள்ள தூதனுடைய Mighty Angel விவரணம் அவருடைய தோற்றத்திலும் கிரியையிலும், சணல் வஸ்திரம் தரித்தவருடையவையோடு (தானி.10:5-6;12:6-7) ஒத்திசைவு கொள்கிறபடியால் அவர்கள் ஒன்றேயாவர்; அல்லது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே! வெளி.1:12-16-ல் ஏழு குத்து விளக்குகளின் மத்தியில் நிற்கின்றவருடைய விவரணத்தோடு மேற்கூறியவர்களின் விவரணம் சரிஒத்துப்போகிறது. பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய தூதனானவர் Angel of the Lord (யாத்.3:2-18) என அழைக்கப்பட்டார் என நாம் அறிகிறோம். பழைய ஏற்பாட்டின் "இருக்கிறேன்" I am மற்றும் புதிய ஏற்பாட்டின் "நான்" I am இரண்டும் ஒன்றேயாம் Same. இப்போதும், தானியேலின் இவ்விறுதியான அதிகாரங்கள் இஸ்ரவேலோடு செயல் தொடர்பு கொள்வதால் மற்றும் அவர்களுக்கு கிறிஸ்து கர்த்தருடைய தூதனானவராக இருந்தபடியால் இஸ்ரவேலோடே பிரதானமாய் செயல் தொடர்புடைய வெளிப்படுத்தல் அதிகாரங்கள் 6முதல் 9வரையில் அவர் ஓர் பலமான தூதன் Mighty Angel எனும் பட்டத்தைவிட கூடுதல் பொருத்தமான பட்டம் Title வேறு எது கொண்டிருக்கக்கூடும்? ஓர் சிங்கம் கெர்ச்சிக்கிறதுபோல அவர் ஓர் மகாசத்தமாய் ஆர்ப்பரித்ததான மெய்மை அவரை யூதா கோத்திரத்து சிங்கமாக இனங்கண்டுகொள்ளச் செய்கிறது.

இந்த பலமான தூதன், சணல் வஸ்திரம் தரித்த புருஷனைப்போல சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவர்மேல் "இனி காலஞ்செல்லாது" Time No Longer என ஆணை யிடுகிறார்; இதை "இனி தாமதிக்காது" Delay No More என இவ்வேதப்பகுதியின் கரையோரப்பகுதி Margin மொழியாக்கம் செய்கிறது. இந்த வார்த்தைகளை 'பலமான தூதன்' தானியேலின் எழுபதாவது வாரத்தின் நடுப்பாதியில் உரைத்தபடியால், மூன்றரை வருடங்கள் அல்லது நாற்பத்திரண்டு மாதங்கள் மாத்திரமே (வெளி.13:5) ஓட மீந்திருந்தன: அதுவே சணல் வஸ்திரம் தரித்த புருஷனால் சொல்லப்பட்ட துல்லியமான காலமாயுள்ளது; ஏனெனில் நாற்பத்திரண்டு மாதங்களே தானியேலுடைய "காலம், காலங்கள் மற்றும் அரைக் காலங்களுக்கு" சரிசமமாக உள்ளது (வசனம் தானி.12:7). இவ்விதமாக முடிவுகாலத்துடைய நீட்சியை பொறுத்தவரை தானியேலும் வெளிப்படுத்தலும் உடன்படுகின்றன; மற்றுமல்லாது இது ஒரே நபரால் Same Person கர்த்தராகிய

இயேசுக்கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டுள்ளது என நாம் பார்க்கிறோம்.

தானியேல் பதிலுரையைக் கேட்டபோதும், அதன் அர்த்தத்தை அவர் விளங்கிக்கொள்ளவில்லை: ஆகவே கேள்வியை அவர்தானே மீட்டெழுப்பினார். ஆனால் எந்தவித விளக்கமும் அவருக்குக் கொடுக்கப்படவில்லை: தன் வழியே செல்ல அவர் கூறப்பட்டார்; ஏனெனில் இந்த வார்த்தைகள் 'முடிவு காலமட்டும்' Time of the End புதைபொருளாக மறைக்கப் பட்டும் முத்திரிக்கப்பட்டும் இருக்கவுள்ளன. அப்போது (முடிவுகாலம்) ஞானவான்கள் உணர்ந்து விளங்கிக் கொள்வார்கள்; பின்பு இரு கால அளவீடுகள் தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்டன: *1290* மற்றும் *1335* நாட்கள்! அன்றாட பலி நீக்கப்பட்டு, பாழாக்கப்படும் அருவருப்பு ஸ்தாபிக்கப்பட்ட கால வேளையிலிருந்து இந்த நாட்கள் தேதியிடப்பட்டுள்ளன. இவை தானியேலது எழுபதாவது வாரத்தின் இடைப்பாதியில் Middle சம்பவிக்க இருக்கவுள்ளதை நாம் அறிவோம், தானி.*9:27*. இவ்விதமாக தானியேலில் கொடுக்கப்பட்ட மூன்று கால அளவீடுகள் நமக்குள்ளன; மூன்றுமே அவரது எழுபதாவது வாரத்தின் நடுப்பாதியிலிருந்து தேதியிடப்பட்டிருக்கின்றன: முதலாவது, தானி.*8:13-14*லுடைய *2300* நாட்கள் மற்றுமாக *1290* நாட்கள் மற்றும் *1335* நாட்களுடைய இரு அளவீடுகள். இம்மூன்று கால அளவீடுகளுடைய முடிவிடங்கள் Terminus முறையே தானியேலுடைய 'எழுபதாவது வாரத்தின் முடிவுக்கு' *1040, 30* மற்றும் *75* நாட்கள் அப்பாலுள்ளன. *2300* நாட்கள் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிப்போடு சம்பந்தப்பட்டது: அதே வேளையில் மற்ற இரண்டு கால அளவீடுகள் எந்தெந்த நிகழ்வுக்கு வழிநடத்திச் செல்லுகின்றன என நாம் அறியோம்; ஆனால் வாரத்தின் முடிவில் கர்த்தருடைய திரும்ப வருகைக்கு பிற்பாடு தேசீய முக்கியத்துவம் வாய்ந்த வேறு நிகழ்வுகள் திருநல்லாயிர ராஜ்யம் நிறுவப்படுகைக்கு முன்னதாக நடந்தேறவுள்ளன.

தானியேலுடைய மகிமையான பாக்கியம்
Daniel's Glorious Lot

வசனம் 12:13

"நீயோவென்றால், முடிவு வருமட்டும் போயிரு; நீ

இளைப்பாறிக்கொண்டிருந்து, நாட்களின் முடிவில் உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய்."

தானியேல் தொன்னூறுக்குமேல் வயது சென்றவராக இருந்தார்; அவர் பாபிலோனில் வாழ்ந்திருந்தார்; எழுபது வருடங்களுக்கு மேலாக அவர் தனது நேசிக்கப்பட்ட நாடு மற்றும் நகரத்தைவிட்டு தூரமாயிருந்தார்; அவரது வாழ்க்கை ஓர் சோம்பலுற்ற ஒன்றல்ல: அவர் இரு சாம்ராஜ்யங்களது பொதுமக்களின் அரசு விவகாரங்களில் சுறுசுறுப்புடனிருந்தார்; அவருடைய மதம் மிகக் கடுமையான சோதனைகளை சந்தித்தது. தேவன் தமது நம்பிக்கைக்குரியவராக எடுத்து, புறஜாதியாரது காலங்களின் வரலாற்றை அவருக்கு வெளிப்படுத்தி அவரை கனப்படுத்தினார். அவருடைய கடைசி காட்சியில் Vision கர்த்தரைப் பார்க்கின்றதும் அவருடைய வார்த்தையை கேட்கின்றதுமான பாக்கியமான வாய்ப்பைப் பெற்றார். ஆனால் அவரது பணி முடிந்தது; இளைப்பாறவுள்ள நேரம் வந்திருந்தது. ஆகவே "தனது வழியே போக" To Go His Way தனது வீட்டுக்கு விடைபெற்றுச்செல்ல மற்றும் அங்கு இளைப்பாற கூறப்பட்டார்; அதாவது பாபிலோனிலிருந்து பரலோக நாட்டுக்கு புறப்பாடு செய்யவுள்ள அழைப்பாணை Summons வந்ததுவரை! பின்னர் புறஜாதியாருடைய காலங்கள் ஓடித் தீர்ந்துள்ளபோது தானியேல் தனது சுதந்திர வீதத்துக்கு / பாக்கியத்துக்கு எழுந்திருப்பார். அப்பாக்கியம் Lot என்னவாயிருக்கவுள்ளது என்பது நமக்கு சொல்லப்படவில்லை: ஆனால் அப்போஸ்தலர்கள் எழுப்பப்பட்டு பன்னிரண்டு சிங்காசனங்கள்மேல் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களை நியாயந்தீர்க்கிறவர்களாக அமரப்பட உள்ளனரென்றால் (மத்.19:28) தானியேலின் சுதந்திர பாக்கியம் என்னவாய் இருக்கக்கூடாது? அந்தத் தானியேல் சாம்ராஜ்யங்களது ஆட்சி விவகாரங்களில் பங்கெடுத்தவரா யிருந்ததோடு ராஜாக்களுடைய நம்பிக்கைக்குரிய ஆலோசகராயுமிருந்தாரே!



தானியேல் மற்றும் வெளிப்படுத்தல் ஒப்பிடுகை
வெளிப்படுத்தல் புத்தகம்
இரகசிய வருகை
1 தெச. 4:16–17
ஆட்டுக்குட்டி யானவரின் கலியாணம்
வெளி. 19:7–9
வெளிப்பாடு வருகை
2தெச. 1:7–10
பெரிய வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பு
வெளி. 20:11–15
சபை
1.கண்டவைகள்
2. இருக்கிறவைகள்
ஏழு சபைகள்
3. இவைகளுக்கு பின்பு சம்பவிப்பவைகள்
ஏழு முத்திரைகள்
ஏழு எக்காளங்கள்
ஏழு அடையாளங்கள்
ஏழு கலசங்கள்
ஏழு உபத்திரவங்கள்
ஏழு புதிய காரியங்கள்
எபேசு
சிமிர்னா
பெர்கமு
தியத்தீரா
சர்தை
பிலதெல்பியா
லவோதிக்கேயா
நல்லாயிர வருடங்கள்
புதிய வானம்
புதிய பூமி
புதிய நகரம்
"சட்டம்"
யூதாச்சார கால சகாத்தம்
திருச்சபை
மகா உபத்திரவம்
"மிருகம்"
திருநல்லாயிரம்
புதிய வானம்
பூமி அக்கினியால் புதுப்பிக்கப்படல்
2பேது. 3:10–13
பாபிலோனில் 70 வருட சிறையிருப்பு
மேதியா–பெர்சியா வல்லரசு
கிரேக்கத்திய
அலெக்சாண்டரது வல்லரசுடைய நான்கு பிரிவுகள்
ரோம்
கி.மு. 606
கி.மு. 536
கி.மு. 975
"புறஜாதியாரின் காலங்கள்"
லூக்கா. 21:24
கிழக்கத்திய பிரிவு
மேற்கத்திய பிரிவு
பாபிலோனிய வல்லரசு
சிங்கம்
தானி. 7:1–4
கி.மு. 606
கி.மு. 536 மேதியா–பெர்சியா கி.மு. 330
கிரேக்கத்திய கி.மு. 323
கி.மு. 30
ரோமை
சாம்ராஜ்யம்
அந்திக் கிறிஸ்து
தானி. 11:36–45
2தெச. 2:3–12
தானியேலின் புத்தகம்
தானியேலுடைய முத்திரிக்கப்பட்ட புத்தகம்
தானி. 12:4

1. அந்திக் கிறிஸ்துவும், "புறஜாதியாரின் காலமும்"




இரகசிய வருகை
1 தெச. 4:16-17
சபை
கல்லறை
ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்ட புத்தகம்
பலி பீடம்
எக்காளங்கள்
இடைவெளி
"சிறு புத்தகம்"
"இரண்டு சாட்சிகள்"
எக்காளம்
"மூன்றாம் ஆபத்து"
"வாரத்தின் இடைப்பகுதி"
"வானத்திலே யுத்தம்"
சமுத்திரத்திலிருந்து எழும்பிய மிருகம்
பூமியிலிருந்து எழும்பிய மிருகம்
மூன்று தூதுவரான தூதர்கள்
கலசங்கள்
இரகசிய மகாபாபிலோன்
பாபிலோன் மகாநகரம்
அர்மெகெதோன் யுத்தம்
"மகா உபத்திரவம்"
"வாரத்தின் இடைப்பகுதி"
தானியேலின் எழுபதாவது வாரம்
உபத்திரவ காலம்
அல்லது
"தானியேலின் எழுபதாவது வாரம்"
அந்திக் கிறிஸ்துவின் அரசாட்சி
அடியில்லாப் பாதாளக் குழி
அக்கினிக் கடல்


சபை வரலாற்றுடன்
ஏழு சபைகளுக்கான
தூதுக்கள்
ஒப்பிடப்படுதல்
பரமேறுகை
பரிசுத்த ஆவியின் இறங்குகை
கிறிஸ்து
சபைகளின் மத்தியில்
கிறிஸ்து
வெளி.1:12–20
சபையின்
எடுத்துக்
கொள்ளல்
I தெச 4:16–17
சபை
1
எபேசு காலம்
வெளி 2:1–7
பின்வாங்கிப் போன சபை
2
சிமிர்னா காலம்
வெளி 2:8–11
உபத்திரவப்பட்ட சபை
3
பெர்கமு காலம்
வெளி 2:12–17
நெறிகுலைந்த சபை
4
தியத்தீரா காலம்
வெளி. 2:18–20
ஓர் சோரம்போன சபை
5
சர்தை காலம்
வெளி 3:1–6
ஓர் செத்த சபை
6
பிலதெல்பியா காலம்
வெளி 3:7–13
ஓர் விரும்பப்படத்தக்க சபை
7
லவோதிக்கேயா காலம்
வெளி 3:14–22
ஓர் அக்கறையற்ற சபை
கற்கால வரலாறு
இடைநிலைக்கால வரலாறு
தற்கால வரலாறு
காலப்பகுதி I
அப்போஸ்தலரது யுகம்
காலப்பகுதி II
அப்போஸ்தலர் யுகம் முதல் கான்ஸ்டன்டைன் வரை
காலப்பகுதி III
கான்ஸ்டன்டைன் முதல் போனிபேசு III வரை
காலப்பகுதி IV
போனிபேசு III முதல் கிரிகோரி VII (கில்டிபிராண்ட்) வரை
போப்பாதிக்கத்தின் வளர்ச்சி
காலப்பகுதி V
போப்பாதிக்க உச்சகட்டம்
காலப்பகுதி VI
போப்பாதிக்க சரிவு
காலப்பகுதி VII
சீர்திருத்தம் முதல்
காலப்பகுதி VIII
மேற்குபாலியா அமைதி முதல்
இன்றைய நாள் வரை
கி.பி.30
100
200
300
400
500
606
700
800
900
1000
1100
1200
1300
1400
1500
1600
1700
1800
1900
?
750—இடைநிலை யுகங்களது சபை – 1198
கான்ஸ்டன்டைன்
கீழ்சபை மற்றும் அரசு
ஒருங்கிணைப்பு கி.பி. 312
பிஷப்பாக முடிசூட்டப்படல்
கி.பி. 606
கிறிஸ்தவ உலகு
(இருண்ட யுகங்கள்)
வைக்ளிப்★ லூத்தர்
ஹஸ்
ஜெரோம்
சீர்திருத்தம்
யேசபேலித்துவம்
சிலுவைப்போர்கள்
சுவிசேடப்பணி பாப்பல்
1523 பாப்திஸ்டுகள்
நாக்ஸ் (1560) பிரஸ்பிட்டேரியனிஸம்
கால்வின்
லுத்தரனிஸம்
புரோட்டெஸ்டான்டிஸம்
1534 இங்கிலாந்திய சபை
1791 மெதடிஸம்
உபத்திரவம்
அப்போஸ்தல
சுத்தமிக்க கிறிஸ்தவம்
யூதர்கள்
சபை
நோவாத்தியர்
411 பிலாஜியுஸினர்
615 பவுலிசியர்
அல்பிஜென்ஸியர் 1179 வால்டன்ஸியர் போஹிமிய சகோதரர்
1457
முதற்பேறானவர்களின் சபை எபி. 12:23
160 மனிசர்புடைம்
430 நெஸ்டோரியனினர்
1135 பெட்ரோ புருஸியர்
1390 லொலார்டியர்
நிக்கொலாயத்தவம்
பேயுருவழிபாடு
போப்பாதிக்க படி உயர்ச்சி
ஏரியனினர்
பாலாமித்துவம்
நிசியாவின் மாமன்றம்
கி.பி. 325
போனிபேசு III உலகளாவிய
கிறிஸ்தவத்தின் பாய்ந்தோடுகை
போப்பாதிக்க சபை
1054
1227
1824
ரோம கத்தோலிக்க சபை
மரித்த நிலை
1572 ✱ பரி.பார்த்தலோமியர் நாள்
பிரான்சிஸ் சேவியர்
இக்னேசியஸ் லாயோலா
1540 ✱ ஜெசுயிட்டார்
✱ 1870
தண்ட உயர்மன்ற உசாவல்
அக்கறையின்மை
கி.பி. 1054ல் போப்பாதிக்க மற்றும் கிரேக்கத்திய சபைகளுக்கிடையே முழுமையான உடைவுறுகை
கிரேக்கத்திய சபை
ஹெகிரா
கி.பி. 622
முகமதியத்தவம்
யூதர்கள்
கொள்கை
மீறுகையின்
கடல்
வேசியான ஸ்திரீ
வெளி 17:1–6

Rainbow, Ngl., Ph. : 224104